www.Padasalai.Net www.CBSEtips.in

# GANGA GUIDE

# தமிழ்

9

திருத்திய பாடத்திட்டத்தின்படி

- எளிமையான விளக்கங்கள்
- உயர் சிந்தனை வினா-விடை
- போட்டித் தேர்வை மையமிட்ட வினா-விடை
- தகவல் தொழில்நுட்ப தமிழ்ச்சொற்கள்
- தொகுத்தறி வினாத்தாள்கள் தொகுப்பு
- நூல்-நூலாசிரியர் பெயர்த்தொகுப்பு
- சிறப்புப்பெயர், சிறப்புத்தொடர் தொகுப்பு
- விருதும் பரிசும் பெற்றோர் தொகுப்பு
- இலக்கணக் குறிப்பு கண்டறிய எளிய வழிகள்
- அறிஞர் கூற்றுகள் தொகுப்பு
- மனப்பாடப் பகுதிகள்

இலவசம்

வினாத் தொகுப்பு கையேடு

உரையாசிரியர்கள்:

ச. சேட்டு மதார்சா, M.A., M.A., M.Phil., B.Ed., TPT, PGDTR, UGC-NET, Ph.D., Dip.Folk, PGDCA
ஈரோடு.

முனைவர் ப.பெ.கலியமூர்த்தி, M.A., B.Ed., Ph.D.,
(இலக்கயத் தோழன்), தமிழாசிரியர்,
பாணாதுறை மேல்நிலைப்பள்ளி, கும்பகோணம்.

ந. அண்ணாதுரை, M.A., B.Ed.
முதுகலைத்தமிழாசிரியர்,
அல்அமீன் மெட்ரிக் மேல்நிலைப்பள்ளி, கும்பகோணம்.

SRI GANGA PUBLICATIONS®
(A UNIT OF SHYAMALA GROUP)
Chennai - Tirunelveli

Price ₹ 200/-

Please Send Your Study Materials to our Email Id: padasalai.net@gmail.com

www.Padasalai.Net

படங்களை தொடுக! பாடசாலை வலைதளத்தை சமூக ஊடகங்களில் பின்தொடர்க!! உடனுக்குடன் புதிய செய்திகளை Notifications-ல் பெறுக!

YouTube

Zoom Touch Below Links Download!

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| 12th Standard | Syllabus | Books | Study Materials – EM | Study Materials - TM | Practical | Online Test (EM & TM) |
| | Monthly Q&A | Mid Term Q&A | Revision Q&A | PTA Book Q&A | Centum Questions | Creative Questions |
| | Quarterly Exam | Half Yearly Exam | Public Exam | NEET | | |

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| 11th Standard | Syllabus | Books | Study Materials – EM | Study Materials - TM | Practical | Online Test (EM & TM) |
| | Monthly Q&A | Mid Term Q&A | Revision Q&A | Centum Questions | Creative Questions | |
| | Quarterly Exam | Half Yearly Exam | Public Exam | NEET | | |

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| 10th Standard | Syllabus | Books | Study Materials - EM | Study Materials - TM | Practical | Online Test (EM & TM) |
| | Monthly Q&A | Mid Term Q&A | Revision Q&A | PTA Book Q&A | Centum Questions | Creative Questions |
| | Quarterly Exam | Half Yearly Exam | Public Exam | NTSE | SLAS | |

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| 9th Standard | Syllabus | Books | Study Materials | 1st Mid Term | 2nd Mid Term | 3rd Mid Term |
| | Quarterly Exam | Half Yearly Exam | Annual Exam | RTE | | |

| 8th Standard | Syllabus | Books | Study Materials | 1st Mid Term | 2nd Mid Term | 3rd Mid Term |
|---|---|---|---|---|---|---|
| | Term 1 | Term 2 | Term 3 | Public Model Q&A | NMMS | Periodical Test |

| 7th Standard | Syllabus | Books | Study Materials | 1st Mid Term | 2nd Mid Term | 3rd Mid Term |
|---|---|---|---|---|---|---|
| | Term 1 | Term 2 | Term 3 | Periodical Test | SLAS | |

| 6th Standard | Syllabus | Books | Study Materials | 1st Mid Term | 2nd Mid Term | 3rd Mid Term |
|---|---|---|---|---|---|---|
| | Term 1 | Term 2 | Term 3 | Periodical Test | SLAS | |

| 1st to 5th Standard | Syllabus | Books | Study Materials | Periodical Test | SLAS | |
|---|---|---|---|---|---|---|
| | Term 1 | Term 2 | Term 3 | Public Model Q&A | | |

| Exams | TET | TNPSC | PGTRB | Polytechnic | Police | Computer Instructor |
|---|---|---|---|---|---|---|
| | DEO | BEO | LAB Asst | NMMS | RTE | NTSE |

| Portal | Matrimony | Mutual Transfer | Job Portal |
|---|---|---|---|

| Volunteers | Centum Team | Creative Team | Key Answer Team |
|---|---|---|---|

| Downloads | LESSON PLAN | Department Exam | Income Tax | Forms & Proposals | Fonts | Downloads |
|---|---|---|---|---|---|---|
| | Proceedings | GO's | Regulation Orders | Pay Orders | Panel | |

**Padasalai – Official Android App – Download Here**

**Kindly Send Your Study Materials, Q&A to our Email ID** – Padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.CBSEtips.in



*Published By*
*B. ARUMUGAM*
**SRI GANGA PUBLICATIONS**
*(A unit of **Shyamala** Group)*

## BANK DETAILS

### TIRUNELVELI ACCOUNT

| | |
|---|---|
| Account Name | : **Surya Publications** |
| Account Number | : **446971431** |
| Bank Name | : **Indian Bank** |
| IFSC Code | : **IDIB000T034** |
| Branch Name | : **Tirunelveli Junction** |

| | |
|---|---|
| Account Name | : **Surya Publications** |
| Account Number | : **510909010051752** |
| Bank Name | : **City Union Bank** |
| IFSC Code | : **CIUB0000230** |
| Branch Name | : **Palayamkottai** |

### CHENNAI ACCOUNT

| | |
|---|---|
| Account Name | : **Sri Ganga Publication** |
| Account Number | : **928507483** |
| Bank Name | : **Indian Bank** |
| IFSC Code | : **IDIB000A031** |
| Branch Name | : **Ashok Nagar** |

| | |
|---|---|
| Account Name | : **Sri Ganga Publication** |
| Account Number | : **512020010022514** |
| Bank Name | : **City Union Bank** |
| IFSC Code | : **CIUB0000230** |
| Branch Name | : **Palayamkottai** |

**SRI GANGA PUBLICATIONS**®
(A UNIT OF **SHYAMALA** GROUP)

**Corporate Office :**
No. 1, Sugar Mill Colony,
Salai Kumaran illam,
Madurai Road,
**Tirunelveli - 627001.**
Phone : 0462 - 233 8899 / 233 8484
Mobile : 94431 58484 / 95978 39822
Email : suryaguides@yahoo.com

**Registered Office :**
New No. 59, 4th Avenue,
Opp. to Govt. Boys Hr. Sec. School,
Ashok Nagar,
**Chennai - 600 083.**
Phone : 044 - 2474 4484
Mobile : 94421 58484 / 94425 58484
Email : srigangapublications5@gmail.com

**Website : www.suryapublications.in**

Please Send Your Study Materials to our Email Id: padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.CBSEtips.in



# அறிமுகவுரை

"புத்தகங்கள் கனவுகளை வளர்க்கும்
கனவுகள் எண்ணங்களை உண்டாக்கும்
எண்ணங்கள் செயல்களை மேம்படுத்தும்"

என்னும் டாக்டர்.ஏ.பி.ஜெ. அப்துல் கலாம் அவர்களின் பொன்மொழிக்கு ஏற்ப மாணாக்கச் செல்வங்களின் கனவுகளை வளர்க்கும் விதமாகவும், எண்ணங்களை உண்டாக்கும் விதமாகவும், செயல்களை மேம்படுத்தும் விதமாகவும் இத்தமிழுரை அமைந்துள்ளது. வெறும் உரையாக இல்லாமல் வருங்காலப் போட்டித் தேர்வுக்கு முன் ஆயத்தமாகவே இருக்கும் வண்ணம் அமைக்கப்பட்டுள்ளது. உயர்சிந்தனை வினாக்கள் ஒவ்வொரு பகுதியிலும் மிகுதியாக வழங்கப்பட்டுள்ளன.

மாணாக்கர்களின் கூர்ந்த சிந்தனையை மேம்படுத்தும் மாறுபட்ட வினாக்கள் சங்கமமாய் இவ்வுரை அமையும் என்பதில் ஐயமில்லை.பாடவாரியாக கூடுதல் வினா விடைகள் அமைக்கப்பட்டுள்ளன.

- நூல் நூலாசிரியர் பெயர்கள்
- சிறப்புத் தொடர்கள் நவீன கலைச்சொல்லாக்கம்
- சிறப்புப்பெயர்கள்
- பரிசுகளும் விருதுகளும் என்னும் தலைப்புகளின் கீழ் பாடநூலில் குறிப்பிடப்படும் நூல்கள் மற்றும் அதன் ஆசிரியர்கள் பெயர் விவரங்கள்
- சிறப்பமைந்த பாடல்தொடர்கள்
- அறிஞர் கூற்றுகள் அவரின் பெயர்கள்
- தகவல்தொடர்பு சாதனங்களில் இடம்பெறும் ஆங்கிலச் சொற்களுக்கு இணையான தனித்தமிழ்ச்சொற்கள்
- பாடநூலில் இடம்பெறும் அறிஞர்கள் மற்றும் கவிஞர்கள் பெற்ற பரிசுகள் விருதுகள்

ஆகியவை தொகுக்கப்பட்டு தனியே பின்னிணைப்பாக வழங்கப்பட்டுள்ளன.

"விதைக்கும் விதைகள் எல்லாம் முளைப்பதில்லை
விரும்பும் விதைகள் தான் முளைக்கின்றன"

ஆம். இவ்வுரை உங்களை விரும்பும் விதையாய் நாளைய சாதனை விருட்சமாய் மாற்றும் என்று நம்புகின்றோம். உங்கள் சாதனைக்கு எங்கள் மனமார்ந்த வாழ்த்துகள்.

- பதிப்பகத்தார்

Please Send Your Study Materials to our Email Id: padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.CBSEtips.in



# பொருளடக்கம்


| எண் | இயல் | பாடத்தலைப்புகள் | பக்கம் |
|---|---|---|---|
| ஒன்று | மொழி | **திராவிட மொழிக்குடும்பம்** | 1 |
| | | தமிழோவியம் | 7 |
| | | தமிழ்விடு தூது* | 11 |
| | | வளரும் செல்வம் | 16 |
| | | தொடர் இலக்கணம் | 18 |
| இரண்டு | இயற்கை, சுற்றுச்சூழல் | **நீரின்றி அமையாது உலகு** | 31 |
| | | பட்டமரம் | 37 |
| | | பெரியபுராணம்* | 42 |
| | | புறநானூறு* | 48 |
| | | தண்ணீர் | 53 |
| | | துணைவினைகள் | 55 |
| மூன்று | பண்பாடு | **ஏறுதழுவுதல்** | 66 |
| | | மணிமேகலை | 73 |
| | | அகழாய்வுகள் | 80 |
| | | வல்லினம் மிகும் இடங்கள் | 82 |
| | | திருக்குறள்* | 92 |
| நான்கு | அறிவியல், தொழில்நுட்பம் | **இயந்திரங்களும் இணையவழிப் பயன்பாடும்** | 96 |
| | | ஓ, என் சமகாலத் தோழர்களே!* | 104 |
| | | உயிர்வகை* | 109 |
| | | விண்ணையும் சாடுவோம் | 113 |
| | | வல்லினம் மிகா இடங்கள் | 116 |
| ஐந்து | கல்வி | **கல்வியிற் சிறந்த பெண்கள்** | 127 |
| | | குடும்ப விளக்கு | 135 |
| | | சிறுபஞ்சமூலம்* | 142 |
| | | வீட்டிற்கோர் புத்தகசாலை | 146 |
| | | இடைச்சொல் - உரிச்சொல் | 148 |
| ஆறு | கலை, அழகியல், புதுமைகள் | **சிற்பக்கலை** | 160 |
| | | இராவண காவியம்* | 168 |
| | | நாச்சியார் திருமொழி | 179 |
| | | செய்தி | 185 |
| | | புணர்ச்சி | 187 |
| | | திருக்குறள் | 193 |


Please Send Your Study Materials to our Email Id: padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.CBSEtips.in




| எண் | இயல் | பாடத்தலைப்புகள் | பக்கம் |
|---|---|---|---|
| ஏழு | நாகரிகம், தொழில், வணிகம், நாடு, சமூகம், அரசு, நிருவாகம் | **இந்திய தேசிய இராணுவத்தில் தமிழர் பங்கு** | 200 |
| | | சீவக சிந்தாமணி* | 207 |
| | | முத்தொள்ளாயிரம்* | 214 |
| | | மதுரைக்காஞ்சி | 220 |
| | | சந்தை | 226 |
| | | ஆகுபெயர் | 229 |
| எட்டு | அறம், தத்துவம், சிந்தனை | **பெரியாரின் சிந்தனைகள்** | 239 |
| | | ஒளியின் அழைப்பு | 246 |
| | | தாவோ தே ஜிங் | 251 |
| | | யசோதர காவியம்* | 254 |
| | | மகனுக்கு எழுதிய கடிதம் | 257 |
| | | யாப்பிலக்கணம் | 260 |
| ஒன்பது | மனிதம், ஆளுமை | **விரிவாகும் ஆளுமை** | 270 |
| | | அக்கறை* | 276 |
| | | குறுந்தொகை | 279 |
| | | தாய்மைக்கு வறட்சி இல்லை | 283 |
| | | அணியிலக்கணம் | 285 |
| | **பின்னிணைப்புகள்** | | **பக்கம்** |
| | | இலக்கணக்குறிப்பு | 294 |
| | | பகுபத உறுப்பிலக்கணம் | 295 |
| | | கவிதை இயற்றுக | 297 |
| | | பொதுக் கட்டுரைகள் | 299 |
| | | புதிய தமிழ்ச்சொற்கள் | 306 |
| | | நூலும் நூலாசிரியரும் | 307 |
| | | சிறப்புத் தொடர்களும், கூற்றுகளும் | 309 |
| | | சிறப்புப் பெயர்கள் | 312 |
| | | தொகுத்தறி மதிப்பீடு – மாதிரி வினாத்தாள் 1 | 313 |
| | | தொகுத்தறி மதிப்பீடு – மாதிரி வினாத்தாள் 2 | 318 |
| | | தொகுத்தறி மதிப்பீடு – மாதிரி வினாத்தாள் 3 | 323 |


Please Send Your Study Materials to our Email Id: padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.CBSEtips.in



# மனப்பாடப் பகுதி

### தமிழ்விடு தூது: சீர்பெற்ற செல்வம்

தித்திக்கும் தெள்அமுதாய்த் தெள்அமுதின் மேலான
முத்திக் கனியேஎன் முத்தமிழே – புத்திக்குள்
உண்ணப் படும்தேனே உன்னோடு உவந்து உரைக்கும்
விண்ணப்பம் உண்டு விளம்பக்கேள் – மண்ணில்
குறம்என்றும் பள்ளுஎன்றும் கொள்வார் கொடுப்பாய்க்கு
உறவுஎன்று மூன்று இனத்தும் உண்டோ – திறம்எல்லாம்
வந்துஎன்றும் சிந்தா மணியாய் இருந்தஉனைச்
சிந்து என்று சொல்லிய நாச்சிந்துமே

### பெரியபுராணம்

காடெல்லாம் கழைக்கரும்பு காவெல்லாம் குழைக்கரும்பு
மாடெல்லாம் கருங்குவளை வயலெல்லாம் நெருங்குவளை
கோடெல்லாம் மடஅன்னம் குளமெல்லாம் கடல்அன்ன
நாடெல்லாம் நீர்நாடு தனைஒவ்வா நலமெல்லாம். – ***சேக்கிழார்***

### புறநானூறு

நீர் இன்று அமையா யாக்கைக்கு எல்லாம்
உண்டி கொடுத்தோர் உயிர் கொடுத்தோரே!
உண்டி முதற்றே உணவின் பிண்டம்;
உணவெனப் படுவது நிலத்தொடு நீரே;
நீரும் நிலமும் புணரியோர், ஈண்டு
உடம்பும் உயிரும் படைத்திசினோரே!
– ***குடபுலவியனார்***

### திருக்குறள்

மிகுதியான் மிக்கவை செய்தாரைத் தாம்தம்
தகுதியான் வென்று விடல்.
எனைத்தானும் நல்லவை கேட்க அனைத்தானும்
ஆன்ற பெருமை தரும்.
ஒஒதல் வேண்டும் ஒளிமாழ்கும் செய்வினை
ஆஅதும் என்னு மவர்.
– ***திருவள்ளுவர்***

### ஓ, என் சமகாலத் தோழர்களே!

அறிவியல் என்னும் வாகனம் மீதில்
ஆளும் தமிழை நிறுத்துங்கள்
கரிகா லன்தன் பெருமை எல்லாம்
கணிப்பொறி யுள்ளே பொருத்துங்கள்

ஏவும் திசையில் அம்பைப் போல
இருந்த இனத்தை மாற்றுங்கள்
ஏவு கணையிலும் தமிழை எழுதி
எல்லாக் கோளிலும் ஏற்றுங்கள்.
– ***வைரமுத்து***

### உயிர் வகை

ஒன்றறி வதுவே உற்றறி வதுவே
இரண்டறி வதுவே அதனொடு நாவே
மூன்றறி வதுவே அவற்றொடு மூக்கே
நான்கறி வதுவே அவற்றொடு கண்ணே
ஐந்தறி வதுவே அவற்றொடு செவியே
ஆறறி வதுவே அவற்றொடு மனமே
நேரிதின் உணர்ந்தோர் நெறிப்படுத் தினரே.
– ***தொல்காப்பியர்***

Please Send Your Study Materials to our Email Id: padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.CBSEtips.in



**சிறுபஞ்சமூலம்**

பூவாது காய்க்கும் மரம் உள; நன்று அறிவார்,
மூவாது மூத்தவர், நூல் வல்லார்; தாவா,
விதையாமை நாறுவ வித்துஉள; மேதைக்கு
உரையாமை செல்லும் உணர்வு.

*- காரியாசான்*

**திருக்குறள்**

அடுக்கிய கோடி பெறினும் குடிப்பிறந்தார்
குன்றுவ செய்தல் இலர்.

அன்புநாண் ஒப்புரவு கண்ணோட்டம் வாய்மையொ(டு)
ஐந்துசால்பு ஊன்றிய தூண்.

பிறர்நாணத் தக்கது தான்நாணான் ஆயின்
அறம்நாணத் தக்கது உடைத்து.

சுழன்றும் ஏர்ப் பின்னது உலகம் அதனால்
உழந்தும் உழவே தலை.

*- திருவள்ளுவர்*

**இராவண காவியம்**

கல்லிடைப் பிறந்த ஆறும்
கரைபொரு குளனும் தோயும்
முல்லைஅம் புறவில் தோன்று
முருகுகான் யாறு பாயும்
நெல்லினைக் கரும்பு காக்கும்
நீரினைக் கால்வாய் தேக்கும்
மல்லல்அம் செறுவில் காஞ்சி
வஞ்சியும் மருதம் பூக்கும்.

*- புலவர் குழந்தை*

**சீவகசிந்தாமணி**

சொல்அரும் சூல்பசும் பாம்பின் தோற்றம்போல்
மெல்லவே கருஇருந்து ஈன்று மேலலார்
செல்வமே போல்தலை நிறுவித் தேர்ந்தநூல்
கல்விசேர் மாந்தரின் இறைஞ்சிக் காய்த்தவே

*- திருத்தக்கதேவர்*

Please Send Your Study Materials to our Email Id: padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.CBSEtips.in



**முத்தொள்ளாயிரம்**

அள்ளல் பழனத்து அரக்காம்பல் வாயவிழ
வெள்ளம்தீப் பட்ட(து) எனவெரீஇப் புள்ளினம்தம்
கைச்சிறகால் பார்ப்பொடுக்கும் கவ்வை உடைத்தரோ
நச்சிலைவேல் கோக்கோதை நாடு

**யசோதர காவியம்**

ஆக்குவது ஏதெனில் அறத்தை ஆக்குக
போக்குவது ஏதெனில் வெகுளி போக்குக
நோக்குவது ஏதெனில் ஞானம் நோக்குக
காக்குவது ஏதெனில் விரதம் காக்கவே

**அக்கறை**

சைக்கிளில் வந்த
தக்காளிக் கூடை சரிந்து
முக்கால் சிவப்பில் உருண்டது
அனைத்துத் திசைகளிலும் பழங்கள்
தலைக்கு மேலே
வேலை இருப்பதாய்க்
கடந்தும் நடந்தும்
அனைவரும் போயினர்
பழங்களை விடவும்
நசுங்கிப் போனது
அடுத்த மனிதர்கள்
மீதான அக்கறை

***- கல்யாண்ஜி***

Please Send Your Study Materials to our Email Id: padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.CBSEtips.in



இயல் 1 உரைநடை உலகம்

# திராவிட மொழிக் குடும்பம்

## பாடநூல் மதிப்பீட்டு வினா

### 1 குறுவினா

1. **நீங்கள் பேசும் மொழி எந்த இந்திய மொழிக் குடும்பத்தைச் சேர்ந்தது?**

நாங்கள் பேசும் மொழி தமிழ் மொழி. தமிழ் மொழி இந்திய மொழிக் குடும்பத்தில் திராவிட மொழிகள் வகையைச் சேர்ந்தது.

### 2 சிறுவினா

1. **திராவிட மொழிகளின் பிரிவுகள் யாவை? அவற்றுள் உங்களுக்குத் தெரிந்த மொழிகளின் சிறப்பியல்புகளை விளக்குக.**

1. தென் திராவிட மொழிகள்
2. வட திராவிட மொழிகள்
3. நடுத் திராவிட மொழிகள்

என மூன்றாகத் திராவிட மொழிகளைப் பிரிப்பர்.

**தமிழ்மொழியின் சிறப்பியல்புகள்:**

- ◈ தொன்மை, இலக்கண-இலக்கிய வளம் உடையது தமிழ்.
- ◈ இலங்கை, மலேசியா, சிங்கப்பூர் உள்ளிட்ட பல நாடுகளிலும் பேசப்படும் பெருமையுடையது தமிழ்.
- ◈ பிற திராவிட மொழிகளைவிட தனித்த இலக்கணவளத்தைக் கொண்டு தனித்தியங்கும் ஆற்றல் உடையது தமிழ்.
- ◈ பிறமொழித் தாக்கம் இல்லாத மொழி தமிழ்.

2. **மூன்று என்னும் எண்ணுப்பெயர் பிற திராவிடமொழிகளில் எவ்வாறு இடம்பெற்றுள்ளது?**

| | |
|---|---|
| மூணு - மலையாளம் | மூடு - தெலுங்கு |
| மூரு - கன்னடம் | மூஜி - துளு |

### 3 நெடுவினா

1. **திராவிட மொழிகளின் ஒப்பியல் ஆய்விற்குத் தமிழே பெருந்துணையாக இருக்கிறது என்பதை எடுத்துக்காட்டுடன் விளக்குக.**

திராவிட மொழிகளின் ஒப்பியல் ஆய்விற்குத் தமிழே பெருந்துணையாக இருக்கிறது.

'தமிழ்' என்ற சொல்லில் இருந்து 'திராவிடா' என்ற சொல் பிறந்தது என்பதை ஹீராஸ் பாதிரியார், தமிழ் - தமிழா - தமிலா - டிரமிலா - ட்ரமிலா - த்ராவிடா - திராவிடா என்று விளக்குகிறார்.

பிரான்சிஸ் எல்லீஸ் தமிழ், தெலுங்கு, கன்னடம், மலையாளம் ஆகியன ஒரே இனம் என்றார்.

Please Send Your Study Materials to our Email Id: padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.CBSEtips.in



ஹோக்கன், மாக்சுமுல்லர் ஆகியோர் திராவிடமொழிகள் ஆரிய மொழிகளிலிருந்து வேறுபட்டவை என்பார்.

கால்டுவெல் திராவிட மொழிகளின் ஒப்பிலக்கண நூலில் திராவிடமொழிகள் ஆரிய மொழிகளிலிருந்து வேறுபட்டவை என்றார். சமஸ்கிருதத்திற்குள்ளும் திராவிட மொழிகள் செல்வாக்கு செலுத்தியுள்ளது என்றார்.

## கூடுதல் வினாக்கள்

### 1 பலவுள் தெரிக

1. திராவிடம் என்ற சொல்லை முதன் முதலில் பயன்படுத்தியவர் ________
அ) குமரிலபட்டர் ஆ) ச. அகத்தியலிங்கம்
இ) கால்டுவெல் ஈ) மாக்ஸ்முல்லர் **விடை: அ) குமரிலபட்டர்**

2. வினைச்சொற்கள் காலத்தை மட்டுமே காட்டும் மொழி ________
அ) தமிழ் ஆ) ஆங்கிலம்
இ) மலையாளம் ஈ) தெலுங்கு **விடை: ஆ) ஆங்கிலம்**

3. பணத்தாளில் தமிழ் மொழி இடம்பெற்றுள்ள பிறநாடுகள்
அ) மொரிசியஸ், இலங்கை ஆ) மலேசியா, சிங்கப்பூர்
இ) பர்மா, பிஜித்தீவு ஈ) கயானா, மடாஸ்கர்
**விடை: அ) மொரிசியஸ், இலங்கை**

4. இந்தியாவில் பேசப்படும் மொழிகளின் எண்ணிக்கை ________ க்கும் மேலானது.
அ) 1400 ஆ) 1300 இ) 1500 ஈ) 28 **விடை: ஆ) 1300**

5. இந்திய மொழிக்குடும்ப வகைகள் ________
அ) 5 ஆ) 24 இ) 28 ஈ) 4 **விடை: ஈ) 4**

6. ஐரோப்பிய மொழியோடு தொடர்புடையது வடமொழி என்று முதன்முதலில் குறிப்பிட்ட அறிஞர்.
அ) வில்லியம் ஜோன்ஸ் ஆ) கால்டுவெல்
இ) பாப் ஈ) ரஸ்க் **விடை: அ) வில்லியம் ஜோன்ஸ்**

7. திராவிடமொழிகளின் ஒப்பிலக்கணம் என்ற நூலை எழுதியவர் ________
அ) குமரிலபட்டர் ஆ) ச.அகத்தியலிங்கம்
இ) கால்டுவெல் ஈ) மாக்ஸ்முல்லர் **விடை: இ) கால்டுவெல்**

8. திராவிட மொழிகள் மொத்தம் ________ எனக் கூறுவர்.
அ) 24 ஆ) 28 இ) 4 ஈ) 1300 **விடை: ஆ) 28**

9. 18ஆம் நூற்றாண்டு தொடக்கம் வரை இந்திய மொழிகள் அனைத்திற்கும் ________ மொழியே மூலம் என்றனர்.
அ) வட ஆ) தென் இ) ஆங்கில ஈ) இலத்தீன் **விடை: அ) வட**

Please Send Your Study Materials to our Email Id: padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.CBSEtips.in



10. மால்தோ, தோடா, கோண்டி முதலான மொழிகளை ஆய்ந்தவர்

அ) ஹோக்கன் ஆ) ஹீராஸ் பாதிரியார்
இ) மாக்ஸ்முல்லர் ஈ) கால்டுவெல்

**விடை: அ) ஹோக்கன்**

11. தெலுங்கு மொழி ________ திராவிட மொழிக் குடும்பத்தைச் சார்ந்தது.

அ) தென் ஆ) வட
இ) நடு ஈ) இவற்றுள் எதுவும் இல்லை

**விடை: இ) நடு**

12. பொருந்தாத இணையைத் தேர்ந்தெடுக்க.

அ) தென் திராவிடம் - கன்னடம் ஆ) நடுத்திராவிடம் - கூயி
இ) வடதிராவிடம் - குரூக் ஈ) தென்திராவிடம் - மால்தோ

**விடை: ஈ) தென்திராவிடம் - மால்தோ**

13. வடதிராவிட மொழிக்குப் பொருந்தாத மொழியைக் கண்டறிந்து எழுதுக.

அ) குரூக் ஆ) மால்தோ
இ) பிராகுயி ஈ) இருளா

**விடை: ஈ) இருளா**

14. தென்திராவிட மொழிக்குப் பொருந்தாத மொழியைக் கண்டறிந்து எழுதுக.

அ) தமிழ் ஆ) குடகு
இ) நாய்க்கி ஈ) துளு

**விடை: இ) நாய்க்கி**

15. அண்மையில் சேர்க்கப்பட்ட திராவிடமொழிகள்

அ) எருகலா, தங்கா, குறும்பா, சோழிகா ஆ) கோத்தா, தோடா, கொரகா, இருளா
இ) கூயி, கூவி, கோண்டாபர்ஜி ஈ) குரூக், மால்தோ, பிராகுயி

**விடை: அ) எருகலா, தங்கா, குறும்பா, சோழிகா**

16. பொருத்துக.

| | | |
|---|---|---|
| 1. தமிழ் | - | அ) பாரதம் |
| 2. கன்னடம் | - | ஆ) ராமசரிதம் |
| 3. தெலுங்கு | - | இ) சங்க இலக்கியம் |
| 4. மலையாளம் | - | ஈ) கவிராஜ மார்க்கம் |

அ) 1-இ 2-ஈ 3-அ 4-ஆ ஆ) 1-ஆ 2-ஈ 3-அ 4-இ
இ) 1-இ 2-அ 3-ஈ 4-ஆ ஈ) 1-அ 2-ஈ 3-இ 4-ஆ

**விடை: அ) 1-இ 2-ஈ 3-அ 4-ஆ**

17. பொருத்துக.

| | | |
|---|---|---|
| 1. தமிழ் | - | அ) ஒன்று |
| 2. மலையாளம் | - | ஆ) ஒண்ணு |
| 3. தெலுங்கு | - | இ) ஒந்து |
| 4. கன்னடம் | - | ஈ) ஒகடி |

அ) 1-இ 2-ஈ 3-ஆ 4-அ ஆ) 1-அ 2-ஈ 3-ஆ 4-இ
இ) 1-அ 2-ஆ 3-ஈ 4-இ ஈ) 1-ஈ 2-ஆ 3-அ 4-இ

**விடை: இ) 1-அ 2-ஆ 3-ஈ 4-இ**

Please Send Your Study Materials to our Email Id: padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.CBSEtips.in



18. **பொருத்துக.**

1. தமிழ் - அ) மூணு
2. மலையாளம் - ஆ) மூன்று
3. தெலுங்கு - இ) மூடு
4. கன்னடம் - ஈ) மூரு

அ) 1-இ 2-ஈ 3-ஆ 4-அ ஆ) 1-அ 2-ஈ 3-ஆ 4-இ
இ) 1-அ 2-ஆ 3-ஈ 4-இ ஈ) 1-ஆ 2-அ 3-இ 4-ஈ

**விடை: ஈ) 1-ஆ 2-அ 3-இ 4-ஈ**

**கோடிட்ட இடத்தை நிரப்புக.**

1. தமிழ் மொழியில் பழமையான இலக்கண நூல்_______. **விடை: தொல்காப்பியம்**
2. மலையாள மொழியில் பழமையான இலக்கண நூல்_______. **விடை: லீலாதிலகம்**
3. ராமசரிதம் என்ற பழமையான இலக்கியம் அமைந்த திராவிட மொழி_____. **விடை : மலையாளம்**
4. நீ என்ற தமிழ்ச்சொல் துளு மொழியில்_______. **விடை: ஈ**
5. மரம் என்ற தமிழ்ச்சொல் தெலுங்கு மொழியில்_______. **விடை: மானு**
6. சொற்களின் இன்றியமையாப் பகுதி வேர்ச்சொல், _______எனப்படும். **விடை:அடிச்சொல்**
7. குவி என்றழைக்கப்படும் நடுத்திராவிட மொழி _______ **விடை: கூவி**
8. அண்மையில் சேர்க்கப்பட்ட திராவிடமொழிகளோடு திராவிடமொழிகள் மொத்தம் _______ எனக் கூறுவர். **விடை: 28**
9. தொன்மையும் இலக்கண இலக்கிய வளமும் உடையது _______ மொழி. **விடை: தமிழ்**
10. மொரிசியஸ், இலங்கை உள்ளிட்ட நாடுகளின் பணத்தாளில் __________ மொழி இடம். பெற்றுள்ளது. **விடை: தமிழ்**

## 2 குறுவினா

1. **மொழிகள் பல எவ்வாறு உருவாயின?**
மனித இனம் வாழ்ந்த இடஅமைப்பும், இயற்கை அமைப்பும் வேறுபட்ட ஒலிப்பு முயற்சிகளை உருவாக்கத் தூண்டின. இதனால் பல மொழிகள் உருவாயின.

2. **இந்தியாவில் பேசப்படும் மொழிகளின் எண்ணிக்கை யாது?**
1300க்கும் மேற்பட்ட மொழிகள் இந்தியாவில் பேசப்படுகின்றன.

3. **மொழிக்குடும்பங்கள் எத்தனை வகைப்படும் ? அவை யாவை?**
மொழிக்குடும்பங்கள் நான்கு வகைப்படும். அவையாவன:
◈ இந்தோ - ஆசிய மொழிகள் ◈ திராவிட மொழிகள்
◈ ஆஸ்திரோ ஆசிய மொழிகள் ◈ சீன - திபெத்திய மொழிகள்

4. **பிரான்சிஸ் எல்லிஸ் குறிப்பிடும் தென்னிந்திய மொழிகள் யாவை?**
தமிழ், கன்னடம், தெலுங்கு, மலையாளம்.

5. **ஹோக்கன் குறிப்பிடும் தமிழியன் மொழிகள் யாவை?**
தமிழ், தெலுங்கு, கன்னடம், மலையாளம், மால்தோ, தோடா, கோண்டி.

Please Send Your Study Materials to our Email Id: padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.CBSEtips.in



6. **கால்டுவெல் வெளியிட்ட ஒப்பிலக்கண நூலின் பெயர் யாது? அது வெளியிடப்பட்ட ஆண்டு யாது?**
   1856ல் திராவிடமொழிகளின் ஒப்பிலக்கணம் என்ற ஒப்பிலக்கண நூலை கால்டுவெல் வெளியிட்டார்.
7. **கால்டுவெல்லுக்குப் பின்னர் திராவிட மொழிகளை ஆய்வு செய்தோர் யாவர்?**
   ஸ்டென்கனோ, கே.வி. சுப்பையா, எல்.வி. இராமசுவாமி, பரோ, எமினோ, கமில் சுவலபில், ஆந்திரனோவ், தெ.பொ. மீனாட்சி சுந்தரம்.
8. **திராவிட மொழிகளின் வகைகள் யாவை?**
   ◈ தென் திராவிட மொழிகள்
   ◈ வட திராவிட மொழிகள்
   ◈ நடுத் திராவிட மொழிகள் என மூன்றாகத் திராவிட மொழிகளை வகைப்படுத்துவர்.
9. **தென் திராவிட மொழிகள் யாவை?**
   தமிழ், மலையாளம், கன்னடம், குடகு, துளு, கோத்தா, தோடா, கொரகா, இருளா.
10. **நடுத் திராவிட மொழிகள் யாவை?**
    தெலுங்கு, கூயி, கூவி, கோண்டா, கோலாமி, நாய்க்கி, பெங்கோ, முண்டா, பர்ஜி, கதபா, கொண்டி, கோயா.
11. **வட திராவிட மொழிகள் யாவை?**
    குரூக், மால்தோ, பிராகுய்.
12. **திராவிடம் என்ற சொல்லை முதன் முதலில் பயன்படுத்தியவர் யார்?**
    குமரிலபட்டர்.
13. **அண்மையில் கண்டறியப்பட்ட திராவிட மொழிகள் யாவை?**
    எருகலா, தங்கா, குறும்பா, சோழிகா ஆகிய நான்கு மொழிகளும் அண்மையில் கண்டறியப்பட்ட திராவிட மொழிகள் ஆகும்.
14. **தமிழ் குறித்து கால்டுவெல் கூறும் கருத்து யாது?**
    ◈ தமிழ் வடமொழியின் மகளன்று.
    ◈ அது தனிக்குடும்பத்திற்கு உரிய மொழி.
    ◈ சமஸ்கிருதக் கலப்பின்றி அது தனித்து இயங்கும் ஆற்றல் பெற்ற மொழி.
    ◈ தமிழுக்கும் இந்தியாவின் பிறமொழிகளுக்கும் தொடர்பு இருக்கலாம் என்கிறார் கால்டுவெல்.
15. **வினைச்சொற்களில் திணை, பால், எண் ஆகிய வேறுபாட்டைக் காட்டாத திராவிட மொழி எது?**
    மலையாள மொழி.

## 3 சிறுவினா

1. **திராவிட மொழிகளின் பொதுப்பண்புகள் யாவை?**
   ◈ திராவிடமொழிகளின் சொற்கள் பொதுவான அடிச்சொற்களைக் கொண்டுள்ளன.
   **சான்று:** கண்-தமிழ், கண்ணு-மலையாளம், கன்னடம், கன்னு-தெலுங்கு, குடகு. ஃகன்-குரூக்.
   ◈ திராவிட மொழிகளில் எண்ணுப்பெயர்கள் ஒன்று போலவே அமைந்துள்ளன.
   **சான்று:** மூன்று - தமிழ், மூணு - மலையாளம், மூடு - தெலுங்கு, மூரு - கன்னடம், மூஜி -துளு.

Please Send Your Study Materials to our Email Id: padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.CBSEtips.in



◈ திராவிட மொழிகளில் உயிர் எழுத்துகளில் குறில் - நெடில் வேறுபாடுகள் பொருளை வேறுபடுத்துகின்றன.

**சான்று:** அடி- குறில், ஆடி - நெடில்.

2. **இந்தியாவை மொழிகளின் காட்சிச்சாலை என ச.அகத்தியலிங்கம் குறிப்பிடக் காரணம் யாது?**

1300க்கும் மேற்பட்ட மொழிகள் இந்தியாவில் பேசப்படுகின்றன. நான்கு வகை மொழிக் குடும்பங்களாக இவற்றைப் பிரிக்கின்றனர். மேலும், இங்குப் பல கிளைமொழிகள் பேசப்படுவதால் இந்தியாவை மொழிகளின் காட்சிச்சாலை என ச.அகத்தியலிங்கம் குறிப்பிடுகிறார்.

3. **தமிழ் என்ற சொல் குறித்து ஹீராஸ் பாதிரியார் தரும் விளக்கம் யாது?**

தமிழ் என்ற சொல்லில் இருந்து திராவிடா என்ற சொல் பிறந்தது என்பதை ஹீராஸ் பாதிரியார், தமிழ் - தமிழா - தமிலா - டிரமிலா - ட்ரமிலா - த்ராவிடா - திராவிடா என்று விளக்குகிறார்.

4. **திராவிட நாகரிகம், திராவிட மொழி குறித்துக் கூறுக.**

◈ உலகின் பழமையான நாகரிகங்களில் இந்திய நாகரிகமும் ஒன்று.
◈ மொகஞ்சதாரா - ஹராப்பா நாகரிகத்திற்குப் பிறகு இது உறுதிபடுத்தப்பட்டுள்ளது.
◈ இதைத் திராவிட நாகரிகம் என்று கருதுகின்றனர்.
◈ திராவிடர் பேசிய மொழயே திராவிட மொழி எனப்படுகின்றது.

5. **மரம் என்ற சொல் பிற திராவிட மொழிகளில் எவ்வாறெல்லாம் வழங்கப்படுகின்றது?**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| தமிழ் | - | மரம் | மலையாளம் | - | மரம் |
| தெலுங்கு | - | மானு | கன்னடம் | - | மரம் |
| துளு | - | மர | கூர்க் | - | மர |

6. **தமிழ் மொழி பேசப்படும் பிறநாடுகள் யாவை?**

◈ இலங்கை ◈ தென்ஆப்ரிக்கா ◈ இங்கிலாந்து ◈ ஆஸ்திரேலியா
◈ மலேசியா ◈ மொரிஷியஸ் ◈ கயானா
◈ பர்மா ◈ இந்தோனேசியா ◈ மடாஸ்கர்
◈ சிங்கப்பூர் ◈ பிஜித்தீவு ◈ ட்ரினிடாட்.

## 4 நெடுவினா

1. **தமிழ் மொழியின் தனித்தன்மைகள் யாவை?**

◈ தொன்மை, இலக்கண-இலக்கிய வளம் உடையது தமிழ்.
◈ இலங்கை, மலேசியா, சிங்கப்பூர் உள்ளிட்ட பல நாடுகளிலும் பேசப்படும் பெருமை யுடையது தமிழ்.
◈ பிற திராவிட மொழிகளைவிட தனித்த இலக்கணவளத்தைக் கொண்டு தனித்தியங்கும் மொழி தமிழ்.
◈ பிறமொழித் தாக்கம் இல்லாத மொழி தமிழ்.
◈ திராவிட மொழிகள் சிலவற்றிற்குத் தாய்மொழி தமிழே.
◈ ஒரு பொருளைக் குறிக்க பல சொற்கள் வழங்கும் மொழி தமிழ்.
◈ பெரும்பாலான இந்தியக் கல்வெட்டுகளில் பழமையானவை தமிழிலேயே அமைந்துள்ளன.

Please Send Your Study Materials to our Email Id: padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.CBSEtips.in



## கற்பவை கற்றபின்... பக்கம்: 7

**1. உங்கள் பெயருக்கான விளக்கம் தெரியுமா? உங்கள் பெயரும் நண்பர் பெயரும் தனித்தமிழில் அமைந்துள்ளதா? கண்டறிக.**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| ஆஹில் | - | இளவரசன் | ஜோசப் | - | வளன் |
| சுசித்ரா | - | அழகி | சிந்து | - | கொடியாள் |

**2. பயன்பாட்டில் எவ்வாறெல்லாம் தமிழ் மொழியின் வேர்ச்சொற்கள் வடிவமாற்றம் பெறுகின்றன என்பது குறித்துக் கலந்துரையாடுக.**

தமிழ் மொழியில் ஒரு சொல் விளைவதற்கு வேராக இருப்பது வேர்ச்சொல் எனப்படும்.
ஒரு சொல், தோன்றுவதற்கு அடியாக இருப்பது அடிச்சொல் எனப்படும்.
ஒரு சொல்லின் முதலாக அமைவது முதல் நிலை எனப்படும். அதனை இலக்கண நூலார் பகுதி என்று கூறுவர்.

**எ.கா:** **செய்** - செய்தாள், செய்கிறாள், செய்வாள், செய்து, செய்த, செய்வீர், செய்கிறோம் .
**வா** - வந்தான், வருகிறான், வருவான், வந்து, வந்த, வாரீர், வருவோம்.

# இயல் 1 கவிதைப் பேழை

## தமிழோவியம்

– ஈரோடு தமிழன்பன்



ஆசிரியர் - ஈரோடு தமிழன்பன்
இயற்பெயர் - ஜெகதீசன்
படைப்புகள் - நெஞ்சின் நிழல், சிலிர்ப்புகள், தீவுகள் கரையேறுகின்றன, தோணி வருகின்றன, ஊமை வெயில், சூரியப்பிறைகள், வணக்கம் வள்ளுவ, கவின்குறுநூறு, இடுகுறிப்பெயரில்லை இஸ்லாம்.

### இலக்கணக் குறிப்பு

| | | |
|---|---|---|
| எத்தனை எத்தனை | - | அடுக்குத் தொடர் |
| விட்டு விட்டு | - | அடுக்குத்தொடர் |
| ஏந்தி | - | வினையெச்சம் |
| காலமும் | - | முற்றும்மை |

Please Send Your Study Materials to our Email Id: padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.CBSEtips.in



## பகுபத உறுப்பிலக்கணம்

வளர்ப்பாய் - வளர் + ப் + ப் +ஆய்
வளர் - பகுதி
ப் - சந்தி
ப் - எதிர்கால இடைநிலை
ஆய் - முன்னிலை ஒருமை வினைமுற்று விகுதி

## பாடநூல் மதிப்பீட்டு வினா

### 1 பலவுள் தெரிக

1. காலம் பிறக்கும் முன் பிறந்தது தமிழே! எந்த
காலமும் நிலையாய் இருப்பது தமிழே! -
இவ்வடிகளில் பயின்று வரும் நயங்கள்

அ) முரண், எதுகை, இரட்டைத்தொடை ஆ) இயைபு, அளபெடை, செந்தொடை
இ) மோனை, எதுகை, இயைபு ஈ) மோனை, முரண், அந்தாதி

**விடை: இ) மோனை, எதுகை, இயைபு**

### 2 குறுவினா

1. தமிழோவியம் கவிதையில் உங்களைக் கவர்ந்த அடிகள் குறித்து எழுதுக.

‘காலம் பிறக்கும் முன் பிறந்தது தமிழே! எந்தக்
காலமும் நிலையாய் இருப்பது தமிழே!’

என்ற அடி என்னைக் கவர்ந்த அடிகளாகும். பழைமையான மொழியாக இருந்தாலும், காலம் கடந்து நிலைத்து நிற்கும் மொழியாகும் என்பதை இத்தொடர் வழி அறியலாம்.

2. அகமாய் புறமாய் இலக்கியங்கள் - அவை
அமைந்ததைச் சொல்லும் இலக்கணங்கள்
இலக்கியங்களின் பாடுபொருளாக இவ்வரிகள் உணர்த்துவன யாவை?

இலக்கியங்களின் பாடுபொருளாக இவ்வரிகள் அகப்பொருள், புறப்பொருள் ஆகியவற்றை உணர்த்துகின்றன.

### 3 சிறுவினா

1. காலந்தோறும் தமிழ்மொழி தன்னை எவ்வாறு புதுப்பித்துக்கொள்கின்றது?

சங்க இலக்கியத்தில் எண்ணற்ற தமிழ்ச்சொற்கள் காலத்திற்கேற்றபடி புதுப்பித்துக் கொள்ளும் வகையில் உள்ளன. மேலும், ‘கடி சொல் இல்லைக் காலத்துப்படினே’ என்ற தொல்காப்பிய நூற்பா வரிகள் புதிய சொல்லுருவாக்கத்திற்கு வழி செய்வதாலும் காலந்தோறும் தமிழ்மொழி தன்னைப் புதுப்பித்துக் கொள்கின்றது.

2. புதுக்கோலம் புனைந்து தமிழ் வளர்ப்பாய் - உங்கள் பங்களிப்பை விளக்குக.

◈ தமிழில் உள்ள அறிவியல் செய்திகளை மேலும் வெளிக்கொணர்வோம்.
◈ கன்னித் தமிழ் மாறாது கணினித் தமிழ் ஆக்குவோம்.
◈ அயல்மொழி மோகம் கொண்டு திரிவோரை அன்னைத் தமிழ் மோகம் கொள்ள வைப்போம்.

Please Send Your Study Materials to our Email Id: padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.CBSEtips.in



# கூடுதல் வினாக்கள்

## 1 பலவுள் தெரிக

1. இனிமையும் நீர்மையும் தமிழெனல் ஆகும் எனக்கூறும் நூல் ______.
   அ) வணக்கம் வள்ளுவ ஆ) பிங்கல நிகண்டு
   இ) தமிழோவியம் ஈ) தமிழன்பன் கவிதைகள்
   **விடை: ஆ) பிங்கல நிகண்டு**

2. யாமறிந்த மொழிகளிலே தமிழ்மொழி போல் இனிதாவது எங்கும் காணோம் என்று பாடியவர் ______
   அ) பாரதிதாசன் ஆ) தமிழன்பன்
   இ) பாரதியார் ஈ) ஜெகதீசன்
   **விடை: இ) பாரதியார்**

3. காலம் பிறக்கும் முன் பிறந்தது எது?
   அ) தமிழ் ஆ) ஆங்கிலம்
   இ) வடமொழி ஈ) மலையாளம்
   **விடை: அ) தமிழ்**

4. சென்றியு, சென்ரியு, லிமரைக்கூ எனப் புதுப்புது வடிவங்களில் கவிதைகளைத் தந்தவர் ______.
   அ) ஈரோடு தமிழன்பன் ஆ) பாரதியார்
   இ) பாரதிதாசன் ஈ) கண்ணதாசன்
   **விடை: அ) ஈரோடு தமிழன்பன்**

5. வணக்கம் வள்ளுவ என்ற நூலுக்குச் சாகித்ய அகாடமி விருது கிடைத்த ஆண்டு ______.
   அ) 2003 ஆ) 2004 இ) 2007 ஈ) 2015
   **விடை: ஆ) 2004**

6. உலகத் தாய்மொழி நாள் ______.
   அ) பிப்ரவரி 20 ஆ) பிப்ரவரி 21
   இ) பிப்ரவரி 23 ஈ) சனவரி 10
   **விடை: ஆ) பிப்ரவரி 21**

**கோடிட்ட இடத்தை நிரப்புக.**

1. இலங்கை, சிங்கப்பூரில் ஆட்சி மொழி ______ மொழி. **விடை: தமிழ்**
2. ஈரோடு தமிழன்பனின் இயற்பெயர் ______ **விடை: ஜெகதீசன்**
3. மானிட மேன்மையைச் சாதித்திட ______ மட்டுமே போதும். **விடை: தமிழ்**
4. பலசமயங்களையும் ஏந்தி வளர்த்ததால் தமிழ்(த்) ______ எனலாம். **விடை: தாய்**
5. புதுக்கோலம் புனைந்து தமிழ் வளர்ப்பாய் என்று கூறியவர் ______. **விடை: ஈரோடு தமிழன்பன்**

## 2 குறுவினா

1. **உலகத்தாய்மொழி நாள் எது?**
   பிப்ரவரி 21.

2. **தமிழை ஆட்சிமொழியாகக் கொண்ட நாடுகள் எவை?**
   இலங்கை, சிங்கப்பூர்.

3. **மானிட மேன்மையைச் சாதித்திட எதன் வழி, ஓதி நடக்கவேண்டும் என்று ஈரோடு தமிழன்பன் கூறுகின்றார்?**
   மானிட மேன்மையைச் சாதித்திட திருக்குறள் வழி, ஓதி நடக்கவேண்டும் என்கின்றார் ஈரோடு தமிழன்பன்.

Please Send Your Study Materials to our Email Id: padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.CBSEtips.in



## 3 சிறுவினா

1. **ஈரோடு தமிழன்பன் குறிப்பு வரைக.**
   - ◈ சிறுகதை, புதுக்கவிதை முதலிய படைப்புகள் வெளியிட்டுள்ளார்.
   - ◈ ஹைக்கூ, சென்றியு, லிமரைக்கூ முதலிய புது வடிவங்களில் கவிதை நூல்களைத் தந்துள்ளார்.
   - ◈ 2004இல் அவரின் வணக்கம் வள்ளுவ நூல் சாகித்திய அகாடமி விருது பெற்றது.
   - ◈ தமிழன்பன் கவிதைகள் தமிழக அரசின் பரிசினைப் பெற்றுள்ளது.

2. **தமிழோவியம் கவிதையில் கவிஞர் சுட்டும் கருத்துகளைச் சுருக்கமாக எழுதுக.**
   - ◈ காலம் பிறக்கும் முன் பிறந்தது தமிழ், எந்தக் காலத்திலும் நிலையாய் இருப்பது தமிழ் மொழி(யே) ஆகும்.
   - ◈ இலக்கியங்களும், இலக்கணங்களும் இணையில்லாத காப்பியத் தோட்டங்கள். அவை உன் மனதில் ஊர்வலம் நடத்தும்.
   - ◈ இருட்டைப்போக்கும் விளக்காய், உயர்வு தரும் குறள் வழி நடந்தால் போதும்.
   - ◈ பல சமயங்களை வளர்த்த தாயானவள் தமிழ்.
   - ◈ புதிய சிந்தனையைச் சித்தர் நெறிகள் கூறும்.
   - ◈ விரலில் இல்லை, வீணையில் உள்ளது இசை என்று கூறுவோர்போல குறை சொல்லாமல் தமிழ் வளர்ப்போம்.

## கற்பவை கற்றபின்...

பக்கம்: 9

1 **பிறமொழி கலப்பின்றித் தனித்தமிழில் இரண்டு மணித்துளிகள் வகுப்பறையில் பேசுக. பிறமொழிக் கலப்பின்றித் தனித்தமிழில் பேசுதல்:**

அவையோர் அனைவருக்கும் வணக்கம்!

என் உரையைக் கேட்க ஆவலுடன் அமர்ந்திருக்கும் எங்கள் தமிழ் ஐயா! அவர்களே! என் உடன் பயிலும் அன்பார்ந்த சகோதர, சகோதரிகளே உங்கள் முன் தனித்தமிழில் உரையாடுவதில் பெருமகிழ்வெய்துகிறேன்.

நான் உரையாற்ற எடுத்துக்கொண்ட தலைப்பே, "**தனித்தமிழ்**" என்பதுதான்.

நாம், நம் அன்றாட வாழ்வில் தமிழ்மொழியைச் சிறிது சிறிதாக மறந்து கொண்டிருக்கிறோம். பிறமொழிச்சொற்களைத் தமிழ்மொழி போலவே பயன்படுத்திக் கொண்டிருக்கிறோம்.

கணினியைப் பயன்படுத்தும் நாம்... எப்படித் தமிழைப் பயன்படுத்துவது என தயங்காதீர். அனைத்து ஆங்கில வார்த்தைக்கும் செயலி, விரலி, சுட்டி, உலவி... என தமிழில் சொற்கள் உண்டு. எனவே, தனித்தமிழ் பயன்படுத்துவோம்! நம் கன்னித்தமிழை வளர்ப்போம்!!

2. **கவிதையைத் தொடர்க.**

அன்னை சொன்ன மொழி
ஆதியில் பிறந்த மொழி
இணையத்தில் இயங்கும் மொழி
ஈடிலாத் தொன்மை மொழி
உலகம் போற்றும் மொழி
ஊர்கூடி வியக்கும் மொழி
**எங்கும் நிறைந்த மொழி**
**ஏறுநடை பயின்ற மொழி**
**ஒற்றுமை வளர்க்கும் மொழி**
**ஓங்கி வளர்ந்த மொழி**

Please Send Your Study Materials to our Email Id: padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.CBSEtips.in



இயல் 1 கவிதைப் பேழை

# தமிழ்விடு தூது

மதுரை சொக்கநாதர் மேல் காதல் கொண்டு இருக்கும் பெண் தமிழைத் தூதுவிடுவதாக அமைந்தது தமிழ்விடு தூது. ஆசிரியர் பெயர் அறிய இயலவில்லை.

## சொற்பொருள்

| | | |
|---|---|---|
| குறம், பள்ளு | - | 96 வகை சிற்றிலக்கியங்களுள் இரண்டு |
| மூன்றினம் | - | பாவகைகளின் பிரிவுகள் தாழிசை, துறை, விருத்தம் |
| சிந்தாமணி | - | 1. சீவகசிந்தாமணி 2. சிதறாத மணி |
| சிந்து | - | ஒருவகை இசைப்பாடல். யாப்பு வகைகளுள் ஒன்று காவடிச்சிந்து, மூன்று சீர்களில் வரும் செந்தமிழ் நாடென்னும் போதினிலே - இன்பத் தேன் வந்து பாயுது காதினிலே - பாரதியார் 'சிந்துக்குத் தந்தை' என்பதைத் தெரிக. |
| முக்குணம் | - | மூன்று குணம் சத்துவம் (அமைதி, மேன்மை) இராசசம் (தீவிரமான செயல், போர்) தாமசம் (சோம்பல், தாழ்மை) |
| வண்ணங்கள் ஐந்து | - | வெள்ளை, சிவப்பு, கறுப்பு, மஞ்சள், பச்சை. |
| வண்ணம் நூறு | - | குறில், அகவல், தூங்கிசை முதலான இடை மெல்லிசை வண்ணம் ஈறாக நூறு |
| ஊனரசம் | - | குறையுடைய சுவை. |
| நவரசம் | - | வீரம், அச்சம், இழிப்பு, வியப்பு, காமம், அவலம், கோபம் நகை, சமநிலை. |
| வனப்பு | - | அழகு, அம்மை, தொன்மை, தோல், விருந்து இயைபு, புலன், இழைபு என எட்டாகும். |

## இலக்கணக் குறிப்பு

| | | |
|---|---|---|
| முத்திக்கனி | - | உருவகம் |
| தெள்ளமுது | - | பண்புத்தொகை |
| குற்றமிலா | - | ஈறுகெட்ட எதிர்மறைப் பெயரெச்சம் |
| நா | - | ஓரெழுத்து ஒரு மொழி |
| செவிகள் உணவான | - | 4ஆம் வேற்றுமைத்தொகை |
| சிந்தாமணி | - | ஈறுகெட்ட எதிர்மறைப் பெயரெச்சம் |

## பகுபத உறுப்பிலக்கணம்

**கொள்வார் - கொள் + வ் + ஆர்**

| | | |
|---|---|---|
| கொள் | - | பகுதி |
| வ் | - | எதிர்கால இடைநிலை |
| ஆர் | - | பலர்பால் வினைமுற்று விகுதி |

**உணர்ந்த - உணர் + த்(ந்) + த் + அ**

| | | |
|---|---|---|
| உணர் | - | பகுதி |
| த் | - | சந்தி (ந்) ஆனது விகாரம் |
| த் | - | இறந்தகால இடைநிலை |
| அ | - | பெயரெச்ச விகுதி |

Please Send Your Study Materials to our Email Id: padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.CBSEtips.in



## பாடநூல் மதிப்பீட்டு வினா

### 1 பலவுள் தெரிக

1. தமிழ்விடு தூது ______ என்னும் இலக்கிய வகையைச் சார்ந்தது.
   அ) தொடர்நிலைச் செய்யுள் ஆ) புதுக்கவிதை
   இ) சிற்றிலக்கியம் ஈ) தனிப்பாடல் **விடை: இ) சிற்றிலக்கியம்**

2. விடுபட்ட இடத்திற்குப் பொருத்தமான விடை வரிசையைக் குறிப்பிடுக.
   அ) ______ இனம் ஆ) வண்ணம் ______ இ) ______ குணம் ஈ) வனப்பு ______
   க) மூன்று, நூறு, பத்து, எட்டு உ) எட்டு, நூறு, பத்து, மூன்று
   ங) பத்து, நூறு, எட்டு, மூன்று ச) நூறு, பத்து, எட்டு, மூன்று
   **விடை: க) மூன்று, நூறு, பத்து, எட்டு**

3. <u>அழியா</u> வனப்பு, <u>ஒழியா</u> வனப்பு, <u>சிந்தா</u> மணி - அடிக்கோடிட்ட சொற்களுக்கு இலக்கணக் குறிப்பு
   அ) வேற்றுமைத்தொகை ஆ) ஈறுகெட்ட எதிர்மறைப் பெயரெச்சம்
   இ) பண்புத்தொகை ஈ) வினைத்தொகை
   **விடை: ஆ) ஈறுகெட்ட எதிர்மறைப் பெயரெச்சம்**

### 2 குறுவினா

1. கண்ணி என்பதன் விளக்கம் யாது?

இரண்டு இரண்டு பூக்களை வைத்துத் தொடுக்கப்படும் மாலை கண்ணி. அதே போல் இரண்டு இரண்டு அடிகளை வைத்து எதுகையால் தொடுக்கப்படும் செய்யுள் கண்ணி ஆகும்.

### 3 சிறுவினா

1. தூது அனுப்பத் தமிழே சிறந்தது - தமிழ்விடுதூது காட்டும் காரணங்களை விளக்கி எழுதுக.

◈ அமிழ்தினும் மேலான முத்திக் கனியே! முத்தமிழே! உன்னோடு மகிழ்ந்து சொல்லும் விண்ணப்பம் உண்டு. கேள்!

◈ புலவர்கள் குறம், பள்ளு பாடி தமிழிடமிருந்து சிறப்பு பெறுகின்றனர். அதனால் உனக்கும் பாவகைக்கும் உறவு உண்டா?

◈ தமிழே! சிந்தாமணியாய் இருந்த உன்னைச் சிந்து என்று அழைப்பவர் நா இற்று விழும்.

◈ தேவர்கள் கூட மூன்று குணங்கள் தான் பெற்றுள்ளனர். ஆனால் தமிழே! நீ மட்டுமே பத்து குணங்களைப் பெற்றுள்ளாய்!

◈ மனிதர் உண்டாக்கிய வண்ணங்கள் கூட ஐந்து தான். ஆனால் தமிழே! நீ மட்டுமே 100 வண்ணங்களைப் பெற்றுள்ளாய்!

◈ உணவின் சுவையோ ஆறு தான். ஆனால், தமிழே! நீயோ ஒன்பது சுவைகளைப் பெற்றுள்ளாய்!

◈ மற்றையோர்க்கு அழகு ஒன்று தான் , ஆனால், தமிழே ! நீயோ 8 வகையான அழகினைப் பெற்றுள்ளாய்!

Please Send Your Study Materials to our Email Id: padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.CBSEtips.in



## கூடுதல் வினாக்கள்

### 1 பலவுள் தெரிக

1. கலிவெண்பாவால் பாடப்பெறும் சிற்றிலக்கியம் ________
அ) கலம்பகம் ஆ) தூது
இ) பிள்ளைத்தமிழ் ஈ) மாலை **விடை: ஆ) தூது**

2. தூது விடும் பொருட்கள் மொத்தம் ________
அ) 96 ஆ) 18 இ) 10 ஈ) 13 **விடை: இ) 10**

3. தமிழ் விடு தூது நூலை முதன் முதலில் பதிப்பித்தவர் ________
அ) உ.வே.சா ஆ) ஔவையார்
இ) அடியார்க்கு நல்லார் ஈ) தமிழன்பன் **விடை: அ) உ.வே.சா**

4. உ.வே.சா தமிழ்விடு தூது நூலைப்பதிப்பித்த ஆண்டு ________
அ) 1930 ஆ) 1934 இ) 1970 ஈ) 1980 **விடை: இ) 1930**

5. தமிழ் விடு தூது நூலில் உள்ள கண்ணிகளின் எண்ணிக்கை ________
அ) 260 ஆ) 268 இ) 309 ஈ) 96 **விடை: ஆ) 268**

6. தூது ________ வகைகளுள் ஒன்று.
அ) பேரிலக்கியம் ஆ) காப்பிய இலக்கியம்
இ) சிற்றிலக்கியம் ஈ) பக்தி இலக்கியம் **விடை: இ) சிற்றிலக்கியம்**

7. சிற்றிலக்கிய வகை சாராதது ________
அ) குறம் ஆ) பள்ளு
இ) சீவகசிந்தாமணி ஈ) தமிழ் விடுதூது **விடை: இ) சீவகசிந்தாமணி**

8. தாமசம் என்பதன் பொருள் ________
அ) அமைதி ஆ) போர் இ) மேன்மை ஈ) சோம்பல் **விடை: ஈ) சோம்பல்**

9. தமிழின் வண்ணங்கள் ________
அ) 5 ஆ) 100 இ) 96 ஈ) 4 **விடை: ஆ) 100**

10. பொருத்துக.

| | | |
|---|---|---|
| 1. உணவின் சுவை | - | அ) ஒன்பது |
| 2. தமிழின் சுவை | - | ஆ) பத்து |
| 3. தேவர்கள் குணம் | - | இ) ஆறு |
| 4. தமிழின் குணம் | - | ஈ) மூன்று |

அ) 1-இ 2-அ 3-ஈ 4-ஆ ஆ) 1-அ 2-ஆ 3-ஈ 4-இ
இ) 1-இ 2-ஆ 3-ஈ 4-அ ஈ) 1-ஈ 2-அ 3-இ 4-அ
**விடை: அ) 1-இ 2-அ 3-ஈ 4-ஆ**

கோடிட்ட இடத்தை நிரப்புக.

1. தமிழ் விடு தூது நூலின் ஆசிரியர் ________. **விடை: அறிய இயலவில்லை**
2. இனிக்கும் தெளிந்த அமுதம் ________. **விடை: தமிழ்**

Please Send Your Study Materials to our Email Id: padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.CBSEtips.in



3. வீடுபேற்றைத் தரும் கனி ________. விடை: தமிழ்
4. அறிவால் உண்ணப்படும் தேன் போன்றது________. விடை: தமிழ்
5. நாவின் சுவை ________. விடை: ஆறு
6. விளம்பக் கேள் என்பதன் பொருள் ________. விடை: சொல்வதைக்கேள்(கூறுவதைக்கேள்)
7. ஒழியா வனப்பு ________. விடை: எட்டு
8. அழியா வனப்பு ________. விடை: ஒன்று

## 2 குறுவினா

1. **நா இற்று விழும் - எப்போது?**
தமிழே! சிந்தாமணியாய் இருந்த உன்னைச் சிந்து என்று அழைப்பவர் நா இற்று விழும்.

2. **தூது இலக்கியத்தின் வேறு பெயர்கள் யாவை?**
வாயில் இலக்கியம், சந்து இலக்கியம்.

3. **தூது இலக்கியம் குறிப்பு வரைக.**
தலைவன் மீது அன்பு கொண்ட தலைவி ஒருத்தி, தலைவனிடம் தூது அனுப்பி மாலை வாங்கி வருமாறு அன்னம் முதலிய 10 பொருள்களில் ஏதேனும் ஒன்றினை தூது அனுப்புவது தூது இலக்கியம் ஆகும். இது கலிவெண்பாவால் பாடப்படும்.

4. **மூவகைப் பாவினங்கள் யாவை?**
துறை, தாழிசை, விருத்தம்.

5. **நவரசங்கள் யாவை?**
வீரம், அச்சம், இழிப்பு, வியப்பு, காமம், அவலம், கோபம், நகை, சமநிலை.

6. **தேவர்கள் பெற்ற முக்குணங்கள் யாவை?**
சத்துவம், இராசசம், தாமசம்.

7. **தமிழுக்குக் கூறப்பட்ட உருவகங்கள் யாவை?**
வீடுபேறு தரும் கனி, அறிவால் உண்ணப்படும் தேன்.

## 3 சிறுவினா

1. **தமிழ்விடுதூது - குறிப்பு எழுதுக.**
◈ மதுரை சொக்கநாதர் மீது காதல் கொண்ட பெண்ணொருத்தி, தன் காதலைக் கூறிவர தமிழைத் தூது விடுவதாக அமைந்துள்ளது.
◈ 268 கண்ணிகளை உடையது.
◈ 1930ல் முதன் முதலில் இந்நூலைப் உ.வே.சா பதிப்பித்தார்.
◈ ஆசிரியர் பெயர் அறிய இயலவில்லை.

2. **தமிழ்பெற்ற சிறப்புகளாகத் தமிழ்விடு தூது குறிப்பிடுவன யாவை?**
தமிழே! நீ மட்டுமே பத்து குணங்களைப் பெற்றுள்ளாய்!
தமிழே! நீ மட்டுமே 100 வண்ணங்களைப் பெற்றுள்ளாய்!
தமிழே! நீ மட்டுமே ஒன்பது சுவைகளைப் பெற்றுள்ளாய்!
தமிழே! நீ மட்டுமே 8 வகையான அழகினைப் பெற்றுள்ளாய்!

Please Send Your Study Materials to our Email Id: padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.CBSEtips.in



## கற்பவை கற்றபின்... பக்கம்: 12

**1. நமது எண்ணங்களையும் கருத்துகளையும் எளிதாக எடுத்துரைக்க உதவுவது தமிழ் மொழி என்ற தலைப்பில் ஒரு பக்க அளவில் உரை ஒன்று எழுதுக.**

**"நண்ணு மிளவைப் பருவத்தி லேமுதல்**
**நாவை யசைத்த மொழி - எங்கள்**
**கண்ணைத் திறந்துல கத்தை விளக்கிக்**
**கருத்தோ டிசைத்த மொழி"**

என்று வரத நஞ்சைய பிள்ளை தமிழின் பெருமையை எடுத்துக் காட்டுகிறார். "இனிமையும் நீர்மையும் தமிழ் எனல்" ஆகும் என்பது புகழ்மொழியாகும். "யாமறிந்த மொழிகளிலே தமிழ் மொழிபோல் இனிதாவது எங்கும் காணோம்" என்று பாரதியார் பாடினார். இத்தமிழ் நம் எண்ணங்களையும் கருத்துகளையும் எளிதில் எடுத்துரைக்கத் தக்கதாகும்.

தமிழ் மொழியிலுள்ள சொற்கட்டமைப்பும் வாக்கியக் கட்டுக் கோப்பும் எளிமையாகவும் திறமாகவும் அமைந்துள்ளன. இலக்கணக் கட்டுப்பாடு மொழிக்கு வேலி போன்றது ஆகும். சொற்கள் இலக்கியத்திற்கு என்றும் இலக்கணத்திற்கு என்றும் தனித்தனியே அமைந்துள்ளன. இலக்கியத்திற்கு இயற்சொல், திரிசொல், திசைச்சொல், வடசொல் என நான்கு சொற்களையும் பயன்படுத்துகிறோம். இலக்கணத்திற்குப் பெயர்ச்சொல், வினைச்சொல், இடைச்சொல், உரிச்சொல் என்னும் தனியமைப்புப் பயன்பாட்டுக்குரியது.

தமிழ் மொழியின் இனிமையும் எளிமையும் சமயம் பரப்ப தமிழகத்துக்கு வந்த மேனாட்டுக் கிறித்துவ சமயச் சான்றோர்களைக் கவர்ந்தது. அவர்கள் எண்ணங்களையும் கருத்துகளையும் இனிய எளிய தமிழில் எடுத்துரைக்கச் செய்தது.

இந்திய விடுதலைப் போராட்டத்தில் தமிழ் தேசியத்தை வளர்த்தது. தேசியம் தமிழை எடுத்துக் கொண்டது. கருத்துகளையும் எண்ணங்களையும் எடுத்துச் சொல்ல முடிந்தது. அறிவியல் நுட்பங்களை எடுத்துச் சொல்ல புதுப்புதுச் சொற்களைப் படைத்தளித்தனால் சொல்வளம் பெருகியது. தமிழ் கணினிப் பயன்பாட்டிற்கு வந்தவுடன் கணினித் தமிழ் என்ற துறை முகிழ்த்தது. நமது எண்ணங்களுக்கு வடிவம் கொடுக்க மொழி பயன்பட்டது. அம்மொழி வழியே கருத்துகளைப் பிறருக்குப் பகிர்ந்து கொள்ள முடிகிறது.

**2. படித்துத் திரட்டுக.**

**"காதொளிரும் குண்டலமும் கைக்கு வளையாபதியும் கருணை மார்பின்**
**மீதொளிர் சிந்தாமணியும் மெல்லிடையில் மேகலையும் சிலம்பார் இன்பப்**
**போதொளிரும் திருவடியும் பொன்முடி சூளாமணியும் பொலியச் சூடி**
**நீதியொளிர் செங்கோலாய்த் திருக்குறளைத் தாங்குதமிழ் நீடுவாழ்க"**

**- கவியோகி சுத்தானந்த பாரதியார்.**

இப்பாடல் காட்டும் இலக்கியங்களின் பெயர்களை வரிசைப்படுத்துக.

**இப்பாடல் காட்டும் இலக்கியங்கள்**

| | | |
|---|---|---|
| குண்டலமும் | - | குண்டலகேசி |
| கைக்கு வளையாபதி | - | வளையாபதி |
| சிந்தாமணி | - | சீவக சிந்தாமணி |
| பொன்முடி சூளாமணி | - | சூளாமணி |
| செங்கோலாய்த் திருக்குறள் | - | திருக்குறள் |

Please Send Your Study Materials to our Email Id: padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.CBSEtips.in



# இயல் 1 விரிவானம்

# வளரும் செல்வம்

## பாடநூல் மதிப்பீட்டு வினா

### 1 குறுவினா

**1. கணினி சார்ந்து நீங்கள் அறிந்த எவையேனும் ஐந்து தமிழ்ச் சொற்களை தருக.**

i) Monitor - திரை
ii) Mouse - நகர்த்தி (அல்லது) சுட்டி
iii) Keyboard - விசைப்பலகை
iv) CD - குறுந்தட்டு
v) Download - பதிவிறக்கம்
vi) File - கோப்பு
vii) E-Mail - மின்னஞ்சல்

### 2 சிறுவினா

**1. சங்க இலக்கியத்தில் காணப்படும் கடற்கலனுக்குரிய சொல் கிரேக்க மொழியில் எவ்வாறு மாற்றம் பெற்றுள்ளது?**

சங்க இலக்கியத்தில் காணப்படும் கடற்கலனுக்குரிய சொற்கள் கிரேக்க மொழியிலும் மாற்றம் பெற்றுள்ளன.

| தமிழ் | கிரேக்கம் |
|---|---|
| எறிதிரை | எறுதிரான் |
| கலன் | கலயுகோய் |
| நீர் | நீரியோஸ் /நீரிய |
| நாவாய் | நாயு |
| தோணி | தோணீஸ் |

**2. வளரும் செல்வம் - உரையாடலில் குறிப்பிடப்படும் பிறமொழிச் சொற்களைத் தொகுத்து அதற்கு இணையான தமிழ்ச் சொற்களைப் பட்டியலிடுக.**

| பிறமொழிச் சொற்கள் | தமிழ்ச் சொற்கள் |
|---|---|
| சாப்ட்வேர் | மென்பொருள் |
| லேப்டாப் | மடிக்கணினி |
| ப்ரௌசர் | உலவி |
| சைபர்ஸ்பேஸ் | இணையவெளி |
| சர்வர் | வையக விரிவு வலை |

Please Send Your Study Materials to our Email Id: padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.CBSEtips.in



## கற்பவை கற்றபின்... பக்கம்: 17

1. **நீங்கள் நாள்தோறும் வகுப்பறையில் மிகுதியாகப் பயன்படுத்தும் சொற்களைப் பட்டியலிட்டு, அவற்றில் இடம்பெற்றுள்ள பிறமொழிச் சொற்களுக்கு நிகரான தமிழ்ச் சொற்களை அறிந்து எழுதுக.**

| சொற்பட்டியல் | பிறமொழிச் சொற்கள் | நிகரான தமிழ்ச் சொற்கள் |
|---|---|---|
| வகுப்பு, புத்தகம், பிளாக் போர்டு, பேனா, பென்சில், நோட்டு. | பிளாக் போர்டு (Blackboard) | கரும்பலகை |
| வகுப்பு<br>புத்தகம்<br>பேனா<br>பென்சில்<br>நோட்டு<br>ரப்பர் | கிளாஸ்ரூம் (Classroom)<br>புக் (Book)<br>பென் (Pen)<br>ப்பென்சில் (Pencil)<br>நோட் (Note)<br>எரேஸர் (Eraser) | வகுப்பறை<br>பாடநூல்<br>தூவல்<br>கரிக்கோல்<br>குறிப்பேடு<br>மென்மம் |

2. **உரையாடலை நிறைவு செய்க. அவற்றுள் இடம்பெறும் பிறமொழிச் சொற்களைத் தமிழாக்கம் செய்க.**

**அருண்** : ஹலோ! நண்பா!
**நளன்** : வணக்கம் நண்பா..
**அருண்** : உன்னைப் பார்த்துப் பத்தாண்டுகள் ஆகிவிட்டன. இல்லையா?
**நளன்** : ஆமாம்! பத்து ஆண்டுகள் ஆகிவிட்டன நீ என்ன செய்கிறாய். இப்போது நான் பன்னாட்டு நிறுவனம் ஒன்றில் மேலாளராக பணி புரிகிறேன், நீ.....
**அருண்** : நான் நந்தனம் அரசுக் கல்லூரியில் பேராசிரியராகப் பணிபுரிகிறேன்.
**நளன்** : அந்தக் கல்லூரியில் தான் என் தம்பி வணிகவியல் முதலாமாண்டு படிக்கிறான்.
**அருண்** : மிக்க நன்றி, மீண்டும் சந்திப்போம்.
**நளன்** : மீண்டும் பார்க்கலாம்.

Please Send Your Study Materials to our Email Id: padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.CBSEtips.in



இயல் 1 கற்கண்டு

# தொடர் இலக்கணம்

## பாடநூல் மதிப்பீட்டு வினா

### 1 பலவுள் தெரிக

1. குழுவில் விடுபட்ட வரிசையைத் தேர்தெடுக்க.

| குழு -1 | குழு -2 | குழு -3 | குழு - 4 |
|---|---|---|---|
| நாவாய் | மரம் | துறை | தன்வினை |

அ) 1-வங்கம், 2-மானு, 3-தாழிசை, 4- பிறவினை.
ஆ) 1-தாழிசை, 2-மானு, 3-பிறவினை, 4- வங்கம்.
இ) 1- பிறவினை, 2- தாழிசை, 3- மானு, 4- வங்கம்.
ஈ) 1-மானு, 2-பிறவினை, 3-வங்கம், 4-தாழிசை.

**விடை: அ) 1-வங்கம், 2-மானு, 3-தாழிசை, 4-பிறவினை**

### 2 குறுவினா

1. செய்வினையைச் செயப்பாட்டு வினையாக மாற்றும் துணை வினைகள் இரண்டினை எழுதுக.

◈ உண். - சான்று : கோவலன் கொலையுண்டான்.
◈ ஆயிற்று. - சான்று : வீடு கட்டியாயிற்று.

2. வீணையோடு வந்தாள், கிளியே பேசு - தொடரின் வகையைச் சுட்டுக.

வேற்றுமைத்தொடர், விளித்தொடர்.

### 3 சிறுவினா

1. தன்வினை, பிறவினை, காரணவினையை விளக்குக.

| தன்வினை | பிறவினை | காரணவினை |
|---|---|---|
| வினையின் பயன் எழுவாயைச் சேருமாயின் அது தன்வினை. | வினையின் பயன் எழுவாயையன்றி பிறிதொன்றைச் சேருமாயின் அது பிறவினை. | எழுவாய் தானே வினையை நிகழ்த்தாம, வினை நிகழ்வதற்குக் காரணமாக இருப்பது காரண வினை ஆகும். |
| **எ.கா:** பந்து உருண்டது. | **எ.கா:** பந்தை உருட்டினான். | **எ.கா:** உருட்ட வைத்தான். |

Please Send Your Study Materials to our Email Id: padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.CBSEtips.in



## கூடுதல் வினாக்கள்

### 1 பலவுள் தெரிக

1. எட்வர்டு வந்தான் - இத்தொடரில் 'எட்வர்டு' என்பது ________.
அ) எழுவாய் ஆ) பயனிலை
இ) தோன்றா எழுவாய் ஈ) வினைப் பயனிலை **விடை: அ) எழுவாய்**

2. கனகாம்பரம் பூத்தது - இத்தொடரில் 'பூத்தது' என்பது ________.
அ) எழுவாய் ஆ) பயனிலை
இ) தோன்றா எழுவாய் ஈ) வினாப் பயனிலை **விடை: ஆ) பயனிலை**

3. 'படித்தாய்' - இத்தொடரில் 'நீ' என்னும் எழுவாய் வெளிப்படையாகத் தெரியவில்லை. இதைத் ________ என்று கூறுகின்றோம்.
அ) எழுவாய் ஆ) பயனிலை
இ) தோன்றா எழுவாய் ஈ) வினாப் பயனிலை **விடை: இ) தோன்றா எழுவாய்**

4. விளையாடுபவர் யார்? இத்தொடரில் 'யார்' என்பது ________.
அ) எழுவாய் ஆ) பயனிலை
இ) தோன்றா எழுவாய் ஈ) வினாப் பயனிலை **விடை: ஈ) வினாப் பயனிலை**

5. 'அன்பரசன் நல்ல பையன்' - இத்தொடரில் 'நல்ல' என்பது ________.
அ) பெயரடை ஆ) வினையடை
இ) தன்வினை ஈ) பிறவினை **விடை: இ) பெயரடை**

6. 'மகிழ்நன் மெல்ல வந்தான்.' - இத்தொடரில் 'மெல்ல' என்பது ________.
அ) பெயரடை ஆ) வினையடை
இ) தன்வினை ஈ) பிறவினை **விடை: ஆ) வினையடை**

7. சொற்றொடர் வகைச் சுட்டுக: 'மன்னன் வந்தான்'
அ) எழுவாய்த்தொடர் ஆ) வினைமுற்றுத் தொடர்
இ) வேற்றுமைத்தொடர் ஈ) விளித்தொடர் **விடை : அ) எழுவாய்த்தொடர்**

8. சொற்றொடர் வகைச் சுட்டுக: 'வந்தான் மன்னன்'
அ) எழுவாய்த்தொடர் ஆ) வினைமுற்றுத் தொடர்
இ) வேற்றுமைத்தொடர் ஈ) விளித்தொடர் **விடை: ஆ) வினைமுற்றுத் தொடர்**

9. சொற்றொடர் வகைச் சுட்டுக: 'அண்ணனோடு வருவான்'
அ) எழுவாய்த்தொடர் ஆ) வினைமுற்றுத் தொடர்
இ) வேற்றுமைத்தொடர் ஈ) விளித்தொடர் **விடை : இ) வேற்றுமைத்தொடர்**

10. சொற்றொடர் வகைச் சுட்டுக: 'நண்பா கேள்'
அ) எழுவாய்த்தொடர் ஆ) வினைமுற்றுத் தொடர்
இ) வேற்றுமைத்தொடர் ஈ) விளித்தொடர் **விடை : ஈ) விளித்தொடர்**

11. கீழ்க்காணும் சொற்றொடரில் தன்வினைத்தொடரைத் தேந்தெடுக்க.
அ) அப்துல் நேற்று வந்தான். ஆ) அப்துல் நேற்று வரவழைத்தான்.
இ) கவிதா உரை படித்தாள். ஈ) உரை கவிதாவால் படிக்கப்பட்டது.
**விடை: அ) அப்துல் நேற்று வந்தான்**

Please Send Your Study Materials to our Email Id: padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.CBSEtips.in



12. **கீழ்க்காணும் சொற்றொடரில் பிற வினைத்தொடரைத் தேந்தெடுக்க.**

அ) அப்துல் நேற்று வந்தான். ஆ) அப்துல் நேற்று வரவழைத்தான்.
இ) கவிதா உரை படித்தாள். ஈ) உரை கவிதாவால் படிக்கப்பட்டது.

**விடை: ஆ) அப்துல் நேற்று வரவழைத்தான்.**

13. **கீழ்க்காணும் சொற்றொடரில் செய்வினைத்தொடரைத் தேந்தெடுக்க.**

அ) அப்துல் நேற்று வந்தான். ஆ) அப்துல் நேற்று வரவழைத்தான்.
இ) கவிதா உரை படித்தாள். ஈ) உரை கவிதாவால் படிக்கப்பட்டது.

**விடை: இ) கவிதா உரை படித்தாள்.**

14. **கீழ்க்காணும் சொற்றொடரில் செய்வினைத்தொடரைத் தேந்தெடுக்க.**

அ) அப்துல் நேற்று வந்தான். ஆ) அப்துல் நேற்று வரவழைத்தான்.
இ) கவிதா உரை படித்தாள். ஈ) உரை கவிதாவால் படிக்கப்பட்டது.

**விடை: ஈ) உரை கவிதாவால் படிக்கப்பட்டது.**

15. **கீழ்க்காணும் சொற்றொடரில் உடன்பாட்டு வினைத்தொடரைத் தேந்தெடுக்க.**

அ) குமரன் மழையில் நனைந்தான். ஆ) குமரன் மழையில் நனையவில்லை.
இ) என் அண்ணன் நாளை வருவான். ஈ) எவ்வளவு உயரமான மரம்.

**விடை: அ) குமரன் மழையில் நனைந்தான்.**

16. **கீழ்க்காணும் சொற்றொடரில் எதிர்மறை வினைத்தொடரைத் தேந்தெடுக்க.**

அ) குமரன் மழையில் நனைந்தான். ஆ) குமரன் மழையில் நனையவில்லை.
இ) என் அண்ணன் நாளை வருவான். ஈ) எவ்வளவு உயரமான மரம்.

**விடை : ஆ) குமரன் மழையில் நனையவில்லை.**

17. **கீழ்க்காணும் சொற்றொடரில் செய்தித்தொடரைத் தேந்தெடுக்க.**

அ) குமரன் மழையில் நனைந்தான். ஆ) குமரன் மழையில் நனையவில்லை.
இ) என் அண்ணன் நாளை வருவான். ஈ) எவ்வளவு உயரமான மரம்.

**விடை : இ) என் அண்ணன் நாளை வருவான்.**

18. **கீழ்க்காணும் சொற்றொடரில் உணர்ச்சித்தொடரைத் தேந்தெடுக்க.**

அ) குமரன் மழையில் நனைந்தான். ஆ) குமரன் மழையில் நனையவில்லை.
இ) என் அண்ணன் நாளை வருவான். ஈ) எவ்வளவு உயரமான மரம்.

**விடை: ஈ) எவ்வளவு உயரமான மரம்.**

19. **பின்வரும் தொடரில் வினாத்தொடர் அல்லதைத் தேர்ந்தெடுக்க.**

அ) உள்ளே பேசிக் கொண்டிருப்பவர் யார்?
ஆ) எதைப் பறிக்காதீர்?
இ) இது என்ன?
ஈ) அவன் மாணவன்

**விடை: ஈ) அவன் மாணவன்**

20. **பின்வரும் தொடரில் கட்டளைத்தொடர் அல்லதைத் தேர்ந்தெடுக்க.**

அ) பூக்களைப் பறிக்காதீர். ஆ) அறம் செய்
இ) பாடம் படி ஈ) எவ்வளவு உயரமான மரம்

**விடை: ஈ) எவ்வளவு உயரமான மரம்**

Please Send Your Study Materials to our Email Id: padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.CBSEtips.in



**21. பொருத்துக.**

1. பந்து உருண்டது - அ) பிறவினை
2. பந்தை உருட்டினான் - ஆ) தன்வினை
3. உருட்ட வைத்தான் - இ) காரணவினை

அ) 1-அ 2-இ 3-ஆ ஆ) 1-ஆ 2-அ 3-இ இ) 1-ஆ 2-இ 3-அ

**விடை: ஆ) 1-ஆ 2-அ 3-இ**

**22. பொருத்துக.**

1. நடந்தான் - அ) பிறவினை
2. நடத்து - ஆ) தன்வினை
3. நடத்தச் செய்தார் - இ) காரணவினை

அ) 1-அ 2-இ 3-ஆ ஆ) 1-ஆ 2-அ 3-இ இ) 1-ஆ 2-இ 3-அ

**விடை: ஆ) 1-ஆ 2-அ 3-இ**

**23. பொருத்துக.**

1.ஆட்டு - அ) பிறவினை
2.ஆட்டுவி - ஆ) தன்வினை
3.ஆடு - இ) காரணவினை

அ) 1-அ 2-இ 3-ஆ ஆ) 1-ஆ 2-அ 3-இ இ) 1-ஆ 2-இ 3-அ

**விடை: அ) 1-அ 2-இ 3-ஆ**

**24. பொருத்துக.**

1. எதிர்மறைத்தொடர் - அ) குமரன் மழையில் நனைந்தான்.
2. உடன்பாட்டுத் தொடர் - ஆ) குமரன் மழையில் நனையவில்லை.
3. உணர்ச்சித்தொடர் - இ) என் அண்ணன் நாளை வருவான்.
4. செய்தித் தொடர் - ஈ) எவ்வளவு உயரமான மரம்.

அ) 1-ஆ 2-அ 3-ஈ 4-இ ஆ) 1-ஆ 2-இ 3-ஈ 4-அ
இ) 1-அ 2-ஆ 3-ஈ 4-இ ஈ) 1-ஈ 2-அ 3-ஆ 4-இ

**விடை: அ) 1-ஆ 2-அ 3-ஈ 4-இ**

**கோடிட்ட இடத்தை நிரப்புக.**

1. ஒரு சொற்றொடர் அமைவதற்கு அடிப்படையாக அமைந்த பெயர்ச்சொல்______.
**விடை: எழுவாய்**
2. ஒரு சொற்றொடரில் அமையும் வினைச்சொல் ______ ஆகும். **விடை: பயனிலை**
3. ஒரு தொடரில் பயன் நிலைத்து இருக்கும் இடம் ______. என்கிறோம். **விடை: பயனிலை**
4. 'மீனா கனகாம்பரத்தைச் சூடினாள்' என்னும் சொற்றொடரில் 'கனகாம்பரம்' என்பது ______.
**விடை: செயப்படுபொருள்**
5. எழுவாய் ஒரு அடிப்படையாய்த் தேர்ந்தெடுக்கப்பட்ட பொருளே______ ஆகும்.
**விடை: செயப்படுபொருள்**
6. 'மீனா கனகாம்பரத்தைச் சூடினாள்' என்னும் சொற்றொடரில 'மீனா' என்பது ______ 'கனகாம்பரம்' என்பது ______. 'சூடினாள்' என்பது ______.
**விடை: எழுவாய், செயப்படுபொருள், பயனிலை**

Please Send Your Study Materials to our Email Id: padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.CBSEtips.in



## 2 குறுவினா

1. **எழுவாய் மற்றும் பயனிலையைச் சான்றுடன் விளக்குக.**

**எழுவாய்:**

சொற்றொடர் அமைவதற்கு அடிப்படையாக அமைந்த பெயர்ச் சொல்லே எழுவாய் ஆகும்.

**சான்று:** கண்ணன் வந்தான். இதில் 'கண்ணன்' எழுவாய்.

**பயனிலை:**

சொற்றொடரில் வினைச்சொல்லே பயனிலை ஆகும்.

**சான்று:** மல்லிகை பூத்தது. இதில் 'பூத்தது' என்ற சொல் 'பயனிலை' ஆகும்.

2. **தோன்றா எழுவாயைச் சான்றுடன் விளக்குக.**

**சான்று:** படித்தாய்

**விளக்கம்:**

இதில் படித்தாய் என்பது பயனிலை. நீ என்ற எழுவாய் வெளிப்படையாகத் தெரியவில்லை . இதைத் 'தோன்றா எழுவாய்' என்பர்.

3. **தமிழின் தொடர் அமைப்புச் சிறப்புகளுள் ஒன்றினை விளக்கு.**

சில இடங்களைத் தவிர சொற்றொடரில் எழுவாய், பயனிலை, செயப்படுபொருள் ஆகிய மூன்றும் வரிசையில் தான் வரவேண்டும் என்ற கட்டுப்பாடு இல்லை. தமிழின் தொடர் அமைப்புச் சிறப்புகளுள் இதுவும் ஒன்று.

**சான்று:**

◈ நான் பாடத்தைப் படித்தேன்.

◈ பாடத்தை நான் படித்தேன்.

◈ படித்தேன் நான் பாடத்தை.

4. **நட என்ற தன்வினையைப் பிறவினையாகவும், காரணவினையாகவும் மாற்றுக.**

◈ பிறவினை : நடத்து

◈ காரணவினை : நடத்தச் செய்தார்

## கற்பவை கற்றபின்... பக்கம்: 23

1. **தொடர்களை மாற்றி உருவாக்குக.**

அ) **பதவியை விட்டு நீக்கினான்.** (இத்தொடரைப் பிறவினைத் தொடராக மாற்றுக)
பதவியை விட்டு நீக்குவித்தான்.

ஆ) **மொழியியல் அறிஞர்கள் திராவிட மொழிகளை ஆய்வு செய்தனர்.** (இத்தொடரைப் பிறவினைத் தொடராக மாற்றுக)
மொழியியல் அறிஞர்கள் திராவிட மொழிகளை ஆய்வு செய்வித்தனர்.

இ) **உண்ணப்படும் தமிழ்த்தேனே.** (இத்தொடரைச் செய்வினைத்தொடராக மாற்றுக)
உண்ணும் தமிழ்த்தேனே.

Please Send Your Study Materials to our Email Id: padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.CBSEtips.in



**ஈ) திராவிட மொழிகளை மூன்று மொழிக் குடும்பங்களாக பகுத்துள்ளனர்.**
(இத்தொடரை செயப்பாட்டு வினைத்தொடராக மாற்றுக)
திராவிட மொழிகள் மூன்று மொழிக் குடும்பங்களாகப் பகுக்கப்பட்டுள்ளன.

**உ) நிலவன் சிறந்த பள்ளியில் படித்தார்.**
(இத்தொடரைப் பிறவினைத் தொடராக மாற்றுக)
நிலவன் சிறந்த பள்ளியில் படிப்பித்தான்.

**2. சொற்களைத் தொடர்களாக மாற்றுக :**

**அ) மொழிபெயர்** (தன்வினை, பிறவினை தொடர்களாக மாற்றுக)
மொழி பெயர்த்தாள் - தன்வினை
மொழி பெயர்ப்பித்தாள் - பிறவினை

**ஆ) பதிவு செய்** (செய்வினை, செயப்பாட்டுவினைத் தொடர்களாக மாற்றுக)
பதிவு செய்தான் - செய்வினை
பதிவு செய்யப்பட்டது - செயப்பாட்டுவினை

**இ) பயன்படுத்து** (தன்வினை, பிறவினைத் தொடர்களாக மாற்றுக)
பயன்படுத்துவித்தான் - தன்வினை
பயன்படுத்தினான் - பிறவினை

**ஈ) இயங்கு** (செய்வினை, செயப்பாட்டுவினை தொடர்களாக மாற்றுக)
இயங்கினாள் - செய்வினை
இயக்கப்பட்டாள் - செயப்பாட்டுவினை

**3. பொருத்தமான செயப்படுபொருள் சொற்களை எழுதுக.**
(தமிழிலக்கிய நூல்களை, செவ்விலக்கியங்களைக், நம்மை, வாழ்வியல் அறிவை)

**அ)** தமிழ் செவ்விலக்கியங்களைக் கொண்டுள்ளது.
**ஆ)** நாம் தமிழிலக்கிய நூல்களை வாங்க வேண்டும்
**இ)** புத்தகங்கள் வாழ்வியல் அறிவைக் கொடுக்கின்றன.
**ஈ)** நல்ல நூல்கள் நம்மை நல்வழிப்படுத்துகின்றன.

**4. பொருத்தமான பெயரடைகளை எழுதுக.**
(நல்ல, பெரிய, இனிய, கொடிய)

**அ)** எல்லோருக்கும் இனிய வணக்கம்.
**ஆ)** அவன் நல்ல நண்பனாக இருக்கிறான்.
**இ)** பெரிய ஓவியமாக வரைந்து வா
**ஈ)** கொடிய விலங்கிடம் பழகாதே.

**5. பொருத்தமான வினையடைகளைத் தேர்வ செய்க.** பக்கம்: 24
(அழகாக, பொதுவாக, வேகமாக, மெதுவாக)

**அ)** ஊர்தி மெதுவாகச் சென்றது.
**ஆ)** காலம் வேகமாக ஓடுகிறது.
**இ)** சங்க இலக்கியம் வாழ்க்கையை அழகாகக் காட்டுகிறது.
**ஈ)** இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்யப்பட்டதை அனைவருக்கும் பொதுவாகக் காட்டு.

Please Send Your Study Materials to our Email Id: padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.CBSEtips.in



**6. அடைப்புக் குறிக்குள் கேட்டுள்ளவாறு தொடர்களை மாற்றி எழுதுக.**

**அ) நம் முன்னோர் இயற்கையோடு இயைந்த வாழ்வு நடத்தினர்.** (வினாத்தொடராக எழுதுக)
நம் முன்னோர் இயற்கையோடு இயைந்த வாழ்வு நடத்தினரா? (அல்லது)
இயற்கையோடு இயைந்த வாழ்வு நடத்தியவர் யார்?

**ஆ) இசையின்றி அமையாது பாடல்.** (உடன்பாட்டுத் தொடராக அமைக்க)
இசையோடு அமையும் பாடல்.

**இ) நீ இதைச் செய் எனக் கூறினேன் அல்லவா?** (கட்டளைத் தொடராக மாற்றுக)
இதைச் செய்.

**7. வேர்ச்சொல்லை வைத்துச் சொற்றொடர்களை உருவாக்குக.**

**அ) தா** (உடன்பாட்டு வினைத்தொடர், பிறவினைத் தொடர் ஆக்குக)
தந்தேன் - உடன்பாட்டு வினைத்தொடர்
தருவித்தேன் - பிறவினைத் தொடர்

**ஆ) கேள்** (வினாத்தொடர் ஆக்குக)
கேட்டாயா? - வினாத் தொடர்

**இ) கொடு** (செய்தித் தொடர், கட்டளைத் தொடர் ஆக்குக)
நீ அதைக் கொடு - செய்தித் தொடர்
நீ கொடு - கட்டளைத் தொடர்

**ஈ) பார்** (செய்வினைத் தொடர், செயப்பாட்டு வினைத் தொடர், பிறவினைத் தொடர் ஆக்குக)
பார்த்தான் - செய்வினைத் தொடர்
பார்க்கப்பட்டான் - செயப்பாட்டுவினைத் தொடர்
பார்க்கச் செய்தான் - பிறவினைத் தொடர்

**8. சிந்தனை வினா**

**கீழ்க்காணும் சொற்றொடர்கள் சரியானவையா? விளக்கம் தருக.**

**அ)** அவை யாவும் இருக்கின்றன - தவறு (அவை-பன்மை; யாவும்-ஒருமை)
அவை யாவையும் இருக்கின்றன. - சரி (அவை-பன்மை; யாவையும்-பன்மை)
அவை யாவும் எடுங்கள் - தவறு (அவை யாவும் எடு என்பதே சரி)
(அவை - பன்மை, யாவும் - ஒருமை, எடு - ஒருமை
அவை யாவையும் எடுங்கள் - தவறு (அவை யாவையும் எடு என்பதே சரி)
(அவை - பன்மை, யாவையும் - பன்மை, எடு - ஒருமை)
அவை யாவற்றையும் எடுங்கள் - சரி (அவை - பன்மை, யாவற்றையும் - பன்மை)

**ஆ. நீங்கள் ஒரு நாளிதழில் பணிபுரிகிறீர்கள். அங்குப் புதிய வார இதழ் ஒன்று தொடங்கவிருக்கிறார்கள். அதற்காக அந்நாளிதழில் விளம்பரம் தருவதற்குப் பொருத்தமான சொற்றொடர்களை வடிவமைத்து எழுதுக.**

Please Send Your Study Materials to our Email Id: padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.CBSEtips.in



**''தென்றல்'' புதிய வார இதழ் வெளியீடு - நாளிதழ் விளம்பரம்**

**தென்றல் - வார இதழ்**
தமிழக இதழியல் வரலாற்றில் புதுத் திருப்பம்

**தமிழ் இலக்கிய முன்னோடிகளின்**
கட்டுரைகள், கவிதைகள், பேட்டி, விளையாட்டுச் செய்திகள், விளம்பரங்கள்.

**முகவர்கள் அணுகவும்: 94434 19040**
**சென்னை, மதுரை, கோவை, திருச்சி.**

பதிப்புகள், படைப்புகள், துணுக்குகள் அனுப்ப வேண்டிய முகவரி:
ஆசிரியர், தென்றல் வார இதழ், 10, வாலாஜா பேட்டை, சென்னை 1.

**இ. சொற்றொடர்வகைகளை அறிந்து, அவை எவ்வாறு பேசுவதற்கும் எழுதுவதற்கும் பயன்படுகின்றன என்பதைப் பதிவு செய்க.**

சொற்றொடர் வகைகளை சரிவர அறிந்தால்தான் பிழையின்றிப் பேசவும் மரபு மாறாமல் எழுதவும் பயன்படும்.

| வகைகள் | பயன்பாடு |
|---|---|
| வா - ஒரு சொல் தொடர் | வா - கட்டளைத் தொடராக |
| வந்தான் - வினைமுற்றுத் தொடர் | வந்த - பள்ளிக்கு வந்த மாணவன் |
| வரச்சொன்னான் - வினையெச்சத் தொடர் | வந்து - பள்ளிக்கு வந்து சென்ற மாணவன் |
| வாவா - அடுக்குத் தொடர் | வரச்சொன்னான் - அவன் தான் வரச்சொன்னான் |
| வந்த மாணவன் - பெயரெச்சத் தொடர் | வருக வருக என வரவேற்றான் |

**ஈ. வந்திருப்பவர்கள் அனைவரும் இருக்கையில் அமருமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள். இத்தொடர் ஆங்கிலத்திலிருந்து நேரடியான தமிழ் மொழிபெயர்ப்பாக இருந்தாலும் மொழி மரபை இத்தொடரில் பேணுகிறோமா?**

வந்திருப்பவர் அனைவரும் இருக்கையில் அமருமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள். இத்தொடரில் "கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்'' என்பது ஆங்கிலத்தின் நேரடி மொழி பெயர்ப்பு.

இதைக் கேட்டுக்கொள்கிறோம் - என்ற தொடரில் எழுதுவதுதான் சிறந்தது. இதேபோன்று, வருகையைத் தரமுடியாது. ஆனாலும் அழைப்பிதழ்களிலும் மேடை நாகரிகம் கருதி "வருகை தர வேண்டுகிறோம்''. என்று எழுதுகிறார்கள், பேசுகிறார்கள். நம்மொழி மரபைப் பேணவில்லை. மொழி நடை முறையைப் பின்பற்றுகிறோம்.

## மொழியை ஆள்வோம்

பக்கம்: 27

**மொழி பெயர்க்க :**

- Linguistics - மொழியியல்
- Literature - இலக்கியம்
- Philologist - மொழி ஆய்வறிஞர்
- Polyglot - பன்மொழி அறிஞர்
- Phonologist - ஒலியியல் ஆய்வறிஞர்
- Phonetics - ஒலியியல்

Please Send Your Study Materials to our Email Id: padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.CBSEtips.in



**அடைப்புக்கள் உள்ள சொற்களைப் பொருத்தமான வினைமுற்றாக மாற்றி கோடிட்ட இடங்களில் எழுதுக.**

1. இந்திய மொழிகளின் மூலமும் வேருமாகத் தமிழ் திகழ்கின்றது. (திகழ்)
2. வைதேகி நாளை நடைபெறும் கவியரங்கில் கலந்து கொள்வாள். (கலந்துகொள்)
3. உலகில் மூவாயிரம் மொழிகள் பேசப்படுகின்றன. (பேசு)
4. குழந்தைகள் அனைவரும் சுற்றுலா சென்றார்கள். (செல்)
5. தவறுகளைத் திருத்தினான். (திருத்து)

**வடிவம் மாற்றுதல்.**

**பின்வரும் பத்தியைப் படித்துப் பார்த்து, அச்செய்தியை உங்கள் பள்ளி அறிவிப்புப் பலகையில் இடம் பெறும் அறிவிப்பாக மாற்றுக.**

மருதூர் அரசு மேனிலைப் பள்ளி இருபத்தைந்து ஆண்டுகளாகச் சிறந்த கல்விப்பணியை வழங்கி வருகிறது. இப்பள்ளி, சிறந்த கவிஞராகத் திகழும் இன்சுவை முதலான பன்முகப் படைப்பாளிகளை உருவாக்கிய பெருமை கொண்டது. ஒரு சோற்றுப் பதமாய் மருதூர்ப் பள்ளி மாணவி பூங்குழலி படைத்த **“உள்ளங்கை உலகம்”** என்ற நூலின் வெளியீட்டு விழா 21 ஜூன் திங்கள், பிற்பகல் 3:00 மணியளவில் நடைபெற உள்ளது. அவ்விழாவில் (கின்னஸ் சாதனை படைத்த) முன்னாள் மாணவர் இன்சுவை நூலை வெளியிட்டு, சிறப்புரை ஆற்றுவார். மருதூர்ப் பள்ளி விழா அரங்கத்தில் நிகழும் இந்நூல் வெளியீட்டு விழாவில் கலந்துகொள்ள, அனைவரையும் அழைக்கின்றோம்.

## அறிவிப்பு

### நூல் வெளியீட்டு விழா

| | | |
|---|---|---|
| இடம் | : | வெள்ளி விழா அரங்கம்<br>அரசு மேனிலைப் பள்ளி, மருதூர் |
| நாள் | : | திருவள்ளுவர் ஆண்டு 2049<br>ஆனிமாதம் 7 ஆம் நாள் (21.06.2018) |
| முன்னிலை | : | பெற்றோர் ஆசிரியர் கழகத் தலைவர்,<br>திருமிகு. மலரவன், அவர்கள் |
| தலைமை | : | பள்ளித் தலைமை ஆசிரியர்<br>திருமிகு. முஸ்தபா, M.A., M.Ed., அவர்கள், |
| வரவேற்புரை | : | இலக்கிய மன்றச் செயலர், புகழினியன் |
| நூலை வெளியிட்டுச் சிறப்புரை | : | கின்னஸ் சாதனை படைத்த முன்னாள் மாணவர்<br>கவிஞர். இன்சுவை |
| நூல் வெளியீடு | : | பூங்குழலி படைத்த “உள்ளங்கை உலகம்” |
| நன்றியுரை | : | ரா. அன்பரசன், பள்ளி மாணவர் தலைவர் |

அனைவரும் வருக! அமுதச் சுவை பருக!

பக்கம்: 28

**தொடரைப் பழமொழி கொண்டு நிறைவு செய்க.**

1. இளமையில் கல்வி முதுமையில் இன்பம்,
2. சித்திரமும் கைப்பழக்கம் செந்தமிழும் நாப்பழக்கம் .

Please Send Your Study Materials to our Email Id: padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.CBSEtips.in



3. கல்லாடம் படித்தவரோடு <u>சொல்லாடாதே</u>.
4. கற்றோர்க்குச் சென்ற <u>இடமெல்லாம் சிறப்பு</u>.

**உங்களின் நண்பர் , பிறந்த நாள் பரிசாக அனுப்பிய எழுத்தாளர் எஸ்.இராமகிருஷ்ணன் ''கால்முளைத்த கதைகள்'' என்னும் நூல் குறித்த கருத்துகளைக் கடிதமாக எழுதுக.**

**நண்பனுக்குக் கடிதம்**

11, பாரதி நகர்,
திருநெல்வேலி.
நாள்:

அன்புள்ள நண்பனுக்கு,

உன் உயிர் நண்பன் எழுதும் கடிதம். நானும் என் குடும்பத்தாரும் நலம். அதுபோல நீயும் உன் குடும்பமும் நலமா? என் பிறந்த நாளுக்கு அனுப்பிய வாழ்த்து மடலும், பிறந்த நாள் பரிசாக அனுப்பிய எழுத்தாளர் எஸ்.இராமகிருஷ்ணன் ''கால்முளைத்த கதைகள்'' என்னும் நூலும் கிடைத்தது.மிக்க மகிழ்ச்சி.

பல கதைகளின் தொகுப்பாக இந்நூல் அமைந்துள்ளது. விலங்குகளின் வாழ்க்கை முறையும், அவை எதிர்கொள்ளும் பிரச்சனைகளையும் அவை அதிலிருந்து எவ்வாறு மீண்டெழுகின்றது, மனிதர்கள் தரும் பிரச்சனைகளில் இருந்து எப்படி விலங்குகளை எவ்வாறு பாதுகாக்கலாம் என்பதை இக்கதைகள் விளக்கி நிற்கின்றது. நீதிகள் பல இக்கதைகளில் பொதிந்துள்ளது. நீயும் இப்புத்தகத்தைப் படித்துப் பார். உன்னுள்ளும் மாற்றம் ஏற்படும். மற்றவை நேரில்.

இப்படிக்கு,
ச. சிற்பி.

உறைமேல் முகவரி:

பெறுநர்
சே. அஜ்மான்,
23, காந்தி நகர்,
மதுரை-5.

**நயம் பாராட்டுக.**

**விரிகின்ற நெடுவானில், கடற்பரப்பில்**
**விண்ணோங்கு பெருமலையில், பள்ளத் தாக்கில்**
**பொழிகின்ற புனலருவிப் பொழிலில், காட்டில்**
**புல்வெளியில், நல்வயலில், விலங்கில் புள்ளில்**
**தெரிகின்ற பொருளிலெல்லாம் திகழ்ந்து நெஞ்சில்**
**தெவிட்டாத நுண்பாட்டே, தூய்மை ஊற்றே,**
**அழகு என்னும் பேரொழுங்கே, மெய்யே, மக்கள்**
**அகத்திலும் நீ குடியிருக்க வேண்டுவேனே!** - ம.இலெ. தங்கப்பா

**திரண்ட கருத்து:**

வானம், கடல், மலை, அருவி, புல்வெளி, வயல், விலங்கு, பறவை என அனைத்திலும் தெரிகின்ற மனதில் தெவிட்டாத பாட்டே! தூய்மை ஊற்றே! அழகென்னும் ஒழுங்கே! உண்மையே! மக்கள் மனதில் குடியிருக்க வேண்டுகின்றேன்.

Please Send Your Study Materials to our Email Id: padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.CBSEtips.in



**மோனைத் தொடை:**

அடிதோறும் அல்லது சீர்தோறும் முதல் எழுத்து ஒன்றுபோல் வருவது.

**விரிகின்ற - விண்ணோங்கு, தெரிகின்ற - தெவிட்டாத, அழகு - அகத்திலும்**

**அடிமோனை:**

விரிகின்ற.....
விண்ணோங்கு.....
தெரிகின்ற.....
தெவிட்டாத......
அழகு.....
அகத்திலும்.....

**சீர்மோனை:**

பொழிகின்ற புனலருவிப் பொழிலில், காட்டில்
புல்வெளியில் நல்வயலில் விலங்கில் புள்ளில்

**எதுகை நயம்:**

அடிதோறும் அல்லது சீர்தோறும் இரண்டாம் எழுத்து ஒன்றுபோல் வருவது எதுகை.

**சீரெதுகை:**

பொழிகின்ற புனலருவிப் பொழிலில், காட்டில்
புல்வெளியில் நல்வயலில் விலங்கில் புள்ளில்

**அணிநயம்:**

இயற்கை அழகை கவினுற நம் கண்முன்னே இயல்பாகக் காட்டுவதால் இப்பாடலில் இயல்பு நவிற்சி அணி பயின்று வந்துள்ளது.

**சந்த நயம்:**

**நாட்டுப் புறச் சிந்து** இராகத்தில் இப்பாடலைப் பாடலாம்.

**சுவை நயம்:**

இப்பாடலில் **பெருமிதச் சுவை** பயின்றுள்ளது.

**உங்கள் பள்ளி இலக்கிய மன்ற விழா சார்பில் நடைபெறவிருக்கும் உலகத்தாய்மொழி (பிப்ரவரி 21) விழாவிற்கான நிகழ்ச்சி நிரல் ஒன்றினை வடிவமைக்க.**

**அரசு மேனிலைப் பள்ளி, திருநெல்வேலி - 2.**

**உலகத் தாய்மொழி நாள் விழா**

**நாள் : 21.02.2019** **நிகழிடம் : பள்ளிக் கலையரங்கம்**

**நிகழ்ச்சி நிரல்**

| | | |
|---|---|---|
| **இறைவணக்கம்** | : | தமிழ்த்தாய் வாழ்த்து |
| **வரவேற்புரை** | : | ச. சிற்பி, இலக்கிய மன்றச் செயலாளர். |
| **தலைமையுரை** | : | தலைமையாசிரியர் |
| **சிறப்பு விருந்தினர் மற்றும் சிறப்புரை** | : | கவிஞர். ஈரோடு தமிழன்பன் அவர்கள் |
| **நன்றியுரை** | : | தமிழ்ச்செல்வன், 9ஆம் வகுப்பு மாணவர். |
| **நாட்டுப்பண்** | : | மாணவ, மாணவியர். |

**அனைவரும் வருக! தமிழமுது பருக!!**

Please Send Your Study Materials to our Email Id: padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.CBSEtips.in



## மொழியோடு விளையாடு

**அந்தாதிச் சொற்களை உருவாக்குக.**

**அத்தி, குருவி, விருது, இனிப்பு, வரிசையாக**

எ.கா: அ) குருவி ஆ) விருது இ) இனிப்பு

அத்தி வியர்வை துவர்ப்பு புகர்ச்சி
திகைப்பு வைகாசி புனுகு சிறப்பு
புகழ்ச்சி சிறப்பு குருவி புதுமை
சிரிப்பு புதுமை வியப்பு மைந்தா
ஈ) வரிசையாக
புன்னகை மைசூரு புகுந்து தாவி
கல்வி
கைப்பேசி ரூபாவதி துயில்... விருப்பு
விருந்து
சிறப்பு திங்கள் ... புகழ்...
துடுக்கு
புதுமை
குரங்கு
மைனா...
குத்து
துதி
தித்திப்பு...

**அகராதியில் காண்க.**

நயவாமை - விரும்பாமை
கிளத்தல் - எழுப்பல், சொல்லுதல், பேசுதல்.
கேழ்பு - நன்மை
செம்மல் - அரசன், அருகன், தலைமகன், பழம்பூ, புதல்வன், பெருமையிற் சிறந்தோம், தருக்கு, உள்ளநிறைவு, தருக்கு, நீர்.
புரிசை - மதில்

**கொடுக்கப்பட்ட வேர்ச்சொற்களைப் பயன்படுத்தி விடுபட்ட கட்டங்களில் காலத்திற்கேற்ற வினைமுற்றுகளை நிறைவு செய்க.** பக்கம்: 29

| வா | | | |
|---|---|---|---|
| | **இறந்த காலம்** | **நிகழ் காலம்** | **எதிர் காலம்** |
| நான் | வந்தேன் | **வருகின்றேன்** | வருவேன் |
| நாங்கள் | **வந்தோம்** | **வருகின்றோம்** | வருவோம் |
| நீ | **வந்தாய்** | வருகிறாய் | **வருவாய்** |
| நீங்கள் | வந்தீர்கள் | **வருகிறீர்கள்** | **வருவார்கள்** |
| அவன் | **வந்தான்** | வருகிறான் | **வருவான்** |
| அவள் | **வந்தாள்** | **வருகிறாள்** | **வருவாள்** |
| அது | **வந்தது** | **வருகிறது** | வரும் |
| அவர் | வந்தார் | **வருகிறார்** | **வருவார்** |
| அவர்கள் | **வந்தார்கள்** | **வருகிறார்கள்** | **வருவார்கள்** |
| அவை | **வந்தவை** | வருகின்றன | **வருபவை** |

Please Send Your Study Materials to our Email Id: padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.CBSEtips.in



**தா, காண், பெறு, நீந்து, பாடு, கொடு போன்ற வேர்ச்சொற்களைப் பயன்படுத்தி மேற்கண்ட கட்டத்தினைப் போன்று காலத்திற்கேற்ற வினைமுற்றுகளை அமைத்து எழுதுக.**

| வேர்ச்சொல் | இறந்த காலம் | நிகழ் காலம் | எதிர் காலம் |
|---|---|---|---|
| தா | தந்தேன் | தருகிறேன் | தருவேன் |
| காண் | கண்டேன் | காண்கிறேன் | காண்பேன் |
| பெறு | பெற்றேன் | பெறுகிறேன் | பெறுவேன் |
| நீந்து | நீந்தினேன் | நீந்துகிறேன் | நீந்துவேன் |
| பாடு | பாடினேன் | பாடுகிறேன் | பாடுவேன் |
| கொடு | கொடுத்தேன் | கொடுக்கிறேன் | கொடுப்பேன் |

**அடைப்புக்குள் உள்ள சொற்களைக் கொண்டு எழுவாய், வினை அடி, வினைக்குப் பொருத்தமான தொடர் அமைக்க (திடலில், போட்டியில், மழையில், வேகமாக, மண்ணை)**

**எ.கா:** நான் திடலில் ஓடினேன் **(தன்வினை)**
நான் திடலில் மிதிவண்டியை ஓட்டினேன் **(பிறவினை)**

| எழுவாய்/ பெயர் | வினை அடி | தன் வினை | பிறவினை |
|---|---|---|---|
| நான் | ஓடு | நான் திடலில் ஓடினேன். | நான் திடலில் மிதிவண்டியை ஓட்டினேன். |
| காவியா | வரை | காவியா வேகமாக படம் வரைந்தாள். | காவியா வேகமாக படம் வரைவித்தாள். |
| கவிதை | நனை | நான் கவிதை மழையில் நனைந்தேன். | நான் கவிதை மழையில் நனைவித்தேன். |
| இலை | அசை | செடியில் இலை வேகமாக அசைந்தது. | செடியில் இலை வேகமாக அசைவித்தது, |
| மழை | சேர் | மழை மண்ணைச் சேர்ந்தது. | மழை மண்ணைச் சேர்ப்பித்தது. |

## கலைச்சொல் அறிவோம்

**உருபன்** - Morpheme
**ஒலியன்** - Phoneme
**ஒப்பிலக்கணம்** - Comparative Grammar
**பேரகராதி** - Lexicon

காட்சியைக் கண்டு கவினுற எழுதுக.



கூட்டுக்குடும்பமாய் வாழ்ந்து வந்த நீ!
உன் பிள்ளைகள் சுதந்திரமாய் வாழ....
நீ தனிக்குடித்தனம் போகப் பறக்கிறாயோ!
தனிமை கொடிது என்பதை நினைத்து
ஒரு நிமிடம் யோசனை செய்ய நிற்கிறாயோ?

Please Send Your Study Materials to our Email Id: padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.CBSEtips.in



# இயல் 2

உரைநடை உலகம்

## நீரின்றி அமையாது உலகு

### பாடநூல் மதிப்பீட்டு வினா

### 1 பலவுள் தெரிக

1. **நீர்நிலைகளோடு தொடர்பில்லாதது எது?**

அ) அகழி ஆ) ஆறு
இ) இலஞ்சி ஈ) புலரி **விடை: ஈ) புலரி**

2. **பொருத்தமான விடையைத் தேர்க.**

1) நீரின்றி அமையாது உலகு - திருவள்ளுவர்
2) நீரின்று அமையாது யாக்கை - ஔவையார்
3) மாமழை போற்றுதும் - இளங்கோவடிகள்

அ) 1, 3 ஆ) 2, 3
இ) 1, 2 ஈ) 1, 2, 3 **விடை: அ) 1, 3**

### 2 குறுவினா

1. **கூவல் என்பதன் பொருள் யாது?**

கூவல் என்பதன் பொருள் உவர் நிலத்தில் தோண்டப்படும் நீர்நிலை என்பதாகும்.

2. **உங்களது பள்ளியைச் சுற்றியுள்ள நீர் நிலைகளின் பெயர்களைக் குறிப்பிடுக.**

ஆறு, குளம், வாய்க்கால், கிணறு.

3. **மணிநீரும் மண்ணும் மலையும் அணி நிழற்**
**காடும் உடையது அரண்.**
**இக்குறள் கூறும் நாட்டின் அரண்கள் யாவை?**

அகழிநீர், வெறுநிலம், நீளமான மலை, குளிர்ந்த நிழல் தரும் காடு.

### 3 சிறுவினா

1. **அடுத்த தலைமுறைக்கும் தண்ணீர் தேவை - அதற்கு நாம் செய்ய வேண்டியவற்றை எழுதுக.**

- அதிகப்படியான நிலத்தடி நீரை மக்கள் பயன்படுத்திவிட்டனர். நிலத்தடி நீர்மட்டம் குறைந்து விட்டதால் நிலத்தடி நீரைச் சிக்கனமாகவே பயன்படுத்த வேண்டும்.
- மழைநீர் சேமிப்புத் தொட்டி மூலம் நிலத்தடியில் மழை நீரைச் சேமிக்க வேண்டும்.
- மிகுதியான தடுப்பணைகளை உருவாக்க வேண்டும்.
- இப்படிச் செய்தால்தான் அடுத்த தலைமுறைக்கும் தண்ணீர்த் தேவையைப் பூர்த்தி செய்ய முடியும்.

Please Send Your Study Materials to our Email Id: padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.CBSEtips.in



2. **சோழர் காலக் குமிழித் தூம்பு எதற்காகப் பயன்படுத்தப்பட்டது?**

பயன்பாட்டுக்குத் தேவையான நீரை வெளியேற்றவும், சேற்றை வெளியேற்றவும் சோழர் காலக் குமிழித் தூம்பு பயன்படுத்தப் பட்டது. சோழர் காலக் குமிழித் தூம்பினைப் பயன்படுத்துவதன் மூலம் தூர் வார வேண்டிய அவசியம் இல்லை.

## 4 நெடுவினா

1. **நீரின்றி அமையாது உலகு - என்னும் வள்ளுவரின் அடி உணர்த்தும் பொருள் ஆழத்தை எடுத்துக்காட்டுடன் விவரி.**

◈ நீரின்று அமையாது உலகு என்னும் தம் கருத்தை வள்ளுவர் தெளிவாகப் பதிவு செய்துள்ளார்.

◈ மனித வாழ்வின் அடித்தளம் நீரே!

◈ மழையே பயிர்க்கூட்டமும் உயிர்க் கூட்டமும் வாழப் பெருந்துணை புரிகின்றது.

◈ மழை உழவுக்கு உதவுகிறது.

◈ விதைத்த விதை ஆயிரமாகப் பெருகுகிறது

◈ நிலமும் மரமும் உயிர்களும் நோயின்றி வாழ நீரே அவசியம்.

◈ உடலைக் குளிர்விப்பதற்கும், சாமியாடிகளுக்கு மஞ்சள் நீர் கொடுப்பதும், திருமணமான-பின் கடலாடுதலும், இறப்பு சடங்கிலும், வீட்டிற்கு வரும் விருந்தினர்களை நீர் கொடுத்து வரவேற்பதற்கும், விவசாய நிலத்திற்கு உழைக்கச் செல்வோர் அதிகாலை நீராகாரம் குடிப்பதும் என அனைத்து செயல்களுக்கும் நீரே அவசியம்.

◈ அதனால்தான் வள்ளுவர் 'நீரின்றி அமையாது உலகு' என்று அழுத்தமாக சொல்லியிருக்கின்றார்.

## கூடுதல் வினாக்கள்

## 1 பலவுள் தெரிக

1. **பாண்டி மண்டலத்து நிலப்பகுதியில் ஏரியை ________ என்று அழைப்பர்.**

அ) கண்மாய் ஆ) கம்மாய்
இ) உறைக்கிணறு ஈ) ஊருணி **விடை: அ) கண்மாய்**

2. **உணவெனப்படுவது நிலத்தொடு நீரே எனக் கூறும் சங்க நூல் ________ .**

அ) திருக்குறள் ஆ) புறநானூறு
இ) சிலப்பதிகாரம் ஈ) அகநானூறு **விடை: ஆ) புறநானூறு**

3. **குளித்தல் என்ற சொல் குறித்த புதிய சிந்தனைகளைத் தந்தவர் ________ .**

அ) திருவள்ளுவர் ஆ) ஔவையார்
இ) இளங்கோவடிகள் ஈ) தொ.பரமசிவன் **விடை: ஈ) தொ.பரமசிவன்**

4. **இந்திய நீர்ப்பாசனத்தின் தந்தை ________ .**

அ) ஜான் பென்னி குவிக் ஆ) திருவள்ளுவர்
இ) தொ.பரமசிவன் ஈ) சர் ஆர்தர் காட்டன்

**விடை: ஈ) சர் ஆர்தர் காட்டன்**

Please Send Your Study Materials to our Email Id: padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.CBSEtips.in



5. கிராண்ட் அணைக்கட் என்ற பெயர் பெற்ற அணை ________ .
அ) கல்லணை ஆ) கட்டுக் கிணறு
இ) இலஞ்சி ஈ) முல்லைப் பெரியாறு அணை
விடை: அ) கல்லணை

6. ஜான் பென்னி குவிக் கட்டிய அணை ________ .
அ) கல்லணை ஆ) மேட்டூர் அணை
இ) முல்லைப் பெரியாறு அணை ஈ) பவானி சாகர் அணை
விடை: இ) முல்லைப் பெரியாறு அணை

7. பாண்டி நாட்டு மண்டலத்தில் ஏரிக்கு வழங்கும் பெயர் ________ .
அ) குண்டு ஆ) கண்மாய்
இ) கேணி ஈ) ஏரி
விடை: ஆ) கண்மாய்

8. உவர்மண் நிலத்தில் தோண்டப்படும் நீர்நிலை ________ .
அ) புனற்குளம் ஆ) கூவல்
இ) ஊற்று ஈ) இலஞ்சி
விடை: ஆ) கூவல்

9. கல்லணை ________ ஆற்றின் குறுக்கே கட்டப்பட்டது.
அ) காவிரி ஆ) வைகை
இ) நொய்யல் ஈ) தாமிரபரணி
விடை : அ) காவிரி

10. கல்லணையின் கட்டுமானத் தொழில் உத்தியைக் கொண்டு ________ அணையைக் கட்டினர்.
அ) மேட்டூர் ஆ) பவானிசாகர்
இ) தௌலீஸ்வரம் ஈ) மாமல்லபுரம்
விடை: இ) தௌலீஸ்வரம்

11. ________ ஆற்றின் இடையே தௌலீஸ்வரம் அணையைக் கட்டினர்.
அ கோதாவரி ஆ காவிரி
இ வைகை ஈ சிந்து
விடை: அ) கோதாவரி

12. 1829ல் காவிரிப் பாசனப் பகுதிக்குத் தனிப்பொறுப்பாளராக நியமிக்கப்பட்டவர் ________ .
அ) ஜான் பென்னி குவிக் ஆ) திருவள்ளுவர்
இ) தொ.பரமசிவன் ஈ) சர் ஆர்தர் காட்டன்
விடை: ஈ) சர் ஆர்தர் காட்டன்

13. பொருந்தாத இணையைக் கண்டறிக.
அ) ஏரி - வேளாண்மைப் பாசன நீர்த்தேக்கம் ஆ) குண்டு - குளிப்பதற்கேற்ற சிறுகுளம்
இ) ஊருணி - மக்கள் பருகுநீர் உள்ள இடம் ஈ) ஊற்று - பெருங்கிணறு
விடை: ஈ) ஊற்று - பெருங்கிணறு

14. நீர்நிலைகளோடு தொடர்பில்லாத ஒன்று ________ .
அ) குண்டு ஆ) கடல்
இ) கட்டுக்கிணறு ஈ) ஒட்டும் களிமண்
விடை: ஈ) ஒட்டும் களிமண்

15. 'நீராடல் பருவம்' இடம்பெறும் சிற்றிலக்கியம் ________ .
அ) பிள்ளைத்தமிழ் ஆ) கலம்பகம்
இ) பள்ளு ஈ) உலா
விடை: அ) பிள்ளைத்தமிழ்

Please Send Your Study Materials to our Email Id: padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.CBSEtips.in



16. பொருத்துக.

1. கல்லணை - அ) மேற்குத் தொடர்ச்சி மலையில் பெய்யும் மழைநீர்
2. தொளலீஸ்வரம் அணை - ஆ) கோதாவரி ஆறு
3. முல்லைப் பெரியாறு அணை - இ) காவிரி ஆறு

அ) 1-ஆ 2-இ 3-அ ஆ) 1-ஆ 2-அ 3-இ
இ) 1-அ 2-இ 3-ஆ ஈ) 1-இ 2-அ 3-ஆ **விடை: ஈ) 1-இ 2-அ 3-ஆ**

17. பொருத்துக.

1. கடலருகே தோண்டிக் கட்டிய கிணறு - அ) குண்டு
2. பலவகைக்கும் பயன்படும் நீர்த்தேக்கம் - ஆ) ஊற்று
3. அடியில் இருந்து நீர் ஊறுவது - இ) இலஞ்சி
4. குளிப்பதற்கேற்ற சிறுகுளம் - ஈ) ஆழிக்கிணறு

அ) 1-ஈ 2-இ 3-ஆ 4-அ ஆ) 1-அ 2-இ 3-ஆ 4-ஈ
இ) 1-ஈ 2-அ 3-ஆ 4-இ ஈ) 1-ஈ 2-அ 3-ஆ 4-இ

**விடை: அ) 1-ஈ 2-இ 3-ஆ 4-அ**

கோடிட்ட இடத்தை நிரப்புக.

1. பழந்தமிழரின் அணைகட்டும் திறன். பாசன மேலாண்மையை உலகுக்கு எடுத்துக் காட்டியவர் . **விடை: சர் ஆர்தர் காட்டன்**
2. ____________ என்ற சொல்லுக்கு உடம்பினைத்தேய்த்தல் அல்லது அழுக்கு நீக்குதல் என்பது பொருளல்ல. **விடை: குளித்தல்**
3. ____________ மாவட்டம் பாசனவசதி பெற கல்லணை கட்டப்பட்டது. **விடை : தஞ்சாவூர்**
4. கிராண்ட் அணைக்கட் என்பது____________. **விடை: கல்லணை**
5. குளித்தல் என்ற சொல்லின் பொருள்____________. **விடை : குளிர்வித்தல்**
6. குள்ளக் குனிந்து நீராடி என்றவர்____________. **விடை : ஆண்டாள்**
7. தெய்வச்சிலைகளைக் குளி(ர்)க்க வைப்பதை____________என்று கூறுவர். **விடை: திருமஞ்சனம் ஆடல்**
8. சனி நீராடு என்பது____________வாக்கு **விடை: ஔவையார்**
9. வீட்டிற்கு வரும் விருந்தினர்களுக்கு அன்பான வரவேற்பின் அடையாளமாக ________ வழங்கப் படுகின்றது. **விடை: நீர்**

## 2 குறுவினா

1. நீர்நிலைகளின் பல்வேறு பெயர்கள் யாவை?

அகழி, ஆழிக்கிணறு, உறைக்கிணறு, அணை, ஏரி, குளம், ஊருணி, கண்மாய், கேணி.

2. மழை பற்றி மாங்குடி மருதனார் தரும் செய்தியாக மாணவர் வெண்மதி கூறுவனவற்றை எழுதுக.

◈ மழை உழவுக்கு உதவுகிறது.
◈ விதைத்த விதை ஆயிரமாகப் பெருகுகிறது.
◈ நிலமும் மரமும் உயிர்கள் நோயின்றி வாழவேண்டும் என்ற நோக்கில் வளர்கின்றன.

ஆகியவை மழை பற்றி மாங்குடி மருதனார் தரும் செய்தியாகும்.

Please Send Your Study Materials to our Email Id: padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.CBSEtips.in



3. **முந்நீர்கள் ( மூன்று வகையான நீர்கள்) யாவை?**

1. ஆற்றுநீர் 2. ஊற்றுநீர் 3. மழைநீர்

4. **நிலத்தடி நீர் மட்டம் குறைந்து வரும் நாடுகள் யாவை?**

அமெரிக்கா, இந்தியா, பாகிஸ்தான், சீனா.

5. **உறை கிணறு, ஊருணி - விளக்கம் தருக.**

**உறை கிணறு:**

மணற்பாங்கான இடத்தில் தோண்டி சுடுமண் வளையமிட்ட கிணறு ‘உறைகிணறு’ ஆகும்.

**ஊருணி:**

மக்கள் பருகும் நீர் உள்ள நீர்நிலை ‘ஊருணி’ ஆகும்.

6. **உலக சுகாதார நிறுவனம் தரும் எச்சரிக்கை யாது?**

உலக சுகாதார நிறுவனம், உலகம் விரைவில் குடிநீருக்கான கடும் சிக்கலை எதிர்கொள்ளும் என எச்சரிக்கிறது.

7. **கல்லணையால் பயன்படும் மாவட்டம் எது?**

தஞ்சாவூர்.

8. **முல்லைப் பெரியாறு அணையால் பயன்படும் மாவட்டங்கள் எவை?**

தேனி, திண்டுக்கல், மதுரை, சிவகங்கை, இராமநாதபுரம்.

9. **குமிழித் தூம்பு யார் காலத்தில் பயன்படுத்தப்பட்டது?**

குமிழித் தூம்பு சோழர் காலத்தில் பயன்படுத்தப்பட்டது.

10. **நம் முன்னோர்கள் எதனைத் திட்டமிட்டுச் செய்தனர்?**

மழைநீர், ஆற்றுநீர், ஊற்று நீர் ஆகியவற்றைச் சிறிய, பெரிய நீர் நிலைகளில் சேகரிக்க வேண்டும். அதனை வேளாண்மைக்குப் பயன்படுத்த வேண்டும் என்பதை நம் முன்னோர்கள் திட்டமிட்டுச் செய்தனர்.

## 3 சிறுவினா

1. **கல்லணை - குறிப்பு தருக. (அல்லது) சர் ஆர்தர் காட்டன் - குறிப்பு தருக.**

- கரிகாலனின் விரிவான வேளாண்மைத் திட்டத்திற்குச் சான்று கல்லணை.
- கல்லணையின் நீளம் : 1080 அடி.
- கல்லணையின் அகலம் : 40அடி முதல் 60 அடி.
- கல்லணையின் உயரம் : 15 முதல் 18 அடி.
- வலுவான கட்டுமானத் தொழில் நுட்பத்தால் கட்டப்பட்டுள்ளது.
- கல்லணையைக் கட்டிய பொறியாளா சர் ஆர்தர் காட்டன்.
- இவர் கல்லணைக்குக் ‘கிராண்ட் அணைக்கட்’ என்ற பெயரைச் சூட்டினார்.

2. **கல்லணை கட்டப் பயன்படுத்தப்பட்ட தொழில் நுட்பம் யாது?**

- காவிரி ஆற்றில் பெரிய பாறைகளைக் கொண்டு வந்து போட்டனர்.
- நீர் அரிப்பின் காரணமாக அப்பாறைகள் மண்ணுக்குள் சென்றன.
- அதன் மேல் வேறு ஒரு பாறையை வைத்து , தண்ணீரில் கரையாத ஒட்டும் களிமண்ணைப் புதிய பாறைகளில் வைத்துப் பூசினர்.

- இதுவே கல்லணை கட்டப் பயன்படுத்தப்பட்ட தொழில் நுட்பம் ஆகும்.

Please Send Your Study Materials to our Email Id: padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.CBSEtips.in



3. **‘குளித்தல்’ என்ற சொல் குறித்து பேராசிரியர் தொ.பரமசிவன் கூறுவது யாது?**

◈ ‘குளித்தல்’ என்பதற்கு உடம்பினைத் தூய்மை செய்தல்’ அல்லது ‘அழுக்கு நீக்குதல்’ என்பதல்ல பொருள்.

◈ சூரியன் மற்றும் உடல் உழைப்பால் ஏற்படும் வெப்பம் அடைந்த உடலைக் குளிர வைத்தல் என்பதே பொருள்.

◈ குளிர்த்தல் என்பதே குளித்தல் என்று ஆயிற்று எனப் பேராசிரியர் தொ.பரமசிவன் கூறுகிறார்.

4. **ஜான் பென்னி குவிக் - குறிப்பு தருக.**

◈ முல்லைப் பெரியாறு அணையைக் கட்டியவர் ஜான் பென்னி குவிக்.

◈ ஆங்கிலேயர் ஆட்சிக்காலத்தில் வைகை வடிநிலப்பரப்பில் மழை பொய்த்துப் பஞ்சம் ஏற்பட்டது.

◈ இதில் பல்லாயிரக் கணக்கான மக்கள் பாதிக்கப்பட்டனர்.

◈ மேற்குத்தொடர்ச்சி மலையில் பெய்யும் மழை நீர் வீணாகக் கடலில் கலப்பதை அறிந்த அவர், அங்கு அணை கட்டத் திட்டமிட்டார்.

◈ கட்டுமானத்தின் போது கூடுதல் நிதியை ஆங்கிலேய அரசு தராததால் தன் சொத்துக்களை விற்று அணை கட்டி முடித்தார்.

5. **‘மழை’ குறித்து மாங்குடி மருதனார் கூறிய செய்தி யாது?**

மழை உழவுக்கு உதவுகிறது. விதைத்த விதை ஆயிரமாகப் பெருகுகிறது. நிலமும் மரமும் உயிர்கள் நோயின்றி வாழ வேண்டும் என்னும் நோக்கில் வளர்கின்றன என்கிறார் மாங்குடி மருதனார்.

## கற்பவை கற்றபின்... 

பக்கம்: 37

1. **நீரின்றி அமையாது உலகு, நீரின்றி அமையாது யாக்கை இவ்விரண்டு தொடர்களையும் ஒப்புமைப்படுத்தி கலந்துரையாடுக.**

நீரின்றி அமையாது உலகு என்பது வள்ளுவன் வாய் மொழி, நீரின்றி அமையாது யாக்கை என்பது குடபுலவியனார் வாக்கு. நீரில்லாமல் உலகம் இல்லை. நீரில்லாமல் உடலும் இல்லை. உடலும் உலகமும் இயங்க நீரே அவசியம் என்பதை இவ்வரிகள் உணர்த்துகின்றன. நீரில்லாமல் உலகம் இல்லை, நீங்களும் இல்லை.

2. **வீடுகளில் பயன்படுத்தப்படும் தண்ணீர் எங்கிருந்து கிடைக்கிறது? இதற்கான நீர் எங்கிருந்து வருகின்றது? இன்னும் எவ்வளவு காலத்திற்குத் தண்ணீர் போதுமானதாக இருக்கும்? என்பனவற்றுக்கான தகவல்களைத் திரட்டி ஒப்படைவு உருவாக்குக.**

**ஒப்படைவு:**

◈ வீடுகளில் பயன்படுத்தப்படும் தண்ணீர் ஆழ்துளைக்கிணற்றிலிருந்து கிடைக்கிறது.

◈ இதற்கான நீர் பூமிக்கு அடியில் இருந்து வருகின்றது.

◈ மழை பொய்த்ததாலும், பெய்த மழை நீரைச் சேமிக்காததாலும் இன்னும் சில காலத்திற்குத் தண்ணீர் போதுமானதாக இருக்குமா என்பது கூட ஐயமே!

Please Send Your Study Materials to our Email Id: padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.CBSEtips.in



இயல் 2 கவிதைப் பேழை

# பட்ட மரம்

– கவிஞர் தமிழ்ஒளி



| | | |
|---|---|---|
| ஆசிரியர் | - | கவிஞர் தமிழ்ஒளி |
| இயற்பெயர் | - | விஜயரங்கம் |
| காலம் | - | 21.9.1924 - 24.3.1965 |
| படைப்புகள் | - | நிலைபெற்ற சிலை, வீராயி, மே தினமே வருக, கவிஞனின் காதல், கண்ணப்பன் கிளிகள், வீதியோ வீணையோ, மாதவி காவியம், புத்தர் பிறந்தார், திருக்குறளும் கடவுளும், தமிழர் சமுதாயம். |

## சொற்பொருள்

| | | | | | |
|---|---|---|---|---|---|
| குந்த | - | உட்கார | விசனம் | - | கவலை |
| கந்தம் | - | மணம் | எழில் | - | அழகு |
| மிசை | - | மேல் | துயர் | - | துன்பம் |

## இலக்கணக் குறிப்பு

| | | | | | |
|---|---|---|---|---|---|
| வெந்து | - | வினையெச்சம் | வெம்பி | - | வினையெச்சம் |
| எய்தி | - | வினையெச்சம் | மூடுபனி | - | வினைத்தொகை |
| ஆடுங்கிளை | - | பெயரெச்சத்தொடர் | வெறுங்கனவு | - | பண்புத்தொகை |
| பெருமூச்சு | - | பண்புத்தொகை | | | |

## பகுபத உறுப்பிலக்கணம்

**விரித்த - விரி + த் + த் + அ**

விரி - பகுதி

த் - சந்தி த்

த் - இறந்தகால இடைநிலை

அ - பெயரெச்ச விகுதி

**குமைந்தனை - குமை + த(ந்) + த் + அன் + ஐ**

குமை - பகுதி

- சந்தி (ந்) ஆனது விகாரம்

த் - இறந்தகால இடைநிலை

அன் - சாரியை

ஐ - முன்னிலை ஒருமை வினைமுற்று விகுதி

## பாடநூல் மதிப்பீட்டு வினா

### 1 பலவுள் தெரிக

1. ''மிசை'' என்பதன் எதிர்ச்சொல் என்ன?

அ) கீழே ஆ) மேலே

இ) இசை ஈ) வசை

**விடை: அ) கீழே**

Please Send Your Study Materials to our Email Id: padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.CBSEtips.in



## 2 சிறுவினா

1. பட்டமரத்தின் வருத்தங்கள் யாவை?
   - ◈ அமர நிழல் கொடுத்தேன்.
   - ◈ நறுமண மலர் கொடுத்தேன்.
   - ◈ பறவைகள் என் மீது அமர்ந்து பாடல் புனையும்.
   - ◈ என் கிளை மீது ஏறி சிறுவர்கள் குதிரை விளையாடுவார்கள்.

   இவையெல்லாம் போய் இன்று பட்டமரமாய் போய்விட்டேன் என்று பட்டமரம் வருந்தியது.

## கூடுதல் வினாக்கள்

## 1 பலவுள் தெரிக

1. பாரதியாரின் வழித்தோன்றலாகவும் பாரதிதாசனின் மாணவராகவும் விளங்கியவர்
   அ) தமிழன்பன் ஆ) தமிழ் ஒளி
   இ) சேக்கிழார் ஈ) திருவள்ளுவர் **விடை: ஆ) தமிழ் ஒளி**

2. பட்டமரம் கவிதை இடம்பெறும் நூல் எது?
   அ) நிலைபெற்ற சிலை ஆ) வீராயி
   இ) தமிழ்ஒளியின் கவிதைகள் ஈ) மாதவி காவியம்
   **விடை: இ) தமிழ்ஒளியின் கவிதைகள்**

3. குந்த நிழல்தரக்
   கந்த மலர்தரக்
   கூரை விரித்த இலை - இவ்வடியில் ‘மணம்’ என்னும் பொருள் தரும் சொல் எது?
   அ) குந்த ஆ) கந்தம்
   இ) கூரை ஈ) விரித்த **விடை: ஆ) கந்தம்**

4. குந்த நிழல்தரக்
   கந்த மலர்தரக்
   கூரை விரித்த இலை - இவ்வடியில் உள்ள அடிஎதுகையைக் கண்டறிக.
   அ) குந்த - கந்த ஆ) குந்த - கூரை
   இ) மலர் - நிழல் ஈ) நிழல் - விரித்த **விடை: அ) குந்த - கந்த**

5. பாடும் பறவைகள்
   கூடி உனக்கொரு
   பாடல் புனைந்ததுவும் - இவ்வடியில் உள்ள அடிமோனையைக் கண்டறிக.
   அ) பாடும் - பாடல் ஆ) பாடும் - கூடி
   இ) பறவைகள் - உனக்கொரு ஈ) கூடி - உனக்கொரு **விடை: அ) பாடும் - பாடல்**

6. சொல்லையும் பொருளையும் பொருத்துக.

| | | |
|---|---|---|
| 1. குந்த | - | அ) மணம் |
| 2. கந்தம் | - | ஆ) உட்கார |
| 3. மிசை | - | இ) கவலை |
| 4. விசனம் | - | ஈ) மேல் |

Please Send Your Study Materials to our Email Id: padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.CBSEtips.in



அ) 1-ஆ 2-அ 3-ஈ 4-இ ஆ) 1-இ 2-அ 3-ஈ 4-ஆ
இ) 1-ஆ 2-ஈ 3-அ 4-இ ஈ) 1-அ 2-ஆ 3-ஈ 4-இ

**விடை: அ) 1-ஆ 2-அ 3-ஈ 4-இ**

7. காலம் என்னும் புயல்
சீறி எதிர்க்கக்
கலங்கும் மனிதன்
ஓலமிடக்கரம்
நீட்டியது போல் இடர்
எய்தி உழன்றனையே!

- உவமையால் விளக்கப்பெறும் பொருத்தமானப் பொருளைத் தேர்ந்தெடுக்க.

அ) தீமை ஆ) பிடிவாதம்
இ) துன்பம் ஈ) மகிழ்ச்சி **விடை: இ) துன்பம்**

## 2 குறுவினா

1. பட்டமரம் என்ற தலைப்பில் அமைந்த கவிதை இடம்பெறும் நூல் எது? அந்நூலை இயற்றியவர் யார்?
   - ◈ நூல் : தமிழ்ஒளியின் கவிதைகள்
   - ◈ ஆசிரியர் : தமிழ் ஒளி (விஜயரங்கம்)

2. மரம் எதைப்போல் எய்தி உழன்றது?

காலமாகிய புயல் தாக்கும்போது அழுது கை நீட்டிக் கதறும் மனிதன் போல மரம் உழன்றது.

3. குந்த நிழல்தரக்
கந்த மலர்தரக்
கூரை விரித்த இலை

- இவ்வடியில் 'உட்கார', 'மணம்' என்னும் பொருள் தரும் சொற்கள் எவை?
   - ◈ உட்கார - குந்த
   - ◈ மணம் - கந்தம்

4. மரத்தின் மீது ஏறி சிறுவர் __________ விடுத்ததும்.
உரிய பாடல் சொல் கொண்டு நிரப்பு.

குதிரை.

## 3 சிறுவினா

1. ஏடு தருங்கதையாக முடிந்தன! இன்று வெறுங்கனவே! - என்று பட்டமரம் கூறக் காரணம் யாது?
   - ◈ அமர நிழல் கொடுத்தேன்.
   - ◈ நறுமண மலர் கொடுத்தேன்.
   - ◈ பறவைகள் என் மீது அமர்ந்து பாடல் புனையும்.
   - ◈ என் கிளை மீது ஏறி சிறுவர்கள் குதிரை விளையாடுவார்கள்.

Please Send Your Study Materials to our Email Id: padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.CBSEtips.in



◈ இவையெல்லாம் போய் இன்று பட்டமரமானேன்.

இவையெல்லாம் போய், இன்று ஏடு தருங்கதையாக முடிந்தன ! இன்று வெறுங்கனவாய்; போய்விட்டேன் என்று பட்டமரம் கூறியது.

2. **கவிஞர் தமிழ்ஒளி - குறிப்பு வரைக.**

◈ இயற்பெயர் : விஜயரங்கம்.

◈ கவிஞர் தமிழ்ஒளி புதுவையில் பிறந்தவர்.

◈ பாரதியாரின் வழித்தோன்றல்.

◈ பாரதிதாசனின் மாணவர்.

◈ படைப்புகள்: நிலைபெற்ற சிலை, வீராயி, கவிஞனின்காதல், கண்ணப்பன் கிளிகள், குருவிப்பட்டி, தமிழர் சமுதாயம், மாதவி காவியம்.

3. **பட்டமரம் கவிதையில் நும் மணம் கவர்ந்த வரிகளை எழுதுக.**

''காலம் என்னும் புயல்
சீறி எதிர்க்கக்
கலங்கும் மனிதன்
ஓலமிடக்கரம்
நீட்டியது போல் இடர்
எய்தி உழன்றனையே!''

## கற்பவை கற்றபின்... பக்கம்: 39

1. **விளை நிலங்கள் கட்டங்களாகின்றன - என்னும் தலைப்பில் ஒட்டியும் வெட்டியும் பேசுக.**

| | | |
|---|---|---|
| ஏழை விவசாயி | : | எங்க அப்பா காலத்திலிருந்து நெல் கரும்பு போட்டோம். அப்ப வந்தது. இப்ப....... வெண்டை, புடலை கூட வரமாட்டேங்குது. |
| அழகு (மனை விற்பனையாளர்) | : | என்ன போட்டு என்ன ஆச்சு? மழையில்லானா என்ன பண்ண முடியும்? |
| ஏழை விவசாயி | : | அழகு... பக்கத்திலிருக்கிற வயலெல்லாம் பிளாட் போட்டுட்டாங்க. எனக்கு என்ன செய்றதுன்னே தெரியல்லே! மழையும் இல்ல, கிணத்துல தண்ணியில்லே! |
| அழகு | : | நான்சொல்ற வழிக்கு வரமாட்டங்கிற... வித்து பணத்த பேங்க்ல போட்டுட்டு நிம்மதியா சாப்பிட்டுட்டு தூங்கு. |
| ஏழை விவசாயி | : | பூமித்தாயே விக்கச் சொல்ற... வித்தா அப்பார்ட் மெண்ட் கட்றங்கிறீங்க.. என்ன ஆகப் போதுன்ன எனக்குத் தெரியல! |
| அழகு | : | மழையில்ல தண்ணியில வீடு கட்டி நூறு ஜனங்க பொழக்கட்டுமே! வயல் வரப்ப வச்சிருந்து என்ன பண்ணப் போறீங்க? வித்தா மகளுக்கு கல்யாணம்; மகனைப் படிக்க வைக்க... எல்லாம் உன் நன்மைக்கே சொல்றேன். |
| ஏழை விவசாயி | : | பால்தர்ற பசுமாட்ட மடிஅறுத்துப்பால்குடிக்கிறதா? விளைநிலத்தைப்பூரா விலை நிலமா ஆக்கிட்டீங்க அழகு. |
| அழகு | : | இனி வரப்போற நாளில் வீடுதான் முக்கியம். குடியிருக்க வேண்டாமா? |

Please Send Your Study Materials to our Email Id: padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.CBSEtips.in



ஏழை விவசாயி : உங்க மாதிரி ஆளுகளால தான் கொசு தொந்தரவு நிறைய ஆகிருச்சு. குளங்குட்டையெல்லா பிரிச்சுப் போட்டு வித்தாச்சு தவளை இருந்தா கொசுவப் பிடிக்கும் இப்ப அதுக்கும் வழியில்ல

அழகு : ஒன்னும் வேணாங்க உங்க புள்ளங்க இந்தக் குடிசையில இருக்குமா? கேட்டுச் சொல்லுங்க....

ஏழை விவசாயி : உனக்குப்பணம்முக்கியம்எனக்குப்பயிர்முக்கியம்.நிலத்தால்சோறுபோடுறவன் ஏழையாகிறான். நிலத்தைக் கூறுபோடுறவன் பணக்காரனாகிறான்.

2. பட்டமரம், புதிதாக முளைவிட்ட குருத்து ஆகிய இரண்டும் பேசிக்கொள்வதாய்க் கற்பனை உரையாடல் நிகழ்த்துக.

பட்டமரம் : பேரனே! நலமா? தேடாதே! நான் தான் உன் தாத்தா பட்டமரம்.

புதிதாக முளைவிட்ட குருத்து : ஐயோ, நீங்களா இப்படி ஆகிவிட்டீர்கள்!

பட்டமரம் : ஆமாம், பேராண்டி மனிதர்கள் செயற்கை உரம், நெகிழியைப் பயன்படுத்தி என்னை இப்படி ஆக்கி விட்டார்கள். நம்ம வம்சமே பட்டுப்போய் விட்டது. உன்னை மட்டும் தான் காப்பாற்ற முடிந்தது. நீ எப்படியோ பிழைத்துக் கொள்!

புதிதாக முளைவிட்ட குருத்து : தாத்தா கவலைப்படாதீர்கள். நம் வம்சத்தைக் காப்பாற்ற மனிதர்களிடம் புரிய வைக்கிறேன்.

பட்டமரம் : சரிப்பா, நான் ஓய்வெடுக்கின்றேன். மனிதர்களுக்கு நன்குபுரிய வை!

புதிதாக முளைவிட்ட குருத்து : இதோ, செல்கிறேன் தாத்தா.

3. பட்டணத்துப் பறவைகளும் ஊர்ப்பறவைகளும் பேசுவது போலச் சிறு சிறு கவிதைகள் படைக்க.

| பட்டணத்துப் பறவைகள் | ஊர்ப்பறவைகள் |
|---|---|
| ‘‘பயந்து பயந்து பறக்கின்றோம்<br>பட்டணத்துக் காரன் பிடிச்சிடுவான்<br>பார்த்துப் பார்த்து உண் கின்றோம்<br>உணவே நஞ்சு பட்டணத்தில்<br>உண்டு தினமும் அழிகின்றோம்.’’ | ‘‘சுதந்திரமாய்ப் பறக்கின்றோம்<br>சுகமாய் தினமும் வாழ்கின்றோம்<br>பார்க்காமல் உண்டாலும்<br>உணவே மருந்து கிராமத்தில்<br>உண்டு தினமும் வாழ்கின்றோம்.’’ |

Please Send Your Study Materials to our Email Id: padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.CBSEtips.in



இயல் 2 கவிதைப் பேழை

# பெரியபுராணம்

– சேக்கிழார்



ஆசிரியர் - சேக்கிழார்
இயற்பெயர் - அருண்மொழித்தேவர்
காலம் - கி.பி.12
படைப்புகள் - பெரியபுராணம், திருத்தொண்டர் புராணச் சாரம், திருப்பதிகக் கோவை.

## சொற்பொருள்

| | | | |
|---|---|---|---|
| மா | வண்டு | மது | தேன் |
| வாவி | பொய்கை | வளர்முதல் | நெற்பயிர் |
| தரளம் | முத்து | பணிலம் | சங்கு |
| கழை | கரும்பு | கா | சோலை |
| குழை | சிறுகிளை | அரும்பு | மலர் மொட்டு |
| மாடு | பக்கம் | வளை | சங்குகள் |
| கோடு | குளக்கரை | மேதி | எருமை |
| துதைத்து எழும் | கலக்கி எழும் | சூடு | நெல் அரிக்கட்டு |
| சுரிவளை | சங்கு | வேரி | தேன் |
| பகடு | எழுமைக்கடா | பாண்டில் | வட்டம் |
| சிமயம் | மலையுச்சி | நாளிகேரம் | தென்னை |
| நரந்தம் | நாரத்தை | கோளி | அரசமரம் |
| சாலம் | ஆச்சா மரம் | தமாலம் | பச்சிலை மரம் |
| போந்து | பனைமரம் | சந்து | சந்தன மரம் |
| நாகம் | நாகமரம் | காஞ்சி | ஆற்றுப்புவரசு |

## இலக்கணக் குறிப்பு

| | | | |
|---|---|---|---|
| கருங்குவளை | பண்புத்தொகை | செந்நெல் | பண்புத்தொகை |
| விரிமலர் | வினைத்தொகை | தடவரை | உரிச்சொல் தொடர் |

## பகுபத உறுப்பிலக்கணம்

**பாய்வன - பாய் + வ் + அன் + அ**

பாய் - பகுதி
வ் - எதிர்கால இடைநிலை
அன் - சாரியை
அ - பலவின்பால் வினைமுற்று விகுதி

Please Send Your Study Materials to our Email Id: padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.CBSEtips.in



## பாடநூல் மதிப்பீட்டு வினா

### 1 குறுவினா

1. நிலையான வானத்தில் தோன்றி மறையும் காட்சிக்குப் பெரியபுராணம் எதனை ஒப்பிடுகிறது?

அன்னங்கள் விளையாடும் நீர்நிலைகளில் எருமைகள் வீழ்ந்து மூழ்கும். அதனால் அதில் உள்ள வாளை மீன்கள் அருகில் உள்ள பாக்கு மரங்கள் மீது பாயும் இக்காட்சியை நிலையான வானத்தில் தோன்றி மறையும் வானவில்லுக்குப் பெரியபுராணம் ஒப்பிடுகின்றது.

### 2 நெடுவினா

1. பெரியபுராணம் காட்டும் திருநாட்டுச் சிறப்பினைத் தொகுத்து எழுதுக.

◈ காவிரி ஆறு புதிய பூக்களை அடித்து வர அதனை வண்டுகள் மொய்த்து ஆரவாரம் செய்கின்றன. நாட்டுக்கு வளம் தர காவிரி கால்வாய்களில் எங்கும் ஓடுகின்றது.
◈ நட்டபின் வயலில் வளர்ந்த நாற்றின் முதல் இலைச் சுருள் விரிந்தது. இதனைக் கண்ட உழவர் இதுதான் களைப் பறிக்கும் பருவம் என்று அறிந்தனர்.
◈ காடுகளில் எல்லாம் கரும்புகள் உள்ளன.
◈ சோலைகள் எல்லாம் செடிகளின் புதிய கிளைகளில் அரும்புகள் உள்ளன.
◈ பக்கங்களில் எல்லாம் குவளை மலர்கள் உள்ளன.
◈ வயல்களில் சங்குகள் நெருங்கி உள்ளன.
◈ கரை எங்கும் இளைய அன்னங்கள் உலவுகின்றன.
◈ குளங்கள் எல்லாம் கடல்போல பெரிதாக உள்ளன.
◈ அதனால் நாடு நீர் நாடு என்று சொல்லத்தக்கதாய் உள்ளது.
◈ அன்னங்கள் விளையாடும் நீர்நிலைகளில் எருமைகள் வீழ்ந்து மூழ்கும். அதனால் அதில் உள்ள வாளை மீன்கள் அருகில் உள்ள பாக்கு மரங்கள் மீது பாயும் இக்காட்சியை நிலையான வானத்தில் தோன்றி மறையும் வானவில் போன்றுள்ளது.
◈ செந்நெல்லின் சூடுகள், பலவகைப்பட்ட மீன்கள், முத்துக்கள், மலர்த் தொகுதிகள் ஆகியவற்றைத் திருநாட்டில் குவித்து வைத்திருந்தனர்.
◈ தென்னை, செருந்தி, நரந்தம், அரசமரம், கடம்பமரம், பச்சிலை மரம், குராமரம், பனை, சந்தனம், நாகம், வஞ்சி - காஞ்சி மலர்கள் நிறைந்த கோங்கு முதலியன எங்கும் திருநாட்டில் செழித்து வளர்ந்துள்ளன.
◈ இவையே பெரியபுராணம் காட்டும் திருநாட்டுச் சிறப்பு ஆகும்.

## கூடுதல் வினாக்கள்

### 1 பலவுள் தெரிக

1. திருத்தொண்டர் புராணத்தை (பெரியபுராணம்) இயற்றியவர் ________.

அ) சேக்கிழார் ஆ) சுந்தரர்
இ) நம்பியாண்டார் நம்பி ஈ) மீனாட்சி சுந்தரனார் **விடை: அ) சேக்கிழார்**

Please Send Your Study Materials to our Email Id: padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.CBSEtips.in



2. அருண்மொழித்தேவர் என்ற இயற்பெயர் கொண்டவர்_________.
அ) சேக்கிழார் ஆ) சுந்தரர்
இ) நம்பியாண்டார் நம்பி ஈ) மீனாட்சி சுந்தரனார் **விடை: அ) சேக்கிழார்**

3. மாவி ரைத்தெழுந் தார்ப்ப வரைதரு – இவ்வடியில் 'வண்டு' என்னும் பொருள் தரும் சொல் எது?
அ) விரை ஆ) வரை இ) ஆர்ப்ப ஈ) மா **விடை: ஈ) மா**

4. வாவியிற் பொலிநாடு என்பதில் 'வாவி' என்பதன் பொருள்
அ) வண்டு ஆ) தேன் இ) பொய்கை ஈ) நீர் **விடை: இ)பொய்கை**

5. களைபறிக்கும் பருவம் என்று உழவர் அறிய காரணமான செயல்ம..
அ) நாற்றின் முதல் இலைச் சுருள் விரிதல் ஆ) நாற்று நடல்
இ) கதிர் முற்றல் ஈ) கதிர் அறுத்தல்
**விடை: அ) நாற்றின் முதல் இலைச் சுருள் விரிதல்**

6. பெரியபுராணம் குறிப்பிடும் வளம் _________ நாட்டு வளம்.
அ) சோழர் ஆ) சேரர் இ) பாண்டியர் ஈ) பல்லவர் **விடை: அ) சோழர்**

7. பெரியபுராணம் குறிப்பிடும் வளம் _________ நாட்டு வளம்.
அ) திரு ஆ) சேரர் இ) பாண்டியர் ஈ) பல்லவர் **விடை: அ) திரு**

8. வானத்தில் தோன்றி மறையும் வானவில் காட்சிக்குக் காரணமானவை அமைந்த சரியானதைத் தேர்வு செய்க.
அ) அன்னங்கள், எருமைகள், வாளை மீன்கள்.
ஆ) அன்னங்கள், பசுக்கள், வாளை மீன்கள்.
இ) கொக்குகள், எருமைகள், வாளை மீன்கள்.
ஈ) அன்னங்கள், எருமைகள், பருந்துகள். **விடை: அ) அன்னங்கள், எருமைகள், வாளை மீன்கள்**

9. நிலையான வானத்தில் தோன்றி மறைவது _________.
அ) நிலா ஆ) கதிரவன் இ) வானவில் ஈ) மேகம் **விடை: இ) வானவில்**

10. தவறான கூற்றினைத் தேர்வு செய்க
1) திருநாட்டில் காணப்பட்ட மரங்கள் அரசமரம், கடம்பமரம்.
2) நீர்நிலைகளில் வண்டுகள் ஆரவாரம் செய்யும்.
3) உழத்தியரின் கால்களில் சங்குகள் இடறின.
4) சேர நாடு முழுவதும் நீர்நாடு.
**அ) 1, 2, 3 மூன்றும் சரி 4 மட்டும் தவறு** **ஆ) 4 மட்டும் சரி**
**இ) 1, 2 சரி 3, 4 தவறு** **ஈ) 1, 2 தவறு 3, 4 சரி**
**விடை: அ) 1, 2, 3 மூன்றும் சரி 4 மட்டும் தவறு**

11. பொருத்துக.

| | | |
|---|---|---|
| 1. நாளிகேரம் | - | அ) ஆற்றுப்பூவரசு |
| 2. கோளி | - | ஆ) பனைமரம் |
| 3. போந்து | - | இ) தென்னை |
| 4. காஞ்சி | - | ஈ) அரசமரம் |

Please Send Your Study Materials to our Email Id: padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.CBSEtips.in



அ) 1-இ 2-ஈ 3-ஆ 4-அ ஆ) 1-ஈ 2-இ 3-ஆ 4-அ
இ) 1-இ 2-ஈ 3-அ 4-ஆ ஈ) 1-இ 2-அ 3-ஆ 4-ஈ

**விடை: அ) 1-இ 2-ஈ 3-ஆ 4-அ**

12. **நாளிகே ரஞ்செ ருந்தி நறுமலர் நரந்தம் எங்கும்**
**கோளிசா லந்த மாலம் குளிர்மலர்க் குரவம் எங்கும்**
**- இவ்வடியில் இடம்பெறும் அடி இயைபு எது?**

அ) நாளிகே - கோளிசா ஆ) நறுமலர் - குளிர்மலர்
இ) எங்கும் - எங்கும் ஈ) செருந்தி - மாலம்

**விடை: இ) எங்கும் - எங்கும்**

## 2 குறுவினா

1. **உழவர்கள் களைபறிக்கும் பருவத்தை எப்படி அறிந்தனர்?**
நட்டபின் வயலில் வளர்ந்த நாற்றின் முதல் இலைச் சுருள் விரிந்தது. இதனைக் கண்ட உழவர் இதுதான் களைப் பறிக்கும் பருவம் என்று அறிந்தனர்.

2. **திருநாட்டில் எவ்வெவற்றைக் குவித்து வைத்திருந்தனர்?**
செந்நெல்லின் சூடுகள், பலவகைப்பட்ட மீன்கள், முத்துக்கள், மலர்த் தொகுதிகள் ஆகியவற்றைத் திருநாட்டில் குவித்து வைத்திருந்தனர்.

3. **திருநாட்டில் செழித்து வளர்ந்துள்ளவை எவை?**
தென்னை, செருந்தி, நரந்தம், அரசமரம், கடம்பமரம், பச்சிலை மரம், குராமரம், பனை, சந்தனம், நாகம், வஞ்சி - காஞ்சி மலர்கள் நிறைந்த கோங்கு முதலியன எங்கும் திருநாட்டில் செழித்து வளர்ந்துள்ளன.

4. **''வாவியிற் பொலி நாடு'' இதில் 'பொய்கை' என்பதைக் குறிக்கும் சொல் எது?**
வாவி.

5. **உழவர் என்பது ஆண்பால். ஆனால், அதற்கு எதிர் பெண்பால் சொல் எது?**
உழத்தியர்.

6. **'துன்னும் மேதி படிய' - இதில் எருமை' என்னும் பொருள் தரும் சொல்லினை எடுத்து எழுதுக.**
மேதி.

7. **'காலிரும் பகடு போக்கும் கரும்பெரும் பாண்டில் ஈட்டம்' - இவ்வடியில் 'பகடு', 'பாண்டில்' என்பதன் பொருள் யாது?**
'பகடு' - எருமைக்கடா 'பாண்டில்' - வட்டம்

8. **'தேன்' என்னும் பொருள் தரும் வேறுசொற்களைத் திருநாட்டுச்சிறப்பு பகுதியிலிருந்து எழுதுக.**
மது, வேரி.

9. **'சங்கு' என்னும் பொருள் தரும் வேறுசொற்களைத் திருநாட்டுச்சிறப்புப் பகுதியிலிருந்து எழுதுக.**
வளை, பணிலம்.

Please Send Your Study Materials to our Email Id: padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.CBSEtips.in



## 3 சிறுவினா

1. **சோழநாட்டு நீர்வளச் சிறப்பினைப் பெரியபுராணம் வழி கூறுக.**
   - ◈ காடுகளில் எல்லாம் கரும்புகள் உள்ளன.
   - ◈ சோலைகள் எல்லாம் செடிகளின் புதிய கிளைகளில் அரும்புகள் உள்ளன.
   - ◈ பக்கங்களில் எல்லாம் குவளை மலர்கள் உள்ளன.
   - ◈ வயல்களில் சங்குகள் நெருங்கி உள்ளன.
   - ◈ கரை எங்கும் இளைய அன்னங்கள் உலவுகின்றன.
   - ◈ குளங்கள் எல்லாம் கடல் போல பெரிதாக உள்ளன.
   - ◈ அதனால் நாடு நீர் நாடு என்று சொல்லத்தக்கதாய் உள்ளது.

2. **பெரியபுராணம் குறிப்பு வரைக.**
   - ◈ சேக்கிழார் பெருமான் இயற்றியது.
   - ◈ சைவ அடியார்களின் வாழ்க்கை வரலாற்றைக் கூறும் நூல்.
   - ◈ சைவ காப்பியம்.
   - ◈ சேக்கிழார் இந்நூலுக்கு இட்டபெயர்: திருத்தொண்டர்புராணம்.
   - ◈ சைவ அடியார்கள் வரலாறு கூறுவதால் பெரியபுராணம் ஆயிற்று.
   - ◈ இரு காண்டங்களையும், 13 சருக்கங்களையும் கொண்டுள்ளது.

3. **சேக்கிழார் பற்றி அறிந்தவற்றை எழுதுக.**

| | | |
|---|---|---|
| இயற்பெயர் | : | அருண்மொழித்தேவர் |
| காலம் | : | கி.பி. 12 |
| படைப்புகள் | : | பெரியபுராணம், திருத்தொண்டர்புராணச் சாரம், திருப்பதிகக் கோவை |
| பணி | : | 2ஆம் குலோத்துங்கன் அவையில் முதலமைச்சராகப் பணியாற்றியவர். |
| சிறப்பு | : | ‘பக்திச் சுவை நனிசொட்டச் சொட்டப் பாடிய கவி வலவ‘ என்று மகாவித்துவான் மீனாட்சிசுந்தரனார் பாராட்டுகிறார். |

## கற்பவை கற்றபின்...

**பக்கம்: 43**

1. **பள்ளி இலக்கிய மன்றத்தில் கவிதை படித்தல்.**

**மூச்சுவிடும் மரம்**

இழுத்து இழுத்து மூச்சுவிடும்
எனக்குச் சுவாசக் கோளாறாம்
காலமருத்துவர் சொன்னார் உயிர்க்காற்று
உருளைக்கு நான் எங்கு செல்வேன்..

**புரட்டிப் போட்ட புயல்**

இயற்கை அன்னையை மறந்து
செயற்கை அன்னையைத் தேடியதால்
வந்த விளைவு
உன்னைப் புரட்டிப் போட்ட புயல்

Please Send Your Study Materials to our Email Id: padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.CBSEtips.in



**இசை பாடும் பறவைகள்**

பறவைகளுக்குத் தான்
என்ன ஆனது
இப்படிப் புரியாத மொழியில் பாடுகின்றதே!
நாகரிக மோகம் கொண்டு
நீயும் மேற்கத்திய இசையோ

**பனித்துளியில் தெரியும் பனை**

வெண்மையில் தவழ்ந்த
பனித்துளியே!
உன்னைச் சுவைக்க
உற்றுப்பார்த்தேன்
தெரிந்தது பனை
புரிந்தது வினை.

**என் இனிய கனவு**

கண்கள் கனவுகள்
பக்கம் திரும்பின
கனவுகளுக்குக் கால்கள் முளைத்தன
அது நடந்து போனது..
எதிர்காலத்தைத் தேடி

2. **பின்வரும் கவிதையின் விவரிப்பை உரைநடையில் எழுதுக.**

வானகமே - இளவெயிலே - மரச்செறிவே - நீங்களெல்லாம்
கானலின் நீரோ? - வெறுங் காட்சிப் பிழைதானோ!
போனதெல்லாம் கனவினைப்போல் புதைந்தழிந்ததே
போனதனால் நானும் ஓர் கனவோ? - இந்த
ஞாலமும் பொய்தானோ? **- பாரதியார்**

**உரைநடை விவரிப்பு:**

வானம், இளவெயில், மரக்கூட்டங்கள் ஆகிய நீங்கள் கானல் நீரன்று.... இறைவனின் படைப்புகள். நீங்கள் காட்சிப்பிழையா? இல்லை. உண்மையின் உருவம். வாழ்வின் கனவு அழிவது போல் நானும் அழிந்து போகும் கனவா? பூமியும் பொய்யோ?

Please Send Your Study Materials to our Email Id: padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.CBSEtips.in



இயல் 2 கவிதைப் பேழை

# புறநானூறு

| | | |
|---|---|---|
| ஆசிரியர் | - | குடபுலவியனார் சங்கப்புலவர் |
| படைப்புகள் | - | புறநானூற்றில் சில பாடல்களைப் பாடியவர். |
| சிறப்பு | - | பாண்டிய நெடுஞ்செழியனுக்கு அறிவுரை கூறியவர். |

## சொற்பொருள்

| | | | | | |
|---|---|---|---|---|---|
| யாக்கை | - | உடம்பு | புணரியோர் | - | தந்தவர் |
| புன்புலம் | - | புல்லிய நிலம் | தாட்கு | - | முயற்சி, ஆளுமை |
| உண்டி | - | உணவு | ஞாலம் | - | உலகம் |

## இலக்கணக் குறிப்பு

| | | |
|---|---|---|
| மூதூர் | - | பண்புத்தொகை |
| நல்லிசை | - | பண்புத்தொகை |
| புன்புலம் | - | பண்புத்தொகை |
| நிறுத்தல் | - | தொழிற்பெயர் |
| அமையா | - | ஈறுகெட்ட எதிர்மறைப் பெயரெச்சம் |
| நீரும் நிலமும் | - | எண்ணும்மை |
| உடம்பும் உயிரும் | - | எண்ணும்மை |
| அடுபோர் | - | வினைத்தொகை |
| கொடுத்தோர் | - | வினையாலணையும் பெயர் |

## பகுபத உறுப்பிலக்கணம்

**நிறுத்தல் - நிறு + த் + தல்**

| | | |
|---|---|---|
| நிறு | - | பகுதி |
| த் | - | சந்தி |
| தல் | - | தொழிற்பெயர் விகுதி |

**கொடுத்தோர் - கொடு + த் + த் + ஓர்**

| | | |
|---|---|---|
| கொடு | - | பகுதி |
| த் | - | சந்தி |
| த் | - | இறந்தகால இடைநிலை |
| ஓர் | - | பலர்பால் வினைமுற்று விகுதி |

Please Send Your Study Materials to our Email Id: padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.CBSEtips.in



## பாடநூல் மதிப்பீட்டு வினா

### 1 பலவுள் தெரிக

1. மல்லல் மூதூர் வயவேந்தே - கோடிட்ட சொல்லின் பொருள் என்ன?

அ) மறுமை ஆ) பூவரசு மரம் இ) வளம் ஈ) பெரிய **விடை: இ) வளம்**

### 2 குறுவினா

1. ''உண்டி கொடுத்தோரே உயிர் கொடுத்தோர்'' - பொருள் விளக்கம் தருக.

நீர் இல்லாமல் அமையாத உடல் உணவால் அமையும். உணவே முதன்மையாக உடையது. எனவே உணவு தந்தவர் உயிரைத் தந்தவர் ஆவார்.

### 3 சிறுவினா

1. நிலைத்தபுகழ் பெறுவதற்குக் குடபுலவியனார் கூறும் வழிகள் யாவை?

◈ வேந்தனே! நீ மறுமை இன்பம் அடையவோ, உலகத்தையே வெல்லவோ, நிலையான புகழ்பெறவோ விரும்பினால், நான் சொல்வதைக் கேள்!

◈ நெடுஞ்செழியனே! நீர் இல்லாமல் அமையாத உடல் உணவால் அமையும். உணவே முதன்மையாக உடையது. எனவே உணவு தந்தவர் உயிரைத் தந்தவர் ஆவார்.

◈ உணவு எனப்படுவது நிலத்துடன் நீரும் ஆகும். நிலத்தையும் நீரையும் ஒன்று சேர்த்தவர் உலகில் உடலையும் உயிரையும் ஒன்று சேர்த்தவர்.

◈ தானியங்களை விதைத்து மழையைப் பார்த்திருக்கும் பரந்த நிலமாயினும் அதனை ஆளும் அரசனுக்கு சிறிதும் உதவாது.அதனால் நான் கூறிதை விரைவாகக் கடைபிடிப்பாயாக!

◈ நிலம் குழிந்த இடங்கள் தோறும் நீர்நிலைகளைப் பெருகச் செய்தல் வேண்டும்.

◈ நிலத்துடன் நீரைக் கூட்டியவர் மூவகை இன்பத்தையும் நிலைத்த புகழையும் பெறுவர்.

◈ இதைச் செய்யாதவர் வீணே மடிவர்.

## கூடுதல் வினாக்கள்

### 1 பலவுள் தெரிக

1. வரலாற்றுச்செய்திகள் அடங்கிய பண்பாட்டுக் கருவூலம் __________.

அ) பெரியபுராணம் ஆ) தமிழ்விடுதூது
இ) தமிழ்லோவியம் ஈ) புறநானூறு **விடை: ஈ) புறநானூறு**

2. 'நீரின்று அமையா யாக்கை' - என்று பாடியவர்

அ) குடபுலவியனார் ஆ) பாண்டியன் நெடுஞ்செழியன்
இ) திருவள்ளுவர் ஈ) மணிமேகலை **விடை: அ) குடபுலவியனார்**

Please Send Your Study Materials to our Email Id: padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.CBSEtips.in



3. ''வான் உட்கும் வடிநீண் மதில்'' எனத் தொடங்கும் பாடல் பாடப்பட்ட மன்னன்
அ) குடபுலவியனார் ஆ) பாண்டியன் நெடுஞ்செழியன்
இ) திருவள்ளுவர் ஈ) மணிமேகலை

விடை: அ) குடபுலவியனார்

4. புறநானூறு ________ நூல்களுள் ஒன்று.
அ) பத்துப்பாட்டு ஆ) எட்டுத்தொகை
இ) பதினெண்கீழ்கணக்கு ஈ) இவற்றுள் எதுவுமில்லை

விடை: ஆ) எட்டுத்தொகை

5. 'உண்டி கொடுத்தோரே உயிர் கொடுத்தோர்' - இத்தொடரைப் பாடியவர்
அ) குடபுலவியனார் ஆ) பாண்டியன் நெடுஞ்செழியன்
இ) திருவள்ளுவர் ஈ) மணிமேகலை

விடை: ஆ) பாண்டியன் நெடுஞ்செழியன்

6. பொருத்துக.

| | | |
|---|---|---|
| 1. யாக்கை | - | அ) முயற்சி |
| 2. தாட்கு | - | ஆ) உடம்பு |
| 3. புணரியோர் | - | இ) தந்தவர் |
| 4. ஞாலம் | - | ஈ) உலகம் |

அ) 1-ஆ 2-அ 3-இ 4-ஈ ஆ) 1-ஆ 2-இ 3-அ 4-ஈ
இ) 1-ஆ 2-ஈ 3-இ 4-அ ஈ) 1-ஈ 2-அ 3-இ 4-ஆ

விடை: அ) 1-ஆ 2-அ 3-இ 4-ஈ

7. சரியான கூற்றினைத் தேர்க.
1. குடபுலவியனார் புறநானூற்றில் பாடல் எழுதியுள்ளார்.
2. நீர்நிலைகளை உருவாக்குபவர்கள் உயிரை உருவாக்குபவர்கள்.
3. குடபுலவியனார் பாடிய புறநானூற்றுப்பாடல் பொதுவியல் திணையன்று

அ) 1 மட்டும் சரி ஆ) 2 மட்டும் சரி
இ) 3 மட்டும் சரி ஈ) 1 மற்றும் 2 சரி, 3 தவறு

விடை: ஈ) 1 மற்றும் 2 சரி, 3 தவறு

8. குடபுலவியனார் பாண்டிய நெடுஞ்செழியனுக்கு வழங்கிய அறிவுரை ________.
அ) நீர்நிலை பெருக்குதல் ஆ) போர் செய்யாமை
இ) அறம் செய் ஈ) வேளாண்மை பெருக்கு

விடை: அ) நீர்நிலை பெருக்குதல்

9. 'உண்டி கொடுத்தோரே உயிர் கொடுத்தோர்' - இதில் அமைந்துள்ள தொடைநயம்
அ) எதுகை,மோனை ஆ) எதுகை
இ) மோனை ஈ) இயைபு

விடை: அ) எதுகை,மோனை

10. 'மல்லல் மூதூர் வயவேந்தே' - இத்தொடரில் உள்ள பண்புத்தொகைச் சொல் எது?
அ) மல்லல் ஆ) மூதூர் இ) வய ஈ) வேந்தே

விடை: ஆ) மூதூர்

11. ஆளும் இறைவன் - என்பதில் இறைவன் என்று குடபுலவியனார் யாரைக் குறிப்பிடுகிறார்?
அ) கடவுள் ஆ) அரசன் இ) உழவன் ஈ) புலவன்

விடை: ஆ) அரசன்

Please Send Your Study Materials to our Email Id: padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.CBSEtips.in



12. **சரியான சொற்றொடரைத் தேர்வு செய்க**

அ) உண்டி முதற்றே உணவின் பிண்டம் ஆ) உணவின் முதற்றே உண்டி பிண்டம்

இ) பிண்டம் முதற்றே உண்டி உணவின் ஈ) உணவின் பிண்டம் உண்டி முதற்றே

**விடை : அ) உண்டி முதற்றே உணவின் பிண்டம்.**

**கோடிட்ட இடத்தை நிரப்புக.**

1. யாக்கை என்பதன் பொருள் ________. **விடை: உடம்பு**
2. ________ எனப்படுவது நிலத்துடன் நீரும் ஆகும். **விடை: உணவு**
3. ________ கொடுத்தோர் உயிர்கொடுத்தோர். **விடை: உண்டி (உணவு)**
4. குடபுலவியனார் அறிவுரை வழங்கிய பாண்டிய மன்னன் ________.
   **விடை: பாண்டிய நெடுஞ்செழியன்**
5. ________ நீர், காற்று என்பவை மனிதனின் அடிப்படைத் தேவைகளாகும். **விடை: நிலம்**
6. உலகில் உள்ள அனைத்தையும் மிகுதியாகக் கொண்டுள்ளவன் ________.
   **விடை: பாண்டிய நெடுஞ்செழியன்**
7. ''வான் உட்கும் வடிநீண் மதில்'' எனத் தொடங்கும் பாடல் பாடப்பட்ட திணை ________.
   **விடை: பொதுவியல்**
8. ''வான் உட்கும் வடிநீண் மதில்'' எனத் தொடங்கும் பாடல் பாடப்பட்ட துறை ________.
   **விடை : பொருண்மொழிக்காஞ்சித்துறை**

## 2 குறுவினா

1. **''உயிரை உருவாக்குபவர்கள்'' என்று நம்முன்னோர் யாரைப் போற்றினர்?**

நீர்நிலைகளை உருவாக்குபவர்களை நம்முன்னோர் ''உயிரை உருவாக்குபவர்கள்'' என்று போற்றினர்.

2. **உண்டி கொடுத்தோரே உயிர் கொடுத்தோர் - தொடர் பொருள் யாது?**

உணவைக் கொடுத்தவர் உயிரைக் கொடுத்தவர் ஆவர்.

3. **உணவு எனப்படுவது யாது?**

உணவு எனப்படுவது நிலத்துடன் நீரும் ஆகும்.

4. **பொதுவியல் திணை விளக்குக.**

வெட்சி முதலிய புறத்திணைகளுக்கெல்லாம் பொதுவான செய்தியும் முன்னர் விளக்கப்படாத செய்தியும் கூறுவது பொதுவியல் திணை ஆகும்.

5. **பொருண்மொழிக் காஞ்சித்துறையை விளக்குக.**

சான்றோர் ஆராய்ந்து தெளிந்த பொருள்களைப் பிறர்க்குப் பயன்படுமாறு எடுத்துக் கூறுவது பொருண்மொழிக் காஞ்சித்துறை ஆகும்.

6. **யார் வீணே மடிவர் என்று குடபுலவியனார் கூறுகிறார்?**

நிலம் குழிந்த இடங்களில் நீர் நிலைகளைப் பெருகச் செய்ய வேண்டும். நிலத்துடன் நீரைக் கூட்டியவர் மூவகை இன்பத்தையும் நிலைத்த புகழையும் அடைவர். இதைச் செய்யாதவர் வீணே மடிவர்.

Please Send Your Study Materials to our Email Id: padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.CBSEtips.in



7. **யார் நிலைத்த புகழ் அடைவர் என்று குடபுலவியனார் கூறுகிறார்?**

நிலம் குழிந்த இடங்களில் நீர் நிலைகளைப் பெருகச் செய்ய வேண்டும். நிலத்துடன் நீரைக் கூட்டியவர் மூவகை இன்பத்தையும் நிலைத்த புகழையும் அடைவர்.

8. **தள்ளாதோர் இவண் தள்ளாதோரே - தொடர் பொருள் விளக்கம் தருக.**

குறைவில்லாது நீர் நிலை அமைப்பவர் குறைவில்லாது புகழுடையவர்களாக விளங்குவார்கள்.

## 3 சிறுவினா

1. **புறநானூறு குறிப்புத் தருக.**

◈ எட்டுத்தொகை நூல்களுள் ஒன்று.
◈ புறப்பொருள் பற்றிய 400 பாடல்கள் கொண்டது.
◈ பண்டைய மன்னர்கள் மற்றும் வள்ளல்களின் வீரம், வெற்றி ,கொடை ஆகியவை பற்றிக் கூறுகிறது.
◈ பண்டைய மக்களின் புறவாழ்வைக் காட்டுகின்றது.
◈ இந்நூல் பண்பாட்டுக் கருவூலமாகத் திகழ்கின்றது.

## கற்பவை கற்றபின்...

பக்கம்: 46

1. **பின்வரும் புறநானூற்றுத் தொடருக்கான பொருளைப் பள்ளி நூலகத்திற்குச் சென்று அறிந்து எழுதுக.**

| தொடர் | பொருள் |
|---|---|
| அ. உண்டி கொடுத்தோர் உயிர் கொடுத்தோரே! (புறம் - 18) | அ. உணவைக் கொடுத்தவர் உயிரைக் கொடுத்தவர். |
| ஆ. உண்பது நாழி உடுப்பவை இரண்டே! (புறம் - 189) | ஆ. உண்பது சிறிதளவு, உடுப்பது மேலாடை, கீழாடை இரண்டு மட்டுமே! |
| இ. யாதும் ஊரே யாவரும் கேளிர்! (புறம்- 192) | இ. எல்லா ஊர்களும் நம் ஊரே ! எல்லோரும் நம் உறவினர்களே! |
| ஈ. சான்றோன் ஆக்குதல் தந்தைக்குக் கடனே! நன்னடை நல்கல் வேந்தற்குக் கடனே! (புறம் - 312) | ஈ. அறிஞன் ஆக்குதல் தந்தையின் கடமை நன்னெறி கூறுதல் மன்னனின் கடமை |
| உ. உற்றுழி உதவியும் உறுபொருள் கொடுத்தும் பிற்றை நிலை முனியாது கற்றல் நன்றே! (புறம்- 183) | உ. துன்ப காலத்தில் உதவியும் பொருள் கொடுத்தும் ஆசிரியரை மதித்து கற்பதுவே நன்று. |

Please Send Your Study Materials to our Email Id: padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.CBSEtips.in



2. **உணவாகும் மழை என்னும் தலைப்பில் விளக்கக் குறிப்புகளுடன் கூடிய படத் தொகுப்பை உருவாக்குக.**



மழையால் காடுகள் மற்றும் மலைப்பகுதிகள் செழிக்கின்றன. காய்கள், கனிகள் அவற்றால் பெருகுகின்றன.



ஊட்டச்சத்து மிக்க கீரைகள், பயிறு மற்றும் பருப்பு வகைகள் மழையால் நன்கு வளர்ந்து, நீண்டநாள் நலத்துடன் வாழ நல்லுணவைத் தருகின்றன.



நோயற்ற வாழ்வு வாழ
அறுசுவை உணவு அவசியம்.
அதனை அளிப்பது மழையே!

oo✧✧✧oo

# இயல் 2 — விரிவானம்

# தண்ணீர்

– கந்தர்வன்



| | | |
|---|---|---|
| ஆசிரியர் | - | கந்தர்வன் |
| இயற்பெயர் | - | நாகலிங்கம் |
| ஊர் | - | இராமநாதபுரம் |
| பணி | - | தமிழக அரசின் கருவூலக் கணக்குத்துறை |
| படைப்புகள் | - | சாசனம், ஒவ்வொரு கல்லாய், கொம்பன் முதலிய சிறுகதைத் தொகுப்பு |

## பாடநூல் மதிப்பீட்டு வினா

### 1 நெடுவினா

1. **'தண்ணீர்' கதையைக் கருப்பொருள் குன்றாமல் சுருக்கித் தருக.**

**முன்னுரை:**

கந்தர்வன் அவர்கள் படைத்த சிறுகதைகளில் ஒன்று தண்ணீர். குடிநீர்ப் பற்றாக்குறையால் ஏற்படும் அவலங்களைப் பற்றி இக்கதை விரிவாக எடுத்துரைக்கிறது.

Please Send Your Study Materials to our Email Id: padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.CBSEtips.in



**ஊரில் தண்ணீர்ப் பஞ்சம்**

ஊரில் கிணறுகளில் ஒரு பொட்டுத் தண்ணீர் இல்லை. தண்ணீருக்காக மூன்று மைல் தூரம் நடந்து சென்று பிலாப்பட்டியில் தான் தண்ணீர்ப் பிடித்து வரவேண்டும் ஊருணியில் நீர் ஊற ஊறத்தான் தண்ணீர்ப் பிடிக்க முடியும். பிலாப்பட்டி மக்கள் மதியம் வரை தண்ணீர் எடுப்பார்கள். பிறகுதான் வெளியூர்க்காரர்கள் பிடிக்க வேண்டும்.

**ரயில் தண்ணீர்:**

தண்ணீர் எங்கு இல்லை என்றாலும் ரயிலுக்கு மட்டும் எங்கிருந்தோ தண்ணீர் கொண்டு வந்து ஊற்றிவிடுகிறார்கள். எனவே, குடிநீருக்கு ரயில் வண்டியில் பிடிக்கலாம் என்று ஊர்க்காரர்கள் முடிவு செய்தார்கள். 3 மணிக்கு வரும் பாசஞ்சர் ரயிலில் தண்ணீர்ப் பிடிக்க முடிவு செய்தார்கள். இந்திராவும் மற்ற பெண்களும் ஆளுக்கு இரண்டு , மூன்று குடங்களை எடுத்துக்கொண்டு ஒருவரை ஒருவர் முந்திக் கொண்டு புகைவண்டி நிலையம் நோக்கி ஓடுவார்கள். ஸ்டேசன் மாஸ்டர் எப்பவும் இவர்களைத் திட்டிக்கொண்டே இருப்பார்.

**இந்திராவின் ஆதங்கம்:**

வழக்கம் போல பாசஞ்சர் வண்டி வந்ததும், முட்டி மோதி இந்திராவும் தண்ணீர்ப் பிடிக்க பெட்டியில் ஏறினாள்.தண்ணீர்ப் பிடிப்பதற்குள் இன்ஜின் ஊதல் ஒலி கேட்டது.பிளாட்பாரம் முனை நெருங்கியதும்குதித்துவிடலாம்என்றுநினைத்துமீதிக்குடத்தைநிறைத்துகுதிக்கும்போதுவடக்கத்தியப் பெண், இவள் தற்கொலைக்கு முயல்வதாக நினைத்து பெட்டிக்குள் இந்திராவை இழுத்துவிடுகிறாள். வண்டி வேகமாகச் செல்கின்றது. தண்ணீர்ப் பிடிக்கப் போனவர்கள் எல்லாம் வந்துவிட்டார்கள். வண்டியும் போய்விட்டது.ஐயோ ! இந்திரா வண்டியோட போய்ட்டா என்று அலறி அடித்து அம்மா, ஐயா, சின்னவன், உறவினர், ஊர்க்காரர்கள் எல்லாம் வண்டி பிடித்து இராமநாதபுரம் நிலையத்திற்குச் சென்றார்கள்.இந்திராவின் அம்மா எம்புள்ள எந்த ரயில் தண்டவாளத்தில் கிடக்கிறாளோ? நானும் சாகிறேன் என்று ஓட இந்திரா திட்டிக் கொண்டே குடத்தைத் தூக்கிட்டு வருகிறாள். மகளே இவ்வளவு நடந்தும் இத சுமந்து வரனுமா என்று ஐயா கூற, நாளைக்கு வரைக்கும் தண்ணிக்கு எங்கப் போறது என்றாள் இந்திரா.

**முடிவுரை:**

தண்ணீர் இது கதையல்ல.. எதிர்காலத்தின் பிம்பமாய் உண்மையை எச்சரிக்கை செய்கிறது. தண்ணீரைச் சிக்கனமாகப் பயன்படுத்தி, தண்ணீர்ப் பற்றாக்குறையைக் களைய முயற்சிப்போம்.

## கற்பவை கற்றபின்... பக்கம்: 51

1. **உலகில் நீர் இல்லை என்றால் என்னவெல்லாம் நடக்கும்? கற்பனை செய்து வகுப்பில் பகிர்க.**
   - ◈ பயிர்கள் விளையாது.
   - ◈ விலங்குகள் இறந்துவிடும்.
   - ◈ உணவு கிடைக்காது.
   - ◈ சில நாள் தாக்குப்பிடித்து மனித இனம் அழியும்.
   - ◈ கொலை பெருகும்.
   - ◈ நாடே பாலைவனமாகும்.
   - ◈ தண்ணீர் தேடி வசதி படைத்தவன் பிற கோளுக்கே செல்வான்.

Please Send Your Study Materials to our Email Id: padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.CBSEtips.in



2. பீங் ... பீங்... என்ற சத்தத்துடன் தண்ணீர் வாகனம் ஒன்று வேகமாக வந்து நின்றது. அம்மா குடங்களுடன் ஓடிச் சென்று வரிசையில் நின்றாள். அப்போது கருமேகம் திரண்டது...

கதையை நிறைவு செய்க.

கிடைக்காத அமிழ்தம் கிடைத்தது போல தெருவெல்லாம் மகிழ்ச்சி ஆரவாரம். வீடெல்லாம் காலியாகி தெரு நிரம்பியது மக்கள் வெள்ளத்தால். காலிக் குடங்கள் படகு போல மிதந்து சண்டையிட்டன. தண்ணீர் பிடிக்கும் சண்டை எங்கோ மறைந்து விட்டது. சாதி . மதம் எல்லாம் இன்றி சமத்துவம் பொங்கியது. மாடி வீட்டு மொட்டை மாடி நீரெல்லாம் குற்றாலமாய். நயாகராவாய் கொட்டித் தீர்த்தது. அந்தக் குற்றாலச் சாரலில் நனைந்தது மனிதர்கள் மட்டுமன்றி , மகத்தான பூமித்தாயும் தான்.

oo✧✧✧oo

# இயல் 2 கற்கண்டு

# துணை வினைகள்

## பாடநூல் மதிப்பீட்டு வினா

### 1 பலவுள் தெரிக

1. **பொருத்தமான வினையை எடுத்து எழுதுக.**

கதிர் அலுவலகத்திலிருந்து விரைவாக ________.
அவன் பையன் பள்ளியிலிருந்து இன்னும் ________.

அ) வந்தான், வருகிறான் ஆ) வந்துவிட்டான், வரவில்லை
இ) வந்தான், வருவான் ஈ) வருவான், வரமாட்டான்

**விடை: ஆ) வந்துவிட்டான், வரவில்லை**

## கூடுதல் வினாக்கள்

### 1 பலவுள் தெரிக

1. **தனி வினை, கூட்டு வினை அமைந்த சரியான இணையைத் தேர்ந்தெடுக்க.**

அ) படியுங்கள் - ஆசைப்பட்டேன்
ஆ) தந்தியடி - கண்டுபிடி
இ) ஆணையிடு - கேள்விப்படு

**விடை: அ) படியுங்கள் - ஆசைப்பட்டேன்**

2. **தமிழில் ஏறத்தாழ ________ துணை வினைகள் உள்ளன.**

அ) 45 ஆ) 40 இ) 30 ஈ) 12 **விடை: ஆ) 40**

3. **புத்தகம் மேஜையில் இருக்கிறது - இத்தொடரில் உள்ள வினையடி ________.**

அ) புத்தகம் ஆ) மேஜை இ) இரு ஈ) கிறது **விடை: இ) இரு**

Please Send Your Study Materials to our Email Id: padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.CBSEtips.in



4. முதல் வினை இடம்பெறும் சரியான சொற்றொடரைத் தேர்ந்தெடுக்க.

அ) என்னிடம் பணம் இருக்கிறது. ஆ) அப்பா வந்திருக்கிறார்.
இ) நீ என்னை அழ வைக்காதே. ஈ) அவர் ஒருவரைப் பாட வைத்தார்.

**விடை: அ) என்னிடம் பணம் இருக்கிறது.**

5. 'போ' என்னும் வினையடியை முதல் வினையாக்கிய சரியான சொற்றொடர்

அ) மழை பெய்யப் போகிறது. ஆ) நான் பயந்து போனேன்.
இ) மலிவான விலையில் வாங்கிப்போட்டேன். ஈ) அவன் எங்கே போகிறான்?

**விடை: ஈ) அவன் எங்கே போகிறான்?**

6. தமிழ் மொழியைப் போலவே முதல் வினைகளுக்குப் பின்பு துணைவினைகள் இடம்பெறும் மொழி ________.

அ) தெலுங்கு ஆ) ஜப்பான் இ) ஆப்ரிக்கா ஈ) ஆங்கிலம் **விடை: ஆ) ஜப்பான்**

7. ________ மொழியிலேயே துணைவினைகளின் ஆதிக்கம் அதிகமாக உள்ளது.

அ) பேச்சு ஆ) எழுத்து இ) வட்டார ஈ) கிளை **விடை: அ) பேச்சு**

கோடிட்ட இடத்தை நிரப்புக.

1. வினைச்சொற்களை அமைப்பின் அடிப்படையில் ________ , ________ என இருவகைப்படுத்தலாம். **விடை: தனிவினை, கூட்டுவினை**
2. தனிவினையடிகளைக் கொண்ட வினைச்சொற்கள் ________ என்பர். **விடை: தனிவினை**
3. கூட்டுவினையடிகளைக் கொண்ட வினைச்சொற்கள் ________ என்பர். **விடை: கூட்டுவினை**
4. கூட்டு வினைகளைப் பொதுவாக ________ வகையாக ஆக்கப்படுகின்றன. **விடை: மூன்று**
5. ஒரு கூட்டுவினையின் முதல் உறுப்பாக வந்து தன் அடிப்படைப் பொருளைத் தரும் வினை எனப்படும். **விடை: முதல்வினை**
6. முதல் வினைக்குத் துணையாக வேறு இலக்கணப்பொருளைத் தரும் வினைகள் ________ எனப்படும். **விடை : துணைவினைகள்**

## 2 குறுவினா

1. தனிவினை என்றால் என்ன?

தனிவினையடிகளைக் கொண்ட வினைச்சொற்களைத் தனிவினை என்பர்.

2. கூட்டுவினை என்றால் என்ன?

கூட்டுவினையடிகளைக் கொண்ட வினைச்சொற்களைக் கூட்டு வினை என்பர்.

3. முதல்வினை என்றால் என்ன?

ஒரு கூட்டுவினையின் முதல் உறுப்பாக வந்து தன் அடிப்படைப் பொருளைத் தரும் வினை முதல்வினை எனப்படும்.

Please Send Your Study Materials to our Email Id: padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.CBSEtips.in



4. துணைவினை என்றால் என்ன?

முதல் வினைக்குத் துணையாக வேறு இலக்கணப்பொருளைத் தரும் வினைகள் துணைவினைகள் எனப்படும்.

5. தற்காலத் தமிழில் வழங்கும் துணைவினைகள் சிலவற்றை எழுதுக.

ஆம், ஆயிற்று, இடு, ஒழி, காட்டு, கூடும், கூடாது, கொடு, கொண்டிரு, கொள், செய் முதலியன.

6. இரு – என்ற வினையடியை முதல்வினை, துணைவினையாக மாற்றுக.

முதல்வினை : புத்தகம் மேசையில் இருக்கிறது.

துணைவினை : நான் மதுரைக்குப் போயிருக்கிறேன்.

## கற்பவை கற்றபின்... பக்கம்: 55

1. **பொருத்தமான துணைவினைகளைப் பயன்படுத்துக.**

அ) மனிதனையும் விலங்குகளையும் (வேறு) **வேறுபடுத்துவது** மொழியாகும்.

ஆ) திராவிட மொழிகள் சில, பொதுப்பண்புகளை (பெறு) **பெற்றிருக்கின்றன**.

இ) காலந்தோறும் தன்னைப் (புதுப்பித்து) **புதுப்பித்துக்கொள்ளும்** மொழி தமிழ்.

ஈ) என் ஐயத்தைக் கேட்பதற்கு எவரேனும் கிடைக்கமாட்டார்களா என்று (தேடு) **தேடிக்கொண்டிருக்கிறேன்**.

2. **கீழ்க்காணும் துணைவினைகளைப் பயன்படுத்திப் புதிய தொடர்களை எழதுக.**

**அ) வேண்டும் ஆ) பார் இ) உள் ஈ) வா உ) விடு**

அ) ஆசிரியர் கூறும் அறிவுரையைக் கேட்க **வேண்டும்**.

ஆ) தந்தை சொன்னது சரியா தவறா எண்ணிப்**பார்**.

இ) மனதில் **உள்**ளதைச் சொல்க.

ஈ) நேரில் **வா** பேசிக்கொள்வோம்.

உ) தீய பழக்கங்களை விட்டு **விடு**.

3. **பிறமொழிச் சொற்களைப் பயன்படுத்துகையில் துணை வினைகளைச் சேர்க்கிறோம். பிறமொழிச் சொற்களைத் தமிழ்ச் சொற்களாக மாற்றி, ஏற்ற துணை வினைகளை இட்டு எழுதுக.**

**மார்னிங் எழுந்து, பிரஷ் பண்ணி, யூனிஃபார்ம் போட்டு ஸ்கூலுக்குப் போனாள்.**

◈ காலையில் எழுந்துவிட்டாள்.

◈ பல் துலக்கி முடித்தாள்.

◈ சீருடை அணிந்து கொண்டாள்.

◈ பள்ளிக்குப் புறப்பட்டுப் போனாள்.

Please Send Your Study Materials to our Email Id: padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.CBSEtips.in



**4. சிந்தனை வினா.**

**அ) வேற்றுமொழிச் சொற்களைப் பயன்படுத்துகையில் துணைவினைகளின் பங்கு குறித்துச் சிந்தித்து எழுதுக.**

| வேற்றுமொழிச் சொற்கள் | துணைவினை |
|---|---|
| பேனாவை யூஸ் பண்ணு. | பேனாவைப் பயன்படுத்து. |
| காம்படிசனில் பாயின்ட்ஸை மிஸ் பண்ணாமல் பேசு. | போட்டியில் பேச்சுக்கான குறிப்புகளைத் தவறவிடாமல் பேசு. |
| கிளாஸ் மிஸ்கிட்ட டிஸ்கஸ் பண்ணி முடிவு சொல்கிறேன். | வகுப்பு ஆசிரியரிடம் கலந்துபேசி முடிவுவைச் சொல்கிறேன். |
| காம்படிசனுக்கான பிப்பிக்கை அப்பாவிடம் கன்ஸ்ல்ட் பண்ணி கட்டுரை எழுதிவருகிறேன். | போட்டிக்கான தலைப்பை அப்பாவிடம் கலந்து ஆலோசனை செய்து விட்டுக் கட்டுரை எழுதிவருகிறேன். |
| வாட்டரை வேஸ்ட் பண்ணாதே. | குடிநீரைச் சிக்கனமாகப் பயன்படுத்து. |

**ஆ) சந்தையில் காய்கறிகளை வாங்கும்போது உங்களுக்கும் கடைக்காரருக்கும் நடக்கும் உரையாடலைத் துணைவினைகளைப் பயன்படுத்தி எழுதுக.**

கடைக்காரர் : வாங்க ..... நாலுநாளா வரல.

நான் : திருச்சி **போயிருந்தேன்.**

கடைக்காரர் : போனவாரம் அம்மா **வந்திருந்தாங்க.**

நான் : வெங்காயம் என்ன விலை?

கடைக்காரர் : 50 ரூபா.

நான் : வேணாம். நேற்று சந்தைக்குப் போய் 5 கிலோ **வாங்கிப் போட்டேன்.** அடுத்தவாரம் வாங்கிக்கிறேன்.

கடைக்காரர் : நீங்க 280 ரூபாய்க்கு வாங்கியிருக்கீங்க. (பணம் பெற்றுக் கொண்டவுடன்) (2000ரூபாய் நோட்டை வாங்கிக்கொண்டு)

நான் : பக்கத்துக் கடையிலே **வாங்கிக் கொடுங்க.**

கடைக்காரர் : இருங்க, வாங்கி **வரச்சொல்கிறேன்.**

## மொழியை ஆழ்வோம்

**இணையான தமிழ்ப் பழமொழிகளை எழுதுக.** பக்கம்: 58

1. Every flower is a Soul blossoming in nature. - Gerard De Nerval

**மொழி பெயர்க்க** : எல்லாப் பூக்களும் இயற்கையில் உயிருடன் இருக்கிறது.
**பழமொழி** : மாற்றான் தோட்டத்து மல்லிகைக்கும் மணம் உண்டு.

2. Sunset is still my favourite colour, and rainbow is second. - Mattie Stepanek

**மொழி பெயர்க்க** : சூரிய அஸ்தமனமே முதலில் எனக்குப் பிடித்த வண்ணம், வானவில்லின் வண்ணம் அடுத்த நிலை தான்
**பழமொழி** : தோல்வியே வெற்றிக்கு அடிப்படை
(அ) ஒன்றன மறைவில் இருந்தே புதியன தோன்றும்

Please Send Your Study Materials to our Email Id: padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.CBSEtips.in



3. An early morning walk is a blessing for the whole day - Henry David Thoreau

**மொழி பெயர்க்க** : அதிகாலை நடைப்பயிற்சி அந்நாளுக்கே ஒரு வரமாகும்.

**பழமொழி** : நன்றாய்த் தொடங்கும் செயல் நன்றாகவே முடியும்.
(அ) சிறந்த தொடக்கமே வெற்றிக்கு அடிப்படை.

4. Just living is not enough .... one must have sunshine, freedom and a little flower - Hans Christian Anderson

**மொழி பெயர்க்க** : வெறுமையான வாழ்வு மட்டும் போதாது. ஒவ்வொருவருக் குள்ளும் ஒளி, ஆற்றல், விடுதலை மலர் என இருத்தல் வேண்டும்.

**பழமொழி** : இலட்சியமுள்ள வாழ்வே சிறந்த வாழ்வாகும், வெறும் வாழ்வு வீணே.

**பிழை நீக்கி எழுதுக.**

1. **சர்ஆர்தர் காட்டன் கல்லணையின் கட்டுமான உத்திகொண்டுதான் தௌலீஸ்வரம் அணையைக் கட்டியது.**
சர் ஆர்தர் காட்டன் கல்லணையின் கட்டுமான உத்திகொண்டுதான் தௌலீஸ்வரம் அணையைக் **கட்டினார்**.

2. **மதியழகன் தீக்காயம் ஏற்பட்ட இடத்தில் உடனடியாகத் தண்ணீர் கொண்டு குளிர வைத்தாள்.**
மதியழகன் தீக்காயம் ஏற்பட்ட இடத்தில் உடனடியாகத் தண்ணீர் கொண்டு குளிர **வைத்தான்**.

3. **மழையே பயிர்க்கூட்டமும் உயிர்க்கூட்டமும் வாழப் பெருந்துணை புரிகின்றன:**
மழையே பயிர்க்கூட்டமும் உயிர்க்கூட்டமும் வாழப் பெருந்துணை **புரிகின்றது**.

4. **நீலனும் மாலனும் அவசர காலத் தொடர்புக்கான தொலைபேசி எண்களின் பட்டியலை வைத்திருக்கிறோம்.**
நீலனும் மாலனும் அவசரகாலத் தொடர்புக்கான தொலைபேசி எண்களின் பட்டியலை **வைத்திருக்கிறார்கள்.**

5. **சூறாவளியின் போது மேல்மாடியில் தங்காமல் தரைத் தளத்திலேயே தங்கியதால் தப்பிப்பான்.**
சூறாவளியின் போது மேல் மாடியில் தங்காமல் தரைத் தளத்திலேயே தங்கியதால் **தப்பித்தனர்**.

**பழமொழிகளைப் பயன்படுத்திச் சொற்றொடர் அமைக்க.**

1. **நெல்லுக்குப் பாய்கிற தண்ணீர் புல்லுக்குப் பாய்வது போல.**
நெல்லுக்குப் பாய்கிற தண்ணீர் புல்லுக்குப் பாய்வது போல நல்லார் சொன்ன அறிவுரை தீயவர்க்கும் போய்ச் சேர்ந்தது.

2. **தண்ணீர் வெந்நீர் ஆனாலும் நெருப்பை அணைக்கும்.**
நெடுஞ்சாலையில் அடிபட்டுக்கிடந்தவரை வயலில் வேலை பார்த்துக் கொண்டிருந்தவர் காப்பாற்றியது தண்ணீர் வெந்நீர் ஆனாலும் நெருப்பை அணைக்கும் எனத் தெரிந்து கொண்டேன்.

3. **மெல்லப் பாயும் தண்ணீர் கல்லையும் கரைக்கும்.**
அப்பா கூறிய அறிவுரை மூர்க்கத்தனமாகச் செயல்பட்ட என் அண்ணனையும் மெல்லப் பாயும் தண்ணீர் கல்லையும் கரைக்கும் எனத் திருத்தியது.

Please Send Your Study Materials to our Email Id: padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.CBSEtips.in



**4. கிணற்றுத் தண்ணீரை வெள்ளம் கொண்டு போகாது.**

தேர்வை முடித்துவிட்டு கிரிக்கெட் போட்டிக்குச் செல்லலாம் என்று அப்பா சொன்னதைக் கேட்டு கிணற்றுத் தண்ணீரை வெள்ளம் கொண்டு போகாது எனப் புரிந்து கொண்டேன்.

**வடிவ மாற்றம் செய்க.**

**நீர்ச்சுழற்சி குறித்த கருத்து விளக்கப்படத்தின் உட்பொருளைப் புரிந்துணர்ந்து பத்தியாக மாற்றி அமைக்க**




**நீர்ச்சுழற்சி**

மேற்காணும் படத்தில் உள்ளது போல, வாயு மண்டலத்தில் உள்ள நீர், பனி மற்றும் உறை பனியில் உள்ள நீர் சூரிய வெப்பத்தால் ஆவியாகி, பின் குளிர்ந்த காற்றால் மேகமாகி மழைபொழிந்து நிலத்தை அடைந்து. கடல், ஆறு, நிலத்தடி நீர் இவற்றைப் பெருக்குகிறது. பின்னர் மீண்டும் கடல், ஆறு, தரையில் உள்ள நீர் நிலைகள், நிலத்தடி நீர் ஆகியவை சூரிய ஒளியால் ஆவியாக்கப் படுகிறது. ஆவியான நீர்த்திவலைகள் மேகமாகி, குளிர்ந்து மீண்டும் மழையாகி நிலத்தைக் குளிரச் செய்து வளமுடைய தாக்குகிறது. மீண்டும் ....... இதுவே இப்படம் விளக்குடம் நீர்ச் சுழற்சி ஆகும்.

பக்கம்: 59

வரவேற்பு மடல்.

**சுற்றுச்சூழலைப் பேணிக் காக்கும் பள்ளிகளின் வரிசையில் மாவட்டத்திலேயே உங்கள் பள்ளி தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளது. அதனைக் கொண்டாடும் விழாவில் கலந்து கொள்ளும் மாவட்டக் கல்வி அலுவலருக்கு வரவேற்பு மடல் ஒன்றை வரைக.**

மாவட்டக் கல்வி அலுவலர்க்கு வாசித்து அளிக்கும் வரவேற்பு மடல்

**மூதறிஞரே! தமிழ் அறிஞரே!**

அன்பின் உருவமே! அறிவின் ஊற்றே! பண்பின் சிகரமே! எளிமையின் வடிவமே! எளிமையுடன் பழகும் பண்பாளரே! அனுபவம் சான்ற மூதறிஞரே! தமிழ்மீது பற்று கொண்ட தமிழ் அறிஞரே! தங்கள் வருகையால் பெருமிதம் அடைகின்றோம். இன்முகத்துடன் தங்களை வருக! வருக! என வரவேற்கிறோம்.

**தமிழ் நாவலரே! சொல்லின் செல்வரே!**

கேட்காதவரையும் கேட்க வைக்கும் இனிமையும் நகைச்சுவையும் கொண்ட பேச்சாற்றல் மிக்க தமிழ் நாவலரே! எழுத்தாற்றல் மிக்க சொல்லின் செல்வரே! தங்களை வரவேற்பதில் பெருமகிழ்ச்சி அடைகின்றோம்.

Please Send Your Study Materials to our Email Id: padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.CBSEtips.in



**கடமை தவறாதவரே! நேர்மையானவரே!**

காலம் தவறாமல் பணிக்கு வந்து கடமை தவறாதவரே! உங்களை வாழ்த்தி வரவேற்கின்றோம். உண்மையே ஒருவரை உயர்த்தும் என்பதற்குச் சான்றான நேர்மையானவரே! உங்களை வருக! வருக என வாழ்த்தி வரவேற்கிறோம்.

நாள் : இவண்,

இடம் : சேலம் இலக்கிய மன்றச்செயலர்.

## நயம் பாராட்டுக.

**கல்லும் மலையும் குதித்துவந்தேன் - பெருங்**
**காடும் செடியும் கடந்துவந்தேன்**
**எல்லை விரிந்த சமவெளி - எங்கும்நான்**
**இறங்கித் தவழ்ந்து தவழ்ந்துவந்தேன்.**
**ஏறாத மேடுகள் ஏறிவந்தேன் - பல**
**ஏரி குளங்கள் நிரப்பிவந்தேன்**
**ஊறாத ஊற்றிலும் உட்புகுந்தேன் - மணல்**
**ஓடைகள் பொங்கிட ஓடிவந்தேன்.** -கவிமணி

### திரண்ட கருத்து:

காடு, மலை குதித்து வந்தேன். காடும் செடியும் கடந்து வந்தேன். சமவெளி எங்கும் தவழ்ந்த வந்தேன். மேடுகள் ஏறி, பல ஏரி குளங்கள் நிரப்பி வந்தேன். ஊறாத ஊற்றிலும் உட்புகுந்து, மணல் ஓடைகள் பொங்கிட ஓடி வந்தேன்.

### மோனை நயம்:

பாடலின் அடி அல்லது சீரில் முதல் எழுத்து ஒரே மாதிரியாக வருவது மோனை.

கல்லும் - கடந்து, எல்லை - எங்கும்நான்

### எதுகை நயம்:

பாடலின் அடி அல்லது சீரில் இரண்டாவது எழுத்து ஒரே மாதிரியாக வருவது எதுகை.

கல்லும் - எல்லை, ஏறாத - ஏறி (றகரம்)

### அணிநயம்:

இப்பாடலில் 'வந்தேன்' என்ற சொல் மீண்டும் வந்து வருதல் ஒரே பொருளைத் தந்து சொற்பொருட் பின்வருநிலை அணியாகப் பயின்று வந்துள்ளது.

### சந்த நயம்:

**நாட்டுப் புறச் சிந்து** இராகத்தில் இப்பாடலைப் பாடலாம்.

### சுவை நயம்:

இப்பாடலில் **பெருமிதச் சுவை** பயின்றுள்ளது.

Please Send Your Study Materials to our Email Id: padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.CBSEtips.in



## மொழியோடு விளையாடு

### சொல்லுக்குள் சொல் தேடுக.

எ.கா : ஆற்றங்கரையோரம் - ஆறு / கரை / ஓரம்

அ) **கடையெழுவள்ளல்கள்** - கடை / எழு / வள்ளல்

ஆ) **எடுப்பார் கைப்பிள்ளை** - எடுப்பார் / கை / பிள்ளை

இ) **தமிழ்விடு தூது** - தமிழ் / விடு / தூது

ஈ) **பாய்மரக்கப்பல்** - பாய் / மரம் /கப்பல்

உ) **எட்டுக்கால்பூச்சி** - எட்டு / கால் / பூச்சி

### அகராதியில் காண்க.

| சொல் | | பொருள் |
|---|---|---|
| **கந்தி** | - | கந்தகம், கழுகு, தவப்பெண், வாசம். |
| **நெடில்** | - | நெட்டெழுத்து, மூங்கில். |
| **பாலி** | - | அணை, ஆலமரம், எல்லை, ஒரு பாஷை, பாற்பசு, செம்பருத்தி, கறை. |
| **மகி** | - | பூமி, பசு. |
| **கம்புள்** | - | கம்பங்கோழி, சங்கு, வானம்பாடி. |
| **கைச்சாத்து** | - | கையெழுத்து, பொருள்பட்டி. |

### சொற்களை இணைத்துத் தொடர்களை விரிவுபடுத்துக :

பக்கம்: 60

எ.கா : அரிசி போடுகிறேன்.

விடை : புறாவுக்கு அரிசி போடுகிறேன்.
காலையில் புறாவுக்கு அரிசி போடுகிறேன்.
நாள்தோறும் காலையில் புறாவுக்கு அரிசி போடுகிறேன்.
நான் நாள்தோறும் காலையில் புறாவுக்கு அரிசி போடுகிறேன்.
நான் நாள்தோறும் காலையில் மறக்காமல் புறாவுக்கு அரிசி போடுகிறேன்.
நான் நாள்தோறும் காலையில் ஒருபோதும் மறக்காமல் புறாவுக்கு அரிசி போடுகிறேன்.

1. **மழை பெய்தது.**
மாலையில் மழை பெய்தது.
நேற்று மாலையில் மழை பெய்தது.
நாள்தோறும் மாலையில் மழை பெய்தது.
நாள்தோறும் மாலையில் விடாமல் மழை பெய்தது.
நாள்தோறும் மாலையில் விடாமல் தொடர்ந்து மழை பெய்தது.
நாள்தோறும் மாலையில் தவறாமல் மழை பெய்தது.

2. **வானவில்லைப் பார்த்தேன்.**
மாலையில் வானவில்லைப் பார்த்தேன்.
மாலையில் மழைபெய்யும்போது வானவில்லைப் பார்த்தேன்.
நான் மாலையில் மழைபெய்யும் போது வானவில்லைப் பார்த்தேன்.
நான் மாலையில் மழைபெய்யும் போது கிழக்குப் பக்கம் வானவில் பார்த்தேன்.
நான் நாள்தோறும் மாலையில் மழைபெய்யும் போது கிழக்குப் பக்கம் வானவில் பார்த்தேன்.

Please Send Your Study Materials to our Email Id: padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.CBSEtips.in



நான் நாள்தோறும் மாலையில் மறக்காமல் மழைபெய்யும் போது கிழக்குப் பக்கம் வானவில் பார்த்தேன்.

**3. குழந்தை சிரித்தது.**

தொட்டிலில் குழந்தை சிரித்தது.
தொட்டிலில் அழுத குழந்தை சிரித்தது.
அம்மாவைப் பார்த்தது அழுத குழந்தை சிரித்தது
அழுத குழந்தை அம்மாவைப் பார்த்து பார்த்து சிரித்தது.
அழுத குழந்தை அம்மாவைப் பார்த்து மேலும் பொக்கைவாய் திறந்து சிரித்தது.
அழுத குழந்தை தொட்டிலை நீக்கிப் பார்த்துச் சிரித்தது.

**4. எறும்புகள் போகின்றன.**

எறும்புகள் போகின்றன.
எறும்புகள் வரிசையாகப் போகின்றன
எறும்புகள் வரிசையாகக் கல்லில் போகின்றன
எறும்புகள் வரிசையாகப் புற்றுக்குள் போகின்றன
சர்க்கரையை நோக்கி வரிசையாகப் போகின்றன
அடுக்கில் உள்ள சர்க்கரையை நோக்கி எறும்புகள் போகின்றன.

**5. படம் வரைந்தான்.**

படம் வரைந்தான்.
அவன் அழகாக வரைந்தான்.
விலங்குகளின் படங்களை வரைந்தான்.
இயற்கையைப் படம் வரைந்தான்.
இயற்கை மரங்களைப் படமாக வரைந்தான்.
படிக்கும் பறவைகளைப் படமாக வரைந்தான்.

**வேறுபட்ட வினையெச்சங்களைப் பயன்படுத்தி, முதல்வினைகளைத் துணைவினைகளாக மாற்றுக :**

**முதல்வினைகள் - பார்த்தேன், கொடுத்தார், நடந்தான், சேர்ந்தார், அமைத்தோம்.**
**எ.கா : பார்த்தேன்**




1. எழுதிப் பார்த்தேன்
2. தடுக்கப் பார்த்தேன்
3. கொடுத்துப் பார்த்தேன்
4. ஓடப் பார்த்தேன்

**அ. கொடுத்தார்**




1. எழுதிக் கொடுத்தார்
2. படிக்கக் கொடுத்தார்
3. வாங்கிக் கொடுத்தார்
4. பார்த்துக் கொடுத்தார்

Please Send Your Study Materials to our Email Id: padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.CBSEtips.in



**ஆ. நடந்தான்**




1. பார்த்து நடந்தான்
2. கேட்டு நடந்தான்
3. வாங்கி நடந்தான்
4. சிரித்து நடந்தான்

**இ. சேர்ந்தார்**




1. வந்து சேர்ந்தார்
2. போய்ச் சேர்ந்தார்
3. நடந்து சேர்ந்தார்
4. ஓய்ந்து சேர்ந்தார்

**ஈ. அமைத்தோம்**




1. பார்த்து அமைத்தோம்
2. கண்டு அமைத்தோம்
3. கேட்டு அமைத்தோம்
4. சேர்த்து அமைத்தோம்

**வினையடிகளை முதல்வினையாகவும் துணைவினையாகவும் அமைந்த தொடர்களாக உருவாக்குக.**

**வினையடி - வா, போ, செய், மாற்று, இரு, கொடு, கொள், எழுது, விடு, போடு.**

**எ.கா : வினையடி - வை**

| முதல்வினை | துணைவினை |
|---|---|
| மூட்டையைத் தலையில் **வைத்தான்.** | அம்மா குழந்தையைத் தூங்க **வைத்தார்.** |
| இலையில் இனிப்பை **வைத்தனர்.** | நான் உனக்கு ஒரு நூல் வாங்கி **வைத்தேன்.** |

| வ.எண் | வினையடி | முதல்வினை | துணைவினை |
|---|---|---|---|
| 1. | வா | நீ நாளைக்கு வீட்டுக்கு **வா.** | ஆங்கிலேயர் நம்மை ஆண்டு **வந்தனர்.** |
| 2. | போ | நான் நூலகத்துக்குப் **போனேன்.** | நான் பயந்து **போனேன்.** |
| 3. | செய் | அவன் அதைச் **செய்தான்.** | அவன் அதைச் **செய்ய வைத்தான்.** |
| 4. | மாற்று | அவன் கடையை **மாற்றினான்.** | அவன் கடையை **மாற்றச் செய்தான்.** |
| 5. | இரு | நான் தனியாக **இருந்தேன்.** | அவனைத் தனியாக **இருக்கச் செய்தேன்.** |
| 6. | கொடு | அவள் **கொடுத்தாள்.** | அவளுக்குக் **கொடுக்கச் செய்தான்.** |

Please Send Your Study Materials to our Email Id: padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.CBSEtips.in



| வ.எண் | வினையடி | முதல்வினை | துணைவினை |
|---|---|---|---|
| 7. | கொள் | நீ அதைக் **கொள்.** | அவன் அதை ஏற்றுக் **கொள்ளட்டும்.** |
| 8. | எழுது | மாறன் **எழுதினான்.** | நான் அவனை **எழுதச் செய்தேன்.** |
| 9. | விடு | யாரையும் உள்ளே **விடாதே.** | அப்பா இனி வந்து**விடுவார்.** |
| 10. | போடு | தொப்பியைக் கீழே **போடு.** | சாப்பிட்டவுடன் இலையைச் சுருட்டிப் **போட வேண்டும்.** |

காட்சி கண்டு கவினுறு எழுதுக.



**தன்னம்பிக்கை**

சுறு சுறுப்பாய் இயங்கி
சுறுசுறுப்பைக் கற்றுக்கொடுத்தாய் நீ!
மழைக்காலம் வருவதற்கு முன்பே
எதிர்காலத்தை நினைத்து சேமித்து வைப்பாய்
சேமிக்கும் பழக்கத்தைக் கற்றுக் கொடுத்தாய் நீ!
இப்போது மலைமீது கம்பீரமாய் நின்று
அதிக பளுவைத் தூக்கி
முயற்சி திருவினையாக்கும் என்ற
வான்மறையை நினைக்க வைத்திருக்கிறாய்!

## கலைச்சொல் அறிவோம்

| | | |
|---|---|---|
| Conical Stone | - | குமிழிக் கல் |
| Water Management | - | நீர் மேலாண்மை |
| Irrigation Technology | - | பாசனத்தொழில் நுட்பம் |
| Tropical Zone | - | வெப்ப மண்டலம் |

Please Send Your Study Materials to our Email Id: padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.CBSEtips.in



# இயல் 3 உரைநடை உலகம்

# ஏறு தழுவுதல்

## பாடநூல் மதிப்பீட்டு வினா

### 1 பலவுள் தெரிக

1. **பொருந்தாத இணை எது?**

அ) ஏறுகோள் - எருதுகட்டி ஆ) திருவாரூர் - கரிக்கையூர்

இ) ஆதிச்சநல்லூர் - அரிக்கமேடு ஈ) பட்டிமன்றம் - பட்டிமண்டபம்

**விடை: ஆ) திருவாரூர் - கரிக்கையூர்**

2. **முறையான தொடர் அமைப்பினைக் குறிப்பிடுக.**

அ) தமிழர்களின் வீரவிளையாட்டு தொன்மையான ஏறுதழுவுதல்.

ஆ) தமிழர்களின் வீரவிளையாட்டு ஏறுதழுவுதல் தொன்மையான.

இ) தொன்மையான வீரவிளையாட்டு தமிழர்களின் ஏறுதழுவுதல்.

ஈ) தமிழர்களின் தொன்மையான வீரவிளையாட்டு ஏறுதழுவுதல்.

**விடை: ஈ) தமிழர்களின் தொன்மையான வீரவிளையாட்டு ஏறுதழுவுதல்.**

3. **சொற்றொடர்களை முறைப்படுத்துக.**

அ) ஏறுதழுவுதல் என்பதை

ஆ) தமிழ் அகராதி

இ) தழுவிப்பிடித்தல் என்கிறது.

1) ஆ-அ-இ 2) ஆ-இ-அ 3) இ-ஆ-அ 4) இ-அ-ஆ

**விடை: 1) ஆ-அ-இ**

### 2 குறுவினா

1. **நீங்கள் வாழும் பகுதியில் ஏறுதழுவுதல் எவ்வாறெல்லாம் அழைக்கப்படுகின்றது?**

ஜல்லிக்கட்டு, மாடு பிடித்தல், மஞ்சுவிரட்டு.

2. **ஏறுதழுவதல் நிகழ்விற்கு இலக்கியங்கள் காட்டும் வேறுபெயர்களைக் குறிப்பிடுக.**

ஏறுகோள், எருதுகட்டி.

3. **ஏறுதழுவுதல் குறித்துத் தொல்லியல் சான்றுகள் கிடைத்த இடங்களைப் பட்டியலிடுக.**

- சேலம்
- தேனி - சித்திரக்கல் புடவு
- நீலகிரி - கரிக்கையூர்
- சிந்துவெளி அகழாய்வு
- மதுரை - கல்லூத்து மேட்டுப்பட்டி

Please Send Your Study Materials to our Email Id: padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.CBSEtips.in



## 3 சிறுவினா

1. **வேளாண் உற்பத்தியின் பண்பாட்டு அடையாள நீட்சியை விளக்குக.**
   - ஏறுதழுவுதல் முல்லை மக்களின் அடையாளம் ஆகும்.
   - மருத நில வேளாண் மக்களின் தொழில் உற்பத்தியோடும், பாலை நிலத்து மக்களின் தேவைக்கான போக்குவரத்துத் தொழிலோடும் பிணைந்துள்ளது.
   - இதுவே வேளாண் உற்பத்தியின் பண்பாட்டு அடையாளமாக நீட்சி அடைந்தது.

2. **ஏறுதழுவுதல் எங்ஙனம் திணைநிலை வாழ்வுடன் எவ்விதம் பிணைந்துள்ளது?**
   - ஏறுதழுவுதல் முல்லை மக்களின் அடையாளம் ஆகும்.
   - மருதநில வேளாண் மக்களின் தொழில் உற்பத்தியோடும், பாலை நிலத்து மக்களின் தேவைக்கான போக்குவரத்துத் தொழிலோடும் பிணைந்துள்ளது.
   - ஏறுதழுவுதல் இங்ஙனம் திணைநிலை வாழ்வுடன் பிணைந்துள்ளதை அறியலாம்.

## 4 நெடுவினா

1. **ஏறுதழுவுதல் தமிழரின் அறச்செயல் என்று போற்றப்படுவதக் காரணங்களை விவரிக்க.**
   - ஸ்பெயின் காளைச் சண்டையைத் தேசிய விளையாட்டாகக் கொண்டுள்ளது.
   - காளையைக் கொன்று அடக்குபவனே வீரன்.
   - அதில் ஆயுதங்களைப் பயன்படுத்துவதும் உண்டு.
   - வென்றாலும் தோற்றாலும் போட்டியின் முடிவில் காளையைச் சில நாடுகளில் கொல்வதும் உண்டு.
   - இவை வன்மத்தையும் போர்வெறியையும் வெளிப்படுத்துவதாகவே உள்ளது.
   - ஆனால், தமிழகத்தில் ஏறுதழுவுதலில் ஆயுதத்தைப் பயன்படுத்தக் கூடாது.
   - நிகழ்வின் தொடக்கத்திலும் முடிவிலும் காளைக்கு வழிபாடு செய்வர்.
   - எவரும் அடக்க முடியாத காளைகள் கூட வெற்றி பெற்றதாக அறிவிப்பர்.
   - அன்பையும் வீரத்தையும் ஒன்றாக வளர்த்தெடுக்கும் இவ்விளையாட்டில் காளையை அரவணைத்து அடக்குபவரே வீரராகப் போற்றப்படுவர்.

2. **பண்பாட்டுக் கூறுகளைப் பேணிப்பாதுகாக்க நாம் செய்ய வேண்டிய செயல்களைத் தொகுத்து எழுதுக.**
   - ஏறுதழுவுதல் விலங்குகளை முன்னிலைப்படுத்தும் வழிபாட்டுபாட்டையும் இயற்கை வேளாண்மையையும் வலியுறுத்தும் பண்பாட்டுக் குறியீடு ஆகும்.
   - நம் முன்னோர்களின் இத்தகைய பண்பாட்டுக் கூறுகளைப் பேணிப் பாதுகாக்க நாம் ஏறுதழுவுதல் நிகழ்வைக் காணவும், ஏறுகளைப் பேணவும் நாம் உறுதி கொள்ள வேண்டும்.
   - மாட்டுப்பொங்கல் விழாவைப் பெரிய நிகழ்வாகக் கொண்டாட வேண்டும்.
   - நமது கலை, பண்பாட்டு நிகழ்வுகளை ஆண்டுதோறும் விழாவாகக் கொண்டாட வேண்டும்.
   - குழந்தைகளுக்கு நமது பண்பாடுகளையும் வீர விளையாட்டுகளையும் சொல்லிக் கொடுக்க வேண்டும்.

Please Send Your Study Materials to our Email Id: padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.CBSEtips.in



## கூடுதல் வினா

### 1 பலவுள் தெரிக

1. கீழ்க்கண்டவற்றுள் இலக்கியம் சாராத 'ஏறுதழுவுதல்' பற்றிக் கூறும் நூலைக் கண்டறிக.

அ) கலித்தொகை ஆ) சிலப்பதிகாரம்
இ) புறப்பொருள் வெண்பாமாலை ஈ) கண்ணுடையம்மன் பள்ளு

**விடை: இ) புறப்பொருள் வெண்பாமாலை**

2. மருதநில போர் வீரர்களைப் போன்றிருந்தது எது?

அ) காளைகள் ஆ) நடுகல்
இ) ஓவியங்கள் ஈ) இவற்றுள் எதுவுமில்லை **விடை: அ) காளைகள்**

3. பொருந்தாத இணையைக் கண்டறிக.

அ) கலித்தொகை - காளை
ஆ) சிலப்பதிகாரம் - ஏறுகோள்
இ) புறப்பொருள் வெண்பாமாலை - ஏறுகோள்
ஈ) கண்ணுடையம்மன் பள்ளு - ஏறு கட்டி

**விடை: ஈ) கண்ணுடையம்மன் பள்ளு - ஏறு கட்டி**

4. பொருத்துக

1. சிலப்பதிகாரம் - அ) எருது விளையாடி மரணமுற்றவன்
2. கண்ணுடையம்மன் பள்ளு - ஆ) ஏறுகோள்
3. கலித்தொகை - இ) எருது கட்டி
4. சங்கன் - ஈ) ஏறுதழுவுதல் களம்

அ) 1-ஆ 2-இ 3-ஈ 4-அ ஆ) 1-ஈ 2-இ 3-ஆ 4-அ
இ) 1-ஆ 2-அ 3-ஈ 4-இ ஈ) 1-ஆ 2-ஈ 3-இ 4-அ

**விடை : அ) 1-ஆ 2-இ 3-ஈ 4-அ**

5. சொற்றொடர்களை முறைப்படுத்துக.

1. காளை முக்கியப்பங்கு
2. சிந்துவெளி நாகரிக வரலாற்றிலும்
3. வகிக்கின்றது.

அ) 2, 1, 3 ஆ) 1, 2, 3 இ) 3, 1, 2

**விடை: அ) 2, 1, 3**

6. சரியான சொற்றொடரைத் தேர்ந்தெடுக்க.

அ) நம் முன்னோர்களின் பண்பாட்டுக் கூறுகளைப் பேணிப் பாதுகாப்பது நம் கடமையாகும்.
ஆ) பண்பாட்டுக் கூறுகளைப் பேணிப் பாதுகாப்பது நம் முன்னோர்களின் நம் கடமையாகும்.
இ) நம் முன்னோர்களின் பண்பாட்டுக் கூறுகளை நம் கடமையாகும் பேணிப் பாதுகாப்பது.
ஈ) நம் முன்னோர்களின் நம் பண்பாட்டுக் கூறுகளைப் பேணிப் பாதுகாப்பது; கடமையாகும்.

**விடை: அ) நம் முன்னோர்களின் பண்பாட்டுக் கூறுகளைப் பேணிப் பாதுகாப்பது நம் கடமையாகும்.**

Please Send Your Study Materials to our Email Id: padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.CBSEtips.in



7. **வேறுபட்ட சொல்லைக் கண்டறிக.**

அ) ஏர் மாடுகள் ஆ) எருதுகள்
இ) ஏறுதழுவுதல் ஈ) ஏறுகள் **விடை: இ) ஏறுதழுவுதல்**

8. **வேறுபட்ட சொல்லைக் கண்டறிக.**

அ) மஞ்சு விரட்டு ஆ) சல்லிக் கட்டு
இ) ஏறுதழுவுதல் ஈ) ஏறுகள் **விடை: ஈ) ஏறுகள்**

9. **ஏறுகள் பயன்பாடு இடம் பெறாத அகத்திணைகள் எவை?**

அ) குறிஞ்சி,நெய்தல் ஆ) முல்லை, மருதம்
இ) முல்லை, பாலை ஈ) இவற்றுள் எதுவுமில்லை

**விடை: அ) குறிஞ்சி, நெய்தல்**

**கோடிட்ட இடத்தை நிரப்புக.**

1. வீரத்திற்கும் விளைச்சலுக்கும் செழிப்பிற்கும் செல்வத்திற்கும் தமிழர்களால் அடையாளப்படுத்தப்படுபவை _______ **விடை: மாடுகள்**
2. தமிழர்களின் நாகரிகத்தை உணர்த்தும் விளையாட்டு_______ **விடை: ஏறுதழுவுதல்**
3. நூற்றாண்டுகள் பல கடந்தும் தமிழர்தம் அடையாளமாகவே நிறுவப்பட்டிருப்பது_______ **விடை: ஏறுதழுவுதல்**
4. பண்பாட்டுத்தொன்மையும் இலக்கிய வளமையும் வாய்ந்தது _______ வரலாறு. **விடை: தமிழர்**
5. கலித்தொகையில் _______ கலியில் ஏறுதழுவுதல் பற்றிய செய்திகள் இடம்பெறுகின்றன. **விடை: முல்லை**
6. ஏறுதழுவுதல் பற்றிக் கூறும் சிற்றிலக்கியம் _______ **விடை: கண்ணுடையம்மன் பள்ளு**
7. ஏறுதழுவுதல் குறித்த பல _____, _____ தமிழகத்தில் பல்வேறு பகுதிகளில் கண்டறியப்பட்டுள்ளன. **விடை:நடுகற்கள், புடைப்புச்சிற்பங்கள்**
8. மாடுகளைப் போற்றி மகிழ்விக்க ஏற்படுத்திய விழா _______. **விடை: மாட்டுப்பொங்கல்**
9. சல்லிக்கட்டு பேச்சு வழக்கில் திரிபுற்று , _______ என அழைக்கப்படுகின்றது. **விடை: ஜல்லிக்கட்டு**
10. சல்லி என்பது மாட்டின் கழுத்தில் கட்டப்படுகின்ற _______ குறிக்கும். **விடை: வளையத்தினைக்**
11. தமிழக ஏறுதழுவுதலில் அடக்குபவர் எந்த _______ பயன்படுத்தக் கூடாது. **விடை: ஆயுதத்தையும்**
12. காளைச் சண்டையைத் தேசிய விளையாட்டாகக் கொண்ட நாடு _______ **விடை: ஸ்பெயின்**

## 2 குறுவினா

1. **ஏறுதழுவுதல் (ஏறுகோள்) பற்றி எடுத்துரைக்கும் இலக்கியங்கள் யாவை?**

◈ கலித்தொகை
◈ புறப்பொருள் வெண்பாமாலை
◈ சிலப்பதிகாரம்
◈ கண்ணுடையம்மன் பள்ளு

2. **ஜல்லிக்கட்டு - பெயர்க்காரணம் தருக.**

◈ சல்லிக்கட்டு என்பது திரிந்து ஜல்லிக்கட்டு என்று ஆனது.
◈ சல்லி என்பது மாட்டின் கழுத்தில் கட்டப்படுகின்ற வளையத்தினைக் குறிக்கும்.

Please Send Your Study Materials to our Email Id: padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.CBSEtips.in



◈ சல்லிநாணயங்களைத் துணியில் முடிந்து கொம்புகளில் கட்டி விடும் வழக்கமும் இருந்ததாலும் இப்பெயர் ஏற்பட்டிருக்கலாம்.

3. **தமிழர்களின் நாகரிகத்தை உணர்த்தும் விளையாட்டு எது?**
ஏறுதழுவுதல் விளையாட்டு.

4. **கலித்தொகை கூறும் ஏறுதழுவுதல் களம் குறித்த அடிகளை எழுதுக.**
''எழுந்தது துகள்
ஏற்றனர் மார்பு
கவிழ்ந்தன மருப்பு
கலங்கினர் பலர்''

5. **காளைகளை எதற்கு நிகராகக் கலித்தொகை கூறுகின்றது?**
காளைகளை மருதநிலப் போர் வீரருக்கு நிகராகக் கலித்தொகை கூறுகின்றது.

6. **மாடு தழுவுதலை 'எருது கட்டி' எனக் குறிப்பிடும் சிற்றிலக்கியம் எது?**
கண்ணுடையம்மன் பள்ளு.

7. **காளைப்போர் இடம்பெற்றுள்ள வெளிநாட்டுச் சித்திரங்கள் யாவை?**
◈ எகிப்தில் உள்ள பெனி - ஹாசன் சித்திரங்கள்
◈ கிரிட் தீவில் உள்ள கினோஸஸ் என்னுமிடத்திலுள்ள அரண்மனைச் சிற்பங்கள்.

8. **கரிக்கையூர் ஓவியத்தில் இடம்பெற்றுள்ள காட்சிகள் யாவை?**
கூரிய கொம்புகளும் சிலிர்த்த திமில்களும் கொண்ட மூன்று எருதுகளைப் பலர் ஒன்றுகூடி விரட்டுவது பண்டைய ஓவியக் காட்சி கரிக்கையூர் ஓவியத்தில் இடம்பெற்றுள்ளது.

9. **கல்லூத்துமேட்டுப்பட்டியில் கண்டறியப்பட்டுள்ள ஓவியத்தில் இடம்பெற்றுள்ள காட்சி யாது?**
திமிலுடன்கூடியகாளைஒன்றைஒருவர்அடக்கமுயல்வதுபோன்றகாட்சிகல்லூத்துமேட்டுப்பட்டியில் கண்டறியப்பட்டுள்ள ஓவியத்தில் காணப்படுகின்றது.

10. **சித்திரக்கல் புடவில் கண்டறியப்பட்டுள்ள ஓவியத்தில் இடம்பெற்றுள்ள காட்சி யாது?**
திமிலுடன் கூடிய காளை ஓவியம்.

11. **காளைச் சண்டையைத் தேசிய விளையாட்டாகக் கொண்ட நாடு எது?**
ஸ்பெயின்.

12. **ஸ்பெயின் நாட்டில் நடைபெறும் காளைச்சண்டை குறித்து எழுதுக.**
◈ ஸ்பெயின் நாட்டின் தேசிய விளையாட்டு காளைச் சண்டை.
◈ அச்சண்டையில் காளையை கொன்று அடக்குபவனே வீரனாகக் கருதப்படுவான்.
◈ இவ்விளையாட்டில் ஆயுதங்களைப்பயன்படுத்துவதும் உண்டு.

13. **ஏறுதழுவுதல் பற்றிக் குறிப்பிடும் சங்கஇலக்கியம் எது?**
கலித்தொகை.

14. **ஏறுதழுவுதல் பற்றிக் குறிப்பிடும் சங்கமருவிய கால இலக்கியம் எது?**
சிலப்பதிகாரம்.

Please Send Your Study Materials to our Email Id: padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.CBSEtips.in



15. **ஏறுதழுவுதல் பற்றிக் குறிப்பிடும் இலக்கண நூல் எது?**
புறப்பொருள் வெண்பாமாலை.

16. **காளை மாடுகள் எவ்வாறெல்லாம் அழைக்கப்பட்டன?**
ஏர் மாடுகள், எருதுகள், ஏறுகள்.

## 3 சிறுவினா

1. **ஏறுதழுவுதலுக்கு வழங்கப்படும் வேறுபெயர்கள் யாவை?**
◈ மாடுபிடித்தல்
◈ மாடு அணைத்தல்
◈ மாடுவிடுதல்
◈ மஞ்சுவிரட்டு
◈ வேலி மஞ்சு விரட்டு
◈ எருது கட்டி
◈ காளைவிரட்டு
◈ ஏறுதழுவுதல்
◈ சல்லிக்கட்டு

2. **கலித்தொகை குறிப்பிடும் ஏறுதழுவுதல் செய்திகளைக் குறிப்பிடுக.**
◈ ''எழுந்தது துகள் ஏற்றனர் மார்பு கவிழ்ந்தன மருப்பு கலங்கினர் பலர்'' என்ற கலித்தொகை வரிகள் ஏறுதழுவுதல் களம் குறித்து கூறுகின்றது.
◈ ''நீறு எடுப்பவை...'' என்ற மற்றொரு கலித்தொகைப் பாடலில், திமில் பெருத்த காளைகள் பல, தரையைக் கிளறி, புழுதியை எழுப்பின. சில நிலத்தை நொறுக்கின; சில தம்முள் முரண்பட்டு ஒன்றொடொன்று எதிர்த்துக் கொண்டன; சில மண்டியிட்டுப் பாய்ந்தன. இந்தக் காளைகள் போருக்குச் செல்லும் மருதப்போர் வீரரைப் போன்றிருந்தன என்கின்றது.

3. **'சிந்துசமவெளி நாகரிக வரலாற்றில் காளை முக்கியப் பங்கு வகிக்கின்றது' என்பதை நிறுவுக.**
◈ சிந்துசமவெளி நாகரிக வரலாற்றில் காளை முக்கியப் பங்கு வகிக்கின்றது.
◈ சிந்துசமவெளி மக்கள் காளையைத் தெய்வமாக வழிபட்டனர் என்பதை அகழாய்வு மூலம் அறிகின்றோம்.
◈ சிந்துசமவெளி ஆய்வில் கிடைத்த மாடு தழுவும் கல் முத்திரை, தமிழர்களின் பண்பாட்டு அடையாளமான ஏறுதழுவுதலைக் குறிப்பதாக ஐராவதம் மகாதேவன் தெரிவித்துள்ளார்.

4. **எருது பொருதார் கல்லின் நடுகல் செய்தி யாது?**
சேலத்தில் கண்டறியப்பட்டது. - எருது பொருதார் கல்

**நடுகல் செய்தி:**

கருவந்துறை என்னும் ஊரில் எருதோடு போராடி இறந்தவனாகிய சங்கன் என்பவனுக்கு, அவன் மகன் பெரிய பயல் எடுத்த நடுகல்.

Please Send Your Study Materials to our Email Id: padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.CBSEtips.in



## கற்பவை கற்றபின்...

பக்கம்: 67

1. இலக்கியங்கள் காட்டும் ஏறுதழுவுதல் காட்சிகளை உங்கள் பகுதியில் நடைபெற்ற எருதுவிடும் விளையாட்டு நிகழ்வுடன் ஒப்பிடுக.

| | இலக்கியங்கள் காட்டும் ஏறுதழுவுதல் காட்சி | எங்கள் பகுதியில் நடைபெற்ற எருதுவிடும் விளையாட்டு நிகழ்வு |
|---|---|---|
| 1. | முல்லை நில ஆயர்கள் மட்டுமே ஏறுதழுவுதலில் ஈடுபட்டு இருந்தனர். | ஆயர்கள் மட்டுமின்றி யார் வேண்டுமானாலும் பங்கேற்கலாம். |
| 2. | திமில் பெருத்த காளைகள் பல, தரையைக் கிளறி, புழுதியை எழுப்பின. சில நிலத்தை நொறுக்கின; சில தம்முள் முரண்பட்டு ஒன்றொடொன்று எதிர்த்துக் கொண்டன; சில மண்டியிட்டுப் பாய்ந்தன. இந்தக் காளைகள் போருக்குச் செல்லும் மருதப்போர் வீரரைப் போன்றிருந்தன என்கின்றது கலித்தொகை. | வாடிவாசல் என்னும் வழியாக எருதுகள் கொண்டு வரப்படும். வீரர்கள் களமிறங்கி ஓடுகின்ற மாட்டைப் பிடித்து அடக்க முயற்சிப்பர். திமிலினைப் பிடித்து அடக்குவர். வெற்றி பெற்ற காளைக்கும், வீரனுக்கும் பரிசளிப்பர். |

2. உங்கள் ஊர் பொங்கல் விழா வருணனை.

| | |
|---|---|
| சாக்கு ஓட்டம் | தத்தித் தவழும் நந்தவனங்களின் சாக்கு ஓட்டம் பாரீர்! |
| தவளை ஓட்டம் | நடைபயின்ற அன்னங்களின் தவளை ஓட்டம் இதோ காணீர்! |
| உருளைக் கிழங்கு பொறுக்குதல் | இளந்தளிர்கள் குனிந்து விளையாடும் உருளைக் கிழங்கு பொறுக்குதல் நிகழ்வை நோக்குங்கள்! |
| புட்டியில் தண்ணீர் நிரப்புதல் | பூஞ்சோலை மலர்கள் தண்ணீர் நிரப்பும் காட்சிப் பாரீர்! |
| இசை நாற்காலி | குயில் கீதங்களின் இசையில் அமரும் இனிய விளையாட்டு இதோ! |
| ஊசியில் நூல்கோர்த்தல் | கண்ணுக்கு விளையாட்டு நூல்கோர்த்தல் பாரீர்! |
| கோலம் போடுதல் | புள்ளிமயில்கள் கோலம் போடும் அழகு பாரீர்! |
| கயிறுதிரித்தல் | பிரித்ததைச் சேர்க்கும் கயிறு திரித்தல் காணுங்கள்! |
| மெதுவாக வண்டிஓட்டல் | நிதானமே பிரதானம் என்பதைச் சொல்லும் போட்டியைப் பாரீர்! |
| பானை உடைத்தல் | பண்பாட்டு அடையாளமான பானை உடைக்கும் இளங் காளைகளைப் பாரீர்! |

Please Send Your Study Materials to our Email Id: padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.CBSEtips.in



இயல் 3 கவிதைப் பேழை

# மணிமேகலை

– சீத்தலைச் சாத்தனார்



| | | |
|---|---|---|
| ஆசிரியர் | - | சீத்தலைச் சாத்தனார் |
| இயற்பெயர் | - | சாத்தன் கூல வாணிகன் சீத்தலைச் சாத்தனார் |
| வேறுபெயர் | - | தண்டமிழ்ச் சாத்தன், தண்டமிழ்ப்புலவன். |
| காலம் | - | கி.பி.2 |
| படைப்புகள் | - | மணிமேகலை |

## சொற்பொருள்

| | | |
|---|---|---|
| சமயக்கணக்கர் | - | சமயத் தத்துவவாதிகள் |
| பாடைமாக்கள் | - | பலமொழி பேசும் மக்கள் |
| கோட்டி | - | மன்றம் |
| வேதிகை | - | திண்ணை |
| தாமம் | - | மாலை |
| குழீஇ | - | ஒன்று கூடி |
| தோம் | - | குற்றம் |
| பொலம் | - | பொன் |
| தூணம் | - | தூண் |
| வசி | - | மழை |
| விலோதம் | - | துணியாலான கொடி |
| துருத்தி | - | ஆற்றிடைக் குறை |
| கதலிகைக் கொடி | - | சிறு சிறு கொடியாகப் பல கொடிகள் கட்டியது |
| காழூன்று கொடி | - | கொம்புகளில் கட்டும் கொடி |
| செற்றம் | - | சினம் |
| கலாம் | - | போர் |

## இலக்கணக் குறிப்பு

| | | |
|---|---|---|
| தோரணவீதியும் | - | எண்ணும்மை |
| தோமறு கோட்டியும் | - | எண்ணும்மை |
| காய்க்குலை கமுகு | - | இரண்டாம் வேற்றுமை உருபும் பயனும் உடன் தொக்கத் தொகை |
| பூக்கொடிவல்லி | - | இரண்டாம் வேற்றுமை உருபும் பயனும் உடன் தொக்கத் தொகை |
| முத்துத்தாமம் | - | இரண்டாம் வேற்றுமை உருபும் பயனும் உடன் தொக்கத் தொகை |
| மாற்றுமின் | - | ஏவல் வினைமுற்று |
| பரப்புமின் | - | ஏவல் வினைமுற்று |
| உறுபொருள் | - | உரிச்சொல் தொடர் |
| தாழ்பூந்துறை | - | வினைத்தொகை |
| பாங்கறிந்து | - | இரண்டாம் வேற்றுமைத்தொகை |
| நன்பொருள் | - | பண்புத்தொகை |
| தண்மணல் | - | பண்புத்தொகை |
| நல்லுரை | - | பண்புத்தொகை |

Please Send Your Study Materials to our Email Id: padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.CBSEtips.in



## பகுபத உறுப்பிலக்கணம்

**பரப்புமின் - பரப்பு + மின்**

பரப்பு - பகுதி

மின் - முன்னிலைப் பன்மை வினைமுற்று விகுதி

**அறைந்தனன் - அறை + த்(ந்) + த் + அன் + அன்**

அறை - பகுதி

த் - சந்தி (ந்) ஆனது விகாரம்

த் - இறந்தகால இடைநிலை

அன் - சாரியை

அன் - ஆண்பால் வினைமுற்று விகுதி

## பாடநூல் மதிப்பீட்டு வினா

### 1 பலவுள் தெரிக

1. **ஐம்பெருங்குழு, எண்பேராயம் - சொற்றொடர்கள் உணர்த்தும் இலக்கணம்.**

அ) திசைச்சொற்கள் ஆ) வடசொற்கள்

இ) உரிச்சொற்கள் ஈ) தொகைச்சொற்கள்

**விடை: ஈ) தொகைச்சொற்கள்**

### 2 குறுவினா

1. **பழமணல் மாற்றுமின் புதுமணல் பரப்புமின் - இடஞ்சுட்டிப் பொருள் விளக்குக.**

**இடம்:**

மணிமேகலை விழாவறைக் காதையில் முரசு கொட்டுபவன் இவ்வரிகளைக் கூறினான்.

**பொருள் விளக்கம்:**

புகார் நகரில் 28 நாட்கள் இந்திரவிழா நடைபெறுவதால் , தெருக்களிலும் மன்றங்களிலும் பழைய மணலை மாற்றிப் புதுமணலைப் பரப்புங்கள் என்று முரசு கொட்டுபவன் தெரிவித்தான்.

2. **பட்டிமண்டபம், பட்டிமன்றம் இரண்டும் ஒன்றா? விளக்கம் எழுதுக.**

பட்டிமண்டபம், பட்டிமன்றம் இரண்டும் ஒன்றே!

**விளக்கம்:**

புலவர்கள் சொற்போரிட்டு வாதிடும் இடம் பட்டிமண்டபம் ஆகும். இவையே இன்று பட்டிமன்றம் என்றும் அழைக்கப்படுகின்றது.

Please Send Your Study Materials to our Email Id: padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.CBSEtips.in



## 3 சிறுவினா

1. **உங்கள் ஊரில் நடைபெறுகின்ற விழா முன்னேற்பாடுகளை இந்திரவிழா நிகழ்வுகளுடன் ஒப்பிடுக.**

**ஊரில் நடைபெறுகின்ற விழா முன்னேற்பாடுகள்:**

◈ தோரணம் கட்டுதல், தெருக்களையும், கோவில் மண்டபங்களையும் தூய்மைப்படுத்தி வண்ணம் அடித்தல், கோலமிடுதல் போன்றவற்றைச் செய்தனர்.

◈ பனையோலை, மாவிலை தோரணங்களைக் கட்டுவர். வாழை மரங்களைக் கட்டி வைப்பர்.

◈ நாடகம், இசைக் கச்சேரி, பட்டிமன்றம் ஆகியவை நடக்க ஏற்பாடு செய்வர்.

**இந்திரவிழா நிகழ்வுகள்:**

◈ தெருக்கள், மன்றங்கள் ஆகியவற்றில் அழகுப் பொருட்கள் பலவற்றை அழகுபடுத்தினர்.

◈ பாக்கு, வாழை, வஞ்சிக் கொடி, பூங்கொடி, கரும்பு ஆகியவற்றை நட்டு வைத்தனர்.

◈ தெருக்கள், மன்றங்கள் ஆகியவற்றில் புது மணலைப்பரப்பினர்.

◈ பட்டிமண்டபத்தில் வாதிட ஏற்பாடு செய்தனர்.

## கூடுதல் வினாக்கள்

## 1 பலவுள் தெரிக

1. **பொருத்துக.**

| | | | |
|---|---|---|---|
| 1. தோம் | - | அ) | மன்றம் |
| 2. கோட்டி | - | ஆ) | குற்றம் |
| 3. பொலம் | - | இ) | திண்ணை |
| 4. வேதிகை | - | ஈ) | பொன் |

அ) 1-ஆ 2-அ 3-ஈ 4-இ  ஆ) 1-இ 2-அ 3-ஈ 4-ஆ
இ) 1-ஆ 2-ஈ 3-அ 4-இ  ஈ) 1-ஆ 2-இ 3-ஈ 4-அ

**விடை: ஆ) 1-இ 2-அ 3-ஈ 4-ஆ**

2. **பொருத்துக.**

| | | | |
|---|---|---|---|
| 1. தூணம் | - | அ) | மாலை |
| 2. தாமம் | - | ஆ) | சினம் |
| 3. வசி | - | இ) | தூண் |
| 4. செற்றம் | - | ஈ) | மழை |

அ) 1-ஆ 2-அ 3-ஈ 4-இ  ஆ) 1-இ 2-அ 3-ஈ 4-ஆ
இ) 1-ஆ 2-ஈ 3-அ 4-இ  ஈ) 1-ஆ 2-இ 3-ஈ 4-அ

**விடை: ஆ) 1-இ 2-அ 3-ஈ 4-ஆ**

3. **பொருத்துக.**

| | | | |
|---|---|---|---|
| 1. கதலிகைக் கொடி | - | அ) | கொம்புகளில் கட்டும் கொடி. |
| 2. காழூன்று கொடி | - | ஆ) | துணியாலான கொடி. |
| 3. விலோதம் | - | இ) | சிறு சிறு கொடியாகப் பல கொடிகள் கட்டியது. |

Please Send Your Study Materials to our Email Id: padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.CBSEtips.in



அ) 1-இ 2-அ 3-ஆ ஆ) 1-அ 2-இ 3-ஆ
இ) 1-ஆ 2-அ 3-இ ஈ) 1-அ 2-ஆ 3-இ **விடை: அ) 1-இ 2-அ 3-ஆ**

4. **பல மொழி பேசும் மக்களைக் குறிக்கும் சொல் எது?**
அ) பன்மொழியாளர் ஆ) பாடை மாக்கள்
இ) சமயக்கணக்கர் ஈ) எண்பேராயம் **விடை: ஆ) பாடை மாக்கள்**

5. **இந்திர விழா நடைபெற்ற நகர் எது?**
அ) மதுரை ஆ) காஞ்சி
இ) இந்திரலோகம் ஈ) புகார் **விடை: ஈ) புகார்**

6. **பொருந்தாத இணையைக் கண்டறிக.**
அ) மணிமேகலை - சீத்தலைச் சாத்தனார். ஆ) மணிமேகலை - மணிமேகலைத் துறவு
இ) மணிமேகலை - 30 காதைகள் ஈ) மணிமேகலை - மூன்று காண்டங்கள்
**விடை: ஈ) மணிமேகலை - மூன்று காண்டங்கள்**

7. **பொருந்தாத இணையைக் கண்டறிக.**
அ) சமயக் கணக்கர் - சமயத் தத்துவவாதிகள்
ஆ) பாடைமாக்கள் - பல மொழிபேசும் மக்கள்
இ) ஐம்பெருங்குழு - அமைச்சர் குழு
ஈ) எண்பேராயம் - அயல்நாட்டினர் **விடை: ஈ) எண்பேராயம் - அயல்நாட்டினர்**

8. **சொற்றொடரை முறைப்படுத்துக.**
1) முதல்காதையே 2)விழாவறை காதை 3) மணிமேகலையின்
அ) 1, 2, 3 ஆ) 3, 1, 2 இ) 2, 1, 3 4) 1, 3, 2 **விடை: ஆ) 3, 1, 2**

9. **ஐம்பெருங் குழுக்களைச் சாராதவர்**
அ) அமைச்சர் ஆ) தூதர்
இ) சாரணர் ஈ) கரணத்தியலவர் **விடை: ஈ) கரணத்தியலவர்**

10. **எண்பேராயத்தைச் சாராதவர்**
அ) கனகச் சுற்றம் ஆ) படைத்தலைவர்
இ) இவுளி மறவர் ஈ) யானை வீரர் **விடை: ஆ) படைத்தலைவர்**

11. **ஆற்றின் நடுவே இருக்கும் மணல் திட்டு**
அ) வசி ஆ) துருத்தி இ) விலோதம் ஈ) கோட்டி **விடை: ஆ) துருத்தி**

12. **மணிமேகலையின் முதல் காதை __________.**
அ) பவத்திறம் அறுகெனப் பாவை ஆ) விழாவறை காதை
இ) உவவனம் புக்ககாதை ஈ) எதுவுமில்லை **விடை: ஆ) விழாவறை காதை**

## கோடிட்ட இடத்தை நிரப்புக.

1. மனித மாண்புகளை எடுத்துரைப்பது ________. **விடை: விழா**
2. பண்பாட்டின் வெளிப்பாடு ______________. **விடை : விழா**
3. தங்கத் தூண்களிலே தொங்கவிடப்பட்டிருந்தது ________. **விடை: முத்துமாலைகள்**
4. மணிமேலையில் உள்ள காதைகளின் எண்ணிக்கை ________. **விடை: முப்பது**

Please Send Your Study Materials to our Email Id: padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.CBSEtips.in



5. அரசருக்குரிய அமைச்சர் குழு ________ , ________. விடை: ஐம்பெருங்குழு, எண்பேராயம்
6. தண்டமிழ் ஆசான் என்று புகழப்படுபவர் ________. விடை: சீத்தலைச் சாத்தனார்
7. தண்டமிழ் ஆசான் என்று சீத்தலைச் சாத்தனாரைப் புகழ்ந்தவர் ________. விடை: இளங்கோவடிகள்
8. பெண்மையை முதன்மைப்படுத்தும் புரட்சிக்காப்பியம் ________. விடை: மணிமேகலை
9. சீத்தலைச் சாத்தனார் வாழ்ந்த ஊர் ________. விடை: மதுரை
10. தோம் என்பதன் பொருள் ________. விடை: குற்றம்
11. கோட்டி என்பதன் பொருள் ________. விடை: மன்றம்
12. பொலம் என்பதன் பொருள் ________. விடை: பொன்
13. வேதிகை என்பதன் பொருள் ________. விடை: திண்ணை
14. தூணம் என்பதன் பொருள் ________. விடை: தூண்
15. தாமம் என்பதன் பொருள் ________. விடை: மாலை

## 2 குறுவினா

1. **இந்திரவிழா எங்கு எத்தனை நாட்கள் நடைபெறும்?**

   இந்திரவிழா புகார் நகரில் 28 நாட்கள் நடைபெறும்.

2. **இந்திரவிழாவைக் காணவந்தோர் யாவர்?**

   சமயவாதிகள், காலக்கணிதர், மக்கள் உருவில் கடவுளர், பலமொழி பேசும் அயல்நாட்டினர், ஐம்பெருங்குழு, எண்பேராயம் ஆகியோர் இந்திரவிழாவைக் காணவந்தனர்.

3. **அரசருக்குரிய அமைச்சர் குழுக்கள் யாவை?**

   ஐம்பெருங்குழு . எண்பேராயம்.

4. **ஐம்பெருங்குழுக்களில் உள்ளோர் யாவர்?**

   அமைச்சர், சடங்கு செய்விப்போர், படைத்தலைவர், தூதர், சாரணர் (ஒற்றர்).

5. **எண்பேராயத்தில் உள்ளோர் யாவர்?**

   ◈ கரணத்தியலவர் (கணக்கு எழுதுபவர்)
   ◈ கருமவிதிகள்(புரோகிதர்)
   ◈ கனகச்சுற்றம் (பொருட்காப்பாளர்)
   ◈ கடைக்காப்பாளர்(வாயிற்காப்பாளர்)
   ◈ நகரமாந்தர் (மக்கள் சார்பாளர்)
   ◈ படைத்தலைவர்
   ◈ யானைமறவர்
   ◈ இவுளிமறவர் (குதிரை வீரர்)

6. **முரசறைவோன் அறிவித்த வாழ்த்துச்செய்தி யாது?**

   ‘‘பசியும் நோயும் பகையும் நீங்கி மழையும் வளமும் எங்கும் பெருகுவதாக’’ என வாழ்த்தி செய்திகளை முரசறைவோன் அறிவித்தான்.

Please Send Your Study Materials to our Email Id: padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.CBSEtips.in



7. ''பசியும் பிணியும் பகையும் நீங்கி
வசியும் வளனும் சுரக்க''
- இடம் சுட்டிப் பொருள் விளக்கம் தருக.

**இடம்:**

மணிமேகலை விழாவறைக் காதையில் முரசு கொட்டுபவன் இவ்வரிகளைக் கூறினான்.

**பொருள் விளக்கம்:**

''பசியும் நோயும் பகையும் நீங்கி மழையும் வளமும் எங்கும் பெருகுவதாக'' என வாழ்த்தி செய்திகளை முரசறைவோன் அறிவித்தான்.

8. ''பசியும் பிணியும் பகையும் நீங்கி
வசியும் வளனும் சுரக்க''
என்று வாழ்த்துபவர் யார்? எப்போது வாழ்த்துகிறார்?

புகார் நகர இந்திரவிழா முன்னேற்பாட்டின் போது ''பசியும் நோயும் பகையும் நீங்கி மழையும் வளமும் எங்கும் பெருகுவதாக'' என வாழ்த்தி செய்திகளை முரசறைவோன் அறிவித்தான்.

9. இந்திர விழா நடைபெறும் இடங்கள் யாவை?

- வெண்மையான மணற்குன்றுகள்
- பூஞ்சோலைகள்
- ஆற்றிடைக்குன்றுகள்
- மரக்கிளைகள் நிழல் தரும் தண்ணீர்த்துறைகள்

10. விழா கொண்டாடுவதன் நோக்கம் யாது?

- ஒன்று கூடுதல்
- கொண்டாடுதல்
- கூடி உண்ணுதல்
- மகிழ்ச்சியைப் பகிர்தல்

11. இந்திர விழாக் காட்சிகளை வெளிப்படுத்தும் மணிமேகலைக் காதை எது?

- விழாவறை காதை
- இக்காதை மணிமேகலையின் முதல் காதை.

## 3 சிறுவினா

1. மணிமேகலை குறிப்பு வரைக.

- மாதவி மகள் மணிமேகலையின் வரலாற்றினைக் கூறுவது.
- 30 காதைகள் உள்ளன.
- நூலாசிரியர்: சீத்தலைச்சாத்தனார்.
- சிலப்பதிகார கதைத் தொடர்ச்சியே மணிமேகலை.
- சிலப்பதிகாரம், மணிமேகலை இரண்டையும் இரட்டைக்காப்பியம் என்பர்.
- வேறுபெயர் : மணிமேகலைத் துறவு.
- தமிழின் இரண்டாம் காப்பிய நூல்.

Please Send Your Study Materials to our Email Id: padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.CBSEtips.in



◈ பௌத்த சமயச் சார்புடையது.
◈ பெண்மையை முதன்மைபடுத்தும் முதற்காப்பியம்.
◈ ஐம்பெருங்காப்பியங்களுள் ஒன்று.

2. **சீத்தலைச் சாத்தனார் - குறிப்பு வரைக.**

◈ இயற்பெயர் : சாத்தன்
◈ தானிய வணிகம் செய்ததால் கூல வாணிகன் சீத்தலைச் சாத்தனார் என்பர்.
◈ வேறுபெயர் : தண்டழிச் சாத்தன், தண்டமிழ்ப்புலவன்.
◈ காலம் : கி.பி. 2.
◈ திருச்சி சீத்தலையில் பிறந்து மதுரையில் வாழ்ந்தவர் என்பர் அறிஞர்.
◈ படைப்பு - மணிமேகலை.

## கற்பவை கற்றபின்...

பக்கம்: 71

1. **உன் ஊரில் நடைபெறும் திருவிழாவிற்கான அழைப்பிதழ் ஒன்றினை உருவாக்குக.**

### புதூர் முனியப்பன் கோவில் திருவிழா அழைப்பிதழ்

பக்தி ததும்பும் நெஞ்சங்களே!

இந்த ஆண்டு பங்குனி மாதம் 10ம் நாள் அருள்மிகு முனியப்பன் கோவில் திருவிழா துவங்க உள்ளது.

| | | |
|---|---|---|
| முதல் நாள் | : | பூச்சாட்டல் |
| 2ஆம் நாள் | : | புனித நீரூற்றல் |
| 3ம் நாள் | : | பூக்குழி இறங்குதல், |
| 4ம் நாள் | : | இசைக் கச்சேரி என பல நிகழ்வுகள் நடைபெறும். |

*பக்கதர்கள் அனைவரையும் பங்கேற்க அன்புடன் அழைக்கின்றோம்.*

இவண்,

**கோவில் நிர்வாகக் குழு, புதூர்கிராமம்.**

2. **குறிப்புகளைக் கொண்டு ஓர் இயற்கைக்காட்சியை விரித்தெழுதுக**

**பூஞ்சோலை - சிரிக்கும் மலர்கள் - பசுமையான புல்வெளி - கூவும் குயில் - வீசும் தென்றல் - விளையாடும் குழந்தைகள் - அழகிய காட்சிகள்.**

இயற்கையன்னைப் பச்சைப் பட்டு உடுத்தி பூஞ்சோலையில் வண்ணமயமாகச் சிரிக்கும் மலர்கள். அங்குப் பசுமையான புல்வெளி. மெத்தைகள் மீது கூவும் குயில் கீதம் இசைக்கும் நாதத்துக்கு வீசும் தென்றல் காற்றில் விளையாடும் குழந்தைகள் முத்து ரதமாய் அழகிய காட்சிகள்.

Please Send Your Study Materials to our Email Id: padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.CBSEtips.in



# இயல் 3 விரிவானம்

# அகழாய்வுகள்

## பாடநூல் மதிப்பீட்டு வினா

### 1 குறுவினா

1. **தொல்லியல் சான்றுகள் காணப்படும் இடங்களை அகழாய்வு செய்யவேண்டும் ஏன்?**

நமக்கு இதுவரை கிடைத்துள்ள பழங்காலப் பொருட்கள் நாம் வாழ்ந்த காலத்தை மட்டுமின்றி பழம்பெரும் வரலாற்றைப் பறைசாற்றுகின்றன. நமது நாகரிகத்தை எடுத்துக் காட்டுகின்றன. எனவே தொல்லியல் சான்றுகள் காணப்படும் இடங்களை அகழாய்வு செய்யவேண்டும்.

### 2 சிறுவினா

1. **வியத்தகு அறிவியல் விரவிக் கிடக்கும் நிலையில் அகழாய்வின் தேவை குறித்து உங்களது கருத்துகளைத் தொகுத்துரைக்க.**

- அறிவியல் மிகவும் வேகமானது. ஒரு கருவி கண்டுபிடிக்கப்பட்டு பயன்பாட்டுக்கு வந்து, அதுவே சில ஆண்டுகளில் மாற்றம் அடைந்து முன்னது காணாமல் போய்விடுகின்றது.
- கணினியை வைரஸ் அழித்துவிடும். ஆனால், மண்ணாலும், கல்லாலும் ஆன பழம் பொருட்களை எந்த வைரஸும் கூட அழிக்க முடியாது.
- பழமையே புதுமை என்பதை மனதில் கொண்டு அகழாய்வை மேலும் மேற்கொள்ள வேண்டும்.

### 3 நெடுவினா

1. **அகழாய்வுகள் குறித்த செய்திகளைத் தொகுத்து எழுதுக.**

**முன்னுரை:**

நமது பண்பாட்டை எண்ணிப் பார்ப்பதற்கும் கடந்த காலத்ததைப் புரிந்து கொள்வதற்கும் துணை நிற்பவை அகழாய்வுகள்.

**அரிக்கமேடு அகழாய்வு:**

அரிக்கமேடு அகழாய்வில் பொ.ஆ. முதல் நூற்றாண்டைச் சேர்ந்த கட்டிடங்கள் கண்டுபிடிக்கப்பட்டன. இவற்றில் காணப்பட்ட தொட்டிகளில் சாயம் தோய்க்கப் பட்டிருந்ததாகத் தெரிகின்றது. அரிக்கமேடு அகழாய்வில் ரோமானிய மட்பாண்டங்கள் கிடைத்தன. அதனால் ரோமானியர்களுக்கும் நமக்கும் இருந்த வாணிபத் தொடர்பு உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

**ஆதிச்சநல்லூர் அகழாய்வு:**

ஆதிச்சநல்லூர் அகழாய்வில் ஏராளமான முதுமக்கள் தாழிகள் கண்டுபிடிக்கப்பட்டன. இது பழம்பெரும் பழங்கால அடையாளமாக உள்ளன.

Please Send Your Study Materials to our Email Id: padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.CBSEtips.in



**கீழடி அகழாய்வு:**

மதுரை அருகே கீழடி என்னும் இடத்தில் நடத்தப்பட்ட அகழாய்வில் சுடுமண் பொருட்கள், உலோகப் பொருட்கள், முத்துக்கள், கிளிஞ்சல் பொருள்கள், மான் கொம்புகள், சோழிகள், கிண்ணங்கள், துளையிடப்பட்ட பாத்திரங்கள், இரத்தினக்கல் வகைகள், பழுப்பு, கறுப்பு, சிவப்பு - கறுப்புப் பானைகள், சதுரங்கக்காய்கள், தானியங்களைச் சேமித்து வைக்கும் கலன்கள், செம்பு, சங்கு வளையல்கள், தமிழ்-பிராமி எழுத்துகள் பொறிக்கப்பட்ட பானை ஓடுகள், கற்கருவிகள், உறைக்கிணறுகள் போன்ற தொல்லியல் பொருட்கள் கிடைத்துள்ளன.இவை 2300 ஆண்டுகளுக்கு முற்பட்டவை எனக் கருதப்படுகின்றன. இதுவரை கிடைத்த அகழாய்வில் இறப்பு தொடர்பான தடயங்கள்தான் கிடைத்துள்ளன. ஆனால் கீழடியில் வாழ்விடப்பகுதிகளே முழுமையான அளவில் கிடைத்துள்ளன. செங்கல் கட்டுமானங்கள் தமிழரின் உயரிய நாகரிகத்தைக் காட்டும் சாட்சிகளாக அமைந்துள்ளன.

**முடிவுரை:**

தமிழர்களின் உணவு, உடை, வாழிடம் முதலியன இயற்கையைச் சிதைக்காத இயல்புகளைக் கொண்டவை என்பதற்கு அகழாய்வில் கண்ட சான்றுகள் ஆவணங்களாகத் திகழ்கின்றன.

## கூடுதல் வினாக்கள்

1. **பட்டி மண்டபம் பற்றிய செய்திகளைக் கூறும் இலக்கியங்கள் யாவை?**

சிலப்பதிகாரம், திருவாசகம், மணிமேகலை, கம்பராமாயணம்.

## கற்பவை கற்றபின்... பக்கம்: 77

1. **இளைஞர்களிடையே பண்பாட்டினை வளர்ப்பதில் பெரும்பங்கு வகிப்பது குடும்பமா? சமூகமா? என்னும் தலைப்பில் சொற்போர் நிகழ்த்துக.**

**குடும்பமே!**

இனிய காலை வணக்கங்கள். தலைப்பிலேயே தீர்ப்பைக் கொடுத்துவிட்டு சொற்போரா? ஆம்! இளைஞர்களிடையே பண்பாட்டினை வளர்ப்பதில் பெரும்பங்கு வகிப்பது குடும்பமா? சமூகமா? என்னும் தலைப்பில் குடும்பத்தை முதலில் வைத்து, சமூகத்தைப் பின் வைத்து இருப்பதை நோக்குங்கள். அன்னையிடம் அன்பு . தந்தையிடம் ஒழுக்கம், குடும்ப உறுப்பினர்களிடம் ஒற்றுமை இவற்றையெல்லாம் தெருவிலா பார்க்க முடியும். குடும்பத்தில் தான் பார்க்க முடியும். காந்தியடிகள், நேரு, கலாம் அய்யா ஆகிய உயர்ந்தோர் உயர்ந்ததிற்குக் காரணம் அவர்களின் பண்பாடு. அந்தப் பண்பாட்டிற்குக் காரணம் குடும்பமே!

**சமூகமே!**

என் நெஞ்சங்களே வணக்கங்கள் பல! எதிர் அணி பேசியது நன்றாகத்தான் இருக்கின்றது. இன்றைக்கு எத்தனை குடும்பம் நலமாக இருக்கின்றது. நீதிமன்றத்தில் எத்தனை குடும்ப நலவழக்குகள். இவை பண்பாட்டினை வளர்க்கிறதாம். வீட்டுக்கு வெளியே தான் உலகம் இருக்கின்றது என்பதைப் புரிந்து கொள்ள வேண்டும். ஆசிரியர்களும் சமுதாயத் தொண்டு புரிவோரும் தான் இளைஞர் மத்தியில் பண்பாட்டினை வளர்க்கின்றது. காந்தியடிகள், நேரு, கலாம் அய்யா ஆகிய உயர்ந்தோர் உயர்ந்ததிற்குக் காரணம், அவர்கள் பண்பாடு. அந்தப் பண்பாட்டிற்குக் காரணம் குடும்பம் அன்று, இவர்களின் ஆசிரியர்கள். அதனால் பண்பாட்டை வளர்ப்பது சமுதாயமே என்றுச் சொல்லி நிறைவு செய்கின்றேன்.

Please Send Your Study Materials to our Email Id: padasalai.net@gmail.com

2. **தொல்லியல் துறைசார்ந்த அலுவலர் ஒருவரிடம் நேர்காணல் நிகழ்த்துவதற்கான வினாப்பட்டியலை உருவாக்குக.**

- ◈ ஐயா, தொல்லியல் துறை என்றால் என்ன?
- ◈ அழாய்வு எப்படிச் செய்கிறார்கள்?
- ◈ எதற்காக அகழாய்வு செய்ய வேண்டும்?
- ◈ தமிழின் பழமையான எழுத்துகள் யாவை?
- ◈ கல்வெட்டுகளை எப்படிப் படியெடுப்பது?

3. **உங்கள் ஊருக்கு அருகில் உள்ள தொன்மையான இடத்தைப் பார்வையிட்டுக் குறிப்பு எழுதுக.**

**விஜயமங்கலம் - குறிப்புகள்**

விஜயமங்கலம் மற்றும் அதன் சுற்று வட்டாரத்தில் பழமையான கோவில்கள் உள்ளன. அதில் பல கல்வெட்டுகள் உள்ளன. இவையனைத்தும் பண்டைத் தமிழ் கல்வெட்டுகள். கல்வெட்டு ஆராய்ச்சியாளர் திரு.புலவர் ராசு ஐயா அவர்கள் இவ்விடங்களை ஆய்வு செய்து வரலாற்றுச் செய்திகளை உணர்த்தியுள்ளார்.

●●✧✧✧●●

# இயல் 3 கற்கண்டு

# வல்லினம் மிகும் இடங்கள்

## பாடநூல் மதிப்பீட்டு வினா

### 1 பலவுள் தெரிக

1. **பின்வருவனவற்றுள் தவறான செய்தியைத் தரும் கூற்று**

அ) அரிக்மேடு அகழாய்வில் ரோமானிய நாணயங்கள் கிடைத்தன.

ஆ) புறப்பொருள் வெண்பாமாலை என்னும் இலக்கண நூலிலும் ஏறுகோள் குறித்துக் கூறப்பட்டுள்ளன.

இ) எட்டு, பத்து ஆகிய எண்ணுப்பெயர்களின் பின் வல்லினம் மிகாது.

ஈ) பட்டிமண்டபம் பற்றிய குறிப்பு மணிமேகலையில் கூறப்படுகின்றது.

**விடை: இ) எட்டு, பத்து ஆகிய எண்ணுப்பெயர்களின் பின் வல்லினம் மிகாது.**

## கூடுதல் வினாக்கள்

### 1 பலவுள் தெரிக

1. **வல்லினம் மிகுந்து வருதல் _________ விகாரப்புணர்ச்சியின் பாற்படும்**

| | |
|---|---|
| அ) தோன்றல் | ஆ) திரிதல் |
| இ) கெடுதல் | ஈ) எதுவுமில்லை |

**விடை: அ) தோன்றல்**

www.Padasalai.Net www.CBSEtips.in



2. பொருந்தாதக் கூற்றினை தேர்ந்தெடுக்க.

அ) அச்சட்டை அணிந்திருந்தான். ஆ) இந்தக் காலத்தில் செல்லாது.
இ) எத்திசை அது? ஈ) எந்த பணம் இந்த பணம்.

**விடை: ஈ) எந்த பணம் இந்த பணம்.**

3. சரியான சொற்றொடரைத் தேர்வு செய்க.

அ) அ, இ என்னும் சுட்டெழுத்தின் பின் வல்லினம் மிகும்.
ஆ) அந்த, இந்த என்னும் சுட்டுப்பெயர்களின் பின் வல்லினம் மிகாது.
இ) எ என்னும் வல்லெழுத்தின் பின் வல்லினம் மிகாது.
ஈ) எந்த என்னும் வினாச்சொல்லின் பின் வல்லினம் மிகாது.

**விடை: அ) அ, இ என்னும் சுட்டெழுத்தின் பின் வல்லினம் மிகும்.**

4. ______ , ______ ஆகிய இரு வேற்றுமை உருபு வெளிப்படுத்தும் தொடர்களில் வல்லினம் மிகும்.

அ) இரண்டாம், நான்காம் ஆ) மூன்றாம், ஐந்தாம்
இ) ஆறாம், ஏழாம் ஈ) முதலாம் எட்டாம்

**விடை: அ) இரண்டாம், நான்காம்**

5. சரியான சொற்றொடரைத் தேர்வு செய்க.

அ) எட்டு, பத்து ஆகிய எண்ணுப்பெயர்களின் பின் வல்லினம் மிகும்.
ஆ) எட்டு, பத்து ஆகிய எண்ணுப்பெயர்களின் பின் வல்லினம் மிகாது.
இ) ஒன்று, இரண்டு ஆகிய எண்ணுப்பெயர்களின் பின் வல்லினம் மிகும்.
ஈ) நான்கு, ஐந்து ஆகிய எண்ணுப்பெயர்களின் பின் வல்லினம் மிகும்.

**விடை: அ) எட்டு, பத்து ஆகிய எண்ணுப்பெயர்களின் பின் வல்லினம் மிகும்.**

6. ஏற்ற சான்றுகளைப் பொருத்துக.

1. ஓரெழுத்தொரு மொழியில் வல்லினம் மிகும் - அ) புலித்தோல்
2. ஆறாம் வேற்றுமைத் தொகையில் வல்லினம் மிகும் - ஆ) தீப்பிடித்தது, பூப்பந்தல்
3. உவமைத்தொகையில் வல்லினம் மிகும் - இ) கிழக்குப்பகுதி, வடக்குப் பக்கம்
4. திசைப்பெயர்களின் பின் வல்லினம் மிகும் - ஈ) தாமரைப்பாதம்

அ) 1-ஆ 2-அ 3-ஈ 4-இ ஆ) 1-இ 2-அ 3-ஈ 4-ஆ
இ) 1-ஆ 2-ஈ 3-அ 4-இ ஈ) 1-ஆ 2-இ 3-ஈ 4-அ

**விடை: அ) 1-ஆ 2-அ 3-ஈ 4-இ**

7. பொருந்தாத இணையைக் கண்டறிக.

1. இனி ஆகிய சொல்லில் வல்லினம் மிகும் - சான்று: இனிக் காண்போம்.
2. மிக ஆகிய சொல்லில் வல்லினம் மிகும். - சான்று: மிகப்பெரியவர்.
3. அதற்கு ஆகிய சொல்லில் வல்லினம் மிகும் - சான்று: அதற்குக் கொடு.
4. ஈறுகெட்ட எதிர்மறைப் பெயரெச்சத்தின் பின் வல்லினம் மிகும் - சான்று: ஆடச்சொன்னார்.

**விடை: 4) ஈறுகெட்ட எதிர்மறைப் பெயரெச்சத்தின் பின் வல்லினம் மிகும் - சான்று: ஆடச்சொன்னார்**

8. ‘‘மல்லிகைப்பூ’’ - இச்சொல்லில் மிகுந்த வல்லின எழுத்து எது?

அ) ல் ஆ) ப் இ) ச் ஈ) ம்

**விடை: ஆ) ப்**

Please Send Your Study Materials to our Email Id: padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.CBSEtips.in



9. சாலப் பேசினான் - இதில் அமைந்த உரிச்சொல் எது?

அ) சால ஆ) பேசி இ) னான் ஈ) எதுவுமில்லை **விடை: அ) சால**

10. இருபெயரொட்டுப் ________யில் வல்லினம் மிகும்.

அ) பண்புத்தொகை ஆ) வினைத்தொகை

இ) உவமைத்தொகை ஈ) வேற்றுமைத்தொகை **விடை: அ) பண்புத்தொகை**

## 2 குறுவினா

1. வல்லினம் மிகுதல் என்றால் என்ன?

வல்லெழுத்துக்கள் க,ச,த,ப ஆகிய நான்கும் மொழிக்கு முதலில் வரும். இவை நிலைமொழியுடன் சேரும் போது இவற்றின் மெய்யெழுத்துகள் தோன்றிப் புணரும் இதனை வல்லினம் மிகுதல் என்பர்.

2. தற்காலத் தமிழ் உரைநடையில் வல்லினம் மிகுமிடங்களைக் குறிப்பிடுக.

அ, இ என்ற சுட்டெழுத்து, அந்த, இந்த என்ற சுட்டுப்பெயர், 'எ' என்ற வினாவெழுத்து, 'எந்த' வினாச் சொல், ஐ என்னும் 2ம் வேற்றுமை உருபு வெளிப்படுத்தும் தொடர், கு என்னும் 4ம் வேற்றுமை உருபு வெளிப்படுத்தும் தொடர், என, ஆக போன்ற சொல்லுருபு ஆகியவற்றின் பின் வல்லினம் மிகும்.

**எ.கா:** அச்சட்டை, இப்பெட்டி, இந்தக்கொடி.

3. சுட்டெழுத்தின் பின் வல்லினம் மிகுமா? சான்று தருக.

அ, இ என்னும் சுட்டெழுத்தின் பின் வல்லினம் மிகும். **சான்று:** அச்சட்டை, இப்புத்தகம்

4. இனி என்ற சொல்லில் வல்லினம் மிகுமா?

இனி என்ற சொல்லில் வல்லினம் மிகும். **சான்று:** இனிக்காண்போம்.

5. மிக என்ற சொல்லினல் வல்லினம் மிகுமா?

மிக என்ற சொல்லில் வல்லினம் மிகும். **சான்று:** மிகப்பெரியவர்.

6. அதற்கு என்ற சொல்லில் வல்லினம் மிகுமா?

அதற்கு என்ற சொல்லில் வல்லினம் மிகும். **சான்று:** அதற்குக் கொடு.

7. ஓரெழுத்தொரு மொழியில் வல்லினம் மிகுமா?

ஓரெழுத்தொரு மொழியில் வல்லினம் மிகும். **சான்று:** தீப்பிடித்தது, பூப்பந்தல்.

8. ஆறாம் வேற்றுமைத் தொகையில் வல்லினம் மிகுமா?

ஆறாம் வேற்றுமைத் தொகையில் வல்லினம் மிகும். **சான்று:** புலித்தோல்.

9. உவமைத்தொகையில் வல்லினம் மிகுமா?

உவமைத்தொகையில் வல்லினம் மிகும். **சான்று:** தாமரைப்பாதம்.

10. திசைப்பெயர்களின் பின் வல்லினம் மிகுமா?

திசைப்பெயர்களின் பின் வல்லினம் மிகும். **சான்று:** கிழக்குப்பகுதி, வடக்குப் பக்கம்.

11. ஈறுகெட்ட எதிர்மறைப் பெயரெச்சத்தின் பின் வல்லினம் மிகுமா?

ஈறுகெட்ட எதிர்மறைப் பெயரெச்சத்தின் பின் வல்லினம் மிகும். **சான்று:** கூவாக்குயில்.

Please Send Your Study Materials to our Email Id: padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.CBSEtips.in



12. எண்ணுப்பெயர்களில் வல்லினம் மிகுமிடங்களைக் கூறுக.

எட்டு, பத்து ஆகிய எண்ணுப்பெயர்களின் பின் வல்லினம் மிகும்.
**சான்று:** எட்டுத்தொகை, பத்துப்பாட்டு.

13. வல்லினம் மிகும் உரிச்சொற்கள் யாவை?

- சால - சாலப்பசி
- தட - தடக்கை
- தவ - தவப்புகழ்
- குழ - குழச்சிறை

## கற்பவை கற்றபின்...

பக்கம்: 80

**1. வல்லினம் மிகலமா?**

அ) பெட்டிச் செய்தி ஆ) விழாக் குழு
இ) கிளிப் பேச்சு ஈ) தமிழ்த் தேன்
உ) தைப் பூசம் ஊ) கூடக் கொடு
எ) கத்தியை விடக் கூர்மை ஏ) கார்ப் பருவம்

**2. தொடர் தரும் பொருளைக் கூறுக.**

| | | |
|---|---|---|
| அ) சின்னக்கொடி | - | சின்னம் வரையப்பட்ட கொடி. |
| சின்ன கொடி | - | சிறிய கொடி. |
| ஆ) தோப்புக்கள் | - | தோப்பிலிருந்து இறக்கிவரப்பட்ட கள். |
| தோப்புகள் | - | தென்னந்தோப்புகள் பலவுண்டு. |
| இ) கடைப்பிடி | - | கொள்கையைக் கடைப்பிடிப்பது. |
| கடைபிடி | - | வாணிகம் தொடங்கக் கடை பிடித்தார். |
| ஈ) நடுக்கல் | - | அடையாளமாக நடுவது நடுக்கல் ஊன்றினோம். |
| நடுகல் | - | நினைவுச் சின்னம். |
| உ) கைம்மாறு | - | செய்த உதவி. |
| கைமாறு | - | கையில் உள்ள மாறு(விளக்குமாறு). |
| ஊ) பொய்ச்சொல் | - | நீ சொன்னது பொய்ச்சொல். |
| பொய் சொல் | - | பொய் சொல்வது தவறு. |

**3. சிந்தனை வினா:**

நாளிதழ்கள் சிலவற்றில் வல்லினம் மிகவேண்டிய இடத்தில் மிகாமல் எழுதி வருவதை நீங்கள் பார்த்திருப்பீர்கள். அவ்வாறு எழுதுவது மொழிக்கு வளம் சேர்க்குமா? வல்லினம் மிக வேண்டியதன் முக்கியத்துவத்தை எழுதுக.

Please Send Your Study Materials to our Email Id: padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.CBSEtips.in



| | |
|---|---|
| அதற்க்கு - தவறு | அதற்கு = அது + அன் + கு<br>அது (சுட்டுப்பெயர்) + அன் (சாரியை) + கு (வேற்றுமை உருபு)<br>அதன் + கு = அதற்கு - என்பதே சரி<br>எ.கா: இந்தப் பொருள் வேண்டாம். அதற்குப் பதிலாக இதை வைத்துக்கொள். |
| கடைபிடித்தல்<br>கடைப்பிடித்தல் | கடைபிடித்தல் - கடையைப்பிடித்தல்<br>கடைப்பிடித்தல் - பின்பற்றுதல்<br>எ.கா: சேகர் புதிதாக வாணிகம் தொடங்கக் கடை பிடித்தார்.<br>நாங்கள் என்றும் தூய்மையைக் கடைப்பிடிப்போம். |

அதற்க்கு - தவறு
வல்லொற்றுக்கு அருகில் இன்னொரு வல்லினம் மிகாது. அதற்கு என்றே எழுத வேண்டும்
கடைபிடி, கடைப்பிடி.
இதில் கடைபிடி என்பது கடையைப்பிடி என்று பொருள், அதே சொல்லில் வல்லினம் மிகுந்து 'கடைப்பிடி' என வரும் போது பின்பற்றுதல் என்னும் பொருள் தரும்.

எனவே வல்லினம் இட்டு எழுதுவதில் கவனம் தேவை!

**4. உரிய இடங்களில் வல்லின மெய்களை இட்டும் நீக்கியும் எழுதுக.**

பழங்கால மக்களின் நாகரிகம், பண்பாடு_த்_ தொடர்பான வரலாறுகளை அகழாய்வில் கிடைக்கின்ற_ப்_ பொருள்களும் உறுதிபடுத்துகின்றன. பல்வேறு இடங்களில் அகழாய்வுகள் மேற்கொள்ளப்படுகின்றன. அவ்வகையில் ஆய்வு நடைபெறுகின்ற இடங்களில் கீழடியும் ஒன்று. கீழடியில் வாழ்ந்த மக்களில் பலர்_ச்_ செல்வந்தர்களாக இருந்துள்ளனர் என்பதை அகழாய்வில் கிடைத்த_ப்_ பொருள்கள் நமக்கு உணர்த்துகின்றன. இங்கு_க்_ குறைவான எண்ணிக்கையில்தான் தங்கத்தினாலான_ப்_ பொருள்கள் கிடைக்கின்றன. மேலும் இரும்பைப்பயன்படுத்தி_ச்_ செய்த_க்_ கோடரி, குத்தீட்டிகள், முதலான கருவிகளும் யானைத்தந்தத்தினால் செய்த_ச்_ சீப்பு, மோதிரம், பகடை, காதணிகள். கண்ணாடி_ப்_ பொருள்களில் உருவாக்கிய மணிகள், வளையல், தோடு_ப்_ போன்றவையும் கிடைத்துள்ளன.

## மொழியை ஆழ்வோம்

**பொன்மொழிகளை மொழி பெயர்க்க.**

1. **A Nation's culture resides in the hearts and in the soul of its people. -Mahatma Gandhi**
நம் நாட்டினுடைய பண்பாட்டினை மக்கள் அனைவரும் தம் இதயங்களிலும், ஆத்மாவிலும் நிலைத்திருக்கச் செய்ய வேண்டும்.
2. **The art of people is a true mirror to their minds. - Jawaharlal Nehru**
மக்களின் கலை உணர்வே அவர்களின் உள்ளத்தைப் பிரதிபலிக்கும் கண்ணாடி.
3. **The biggest problem is the lack of love and charity. - Mother Teresa**
அன்பு செலுத்துதல், தர்மம் செய்தல் இவற்றின் குறைபாடே, மிகப்பெரிய பிரச்சனையாய் உள்ளது.
4. **You have to dream before your dreams can come true. - A.P.J. Abdul Kalam**
உங்கள் கனவு நனவாகும் வரை, கனவு காணுங்கள்.

Please Send Your Study Materials to our Email Id: padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.CBSEtips.in



5. **Winners don't do different things; they do things differently. - Shiv Khera**
வெற்றியாளர்கள் வித்தியாசமான செயல்களைச் செய்வதில்லை மாறாக ஒவ்வொரு செயலையும் வித்தியாசமாக செய்கிறார்கள்.

பக்கம்: 83

**வடிவம் மாற்றுக.**

**பின்வரும் கருத்துகளை உள்வாங்கிக் கொண்டு, வரிசைப்படுத்தி முறையான பத்தியாக்குக.**

1. உலகின் மிகப்பெரிய கல்மரப் படிமமும் இங்கேதான் கண்டெடுக்கப்பட்டுள்ளது.
2. டைனோசர்கள் உலாவித் திரிந்த தமிழ்மண் என்று அரியலூர் பெரம்பலூர் மாவட்டங்கள் அறியப்படுகின்றன. பெரம்பலூர் மாவட்டத்தில் கடல்பகுதி இருந்துள்ளது என்பதை அங்குக் கிடைத்துள்ள ஆதாரங்கள் உறுதி செய்கின்றன.
3. இங்குக் கல்லாகிப் போன டைனோசர் முட்டைகள், பாறைப் படிமமாகக் கிடைத்த கடல் நத்தை, டைனோசரின் வால்பகுதி, கடல் கிளிஞ்சல்களின் பாறைப் படிமங்கள் போன்றவை கிடைத்துள்ளன.
4. தமிழ்மக்களின் தொன்மையை மீட்டெடுப்பதுடன் நாம் வாழ்கின்ற நிலப்பகுதியின் வரலாற்றையும் தெரிந்துகொள்ள அரியலூரும் பெரம்பலூரும் அரிய ஊர்களாய்த் திகழ்கின்றன.

**விடை:**

தமிழ் மக்களின் தொன்மையை மீட்டெடுப்பதுடன் நாம் வாழ்கின்ற நிலப்பகுதியின் வரலாற்றையும் தெரிந்துகொள்ள அரியலூரும் பெரம்பலூரும் அரிய ஊர்களாய்த் திகழ்கின்றன. டைனோசர்கள் உலாவித் திரிந்த தமிழ் மண் என்று அரியலூர், பெரம்பலூர் மாவட்டங்கள் அறியப்படுகின்றன. பெரம்பலூர் மாவட்டத்தில் கடல்பகுதி இருந்துள்ளது என்பதை அங்குக் கிடைத்துள்ள ஆதாரங்கள் உறுதி செய்கின்றன. இங்குக் கல்லாகிப் போன டைனோசர் முட்டைகள், பாறைப் படிமமாகக் கிடைத்த கடல் நத்தை, டைனோசரின் வால்பகுதி, கடல் கிளிஞ்சல்களின் பாறைப் படிமங்கள் போன்றவை கிடைத்துள்ளன. உலகின் மிகப்பெரிய கல்மரப் படிமமும் இங்கேதான் கண்டெடுக்கப்பட்டுள்ளது

மரபு இணைச்சொற்களைத் தொடரில் அமைத்து எழுதுக.

1. **மேடும் பள்ளமும்** : மனித வாழ்வு மேடும் பள்ளமும் நிறைந்தது.
2. **நகமும் சதையும்** : கோவலனும் கண்ணகியும் நகமும் சதையும் போல வாழ்ந்தனர்.
3. **முதலும் முடிவும்** : இறைவன் கையில் தான் முதலும் முடிவும் உள்ளது.
4. **கேளிக்கையும் வேடிக்கையும்**: விகடகவிகள் கேளிக்கையும் வேடிக்கையும் கொண்டவர்கள்.
5. **மேலும் கீழும்** : இராவணன் அனுமனை மேலும் கீழும் பார்த்தான்.

தொகுப்புரை எழுதுக.

பள்ளியில் நடைபெற்ற இலக்கியமன்ற விழா நிகழ்ச்சிகளைத் திரட்டித் தொகுப்புரை உருவாக்குக.

## மதரஸா இஸ்லாமியா உயர்நிலைப்பள்ளி

### தமிழ் இலக்கிய மன்ற விழா

தொகுப்புரை:

தமிழ்த்தாய் வாழ்த்துடன் பள்ளி இலக்கிய மன்ற விழா இன்று காலை 10.00 மணியளவில் நடைபெற்றது. இந்நிகழ்ச்சிக்குப் பள்ளித்தலைவர் தலைமையேற்றுத் தலைமையுரை ஆற்றினார். அவர் தலைமையுரை ஆற்றும் போது மாணவர்கள் தமிழ் மீது பற்று கொண்டு தமிழைப்

Please Send Your Study Materials to our Email Id: padasalai.net@gmail.com

போற்றிப்பரவ வேண்டும் என்றார். முன்னதாக இலக்கிய மன்றச் செயலர் 9ம் வகுப்பு மாணவர் சிற்பி அனைவரையும் வரவேற்றார். பள்ளித் தலைமையாசிரியர் முன்னிலை நிகழ்விற்கு முன்னிலை வகித்தார்.

10ஆம் வகுப்பு மாணவர் அசோக், ''காலம் பொன் போன்றது'' என்னும் தலைப்பில் பேசும் போது, காலம் கடல் அலையைப் போலத் தான் வேகமாகச் சென்றுவிடும். தக்க காலத்தில் தக்க செயல்களைச் செய்து முடியுங்கள். அதுவே உங்களுக்குப் பாதுகாப்பு தரும் என்றார். இந்நிகழ்வில் கவிஞர். சா அவர்கள் சிறப்பு விருந்தினராகப் பங்கேற்று கவிதை மழையுடன் சொற்பொழிவாற்றினார். பல்வேறு போட்டியில் வெற்றி பெற்றவர்களுக்குப் பரிசு வழங்கிச் சிறப்பித்தார்.

10ஆம் வகுப்பு மாணவி தமிழரசி நிகழ்வின் இறுதியில் நன்றியுரை ஆற்றினார். நாட்டுப்பண்ணுடன் விழா நிகழ்வு நிறைவுற்றது.

**பத்தியைப் படித்து வினாக்களுக்கு விடையளிக்க.**

தென்னிந்தியாவின் அடையாளச் சின்னமாகக் காங்கேயம் மாடுகள் போற்றப்படுகின்றன. தமிழக மாட்டினங்களின் தாய் இனம் என்று 'காங்கேயம்' கருதப்படுகிறது. பிறக்கும்போது சிவப்பு நிறத்தில் இருக்கும் காங்கேயம் மாடுகள், ஆறு மாதம் வளர்ந்த பிறகு சாம்பல் நிறத்துக்கு மாறிவிடுகின்றன. பசுக்கள் சாம்பல் அல்லது வெள்ளை நிறத்தில் இருக்கின்றன. மிடுக்கான தோற்றத்துக்குப் பெயர்பெற்ற காங்கேயம் இனக் காளைகள் ஏறுதழுவுதல் நிகழ்விற்கும் பெயர் பெற்றுள்ளன. அத்துடன், ஏர் உழுவதற்கும் வண்டி இழுப்பதற்கும் அதிகம் பயன்படுத்தப்படுகின்றன.

கடுமையாக உழைக்கக்கூடிய காங்கேயம் மாடுகள் கேரளம், கர்நாடகம், ஆந்திரம் ஆகிய மாநிலத்தவரால் விரும்பி வாங்கிச் செல்லப்படுகின்றன. இலங்கை, பிரேசில், பிலிப்பைன்ஸ், மலேசியா ஆகிய நாடுகளுக்கும் ஏற்றுமதி செய்யப்படுகின்றன. கரூர் அமராவதி ஆற்றுத் துறையில் காங்கேய மாடுகளின் உருவம் பொறித்த கி.மு. முதல் நூற்றாண்டைச் சேர்ந்த சேரர் கால நாணயங்கள் கண்டெடுக்கப்பட்டுள்ளன.

**வினாக்கள்:**

**1. பின்வரும் நான்கு வினாக்களுக்கும் பொருந்தும் ஒரு விடையைத் தருக.**

அ) மிடுக்குத் தோற்றத்திற்கும் ஏறுதழுவுதலுக்கும் பெயர் பெற்றவை எவை?
ஆ) தமிழக மாட்டினங்களின் தாய் இனம் என்று கருதப்படுவது யாது?
இ) பிற மாநிலத்தவர் விரும்பி வாங்கிச் செல்கின்ற காளை இனம் எது?
ஈ) மேற்கண்ட பத்தி எதைக் குறிப்பிடுகிறது?

**விடை: காங்கேயம் இனக் காளைகள்**

பக்கம்: 84

**2. பொருந்தாத சொல்லைக் கண்டறிக.**

அ) கர்நாடகம் ஆ) கேரளா இ) இலங்கை ஈ) ஆந்திரா

**விடை: இ) இலங்கை**

**3. பிரித்து எழுதுக: கண்டெடுக்கப்பட்டுள்ளன**

அ) கண்டு + எடுக்கப்பட்டு + உள்ளன ஆ) கண்டு + எடுக்கப் + பட்டுள்ளன
இ) கண்டெடுக்க + பட்டு + உள்ளன ஈ) கண் + டெடுக்க + பட்டு + உள்ளன

**விடை: அ) கண்டு + எடுக்கப்பட்டு + உள்ளன**

www.Padasalai.Net www.CBSEtips.in



**4. தென்னிந்தியாவின் அடையாளச் சின்னமாகக் காங்கேயம் மாடுகள் போற்றப்படுகின்றன - இது எவ்வகைத் தொடர்?**

அ) வினாத் தொடர் ஆ) கட்டளைத்தொடர்

இ) செய்தித்தொடர் ஈ) உணர்ச்சித்தொடர்

**விடை: இ) செய்தித்தொடர்**

## மொழியோடு விளையாடு

**பொருள் எழுதித் தொடரமைக்க.**

**கரை, கறை; குளவி, குழவி; வாளை, வாழை; பரவை, பறவை; மரை, மறை**

| | | |
|---|---|---|
| **அலை** | கடலலை | இன்று கடலலையின் வேகம் மிக அதிகமாவுள்ளது. |
| **அழை** | வரவழைத்தல் | என் நண்பர்களை வரவழைத்துள்ளேன். |
| **கரை** | ஆற்றின் ஓரம் | ஆற்றங்கரையில் தென்னை மரங்கள் செழித்து வளர்ந்து உள்ளன. |
| **கறை** | படிவது கறை | சட்டையில் கறை படிந்துள்ளது. |
| **குளவி** | பூச்சி வகைகளுள் ஒன்று | வாசல் நிலைப்படியில் குளவி கூடுகட்டிருக்கிறது. |
| **குழவி** | குழந்தை | குழவி மருங்கினும் கிழவதாகும் (பிள்ளைத்தமிழ்). |
| **வாளை** | மீன்களில் ஒருவகை | நீர் நிலைகளில் வாளை மீன் துள்ளிக் குதித்தது. |
| **வாழை** | வாழை மரம் | திருமணப் பந்தலில் வாழை மரங்கள் கட்டினர். |
| **பரவை** | பரந்துள்ள கடல் | மதுரைக்குப் பக்கத்திலுள்ள சிற்றூர் பரவை. |
| **பறவை** | பறப்பவை | காலைப் பொழுதில் பறவைகள் பாடும். |
| **மரை** | மான், தாமரை | தாமரை நீர் நிலையில் மலரும். |
| **மறை** | வேதம் | வேதபாட சாலையில் நான்மறை ஓதப்பட்டன. |

**அகராதியில் காண்க.**

**இயவை, சந்தப்பேழை, சிட்டம், தகழ்வு, பௌரி.**

**இயவை** : வழி, மூங்கில் அரிசி, துவரை, தோரை நெல், காடு.
**சந்தப்பேழை** : சந்தனப் பெட்டி.
**சிட்டம்** : நூல் சிட்டம், எரிந்து கருகியது, பெருமை அறிவு, நீதி, உயர்ந்து.
**தகழ்வு** : அகழ், அறிவு, உண்கலம்.
**பௌரி** : பெரும் பண்வகை.

**பொருள்தரும் வகையில் சொற்றொடர் உருவாக்குக.**

கொடுக்கப்பட்டுள்ள சொற்களைக் கொண்டு பொருள்தரும் வகையில் ஒரு சொல்லில் தொடரைத் தொடங்குக. அத்துடன் அடுத்தடுத்துச் சொற்களைச் சேர்த்து, புதிய புதிய சொற்றொடர்களை உருவாக்குக. இறுதித் தொடர் அனைத்துச் சொற்களையும் சேர்த்ததாக அமைய வேண்டும்.

**காலங்களில்** தெருவில் **வைக்காதீர்கள்** காப்புக் கம்பிகள் **கவனக்** குறைவுடன் **ஆகியவற்றின்** மீது காலை அறுந்த **மழைக்** மின்கம்பிகள்.

Please Send Your Study Materials to our Email Id: padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.CBSEtips.in



**விடை:**

1. வைக்காதீர்கள்.
2. **மழைக் காலங்களில் அறுந்த மின்கம்பிகள் காப்புக் கம்பிகள் மீது காலை** வைக்காதீர்கள்.
3. **மழைக் காலங்களில் தெருவில் அறுந்த மின்கம்பிகள் காப்புக் கம்பிகள் மீது காலை** வைக்காதீர்கள்.
4. **மழைக் காலங்களில் தெருவில் அறுந்த மின்கம்பிகள் காப்புக் கம்பிகள் மீது கவனக் குறைவுடன் காலை** வைக்காதீர்கள்.

## குறுக்கெழுத்துப் புதிர்

பக்கம்: 85

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 1 ஏ | | 2 இ | ந் | 3 தி | 4 ர | வி | ழா | |
| று | 5 த | வ | | ர | | | | 6 சா |
| 7 த | வ | ளை | 8 ஓ | ட் | ட | ம் | | ல |
| ழு | | | | 9 சி | | 10 வி | தி | |
| வு | ய் | 11 ஆ | | ர் | னா | த | த் | 12 சா |
| த | | | | கா | | 13 மா | 14 வ | டி |
| ல் | | ர் | 15 க | க் | | 16 | | க |
| | ய் | 17 யா | னி | 18 த | | | 19 கோ | ள் |

**இடமிருந்து வலம்**

2. விழாவறை காதை குறிப்பிடும் விழா (6)
5. சரி என்பதற்கான எதிர்ச்சொல் தரும் எழுத்துகள் இடம் மாறியுள்ளது (3)
7. பொங்கல் விழாவையொட்டி நடத்தப்படும் சிறுவர்களுக்கான போட்டிகளில் ஒன்று (7)
10. ஊழ் என்பதற்குத் தற்காலப் பயன்பாட்டில் உள்ள சொல் (2)
13. மா + அடி - இதன் புணர்ந்த வடிவம் (3)
19. கொள் என்பதன் முதல்நிலை திரிந்த தொழிற்பெயர் (2)

**வலமிருந்து இடம்**

9. தூய்மையற்ற குருதியை எடுத்துச் செல்லும் இரத்தக் குழாய் (2)
11. ஆராய்ச்சி என்பதன் சொற்சுருக்கம் (3)
12. மணிமேகலை காப்பியத்தின் ஆசிரியர் (5)
16. சல்லிக்கட்டு விளையாட்டுக்கு உரிய விலங்கு (2)
18. தனி + ஆள் - சேர்த்து எழுதுக. (4)

**மேலிருந்து கீழ்**

1. தமிழர்களின் வீர விளையாட்டு (7)
2. இவள் + ஐ - சேர்ந்தால் கிடைப்பது(3)
3. மரத்தில் காய்கள் ... ... .. ஆகக் காய்த்திருந்தன (4)
5. உரிச்சொற்களுள் ஒன்று (2)

Please Send Your Study Materials to our Email Id: padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.CBSEtips.in



6. .. ... ... ...... சிறந்தது(2)
8. நேர்ததைக் குறிப்பிடும் வானியல் சொல் (2)
12. அகழாய்வில் கிடைத்த கொள்கலன்களுள் ஒருவகை (4)
15. காய் பழுத்தால்... ... .... (2)

**கீழிருந்து மேல்**

14. ஒருவர் பற்றி ஒருவர் பிறரிடம் இதை வைக்கக் கூடாது (3)
17. யா முதல் வரும் வினாப்பெயர் (2)
18. தகவிலர் என்பதற்கு எதிர்ச்சொல்லாகத் திருவள்ளுவர் குறிப்பிடுவது (4)

காட்சி கண்டு கவினுற எழுதுக.

| | |
|---|---|
|  | கலைகள் பலகண்ட<br>கவின்மிகு தமிழ்நாடு<br>நாத கீதம்<br>மிருதங்க தாளம்<br>வீணை மெல்லிசை மீட்ட<br>புதுக்கோலம் புனைந்து<br>கோமாதா வாழ்த்த<br>தீபச்சுடரொளி எங்கும் ஏற்றுவோம்! |

Please Send Your Study Materials to our Email Id: padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.CBSEtips.in



இயல் 3 வாழ்வியல்

# திருக்குறள்

– திருவள்ளுவர்



ஆசிரியர் - திருவள்ளுவர்

வேறுபெயர்கள் - நாயனார்,தேவர்,முதற்பாவலர்,தெய்வப்புலவர்,நான்முகனார், மாதானுபங்கி, செந்தாப்போதார், பெருநாவலர்.

## கூடுதல் வினாக்கள்

### 1 குறுவினா

1. **அறனல்ல செய்யாமை நன்று - எப்போது?**
பிறர் தனக்குத் தரக் கூடாத துன்பத்தைத் தந்தாலும் மனம் நொந்து அறனல்ல செய்யாமை நன்று.

2. **பொறுமையால் எவரை வெல்ல வேண்டும்?**
செருக்கினால் துன்பம் தந்தவரை நம்முடைய பொறுமையால் வெல்ல வேண்டும்.

3. **தீயவை தீயினும் அஞ்சப்படும் - ஏன்?**
தீயவை தீயவற்றைத் தருவதால் தீயவை தீயினும் அஞ்சப்படும்.

4. **தலையாய செல்வம் எது ? ஏன்?**
தலையாய செல்வம் செவிச்செல்வம். பிற வழிகளில் வரும் செல்வங்களை விட சிறந்தது.

5. **உரைகல் கொண்டு வள்ளுவர் வலியுறுத்தும் கருத்து யாது?**
ஒருவரின் பெருமை, சிறுமைக்குக் காரணம் அவரது செயல்பாடுகளே ஆராய்ந்து அறியும் உரைகல் ஆகும்.

6. **தீரா இடும்பை (துன்பம்) தரும் எப்போது?**
ஆராயாமல் ஒருவரைத் தேர்வு செய்வதும், தேர்வு செய்த பின், அவரைப் பற்றி ஐயப்படுதலும் தீரா இடும்பை (துன்பம்) தரும்.

7. **பசுமண் கலத்துநீர் - பொருள் கூறுக.**
சுடாத மண்கலத்தில் நீர்.

8. **பசுமண் கலத்துநீரை (சுடாத மண்கலத்தில் நீர்) திருவள்ளுவர் எதற்கு உவமிக்கிறார்?**
பசுமண் கலத்துநீரை (சுடாத மண்கலத்தில் நீர்) திருவள்ளுவர் தீயசெயலால் பொருள் சேர்த்துப் பாதுகாத்தலுக்கு உவமிக்கிறார்.

Please Send Your Study Materials to our Email Id: padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.CBSEtips.in



9. வள்ளுவர் குறிப்பிடும் பேதையின் செயல்கள் யாவை?

- ◈ தகாத செயலுக்கு வெட்கப் படாமை.
- ◈ பிறரிடம் அன்பு இல்லாமை.
- ◈ தக்கவற்றை நாடாமை.
- ◈ எதனையும் பாதுகாக்காமை.

10. திருக்குறளுக்கு உரையெழுதிய பதின்மர் யாவர்?

- ◈ தருமர்
- ◈ பரிதி
- ◈ மல்லர்
- ◈ மணக்குடவர்
- ◈ பரிமேலழகர்
- ◈ பரிப்பெருமாள்
- ◈ தாமத்தர்
- ◈ திருமலையர்
- ◈ பரிப்பெருமாள் காளிங்கர்
- ◈ நச்சர்

11. திருக்குறளின் வேறுபெயர்கள் யாவை?

- ◈ முப்பால்
- ◈ பொய்யாமொழி
- ◈ தெய்வநூல்
- ◈ முதுமொழி
- ◈ பொதுமறை
- ◈ வாயுறை வாழ்த்து
- ◈ தமிழ் மறை
- ◈ பொருளுறை

## கற்பவை கற்றபின்... பக்கம்: 91

1. படத்திற்கேற்ற குறளைத் தேர்வு செய்க.



அ) நாணாமை நாடாமை நாரின்மை யாதொன்றும்
பேணாமை பேதை தொழில்.

ஆ) விழைதகையான் வேண்டி இருப்பர் கெழுதகையாற்
கேளாது நட்டார் செயின்

இ) செல்வத்துள் செல்வம் செவிச்செல்வம் அச்செல்வம்
செல்வத்துள் எல்லாந் தலை.

விடை: இ) செல்வத்துள் செல்வம் செவிச்செல்வம் அச்செல்வம்
செல்வத்துள் எல்லாந் தலை.

2. பாடலின் பொருளுக்குப் பொருத்தமான திருக்குறளைக் கண்டறிக.

**பாடல்**

ஆண்டில் இளையவனென்று அந்தோ அகந்தையினால்
ஈண்டிங்கு இகழ்ந்தென்னை ஏளனம்செய் – மாண்பற்ற
காரிருள்போல் உள்ளத்தான் காந்திமதி நாதனைப்
பாரதி சின்னப் பயல்.

(1893ல் பாரதியாரின் பதினோராவது வயதில் எட்டையபுரம் மன்னர் சமஸ்தானப் புலவர்கள் அவையில், அவரது கவித்திறனைப் புகழ்ந்து **'பாரதி'** என்ற பட்டத்தைச் சூட்டினார்.)

**குறள்**

அ) செவியிற் சுவையுணரா வாயுணர்வின் மாக்கள்
அவியினும் வாழினும் என்.

ஆ) மிகுதியான் மிக்கவை செய்தாரைத் தாம்தம்
தகுதியான் வென்று விடல்.

இ) குணம்நாடிக் குற்றமும் நாடி அவற்றுள்
மிகைநாடி மிக்க கொளல்.

Please Send Your Study Materials to our Email Id: padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.CBSEtips.in



**விடை: ஆ) மிகுதியான் மிக்கவை செய்தாரைத் தாம்தம்
தகுதியான் வென்று விடல்.**

**குறளுக்குப் பொருள்:**

நமக்கு நல்ல வசதியும் வாய்ப்பும் இருக்கிறது என்றெண்ணி "இவர்க்கு இத்தீங்கை செய்தால் எவர் நம்மை என்ன செய்ய முடியும்?" என்ற இறுமாப்புக் கொண்டு தீங்கிழைத்தவர்களையும் பொறுமைப் பண்பால் வெற்றி காண வேண்டும். (பொறையுடைமை : 8வது குறள்)

**3. பொருளுக்கேற்ற அடியைக் கண்டுபிடித்துப் பொருத்துக.**

| | | | |
|---|---|---|---|
| 1. | பசுமண் கலத்துநீர் பெய்திரீஇ யற்று | அ) | ஒருவனின் செயல்பாடுகளே உரசி அறியும் உரைகல் |
| 2. | தத்தம் கருமமே கட்டளைக்கல் | ஆ) | அவ்வளவிற்குப் பெருமை உண்டாக்கும் |
| 3. | அனைத்தானும் ஆன்ற பெருமை தரும் | இ) | சுடாத மண்கலத்தில் நீரூற்றி வைப்பதைப் போல |

**விடை: 1. இ 2. அ 3. ஆ**

**4. தீரா இடும்பை தருவது எது?**

அ) ஆராயாமை, ஐயப்படுதல் ஆ) குணம், குற்றம்
இ) பெருமை, சிறுமை ஈ) நாடாமை, பேணாமை

**விடை: அ) ஆராயாமை, ஐயப்படுதல்**

**குறள்: தேரான் தெளிவும் தெளிந்தான்கண் ஐயுறவும்
தீரா இடும்பை தரும்.**

5. சொல்லுக்கான பொருளைத்தொடரில் அமைத்து எழுதுக.

அ) **நுணங்கிய கேள்வியர் :** (பொருள்: மிகவும் நுணுக்கமான அறிவு)
தாமஸ் ஆல்வா எடிசன் நுணங்கிய கேள்வியராக இளமையில் விளங்கினார்.

ஆ) **பேணாமை :** (பொருள்: பாதுகாக்காமை)
உழவனால் பேணாத பயிர் பாழாகும்.

இ) **செவிச்செல்வம்:** (பொருள்: கேள்வியறிவு)
செவிச்செல்வம் பெற்றவரே சாதனையாளர் களாக உருவெடுக்கிறார்கள்.

ஈ) **அறனல்ல செய்யாமை :** (பொருள்: நல்லன அல்லாதவற்றைச் செய்யாதே)
காந்தியடிகள் அறனல்ல செய்கைகளைச் செய்யாதவர்.

## 1 குறுவினா

1. நிலம் போல யாரிடம் பொறுமை காக்க வேண்டும்?

தன்னை இகழ்பவரிடம் நிலம் போலப் பொறுமை காக்க வேண்டும்.

2. தீயவை தீய பயத்தலால் தீயவை
தீயினும் அஞ்சப் படும். - இக்குறட்பாவின் கருத்தை விளக்குக.

தீய செயல் தீமையே தரும். தீயை விடக்கொடியதாக நினைத்து அதனைச் செய்ய அஞ்ச வேண்டும்.

Please Send Your Study Materials to our Email Id: padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.CBSEtips.in



3. ஒற்றொற்றித் தந்த பொருளையும் மற்றுமோர்
ஒற்றினால் ஒற்றிக் கொளல் - இக்குறட்பாவில் அமைந்துள்ள நயங்களை எழுதுக.

| | | |
|---|---|---|
| எதுகை நயம் | : இரண்டாம் எழுத்து ஒன்றி வருவது. | ஒற்றொற்றித் - ஒற்றினால் |
| மோனை நயம் | : முதல் எழுத்து ஒன்றி வருவது. | ஒற்றொற்றித் - ஒற்றினால் |

4. கனவிலும் இனிக்காதது எவர் நட்பு?

செயல் வேறு, சொல் வேறு என்று உள்ளவர் நட்பு கனவிலும் இனிக்காதது ஆகும்.

**கதைக்குப் பொருத்தமான குறளைத் தேர்வு செய்து காரணத்தை எழுதுக.**

மௌனவிரதம் என்னும் தலைப்பில் நான்கு நண்பர்கள் ஒரு சொற்பொழிவைக் கேட்டனர். தாங்களும் ஒரு வாரத்துக்கு மௌனவிரதம் இருப்பதாகத் தீர்மானம் செய்தனர். மௌனவிரதம் ஆரம்பமாகி விட்டது! கொஞ்ச நேரம் போனதும் ஒருவன் சொன்னான். “எங்கள் வீட்டு அடுப்பை அணைத்துவிட்டேனா தெரியவில்லையே!”

பக்கத்திலிருந்தவன் “அடப்பாவி! பேசிட்டியே!” என்றான்.

உடனே மூன்றாவது ஆள், “நீ மட்டும் என்ன? நீயும்தான் பேசிவிட்டாய்!” என்றான்.

நான்காவது ஆள், “நல்லவேளை! நான் மட்டும் பேசவில்லை!” என்றான்.

இப்படியாக அவர்களின் மௌனவிரதம் முடிந்துபோனது.

1. மறந்தும் பிறன்கேடு சூழற்க சூழின்
அறஞ்சூழும் சூழ்ந்தவன் கேடு.
2. திறனல்ல தற்பிறர் செய்யினும் நோநொந்து
அறனல்ல செய்யாமை நன்று.
3. ஓதி உணர்ந்தும் பிறர்க்குரைத்தும் தானடங்காப்
பேதையின் பேதையார் இல்.

**விடை: 3. ஓதி உணர்ந்தும் பிறர்க்குரைத்தும் தானடங்காப்
பேதையின் பேதையார் இல்.**

## கலைச்சொல் அறிவோம்

| | | | |
|---|---|---|---|
| அகழாய்வு | Excavation | பண்பாட்டுக் குறியீடு | Cultural Symbol |
| கல்வெட்டியல் | Epigraphy | புடைப்புச் சிற்பம் | Embossed sculpture |
| நடுகல் | Hero Stone | பொறிப்பு | Inscription |

Please Send Your Study Materials to our Email Id: padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.CBSEtips.in



# இயல் 4 உரைநடை உலகம் — இயந்திரங்களும் இணையவழிப் பயன்பாடும்

## பாடநூல் மதிப்பீட்டு வினா

### 1 பலவுள் தெரிக

1. கீழ்க்காணும் மூன்று தொடர்களுள் -

அ. இருந்த இடத்திலிருந்தே பயணச்சீட்டு எடுப்பதை எளிதாக்கிய மிகப்பெரிய இந்திய நிறுவனம் இந்தியத் தொடர் வண்டி உணவு வழங்கல் மற்றும் சுற்றுலாக் கழகம் ஆகும்.

ஆ. வங்கி அட்டை இல்லை என்றால் அலைபேசி எண், வங்கிக்கணக்கு எண் ஆகியவற்றைக் கொண்டு பணம் செலுத்த இயலாது.

இ. திறன் அட்டை என்பவை குடும்ப அட்டைக்களுக்கு மாற்றாக வழங்கப்பட்டனவாகும்.

1) அ, ஆ ஆகியன சரி; இ தவறு 2) அ, இ ஆகியன சரி; ஆ தவறு
3) அ தவறு; ஆ, இ ஆகியன சரி 4) மூன்றும் சரி

**விடை: 2) அ, இ ஆகியன சரி; ஆ தவறு**

2. தமிழக அரசு கிராமப்புற மாணவர்களுக்கு நடத்தும் திறனாய்வுத் தேர்வு எது?

அ) தேசியத் திறனாய்வுத் தேர்வு ஆ) ஊரகத்திறனாய்வுத்தேர்வு
இ) தேசியத் திறனறி, கல்வி உதவித்தொகைத் தேர்வு ஈ) மூன்றும் சரி

**விடை: ஆ) ஊரகத்திறனாய்வுத்தேர்வு**

### 2 குறுவினா

1. இணையவழியில் இயங்கும் மின்னணு இயந்திரங்கள் எவையேனும் ஐந்தினைக் குறிப்பிடுக.

- தொலைநகல் இயந்திரம்
- திறனட்டைக்கருவி
- தானியக்கப் பண இயந்திரம்
- ஆளறிசோதனைக் கருவி
- அட்டைப்பயன்படுத்தும் இயந்திரம்

### 3 சிறுவினா

1. பள்ளி மாணவர்களுக்கான தமிழக அரசின் இணையவழிச் சேவைகளை எழுதுக

| வகுப்பு | கல்வி உதவித்தொகை தேர்வு |
|---|---|
| 10ஆம் வகுப்பு மாணவர்கள் | தேசியத்திறனாய்வுத் தேர்வு (NTSE) |
| 8ஆம் வகுப்பு மாணவர்கள் | தேசியத்திறனாய்வு மற்றும் கல்வி உதவித் தொகைத் தேர்வு (NMMS) |
| 9ஆம் வகுப்பு கிராமப் பள்ளி மாணவர்கள் | ஊரகத் திறனாய்வுத் தேர்வு (TRUST) |

Please Send Your Study Materials to our Email Id: padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.CBSEtips.in



இத்தேர்வுகளை இணையம் மூலம் பள்ளியிலேயே விண்ணப்பிக்கலாம்.

◈ 10 மற்றும் 12ஆம் வகுப்பு முடித்தவர்கள், அவர்கள் பள்ளியிலேயே அரசு வேலை வாய்ப்பகப் பதிவினைச் செய்யலாம்.

◈ விலையில்லா மிதிவண்டி, மடிக்கணினி பெற்றவர்களின் விவரங்கள் இணையம் மூலம் கணினியில் பதிவேற்றம் செய்யப்படுகின்றது.

## 4 நெடுவினா

1. **அன்றாட வாழ்வில் நீங்கள் பயன்படுத்தும் இரண்டு இணையவழிச் சேவைகள் பற்றி விரிவாகத் தொகுத்து எழுதுக.**

**அட்டைப் பயன்படுத்தும் இயந்திரம்:**

◈ கையில் பணம் இல்லாமல் கடைக்குச் சென்று பொருள் வாங்கவும் மற்ற வணிகப் பரிமாற்றங்களுக்கும் இந்தக் கருவி பயன்படுகின்றது.

◈ இந்த இயந்திரத்தில் வங்கி அட்டையின் காந்தப்பட்டை இருக்கும் பகுதியைத் தேய்க்கும்போது வாடிக்கையாளரின் விவரங்கள், இணையத்தொடர்பின் மூலம் வங்கிக் கணினிக்குச் செல்கிறது.

◈ கணினியால் அட்டை ஆராயப்பட்டுக் கடவுச்சொல் சரிபார்க்கப்பட்டு பணப் பரிவர்த்தனைக்கு வங்கி ஒப்புதல் அளிக்கின்றது.

**திறன் அட்டைக் கருவி:**

◈ தமிழகத்தில் குடும்பஅட்டைகள் திறன்அட்டைகளாக மாற்றப்பட்டுள்ளன.

◈ குடும்பத்தில் உள்ளவர்களின் ஆதார் எண்கள், அலைபேசி எண், முகவரி ஆகிய விவரங்கள் சேர்த்து திறன்அட்டைகள் வழங்கப்படுகின்றன.

◈ நியாயவிலைக் கடையில் திறன்அட்டை விற்பனைக்கருவியில் வருடப்படுகின்றன.

◈ அங்கு விற்பனை செய்யப்படும் விவரங்கள் குறிப்பாக பதிவு செய்யப்பட்டு அலைபேசிக்குக் குறுஞ்செய்தியாக வரும்.

## கூடுதல் வினாக்கள்

## 1 பலவுள் தெரிக

1. **பொருத்துக.**

| | | |
|---|---|---|
| 1. ஒளிப்படி இயந்திரம் | - அ) | ஜியோவான்னி காசில்லி |
| 2. தொலைநகல் கருவி | - ஆ) | செஸ்டர்ன் கார்ல்சன் |
| 3. தானியங்கிப் பண இயந்திரம் | - இ) | மைக்கேல் ஆல்ட்ரிச் |
| 4. இணைய வணிகம் | - ஈ) | ஜான் செப்பர்டு பாரன் |

அ) 1-ஆ 2-அ 3-ஈ 4-இ ஆ) 1-அ 2-ஆ 3-ஈ 4-இ

இ) 1-ஆ 2-ஈ 3-ஆ 4-இ ஈ) 1-இ 2-ஆ 3-ஈ 4-அ

**விடை: அ) 1-ஆ 2-அ 3-ஈ 4-இ**

Please Send Your Study Materials to our Email Id: padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.CBSEtips.in



2. **பொருத்துக.**

1. தேசியத் திறனாய்வுத் தேர்வு - அ) 10ஆம் வகுப்பு மாணவர்களுக்கு
2. ஊரகத்திறனாய்வுத்தேர்வு - ஆ) 8ஆம் வகுப்பு மாணவர்களுக்கு
3. தேசியத் திறனறி, கல்வி உதவித்தொகைத் தேர்வு - இ) 9ஆம் வகுப்பு கிராமப்புற மாணவர்களுக்கு

அ) 1-ஆ 2-இ 3-அ ஆ) 1-அ 2-இ 3-ஆ இ) 1-இ 2-அ 3-ஆ

**விடை: ஆ) 1-அ 2-இ 3-ஆ**

3. **பொருந்தாதவற்றைக் கண்டறிக.**

அ) தேசியத் திறனாய்வுத் தேர்வு
ஆ) ஊரகத்திறனாய்வுத்தேர்வு
இ) தேசியத் திறனறி, கல்வி உதவித்தொகைத் தேர்வு
ஈ) தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வு வாரியம்

**விடை: ஈ) தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வு வாரியம்.**

4. **பொருத்துக.**

1. இணைய வணிகம் - அ) 1990
2. வையக விரிவு வலை - ஆ) 1979
3. தானியங்கிப் பண இயந்திரம் - இ) 1967
4. காமா ஃபேக்ஸ் - ஈ) 1985

அ) 1-ஆ 2-அ 3-இ 4-ஈ ஆ) 1-இ 2-அ 3-ஆ 4-ஈ
இ) 1-ஆ 2-ஈ 3-இ 4-அ ஈ) 1-அ 2-இ 3-ஆ 4-ஈ

**விடை: அ) 1-ஆ 2-அ 3-இ 4-ஈ**

5. **தமிழகத்தில் குடும்ப அட்டை __________ அட்டையாக மாற்றப்பட்டுள்ளது.**

அ) ஆதார் ஆ) திறன் இ) பான் ஈ) கடன் **விடை: ஆ) திறன்**

6. **கடிதப் போக்குவரத்து குறையவும் தந்திப் பயன்பாடு விடைபெறவும் காரணம்**

அ) மின்னஞ்சல் ஆ) தொலை நகல்
இ) தூதஞ்சல் ஈ) எதுவுமில்லை **விடை: அ) மின்னஞ்சல்**

7. **சீமோகிராஃபி என்பதன் பொருள் __________.**

அ) உலர் எழுத்து முறை ஆ) ஈர எழுத்து முறை
இ) வண்ண எழுத்துமுறை ஈ) எதுவுமில்லை **விடை: அ) உலர் எழுத்து முறை**

8. **1938இல் உலகின் முதல் ஒளிப்படியை எடுத்தவர் __________.**

அ) ஜியோவான்னி காசில்லி ஆ) செஸ்டர்ன் கார்ல்சன்
இ) மைக்கேல் ஆல்ட்ரிச் ஈ) ஜான் செப்பர்டு பாரன்

**விடை: ஆ) செஸ்டர்ன் கார்ல்சன்**

9. **பான்டெலி கிராஃப் என்ற தொலைநகல் கருவியைக் கண்டுபிடித்தவர் __________.**

அ) ஜியோவான்னி காசில்லி ஆ) செஸ்டர்ன் கார்ல்சன்
இ) மைக்கேல் ஆல்ட்ரிச் ஈ) ஜான் செப்பர்டு பாரன்

**விடை: அ) ஜியோவான்னி காசில்லி**

10. **தொலைநகல் சேவை தொடங்கப்பட்ட ஆண்டு __________.**

அ) 1865 ஆ) 1965 இ) 1976 ஈ) 1988 **விடை: அ) 1865**

Please Send Your Study Materials to our Email Id: padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.CBSEtips.in



11. **இங்கிலாந்துப் பொறியாளர் __________.**

அ) ஜியோவான்னி காசில்லி ஆ) செஸ்டர்ன் கார்ல்சன்
இ) மைக்கேல் ஆல்ட்ரிச் ஈ) ஜான் செப்பர்டு பாரன்

**விடை: ஈ) ஜான் செப்பர்டு பாரன்**

12. **கையில் பணம் இல்லாமல் கடைக்குச் சென்று பொருள் வாங்கவும் மற்ற வணிகப் பரிமாற்றங்களுக்கும் பயன்படும் கருவி __________.**

அ) திறன் அட்டை ஆ) தானியங்கிப் பண இயந்திரம்
இ) அட்டை தேய்ப்பி இயந்திரம் ஈ) ஆதார் **விடை: இ) அட்டை தேய்ப்பி இயந்திரம்**

**கோடிட்ட இடங்களை நிரப்புக.**

1. __________ முன்னேற்றமே மனிதனின் பயண நேரம் குறையக் காரணம் ஆகும்.
**விடை: அறிவியல்**
2. கோப்புகளையும் ஒளிப்படங்களையும் உடனடியாக ஓரிடத்திலிருந்து மற்றோர் இடத்திற்கு அனுப்பப் பயன்படும் கருவி __________ **விடை: தொலை நகல் இயந்திரம்**
3. நியூயார்க்கைச் சேர்ந்த காப்புரிமைச் சட்ட வல்லுநர் __________
**விடை: செஸ்டர் கார்ல்சன்**
4. பான்டெலி கிராஃப் என்ற தொலைநகல் கருவியை வடிவமைத்தவர் __________
**விடை: ஜியோவான்னி காசில்லி**
5. 1985 ல் __________ என்பவர் கணினி மூலம் தொலைநகல் எடுக்கும் தொழில்நுட்பத்தைக் கண்டுபிடித்தார். **விடை: ஹாங்க் மாக்னஸ்கி**
6. தேசியத் திறனாய்வுத் தேர்வு __________ மாணவர்களுக்கு. **விடை: 10ஆம் வகுப்பு**
7. ஊரகத்திறனாய்வுத்தேர்வு __________ கிராமப்புற மாணவர்களுக்கு.
**விடை: 9ஆம் வகுப்பு**
8. தேசியத் திறனறி , கல்வி உதவித்தொகைத் தேர்வு__________ மாணவர்களுக்கு.
**விடை: 8ஆம் வகுப்பு**
9. இன்று _______ இன்றி உலகம் இயங்குவதில்லை. **விடை: இயந்திரங்களும் கணினிகளும்**
10. கரும்பு முதல் கணினி வரை __________ வழியில் விற்கப்படுகின்றது. **விடை: இணையம்**

## 2 குறுவினா

1. **ஆளறிசோதனைக் கருவியின் பயன்களைக் கூறுக:**

அரசு நிறுவனங்களிலும் தனியார் நிறுவனங்களிலும் வருகைப் பதிவுக்காகவும் வெளியேறுகைப் பதிவுக்காகவும் இக்கருவி பயன்படுகிறது.

2. **எப்போது வாழ்வில் ஏற்றம் பெறுவோம்?**

எதிர்கால நலன் ஒன்றையே கருத்தில் கொண்டு இயத்திரங்களையும் இணையத்தையும் முறையாகப் பயன்படுத்தி வாழ்வில் ஏற்றம்பெறுவோம்.

Please Send Your Study Materials to our Email Id: padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.CBSEtips.in



3. **கடிதப் போக்குவரத்து குறையவும் தந்திப் பயன்பாடு விடைபெறவும் காரணம் யாது?**
 - ◈ மின்னஞ்சல் மூலமாக கடிதப் போக்குவரத்து குறைந்தது.
 - ◈ குறுஞ்செய்தி வருகைக்குப் பின் தந்திப் பயன்பாடு விடைபெற்றது.

4. **இன்று வாழ்க்கை எதில் உருள்கின்றது?**

 இன்று வாழ்க்கை வங்கிகள் தரும் அட்டைகளில் உருள்கின்றது.

5. **மனிதனின் பயண நேரம் குறையக் காரணம் யாது?**

 அறிவியல் முன்னேற்றமே மனிதனின் பயண நேரம் குறையக் காரணம் ஆகும்.

6. **கிரேக்க மொழியில் சீமோகிராஃபி என்பதன் பொருள் யாது?**

 சீமோகிராஃபி என்பதன் பொருள் : உலர் எழுத்து முறை.

7. **ஒளிப்படி இயந்திரம் எப்போது யாரால் உருவாக்கப்பட்டது?**

 1959 - செஸ்டர் கார்ல்சன்.

8. **செஸ்டர் கார்ல்சன் என்பவர் யார்?**
 - ◈ நியூயார்க்கைச் சேர்ந்த காப்புரிமைச் சட்ட வல்லுநர்.
 - ◈ பகுதி நேர ஆய்வாளர்.
 - ◈ 1938ல் உலகின் முதல் ஒளிப்படியை எடுத்தவர்.
 - ◈ 1959ல் ஒளிப்படி இயந்திரம் உருவாக்கியவர்.

9. **தொலைநகல் இயந்திரத்தின் பயன் யாது?**

 கோப்புகளையும் ஒளிப்படங்களையும் உடனடியாக ஓரிடத்திலிருந்து மற்றோர் இடத்திற்கு அனுப்பப் பயன்படுகின்றது.

10. **தொலைநகல் கருவியைக் கண்டுபிடித்தவர் யார்?**

 ஜியோவான்னி காசில்லி.

11. **ஜியோவான்னி காசில்லி கண்டுபிடித்த கருவி யாது?**

 பான்டெலி கிராஃப் என்ற தொலைநகல் கருவி.

12. **தொலைநகல் சேவை எப்போது எங்கு தொடங்கப்பட்டது?**

 1865 இல் பாரிஸ் நகரிலிருந்து லியான் நகரத்துக்குத் தொலைநகல் சேவை தொடங்கப்பட்டது.

13. **கணினி மூலம் தொலைநகல் எடுக்கும் தொழில்நுட்பம் எப்போது யாரால் கண்டுபிடிக்கப் பட்டது?**

 1985 ல் ஹாங்க் மாக்னஸ்கி என்பவர் கணினி மூலம் தொலைநகல் எடுக்கும் தொழில் நுட்பத்தைக் கண்டுபிடித்தார்.

14. **முதல் தானியக்கப் பணஇயந்திரம் எப்போது எங்கு நிறுவப்பட்டது?**

 இங்கிலாந்துப் பொறியாளர் ஜான் ஷெப்பர்டு பாரன் என்பவரின் தலைமையிலான குழு பார்க்லேஸ் வங்கிக்காக இலண்டனில் 1967 ஜீன் 27ல் தானியக்கப் பண இயந்திரம் நிறுவப்பட்டது.

15. **அட்டைத்தேப்பி இயந்திரத்தின் வேறுபெயர்கள் யாவை?**

 கட்டணம் செலுத்தும் கருவி, விற்பனைக் கருவி.

Please Send Your Study Materials to our Email Id: padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.CBSEtips.in



**16. தமிழக அரசின் நியாய விலைக் கடைகளில் பயன்படுத்தப்படும் அட்டை எது?**

திறன் அட்டை.

**17. திறனட்டையில் சேர்க்கப்பட்டுள்ள விவரங்கள் யாவை?**

ஆதார் எண், அலைபேசி எண், முகவரி.

**18. இன்றைய இணையவழிப் பயன்படும் செயல்கள் சில கூறுக.**

◈ பாதுகாப்பு ஒளிப்படக்கருவி (சிசிடிவி) (அல்லது) மறைகாணி

◈ செல்லிடை வழிகாட்டி (ஜிபிஎஸ்)

## 3 சிறுவினா

**1. இணையப் பயன்பாடுகள் சிலவற்றை எழுதுக:**

◈ பேருந்து முன்பதிவு 'விமான முன்பதிவு' தங்கும் விடுதிகள் முன்பதிவு ஆகியவற்றை இணையம் மூலமாக மேற்கொள்ளப்படுகின்றன.

◈ அரசுக்கு செலுத்த வேண்டிய சொத்து வரி, தண்ணீர் வரி ஆகியன இணையவழியில் செலுத்தப்படுகின்றன.

◈ பிறப்புச் சான்றிதழ்,வருமானவரிச் சான்றிதழ், சாதிச் சான்றிதழ் போன்றவை அரசால் மக்களுக்கு இணையம் மூலம் வழங்கப்படுகின்றன.

**2. திறன் அட்டை பயன்பாடு குறித்து எழுதுக.**

திறன் அட்டை விற்பனைக் கருவியில் வருடப்படும், அங்கு விற்பனை செய்யப்படும் பொருட்களும் விலை விவரங்களும் பதிவு செய்யப்பட்ட அலைபேசி எண்ணுக்குக் குறுஞ்செய்தியாக வந்துவிடும்.

**3. வையக விரிவு வலை - குறிப்பெழுதுக.**

◈ டிம் பெர்னெர்ஸ்லீ 1990 ல் இணையத்தைக் கண்டுபிடித்தார்.

◈ இதனை வையக விரிவு வலை என்றும் அழைத்தனர்.

◈ இது பல செய்திகளை அழியாமல் பாதுகாக்க உதவுகிறது.

◈ இணையத்தில் இது இல்லையெனில் உலகத்தில் அது நடைபெறவேயில்லை என்பது லீயின் புகழ் பெற்ற வாசகம்.

**4. இணைய வணிகம் பற்றிக் குறிப்பிடுக.**

◈ 1979ல் மைக்கல் ஆல்ட்ரிச் இணைய வணிகத்தைக் கண்டுபிடித்தார்.

◈ 1989ல் அமெரிக்காவில் இணையவழி மளிகைக் கடை தொடங்கப்பட்டது.

◈ கரும்பு முதல் கணினி வரை இன்று விற்காத பொருளே இணைய வணிகத்தில் இல்லை.

**5. மாணவர்களும் இணையமும் பற்றி எழுதுக.**

◈ கல்விக் கட்டணங்கள் மற்றும் தேர்வுக்கட்டணங்கள் இணையம் மூலம் கட்டலாம்.

◈ தேர்வு அறை அடையாளச் சீட்டு பதிவிறக்கம் செய்யலாம்.

◈ போட்டித் தேர்வுகளுக்கு இணையம் மூலம் விண்ணப்பிக்கலாம்.

◈ தொழிற் கல்வி நுழைவுத்தேர்வுக்கு இணையம் மூலம் விண்ணப்பிக்கலாம்.

Please Send Your Study Materials to our Email Id: padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.CBSEtips.in



## கற்பவை கற்றபின்...

பக்கம்: 102

1. **வங்கியில் இணையவழி சேமிப்புக் கணக்குத் தொடங்கும் நடைமுறையை எழுதுக.**

நாம் வங்கியில் சேமிப்புக் கணக்கு வைத்திருந்தால் வங்கிக்கு நேரில் சென்று தான் நம்முடைய பணப் பரிவர்த்தனைகளை மேற்கொள்ள இயலும். இணையவழி சேமிப்புக் கணக்கு இருந்தால் மற்ற பணிகளைச் செய்து கொண்டிருக்கும் போதே வங்கிப் பணிகளையும் செய்துகொள்ளலாம். தொழிற்கல்வி நுழைவுத்தேர்வுக்கு இணையம் மூலம் விண்ணப்பிக்கலாம்.

**இணையவழி சேமிப்புக் கணக்கு:**

முதலில் நாம் எந்த வங்கியில் சேமிப்புக் கணக்கு வைத்திருக்கிறோமோ? அந்த வங்கிக்குரிய செயலியை (APP) முதலில் நம் கணினியிலோ அல்லது அலைபேசியிலோ பதிவிறக்கம் செய்துகொள்ள வேண்டும், பின்னர் மின் அஞ்சல் முகவரி (E-Mail ID) ஒன்றும், கடவு வார்த்தை (Password) ஒன்றும் உருவாக்குதல் வேண்டும்.

பெயர் :
வங்கிக் கணக்கு எண் :
வங்கிக் கிளை :
வங்கி குறியீட்டு எண் :

என மேற்கூறிய அனைத்தையும் குறிப்பிட்டு, இணையவழி (Net Banking) மூலம் வங்கி சேமிப்புக் கணக்கைத் தொடங்கிக் கொள்ளலாம்.

2. **உங்கள் குடும்பத்தினருடன் வெளியூர் (சென்ற) தொடர்வண்டிப் பயணத்திற்கு இணையத்தில் எவ்வாறு முன்பதிவு செய்தீர்கள்? அதன் வழிமுறைகளை அனுபவத்தில் (அ) கேட்டறிந்து வகுப்பறையில் வழங்குக.**

**இணையத்தில் தொடர்வண்டிப் பயணத்திற்கு முன்பதிவு செய்தல்:**

◈ பயணம் மேற்கொள்ள வேண்டிய ஊருக்கு உங்கள் ஊரில் இருந்து செல்லும் தொடர் வண்டிகளை அறிந்துகொண்டு, அவற்றின் நேரங்களையும் தெரிவாகத் தெரிந்துகொள்ள வேண்டும்.

◈ பயணம் செய்ய விரும்பும் நாளில் எந்த தொடர்வண்டியில், எந்தப் பெட்டியில் இருக்கை வசதி மற்றும் படுக்கை வசதியுடன் இருக்கும் காலியிடங்களை அறிந்துகொள்ள வேண்டும். அவற்றை அறிய முனையும் போதே பயணச் சீட்டுக்கான தொகையும் அறிந்து கொள்ளலாம்.

◈ பின்னர் வங்கி அட்டைகளின் உதவியுடன், பயணச் சீட்டிற்கான தொகையைச் செலுத்தி முன்பதிவு செய்து கொண்டோம் எனில், சற்று நேரத்தில் நமது அலைபேசியிக்கு குறுஞ்செய்தியும், அச்செய்தியில் நமக்கான இருக்கை எண், புறப்படும் நேரம் போன்றவை வந்துவிடும்.

3. **விரலியில் (Pendrive) உள்ள பாடல்களையும், எழுத்துக் கோப்புகளையும் (Document) கணினியில் நுழைந்து உறைகளில் (Folder) இட்டுச் சேமிப்பதைச் செய்து பார்த்துத் தெரிந்து கொள்க.**

◈ ‘விரலி’ என்ற வார்த்தை Pendrive என்ற ஆங்கில வார்த்தையின் தமிழாக்கம் ஆகும்.

**விரலியில் உள்ள பாடல்கள் எழுத்துக் கோப்புகளை கணினியில் சேமிக்கும் முறை:**

◈ முதலில் விரலியை அதன் பகுதியில் நுழைத்தல் வேண்டும்.

◈ கணினித் திரையில் குறியீடு ஒன்று தோன்றும்.

Please Send Your Study Materials to our Email Id: padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.CBSEtips.in



- அந்தக் குறியீட்டை இயக்கும்போது, விரலியில் உள்ள செய்திகளை எந்தப் பகுதியில் சேமிக்க வேண்டும், தனி உறை வேண்டுமா என்று திரையில் தோன்றும்.
- கோப்புகள் உள்ள பகுதியில் சேமிக்க வேண்டுமென்றாலும் குறிப்பிட்ட கோப்புப் பகுதியை இயக்கி அதனுடன் சேமித்துக் கொள்ளலாம்.
- தனியாக ஒரு உறையை உருவாக்கியும் சேமித்துக் கொள்ளலாம்.
- திரையின் முகப்புப் பகுதியில் உறையை உருவாக்கி வைத்துக் கொண்டோம் என்றால் விரலி மூலம் நாம் சேமித்த செய்திகள் பாடல்கள், எழுத்துக் கோப்புகளை உடனடியாக இயக்கி பயன்படுத்திக் கொள்ளலாம்.
- இதுவே விரலியில் உள்ளனவற்றை கணினியில் சேமிக்கும் முறையாகும்.

Please Send Your Study Materials to our Email Id: padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.CBSEtips.in



# இயல் 4

**கவிதைப் பேழை**

## ஓ, என் சமகாலத் தோழர்களே!

– கவிஞர் வைரமுத்து



| | |
|---|---|
| ஆசிரியர் | - வைரமுத்து |
| பிறப்பு | - 13.7.1953 |
| பெற்றோர் | - இராமசாமி தேவர் - அங்கம்மாள் |
| முதல் கவிதை | - இளநெஞ்சின் ஏக்கம் |
| முதல் கவிதைத் தொகுப்பு | - வைகறை மேகங்கள் |
| சிறப்பு | - கவியரசு, கவிப்பேரரசு பட்டம் பெற்றவர், கள்ளிக்காட்டு இதிகாசம் புதின நூலுக்குச் சாகித்ய அகெதமி விருது |
| படைப்புகள் | - கவிராஜன் கவிதை, தண்ணீர் தேசம், இதுவரை நான், திருத்தி எழுதிய தீர்ப்புகள், இன்னொரு தேசிய கீதம் |

### இலக்கணக் குறிப்பு

| | | |
|---|---|---|
| பண்பும் அன்பும் | - | எண்ணும்மை |
| இனமும் மொழியும் | - | எண்ணும்மை |
| சொன்னோர் | - | வினையாலணையும் பெயர் |

### பகுபத உறுப்பிலக்கணம்

| | |
|---|---|
| **பொருத்துங்கள்** | **- பொருத்து + உம் + கள்** |
| பொருத்து | - பகுதி |
| உம் | - முன்னிலைப் பன்மை விகுதி |
| கள் | - விகுதிமேல் விகுதி |

## பாடநூல் மதிப்பீட்டு வினா

### 1 பலவுள் தெரிக

1. **பின்வரும் தொடர்களைப் படித்து 'நான்' யார் என்று கண்டுபிடிக்க.**

அறிவியல் வாகனத்தில் நிறுத்தப்படுவேன்
எல்லாக் கோளிலும் ஏற்றப்படுவேன்
இளையவர் கூட்டம் என்னை ஏந்தி நடப்பர்

அ) இணையம் ஆ) தமிழ்
இ) கணினி ஈ) ஏவுகணை

**விடை: ஆ) தமிழ்**

Please Send Your Study Materials to our Email Id: padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.CBSEtips.in



## 2 குறுவினா

1. **கூட்டுப்புழுவை எடுத்துக்காட்டிக் கவிஞர் உணர்த்தும் கருத்துகளை எழுதுக.**

கூட்டுப்புழு தான் பட்டுப்பூச்சியாய் மாறும். காரணம் அவை கொண்ட பொறுமையும் அடக்கமும் தான்.

## 3 சிறுவினா

1. **'ஓ, என் சமகாலத் தோழர்களே' கவிதையில் கவிஞர் விடுக்கும் வேண்டுகோள் யாது?**

◈ அறிவியல் வாகனத்தில் ஆளும் தமிழை நிறுத்துங்கள்.
◈ கரிகாலன் புகழைக் கணினியுள்ளே பொறுத்துங்கள்.
◈ திசையில் ஏவும் அன்பைப் போல இருந்த இனத்தை மாற்றுங்கள்.
◈ ஏவுகணையில் தமிழை எழுதி அனைத்துக் கோள்களிலும் ஏற்றுங்கள்.

- என்று கவிஞர் வைரமுத்து வேண்டுகோள் வைக்கிறார்.

# கூடுதல் வினாக்கள்

## 1 பலவுள் தெரிக

1. **வலவன் ஏவா வானூர்தி என்ற அறிவியல் சிந்தனையைக் குறிப்பிடும் நூல்**

அ) புறநானூறு ஆ) கலித்தொகை
இ) வைரமுத்து கவிதைகள் ஈ) சீவகசிந்தாமணி **விடை: அ) புறநானூறு**

2. **ஓர் எந்திரவூர்திஇ யற்றுமின் - என்று அறிவியல் சிந்தனையைக் குறிப்பிடும் நூல்**

அ) புறநானூறு ஆ) கலித்தொகை
இ) வைரமுத்து கவிதைகள் ஈ) சீவகசிந்தாமணி **விடை: ஈ) சீவகசிந்தாமணி**

3. **கவிஞர் வைரமுத்துவின் சாகித்திய அகெதமி விருதுபெற்ற நூல் எது?**

அ) கவிராஜன் கவிதை ஆ) தண்ணீர் தேசம்
இ) இதுவரை நான் ஈ) கள்ளிக்காட்டு இதிகாசம்

**விடை: ஈ) கள்ளிக்காட்டு இதிகாசம்**

4. **கவிஞர் வைரமுத்து பிறந்த மாவட்டம்**

அ) தேனி ஆ) சென்னை
இ) காஞ்சிபுரம் ஈ) கோவை **விடை: அ) தேனி**

5. **இந்தியாவின் சிறந்த பாடலாசிரியருக்கான தேசிய விருதினை ஏழுமுறை பெற்ற கவிஞர் ____.**

அ) தமிழன்பன் ஆ) வைரமுத்து
இ) மேத்தா ஈ) வாணிதாசன் **விடை: ஆ) வைரமுத்து**

6. **ஓர் எந்திரவூர்திஇ யற்றுமின் - என்று அறிவியல் சிந்தனையைக் குறிப்பிடும் சீவக சிந்தாமணியின் இலம்பகம் எது?**

அ) நாமகள் இலம்பகம் ஆ) கேமசரியார் இலம்பகம்
இ) பதுமையார் இலம்பகம் ஈ) முக்கி இலம்பகம்

**விடை: அ) நாமகள் இலம்பகம்**

Please Send Your Study Materials to our Email Id: padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.CBSEtips.in



7. ''கூட்டுப்புழுதான் பட்டுப்பூச்சியாய்க் கோலம் கொள்ளும் மறவாதீர்'' என்று குறிப்பிடும் நூல் எது?

அ) கவிராஜன் கவிதை ஆ) வைரமுத்து கவிதைகள்
இ) இதுவரை நான் ஈ) கள்ளிக்காட்டு இதிகாசம்

**விடை: ஆ) வைரமுத்து கவிதைகள்**

8. 'கூட்டுப்புழுதான் பட்டுப்பூச்சியாய்க் கோலம் கொள்ளும் மறவாதீர்' என்று பாடியவர் யார்?

அ) தமிழன்பன் ஆ) வைரமுத்து
இ) மேத்தா ஈ) வாணிதாசன் **விடை: ஆ) வைரமுத்து**

9. ஏவுகணையிலும் தமிழை எழுதி
எல்லாக் கோளிலும் ஏற்றுங்கள் - என்று குறிப்பிடும் நூல் எது?

அ) கவிராஜன் கவிதை ஆ) வைரமுத்து கவிதைகள்
இ) இதுவரை நான் ஈ) கள்ளிக்காட்டு இதிகாசம்

**விடை: ஆ) வைரமுத்து கவிதைகள்**

10. ஓ என் சமகாலத்தோழர்களே! என்னும் கவிதையில் கவிஞர் வைரமுத்து குறிப்பிடும் பெருமை மிக்க மன்னர்

அ) கரிகாலன் ஆ) கோப்பெருஞ்சோழன்
இ) சிபி ஈ) மனுநீதிச் சோழன் **விடை: அ) கரிகாலன்**

11. பொருந்தாதவற்றைக் கண்டறிக

அ) மயில்சாமி அண்ணாதுரை ஆ) அப்துல் கலாம்
இ) வைரமுத்து ஈ) சிவன் **விடை: இ) வைரமுத்து**

12. சொற்றொடரை முறைப்படுத்துக.

1. பழமை அல்ல 2. எல்லாம் 3. பழையவை

அ) 3-2-1 ஆ) 1-3-2
இ) 1-2-3 ஈ) 2-1-3 **விடை: அ) 3-2-1**

13. கிளிக்கு றெக்கை இருக்கும் வரைக்கும் __________ வானம் தூரமில்லை.

அ) வடக்கு ஆ) கிழக்கு இ) மேற்கு ஈ) தெற்கு **விடை: ஆ) கிழக்கு**

## கோடிட்ட இடத்தை நிரப்புக.

1. ____________ இணைந்து வளர்ந்ததே தமிழ்ச் சமூகம்.
**விடை: அறவியலும் அறிவியலும்**
2. கவிஞர் வைரமுத்துவின் 'கள்ளிக்காட்டு இதிகாசம்' புதினம் சாகித்ய அகெதமி விருது பெற்ற ஆண்டு ____________. **விடை: 2003**
3. 'காய்ந்து கிடக்கும் கழனிகள் எங்கும்' - இத்தொடரில் 'வயல்' என்னும் பொருள் தரும் சொல் _. **விடை: கழனி**
4. கவிஞர் வைரமுத்து பிறந்த ஊர் ____________ **விடை: மெட்டூர்**
5. ஓ, என் சமகாலத்தோழர்களே! என்னும் கவிதையில் கவிஞர் வைரமுத்து குறிப்பிடும் பறவை _ **விடை: கிளி**
6. முன்னோர் சொன்ன முதுமொழி - இதில் முதுமொழி என்பதன் பொருள் ____________ **விடை : பழமொழி**

Please Send Your Study Materials to our Email Id: padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.CBSEtips.in



7. பண்பும் அன்பும் ___________ விடை: பழையவை
8. ___________ வானத்தில் ஆளும் தமிழை நிறுத்த வேண்டும். விடை: அறிவியல்
9. கூட்டுப்புழு ___________ ஆக மாறும். விடை: பட்டுப்பூச்சியாய்

## 2 குறுவினா

1. **ஓ என் சமகாலத்தோழர்களே! என்னும் கவிதையில் கவிஞர் வைரமுத்து குறிப்பிடும் அஃறிணை உயிர்கள் யாவை?**

   கிளி, கூட்டுப்புழு, பட்டுப்பூச்சி.

2. **கணிப்பொறியுள் பொருத்த வேண்டியவை எவை?**

   கணிப்பொறியுள் பொருத்த வேண்டியவை : கரிகாலன் பெருமைகள்.

3. **கரிகாலன் எந்த நாட்டு மன்னன்?**

   சோழ நாட்டு மன்னன்.

4. **அறிவை மறந்த உணர்ச்சி எதனைப்போன்றது?**

   அறிவை மறந்த உணர்ச்சி திரியை மறந்த தீயைப் போன்றது.

5. **உணர்ச்சி தொலைந்த அறிவு எதனைப்போன்றது?**

   உணர்ச்சி தொலைந்த அறிவு எரியும் தீயை இழந்த திரி போன்றது.

6. **எவை புதியவை?**

   இனமும் மொழியும் புதியவை.

7. **எல்லாக் கோளிலும் எதனை ஏற்றவேண்டும்?**

   ஏவுகணைகளில் தமிழை எழுதி எல்லாக் கோள்களிலும் ஏற்ற வேண்டும்.

8. **எவை பழையவை?**

   பண்பு, அன்பு.

9. **எதனைக் கடவாதீர் என்கிறார் கவிஞர் வைரமுத்து?**

   பொறுமை, அடக்கம் ஆகியவற்றைக் கடவாதீர் என்கிறார் கவிஞர் வைரமுத்து.

## 3 சிறுவினா

1. **கவிஞர் வைரமுத்து குறிப்பு தருக.**

   ◈ கவிஞர் வைரமுத்து தேனி - மெட்டூரில் பிறந்தவர்.
   
   ◈ பிறப்பு : 13.7.1953
   
   ◈ பத்மபூஷண் விருது, கள்ளிக்காட்டு இதிகாசத்திற்குச் சாகித்ய அகாடமி விருதும், 7முறை தேசிய விருதும், 4 முறை மாநில விருதும் பெற்றுள்ளார்.
   
   ◈ இந்தி, தெலுங்கு, மலையாளம், வங்காளம், ஆங்கிலம் ஆகிய மொழிகளில் இவரது கவிதைகள் மொழிபெயர்க்கப்பட்டுள்ளது.

Please Send Your Study Materials to our Email Id: padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.CBSEtips.in



**2. கவிஞர் வைரமுத்து கவிதைகளில் நும் மனம் கவர் வரிகளை எழுதுக.**

அறிவியல் என்னும் வாகனம் மீதில்
ஆளும் தமிழை நிறுத்துங்கள்
கரிகாலன் தன் பெருமை எல்லாம்
கணிப்பொறி யுள்ளே பொருத்துங்கள்.

## கற்பவை கற்றபின்...

பக்கம்: 104

**1. அறிவியல் செய்திகளை வெளிப்படுத்தும் கவிதைகளைத் தொகுத்து வகுப்பறையில் படித்துக் காட்டுக.**

''பறவையைப் போல பறக்க நினைத்தேன்
விமானம் கிடைத்தது.....
நிலவில் கால்வைக்க நினைத்தேன்
ராக்கெட் கிடைத்தது......
வெளிநாட்டு நண்பனைப் பார்க்க நினைத்தேன்
இணையம் கிடைத்தது.....
போகுமிடம் தகவலறிய நினைத்தேன்
செல்போன் கிடைத்தது'' - கவிஞர். சா

**2. விமானம் ஏவுகணை பேசிக்கொள்ளும் உரையாடல்.**

விமானம் : நண்பா! நலமா?

ஏவுகணை : நலம் நண்பா!

விமானம் : ஏன் சோகமாக இருக்கிறாய்?

ஏவுகணை : எங்கள் நாயகன் அப்துல் கலாம் அய்யா! இல்லையே! அதனால் தான்.

விமானம் : எனக்கும் கவலை தான். உனக்கு உயிர் கொடுத்த அவர், எல்லா இளைஞர்கள் மனதிலும் வாழ்கிறார் கவலைப்படாதே!

ஏவுகணை : அப்படியா?

விமானம் : ஆம்! எனக்கு நேரமாயிற்று. என் விமானி வருகிறார். நான் வருகிறேன்.

**3. பாடலில் அமைந்துள்ள தொடைநயங்களை எழுதுக.**

''கிளிக்கு றெக்கை இருக்கும் வரைக்கும்
கிழக்கு வானம் தூரமில்லை
முளைக்கும் விதைகள் முளைக்கத் துடித்தால்
பூமி ஒன்றும் பாரமில்லை.''

**தொடைநயங்கள்:**

1. **கி**ளிக்கு, **கி**ழக்கு - முதல் எழுத்து ஒன்றிவந்து ''மோனை நயம்'' உள்ளது.
2. **முளை**க்கும் - **முளை**க்கத்
   இதில், முதல் எழுத்து ஒன்றிவந்து ''சீர் மோனை'' நயமும்
   இரண்டாம் எழுத்து ஒன்றி வந்து ''சீர் எதுகை'' நயமும் இடம் பெற்றுள்ளது.
3. தூர**மில்லை** - பார**மில்லை**
   இதில் ''மில்லை'' என்னும் இறுதி சீர் ஒன்றி வந்து ''இயைபுத் தொடை'' நயம் அமைந்துள்ளது.

Please Send Your Study Materials to our Email Id: padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.CBSEtips.in



# இயல் 4 கவிதைப் பேழை

# உயிர்வகை

– தொல்காப்பியர்



ஆசிரியர் - தொல்காப்பியர்

சிறப்பு - தொல்காப்பிய நூல் ஆசிரியர். தமிழில் கிடைத்த முதல் இலக்கண நூலாசிரியர். அகத்தியரின் மாணவர்.

## இலக்கணக் குறிப்பு

உணர்ந்தோர் - வினையாலணையும் பெயர்

## பகுபத உறுப்பிலக்கணம்

நெறிப்படுத்தினர் - நெறிப்படுத்து + இன் + அர்

நெறிப்படுத்து - பகுதி

இன் - இறந்தகால இடைநிலை

அர் - பலர்பால் வினைமுற்று விகுதி

## பாடநூல் மதிப்பீட்டு வினா

## 1 பலவுள் தெரிக

1. ஒன்றறிவதுவே உற்றிவதுவே
இரண்டறிவதுவே அதனொடு நாவே
- இவ்வடிகளில் அதனொடு என்பது எதைக் குறிக்கிறது?

அ) நுகர்தல் ஆ) தொடுவுணர்வு
இ) கேட்டல் ஈ) காணல்

விடை: ஆ) தொடுவுணர்வு

## 2 குறுவினா

1. ''மூன்றறிவதுவே அவற்றொடு மூக்கே
நான்கறிவதுவே அவற்றொடு கண்ணே
ஐந்தறிவதுவே அவற்றொடு செவியே''
- இவ்வடிகளில் தொல்காப்பியர் குறிப்பிடும், மூவறிவு, நான்கறிவு, ஐந்தறிவு உயிர்கள் யாவை?

◈ மூவறிவு உயிர்கள் : கரையான், எறும்பு
◈ நான்கறிவு உயிர்கள் : நண்டு, தும்பி
◈ ஐந்தறிவு உயிர்கள் : பறவை, விலங்கு

Please Send Your Study Materials to our Email Id: padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.CBSEtips.in



## 3 சிறுவினா

1. அறிவையும் உயிரினங்களையும் தொல்காப்பியர் எவ்வாறு தொடர்புபடுத்துகிறார்?

◈ புல், மரம் ஆகியன ஓரறிவு உயிர்கள். (தொடு உணர்வு)

◈ சிப்பி, நத்தை ஆகியன ஈரறிவு உயிர்கள். (தொடு உணர்வு+சுவை)

◈ கரையான், எறும்பு ஆகியன மூவறிவு உயிர்கள். (தொடு உணர்வு+சுவை+நுகர்தல்)

◈ நண்டு, தும்பி ஆகியன நான்கறிவு உயிர்கள். (தொடு உணர்வு+சுவை+நுகர்தல்+காணல்)

◈ பறவை, விலங்கு ஆகியன ஐந்தறிவு உயிர்கள். (தொடு உணர்வு + சுவை + நுகர்தல் + காணல் + கேட்டல்)

◈ மனிதன் ஆறறிவு உயிர். (தொடு உணர்வு+சுவை+நுகர்தல்+காணல்+கேட்டல்+பகுத்தறிவு)

## கூடுதல் வினாக்கள்

## 1 பலவுள் தெரிக

1. ஓரறிவு உயிர்கள் ________.

அ) புல், மரம். ஆ) சிப்பி, நத்தை

இ) கரையான், எறும்பு ஈ) நண்டு, தும்பி **விடை: அ) புல், மரம்**

2. ஈரறிவு உயிர்கள் ________.

அ) புல் , மரம். ஆ) சிப்பி , நத்தை

இ) கரையான்,எறும்பு ஈ) நண்டு, தும்பி **விடை: ஆ) சிப்பி, நத்தை**

3. மூவறிவு உயிர்கள் ________.

அ) புல், மரம். ஆ) சிப்பி, நத்தை

இ) கரையான், எறும்பு ஈ) நண்டு, தும்பி **விடை: இ) கரையான், எறும்பு**

4. நான்கறிவு உயிர்கள் ________.

அ) புல், மரம். ஆ) சிப்பி, நத்தை

இ) கரையான், எறும்பு ஈ) நண்டு, தும்பி **விடை: ஈ) நண்டு, தும்பி**

5. ஐந்தறிவு உயிர்கள் ________.

அ) பறவை, விலங்கு ஆ) சிப்பி, நத்தை

இ) கரையான், எறும்பு ஈ) நண்டு, தும்பி **விடை: அ) பறவை, விலங்கு**

6. மனிதன் ________ உயிர்கள்.

அ) ஆறறிவு ஆ) ஐந்தறிவு

இ) மூவறிவு ஈ) ஓரறிவு **விடை: அ) ஆறறிவு**

7. பொருத்துக.

| | | |
|---|---|---|
| 1. புல், மரம் | - | அ) ஓரறிவு உயிர்கள் |
| 2. சிப்பி, நத்தை | - | ஆ) நான்கறிவு உயிர்கள் |
| 3. கரையான், எறும்பு | - | இ) மூவறிவு உயிர்கள் |
| 4. நண்டு, தும்பி | - | ஈ) ஈரறிவு உயிர்கள் |

Please Send Your Study Materials to our Email Id: padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.CBSEtips.in



அ) 1-அ 2-ஈ 3-இ 4-ஆ ஆ) 1-இ 2-ஈ 3-அ 4-ஆ
இ) 1-ஆ 2-ஈ 3-இ 4-அ ஈ) 1-ஈ 2-அ 3-இ 4-ஆ

**விடை: அ) 1-அ 2-ஈ 3-இ 4-ஆ**

8. **பொருந்தாதவற்றைக் கண்டறிக.**
அ) கரையான், எறும்பு ஆகியன ஈரறிவு உயிர்கள்.
ஆ) நண்டு, தும்பி ஆகியன நான்கறிவு உயிர்கள்.
இ) பறவை, விலங்கு ஆகியன ஐந்தறிவு உயிர்கள்.
ஈ) மனிதன் ஆகியன ஆறறிவு உயிர்கள். **விடை: அ) கரையான், எறும்பு ஆகியன ஈரறிவு உயிர்கள்.**

9. **இரண்டறிவதுவே அதனொடு நாவே**
**மூன்றறிவதுவே அவற்றொடு மூக்கே**
**- இவ்வடிகளில் அவற்றொடு என்பது எதைக் குறிக்கிறது?**
அ) சுவைத்தல் ஆ) தொடுவுணர்வு
இ) கேட்டல் ஈ) காணல் **விடை: அ) சுவைத்தல்**

10. **மூன்றறிவதுவே அவற்றொடு மூக்கே**
**நான்கறிவதுவே அவற்றொடு கண்ணே**
**- இவ்வடிகளில் அவற்றொடு என்பது எதைக் குறிக்கிறது?**
அ) நுகர்தல் ஆ) தொடுவுணர்வு
இ) கேட்டல் ஈ) காணல் **விடை: அ) நுகர்தல்**

11. **நான்கறிவதுவே அவற்றொடு கண்ணே**
**ஐந்தறிவதுவே அவற்றொடு செவியே**
**- இவ்வடிகளில் அவற்றொடு என்பது எதைக் குறிக்கிறது?**
அ) நுகர்தல் ஆ) தொடுவுணர்வு
இ) கேட்டல் ஈ) காணல் **விடை: ஈ) காணல்**

## 2 குறுவினா

1. **ஓரறிவு உயிர்கள் யாவை?**
புல், மரம் ஆகியன ஓரறிவு உயிர்கள்.

2. **ஈரறிவு உயிர்கள் யாவை?**
சிப்பி, நத்தை ஆகியன ஈரறிவு உயிர்கள்.

3 **மூவறிவு உயிர்கள் யாவை?**
கரையான், எறும்பு ஆகியன மூவறிவு உயிர்கள்.

4. **நான்கறிவு உயிர்கள் யாவை?**
நண்டு, தும்பி ஆகியன நான்கறிவு உயிர்கள்.

5. **ஐந்தறிவு உயிர்கள் யாவை?**
பறவை, விலங்கு ஆகியன ஐந்தறிவு உயிர்கள்.

Please Send Your Study Materials to our Email Id: padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.CBSEtips.in



6. **ஆறறிவு உயிர்கள் யாவை?**
மனிதன் ஆகியன ஆறறிவு உயிர்கள்.

7. **தமிழில் கிடைக்கும் முதல் இலக்கண நூல் எது? அதன் ஆசிரியர் யார்?**
◈ தொல்காப்பியம்
◈ ஆசிரியர்: தொல்காப்பியர்.

8. **தொல்காப்பிய நூற் பிரிவுகள் எத்தனை ? அவை யாவை?**
தொல்காப்பிய நூற் பிரிவுகள் மூன்று. அவை: எழுத்து, சொல், பொருள் என்பன.

## 3 சிறுவினா

1. **தொல்காப்பியம் - குறிப்பு வரைக.**
◈ தமிழில் கிடைக்கும் முதல் இலக்கண நூல்.
◈ ஆசிரியர்: தொல்காப்பியர்.
◈ எழுத்து, சொல், பொருள் என மூன்று அதிகாரங்களைக் கொண்டுள்ளது.
◈ 27 இயல்களைக் கொண்டுள்ளது.
◈ தமிழில் கிடைக்கும் முதல் இலக்கணநூல்
◈ 1610 நூற்பாக்களைக் கொண்டது.

## கற்பவை கற்றபின்...

பக்கம்: 106

1. **அ. தட்டான் பூச்சி தாழப்பறந்தால் தப்பாமல் மழை வரும்.**

**ஆ. வானில் பறக்குது குதிரை**
**பறக்கப் பறக்க வால் குறையும் குதிரை - அது என்ன?**

**விடை: விமானம்**

இவை போன்ற அறிவியல் செய்திகள் கொண்ட பழமொழிகள், விடுகதைகளைப் படித்தும் கேட்டும், அவற்றின் அறிவியல் அடிப்படையை வகுப்பறையில் கலந்துரையாடுக.

**அறிவியல் சார்ந்த பழமொழிகள் விடுகதைகள்**

**விடுகதைகள்**

- **செல்லும் இடமெல்லாம் நானும் வருவேன், கையிலும் வைக்கலாம், பையிலும் வைக்கலாம், நானின்றி இன்று மனித உயிர்கள் இல்லை. நான் யார்?**

  **விடை: அலைபேசி.**

- **காற்றுப் புக முடியாத இடத்திலும் நான் புகுவேன். எங்கெங்கு சென்றாலும் அங்குள்ள தன்மையை செய்தியாகப் புகைப்படமாக அனுப்புவேன். ஆராய உகந்தவன். நான் யார்?**

  **விடை: செயற்கைக்கோள்.**

**பழமொழிகள்**

- அறிவை மேம்படுத்துவது அறிவியல்.
- அறிவியல் இல்லாத ஆன்மீகம் முடமாகும்.

Please Send Your Study Materials to our Email Id: padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.CBSEtips.in



2. ‘விமான நிலையத்தில்’ – நான் கற்பனைக் கதை.

விமான நிலையத்தில் நான் நின்று கொண்டு இருந்தேன். என் அண்ணனின் வருகை விமானம் தாமதமானது. அங்கிருந்த நாற்காலியில் அமர்ந்தேன். புரியாத மொழியில் ஒருவர் விவரம் கேட்டுத் தடுமாறிக் கொண்டு இருந்தார். அவரை யாரும் பொருட்படுத்தவில்லை. காரணம் அவருடைய ஆடைகள். மலையில் வாழ்பவர். நான் இவரிடம் சென்று பேசினேன். எனக்கு மொழி புரியவில்லை என்றாலும் இவரின் செய்கை என்ன சொல்கிறார் என்பதைப்புரிந்து கொண்டேன். அவருக்கு உதவி செய்தேன். உரிய வழிகளைக் கூறினேன். அவர் மனம் மகிழ்ந்தார்.அதற்குள் என் அண்ணன் வந்தான். புரியாத மொழி பேசிய அவரிடம் திடீரென் அண்ணன் காலில் விழுந்தான். பிறகு விவரம் தெரிந்தது. இவர் ஒரு வெளிநாட்டு எளிமையான தலைவர் என்று. நெகிழ்ந்து போனேன்.

# இயல் 4

## விரிவானம்

# விண்ணையும் சாடுவோம்

## பாடநூல் மதிப்பீட்டு வினா

### 1 பலவுள் தெரிக

1. விடை வரிசையைத் தேர்க.

அ. இது செயற்கைக்கோள் ஏவு ஊர்தியின் செயல்பாட்டை முன் கூட்டியே கணிக்கும்.

ஆ. இது கடல் பயணத்துக்காக உருவாக்கப்பட்ட செயலி

1) நேவிக், சித்தாரா 2) நேவிக், வானூர்தி

3) வானூர்தி, சித்தாரா 4) சித்தாரா, நேவிக்

**விடை: 4) சித்தாரா, நேவிக்**

### 2 குறுவினா

1. செயற்கைக்கோள் ஏவு ஊர்தியில் பொருத்தும் செயலியைப் பற்றி திரு. சிவன் கூறுவது யாது?

◈ சித்தாரா செயலி செயற்கைக்கோள் ஏவுஊர்தி பற்றிய முழுவிவரங்களையும் மின்னிலக்க முறையில் சேகரிக்கும்.

◈ வாகனத்தின் செயல்பாடு எப்படியிருக்கும் என்பதை முன் கூட்டியே கணிக்கலாம்.

◈ கல்லைத் தூக்கி வீசும்போது, அது விழும் திசை, கோணம், நேரம், அழுத்தம் ஆகியவற்றைத் தெரிவிப்பது சித்தராவின் பணி எனலாம்.

Please Send Your Study Materials to our Email Id: padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.CBSEtips.in



## 3 சிறுவினா

1. **மக்களின் வாழ்க்கைத் தரம் உயர்வதில் செயற்கைக்கோளின் பங்கு யாது?**

◈ ஆண்டு விவசாயம் மூலம் விளைச்சலைக் கண்டுபிடித்தல், நிலத்திற்கு ஏற்ற நீரின் அளவு எவ்வளவு இருக்கும் என்பதைக் கண்டறிதல்.

◈ கடலில் மீனவர்களுக்கு மீன்கள் அதிகமாகக் கிடைக்கும் இடத்தைச் சொல்கின்றது.

◈ திறன்பேசி, தானியக்கப்பண இயந்திரம், அட்டைப்பயன்படுத்தும் இயந்திரம் ஆகியவற்றிற்குச் செயற்கைக்கோள் பயன்படுகின்றது,

## 4 நெடுவினா

1. **இந்திய விண்வெளித்துறை பற்றிய செய்திகளை விவரிக்க.**

**இந்திய விண்வெளித்துறை**

**முன்னுரை:**

இந்திய விண்வெளித்துறையில் அப்துல் கலாம், மயில்சாமி அண்ணாதுரை, வளர்மதி, சிவன் ஆகியோரின் பங்கு அளப்பரியதாகும். இந்தியர்களின் வானியியல் வல்லமையை வலுப்படுத்தும் பல்வேறு செயற்கைக்கோள்களை இந்திய விண்வெளித்துறை படைத்துள்ளது.

**இஸ்ரோ:**

இந்திய விண்வெளி ஆய்வு மையம் (இஸ்ரோ) பெங்களுரில் உள்ளது. திரு.கே.சிவன் என்பவர் 14.1.2018 முதல் இதன் தலைவராக உள்ளார். குறைந்த செலவில் தரமான சேவையைக் கொடுப்பதனை நோக்கமாக இஸ்ரோ கொண்டுள்ளது. இதுவரை 45 செயற்கைக் கோள்கள் விண்ணில் செலுத்தப்பட்டுள்ளன. இந்திய விண்வெளி ஆராய்ச்சி நிறுவனம் உலகின் மிகப் பெரிய விண்வெளி ஆய்வு மையத்தில் ஆறாவது இடத்தைப் பெற்றுள்ளது.

**சாதனைகள்:**

◈ 1975 இல் இந்தியாவின் முதல் செயற்கைக் கோள் ஆரியப்பட்டா சோவியத் ரஷ்யா உதவியால் விண்ணில் செலுத்தப்பட்டது. விக்ரம் சாராபாய் இதற்கு மூலகாரணமாவார்.

◈ 1980 இல் முதல் செயற்கைக்கோள் ரோகிணி விண்ணில் ஏவப்பட்டது.

◈ சந்திராயன்-1 நிலவை நோக்கி 2008 இல் விண்ணில் ஏவப்பட்டது.

◈ நேவிக் என்ற செயலியைக் கடல் பயணத்திற்கு உருவாக்கியிருக்கிறது.

**முடிவுரை:**

நம் நாட்டிற்குத் தேவையான செயற்கைக்கோளை விண்ணில் அனுப்பி நம் தேவைகளை நிறைவு செய்வதே இஸ்ரோவின் செயல்பாடு.

Please Send Your Study Materials to our Email Id: padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.CBSEtips.in



## கற்பவை கற்றபின்...

பக்கம்: 112

1. **பி.எஸ்.எல்.வி. (PSLV) பற்றியும் ஜி.எஸ்.எல்.வி. (GSLV) பற்றியும் செய்திகளைத் திரட்டி விளக்கப் படத்தொகுப்பு உருவாக்குக.**



இந்திய விண்வெளி ஆராய்ச்சி நிறுவனமான, 'இஸ்ரோ' சார்பில், பி.எஸ்.எல்.வி (PSLV), மற்றும் ஜி.எஸ்.எல்.வி (GSLV), ரக ராக்கெட்டுகள் விண்ணில் செலுத்தப்பட்டு வருகின்றன.

தகவல் தொடர்புக்குப் பயன்படும், 'ஜிசாட் 6 ஏ' செயற்கைக்கோள், ஜி.எஸ்.எல்.வி., ராக்கெட் மூலம், நேற்று மாலை, வெற்றிகரமாக விண்ணில் செலுத்தப்பட்டது.




இந்த செயற்கைக்கோள், ஸ்ரீஹரிகோட்டாவில் உள்ள, இரண்டாவது ஏவுதளத்தில் இருந்து, நேற்று மாலை, 4:56 மணிக்கு, ஜி.எஸ்.எல்.வி., - 'எப் 8' என்ற, ராக்கெட் மூலமாக, வெற்றிகரமாக விண்ணில் செலுத்தப்பட்டது. உள்நாட்டு தொழில்நுட்பத்தில் தயாரிக்கப்பட்டுள்ள, ஆறாவது, 'கிரயோஜெனிக் இன்ஜின்' உதவியுடன், விண்ணில் செலுத்தப்பட்ட, 'ஜிசாட் 6 ஏ' செயற்கைக்கோள், ஏவப்பட்ட, 17:50 நிமிடங்களில், பூமியில் இருந்து, 170 கிலோ மீட்டர் உயரத்தில் நிலை நிறுத்தப்பட்டது. தற்போது செலுத்தப்பட்ட ராக்கெட், ஜி.எஸ்.எல்.வி., ரகத்தில், 12வது ராக்கெட். 'ஜிசாட் 6 ஏ' செயற்கைக்கோளின் ஆயுட்காலம், 10 ஆண்டுகள். இதில், மொபைல் போன் தகவல் தொடர்புக்குப் பயன்படும் சக்தி வாய்ந்த, 'எஸ் மற்றும் சி பேண்ட் டிரான்ஸ்பாண்டர்கள்' பொருத்தப்பட்டுள்ளன.

2. **வகுப்புத்தோழர் ஒருவரை அறிவியல் அறிஞராக அமரச்செய்து வகுப்பறையில் கற்பனையாக நேர்காணல் ஒன்றை நிகழ்த்துக.**

நேர்காண்பவர் : அறிவுடையார் எல்லாம் உடையர் என்பது வள்ளுவன் வாக்கு. ஆம் பேரறிவுடைய அறிவியல் அறிஞரை இன்று நாம் நேர்காணல் செய்கின்றோம். ஐயா! வணக்கம்!

அறிவியலறிஞர் : வணக்கம். அன்பரே! என்னை நேர்காணல் செய்ய வந்தமைக்கு நன்றி.

நேர்காண்பவர் : ஐயா! தாங்கள் கண்டுபிடித்த புதிய கருவி பற்றிக் கூறுங்கள்.

அறிவியலறிஞர் : நான் கண்டுபிடித்த புதிய கருவி வாகனங்களை விபத்துக்குள்ளாகாமல் காப்பாற்றும் கருவி.

நேர்காண்பவர் : அதைப் பற்றி விளக்கமாகச் சொல்லுங்கள்.

அறிவியலறிஞர் : சிப் போன்ற சிறு கருவி இது. இதனை வண்டிகளில் பொருத்தினால், இதன் காந்த அலைகள் மூலம் எதிர் வரும் வண்டி மோதுகின்ற போது, மோதாமல் விலக்கி விடும்.

நேர்காண்பவர் : நன்றி ஐயா.

Please Send Your Study Materials to our Email Id: padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.CBSEtips.in



# இயல் 4

கற்கண்டு

# வல்லினம் மிகா இடங்கள்

## பாடநூல் மதிப்பீட்டு வினா

### 1 சிறுவினா

1. **தற்கால உரைநடையில் வல்லினம் மிகா இடங்களைக் கூறுக.**

◈ **அது, இது** என்னும் சுட்டுப்பெயர்களில் வல்லினம் மிகாது.
**எ.கா: அது செய்.**

◈ **எது, எவை** என்னும் வினாப்பெயர்களில் வல்லினம் மிகாது.
**எ.கா: எது கண்டாய்.**

◈ **எழுவாய்த் தொடரில்** வல்லினம் மிகாது.
**எ.கா: கிளி பேசும்.**

◈ **3 ஆம், 6 ஆம் வேற்றுமை விரிகளில்** வல்லினம் மிகாது.
**எ.கா: அண்ணணோடு போ, எனது சட்டை.**

◈ **விளித்தொடரில்** வல்லினம் மிகாது.
**எ.கா: மகளே தா.**

◈ **பெயரெச்சத்தில்** வல்லினம் மிகாது.
**எ.கா: வந்த சிரிப்பு.**

◈ **வியங்கோள் வினைமுற்றுத்** தொடரில் வல்லினம் மிகாது.
**எ.கா: வாழ்க தமிழர்.**

◈ **வினைத்தொகையில்** வல்லினம் மிகாது. **எ.கா: குடிதண்ணீர்**

◈ **உம்மைத்தொகையில்** வல்லினம் மிகாது. **எ.கா: தாய்தந்தை**

◈ **அடுக்குத்தொடர், இரட்டைக்கிளவியில்** வல்லினம் மிகாது.
**எ.கா: பார் பார், சல சல.**

## கூடுதல் வினாக்கள்

### 1 பலவுள் தெரிக

1. **பொருந்தாத இணையைக் கண்டுபிடிக்க.**

அ) தாய்தந்தை - உம்மைத்தொகையில் வல்லினம் மிகாது.
ஆ) உறுபொருள் - உறு என்னும் உரிச்சொல்லில் வல்லினம் மிகாது.
இ) பத்துபாட்டு - பத்து என்னும் எண்ணுப்பெயரில் வல்லினம் மிகாது.
ஈ) வளர்பிறை - வினைத்தொகையில் வல்லினம் மிகாது.

**விடை: இ) பத்துபாட்டு - பத்து என்னும் எண்ணுப்பெயரில் வல்லினம் மிகாது.**

Please Send Your Study Materials to our Email Id: padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.CBSEtips.in



2. **பொருத்துக.**

1. வினாப் பெயர்களில் வல்லினம் மிகாது - அ) அண்ணணெடு போ
2. மூன்றாம் வேற்றுமை விரியில் வல்லினம் மிகாது - ஆ) எது கண்டாய்?
3. விளித்தொடர்களில் வல்லினம் மிகாது - இ) வந்த சிரிப்பு
4. பெயரெச்சத்தில் வல்லினம் மிகாது - ஈ) மகளே தா

அ) 1-ஆ 2-அ 3-ஈ 4-இ ஆ) 1-ஆ 2-இ 3-ஈ 4-அ
இ) 1-இ 2-அ 3-ஈ 4-ஆ ஈ) 1-ஆ 2-ஈ 3-அ 4-இ

**விடை: அ) 1-ஆ 2-அ 3-ஈ 4-இ**

3. **பொருந்தாதவற்றைக் கண்டறிக.**

அ) கிளி பேசும் ஆ) எனதுச்சட்டை
இ) தந்தையே பாருங்கள் ஈ) வந்த சிரிப்பு **விடை: ஆ) எனதுச்சட்டை**

4. **வினைத்தொகையில் வல்லினம் மிகாது என்பதற்குச் சான்றினைத் தேர்வு செய்க.**

அ) நாடு கண்டான் ஆ) வாழ்க தமிழ்
இ) குடி தண்ணீர் ஈ) கூடு கட்டு **விடை: இ) குடி தண்ணீர்**

5. **இரண்டாம் வேற்றுமைத்தொகையில் வல்லினம் மிகாது என்பதற்குச் சான்றினைத் தேர்வு செய்க.**

அ) நாடு கண்டான் ஆ) வாழ்க தமிழ்
இ) குடி தண்ணீர் ஈ) வந்த சிரிப்பு **விடை: அ) நாடு கண்டான்**

6. **வியங்கோள் வினைமுற்றில் வல்லினம் மிகாது என்பதற்குச் சான்றினைத் தேர்வு செய்க.**

அ) நாடு கண்டான் ஆ) வாழ்க தமிழ்
இ) குடி தண்ணீர் ஈ) கூடு கட்டு **விடை: ஆ) வாழ்க தமிழ்**

7. **பெயரெச்சத்தில் வல்லினம் மிகாது என்பதற்குச் சான்றினைத் தேர்வு செய்க.**

அ) நாடு கண்டான் ஆ) வாழ்க தமிழ்
இ) குடி தண்ணீர் ஈ) வந்த சிரிப்பு **விடை : ஈ) வந்த சிரிப்பு**

8. **எழுவாய்த் தொடரில் வல்லினம் மிகாது என்பதற்குச் சான்றினைத் தேர்வு செய்க.**

அ) குதிரை தாண்டியது ஆ) வாழ்க தமிழ்
இ) குடி தண்ணீர் ஈ) வந்த சிரிப்பு **விடை: அ) குதிரை தாண்டியது**

9. **பொருந்ததவற்றைக் கண்டறிந்து எழுதுக**

அ) உறுபொருள் ஆ) நனி தின்றான்
இ) கடிகாவல் ஈ) தவ சிறிது **விடை: ஈ) தவ சிறிது**

10. **இரட்டைக் கிளவி, அடுக்குத்தொடர் வல்லினம் மிகாவிடத்திற்குரிய சரியான சான்றுகள் உள்ள இணை எது ?**

அ) பத்துப்பாட்டு , எட்டுத்தொகை ஆ) சல சல, பார்பார்
இ) பைகள் . கைகள் ஈ) ஒருபுத்தகம் ,மூன்று கோடி

**விடை: ஆ) சல சல, பார்பார்**

Please Send Your Study Materials to our Email Id: padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.CBSEtips.in



## கற்பவை கற்றபின்...

பக்கம்: 115

**1. வல்லினம் வருமா?**

| | |
|---|---|
| 1. தோழி__கூற்று | நிலைமொழி உயர்திணையாய் இருந்தால் வல்லினம் மிகா. |
| 2. பெரிய__தம்பி | குறிப்புப் பெயரெச்சத்தில் வல்லினம் மிகாது. |
| 3. சிறிய__பறவை | குறிப்புப் பெயரெச்சத்தில் வல்லினம் மிகாது. |
| 4. பழகு__தமிழ் | வினைத்தொகையில் வல்லினம் மிகாது. |
| 5. இது__கேள் | இது என்னும் சுட்டுப் பெயர்களில் வல்லினம் மிகாது. |
| 6. எலி__கடிக்கும் | எழுவாய் தொடரில் வல்லினம் மிகாது. |
| 7. ஓடிய__குதிரை | பெயரெச்சத்தில் வல்லினம் மிகாது. |
| 8. தரும்படி__ சொன்னார் | "படி'' என முடியும் வினையெச்சத்தில் வல்லினம் மிகாது. |
| 9. வாழ்க__தலைவர் | வியங்கோள் வினைமுற்றுத் தொடரில் வல்லினம் மிகாது. |
| 10. கார்__காலம் | காலப் பெயர்ச்சொல் எனவே வல்லினம் மிகாது. |

**2. வல்லினம் இடலாமா?**

| | |
|---|---|
| 1. வாழ்த்து__கள் | 'கள்' என்னும் பன்மை விகுதி சேரும் போது வல்லினம் இடக்கூடாது. |
| 2. எழுத்து__கள் | "கள்" என்னும் பன்மை விகுதி சேரும் போது வல்லினம் இடுதல் கூடாது. |
| 3. திருநிறை__செல்வன் | "திருநிறை'' ஐ என்னும் இரண்டாம் வேற்றுமை உருபு வெளிப்படும் தொடரில் வல்லினம் இடுதல் வேண்டும். |
| 4. திருவளர்__செல்வி | "வளர்செல்வி'' வினைத்தொகையில் வல்லினம் இடுதல் கூடாது. |

**3. எது சரி? எது தவறு? காரணம் கூறுக.**

அ) அண்ணாமலைப் பல்கலைக் கழகம்

அண்ணாமலை பல்கலைக் கழகம் என்பது தான் சரி.

காரணம் : 'அண்ணாமலை' என்னும் பெயரை அடுத்து வல்லினம் இடுதல் கூடாது.
இருபெயரொட்டுப் பண்புத்தொகையில் வல்லினம் மிகும்.
எனவே, பல்கலைக்கழகம் என்பதில் வல்லினம் இட்டு எழுதுவது சரியே!

ஆ) அத்தனைச் சிறிய (தவறு)

அத்தனை சிறிய என்பது தான் சரி.

காரணம்: 'அத்தனை' என்ற சொல்லின் பின் வல்லினம் இடுதல் கூடாது.

இ) ஆத்திச்சூடி (சரி)

ஆத்தி – அகர ஈறு, இகர ஈறு புணரும்போது வல்லினம் மிகும்.

ஈ) எடுத்துக்காட்டுகள் (சரி)

வன்தொடர் குற்றியலுகரத்தில் வல்லினம் இட்டு எழுத வேண்டும்.

உ) கீழ்பக்கம் (தவறு)

கீழ்ப்பக்கம் என்பது தான் சரி.

காரணம்: இருபெயரொட்டுப் பண்புத்தொகையில் வல்லினம் மிகும்.

ஊ) சான்றோர் பேரவை (சரி)

நிலைமொழியில் உயர்திணை வரும்போது வல்லினம் இடுதல் கூடாது.

Please Send Your Study Materials to our Email Id: padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.CBSEtips.in



எ) சென்னைப் பல்கலைக்கழகம் (சரி)

இருபெயரொட்டுப் பண்புத்தொகையில் வல்லினம் இடுதல் வேண்டும்.

ஏ) தயிர்ச்சோறு (சரி)

இருபெயரொட்டுப் பண்புத்தொகையில் வல்லினம் இடுதல் வேண்டும்.

**4. கீழ்க்காணும் தொடர்களில் வல்லினம் மிகும், மிகா இடங்களைக் கண்டறிந்து அதற்கான இலக்கணம் அறிக.**

அ) வங்கிக்கடன் (வல்லினம் மிகும்)

இகர ஈற்றில் வல்லினம் மிகும்.
(வினையாக வந்தாலும் பெயராக வந்தாலும் வல்லினம் மிகும்)

ஆ) பழங்களைப்பறிக்காதீர்கள் (வல்லினம் மிகும்)

'ஐ' என்னும் இரண்டாம் வேற்றுமை உருபு வெளிப்படும் தொடர் அதனால் வல்லினம் மிகும்.

இ) திட்ட குழு (வல்லினம் மிகாது)

பெயரெச்சத்தில் வல்லினம் மிகாது.

ஈ) அரசு ஆணை பிறப்பித்தது (வல்லினம் மிகாது)

ஆணை பிறப்பித்தது என்பது இரண்டாம் வேற்றுமைத்தொகை. எனவே வல்லினம் மிகாது.

உ) மருந்துக்கடை (வல்லினம் மிகும்)

1. மென் தொடர் குற்றியலுகரத்தின் பின்னும் வலிமிகும்.
2. இருபெயரொட்டுப் பண்புத்தொகையில் வல்லினம் மிகும்.

குறிப்பு: மென்தொடர் குற்றியலுகரம் எச்சப் பொருளில் வந்தால் வல்லினம் மிகாது.
இச்சொல்லில் 'மருந்து' பின் வல்லினம் மிகும்.

ஊ) வேலையில்லாப் பட்டதாரி (வல்லினம் மிகும்)

ஈறுகெட்ட எதிர்மறைப் பெயரெச்சத்தில் வல்லினம் மிகும்.

எ) சிறப்புப் பரிசு (வல்லினம் மிகும்)

வன்தொடர் குற்றியலுகரத்தில் வல்லினம் மிகும்.

## மொழியை ஆழ்வோம்

**மொழிபெயர்க்க:** பக்கம்: 118



Bottle xylophone, Make music with bottles.
You will need: 6 glass bottles, Wooden spoon, Wter, Food coloring.

- Fill one bottle with water, then fill each other bottle with slightly less than the bottle next to it.

Please Send Your Study Materials to our Email Id: padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.CBSEtips.in



- Add some food coloring to help you to see the different levels of water.
- Tap the bottles with the end of a wooden spoon. Can you play a tune?

**Water music**

Hitting the bottles with the spoon makes them vibrate and produce a sound. The more the bottle vibrates, the higher the note will be. The more water in a bottle, the less it vibrates, so less water means higher notes.

கண்ணாடிப் புட்டிகளாலான இசைக்கருவி.
கண்ணாடி புட்டிகள் மூலம் இசையை உருவாக்குதல்.

**தேவையான உபகரணங்கள்:**

- ஆறு கண்ணாடி புட்டிகள்
- மரத்தாலான கரண்டி ஒன்று
- தண்ணீர்
- உணவுப்பொருளுக்குப் பயன்படும் வண்ணப்பொடி.

**செய்முறை:**

- முதல் புட்டியில் முழுவதுமாக தண்ணீரை நிரப்பு. அடுத்தடுத்து வரும் புட்டிகளில் சற்று குறைவாக நிரப்பிக் கொள்.
- உணவுப் பொருளுக்குப் பயன்படுத்தப்படும் வண்ணப் பொடியை தண்ணீரில் கலந்து கொண்டு, ஒவ்வொரு புட்டியிலும் வேறுபட்ட அளவில் தண்ணீர் நிரப்பியிருப்பதை அறிந்துகொள் (பார்த்துக்கொள்)
- இப்போது மரத்தாலான கரண்டியின் அடிப்பாகத்தைக் கொண்டு புட்டிகளில் தட்டினால், இசையை உன்னால் உருவாக்க முடியும்.

**தண்ணீர் இசையாகிறதா?**

- மரக்கரண்டியின் அடிப்பாகத்தால் புட்டிகளைத் தட்டும் போது ஏற்படும் அதிர்வுகளால் ஒலி ஏற்படுகிறது.
- புட்டிகளில் நிறைய நீர் இருந்தால் குறைவான அதிர்வுகளும், குறைவான நீர் உள்ள புட்டிகளில் நிறைய அதிர்வுகளும் ஏற்படும். ஒலியின் அளவுகள் வேறுபட்டு வரும்பொழுது, அதற்கேற்ப இசையும் (Tune) மாறுபட்டு ஒலிக்கும்.

**பின்வரும் பத்தியில் இடம்பெற்றுள்ள பிறமொழிச் சொற்களுக்கு நிகரான தமிழ்ச் சொற்களை எழுதுக.**

நாக்குதான் ஐம்புலன்களிலேயே ரொம்ப வீக்கு! அதற்கு நான்கு ஆதார ருசிகள்தாம் தெரியும். எலுமிச்சையின் புளிப்பு, சர்க்கரையின் தித்திப்பு, காபியின் கசப்பு, உப்பு. இவை தவிர ஸேவரி என்று சொல்கிற டேஸ்ட் எல்லாம் இந்த நான்கு ஆதர ருசிகளின் கலப்புதான். இந்த ருசிகளைத் தொட்டு அறிய நாக்கில் வெவ்வேறு இடங்கள் உண்டு. தித்திப்பு - நுனி நாக்கு, உப்பு - பரவலாக, குறிப்பாக நுனியில். கசப்பு - உள்நாக்கு. புளிப்பு, ஸேவரி - நாக்கின் வலது - இடது புறங்கள்! ஒரு சராசரி மனிதனுடைய நாக்கில் 9,000 சுவை அரும்புகள் உண்டு. அலட்டல் வேண்டாம். குழந்தையின் நாக்குடன் ஒப்பிடும்போது இது ஒன்றுமே இல்லை. ஏதாவது மருந்தை நாக்கில் தொட்டால் குழந்தைகள் என்னமாக எக்ஸ்பிரஷன் காட்டுகின்றன! சுவைக்கு வாசனையும் சேரவேண்டும். இரண்டும் ஒத்துழைத்தால்தான் பாதாம் அல்வா, ஐஸ்க்ரீம் போன்றவற்றை ரசிக்க முடியும். மூக்கைப் பிடித்துக் கொண்டு ஐஸ்க்ரீம் சாப்பிட்டுப்

Please Send Your Study Materials to our Email Id: padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.CBSEtips.in



பாருங்கள். ஜில்லென்று இருக்கும். அவ்வளவே. கூடவே சூடும், உணவின் தோற்றமும் முக்கியம். மூக்குக்கு மொத்தம் ஏழு வாசனைகள். கற்பூர வாசனை, பெப்பர்மிண்ட் வாசனை, மலர்களின் வாசனை, மஸ்க் என்னும் அரபுசேக் செண்ட் வாசனை, ஈத்தர் அல்லது பெட்ரோல் வாசனை, அழுகிய முட்டை வாசனை, காட்டமான அமில வாசனை. இந்த ஏழு வாசனைகளின் கலப்புகளால் நம்மால் ஆயிரக்கணக்கான வாசனைகளை உணர முடிகிறது. (ஏன்? எதற்கு? எப்படி? - சுஜாதா)

| | சொற்கள் | தமிழாக்கம் |
|---|---|---|
| 1. | ரொம்ப வீக்கு | நிரம்ப சபலம் |
| 2. | ஆதார ருசிகள் | அடிப்படைச் சுவைகள் |
| 3. | காபி | குழம்பி, கோப்பி, கொட்டை வடிநீர். |
| 4. | ஸேவரி | காரசுவையுண்டி |
| 5. | டேஸ்ட் | சுவை |
| 6. | ருசிகள் | சுவைகள் |
| 7. | சராசரி | ஏறத்தாழ |
| 8. | அலட்டல் | அளத்தல் |
| 9. | எக்ஸ்பிரஷன் | விளைவுகள் |
| 10. | வாசனை | நறுமணம் |
| 11. | பாதாம் அல்வா | பாதாம் இன்களி |
| 12. | ஐஸ்க்ரீம் | பனிக்குழைவு |
| 13. | ரசிக்க | களிக்க |
| 14. | ஜில்லென்று | குளிர்ச்சி என்று |
| 15. | கற்பூர வாசனை | சூடம் நறுமணம் |
| 16. | பெப்பர்மிண்ட் வாசனை | புதினாச்சுவையுள்ள மிட்டாய்கள் |
| 17. | மஸ்க் அரபுசேக் செண்ட் | ஆண்மானிலிருந்து எடுக்கப்பெற்ற வாசனைத் திரவியம் |
| 18. | ஈத்தர் | தீப்பற்றக் கூடிய பொருள். |
| 19. | பெட்ரோல் வாசனை | கல்நெய் (கன்னெய்) |
| 20. | அமில வாசனை | காடிப் புளியம். |

**கதையைப் படித்து உரையாடலாக மாற்றுக.** பக்கம்: 119

ஒரு சிப்பி, இன்னொரு சிப்பியிடம் சொன்னது – ‘ஐயோ, என்னால் வலி தாங்கமுடியவில்லையே’. ‘ஏன்? என்னாச்சு?’ என்று விசாரித்தது இரண்டாவது சிப்பி.

‘எனக்குள் ஏதோ ஒரு கனமான உருண்டை, பந்து உருள்வதுபோல் இருக்கிறது. ரொம்ப வலி.’

இதைக் கேட்டதும் இரண்டாவது சிப்பிக்கு மிகுந்த மகிழ்ச்சி. பெருமையுடன் நெஞ்சு நிமிர்த்தி, ‘ஆகா! நான் எந்த வலியும் இல்லாமல், நலமாக இருக்கிறேன்’ என்றது உற்சாகமாக.

இவர்கள் பேசுவதைக் கேட்டுக்கொண்டிருந்த ஒரு நண்டு, இரண்டாவது சிப்பியிடம் சொன்னது– ‘உனக்கு எந்த வலியும் இல்லை என்பது உண்மையாக இருக்கலாம். வலியைத் தாங்க விரும்பாத

Please Send Your Study Materials to our Email Id: padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.CBSEtips.in



நீ, எப்பொழுதும் இப்படியே வெறுமையாகக் கிடக்க வேண்டியதுதான். ஆனால், இப்போது சிரமப்படுத்தும் அந்த வலி, இன்னும் சில நாள்களில், ஓர் அழகான முத்தாக உருவெடுக்கும். அது பெருமை தேடித்தரும்.'

**விடை:**

(கடற் கரையோரம் அலையிலிருந்து மீண்டு வந்தன இரண்டு சிப்பிகள்)

**சிப்பி 1:** வலி தாங்கமுடியவில்லையே? என்ன செய்வது என்று தெரியவில்லை.

**சிப்பி 2:** ஏன்? என்ன ஆச்சு; நேற்று நன்றாகத் தானே இருந்தாய்; இன்றைக்கு என்ன ஆனது?

**சிப்பி 1:** என் வயிற்றுக்குள் ஏதோ கனமான உருண்டை பந்து உருளுவது போல இருக்கிறது. அதனால் தாங்க முடியாத வலி....

**சிப்பி 2:** எனக்கு எந்த வலியும் இல்லை! நல்ல வேளை எனக்கு எந்தத் தொந்தரவும் இல்லை! நான் மகிழ்ச்சியாக இருக்கிறேன்.

(அடுத்த அலையிலிருந்து கரையில் மீண்டு நின்றது ஒரு நண்டு)

**நண்டு: (2வது சிப்பியிடம்)**

அந்த சிப்பி வலியால் துடிக்கிறது. உனக்கு எந்த வலியும் இல்லை; "நன்றாக இருக்கிறேன்" என்று சொல்கிறாய்? வலியைத் தாங்க விருப்பமில்லை என்கிறாய். வலியைத் தாங்கத் தயராக இல்லை என்கிறாய்? அப்படி என்றால் நீ வெறுமையாகக் கிடக்க வேண்டியது தான்.

**சிப்பி 2:** ஏன் வலி வந்தால் என்ன வாகும்? எனக்குக் கொஞ்சம் விளக்கமாகச் சொல்லுங்களேன.

**நண்டு:** அந்த நண்டுக்கு வலி சிரமப்படுத்தும். ஆனால் சில நாள்களில் அதன் வயிற்றிலிருந்து ஒரு அழகான முத்தாக வெளிவரும். அந்த முத்து எல்லோருக்கும் பெருமை தேடித்தரும்.

## செய்து கற்க.

பக்கம்: 119

1. **செய்தித்தாள்களில் இடம்பெற்றுள்ள ஒரு வாரத்திற்குரிய அறிவியல் செய்திகளைப் படித்துக் குறிப்பெடுக்க.**

**நாள்: 14.4.18**
**சனிக்கிழமை**

**தினமணி**

சமூகப் பொருளாதார வளர்ச்சிக்கான திட்டங்கள் குறித்து புதிய செயலி உருவாக்கிய திண்டுக்கல் மாணவர்களுக்கு முதல்பரிசு.

சமூகப் பொருளாதார வளர்ச்சித் திட்டங்களைப் பொதுமக்களிடம் எளிதாகக் கொண்டு செல்வதற்கான புதிய செயலி மற்றும் இணைய முகவரி உருவாக்கி இருக்கின்றனர் மாணவர்கள்.

**நாள்: 14.4.18**
**சனிக்கிழமை**

**தி இந்து**

**மம்மி பூனை**

எகிப்தில் பூனை கடவுளின் ஒரு வடிவம். அரசர் குடும்பத்தைப் போலவே பூனைகளையும் பாடம் பண்ணிக் காத்துவந்தனர். பிரமிடுகளிலுள்ள சுவற்றில் புனிதப் பூனைகள் சித்தரிக்கப்பட்டுள்ளன. இதுபற்றி பிரபல சூழலியல் எழுத்தாளர். சு. தியேடர் பாஸ்கரன் கட்டுரையில் தெரிவித்திருக்கிறார்.

Please Send Your Study Materials to our Email Id: padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.CBSEtips.in



**நாள்: 13.4.18**
**வெள்ளிக்கிழமை**

**தினமணி**

ஐ.ஆர்.என்.எஸ்.எஸ். I ஐ செயற்கைக்கோள் விண்ணில் வெற்றிகரமாக நிலைநிறுத்தம். செயற்கைக்கோளுடன் பி.எஸ்.எல்.வி. சி.41. ராக்கெட் ஸ்ரீஹரிகோட்டா ஆராய்ச்சி மைய ஏவுதளத்திலிருந்து ஏவப்பட்டது. செய்தியாளர்களின் கேள்விகளுக்குப் பதில் அளித்து அதன் தலைவர் சிவன் கூறினார்.

(இதுபோன்று, அன்றாடச் செய்தித்தாள்களில் வெளியாகும் அறிவியல் செயதிகளைத் தொடர்ந்து படித்துக் குறிப்பெடுத்துக் கொள்க)

**2. அங்காடியில் வாங்கிய உணவுப் பொருளின் உருவாக்க நாள், முடிவு நாள், உறையில் அச்சடிக்கப் பட்ட உணவுப்பொருளின் ஆற்றல், குறியீட்டுப் பட்டை (Barcode) ஆகியவற்றின் விவரங்களைக் கொண்டு உணவுப் பொருளின் உண்மைத்தன்மையை அறிவது?**

நாம் அங்காடிக்குச் சென்று, உணவுப்பொருள், குளிர்பானங்கள், அழகுசாதனப் பொருள்கள் போன்றவற்றை வாங்கும்போது, அதன் உறைகளிலோ அல்லது மேல் அட்டைப் பெட்டியிலோ குறியீட்டு பட்டை (Barcode) அமைந்திருக்கும், அதன் உண்மைத் தன்மையை ஆராயும் முறை. குறியீட்டுப் பட்டை இடம் பெற்றிருக்கும் பகுதியை கணினியுடன் கூடிய ஒளிக் கதிர் மூலம் வருடும் போது (Scanning) அப்பொருளின்

- எடை
- விலை
- உற்பத்தி செய்த இடம்
- நாள்
- எந்த நாள் வரை பயன்படுத்தலாம் (முடிவு நாள்)
- அப்பொருளில் அடங்கியிருக்கும் பிறபொருள்களின் அளவு, தன்மை, உற்பத்தி உரிமம் போன்ற அனைத்து விபரங்களும் திரையில் தெரியவரும். இம்முறையில் தான் ஒரு பொருளை வாங்கும்பொழுது ஆராய்ந்து வாங்குதல் வேண்டும்.

நயம் பாராட்டுக.

**பொங்கியும் பொலிந்தும் நீண்ட புதுப்பிடர் மயிர்சி லிர்க்கும்
சிங்கமே! வான வீதி திகுதிகு எனஎ ரிக்கும்
மங்காத தணற்பி ழம்பே! மாணிக்கக் குன்றே! தீர்ந்த
தங்கத்தின் தட்டே! வானத் தகளியிற் பெருவி ளக்கே!
கடலிலே கோடி கோடிக் கதிர்க்கைகள் ஊன்றுகின்றாய்
நெடுவானில் கோடி கோடி நிறைசுடர்க் கைகள் நீட்டி
இடைப்படு மலையோ காடோ இல்லமோ பொய்கை ஆறோ
அடங்கநின் ஒளிஅ ளாவ அமைந்தனை! பரிதி வாழி! - பாரதிதாசன்.**

இலக்கிய நயம் பாராட்டல்

மையக் கருத்து:

கடலில் இருந்து வரும் சிங்கம் போல வருகின்றாய். வானத்து கொதிப் பிழம்பே! மாணிக்க மலையே! தங்கத் தட்டே! பெரு விளக்கே! கோடிக் கைகளை ஊன்றுகின்றாய்! வானத்து சுடர் கைகளை நீட்டுகின்றாய்! காடு, மலை, இல்லம், பொய்கை, ஆறு என அனைத்திலும் உன் ஒளி கதிரவனே!

Please Send Your Study Materials to our Email Id: padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.CBSEtips.in



**மோனை நயம்:**

பாடலின் அடி அல்லது சீரில் முதல் எழுத்து ஒரே மாதிரியாக வருவது மோனை.
பொங்கி-புதுப்பிடர், மங்காத-மாணிக்க, துங்கத்தின்-துகளியில், கடலிலே-கதிர்க்கைகள்

**எதுகை நயம்:**

பாடலின் அடி அல்லது சீரில் இரண்டாவது எழுத்து ஒரே மாதிரியாக வருவது எதுகை.
பொங்கி - சிங்கமே, இடைப்படு - அடங்கநின் (டகரம்)

**அணிநயம்:**

இப்பாடலில் சூரியனைத் தங்கத்தட்டு, மாணிக்கக் குன்று என்று உருவகப்படுத்துவதால், உருவக அணி பயின்று வந்துள்ளது.

**சந்த நயம்:**

நாட்டுப் புறச் சிந்து இராகத்தில் இப்பாடலைப் பாடலாம்.

**சுவை நயம்:**

இப்பாடலில் பெருமிதச் சுவை பயின்றுள்ளது.

## மொழியோடு விளையாடு

பக்கம்: 119

**குழுவில் விளையாடுக.**

- நான்கு மாணவர்கள் கொண்ட குழுக்களாக எண்ணிக்கைக்கு ஏற்பப் பிரிந்து கொள்க.
- முதல் மாணவர் ஒரு சொல்லைத் தொடங்குக.
- அதனோடு தொடர்புடைய ஒரு சொல்லை இரண்டாம் மாணவர் கூறுக.
- இப்படியே நான்கு மாணவர்களும் கூறிய சொற்களைக் கொண்டு ஒரு தொடர் அமைக்க.

**எ.கா.**

**மாணவர் 1 : கணினி** **மாணவர் 2 : அறிவியல்**
**மாணவர் 3 : தமிழ்** **மாணவர் 4 : மொழி**

**சொல்லப்பட்ட சொற்கள்:** கணினி, அறிவியல், தமிழ், மொழி.

**தொடர்:** அறிவியல், கணினித் தொழில்நுட்ப வளர்ச்சி ஆகியவற்றுக்கு ஈடுகொடுத்துத் தமிழ் மொழி வளர்ந்து வருகிறது.

1. மாணவா் 1 : ஏவு ஊர்தி
   மாணவா் 2 : பாயும்
   மாணவா் 3 : விண்வெளி
   மாணவா் 4 : ஏவுகணை

   **தொடர்:** விண்வெளி மையத்தில் ஏவு ஊர்தியில் நிறுத்தி வைக்கப்பட்டுள்ள ஏவுகணை விண்ணில் பாயும்.

2. மாணவா் 1 : அடக்கம்
   மாணவா் 2 : இரு கண்கள்
   மாணவா் 3 : நமக்கு
   மாணவா் 4 : பொறுமை

   **தொடர்:** அடக்கமும், பொறுமையும் நமக்கு இரு கண்களாகத் திகழ்கிறது.

Please Send Your Study Materials to our Email Id: padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.CBSEtips.in



3. மாணவர் 1 : தொழில்நுட்பம்
மாணவர் 2 : நம் நாடு
மாணவர் 3 : வருகிறது
மாணவர் 4 : நாளுக்குநாள்
**தொடர் :** நம் நாட்டில் தொழில் நுட்பங்கள் நாளுக்கு நாள் வளர்ந்து வருகிறது.

4. மாணவர் 1 : சுவைத்தல்
மாணவர் 2 : காணல்
மாணவர் 3 : நுகர்தல்
மாணவர் 4 : தொடுதல்
**தொடர்:** தொடுதல், சுவைத்தல், நுகர்தல், காணல் ஆகிய நான்கு புலன்களால் அறியும் ஆற்றல் கொண்டவை நான்கறிவு உயிர்கள் எனப்படும்.

மாணவர்களே இவ்வாறாக உங்கள் நண்பர்களுடன் விளையாடும்போது உங்கள் மொழி அறிவு வளரும்.

## அகராதியில் காண்க.

பக்கம்: 120

இமிழ்தல், இசைவு, துவனம், சபலை, துகலம்.

**விடை:**

**இமிழ்தல்** - இனிதாதல், ஒலித்தல், கக்குதல்.
**இசைவு** - இணக்கம், சம்மதி, பொருத்து, தகுதி, ஏற்றது, உடன்பாடு, ஓட்டம்.
**துவனம்** - அக்கினி, நெருப்பு.
**சபலை** - இலக்குமி, திப்பிலி, நா, மின்னல், வேசி.
**துகலம்** - பங்கு.

## ஒரு சொல்லால் தொடரின் இரு இடங்களை நிரப்புக. (விலங்கு, எழுதி, அகல், கால், அலை)

அ) எண்ணெய் ஊற்றி அகல் விளக்கு ஏற்றியவுடன், இடத்தைவிட்டு அகல்.

ஆ) எனக்கு கால் பங்கு பிரித்துக் கொடுக்க வா! கீழே ஈரம்: பார்த்து உன் கால் ஐ வை.

இ) கைப்பொருளைக் கடல் அலை யில் தொலைத்துவிட்டு, கரையில் தேடி அலைந்தால் கிடைக்குமா?

ஈ) வீட்டு விலங்கு ஆன நாயுடன் விளையாடுவது மகிழ்ச்சி தரும்; வெளியில் அதனைக் கழுத்து விலங்கு உடன் மட்டுமே பிடித்துச் செல்ல வேண்டும்.

உ) எழுத்தாணி கொண்டு எழுதிய தமிழை, ஏவுகணையில் எழுதி எல்லாக் கோளிலும் ஏற்றுங்கள்.

## ஒரு தொடரில் இருவினைகளை அமைத்து எழுதுக.

குவிந்து - குவித்து; சேர்ந்து - சேர்த்து; பணிந்து - பணித்து; பொருந்து - பொருத்து; மாறு - மாற்று. (எ.கா) விரிந்தது - விரித்தது.

அ) பெருங்காற்று வீசியதால், பூவின் இதழ்கள் **விரிந்தன**; மயில் தோகையை **விரித்தது**.

ஆ) காட்டாற்று வெள்ளம் அடித்து வந்த மணல் **குவிந்தது**; வாங்கிய மணலை **குவித்து** வைத்தோம்.

இ) காசு **சேர்ந்தது**; அதனால் **சேர்த்து** வைத்தோம்.

Please Send Your Study Materials to our Email Id: padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.CBSEtips.in



ஈ) தலைவர் சொல்லுக்கு தொண்டர்கள் **பணிந்து** நடந்தனர். மக்கள் பணியில் சேவை செய்யுமாறு **பணித்திரு**க்கிறார்.

உ) மேடைப் பேச்சுக்குப் **பொருந்துமாறு**, உவமைகளைப் **பொருத்திப்** பேச வேண்டும்.

ஊ) கைம்**மாறு** எதிர்பார்க்காது செய்யும் வேலை அனைவரையும் உன் பக்கம் **மாற்றும்**.

காட்சியைக் கண்டு கவினுறக் கருத்தளிக்க.



நடைபயிற்சி செய்ய
செல்லப் பிராணியுடன்
சென்ற காலம் போய்
இயந்திர மனிதன்
நடைபயிற்சி செய்ய
இயந்திர மனிதனுக்கு
செல்லப் பிராணி ஆனாய் மானிடா!

## கலைச்சொல் அறிவோம்

| | | |
|---|---|---|
| ஏவு ஊர்தி | - | Launch Vehicle |
| ஏவுகணை | - | Missile |
| கடல்மைல் | - | Nautical Mile |
| காணொலிக் கூட்டம் | - | Video Conference |
| பதிவிறக்கம் | - | Download |
| பயணியர் பெயர்ப் பதிவு | - | PNR (Passenger Name Record) |
| மின்னணு இயந்திரங்கள் | - | Electronic devices |

Please Send Your Study Materials to our Email Id: padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.CBSEtips.in



இயல் 5 உரைநடை உலகம்

# கல்வியில் சிறந்த பெண்கள்

## பாடநூல் மதிப்பீட்டு வினா

### 2 குறுவினா

1. **சாரதா சட்டம் எதற்காகப் போடப்பட்டது?**

பெண்கள் முன்னேற்றத்திற்குத் தடைக்கல்லாய் இருப்பது குழந்தைத் திருமணம். எனவே, அதைத் தடுக்க 1929 ஆம் ஆண்டு சாரதா சட்டம் போடப்பட்டது.

### 3 சிறுவினா

1. **சங்க பெண்பாற் புலவர்களின் பெயர்களை எழுதுக.**

ஔவையார், ஒக்கூர் மாசாத்தியார், ஆதிமந்தியார், வெண்ணிக் குயத்தியார், பொன்முடியார், அள்ளூர் நன்முல்லையார், நக்கண்ணையார், காக்கைப்பாடினியார், வெள்ளிவீதியார், காவற்பெண்டு, நப்பசலையார்.

2. **இன்றைய பெண்கல்வி என்னும் தலைப்பில் வில்லுப்பாட்டு வடிவில் பாடல் எழுதுக.**

''தந்தனத்தோம் என்று சொல்லியே வில்லினில் பாட..
ஆமாம் வில்லினில் பாட
வந்தருள்வாய் தமிழ்மகளே !
இன்றைய பெண்கல்வி பற்றிப் பாடப்போகிறோம்!
ஆமாம்! பாடப்போகிறோம்.
மருத்துவம் படித்து மருத்துவ மாமேதைகள் தான்
இன்று பெண்கள்..
சட்டம் படித்து சட்ட மாமேதைகள் தான்
இன்று பெண்கள்..
பொறியியல் படித்து பொறியியல் மாமேதைகள் தான்
இன்று பெண்கள்..
ஆமாம்!
வாழிய வாழிய பெண்கல்வி
ஆமாம் வாழிய வாழியவே!''

3. **முத்துலெட்சுமி - குறிப்பு வரைக. (அல்லது) மருத்துவர் முத்துலெட்சுமியின் சாதனைகளைக் குறிப்பிடுக.**

- ◈ தமிழகத்தின் முதல் பெண் மருத்துவர் முத்துலெட்சுமி அம்மையார்.
- ◈ இந்தியப் பெண்கள் சங்கத்தின் முதல் தலைவர்.
- ◈ சென்னை மாநகராட்சியின் முதல் துணைமேயர்.
- ◈ சட்டமேலவைக்குத் தேர்ந்தெடுக்கப்பெற்ற முதல் பெண்மணி.

Please Send Your Study Materials to our Email Id: padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.CBSEtips.in



- ◈ தேவதாசிமுறை ஒழிப்புச் சட்டம், இருதாரத் தடைச்சட்டம், பெண்களுக்குச் சொத்துரிமை வழங்கும் சட்டம், குழந்தைத் திருமணத் தடைச் சட்டம் ஆகியவை நிறைவேறக் காரணமாக இருந்தவர்.
- ◈ அடையாற்றில் ஔவை இல்லம், புற்றுநோய் மருத்துவமனை ஆகியவற்றை நிறுவினார்.

**4. நீலாம்பிகை அம்மையாரின் தமிழ்ப் பணி குறித்த சிறப்பம்சங்களை எழுதுக.**

- ◈ மறைமலையடிகளின் மகள் நீலாம்பிகை அம்மையார்.
- ◈ தந்தையைப் போல தனித்தமிழ்ப் பற்றுடையவர்.
- ◈ இவரது தனித்தமிழ்க் கட்டுரை, வடசொல் தமிழ் அகர வரிசை, முப்பெண்மணிகள் வரலாறு, பட்டினத்தார் பாராட்டிய மூவர் ஆகிய நூல்கள் தனித்தமிழில் எழுத விரும்புவோர்க்கு மிகவும் பயனுள்ளவையாக விளங்குகின்றன.

## 4 நெடுவினா

**1. நீங்கள் அறிந்த சாதனைப் பெண்கள் குறித்த செய்திகளை விவரிக்க.**

**மூவலூர் இராமாமிர்தம்:**

- ◈ தமிழகத்தின் சமூகச் சீர்திருத்தவாதி மூவலூர் இராமாமிர்தம் அம்மையார்.
- ◈ இவர் எழுத்தாளர், திராவிட இயக்க அரசியல் செயல்பாட்டாளர்.
- ◈ இவர் தேவதாசி முறை ஒழிப்புச் சட்டம் நிறைவேறத் துணை நின்றவர்.
- ◈ தமிழக அரசு 8 ஆம் வகுப்பு வரை படித்த பெண்களுக்குத் திருமண உதவித்தொகையை இவர் பெயரால் வழங்கி வருகின்றது.

**முத்துலெட்சுமி:**

- ◈ தமிழகத்தின் முதல் பெண் மருத்துவர் முத்துலெட்சுமி அம்மையார்.
- ◈ இவர் இந்தியப் பெண்கள் சங்கத்தின் முதல் தலைவர்.
- ◈ இவர் சென்னை மாநகராட்சியின் முதல் துணைமேயர்.
- ◈ இவர் சட்டமேலவைக்குத் தேர்ந்தெடுக்கப்பெற்ற முதல் பெண்மணி.
- ◈ தேவதாசிமுறை ஒழிப்புச் சட்டம், இருதாரத் தடைச்சட்டம், பெண்களுக்குச் சொத்துரிமை வழங்கும் சட்டம், குழந்தைத் திருமணத் தடைச் சட்டம் ஆகியவை நிறைவேற காரணமாக இருந்தவர்.
- ◈ அடையாற்றில் ஔவை இல்லம், புற்று நோய் மருத்துவமனை ஆகியவற்றை நிறுவினார்.

**நீலாம்பிகை அம்மையார்:**

- ◈ மறைமலையடிகளின் மகள் நீலாம்பிகை அம்மையார்.
- ◈ இவர் தன் தந்தையைப் போல தனித்தமிழ்ப் பற்றுடையவர்.
- ◈ இவரது தனித்தமிழ்க் கட்டுரை, வடசொல் தமிழ் அகர வரிசை, முப்பெண்மணிகள் வரலாறு, பட்டினத்தார் பாராட்டிய மூவர் ஆகிய நூல்கள் தனித்தமிழில் எழுத விரும்புவோர்க்கு மிகவும் பயனுள்ளவையாக விளங்குகின்றன.

Please Send Your Study Materials to our Email Id: padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.CBSEtips.in



## கூடுதல் வினாக்கள்

### 1 பலவுள் தெரிக

1. சொற்றொடரை முறைப்படுத்துக.

1) பெறுதலே 2) அழகு
3) கல்வி 4) பெண்களுக்கு

அ) 3-1-4-2 ஆ) 2-1-4-3
இ) 3-4-1-2 ஈ) 1-3-4-2

**விடை: அ) 3-1-4-2**

2. கீழ்க்கண்டவற்றுள் சங்ககால பெண்பாற் புலவர் இல்லாதவர்

அ) ஔவையார் ஆ) ஆதிமந்தி
இ) ஆண்டாள் ஈ) பொன்முடியார்

**விடை: இ) ஆண்டாள்**

3. கொவ்வைத் தமிழைக் கொண்டு பாடியவர் என்று குழுத்தலைவர் யாரைக் குறிப்பிடுகிறார்?

அ) ஔவையார் ஆ) ஆதிமந்தி
இ) ஒக்கூர் மாசாத்தியார் ஈ) பொன்முடியார்

**விடை: இ) ஒக்கூர் மாசாத்தியார்**

4. பொருத்துக,

| | | |
|---|---|---|
| 1. சாராதா சட்டம் | - | அ) 1930 |
| 2. அவ்வை இல்லம் | - | ஆ) 1929 |
| 3. புற்றுநோய் மருத்துவமனை | - | இ) 1964 |
| 4. கோத்தாரி கல்விக்குழு | - | ஈ) 1952 |

அ) 1-ஆ 2-அ 3-ஈ 4-இ ஆ) 1-இ 2-அ 3-ஈ 4-ஆ
இ) 1-ஆ 2-ஈ 3-ஆ 4-இ ஈ) 1-ஈ 2-அ 3-ஆ 4-இ

**விடை: அ) 1-ஆ 2-அ 3-ஈ 4-இ**

5. பொருத்துக,

| | | |
|---|---|---|
| 1. முத்துலட்சுமி | - | அ) தேவதாசி ஒழிப்புச் சட்டம் |
| 2. சாவித்திரி பூலே | - | ஆ) இலவச மருத்துவம் அளித்தவர் |
| 3. ஐடோஸ் சோபியா ஸ்கட்டர் | - | இ) முதல் பெண் ஆசிரியர் |
| 4. மூவலூர் இராமாமிர்தம் | - | ஈ) முதல் பெண் மருத்துவர் |

அ) 1-ஆ 2-அ 3-ஈ 4-இ ஆ) 1-இ 2-அ 3-ஈ 4-ஆ
இ) 1-ஆ 2-ஈ 3-ஆ 4-இ ஈ) 1-ஈ 2-இ 3-ஆ 4-அ

**விடை: ஈ) 1-ஈ 2-இ 3-ஆ 4-அ**

6. முதன் முதலில் பெண் கல்விக்குப் பரிந்துரை செய்தது

அ) கோத்தாரி குழு
ஆ) ஹண்டர் குழு
இ) பெண்கல்வி ஊக்குவிப்புத்திட்டம்
ஈ) இவற்றுள் எதுவுமில்லை

**விடை: ஆ) ஹண்டர் குழு**

Please Send Your Study Materials to our Email Id: padasalai.net@gmail.com

7. இந்தியாவில் முதன்முதலாகப் பெண்களுக்கான பள்ளித் தொடங்கப்பட்ட மாநிலம் எது?

அ) தமிழ்நாடு ஆ) குஜராத்
இ) மராட்டியம் ஈ) கேரளா

**விடை: இ) மராட்டியம்**

8. தமிழக அரசு, 8 ஆம் வகுப்பு வரை படித்த இளம்பெண்களுக்கான திருமண உதவித் தொகை இவரின் பெயரால் வழங்கப்படுகின்றது?

அ) முத்துலட்சுமி ஆ) சாவித்திரி பூலே
இ) ஐடோஸ் சோபியா ஸ்கட்டர் ஈ) மூவலூர் இராமாமிர்தம்

**விடை: ஈ) மூவலூர் இராமாமிர்தம்**

9. தேவதாசி ஒழிப்புச் சட்டம் நிறைவேறத் துணை நின்றவர் ________.

அ) முத்துலட்சுமி ஆ) சாவித்திரி பூலே
இ) ஐடோஸ் சோபியா ஸ்கட்டர் ஈ) மூவலூர் இராமாமிர்தம்

**விடை: ஈ) மூவலூர் இராமாமிர்தம்**

10. வேலூரில் இலவச மருத்துவம் அளித்தவர் ________.

அ) முத்துலட்சுமி ஆ) சாவித்திரி பூலே
இ) ஐடோஸ் சோபியா ஸ்கட்டர் ஈ) மூவலூர் இராமாமிர்தம்

**விடை: இ) ஐடோஸ் சோபியா ஸ்கட்டர்**

11. பட்டமேற்படிப்பிற்குரிய பெண்கல்வி ஊக்குவிப்புத் திட்டம் எது?

அ) ஈ.வெ.ரா - நாகம்மை இலவச கல்வி உதவித்திட்டம்
ஆ) சிவகாமி அம்மையார் கல்வி உதவித்திட்டம்
இ) மூவலூர் இராமாமிர்தம் திருமணஉதவித்திட்டம்
ஈ) இவற்றுள் எதுவுமில்லை

**விடை: ஈ) ஈ.வெ.ரா - நாகம்மை இலவச கல்வி உதவித்திட்டம்**

12. கல்வி மற்றும் திருமண உதவித்தொகையுடன் தொடர்புடையது ________.

அ) ஈ.வெ.ரா - நாகம்மை இலவச கல்வி உதவித்திட்டம்
ஆ) சிவகாமி அம்மையார் கல்வி உதவித்திட்டம்
இ) மூவலூர் இராமாமிர்தம் திருமணஉதவித்திட்டம்
ஈ) இவற்றுள் எதுவுமில்லை

**விடை: ஆ) சிவகாமி அம்மையார் கல்வி உதவித்திட்டம்**

13. அனைத்து நிலையிலும் மகளிர் கல்வியை வலியுறுத்தியது ________.

அ) கோத்தாரி கல்விக் குழு ஆ) ஹண்டர் குழு
இ) பெண்கல்வி ஊக்குவிப்புத்திட்டம் ஈ) இவற்றுள் எதுவுமில்லை

**விடை: அ) கோத்தாரி கல்விக் குழு**

14. மறைமலை அடிகளாரின் மகள் ________.

அ) ஈ.த. இராஜேஸ்வரி அம்மையார் ஆ) நீலாம்பிகை அம்மையார்
இ) மூவலூர் இராமாமிர்தம் ஈ) முத்துலட்சுமி

**விடை: ஆ) நீலாம்பிகை அம்மையார்**

15. இராணி மேரி கல்லூரியில் அறிவியல் பேராசிரியாகப் பணியாற்றியவர்.........

அ) ஈ.த. இராஜேஸ்வரி அம்மையார் ஆ) நீலாம்பிகை அம்மையார்
இ) மூவலூர் இராமாமிர்தம் ஈ) முத்துலட்சுமி

**விடை: அ) ஈ.த. இராஜேஸ்வரி அம்மையார்**

Please Send Your Study Materials to our Email Id: padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.CBSEtips.in



**கோடிட்ட இடங்களை நிரப்புக.**

1. பாகிஸ்தானில் பெண்கல்விக்கெனப் போராடியவர் ________. விடை: மலாலா
2. பாகிஸ்தானில் பெண்கல்விக்கெனப் போராடிய போது மலாலாவின் வயது ________. விடை: பன்னிரண்டு
3. பெண்களுக்கெனப் பள்ளி தொடங்கப்பட்ட ஆண்டு ________. விடை: 1848
4. இந்திய நாட்டின் முதல் பெண் ஆசிரியர் ________. விடை: சாவித்திரிபாய் பூலே
5. தமிழகத்தின் முதல் பெண்மருத்துவர் ________. விடை: முத்துலெட்சுமி
6. நோபல் பரிசு வாங்கிய வீரச்சிறுமி ________. விடை: மலாலா
7. குழந்தையைப் பாதுகாப்போம் அமைப்பை நிறுவியவர் ________. விடை: கைலாஷ் சத்தியார்த்தி
8. 80 ஆயிரம் குழந்தைகள் கல்வி பெற உதவியாய் இருந்தவர் ________. விடை: கைலாஷ் சத்தியார்த்தி
9. 2014இல் நோபல் பரிசு வாங்கிய பெருமைக்குரியவர்கள் ________, ________. விடை: கைலாஷ் சத்தியார்த்தி, மலாலா.
10. இந்தியப் பெண்கள் சங்கத்தின் முதல் தலைவர்________. விடை: முத்துலெட்சுமி
11. சென்னை மாநகராட்சியின் முதல் பெண்மேயர் ________. விடை: முத்துலெட்சுமி
12. சட்ட மேலவைக்குத் தேர்ந்தெடுக்கப்பட்ட முதல் பெண்மணி ________. விடை: முத்துலெட்சுமி
13. 1930 இல் அடையாற்றில் அவ்வை இல்லம் தொடங்கியவர்________. விடை: முத்துலெட்சுமி
14. 1952 இல் அடையாற்றில் புற்றுநோய் மருத்துவமனை தொடங்கியவர் ________. விடை: முத்துலெட்சுமி
15. சமண மதம், புத்த மதம் வளர்ந்த காலத்தில் கல்வி கற்ற பெண் ________. விடை: மணிமேகலை
16. மாதவி மகள் ________. விடை: மணிமேகலை
17. இறைவனுக்குப் பாமாலை சூட்டிய பெண்கள்________ , ________. விடை: காரைக்காலம்மையார், ஆண்டாள்
18. தடைகளை மீறி கல்வி கற்று பண்டிதர் ஆகியவர் ________ . விடை: பண்டித ரமாபாய்
19. முப்பெண்மணிகள் வரலாறு நூலை எழுதியவர் ________. விடை: நீலாம்பிகை அம்மையார்
20. பட்டினத்தார் பாராட்டிய மூவர் நூலை எழுதியவர் ________. விடை: நீலாம்பிகை அம்மையார்
21. வடசொல் - தமிழ் அகரவரிசை நூலை எழுதியவர் ________. விடை: நீலாம்பிகை அம்மையார்
22. சூரியன், பரமாணுப்புராணம் ஆகிய நூல்களை எழுதியவர் ________. விடை: ஈ.த. இராஜேஸ்வரி அம்மையார்

Please Send Your Study Materials to our Email Id: padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.CBSEtips.in



## 2 குறுவினா

1. **பெண்கல்வி ஊக்குவிப்புக்கான திட்டங்கள் யாவை?**
   - ◈ ஈ.வெ.ரா. - நாகம்மை இலவசக் கல்வி உதவித் திட்டம்: பட்டமேற்படிப்புக்கு உரியது.
   - ◈ சிவகாமி அம்மையார் கல்வி உதவித் திட்டம் - கல்வி, திருமண உதவித்தொகை ஆகியவற்றுடன் தொடர்புடையது.

2. **மலாலா என்பவர் யார்?**

   பாகிஸ்தானில் பெண்கல்வி வேண்டுமெனப் போராட்டக் களத்தில் இறங்கிய 12 வயது பெண் மலாலா.

3. **வில்லுப்பாட்டுக் குழுத்தலைவர் எவையெல்லாம் தாயாக விளங்குவதாகக் கூறினார்?**

   நாடு, மொழி, நகர், நதி, பூமி.

4. **சங்க காலப் பெண்பாற் புலவர்களின் பெருமையாக வில்லுப்பாட்டுக் குழுத் தலைவர் கூறுவன யாவை?**

   சங்க காலப் பெண்பாற் புலவர்கள் பெண்ணுணர்வைப் பாடலில் பாடினார்கள். தூது சென்றார்கள், துன்பம் தீர்த்தார்கள். கற்கும் தமிழால் உயர்வைப் பெற்றார்கள்.

5. **பக்தி இயக்க காலத்தில் இறைவனுக்குப் பாமாலை சூட்டிய பெண்கள் யாவர்?**

   காரைக்கால் அம்மையார், ஆண்டாள்.

6. **பெண்கள் முன்னேற்றத்திற்குப் பாடுபட்டோர் யாவர்?**

   முத்துலெட்சுமி, மூவலூர் இராமாமிர்தம் பெரியார், பாரதியார், பாரதிதாசன்.

7. **இந்தியாவின் முதல் பெண் ஆசிரியர் யார்?**
   - ◈ இந்தியாவின் முதல் பெண் ஆசிரியர் : சாவித்திரிபாய் பூலே.
   - ◈ 1848இல் பெண்களுக்கெனத் தொடங்கப்பட்ட பள்ளியில் ஆசிரியராகப் பணியாற்றியவர் இவர்.

8. **மூவலூர் இராமாமிர்தம் - குறிப்பு தருக.**
   - ◈ தமிழகத்தின் சமூகச் சீர்திருத்தவாதி மூவலூர் இராமாமிர்தம் அம்மையார்.
   - ◈ இவர் எழுத்தாளர், திராவிட இயக்க அரசியல் செயல்பாட்டாளர்.
   - ◈ இவர் தேவதாசி ஒழிப்புச் சட்டம் நிறைவேறத் துணை நின்றவர்.
   - ◈ தமிழக அரசு 8 ஆம் வகுப்பு வரை படித்த பெண்களுக்கு திருமண உதவித்தொகையை இவர் பெயரால் வழங்கி வருகின்றது.

9. **'கல்வியில் சிறந்த பெண்கள்' உரைநடையில் இடம்பெறும் நோபல் பரிசு பெற்ற இருவர் யார்?**
   - ◈ மலாலா - 2014
   - ◈ கைலாஷ் சத்தியார்த்தி - 2014

Please Send Your Study Materials to our Email Id: padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.CBSEtips.in



## 3 சிறுவினா

1. **நம் நாட்டில் சில நூற்றாண்டுகளாக ஏன் பெண்ணடிமைத் தனம் வந்துச்சு? என்று குழுவினர் கேட்க, வில்லுப்பாட்டுக் குழுத் தலைவர் கூறிய பதில் யாது?**
   - முன்னோர்கள் ஆணும் பெண்ணும் இயற்கைப் படைப்பில் சமம் என்று நினைத்து சரியாக வாழ்ந்து வந்தார்கள்.
   - இடையில் வந்த மூடப் பழக்க வழக்கங்களால் பெண்ணைத் தாழ்த்தினார்கள்.
   - சமத்துவத்தை அடியோடு வீழ்த்தினார்கள்.

2. **பெண்களுக்கான முதல் பள்ளி உருவானதை விளக்குக.**

   1882 ல் ஹண்டர் குழு முதன்முதலில் பெண்கல்விக்குப் பரிந்துரை செய்தது. அதன்படி, மராட்டிய மாநிலத்தில் ஜோதிராவ் பூலே, சாவித்திரி பூலே இணையர் முதன்முதலாகப் பெண்களுக்கான பள்ளியைத் தொடங்கினார்கள்.

3. **கைலாஷ் சத்யார்த்தி என்பவர் யார்?**

   இந்தியாவில் குழந்தையைப் பாதுகாப்போம் என்ற அமைப்பை நிறுவி, இது வரைக்கும் 80 ஆயிரம் குழந்தைகள் கல்வி பெற உதவியவர் கைலாஷ் சத்யார்த்தி. 2014ல் நோபல் பரிசுபெற்றவர்.

## கற்பவை கற்றபின்... பக்கம்: 129

1. **இன்றைய சாதனைப் பெண்மணிகள் என்னும் தலைப்பில் தொகுப்பேடு உருவாக்குக.**

**அன்னை தெரஸா:**

கல்கத்தாவில் தொண்டு நிறுவனம் ஒன்றினைத் தொடங்கி ஏழை, எளிய மக்களுக்காகச் செவை செய்தார்.சிறந்த சமூக சேவகர், ஏழைக்காக, ஆதரவற்றோருக்காகப் பரிந்து பேசுபவர் என்று உலகமே இவரைப் பாராட்டியது. 1979ல் அமைதிக்கான நோபல் பரிசு பெற்றார். 1980 ல் பாரத ரத்னா விருதையும் பெற்றார்.

**அன்னை இந்திரா காந்தி:**

இந்தியாவின் இரும்புப் பெண்மணியாகக் கருதப்படுபவர். பிரதமராக இருந்த போதும் எதிர்க்கட்சித் தலைவராக இருந்தபோதும் எண்ணற்ற முடிவுகளைத் துணிச்சலாக எடுத்தவர்.

**மேரி கியூரி:**

வரலாறு காணாத விஞ்ஞானி என்று போற்றப்படுபவர். இரண்டு முறை நோபல் பரிசு பெற்றவர்.

**ஜே.கே.ரவுலிங்:**

ஹாரிபாட்டர் நாவல் எழுதி உலகப்புகழ் அடைந்தவர்.

**ஸ்டெஃபி கிராஃப்:**

உலக டென்னிஸ் வீராங்கனை. 32 கிராண்ட் ஸ்லாம்கள் ,ஒரு ஒலிம்பிக் தங்கப்பதக்கம், பல கிராண்ட் பிரீ பட்டங்கள் பெற்றவர்

**எம்.எஸ்.சுப்புலட்சுமி:**

ஐ.நா வில் இசைக்கச்சேரி நடத்திய முதல் இந்தியர்

Please Send Your Study Materials to our Email Id: padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.CBSEtips.in



**பிளாரன்ஸ் ஜாய்னர் :**

தடகள ராணி என்றழைக்கப்படுபவர். 3 ஒலிம்பிக் தங்கப்பதக்கம் பெற்றவர். 2 உலக சாம்பியன்ஷிப் தங்கப்பதக்கம் வென்றவர்.

2. **கல்வி குறித்த சிறப்புத்தொடர்கள், பொன்மொழிகளைத் திரட்டிக் கட்டுரை எழுதுக.**

## கல்வியின் மேன்மை

**முன்னுரை:**

**''கல்வி அழகே அழகு''**

மனிதன் ஆறறிவு பெற்றவன். ஆறாம் அறிவு மனம். இந்த மனம் பகுத்தறிய கல்வி அவசியம். பொருளால் உயர்வது சிறப்பன்று. கல்வியால் உயர்வத தான் சிறப்பு.

**கல்வி - விளக்கம்:**

கல்லுதல் என்பதற்குத் தோண்டுதல் என்பது பொருள். மனித மூளையில் உறைந்து கிடக்கும் அரிய ஆற்றல்களைப் பயிற்சியின் மூலம் வெளிக்கொண்டு வருவதே கல்வி. பள்ளி மற்றும் கல்லூரிப் படிப்பு மட்டும் கல்வியாகாது. ஏராளமான நூல்களை ஆழ்ந்து கற்பது தான் கல்வி.

**கல்வியின் அவசியம்:**

கல்வி கற்றால் மட்டுமே இன்று சிறப்பாக வாழ முடியும் என்பது தான் இன்றைய நிலை. கல்வி என்பது சம்பாதிப்பதற்கு மட்டும் என்று நினைப்பது தவறு. சமுதாயத்தில் ஏற்றம் பெற கல்வி அவசியம். சிறப்பான முறையில் குடும்பம் நடத்த , அறிவு மேம்பட கல்வி மிக அவசியம்.

**கல்வியின் சிறப்பு :**

**கற்ற கல்வியும் பெற்ற செல்வமும் கடைசி மூச்சு உள்ளவரை பிறருக்குக் கைகொடுக்கும். வெள்ளத்தால் அழியாது; நெருப்பால் வேகாது; திருடரால் திருட முடியாதது கல்வி** மட்டுமே. எடுத்தால் குறையாத செல்வம், கொடுத்தால் வளர்வது கல்வி மட்டுமே!

**கல்வியின் பயன்கள்:**

- **'கற்றோருக்குச் சென்ற இடமெல்லாம் சிறப்பு'** என்பதற்கேற்ப அனைத்து இடங்களிலும் பணிபுரியலாம்.
- சமுதாயத்தில் உயர்நிலை பெறலாம்.
- சாதி பேதங்களை ஒழிக்கும். சமத்துவம் தரும்.
- ஏழை, பணக்காரன் என்ற பாகுபாட்டை நீக்கும்.
- குடும்பம் அறிவு ஒளி பெறும்.

**கல்வியால் உயர்ந்தோர்:**

பாரதியார், காந்தியடிகள், நேரு, அம்பேத்கர், தாகூர், இராதா கிருஷ்ணன், அண்ணாதுரை, அப்துல் கலாம் எனப் பலரும் கல்வியால் உயர்ந்திருந்தனர். இன்றைய காலகட்டத்தில் கல்வியால் மட்டுமே சாதனைச் சிகரங்களாக உயர முடியும் என்பது கண்கூடான உண்மையும் கூட.

**நிறைவுரை:**

**'கற்றது கைம்மண்ணளவு கல்லாதது உலகளவு'** என்று நினைத்து நாம் தொடர் கற்றலில் ஈடுபட வேண்டும். இன்று தலை குனிந்து படித்தால் நாளை உலகம் உன்னைத் தலை நிமிர்ந்து பார்க்கும்.

Please Send Your Study Materials to our Email Id: padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.CBSEtips.in



இயல் 5

கவிதைப் பேழை

# குடும்ப விளக்கு

– பாரதிதாசன்



| | | |
|---|---|---|
| ஆசிரியர் | - | பாரதிதாசன் |
| இயற்பெயர் | - | சுப்புரத்தினம் |
| ஊர் | - | புதுச்சேரி |
| பிறப்பு | - | 29.4.1891 |
| பணி | - | பேராசிரியர் |
| படைப்புகள் | - | பாண்டியன் பரிசு, எதிர்பாராத முத்தம், சேரதாண்டவம், அழகின் சிரிப்பு, இருண்ட வீடு, குறிஞ்சித் திட்டு முதலியன. |

## சொற்பொருள்

| | | | | | |
|---|---|---|---|---|---|
| களர் நிலம் | - | உவர்நிலம் | நவிலல் | - | சொல்லல் |
| வையம் | - | உலகம் | மாக்கடல் | - | பெரிய உலகம் |
| இயற்றுக | - | செய்க | மின்னாளை | - | மின்னலைப் போன்றவளை |
| மின்னாள் | - | ஒளிரமாட்டாள் | தணல் | - | நெருப்பு |
| தாழி | - | சமைக்கும் கலன் | அணித்து | - | அருகில் |
| தவிர்க்க ஒணா | - | தவிர்க்க இயலாது | யாண்டும் | - | எப்போதும் |

## இலக்கணக் குறிப்பு

| | | |
|---|---|---|
| மாக்கல் | - | உரிச்சொல் தொடர் |
| ஆக்கல் | - | தொழில்பெயர் |
| மலர்க்கை | - | உவமைத்தொகை |
| வில்வாள் | - | உம்மைத்தொகை |
| தவிர்க்கஒணா | - | ஈறுகெட்ட எதிர்மறைப் பெயரெச்சம் |

## பகுபத உறுப்பிலக்கணம்

**விளைவது - விளை + வ் + அ + து**

| | | |
|---|---|---|
| விளை | - | பகுதி |
| வ் | - | எதிர்கால இடைநிலை |
| அ | - | சாரியை |
| து | - | ஒன்றன்பால் வினைமுற்று விகுதி |

Please Send Your Study Materials to our Email Id: padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.CBSEtips.in



**சமைக்கின்றனர் - சமை + க் + கின்று + ஆர்**

சமை - பகுதி
க் - சந்தி
கின்று - நிகழ்கால இடைநிலை
ஆர் - பலர்பால் விகுதி

## பாடநூல் மதிப்பீட்டு வினா

### 1 பலவுள் தெரிக

1. **பொருத்துக.**

அ) சிறுபஞ்சமூலம் - 1) காப்பிய இலக்கியம்
ஆ) குடும்ப விளக்கு - 2) சங்க இலக்கியம்.
இ) சீவக சிந்தாமணி - 3) அறஇலக்கியம்
ஈ) குறுந்தொகை - 4) தற்கால இலக்கியம்

1) அ-3 ஆ-4 இ-1 ஈ-2 2) அ-2 ஆ-3 இ-1 ஈ-4
3) அ-3 ஆ-1 இ-4 ஈ-2 4) அ-4 ஆ-1 இ-2 ஈ-3

**விடை: 1) அ-3 ஆ-4 இ-1 ஈ-2**

### 2 குறுவினா

1. **தலைவியின் பேச்சில் வெளிப்படுகின்ற பாடுபொருள் யாது?**

பெண்கல்வி பெறுதலே தலைவியின் பேச்சில் வெளிப்படுகின்ற பாடுபொருள் ஆகும்.

### 3 சிறுவினா

1. **சமைப்பது தாழ்வா? இன்பம்**
**சமைக்கின்றார் சமையல் செய்வார்.**

**அ) இன்பம் சமைப்பவர் யார்?**

உணவைச் சமைப்பவர் இன்பத்தையும் சமைப்பர்.

**ஆ) பாவேந்தரின் கூற்றுப் படி சமைப்பது தாழ்வா?**

பாவேந்தரின் கூற்றுப் படி சமைப்பது தாழ்வன்று.

### 4 நெடுவினா

1. **குடும்ப விளக்கு நூலில் தலைவி பேச்சில் வெளிப்படும் பெண்கல்விக்கான கருத்துகளை இன்றைய சூழலுடன் ஒப்பிடுக.**

◈ கல்வி அறிவில்லாத பெண்கள் பண்படாத நிலத்தைப் போன்றவர்கள். அங்கு புல் விளையும். நல்ல பயிர் விளையாது. அறிவுடைய மக்கள் உருவாகமாட்டார்கள்.

◈ இன்று கல்வி இல்லாத பெண்களின் குழந்தைகளில் பலர் தீய பழக்கங்களுக்கு உள்ளாகி இருக்கின்றனர்.

Please Send Your Study Materials to our Email Id: padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.CBSEtips.in



- கல்வி அறிவுள்ள பெண்கள் நன்செய் நிலத்தைப் போன்றவர்கள். அவர்கள் மூலம் அறிவுடைய மக்கள் உருவாகின்றனர்.
- இன்று கல்வி கற்ற பெண்களின் குழந்தைகளில் பலர் நல்ல பழக்கங்கள் கற்று உயர்ந்து இருக்கின்றனர்.
- வானூர்தி ஓட்டல், கடல் மற்றும் உலகினை அளத்தல் ஆகியன ஆணுக்கும் பெண்ணுக்கும் பொதுவானது என்று அன்று பாரதிதாசன் கூறியுள்ளவை இன்று நனவாகியுள்ளது.
- சமைப்பது, வீட்டுவேலை செய்வது பெண்களுக்கு மட்டுமே என்பது பொருத்தமற்றது, அவை நமக்கும் உரியது என ஆண்கள் ஏற்றுக் கொள்ளும் எண்ணம் வரவேண்டும். அந்த நன்னாள் காண்போம் என்று பாரதிதாசன் கூறியது இன்று நனவாகிவிட்டது. ஆண்கள் சமைப்பதும் வீட்டுவேலை செய்வதும் இன்று நடக்கின்றது.
- வாழ்க்கை என்பது பொருள் மற்றும் வீரத்தால் அமைவதன்று. அடுப்பில் சமைக்கும் பாத்திரத்தில் சுவையை இட்டு, அருகில் இருந்து உள்ள அன்போடு பரிமாறுதலில் தான் வாழ்வு நலம் பெறும். ஆனால் இன்று இவ்வாறு நடப்பதில்லை.
- சமைக்கும் பணி பெண்களின் கடமை, அது அவர்க்கே உரியது என்ற தமிழக வழக்கத்தினை இமைப்பொழுதில் (கண்ணிமைக்கும் நேரத்தில்) நீக்க வேண்டும். இன்று ஓரளவு நீங்கிவிட்டது.

## கூடுதல் வினாக்கள்

### 1 பலவுள் தெரிக

1. **சாகித்ய அகெதமி விருது பெற்ற பாரதிதாசனின் நூல் எது?**
   அ) பிசிராந்தையார் ஆ) இருண்டவீடு
   இ) அழகின் சிரிப்பு ஈ) தமிழியக்கம் **விடை: அ) பிசிராந்தையார்**

2. **கல்வி இல்லாத பெண்ணுக்குக் கூறப்பட்ட உவமை**
   அ) திருந்திய கழனி ஆ) களர்நிலம்
   இ) நெல் ஈ) மின்னாள் **விடை: ஆ) களர்நிலம்**

3. **கல்வி உடைய பெண்ணுக்குக் கூறப்பட்ட உவமை**
   அ) திருந்திய கழனி ஆ) களர்நிலம்
   இ) நெல் ஈ) மின்னாள் **விடை: அ) திருந்திய கழனி**

4. **குடும்பவிளக்கு __________ இலக்கியம்.**
   அ) மறுமலர்ச்சி ஆ) பல்சுவை
   இ) காப்பியம் ஈ) குறுங்காப்பியம் **விடை: அ) மறுமலர்ச்சி**

5. **கழனி என்பதன் பொருள் __________**
   அ) மண் ஆ) வயல்
   இ) நிலம் ஈ) உவர்நிலம் **விடை: ஆ) வயல்**

6. **களர்நிலம் என்பதன் பொருள் __________**
   அ) மண் ஆ) வயல்
   இ) நிலம் ஈ) உவர்நிலம் **விடை: ஈ) உவர்நிலம்**

Please Send Your Study Materials to our Email Id: padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.CBSEtips.in



7. ''வானூர்த்தி செலுத்தல் வைய
மாக்கடல் முழுது மளத்தல்'' என்பதில் 'பெரிய' என்னும் பொருள் தரும் சொல்

அ) வை ஆ) மா
இ) வா ஈ) முழு **விடை: ஆ) மா**

8. ''வானூர்த்தி செலுத்தல் வைய
மாக்கடல் முழுது மளத்தல்'' என்பதில் 'கடல்' என்னும் பொருள் தரும் சொல்

அ) வையம் ஆ) மா
இ) வா ஈ) முழு **விடை: அ) வையம்**

9. மின்னலைப் போன்றவள் என்னும் பொருள் தரும் சொல்

அ) மின்னாள் ஆ) மின்னாளை
இ) மின் ஈ) இடி **விடை: ஆ) மின்னாளை**

10. ஒளிரமாட்டாள் என்னும் பொருள் தரும் சொல்

அ) மின்னாள் ஆ) மின்னாளை
இ) மின் ஈ) இடி **விடை : அ) மின்னாள்**

11. கனக. சுப்புரத்தினம் என்னும் இயற்பெயர் கொண்ட கவிஞர்

அ) பாரதியார் ஆ) பாரதிதாசன்
இ) சுரதா ஈ) வாணிதாசன் **விடை: ஆ) பாரதிதாசன்**

12. பிசிராந்தையார் ________ நூல்

அ) நாடகம் ஆ) கவிதை
இ) புதினம் ஈ) காப்பியம் **விடை: அ) நாடகம்**

13. பொருத்துக.

1. கழனி - அ) உவர்
2. களர் - ஆ) வயல்
3. மின்னாள் - இ) உலகம்
4 வையம் - ஈ) ஒளிரமாட்டாள்

அ) 1-ஆ 2-அ 3-ஈ 4-இ ஆ) 1- அ 2-இ 3-ஆ 4- ஈ
இ) 1-ஈ 2-அ 3-ஆ 4-இ ஈ) 1-இ 2-அ 3-ஈ 4- ஆ

**விடை: அ) 1-ஆ 2-அ 3-ஈ 4-இ**

14. பொருத்தமான சொற்றொடரைத் தேர்வு செய்க.

அ) வாழ்க்கை என்பது பொருட்செல்வத்தால் அமைவது.
ஆ) வாழ்க்கை என்பது செல்வத்தால் அமைவதன்று.
இ) வாழ்க்கை என்பது பொருட்செல்வத்தால் அமைவதன்று.
ஈ) வாழ்க்கை என்பது பொருட்செல்வத்தாலோ வீரத்தாலோ அமைவதன்று.

**விடை: ஈ) வாழ்க்கை என்பது பொருட்செல்வத்தாலோ வீரத்தாலோ அமைவதன்று.**

15. பொருத்துக.

1. தணல் - அ) அருகில்
2. அணித்து - ஆ) நெருப்பு
3. தாழி - இ) செய்க
4 இயற்றுக - ஈ) சமைக்கும் கலன்

Please Send Your Study Materials to our Email Id: padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.CBSEtips.in



அ) 1-ஆ 2-அ 3-ஈ 4-இ ஆ) 1- அ 2-இ 3-ஆ 4- ஈ
இ) 1-ஈ 2-அ 3-ஆ 4-இ ஈ) 1-இ 2-அ 3-ஈ 4- ஆ

**விடை: அ) 1-ஆ 2-அ 3-ஈ 4-இ**

**கோடிட்ட இடத்தை நிரப்புக.**

1. __________, __________ செய்வது பெண்களுக்க மட்டுமே என்பது பொருத்தமற்றது. **விடை: சமைப்பது, வீட்டுவேலை**
2. __________ என்பது பொருள் மற்றும் வீரத்தால் அமைவதன்று. **விடை: வாழ்க்கை**
3. அடுப்பில் சமைக்கும் பாத்திரத்தில் சுவையை இட்டு, அருகில் இருந்து உள்ள அன்போடு பரிமாறுதலில் தான் __________ நலம் பெறும். **விடை: வாழ்வு**
4. குடும்ப விளக்கு நூல் __________ பகுதிகளாகப் பகுக்கப்பட்டுள்ளது. **விடை: ஐந்து**
5. புதுமைக் கருத்துகளை இயம்பும் வகையில் இருபதாம் நூற்றாண்டில் எழுந்தவையே __________ இலக்கியங்கள் **விடை: மறுமலர்ச்சி இலக்கியங்கள்**

## 2 குறுவினா

**1. நன்னாள் காண்போம் என்று பாரதிதாசன் கூறுவனவற்றை எழுதுக.**

சமைப்பது, வீட்டுவேலை செய்வது பெண்களுக்கு மட்டுமே என்பது பொருத்தமற்றது, அவை நமக்கும் உரியது என ஆண்கள் ஏற்றுக் கொள்ளும் எண்ணம் வரவேண்டும். அந்த நன்னாள் காண்போம் என்கிறார் பாரதிதாசன்.

**2. வாழ்வு எப்போது நலம் பெறும் என்று பாரதிதாசன் கூறுகிறார்?**

வாழ்க்கை என்பது பொருள் மற்றும் வீரத்தால் அமைவதன்று. அடுப்பில் சமைக்கும் பாத்திரத்தில் சுவையை இட்டு, அருகில் இருந்து உள்ள அன்போடு பரிமாறுதலில் தான் வாழ்வு நலம் பெறும்.

**3. இமைப்பொழுதில் (கண்ணிமைக்கும் நேரத்தில்) எதனை நீக்க வேண்டுமென பாரதிதாசன் கூறுகிறார்?**

சமைக்கும் பணி பெண்களின் கடமை, அது அவர்க்கே உரியது என்ற தமிழக வழக்கத்தினை இமைப்பொழுதில் (கண்ணிமைக்கும் நேரத்தில்) நீக்க வேண்டுமென பாரதிதாசன் கூறுகிறார்.

**4. பாரதிதாசனின் இயற்பெயர் யாது?**

கனக. சுப்புரத்தினம்.

**5. சாகித்ய அகெதமி விருது பெற்ற பாரதிதாசனின் நூல் எது?**

பிசிராந்தையார் நாடகம்.

**6. ''மின்னாளை வாழ்வில் என்றும்**
**மின்னாள் என்றே உரைப்பேன்'' இவ்வடிகளில் உள்ள 'மின்னாளை', 'மின்னாள்' என்பதன் பொருள் யாது?**

மின்னாளை - மின்னலைப் போன்றவளை; மின்னாள் - ஒளிரமாட்டாள்

**7. கல்வி அறிவில்லாத பெண்கள் எதனைப் போன்றவர்கள்? அங்கு விளைவது யாது?**

கல்வி அறிவில்லாத பெண்கள் பண்படாத நிலத்தைப் போன்றவர்கள். அங்குப் புல் விளையும். நல்ல பயிர் விளையாது. அறிவுடைய மக்கள் உருவாகமாட்டார்கள்.

Please Send Your Study Materials to our Email Id: padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.CBSEtips.in



8. **கல்வி அறிவுள்ள பெண்கள் எதனைப் போன்றவர்கள்? அங்கு விளைவது யாது?**

கல்வி அறிவுள்ள பெண்கள் நன்செய் நிலத்தைப் போன்றவர்கள். அவர்கள் மூலம் அறிவுடைய மக்கள் உருவாகின்றனர்.

9. **''நானிலம் ஆடவர்கள் ஆணையால் நலிவடைந்தது'' இதில் நானிலம் என்பது யாது?**

நானிலம் - குறிஞ்சி, முல்லை, மருதம், நெய்தல்.

10. **எது பொருத்தமற்றது என்கிறார் பாரதிதாசன்?**

சமைப்பது, வீட்டுவேலை செய்வது போன்றவை பெண்களுக்கு உரியவை என்று கூறுவது பொருத்தமற்றது என்கிறார் பாரதிதாசன்.

## 3 சிறுவினா

1. **பாரதிதாசன் குறிப்பு வரைக.**

- இயற்பெயர் : கனக. சுப்புரத்தினம்.
- பெற்றோர் : கனகசபை - இலக்குமி.
- ஊர் : புதுச்சேரி.
- பணி : பேராசிரியர்.
- படைப்புகள் : பாண்டியன் பரிசு, எதிர்பாராத முத்தம், சேரதாண்டவம், அழகின் சிரிப்பு, இருண்ட வீடு, குறிஞ்சித் திட்டு முதலியன.
- பாரதியின் மீது கொண்ட அன்பால் பாரதிதாசன் எனத் தம்பெயரை மாற்றிக்கொண்டார்.
- இவரின் சாகித்ய அகாதெமி விருது பெற்ற நூல் : பிசிராந்தையார் நாடகம்.

2. **குடும்ப விளக்கு - நூற்குறிப்பு தருக.**

- குடும்ப விளக்கு பாரதிதாசன் இயற்றிய நூல்களுள் ஒன்று.
- அன்பால் குடும்ப உறவுகள் பிணைந்துள்ளதை இந்நூல் காட்டுகிறது.
- கற்ற பெண்ணின் குடும்பமே பல்கலைக்கழகமாக விளங்குகிறதைக் காட்டுகின்றது.
- குடும்பம் முதல் உலகினைப் பேணுதல் வரை கல்வி இன்றியமையாதது முதன்மையானது என்கிறது இந்நூல்.
- இந்நூல் 5 பகுதிகளாகப் பிரிக்கப்பட்டுள்ளது.

3. **மறுமலர்ச்சி இலக்கியங்களில் பாடுபொருள்கள் சிலவற்றைக் கூறுக.**

- இயற்கை போற்றுதல்
- தமிழுணர்ச்சி ஊட்டல்
- பகுத்தறிவு பரப்புதல்
- பொதுவுடைமை பேசுதல்
- விடுதலைக்குத் தூண்டுதல்
- பெண்கல்வி பெறுதல்

## கற்பவை கற்றபின்...

பக்கம்: 132

1. **பெண்மையைப்போற்றும் கவிதை அடிகளைத் திரட்டுக.**

1. 'பெண்மையே தெய்வீகக் காட்சியடா?' - **பாரதியார்**
2. 'பெண்மையைப் போற்றுவோம்' - **பாரதிதாசன்**

Please Send Your Study Materials to our Email Id: padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.CBSEtips.in



3. ‘மலரிலே மென்மையும்
   நதியிலே கருணையும்
   கொடியிலே பணிவையும்
   கொண்டதே பெண்மையே’ – **கண்ணதாசன்**

4. ‘பெண்ணே பேராற்றல்’ – **சா**

2. **ஆணுக்கும் சமையல் செய்யத் தெரிந்திருப்பதன் பயன் குறித்து கலந்துரையாடித் தொகுக்க.**

**யாழினி** : கண்ணா! என்ன பதற்றமாக வருகிறாய்!

**கண்ணன்** : அம்மாவுக்கு உடம்பு சரியில்லை. கடையில் போய் சிற்றுண்டி வாங்கி உண்டுவிட்டு வருகிறேன். அதனால் தாமதம் ஆகிவிட்டது.

**யாழினி** : ஏன் உனக்குச் சமைக்கத் தெரியாதா? கற்றுக்கொள்ளவில்லையா?

**கண்ணன்** : தெரியாது. நான் எப்படி?

**யாழினி** : கண்ணா! தவறு. சமைப்பது அனைவருக்கும் தான். அம்மா ஊருக்குச் செல்லும் போதும், உடல்நலக்குறைவின் போதும் கடையில் உண்டு சேராமல் போவதற்குச் சமையல் கற்றால் உனக்கும் நல்லது. அம்மாவிற்கும் நல்லது.

**கண்ணன்** : அப்படியா? இனி நான் கற்றுக்கொள்கின்றேன்.

Please Send Your Study Materials to our Email Id: padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.CBSEtips.in



இயல் 5 கவிதைப் பேழை

# சிறுபஞ்சமூலம்

– காரியாசான்

காரியாசான் - சமணர், மதுரைத் தமிழாசிரியர் மாக்காயனாரின் மாணவர்.

## சொற்பொருள்

| | | |
|---|---|---|
| மூவாது | - | முதுமை அடையாமல் |
| நாறுவ | - | முளைப்ப |
| தாவா | - | கெடாதிருத்தல் |

## இலக்கணக் குறிப்பு

| | | |
|---|---|---|
| அறிவார் | - | வினையாலணையும் பெயர் |
| வல்லார் | - | வினையாலணையும் பெயர் |
| விதையாமை | - | எதிர்மறைத்தொழிற்பெயர் |
| உரையாமை | - | எதிர்மறைத்தொழிற்பெயர் |
| தாவா | - | ஈறுகெட்ட எதிர்மறைப் பெயரெச்சம் |

## பகுபத உறுப்பிலக்கணம்

**உரையாமை – உரை + ய் + ஆ + மை**

| | | |
|---|---|---|
| உரை | - | பகுதி |
| ய் | - | சந்தி (உடம்படுமெய்) |
| ஆ | - | எதிர்மறை இடைநிலை |
| மை | - | தொழிற்பெயர் விகுதி |

**காய்க்கும் – காய் + க் + க் + உம்**

| | | |
|---|---|---|
| காய் | - | பகுதி |
| க் | - | சந்தி |
| க் | - | எதிர்கால இடைநிலை |
| உம் | - | பெயரெச்ச விகுதி |

## பாடநூல் மதிப்பீட்டு வினா

### 1 பலவுள் தெரிக

1. பூவாது காய்க்கும், மலர்க்கை – அடிக்கோடிட்ட சொற்களுக்கு இலக்கணம் யாது?

அ) பெயரெச்சம், உவமைத்தொகை ஆ) எதிர்மறைப்பெயரெச்சம், உருவகம்

இ) வினையெச்சம், உவமை ஈ) எதிர்மறை வினையெச்சம், உவமைத்தொகை

**விடை: ஈ) எதிர்மறை வினையெச்சம், உவமைத்தொகை**

Please Send Your Study Materials to our Email Id: padasalai.net@gmail.com

## 2 குறுவினா

1. **மூவாது மூத்தவர், நூல் வல்லார் - இத்தொடர் உணர்த்தும் பொருளைக் குறிப்பிடுக.**
   பூக்காமல் சில மரம் காய்ப்பது போல் நன்மை, தீமை உணர்ந்த இளையோர் மூத்தவரோடு வைத்து நினைக்கத் தக்கவர்.

## 3 சிறுவினா

1. **விதைக்காமலே முளைக்கும் விதைகள் - இத்தொடரின் வழிச் சிறுபஞ்சமூலம் தெரிவிக்கும் கருத்துகளை விளக்குக.**
   - பூக்காமல் சில மரம் காய்ப்பது போல் நன்மை, தீமை உணர்ந்த இளையோர் மூத்தவரோடு வைத்து நினைக்கத் தக்கவர்.
   - பாத்தி அமைத்து விதைக்காமலே முளைக்கும் விதைகள் போல அறிவுநுட்பம் மிகுந்தவர் பிறர் உணர்த்தாமல் தாமே எதனையும் உணர்ந்து கொள்வர்.

### கூடுதல் வினாக்கள்

## 1 பலவுள் தெரிக

1. **ஐந்து கருத்துகள் இடம் பெறும் பதினெண்கீழ்கணக்கு நூல் எது?**
   அ) சிறுபஞ்சமூலம் ஆ) ஏலாதி
   இ) திரிகடுகம் ஈ) திருக்குறள் **விடை: அ) சிறுபஞ்சமூலம்**
2. **மூன்று கருத்துகள் இடம் பெறும் பதினெண்கீழ்கணக்கு நூல் எது?**
   அ) சிறுபஞ்சமூலம் ஆ) ஏலாதி
   இ) திரிகடுகம் ஈ) திருக்குறள் **விடை: இ) திரிகடுகம்**
3. **ஆறு கருத்துகள் இடம் பெறும் பதினெண்கீழ்கணக்கு நூல் எது?**
   அ) சிறுபஞ்சமூலம் ஆ) ஏலாதி
   இ) திரிகடுகம் ஈ) திருக்குறள் **விடை: ஆ) ஏலாதி**
4. **சிறுபஞ்சமூலத்தின் ஆசிரியர்**
   அ) பெருவாயின் முள்ளியார் ஆ) காரியாசான்
   இ) நல்லாதனார் ஈ) திருவள்ளுவர் **விடை: ஆ) காரியாசான்**
5. **சிறுபஞ்சமூலம் - இதில் 'பஞ்ச' என்ற சொல் குறிப்பது**
   அ) ஐந்து ஆ) வேர் இ) சிறிய ஈ) வறுமை **விடை: அ) ஐந்து**
6. **சிறுபஞ்சமூலம் - இதில் 'மூலம்' என்ற சொல் குறிப்பது**
   அ) ஐந்து ஆ) வேர் இ) சிறிய ஈ) வறுமை **விடை: ஆ) வேர்**
7. **சிறுபஞ்சமூலத்துடன் தொடர்பில்லாத ஒன்று**
   அ) கண்டங்கத்திரி ஆ) சிறுவழுதுணை
   இ) சிறுமல்லி ஈ) சிறுநாவற்பூ **விடை: ஈ) சிறுநாவற்பூ**

Please Send Your Study Materials to our Email Id: padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.CBSEtips.in



8. **சொற்றொடர் உருவாக்குக.**
   1) சில மரங்கள் 2) பூக்காமலே 3) காய்ப்பதுண்டு
   அ) 2-1-3 ஆ) 3-2-1 இ) 1-2-3 ஈ) 1-3-2 **விடை: அ) 2-1-3**

9. **பூக்காமலே காய்க்கும் மரங்கள் உவமையாகக் கூறப்பட்டது**
   அ) மூவாது மூத்தவர் ஆ) மூத்தார்
   இ) மேதை ஈ) எதுவுமில்லை **விடை: அ) மூவாது மூத்தவர்**

10. **விதை விதைக்காமல் முளைக்கும் விதைகள் உவமையாகக் கூறப்பட்டது**
   அ) மூவாது மூத்தவர் ஆ) மூத்தார்
   இ) மேதை ஈ) எதுவுமில்லை **விடை: இ) மேதை**

**கோடிட்ட இடத்தை நிரப்புக.**

1. மனித வாழ்வைச் செழுமையாக்குபவை _______ பண்புகளே. **விடை: அறப்**
2. சாதனைக்கு _______ தடையில்லை. **விடை: வயது**
3. 10 வயதில் சொற்பொழிவாற்றியவர் _______. **விடை: வள்ளலார்**
4. 11 வயதில் கவிதை எழுதி பாரதி பட்டம் பெற்றவர் _______. **விடை: பாரதியார்**
5. 16 வயதில் போர்ப்படைத்தளபதியானவர்_______ **விடை: மாவீரன் அலெக்சாண்டர்**
6. 17 வயதில் ஊசல் விதி கண்டுபிடித்தவர் _______. **விடை: கலீலியோ**
7. நாறுவ என்பதன் பொருள் _______. **விடை: வித்து**
8. _______ காய்க்கும் மர உள. **விடை: பூவாது**
9. மூவாது _______ நூல்வல்லார். **விடை: மூத்தவர்**
10. தமிழில் சங்க இலக்கியங்களைத் தொடர்ந்து _______ தோன்றின. **விடை: நீதி நூல்கள்**
11. ஐந்து சிறிய வேர்கள் _______. **விடை: சிறுபஞ்சமூலம்**
12. பூவாது காய்க்கும் பாடலில் இடம்பெறும் அணி _______. **விடை: எடுத்துக்காட்டு உவமையணி**

## 2 குறுவினா

1. **உமக்குத் தெரிந்த மூவாது மூத்த சான்றோர் சிலரது பெயரினை எழுதுக.**
   கரிகாலன், வள்ளலார், பாரதி, விக்டர் யூகோ, அலெக்ஸாண்டர், கலீலியோ.

2. **மூத்தவரோடு வைத்து எண்ணத்தக்கவர் யார்?**
   நன்மை, தீமைகளை நன்கு உணர்ந்தோர் வயதில் இளையவராக இருந்தாலும் மூத்தவரோடு வைத்து எண்ணத்தக்கவர் ஆவர்.

3. **எதையும் தாமே உணர்ந்துகொள்வர் யார்?**
   மேதையர் (அறிவு நுட்பம் மிகுந்தவர்) பிறர் உணர்த்தாமலே எதையும் தாமே உணர்ந்து கொள்வர்.

4. **மூவாது மூத்தவர் - தொடர் பொருள் கூறுக.**
   வயதில் இளையவராக இருந்தாலும் அறிவில் சிறந்ததால் மூத்தவர் போன்றவர்.

5. **மேதைக்கு உரையாமை - தொடர் பொருள் கூறுக.**
   மேதையர் (அறிவு நுட்பம் மிகுந்தவர்) பிறர் உணர்த்தாமல் தானே உணர்ந்து கொள்வர்.

Please Send Your Study Materials to our Email Id: padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.CBSEtips.in



## 3 சிறுவினா

1. **அறிவுடையார் தாமே உணர்வர் என்பதை சிறுபஞ்சமூலம் எவ்வாறு விளக்குகிறது?**
   - ◈ பூக்காமல் சில மரம் காய்ப்பது போல் நன்மை, தீமை உணர்ந்த இளையோர் மூத்தவரோடு வைத்து நினைக்கத் தக்கவர்.
   - ◈ பாத்தி அமைத்து விதைக்காமலே முளைக்கும் விதைகள் போல அறிவுநுட்பம் மிகுந்தவர் பிறர் உணர்த்தாமல் தாமே எதனையும் உணர்ந்து கொள்வர்.

2. **சிறுபஞ்சமூலம் - குறிப்பு தருக.**
   - ◈ பதினெண்கீழ்க்கணக்கு நூல்களுள் ஒன்று.
   - ◈ சிறுபஞ்சமூலம் என்பது கண்டங்கத்திரி, சிறுவழுதுணை, சிறுமல்லி, பெருமல்லி, நெருஞ்சி ஆகிய சிறிய 5 வேர்களைக் குறிக்கும்.
   - ◈ இது உடல் நோய் போக்குவது போல பாடலின் 5 கருத்துகள் அறியாமை போக்கி நல்வழிப்படுத்தும்.

3. **காரியாசான் குறிப்பு தருக.**
   - ◈ சிறுபஞ்சமூலத்தின் ஆசிரியர் காரியாசான்.
   - ◈ மாக்காயனாரின் மாணவர்.
   - ◈ காரி என்பது இயற்பெயர்.
   - ◈ ஆசான் என்பது தொழிலின் அடிப்படையில் அமைந்த பெயர்.

4. **சாதனைக்கு வயது தடையில்லை என்பதற்குச் சான்றுகள் தருக.**
   - ◈ 10 வயதில் சொற்பொழிவாற்றியவர் : வள்ளலார்.
   - ◈ 11 வயதில் கவிதை எழுதி பாரதி பட்டம் பெற்றவர் : பாரதியார்.
   - ◈ 16 வயதில் போர்ப்படைத்தளபதியானவர் : மாவீரன் அலெக்சாண்டர்.
   - ◈ 17 வயதில் ஊசல் விதி கண்டுபிடித்தவர் : கலீலியோ.

## கற்பவை கற்றபின்...

பக்கம்: 134

1. **பூக்காமலே காய்க்கும் மரங்கள், விதைக்காமலே முளைக்கும் விதைகள்,**

   பூக்காமலே காய்க்கும் மரங்கள் : ஆலமரம், அத்தி, பலாமரம்.
   விதைகக்காமலே முளைக்கும் விதைகள் : வேம்பு, அரசன், புங்கன்.

2. **மூவாது மூத்தவர், காணாது கண்டவர்**
   **- இவை போல நயம் அமைந்த தொடர்களை உருவாக்குக.**
   - ◈ பேசாது சிறந்தவர்
   - ◈ கொய்யாது கொய்தவர்
   - ◈ வாசிக்காமல் உயர்ந்தவர்

Please Send Your Study Materials to our Email Id: padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.CBSEtips.in



# இயல் 5

விரிவானம்

# வீட்டிற்கோர் புத்தகசாலை

## பாடநூல் மதிப்பீட்டு வினா

### 1 குறுவினா

1. **நீங்கள் விரும்பி படித்த நூல்கள் யாவை?**

திருக்குறள், மணிமேகலை, தமிழ்விடுதூது, புறநானூறு.

2. **அண்ணாவின் புகழ்பெற்ற பொன்மொழிகளுள் உனக்கு பிடித்தமானவற்றை எழுதுக.**

◈ மாற்றான் தோட்டத்து மல்லிகைக்கும் மணம் உண்டு.

◈ எதையும் தாங்கும் இதயம் வேண்டும்.

### 2 நெடுவினா

1. **நூலகம், நூல்கள் குறித்து அண்ணாவின் வானொலி உரையில் வெளிப்படுகின்ற கருத்துகள் யாவை?**

**முன்னுரை:**

வீட்டிற்கோர் புத்தகச் சாலை வேண்டும் என்ற கருத்தை நம் ஒவ்வொருவரின் மனத்திலும் விதைத்தவர் பேரறிஞர் அண்ணா. நூலகம், நூல்கள் குறித்து அண்ணாவின் வானொலி உரையில் வெளிப்படுகின்ற கருத்துகளைக் காண்போம்.

**நூலகம்:**

வீடுகளில் மேஜை, நாற்காலி உள்ளிட்ட பல பொருட்களும், சிறு கடை அளவுக்கு உடைகளும், சிறு வைத்தியசாலை அளவுக்கு மருந்துகள் இருக்கும். ஆனால் புத்தகசாலை மட்டும் இருக்காது. வாழ்க்கையில் அடிப்படைத் தேவைக்கு அடுத்த இடம் புத்தகசாலைக்குத் தரப்பட வேண்டும்.மக்கள் மனத்திலே உலக அறிவு புக வழிவகை செய்யவேண்டும். அவர்கள் உலகம் மற்றும் நாட்டை அறிய, ஏடுகள் வேண்டும். அடிப்படை உண்மைகளையாவது அறிவிக்கும் நூல்கள் சிலவாவது வேண்டும்.

கொஞ்சம் வசதியுள்ள வீட்டார் விஷேசங்களுக்குச் செல்லும்போது புத்தகங்கள் வாங்கும் பழக்கத்தை ஏற்படுத்திக் கொண்டால் சிறு புத்தகச் சாலையை எளிதில் அமைக்கலாம்.

**நூல்கள்:**

◈ பூகோளம், சரித்திரம் தொடர்பான ஏடுகள் இருக்க வேண்டும்.

◈ நமக்கு ஒழுக்கத்தையும் வாழ்வுக்கான வழிகளையும் காட்ட, வீட்டிற்கோர் திருக்குறள் கட்டாயம் இருக்க வேண்டும்.

◈ சங்கஇலக்கிய சாராம்சத்தைச் சாதாரண மக்களும் அறிந்து கொள்ளும் வகையில் உள்ள ஏடுகள் இருக்க வேண்டும்.

◈ விஞ்ஞானக் கண்டுபிடிப்புகளைப் பற்றிய முக்கியமான தகவல்களைத் தரும் நூல்கள் இருக்க வேண்டும்.

Please Send Your Study Materials to our Email Id: padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.CBSEtips.in



◈ விடுதலைக்கு உழைத்தோர், மக்கள் மனமாசு துடைத்தோட, தொலை தேசங்களைக் கண்டவர்கள், வீரர்கள், விவேகிகள் ஆகியோர் வாழ்க்கைக்குறிப்பு ஏடுகள் ஆகியவை இருக்க வேண்டும்.

முடிவுரை:

வீட்டிற்கோர் புத்தகசாலை அமைத்துக் கொண்டால், நாட்டிற்கு நல்ல நிலை ஏற்படும் என்று பேரறிஞர் அண்ணா தம் வானொலிச் சித்திரத்தில் தெரிவிக்கிறார்.

## கற்பவை கற்றபின்... பக்கம்: 138

1. **புத்தகங்கள் பொன்மொழிகள்**

புத்தகங்கள் கனவுகளை வளர்க்கும். - **டாக்டர். அப்துல் கலாம்**

நாட்டிலுள்ள அறிஞர்களின் உள்ளங்களை எடுத்துக்காட்டும் கண்ணாடி புத்தகங்கள். - **ரெட்வர்டு கிப்ரான்**

நூல்நிலையம் ஆடம்பரம் அன்று அவசியம் - **பெர்னாட்ஷா**

2. **சீர்காழி இரா. அரங்கநாதன் அவர்களின் பிறந்த நாளான ஆகஸ்ட் 9 ஆம் நாள் தேசிய நூலக நாளாகக் கொண்டாடப்படுவதன் காரணத்தை அறிக.**

**தேசிய நூலக நாள் - காரணங்கள்**

◈ இந்தியாவைச் சேர்ந்த கணிதவியலாளரும் நூலகவியலாளருமான சீர்காழி இராமாமிர்தம் ரங்கநாதன் (சீர்காழி. இரா.அரங்கநாதன்). 09.08.1892 இல் பிறந்தார். இவரது பிறந்த தினம் ‘‘தேசிய நூலக நாள்’’ ஆகும்.

◈ இந்திய நூலகவியலின் தந்தை என அறியப்படும் இவர், நூலகவியலின் ஐந்து விதிகளை அறிமுகம் செய்தவர். கோலன் என்னும் நூற்பகுப்பாக்க முறையை உருவாக்கியவர்.

◈ நூலகவியலின் சிந்தனைகளுக்காக உலக அளவில் பல பரிசுகளைப் பெற்ற பெருந்தகை யாளர். இந்திய அரசு இவருக்குப் பத்மஸ்ரீ விருது வழங்கிக் கௌரவித்துள்ளது.

◈ இந்தியாவின் பல்வேறு பல்கலைக்கழகங்களில் நூலகத்துறை பேராசிரியராகப் பணியாற்றிய பெருமைக்குரியவர்.

◈ நூலகவியலின் உயர்பட்டங்களை வழங்குவதற்காக அமைக்கப்பட்ட ‘‘இந்திய நூலகவியல் பள்ளியில்’’ பணியாற்றினார்.

◈ வெளிநாடுகளில் உள்ள பல்கலைக்கழகங்கள், உயர்தர நூலகங்களில் உறுப்பினராகவும், உயர் பதவிகளையும் பெற்றிருந்தார்.

◈ ஐதராபாத்தில் உள்ள ‘‘நகர நடுவ நூலகத்தில்’’ இவரது உருவப் படம் வைக்கப்பட்டுள்ளது.

◈ 27.09.1972 இல் பெங்களூரில் இறுதிநிலை அடைந்த, சீர்காழி இரா. அரங்கநாதனின் மேற்கூறிய பெருமைகளே, அவரது பிறந்தநாளை ‘‘தேசிய நூலக தினமாக’’ கொண்டாடுவதற்கான காரணங்கள் ஆகும்.

3. **நூலகத்தில் கவிதை, கதை முதலிய நூல்களை நூலாசிரியர் வரிசையிலும் நூலின் அடையாளக் குறியீட்டு எண் அடிப்படையிலும் எவ்வாறு தேடுவது என்பதைத் தெரிந்துகொள்க.**

◈ அகரவரிசையில் நூலாசிரியர் பெயர் அறிந்துகொள்ள வேண்டும்.

◈ நூல்களின் அடையாளக் குறியீட்டு எண்களையும் தெரிந்துகொண்டு தேடுதல்வேண்டும்.

Please Send Your Study Materials to our Email Id: padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.CBSEtips.in



இயல் 5

கற்கண்டு

# இடைச்சொல் - உரிச்சொல்

## பாடநூல் மதிப்பீட்டு வினா

### 1 பலவுள் தெரிக

1. மாறுபட்டுள்ள குழுவினைக் கண்டறிக.
அ) கலைக்கூடம், திரையரங்கம், ஆடுகளம், அருங்காட்சியகம்.
ஆ) கடி, உறு, கூர், கழி.
இ) வினவினான், செப்பினான், உரைத்தான், பகன்றான்.
ஈ) இன், கூட, கிறு, அம்பு.
**விடை: ஈ) இன், கூட, கிறு, அம்பு**

2. கீழ்க்காண்பவற்றுள் உணர்ச்சித் தொடர் எது?
அ) சிறுபஞ்ச மூலத்தில் உள்ள பாடல்கள் பெரும்பாலும் மகடூஉ முன்னிலையில் அமைந்துள்ளன.
ஆ) இந்திய நூலகவியலின் தந்தையென அறியப்படுபவர் யார்?
இ) என்னண்ணே! நீங்கள் சொல்வதை நம்பவே முடியவில்லை!
ஈ) வாழ்க்கையில் அடிப்படைத் தேவைகளுக்கு அடுத்த இடத்தைப் புத்தகசாலைக்குத் தருக.
**விடை: இ) என்னண்ணே! நீங்கள் சொல்வதை நம்பவே முடியவில்லை!**

3. சரியான கூற்றினைத் தெரிவு செய்க.
அ) 'ஆ' என்பது எதிர்மறை இடைநிலை.
ஆ) வீட்டிற்கோர் புத்தகசாலை என்பது அண்ணாவின் மேடைப்பேச்சு.
இ) வில்லுப்பாட்டு ஓர் இலக்கிய வடிவம்.

1) ஆ, இ சரி; அ தவறு 2) அ, இ, சரி; ஆ தவறு
3) மூன்றும் சரி 4) மூன்றும் தவறு
**விடை: 3) மூன்றும் சரி**

## கூடுதல் வினாக்கள்

### 1 பலவுள் தெரிக

1. மொழிப்பயன்பாட்டை முழுமையாக்கும் சொற்கள்
அ) பெயர்சொல் ஆ) வினைச்சொல்
இ) உரிச்சொல் ஈ) இடைச்சொல்
**விடை: ஈ) இடைச்சொல்**

2. பெயரையும் வினையையும் சார்ந்து இயங்கும் சொற்கள்
அ) பெயர்சொல் ஆ) வினைச்சொல்
இ) எதுவுமில்லை ஈ) இடைச்சொல், உரிச்சொல்
**விடை: ஈ) இடைச்சொல், உரிச்சொல்**

Please Send Your Study Materials to our Email Id: padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.CBSEtips.in



3. தாமாகத் தனித்து இயங்கும் ஆற்றல் இல்லாத சொல்
அ) பெயர்ச்சொல் ஆ) வினைச்சொல்
இ) உரிச்சொல் ஈ) இடைச்சொல் **விடை: ஈ) இடைச்சொல்**

4. தமிழில் மிகுதியாக இல்லாத சொல் எது?
அ) பெயர்சசொல் ஆ) வினைச்சொல்
இ) உரிச்சொல் ஈ) இடைச்சொல் **விடை: ஈ) இடைச்சொல்**

5. சுசீலா, கமீலா வீட்டுக்குப் போனாள். - இத்தொடரில் இடைச்சொல் எது?
அ) கு ஆ) போ இ) சுசீலா ஈ) கமீலா **விடை: அ) கு**

6. சுசீலாவைக் கண்டவுடன் கமீலா மகிழ்ச்சியடைந்தாள். - இத்தொடரில் அமைந்த 'ஐ' வேற்றுமை உருபு _______ வேற்றுமை.
அ) முதல் ஆ) இரண்டாம்
இ) மூன்றாம் ஈ) நான்காம் **விடை: ஆ) இரண்டாம்**

7. பொருத்துக.
1. வேற்றுமைஉருபுகள் - அ) கள், மார்
2. பன்மை விகுதிகள் - ஆ) ஐ, ஆல், கு, இன், அது, கண்
3. கால இடைநிலைகள் - இ) தல், அம், மை
4. தொழிற்பெயர் விகுதிகள் - ஈ) கிறு, கின்று
அ) 1-ஆ 2-அ 3-ஈ 4-இ ஆ) 1-ஈ 2-இ 3-அ 4-ஆ
இ) 1-இ 2-ஈ 3-அ 4-ஆ ஈ) 1-இ 2-அ 3-ஈ 4-ஆ
**விடை: அ) 1-ஆ 2-அ 3-ஈ 4-இ**

8. பொருத்துக.
1. வியங்கோள் விகுதிகள் - அ) அ, உ, இ, மல்
2. பெயரெச்ச , வினையெச்ச விகுதிகள் - ஆ) க, இய
3. சாரியைகள் - இ) உம், அல்லது, ஆனால், ஓ
4. இணைப்பிடைச்சொற்கள் - ஈ) அத்து, அற்று, அம்
அ) 1-ஆ 2-அ 3-ஈ 4-இ ஆ) 1-ஈ 2-இ 3-அ 4-ஆ
இ) 1-இ 2-ஈ 3-அ 4-ஆ ஈ) 1-இ 2-அ 3-ஈ 4-ஆ
**விடை: அ) 1-ஆ 2-அ 3-ஈ 4-இ**

9. சரியாகப் பொருந்தியவற்றைக் கண்டறிக.
1) வேற்றுமைஉருபுகள் - கிறு, கின்று
2) பன்மை விகுதிகள் - ஐ, ஆல், கு, இன், அது, கண்
3) கால இடைநிலைகள் - கள், மார்
4) தொழிற்பெயர் விகுதிகள் - தல், அம், மை
**விடை: 4) தொழிற்பெயர் விகுதிகள் - தல், அம், மை**

10. பொருந்தாதவற்றைக் கண்டறிக.
அ) வியங்கோள் விகுதிகள் - அ, உ, இ, மல்.
ஆ) பெயரெச்ச , வினையெச்ச விகுதிகள் - க, இய.
இ) சாரியைகள் - அத்து, அற்று, அம்.
ஈ) இணைப்பிடைச்சொற்கள் - போல, விட, காட்டிலும், மாதிரி.
**விடை: ஈ) இணைப்பிடைச்சொற்கள் - போல, விட, காட்டிலும், மாதிரி**

Please Send Your Study Materials to our Email Id: padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.CBSEtips.in



11. வினா உருபுகள் எவை?

அ) இ, ஈ  ஆ) ஆ, ஓ  இ) உ, ஊ  ஈ) உம்  **விடை: ஆ) ஆ, ஓ**

12. மழை பெய்தும் புழுக்கம் குறையவில்லை - இதில் இடம்பெறும் உம்மை

அ) எதிர்மறை  ஆ) உயர்வு  இ) ஐயம்  ஈ) முற்று  **விடை: அ) எதிர்மறை**

13. தற்காலத்தில் ஏகாரம் ________ பொருளில் மட்டுமே வருகின்றது.

அ) பிரிநிலை  ஆ) எண்  இ) தேற்றம்  ஈ) இசைநிறை **விடை: இ) தேற்றம்**

14. செய்யுளுக்கே உரிய சொற்கள் ________.

அ) பெயர்ச்சொல்  ஆ) வினைச்சொல்

இ) உரிச்சொல்  ஈ) இடைச்சொல்  **விடை: இ) உரிச்சொல்**

15. செய்யுளுக்கே உரிய சொற்கள் உரிச்சொற்கள் என்று கூறும் நூல் எது?

அ) நன்னூல்  ஆ) தொல்காப்பியம்

இ) தண்டியலங்காரம்  ஈ) அகத்தியம்  **விடை: அ) நன்னூல்**

16. இசை, குறிப்பு, பண்பு என்னும் பொருள்களுக்கு உரியதாய் வரும் சொற்கள்

அ) பெயர்சசொல்  ஆ) வினைச்சொல்

இ) உரிச்சொல்  ஈ) இடைச்சொல்  **விடை: இ) உரிச்சொல்**

17. பொருத்துக.

| | | |
|---|---|---|
| 1. கடிமலர் | - | அ) காவல் |
| 2. கடிநகர் | - | ஆ) மணம் |
| 3. கடிவிடுதும் | - | இ) கூர்மையான கருவி |
| 4. கடிநுனி | - | ஈ) விரைவாக விடுவோம் |

அ) 1-ஆ 2-அ 3-ஈ 4-இ  ஆ) 1-ஈ 2-இ 3-அ 4-ஆ

இ) 1-இ 2-ஈ 3-அ 4-ஆ  ஈ) 1-இ 2-அ 3-ஈ 4-ஆ

**விடை: அ) 1-ஆ 2-அ 3-ஈ 4-இ**

கோடிட்ட இடங்களை நிரப்புக.

1. இது பழம் ________.  விடை: அன்று
2. இவை பழங்கள் ________.  விடை: அல்ல
3. எத்தனை என்பது ________ குறிக்கும்.  விடை: எண்ணிக்கையை
4. ________ என்பது காலத்தையும் அளவையும் குறிக்கும்.  விடை: எத்துணை
5. ________மொழிப்பயன்பாட்டை முழுமையாக்குகின்றன.  விடை: இடைச்சொற்கள்
6. வரையறைப் பொருள் தரும் இடைச்சொல் ________  விடை: மட்டும்

## 2 குறுவினா

1. இடைச்சொற்கள் பற்றித் தொல்காப்பியர் கூறுவன யாவை?

இடைச் சொசற்கள், பெயரையும் வினையையும் சார்ந்து இயங்குபவை. தாமாகத் தனித்து இயங்கும் இயல்பை உடையன அல்ல என்கிறார் தொல்காப்பியர்.

2. இடைச்சொற்கள் சிலவற்றை எழுதுக.

இன், கு, உடைய, உம், ஐ, விட, கள், ஆனால், தான், போல, உடன்.

Please Send Your Study Materials to our Email Id: padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.CBSEtips.in



3. **தற்காலத் தமிழில் அதிகமாகப் பயன்படுத்தப்படும் இடைச்சொற்களை எழுதுக.**

உம், ஓ, ஏ, தான், மட்டும், ஆவது, கூட, ஆ, ஆம்.

4. **உம் என்ற இடைச்சொல் எதிர்மறை மற்றும் உயர்வு சிறப்பில் வருமாறு சொற்றொடர்கள் அமைக்க.**

**எதிர்மறை உம்மை** : மழை பெய்தும் புழுக்கம் குறையவில்லை.

**உயர்வு சிறப்பும்மை** : பாடகர்களும் போற்றும் பாடகர்.

5. **தான் என்னும் இடைச்சொலைப் பற்றி எழுதுக.**

'தான்' என்னும் சொல் அழுத்தப்பொருளில்தான் வருகின்றது.

**சான்று:**

- நிர்மலா தான் நேற்று விழாவில் பாடினாள்.
- நிர்மலா நேற்று தான் விழாவில் பாடினாள்.
- நிர்மலா நேற்று விழாவில் தான் பாடினாள்.
- நிர்மலா விழாவில் தான் நேற்று பாடினாள்.

6. **செய்யுளுக்கே உரிய சொற்கள் எவை? (அல்லது) உரிச்சொற்கள் குறித்து நன்னூலார் கூறுவன யாவை?**

செய்யுளுக்கே உரிய சொற்கள் உரிச்சொற்கள். பெயரையும் வினையையும் சார்ந்து வந்து பொருள் உணர்த்தும். இசை, குறிப்பு, பண்பு என்னும் பொருளுக்கு உரியது. உரிச்சொற்கள் ஒவ்வொன்றும் தனித்த பொருள் உடையன.

7. **மிகுதி என்னும் பொருளில் இடம் பெறும் உரிச்சொற்கள் யாவை?**

உறு, தவ, நனி ஆகிய மூன்றும் மிகுதி என்னும் பொருளில் இடம் பெறும் உரிச்சொற்கள் ஆகும்.

8. **அவர்களுக்குப் பரிசு தருவேன் - இத்தொடரில் 'ஆ' என்னும் இடைச்சொல்லை சேர்த்து வினாக்கள் அமைக்க.**

- அவர்களுக்குப் பரிசு தருவேனா?
- அவர்களுக்கா பரிசு தருவேன்?
- அவர்களுக்குப் பரிசா தருவேன்?

9. **செய்யுளில் உரிச்சொற்கள் எத்தகைய பொருளில் இடம்பெறுகின்றன?**

பெயரையும் வினையையும் சார்ந்து வந்து பொருள் உணர்த்தும். இசை, குறிப்பு, பண்பு என்னும் பொருளுக்கு உரியது. உரிச்சொற்கள் ஒவ்வொன்றும் தனித்த பொருள் உடையன. ஒரு சொல் பல பொருளுக்கும், பல சொல் ஒரு பொருளுக்கும் உரிச்சொல் இடம்பெறும்.

10. **தற்காலத் தமிழ்ப் பயன்பாட்டில் காணப்படுகின்ற உரிச்சொற்கள் சிலவற்றை எழுதுக**

மழ, குழ, உவப்பு, பசப்பு, செழுமை, விழுமம் ஆகியன.

11. **உம் என்னும் இடைச்சொல் எத்தகைய பொருளில் இடம்பெறும்?**

எதிர்மறை, ஐயம், எச்சம், முற்று, அளவை, தெரிநிலை, ஆக்கம்.

12. **ஓ என்னும் இடைச்சொல் எத்தகைய பொருளில் இடம்பெறும்?**

ஒழியிசை, வினா, சிறப்பு, எதிர்றை, தெரிநிலை, கழிவு, பிரிநிலை, அசைநிலை ஆகிய எட்டுப் பொருள்களில் 'ஓ' என்னும் இடைச்சொல் வரும்.

Please Send Your Study Materials to our Email Id: padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.CBSEtips.in



13. **ஏ என்னும் இடைச்சொல் எத்தகைய பொருளில் இடம்பெறும்?**

பிரிநிலை, வினா, எண், ஈற்றசை, தேற்றம், இசைநிலை ஆகிய ஆறு பொருளில் ஏ என்னும் இடைச் சொல் இடம்பெறும்.

## கற்பவை கற்றபின்...

பக்கம்: 142

1. **பத்திகளில் இடம்பெற்றுள்ள இடைச்சொற்களைக் கண்டறிந்து எழுதுக.**

அ) பெண்ணடிமை போகவேண்டும்; பெண், கல்வி பெற வேண்டும். பெண்கள் பழத்தால் தான் தம் சொந்தக் காலில் நிற்கலாம். பெண், கல்வி கற்றால் வீடும் நாடும் முன்னேறும். சமுதாயத்தின் சரிபாதியான பெண்களுக்கும் எல்லா உரிமைகளும் உண்டு.

ஆ) நமது முன்சந்ததியார்களுக்கு இருந்ததைவிட, அதிகமான வசதிகள் நமக்கு உள்ளன. அவர்களின் காலம், அடவியில் ஆற்றோரத்தில் பர்ணசாலைக்குப் பக்கத்தில் ஆலமரத்தடியில் சிறுவர்கள் அமர்ந்திருக்க, குரு காலைக்கடன்களை முடித்துக் கொண்டு வந்து, பாடங்களைச் சொல்லித்தரும் முறை இருந்த காலம், ஏடும் எழுத்தாணியும் இருந்த காலம். இப்போதுள்ளது உலகை நமது வீட்டுக்கு அழைத்து வந்து காட்டக்கூடிய காலம். பாமர மக்கள் பாராளும் காலம். மனவளத்தை அதிகப்படுத்தும் வரிகள் முன்பு இருந்ததைவிட அதிகம் உள்ள காலம்.

**இடைச்சொற்கள்:**

| | | | | |
|---|---|---|---|---|
| அ) | பழத்தால் **தான்** | [தான்] | ஆ) இருந்ததை**விட** | [விட] |
| | வீடு**ம்** நாடு**ம்** | [உம்] | வசதி**கள்** | [கள்] |
| | சமுதாயத்**தின்** | [இன்] | அவர்க**ளின்** | [இன்] |
| | பெண்களுக்**கும்** | [உம்] | பாடசாலை**க்கு** | [கு] |
| | உரிமைகளு**ம்** | [உம்] | வீட்டுக்**கு** | [கு] |
| | | | அடவி**யில்**, ஆற்றோரத்**தில்** | [இல்] |

2. **உம், ஓ, ஏ, தான் மட்டும், ஆவது, கூட, ஆ, ஆம் ஆகிய இடைச் சொற்களைப் பயன்படுத்தி சொற்றொடர்களை உருவாக்குக.**

- ◈ உம் : தலைவர்களும் போற்றும் தலைவர் காமராசர்.
- ◈ ஓ : அவனோ இவனோ இதை செய்தது.
- ◈ ஏ : அவன் படித்தே முன்னேறினான்.
- ◈ தான் : அவன் தான் பார்த்தான்.
- ◈ மட்டும் : உங்களில் ஒருவர் மட்டும் முன்னால் வாருங்கள்.
- ◈ ஆவது : என்றைக்காவது நூலகம் போயிருக்கிறாயா?
- ◈ கூட : ஒருவர் கூட சாட்சி சொல்லவில்லை.
- ◈ ஆ : கண்ணன் படித்தானா?
- ◈ ஆம் : தலைமை ஆசிரியர் உள்ளே வரலாம் என்றார்.
- ◈ ஆகிய : தேனாகிய அமுது மொழி தமிழ்.

3. **பொருத்தமான இடைச்சொற்களைப் பயன்படுத்துக.**

அ. மணற்கேணி**யைப்** போல் விளங்கும். நூல்**கள்** உறுதுணை**யாக** இருக்கிறது.

ஆ. பெண்க**ளைப்** படிக்க வைக்காத காலத்தில்**தான்** பெண் இன**த்திற்குப்** பெருமை சேர்க்கும் படி**க்கு** நம் முத்துலட்சுமி அம்மையார் முதல் பெண் மருத்துவ**ராக** வந்தார்கள்.

இ. மக்க**ளின்** மனங்க**ளில்** உலக அறிவு புக வழி செய்ய வேண்டும்.

Please Send Your Study Materials to our Email Id: padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.CBSEtips.in



4. **இணைத்து எழுதிப் பாருங்கள்.**

| | | |
|---|---|---|
| அவன் | தான்<br>உம்<br>ஏ<br>ஆ | மனிதன் |
| இயற்கை | | அழகு |

| | | |
|---|---|---|
| உனக்கு | மட்டும்<br>கூட<br>ஆவது | தெரியுமா? |
| | | தெரியும் |

| | | |
|---|---|---|
| வீடு, நாடு | உம்<br>ஒ | நமதே |
| காற்று, வெளிச்சம் | | தேவை |
| அன்பு, அமைதி | | வேண்டும் |
| வான்மதி, பானு | | வாருங்கள் |

1. அவன் தான் மனிதன்.
அவனும் மனிதன்.
அவனே மனிதன்.
அவனா மனிதன்.

2. இயற்கை தான் அழகு.
இயற்கையும் அழகு.
இயற்கையே அழகு.
இயற்கையா அழகு.

3. உனக்கு மட்டும் தெரியுமா?
உனக்குக் கூட தெரியுமா?
உனக்காவது தெரியுமா?

4. உனக்கு மட்டும் தெரியும்.
உனக்குக் கூட தெரியும்.
உனக்காவது தெரியும்.

5. வீடும் நாடும் நமதே.
வீடோ நாடோ நமதே.
காற்றும் வெளிச்சமும் தேவை.
காற்றொ வெளிச்சமோ தேவை.

6. அன்பும் அமைதியும் வேண்டும்.
அன்போ அமைதியோ வேண்டும்.
வான்மதியும் பானுவும் வாருங்கள்.
வான்மதியோ பானுவோ வாருங்கள்.

5. **பொருத்தமான உரிச்சொற்களை எழுதுக.**

அ. **மா** பெரும் பொதுக் கூட்டம் [கடி / மா]

ஆ. **கடி** விடுதும் [உறு / கடி]

இ. **வாள்** நுதல் [வாள் / தவ]

ஈ. **சால** சிறந்தது [சால / மழ]

உ. **கடி** மனை [கடி / தட]

## சிந்தனை வினா

1. **''தான்'' என்னும் இடைச்சொல்லை எப்படியெல்லாம் பயன்படுத்தலாம்?**

◈ ''தான்'' என்னும் இடைச்சொல்லை அழுத்தப் பொருளில் பயன்படுத்தலாம்.

◈ எந்தச் சொல்லுடன் வருகின்றதோ, அச்சொல்லை முதன்மைப்படுத்தும் வகையில் ஒரு முறை மட்டும் பயன்படுத்தலாம்.

**சான்று:** நிர்மலாதான் பாடினாள்.

2. **அவர்களுக்குப் பரிசு தருவேன் - இத்தொடரில் ''ஆ'' என்னும் இடைச்சொல்லைச் சேர்த்து வினாக்களை அமைக்க.**

◈ அவர்களுக்கா பரிசு தருவேன்?

◈ அவர்களுக்குப் பரிசு தருவேனா?

Please Send Your Study Materials to our Email Id: padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.CBSEtips.in



3. செய்யுளில் உரிச்சொற்கள் எத்தகைய பொருள்களில் இடம்பெறுகின்றன?
- ◈ உரிச்சொற்கள் செய்யுளுக்கே உரியன என்றும் அவை,
- ◈ ஒரு சொல் பல பொருளுக்கு உரியது.
- ◈ பல சொல் ஒரு பொருளுக்கு உரியது என இடம் பெறும்.

4. தற்காலத் தமிழ்ப் பயன்பாட்டில் காணப்படுகின்ற உரிச்சொற்களை எழுதுக.
- ◈ மா, உறு, தவ, நனி, கடி, கூர், கழி முதலியவை தற்காலத் தமிழ்ப் பயன்பாட்டில் காணப்படுகின்ற உரிச்சொற்கள்.
- ◈ மேலும் மழ, குழ, விழுமம், செழுமை என்பனவும் பயன்பாட்டில் உள்ளன.

5. 'ஆ' என்னும் இடைச்சொல் எதிர்மறைப் பொருளில் எப்படி வரும் என்பதை எழுதுக.

'ஆ' என்னும் இடைச்சொல் எதிர்மறைப் பொருளில் ''ஐயம்'' தோன்ற வரும்.

**சான்று:** அவனா பேசினான்.

6. இடைச்சொற்களைப் பயன்படுத்திக் கீழ்க்காணும் சொற்றொடர்களை மாற்றியமைத்துக் காண்க.

அ. **வீட்டுக்குச் செல்லத்தான் இவ்வளவு பீடிகையா?**
வீட்டிற்குச் **செல்வதற்குத்தான்** இவ்வளவு பீடிகையாம்.

ஆ. **இந்தச் சூழ்நிலை மாறியாக வேண்டும்.**
இந்தச் சூழ்நிலையை **மாற்றித்தான்** ஆக வேண்டும்.

இ. **வானூர்தியைச் செலுத்துதல், உலகையும், கடலையும் அளத்தல் போன்ற எந்தச் செயலும் ஆண் பெண் இருபாலருக்கும் பொதுவானவை.**
வானூர்தியைச் செலுத்துதல், உலகையும் கடலையும் அளத்தல் ஆகிய **செயல்கள் கூட** ஆண் பெண் இருபாலருக்கும் பொதுவாம்.

ஈ. **சமைப்பது தாழ்வென எண்ணலாமா?**
சமைப்பது **மட்டும்** தாழ்வென எண்ணலாமா?

உ. **பூக்காமலே சில மரங்களில் காய்ப்பதுண்டு.**
**பூக்காமலும்** சில மரங்கள் காய்க்கும்.

ஊ. **வாளால் வெட்டினான்.**
வாளால்**தான்** வெட்டினான்.

## மொழியை ஆழ்வோம்

பக்கம்: 146

மொழிபெயர்க்க.

Akbar said, "How many crows are there in this city?"
Without even a moment's thought, Birbal replied "There are fifty thousand five hundred and eighty nine crows, my lord".
"How can you be so sure?" asked Akbar.
Birbal said, "Make your men count, My lord. If you find more crows it means some have come to visit their relatives here. If you find less number of crows it means some have gone to visit their relatives elsewhere".
Akbar was placed very much by Birbal's wit.

Please Send Your Study Materials to our Email Id: padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.CBSEtips.in



### பீர்பாலின் நகைச்சுவையுணர்வு

இந்த நகரத்தில் எத்தனை காகங்கள் இருக்கின்றன? என்று அக்பர் கேட்டார். பீர்பால் ஒருகணம்கூட யோசிக்காமல் ஐம்பதாயிரத்து ஐநூற்று எண்பத்தொன்பது காகங்கள் இருக்கின்றன அரசே என்று பதிலளித்தார். எப்படி உன்னால் உறுதியாகச் சொல்ல முடிகிறது என்றார் அக்பர்.

உங்களது ஆட்களை வைத்து எண்ணுங்கள் அரசே என்றார். இதைவிட அதிகமான காகங்கள் இருந்தால் சில இங்குள்ள தங்களுடைய உறவினர்களைப் பார்க்க வந்திருக்கும். நான் கூறியதைவிடக் குறைவாக இருந்தால், வேறு இடங்களில் உள்ள தங்கள் உறவினர்களைக் காணச் சென்றிருக்கும் என்று அர்த்தம் என்றார் பீர்பால். பீர்பாலுடைய நகைச்சுவையையும், நகைச்சுவை உணர்வையும் எண்ணி அக்பர், திருப்தியும், மன மகிழ்வும் அடைந்தார்.

### பிழை நீக்கி எழுதுக.

1. மதீனா சிறந்த இசை வல்லுநர் வேண்டும்.
   மதீனா சிறந்த இசை வல்லுந**ராக** வேண்டும்.
2. நல்ல தமிழுக்கு எழுதுவோம்.
   நல்ல **தமிழில்** எழுதுவோம்.
3. பவளவிழி தான் பரிசு உரியவள்.
   பவளவிழி தான் பரிசு**க்கு** உரியவள்.
4. துன்பத்தால் பொறுத்துக் கொள்பவனே வெற்றி பெறுவான்.
   துன்பத்**தைப்** பொறுத்துக் கொள்பவனே வெற்றி பெறுவான்.
5. குழலியும் பாடத் தெரியும்.
   குழலி**க்கும்** பாடத் தெரியும்.

### இடைச்சொற்களைக் கொண்டு தொடர்களை இணைக்க.

1. பெரும் மழை பெய்தது, வெள்ளம் கரை புரண்டு ஓடியது.
   பெரும் மழை பெய்த**தால்** வெள்ளம் கரைபுரண்டு ஓடியது.
2. அலுவலர் வந்தார், அனைவரும் பதற்றம் அடைந்தனர்.
   அலுவலர் வந்த**தும்** அனைவரும் பதற்றம் அடைந்தனர்.
3. சுடர்க்கொடி பாடினாள், மாலன் பாடினான்.
   சுடர்க்கொடி பாடி**யதால்** மால**னும்** பாடினான்.
4. பழனிமலை பெரியது, இமயமலை மிகப்பெரியது.
   பழனிமலை பெரியது, இமயமலை**யோ** மிகப்பெரியது.
5. கவலையற்ற எதிர்காலம், கல்வியே நிகழ்காலம்.
   கவலையற்ற எதிர்கால**த்திற்குக்** கல்வியே நிகழ்காலம்.

Please Send Your Study Materials to our Email Id: padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.CBSEtips.in



**விளம்பரத்தைச் செய்தித்தாள் செய்தியாக மாற்றி அமைக்க.** பக்கம்: 147

புத்தகம் படிப்போம்! புதியன அறிவோம்!

**புத்தகத் திருவிழா**

**நாள்** : செப்டம்பர் 19 - 28 வரை
**இடம்** : சரசுவதி மஹால் நூலகம், தஞ்சாவூர்.
**நேரம்** : காலை 8 முதல் மாலை 6 வரை

(முதல் நாள் காலை 9 மணிக்குத் **தமிழகக் கல்வி அமைச்சர்** தொடங்கி வைக்கிறார்)

(நாள்தோறும் மாலை 6 மணிக்குப் புதிய புத்தகங்கள் வெளியீடும்
சிறப்புப் பேச்சாளர்களின் உரையும் இடம்பெறும்)

**அனைவரும் வாரீர்! அறிவுத்திறம் பெறுவீர்!**

## தஞ்சையில் புத்தகத் திருவிழா

செப்டம்பர் 19 முதல் 28 வரை தஞ்சாவூர் சரசுவதி மஹால் நூலகத்தில் அறிவுக் களஞ்சியமான புத்தகங்களின் சங்கமமாம் புத்தகத் திருவிழா நடைபெறுகின்றது. முதல் நாள் காலை 9 மணிக்குத் தமிழகக் கல்வி அமைச்சர் புத்தகத் திருவிழாவினைத் தொடங்கி வைக்கிறார். நாள்தோறும் காலை 8 மணி முதல் மாலை 6 மணி வரை அறிவுப் புதையலை அள்ளிச் செல்லலாம். சிந்தைக்குப் பெருவிருந்தாய் மாலை 6 மணிக்குப் புதிய நூல் வெளியீடும், தலைசிறந்தப் பேச்சாளர்களின் பேச்சும் இடம்பெறும்.

**நிகழ்வினைப் படித்து வினாக்களுக்கு விடையளி:**

அண்ணாவின் வாழ்க்கையில்...

தமிழக முதலமைச்சராக அண்ணா பொறுப்பேற்ற காலகட்டத்தில், அரிசி வெளி மாநிலங்களுக்குச் செல்லக்கூடாது என்ற கட்டுப்பாடு இருந்தது. ஒரு நாள் அண்ணா விருத்தாசலம் கூட்டத்தை முடித்துவிட்டுத் திரும்பிக் கொண்டிருந்தார். வழியில் சோதனைச் சாவடியில் அவரது வண்டி நிறுத்தப்பட்டது. அங்கிருந்த வருவாய் அலுவலர், முதலமைச்சரின் மகிழுந்து என்ற அறியாமலே திறந்துகாட்டச் செய்தார். மகிழுந்தின் பின்பக்கம் முழுவதும் மாலைகள், கைத்தறி ஆடைகள், வாழ்த்துமடல்கள் இருந்தன. அவற்றைப் பார்த்த பிறகுதான் அந்த அலுவலருக்கு வந்திருப்பது யார் என்பது புரிந்தது. உடனே அவர் அண்ணாவின் அருகில் சென்று, ''தெரியாமல் நடந்துவிட்டது பொறுத்துக்கொள்ளுங்கள்'' என்றார். ஆனால், அண்ணா அவர் உதவியாளரிடம், ''இந்த அலுவலரின் பெயரைக் குறித்துக் கொள்ளுங்கள்'' என்றார். அந்த அலுவலர் தனக்கு ஏதோ நடந்துவிடப் போகிறது என அச்சப்பட்டு அழாத குறையாகக் கெஞ்சினார். உடனே, அண்ணா, ''நாங்கள் போடும் சட்டங்களைச் சரியான முறையில் நிறைவேற்றும் பொறுப்பு உங்களைப் போன்ற அலுவலரின் கையில்தான் இருக்கிறது. இன்று நேரில் உங்கள் செயலைப் பார்த்தேன். உங்களைப் போன்றவர்கள்தாம் உயர்பதவிக்கு வரவேண்டும். அதற்காகத்தான் உங்கள் பெயரைக் கேட்டேன்'' என்றார்.

Please Send Your Study Materials to our Email Id: padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.CBSEtips.in



1. **மகிழுந்தில் வந்திருப்பது அண்ணா என்பதை வருவாய் அலுவலர் எப்படி அறிந்தார்?**

மகிழுந்தின் பின்பக்கம் முழுவதும் மாலைகள், கைத்தறி ஆடைகள் வாழ்த்து மடல்கள் இருந்தன. அவற்றைப் பார்த்த பிறகுதான் வந்திருப்பது அண்ணா என வருவாய் அலுவலர் அறிந்து கொண்டார்.

2. **அண்ணாவிடம் ஏன் வருவாய் அலுவலர் பொறுத்துக்கொள்ளச் சொன்னார்?**

முதலமைச்சர் என்று தெரியாமல் சோதனைச்சாவடியில் மகிழுந்தைத் திறந்து காட்டச் சொன்னதால், என்ன நடக்குமோ என்று அச்சப்பட்டு, தெரியாமல் நடந்துவிட்டது பொறுத்துக் கொள்ளுங்கள் என்றார்.

3. **அண்ணா வருவாய் அலுவலரின் செயலை எவ்வாறு பாராட்டினார்?**

சட்டங்களைச் சரியான முறையில் நிறைவேற்றும் பொறுப்பு உங்களைப் போன்றவர்கள் கையில்தான் இருக்கிறது. உங்களைப் போன்றவர்களே உயர்பதவிக்கு வரவேண்டும் என்று பாராட்டினார்.

4. **பத்தியில் இடம்பெறும் இடைச்சொற்களைக் கொண்டு இரு புதிய சொற்றொடர்களை உருவாக்குக.**

◈ தான் : தான் முன்னேற கன்னிமாரா நூலகமே காரணம் என்றார் பேரறிஞர் அண்ணா.

◈ இன் : ஒழுக்கத்தின் எய்துவர் மேன்மை.

5. **நிகழ்வுக்குப் பொருத்தமான தலைப்பிடுக:**

நேர்மை (அல்லது) துணிவு

## மொழியோடு விளையாடு

பக்கம்: 148

**சொற்களைப் பயன்படுத்தி தொடர்களை உருவாக்குக.**

| | | | |
|---|---|---|---|
| மாணவர்கள் | ஆசிரியர் | பாடவேளை | கரும்பலகை |
| புத்தகம் | எழுதுகோல் | அழிப்பான் | வழிபாட்டுக் கூட்டம் |
| அறை | கல்லூரி | உயர்நிலை | சீருடை |
| மடிக்கணினி | | | |

**எ.கா: வழிபாட்டுக் கூட்டத்தில் மாணவர்கள் சீருடையுடன் நின்றனர்.**

1. மாணவர்கள் உயர்நிலை அடைய வேண்டும் என்றார் ஆசிரியர்.
2. ''மாணவர்களே! எழுதுகோலும் அழிப்பானும் கொண்டு வாருங்கள்'' என்றார் ஆசிரியர்.
3. பாடவேளையின் பொழுது ஆசிரியர் கரும்பலகையில் எழுதினார்.
4. மாணவர்கள் பாடவேளைக்குரிய புத்தகங்களைக் கொண்டுவரவில்லை.
5. வழிபாட்டுக் கூட்டத்தில் மடிக்கணினி வழங்கப்பட்டது.

**அகராதியில் காண்க.**

(அரங்கு, ஒட்பம், கான், நசை, பொருநர்)

**அரங்கு** - அரங்கம், உள்வீடு, நாடகசாலை, நடனசபை மன்றம், போர்க்களம்.

**ஒட்பம்** - அறிவு, அழகு, நன்மை, மேன்மை.

**கான்** - காடு, மணம், வாய்க்கால், இசை, மணம், பூ, வீட்டறை, செறிவு.

**நசை** - ஆசை, குற்றம், எள்ளல், ஈரம், அன்பு, ஒழுக்கம், பரிகாசம், விருப்பம்.

Please Send Your Study Materials to our Email Id: padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.CBSEtips.in



பொருநர் - படைவீரன், தலைவன், போர்க்களத்து சென்று பாடும் கூத்தன், அரசர், நாடகர், புகழ்வோர்.

**படங்களை இணைத்தால் கிடைக்கும் நூல்களின் பெயர்களைத் தேர்ந்தெடுத்து எழுதுக.**

(ஒரு கிராமத்து நதி, கிழவனும் கடலும், கருப்பு மலர்கள், சாக்ரட்டீஸின் சிவப்பு நூலகம், தண்ணீர் தண்ணீர்)

1. நா. காமராசனின் கவிதை நூல்:



கருப்பு மலர்கள்

2. திரைப்படமாக வெளிவந்த கோமல் சுவாமிநாதனின் நாடக நூல்:



தண்ணீர் தண்ணீர்

3. நோபல் பரிசு பெற்ற எர்னஸ்ட் ஹெமிங்வேவின் குறு நாவல்:



கிழவனும் கடலும்

4. சாகித்ய அகாதெமி பரிசு பெற்ற சிற்பியின் கவிதை நூல்



ஒரு கிராமத்து நதி

பக்கம்: 149

5. எஸ். இராமகிருஷ்ணனின் சிறார் நாவல்



சாக்ரட்டீஸின் சிவப்பு நூலகம்

**காட்சி கண்டு கவினுற எழுதுக.**




பெண்ணுக்கு எதற்குப் படிப்பு என்ற
மூடர் பேச்சை மிதித்து விட்டு
சரித்திரம படைக்கும்
சாதனைப்பெண்ணாய் மாற
கல்விப்படி ஒவ்வொன்றும்
சாதனைப்படி என்னுள்ளே
தன்னம்பிக்கையுடன் நான்படித்தே
பட்டம் பெற்று நாடாள்வேன்.

Please Send Your Study Materials to our Email Id: padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.CBSEtips.in



**கடிதம் எழுதுக.**

உங்கள் பள்ளி நூலகத்திற்குத் தமிழ் - தமிழ் - ஆங்கிலம் என்னும் கையடக்க அகராதிகள் பத்தினைப் பதிவஞ்சலில் அனுப்புமாறு நெய்தல் பதிப்பகத்திற்கு ஒரு கடிதம் எழுதுக.

அனுப்புநர்

ப. குழலி,
9 ஆம் வகுப்பு,
அரசு உயர்நிலைப் பள்ளி,
மதுரை - 1.

பெறுநர்

நெய்தல் பதிப்பகம்,
சென்னை - 600 017.

ஐயா,

பொருள்: தமிழ் - தமிழ் - ஆங்கிலம் அகராதி அனுப்புதல் - தொடர்பாக.

வணக்கம். எங்களுக்குத் தமிழ் - தமிழ் - ஆங்கிலம் கையடக்க அகராதி பத்துப் படிகள் தேவைப்படுகின்றன. நூல் மற்றும் பதிவஞ்சல் தொகையாக 800 ரூபாய் கேட்பு வரைவோலையை இத்துடன் அனுப்பியுள்ளோம். மேற்கண்ட முகவரிக்குப் பதிவஞ்சல் மூலம் அகராதிகளை அனுப்புமாறு கேட்டுக் கொள்கிறோம். நன்றி.

இடம் : மதுரை இப்படிக்கு,
நாள் : 20.06.2019 ப. குழலி.

உறைமேல் முகவரி:

பெறுநர்
நெய்தல் பதிப்பகம்,
சென்னை - 600 017.

## கலைச்சொல் அறிவோம்

| | | |
|---|---|---|
| Social Reformer | - | சமூக சீர்திருத்தவாதி |
| Saline Soil | - | களர்நிலம் |
| Volunteer | - | தன்னார்வலர் |
| Sentence | - | சொற்றொடர் |

Please Send Your Study Materials to our Email Id: padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.CBSEtips.in



# இயல் 6 உரைநடை உலகம்

# சிற்பக்கலை

## பாடநூல் மதிப்பீட்டு வினா

### 1 பலவுள் தெரிக

1. **பல்லவர் காலச் சிற்பக்கலைக்குச் சிறந்த சான்று**

அ) மாமல்லபுரம் ஆ) பிள்ளையார்பட்டி
இ) திரிபுவனவீரேசுவரம் ஈ) தாடிக்கொம்பு **விடை: அ) மாமல்லபுரம்**

2. **திருநாதர்குன்றில் ஒருபாறையில் படைப்புச் சிற்பங்களாக உள்ளவை**

அ) விலங்கு உருவங்கள் ஆ) தீர்த்தங்கரர் உருவங்கள்
இ) தெய்வ உருவங்கள் ஈ) நாட்டியம் ஆடும் பாவை உருவங்கள்

**விடை: ஆ) தீர்த்தங்கரர் உருவங்கள்**

### 2 குறுவினா

1. **செப்புத் திருமேனிகள் பற்றிக் குறிப்பு வரைக.**

சோழர் காலத்தில் மிகுதியான செப்புத் திருமேனிகள் உருவாக்கப்பட்டன. கடவுளின் உருவங்களும் மிகுந்த கலை நுட்பத்தோடு வடிவமைக்கப்பட்டன. சோழர்காலம் செப்புத் திருமேனிகளின் பொற்காலம் என்பர்.

2. **நடுகல் என்றால் என்ன?**

போரில் விழுப்புண் பட்டு இறந்த வீரருக்குக் கல்லில் வீரரின் உருவம் பொறிக்கப்பட்டு நடுவது நடுகல் ஆகும்.

3. **இசைத் தூண்கள் யார் காலத்தில் அமைக்கப்பட்டன?**

இசைத் தூண்கள் விஜய நகர மன்னர்கள் காலத்தில் அமைக்கப்பட்டன.

### 3 சிறுவினா

1. **முழு உருவச் சிற்பங்கள் – புடைப்புச் சிற்பங்கள் இரண்டிற்கும் உள்ள வேறுபாடு யாது?**

| முழு உருவச் சிற்பங்கள் | புடைப்புச் சிற்பங்கள் |
|---|---|
| உருவத்தின் முன், பின் பகுதிகள் தெளிவாக முழு உருவத்துடன் அமைந்த சிற்பங்கள் முழு உருவச்சிற்பங்கள். | உருவத்தின் முன்பகுதி மட்டும் தெரியும்படி அமைக்கப்பட்ட சிற்பங்கள் புடைப்புச் சிற்பங்கள். |

2. **நாயக்கர் காலச் சிற்பங்களின் நுட்பங்கள் யாவை?**

◈ கோவைக்கு அண்மையில் உள்ள பேரூர் சிவன் கோவிலின் சிற்பங்கள் நாயக்கர் காலச் சிற்பக் கலைநுட்பத்தின் உச்சநிலைப் படைப்பு எனலாம்.

Please Send Your Study Materials to our Email Id: padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.CBSEtips.in



◈ விழியோட்டம், புருவ நெளிவு, நகஅமைப்பு என மிகமிக நுட்பமாகக் கலைநயத்துடன் அவை அமைக்கப்பட்டுள்ளன.

## 4 நெடுவினா

1. **தமிழ்நாட்டுச் சிற்பங்கள் கலை நயம் மிக்கனவாகவும் வரலாற்றுப் பதிவுகளாகவும் இருப்பதை நிறுவுக.**

◈ பல்லவர்கால மாமல்லபுரச் சிற்பங்கள் பெரும்பாறைகளைச் செதுக்கிப் பற்பல உருவங்கள் பொறிக்கப்பட்டுள்ளன. பஞ்சபாண்டவர்கள் இரதத்தில் உள்ள சிற்ப வேலைப்பாடுகள் அழகாக உள்ளன. காஞ்சி கைலாசநாதர் கோவில் சுற்றுச்சுவர் சிற்பங்களின் கலைக்கூடமாகத் திகழ்கின்றன.

◈ தஞ்சைப் பெரியகோவிலில் காணப்படும் 14 அடி உயரமுள்ள வாயிற்காவலர் உருவங்களும், நந்தியும் வியப்பூட்டும் வண்ணம் உள்ளது.

◈ விஜய நகர மன்னர்கள் காலத்தில் மிக உயர்ந்த கோபுரங்கள் சிற்ப வேலைப்பாடுகளுடன் அமைக்கப்பட்டன. பல்வேறு ஓசைகளை எழுப்பும் இசைக் கற்றூண்களையும் அமைத்தனர்.

◈ நாயக்கர் மன்னர்கள் சிற்ப வேலைப்பாடுடன் ஆயிரங்கால் மண்டபத்தை அமைத்தனர். மதுரை மீனாட்சி அம்மன் கோவில் ஆயிரம் கால் மண்டபத்து தூண்களில் கண்ணப்பர், குறவன், குறத்தி, போன்ற சிற்பங்கள் உள்ளன. அரிச்சந்திரன், சந்திரமதி சிற்பங்களில் ஆடை ஆபரணங்கள் கலைநயத்துடன் காணப்படுகின்றன. இறந்த மைந்தனைக் கையில் ஏந்தியபடி சந்திரமதி சிற்பம் நயம் மிக்கது.

◈ கோவைக்கு அண்மையில் உள்ள பேரூர் சிவன் கோவிலில் உள்ள சிற்பங்கள் நாயக்கர் காலச் சிற்பக் கலைநுட்பத்தின் உச்சநிலைப் படைப்பு எனலாம்.

◈ விழியோட்டம், புருவ நெளிவு, நகஅமைப்பு என மிகமிக நுட்பமாகக் கலைநயத்துடன் அவை அமைக்கப்பட்டுள்ளன.

இவை அனைத்தும் கலைநயத்திற்கும், வரலாற்றுப் பதிவுகளுக்கும் தக்க சான்றுகளாகும்.

## கூடுதல் வினாக்கள்

## 1 பலவுள் தெரிக

1. **பொருத்துக.**

| | | | |
|---|---|---|---|
| 1. | முதலாம் இராசராசன் | - அ) | கங்கை கொண்ட சோழபுரம் |
| 2. | முதலாம் இராசேந்திர சோழன் | - ஆ) | தஞ்சைப் பெரிய கோவில் |
| 3. | இரண்டாம் இராசராச சோழன் | - இ) | திரிபுவன வீரேச்சுவரம் கோவில் |
| 4. | இரண்டாம் குலோத்துங்கச் சோழன் | - ஈ) | தாராசுரம் ஐராதீசுவரர் கோவில் |

அ) 1-ஆ 2-அ 3-ஈ 4-இ ஆ) 1-இ 2-அ 3-ஈ 4-ஆ

இ) 1-ஆ 2-ஈ 3-ஆ 4-இ ஈ) 1-ஈ 2-அ 3-ஆ 4-இ

**விடை: அ) 1-ஆ 2-அ 3-ஈ 4-இ**

2. **பொருத்துக.**

| | | | |
|---|---|---|---|
| 1. | பாண்டியர் காலச் சிற்பங்கள் | - அ) | ஆயிரங்கால் மண்டபம் |
| 2. | நாயக்கர் காலச் சிற்பங்கள் | - ஆ) | மிக உயர்ந்த கோபுரங்கள் சிற்ப வேலைப்பாடுகள் |
| 3. | விஜய நகர காலச் சிற்பங்கள் | - இ) | கற்சிற்பங்கள் |
| 4. | சோழர் காலச் சிற்பங்கள் | - ஈ) | குகைச்சிற்ப வேலைப்பாடுகள் |

Please Send Your Study Materials to our Email Id: padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.CBSEtips.in



அ) 1-ஆ 2-அ 3-ஈ 4-இ ஆ) 1-இ 2-அ 3-ஈ 4-ஆ
இ) 1-ஆ 2-ஈ 3-ஆ 4-இ ஈ) 1-ஈ 2-அ 3-ஆ 4-இ

**விடை: ஈ) 1-ஈ 2-அ 3-ஆ 4-இ**

3. தொடக்க காலச்சிற்பக்கலைக்குச் சான்றினைக் கூறும் நூல் எது?
அ) தொல்காப்பியம் ஆ) மணிமேகலை
இ) சிலப்பதிகாரம் ஈ) சீவகசிந்தாமணி **விடை: அ) தொல்காப்பியம்**

4. கண்ணகிக்குச் சிலை வடித்த செய்தி இடம்பெறும் நூல் எது?
அ) தொல்காப்பியம் ஆ) மணிமேகலை
இ) சிலப்பதிகாரம் ஈ) சீவகசிந்தாமணி **விடை: இ) சிலப்பதிகாரம்**

5. மாளிகைகளில் பல சிற்பங்களில் சுண்ணாம்புக் கலவை (சுதைச் சிற்பங்கள்) இருந்த செய்தியைக் கூறும் நூல் எது?
அ) தொல்காப்பியம் ஆ) மணிமேகலை
இ) சிலப்பதிகாரம் ஈ) சீவகசிந்தாமணி **விடை: ஆ) மணிமேகலை**

6. சிற்பத்தொழிலுக்குரிய உறுப்புகளைப் பற்றிக் கூறும் நூல்கள்
அ) தொல்காப்பியம், நன்னூல் ஆ) திவாகர நிகண்டு, மணிமேகலை
இ) சிலப்பதிகாரம், வளையாபதி ஈ) சீவகசிந்தாமணி, குண்டலகேசி

**விடை: ஆ) திவாகர நிகண்டு, மணிமேகலை**

7. பல்லவர்கள் காலச் சிற்பங்கள் அமைந்துள்ள இடங்கள் யாவை?
அ) மாமல்லபுரம், காஞ்சிபுரம், திருச்சி, மலைக்கோட்டை.
ஆ) திருமயம், பிள்ளையார்பட்டி, குன்றக்குடி, திருப்பரங்குன்றம்.
இ) மதுரை மீனாட்சி அம்மன் கோவில், இராமேசுவரம் பெருங்கோவில்
ஈ) இவற்றுள் எதுவுமில்லை **விடை: அ) மாமல்லபுரம், காஞ்சிபுரம், திருச்சி, மலைக்கோட்டை.**

8. பாண்டியர் காலச் சிற்பங்கள் அமைந்துள்ள இடங்கள் யாவை?
அ) மாமல்லபுரம், காஞ்சிபுரம், திருச்சி, மலைக்கோட்டை.
ஆ) திருமயம், பிள்ளையார்பட்டி, குன்றக்குடி, திருப்பரங்குன்றம்.
இ) மதுரை மீனாட்சி அம்மன் கோவில், இராமேசுவரம் பெருங்கோவில்
ஈ) இவற்றுள் எதுவுமில்லை

**விடை: ஆ) திருமயம், பிள்ளையார்பட்டி, குன்றக்குடி, திருப்பரங்குன்றம்.**

9. நாயக்கர் காலச்சிற்பங்கள் காணப்படும் இடங்கள் யாவை?
அ) மாமல்லபுரம், காஞ்சிபுரம், திருச்சி, மலைக்கோட்டை.
ஆ) திருமயம், பிள்ளையார்பட்டி, குன்றக்குடி, திருப்பரங்குன்றம்.
இ) மதுரை மீனாட்சி அம்மன் கோவில், இராமேசுவரம் பெருங்கோவில்
ஈ) இவற்றுள் எதுவுமில்லை

**விடை: இ) மதுரை மீனாட்சி அம்மன் கோவில், இராமேசுவரம் பெருங்கோவில்**

10. சிற்பக்கலை பற்றிய செய்திகளை அனைவரும் அறிந்து கொள்ளும் வகையில் தமிழ்நாடு தொழில்நுட்பக் கல்வி இயக்ககம் வெளியிட்டுள்ள நூல் எது?
அ) சிற்பக்கலை ஆ) சிற்பச்செந்நூல்
இ) .சிற்ப ஓவியம் ஈ) சிற்ப நூல் **விடை: ஆ) சிற்பச்செந்நூல்**

Please Send Your Study Materials to our Email Id: padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.CBSEtips.in



11. தெலுங்கு, கன்னடப் பகுதிகளுடன் தொடர்புகொண்டிருந்த காரணத்தால் அந்நாட்டுச் சிற்பக்கலையின் தாக்கம் தமிழகச் சிற்பங்களில் ஏற்படக் காரணமானவர்கள்

அ) பாண்டிய மன்னர் ஆ) சோழ மன்னர்
இ) நாயக்க மன்னர் ஈ) விஜயநகர மன்னர் **விடை: ஈ) விஜயநகர மன்னர்**

12. பல்வேறு ஓசைகளை எழுப்பும் இசைக் கற்றூண்களையும் அமைத்தவர்

அ) பாண்டிய மன்னர் ஆ) சோழ மன்னர்
இ) நாயக்க மன்னர் ஈ) விஜயநகர மன்னர் **விடை: ஈ) விஜயநகர மன்னர்**

13. 24 தீர்த்தங்கரர் உருவங்களையும் சிற்பங்களாக்கியுள்ளவர்

அ) சமணர் ஆ) பௌத்தர்
இ) சோழர் இ) பாண்டியர் **விடை: அ) சமணர்**

14. தமிழக அரசு சிற்பக் கல்லூரியை நடத்தி வருகின்ற இடம்

அ) மாமல்லபுரம் ஆ) சுவாமி மலை
இ) கும்பகோணம் ஈ) மதுரை **விடை: அ) மாமல்லபுரம்**

15. உலோகப் படிமங்கள் செய்யும் பயிற்சி நிலையங்கள் அமையாத இடம்

அ) மாமல்லபுரம் ஆ) சுவாமி மலை
இ) கும்பகோணம் ஈ) மதுரை **விடை: அ) மாமல்லபுரம்**

16. அரசு கவின்கலைக் கல்லூரிகள் உள்ள இடங்கள்

அ) சென்னை, கும்பகோணம் ஆ) மதுரை, திருநெல்வேலி
இ) மாமல்லபுரம், சுவாமி மலை ஈ) தஞ்சாவூர், கோவை

**விடை: அ) சென்னை, கும்பகோணம்**

## கோடிட்ட இடங்களை நிரப்புக.

1. __________ ''கற்கவிஞர்கள்'' என்று சிறப்பிக்கின்றனர். **விடை: சிற்பிகளை**
2. கல், உலோகம், செங்கல், மரம் முதலியவற்றைக் கொண்டு கண்ணையும் கருத்தையும் கவரும் வகையில் உருவங்கள் அமைக்கும் கலையே __________ ஆகும். **விடை: சிற்பக்கலை**
3. __________, __________ கூறுகளும் தமிழகச் சிற்பக்கலையில் இடம்பெறச்செய்தனர். **விடை: யோகக் கலை, நாட்டியக் கலை**
4. __________ மன்னர்கள் காலத்தில் மிக உயர்ந்த கோபுரங்கள் சிற்ப வேலைப்பாடுகளுடன் அமைக்கப்பட்டன . **விடை: விஜய நகர**
5. __________ மதத்தினர் அருகக் கடவுளின் உருவத்தையும், 24 __________ உருவங்களையும் சிற்பங்களாக்கியுள்ளனர். **விடை: சமண, தீர்த்தங்கரர்**
6. __________ மதத்தில் சிற்பங்கள் அளவுக்கு மீறிய உயரமும், பருமனும் உடையவையாக உள்ளன. **விடை: சமண**
7. __________ என்னும் இடத்தில், ஒரு பாறையில் 24 தீர்த்தங்கரர் உருவங்கள் புடைப்புச் சிற்பங்களாகச் செதுக்கப்பட்டுள்ளன. **விடை: திருநாதர் குன்று**
8. __________அண்மையில்சமணர்படுக்கைகள்செதுக்கப்பட்டஇடங்களிலும்மலைப்பாறைகளிலும் சமணச் சிற்பங்கள் செதுக்கப்பட்டுள்ளன. **விடை: மதுரைக்கு**

Please Send Your Study Materials to our Email Id: padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.CBSEtips.in



9. தமிழகத்தில் கட்டப்படும் கோவில்களில் இன்றும் __________, __________ அமைக்கப்பட்டு வருகின்றன. **விடை: சுதைச்சிற்பங்கள், கற்சிற்பங்கள்**

## 2 குறுவினா

1. **கற்கவிஞர்கள் என்று சிறப்பிக்கப்படுபவர் யார்?**

சிற்ப இலக்கண மரபைப் பின்பற்றிக் கலை நயத்துடனும், மிகுந்த தேர்ச்சியுடனும் சிற்பிகள் வடிவமைக்கின்றனர். அதனால் அவர்களைக் ''கற்கவிஞர்கள்'' என்று சிறப்பிக்கின்றனர்.

2. **பல்லவர்கள் காலச் சிற்பங்கள் அமைந்துள்ள இடங்கள் யாவை?**

மாமல்லபுரம், காஞ்சிபுரம், திருச்சி, மலைக்கோட்டை.

3. **பாண்டியர் காலச் சிற்பங்கள் அமைந்துள்ள இடங்கள் யாவை?**

திருமயம், பிள்ளையார்பட்டி, குன்றக்குடி, திருப்பரங்குன்றம்.

4. **நாயக்கர் காலச்சிற்பங்கள் காணப்படும் இடங்கள் யாவை?**

மதுரை மீனாட்சி அம்மன் கோவில், இராமேசுவரம் பெருங்கோவில், திருநெல்வேலி நெல்லையப்பர் கோவில், கிருஷ்ணாபுரம் பெருமாள் கோவில், திண்டுக்கல் அருகே தாடிக்கொம்பில் உள்ள பெருமாள் கோவில், பேரூர் சிவன் கோவில்.

5. **சிற்பக் கலை என்றால் என்ன?**

கல், உலோகம், செங்கல், மரம் முதலியவற்றைக் கொண்டு கண்ணையும் கருத்தையும் கவரும் வகையில் உருவங்கள் அமைக்கும் கலையே சிற்பக்கலை ஆகும்.

6. **சிற்பங்களின் நான்கு நிலைகள் யாவை?**

◈ தெய்வ உருவங்கள்
◈ கற்பனை உருவங்கள்
◈ இயற்கை உருவங்கள்
◈ முழுவடிவ உருவங்கள்

7. **பல்லவர் காலத்தில் எதனால் சிற்பங்கள் அமைக்கப்பட்டன?**

சுதை, கருங்கற்கள்.

8. **பல்லவர் காலத்தில் தூண்களில் எவை பொறிக்கப்பட்டன?**

◈ யாளி
◈ தாமரை மலர்
◈ சிங்கம்
◈ நுட்பமான வேலைப்பாடுகள் அமைந்த வட்டங்கள்

9. **தொடக்க காலச் சிற்பக்கலைக்குச் சான்றாக எதனைக் கூறலாம்?**

தமிழின் தொன்மையான இலக்கண நூலாகிய தொல்காப்பியத்தில், போரில் விழுப்புண் பட்டு இறந்த வீரருக்கு நடுகல் நடப்படும். அக்கல்லில் அவ்வீரரின் உருவம் பொறிக்கப்பெறும் குறிப்பு காணப்படுகின்றது. இதுவே, தொடக்க காலச் சிற்பக்கலைக்குச் சான்றாகும்.

10. **சிற்பச் செந்நூல் பற்றிக் குறிப்பிடுக.**

◈ 'சிற்பச் செந்நூல்' சிற்பக்கலை பற்றியது.
◈ சிற்பக்கலை பற்றிய செய்திகளை அனைவரும் அறிந்து கொள்ளும் வகையில் தமிழ்நாடு தொழில்நுட்பக் கல்வி இயக்ககம் இந்நூலை வெளியிட்டுள்ளது.

Please Send Your Study Materials to our Email Id: padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.CBSEtips.in



**11. தமிழகச் சிற்பக் கலையின் சிறப்பு யாது?**

◈ பிற நாட்டுச் சிற்பக் கலைகளைவிடத் தமிழ்நாட்டுச் சிற்பங்கள் தனிச்சிறப்புடையன.

◈ யோகக் கலை, நாட்டியக் கலைக் கூறுகளும் தமிழகச் சிற்பக்கலையில் இடம்பெறச் செய்தனர்.

## 3 சிறுவினா

**1. சிற்பத் தொழிலுக்குரிய உறுப்புகள் யாவை?**

◈ கல்
◈ உலோகம்
◈ செங்கல்
◈ மரம்
◈ சுதை(சுண்ணாம்பு)
◈ தந்தம்
◈ வண்ணம்
◈ கண்ட சருக்கரை
◈ மண்
◈ மெழுகு

**2. சோழர் காலச் சிற்பங்களின் கருவூலங்களாகத் திகழ்கின்றவை எவை?**

◈ முதலாம் இராசராசன் கட்டிய தஞ்சைப் பெரிய கோவில்.

◈ முதலாம் இராசேந்திர சோழன் எழுப்பிய கங்கை கொண்ட சோழபுரம்.

◈ இரண்டாம் இராசராச சோழன் எழுப்பிய தாராசுரம் ஐராதீசுவரர் கோவில்.

◈ இரண்டாம் குலோத்துங்கச் சோழன் அமைத்த திரிபுவன வீரேசுவரம் கோவில் -போன்றன சோழர்காலச் சிற்பங்களின் கருவூலங்களாகத் திகழ்கின்றவை ஆகும்.

**3. மாமல்லபுரச் சிற்பங்கள் பற்றி எழுதுக.**

◈ சிற்பக்கலைக்கு மாமல்லபுரச் சிற்பங்கள் மிகச்சிறந்த சான்று.

◈ கடற்கரையில் உள்ள பெரும்பாறைகளைச் செதுக்கிப் பற்பல உருவங்கள் அமைக்கப் பட்டுள்ளன.

◈ பஞ்சபாண்டவர் இரதங்களில் அழகிய சிற்பங்கள் காணப்படுகின்றன.

◈ பறவைகள், விலங்குகள், ஆகியவற்றின் பல்வேறு உருவச் சிற்பங்களும் காணப்படுகின்றன.

**4. நாயக்கர் காலச்சிற்பங்கள் பற்றி எழுதுக.**

◈ நாயக்கர் மன்னர்கள் சிற்ப வேலைப்பாடுடன் ஆயிரங்கால் மண்டபத்தை அமைத்தனர். மதுரை மீனாட்சி அம்மன் கோவில் ஆயிரம் கால் மண்டபத்து தூண்களில் கண்ணப்பர், குறவன், குறத்தி, ஆடை அணிகலன்களுடன் கூடிய அரிச்சந்திரன், சந்திரமதி சிற்பங்கள் ஆகியவற்றில் ஆடை ஆபரணங்கள் கலைநயத்துடன் காணப்படுகின்றன. இறந்த மைந்தனைக் கையில் ஏந்தியபடி சந்திரமதி சிற்பங்கள் நயம் மிக்கது.

◈ கோவைக்கு அண்மையில் உள்ள பேரூர் சிவன் கோவிலில் உள்ள சிற்பங்கள் நாயக்கர் காலச் சிற்பக் கலைநுட்பத்தின் உச்சநிலைப் படைப்பு எனலாம்.

◈ விழியோட்டம், புருவ நெளிவு, நகஅமைப்பு என மிகமிக நுட்பமாகக் கலைநயத்துடன் அவை அமைக்கப்பட்டுள்ளன.

◈ கிருஷ்ணாபுரம் வேங்கடாசலபதி கோவிலில் உள்ள குறவன் குறத்தி, இரதிதேவி சிலைகள் காண்போரை ஈர்க்கும் வகையில் உள்ளன.

Please Send Your Study Materials to our Email Id: padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.CBSEtips.in



5. **விஜய நகர மன்னர் காலச்சிற்பங்கள் குறித்தெழுதுக.**

◈ விஜய நகர மன்னர்கள் காலத்தில் மிக உயர்ந்த கோபுரங்கள் சிற்ப வேலைப்பாடுகளுடன் அமைக்கப்பட்டன .

◈ அக்கோபுரங்களில் சுதைகளால் ஆன சிற்பங்கள் மிகுதியாக உள்ளன.

◈ தெலுங்கு, கன்னடப் பகுதிகளுடன் தொடர்புகொண்டிருந்த காரணத்தால் அந்நாட்டுச் சிற்பக்கலையின் தாக்கம் தமிழகச் சிற்பங்களில் ஏற்பட்டது.

◈ கோவில் மண்டபங்களில் மிகுதியான சிற்பத்தூண்கள் அமைக்கப்பட்டன.

◈ குதிரையின் உருவங்களைச் சிற்பங்களில் இடம்பெறச் செய்தனர்.

◈ வீரர்கள் அமர்ந்த நிலையில் குதிரைகள் முன்னங்கால்களைத் தூக்கி நிற்பது போன்ற சிற்பங்கள் மண்டபத்தூண்களில் அமைத்தனர்.

◈ பல்வேறு ஓசைகளை எழுப்பும் இசைக் கற்றூண்களையும் அமைத்தனர்.

6. **பௌத்த - சமணச் சிற்பங்கள் குறித்து எழுதுக.**

◈ பௌத்த மதத்தைத் தழுவிய தமிழர்கள் புத்தரின் உருவத்தை அமர்ந்த, நின்ற, படுத்த நிலைகளில் சிற்பங்களாகப் படைத்து வழிபட்டனர்.

◈ சமண மதத்தினர் அருகக் கடவுளின் உருவத்தையும், 24 தீர்த்தங்கரர் உருவங்களையும் சிற்பங்களாக்கியுள்ளனர்.

◈ சமண மதத்தில் சிற்பங்கள் அளவுக்கு மீறிய உயரமும், பருமனும் உடையவையாக உள்ளன.

◈ திருநாதர் குன்று என்னும் இடத்தில், ஒரு பாறையில் 24 தீர்த்தங்கரர் உருவங்கள் புடைப்புச் சிற்பங்களாகச் செதுக்கப்பட்டுள்ளன.

◈ மதுரைக்கு அண்மையில் சமணர் படுக்கைகள் செதுக்கப்பட்ட இடங்களிலும் மலைப்பறைகளிலும் சமணச் சிற்பங்கள் செதுக்கப்பட்டுள்ளன.

## 4 நெடுவினா

1. **தமிழக அரசு சிற்பக்கலைக்கு ஆற்றிவரும் பணிகள் குறித்துத் தொகுத்து எழுதுக.**

◈ சிற்பக்கலைஞர்களைப் பரிசளித்துப் பாராட்டிச் சிற்பக்கலையை வளர்த்து வருகின்றது.

◈ மாமல்லபுரத்தில் தமிழக அரசு சிற்பக் கல்லூரியை நடத்தி வருகின்றது.

◈ சுவாமி மலை, கும்பகோணம், மதுரை ஆகிய இடங்களில் உலோகப் படிமங்கள் செய்யும் பயிற்சி நிலையங்கள் அமைந்துள்ளன.

◈ சென்னை மற்றும் கும்பகோணத்தில் உள்ள அரசு கவின்கலைக் கல்லூரிகளில் சிற்பக்கலை பயிலலாம்.

◈ 'சிற்பச் செந்நூல்' சிற்பக்கலை பற்றியது. சிற்பக்கலை பற்றிய செய்திகளை அனைவரும் அறிந்து கொள்ளும் வகையில் தமிழ்நாடு தொழில்நுட்பக் கல்வி இயக்ககம் இந்நூலை வெளியிட்டுள்ளது.

2. **இன்றைய சிற்பக்கலை குறித்து எழுதுக.**

◈ தமிழகத்தில் கட்டப்படும் கோவில்களில் இன்றும் சுதைச்சிற்பங்கள், கற்சிற்பங்கள் அமைக்கப்பட்டு வருகின்றன.

◈ செங்கல், பைஞ்சுதை, கற்கள் ஆகியவற்றைக் கொண்டு கலைநயமிக்க சிற்பங்கள் உருவாக்கப்படுகின்றன.

Please Send Your Study Materials to our Email Id: padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.CBSEtips.in



- வெண்கல உலோகம் மற்றும் செயற்கை இழைகளாலும் கடவுள் உருவங்களும் மனித உருவங்களும் உருவாக்கப்படுகின்றன.
- இன்றைய சிற்பக்கலை கோவில்களைக் கடந்தும் பல துறைகளில் தன் இடத்தை நிறைவு செய்கிறது.
- பெரும் அரங்குகளில், காட்சிக் கூடங்களில் வரவேற்பறைகளில் காணப்படுகின்ற கலை நயம் மிக்க சிற்பங்கள், நினைவுப் பொருட்கள், பரிசுப்பொருட்கள். வெளிநாடுகளுக்கு ஏற்றுமதியாகும் நேர்த்தி மிகு சிற்பங்கள் முதலானவை தமிழர் சிற்பக்கலையின் மேன்மையை உலகுக்குப் பறைசாற்றுகின்றன.

## கற்பவை கற்றபின்...

**பக்கம்: 156**

1. **உங்கள் பகுதியில் உள்ள பழமையான சிற்பம் ஒன்றைப் பற்றிய செய்திக் குறிப்பை உருவாக்குக.**

எங்கள் ஊரில் பழமையான அம்மன் சிலை ஒன்று உள்ளது. மிகவும் நேர்த்தியானது. வலிமையான ஒரே பாறையில் வடிக்கப்பட்டுள்ளது. முகத்தோற்றம் நேர்த்தியாக உள்ளன. ஆடை, ஆபரணங்கள் உண்மையானவை போலவே செதுக்கி வண்ணமிடப்பட்டுள்ளன.

2. **ஓவியர்/சிற்பி/இசைக் கலைஞர் ஒருவரைச் சந்தித்து அவர் கூறும் கலை நுட்பங்களையும் அனுபவங்களையும் தொகுத்து வகுப்பறையில் படித்துக் காட்டுக.**

சேலம் ஓவியர் திரு. இரவி அவர்களிடம் பேசும் வாய்ப்பு எனக்குக் கிடைத்தது. அவர் கூறிய கருத்துகளைப் படித்துக் காட்டுகின்றேன். ஓவியக்கலை என்பது மற்ற கலைகளைப் போலவன்று. அது உயிரோட்டமுள்ள கலை. கருவில் உருவாகி, தாயின் வயிற்றுக்குள் இருந்து வரும் மழலையைப் போல பல மாதங்கள் உழைப்பில்தான் சிறந்த ஓவியத்தை உருவாக்க முடியும். வண்ணங்களை வகையறிந்து பொருத்துவதன்று, எண்ணங்களை வகையறிந்து பொருத்துவதான் ஓவியம். ஓவியன் என்பவன் கடவுளையே கற்பனையில் வரையக் கூடியவன். வேறு யாராலும் அதனைச் செய்யவியலாது என்றார்.

Please Send Your Study Materials to our Email Id: padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.CBSEtips.in



இயல் 6 கவிதைப் பேழை

# இராவண காவியம்

– புலவர் குழந்தை

| | | |
|---|---|---|
| ஆசிரியர் | - | புலவர் குழந்தை |
| பிறப்பு | - | 1.7.1906 |
| பணி | - | ஆசிரியராகப் பணியைத் தொடங்கி பவானி நகரில் உயர்நிலைப் பள்ளியில் தலைமையாசிரியராகவும் பணியாற்றினார். |
| படைப்புகள் | - | இராவண காவியம், அரசியரங்கம், நெருஞ்சிப்பழம், யாப்பதிகாரம், தொடையதிகாரம், இன்னூல் உள்ளிட்ட 30 க்கும் மேலான நூல்கள். |
| சிறப்பு | - | தந்தைப் பெரியாரின் வேண்டுகோளுக்கு இணங்க 25 நாள்களில் திருக்குறளுக்கு உரை எழுதினார். |

## சொல்லும் பொருளும்

| | |
|---|---|
| முருகியம் | - குறிஞ்சிப் பறை |
| அருகிய | - அருமையான |
| சிறை | - சிறகினை |
| பூஞ்சினை | - பூக்களை உடைய கிளை |
| மடுப்படு | - வெளிப்படும் |
| துடுப்பிடு | - உலையில் இட்ட |
| மைவனம் | - மலை நெல் |
| சாந்தம் | - சந்தனம் |
| கமழும் | - மணம் வீசும் |
| பூவை | - நாகணவாய்ப் பறவை |
| பொலம் | - அழகு |
| பொலங்கை | - அழகு பொருந்திய |
| இசை பெறும் | - புகழ் பெற்ற |
| கடறு | - காடு |
| முக்குழல் | - கொன்றை, ஆம்பல் மூங்கில் ஆகியவற்றால் ஆன குழல் |
| பொதுவர்கள் | - முல்லை நில மக்கள் |
| பொலி | - தானியக் குவியல் |
| உழை | - ஒரு வகை மான் (பெண் மான்) |
| எருத்து | - எருது |
| கோடு | - கொம்பு |
| படிக்குஉற | - நிலத்தில் விழ |
| கல் | - மலை |
| கல்லிடை | - மலையிடை |
| முருகு | - தேன், மணம், அழகு |
| கான்யாறு | - காட்டாறு |
| மல்லல் | - வளம் பொருந்திய |
| கரி | - யானை |
| கரிக்குருத்து | - யானையின் தந்தம் |
| போர் | - வைக்கோற்போர் |
| புரைதப | - குற்றமின்றி |
| செறு | - வயல் |
| குரை கழல் சிறுவர் | - ஒலிக்கின்ற கழல் அணிந்த பாதமுடைய சிறுவர்கள் |
| தெங்கின்காய் | - தென்னை மரத்தின் இளங்காய் (இளநீர்) |
| தூயமுறை | - தூய்மையான ஒழுக்க நெறி |
| வசிபட | - வாழும் இடம் |
| முதுநீர் | - கடல் |

Please Send Your Study Materials to our Email Id: padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.CBSEtips.in



மன்னிய - கொடிய
முதுவெயில் - வெப்பம் தரும் வெயில்

வாய்வெரீஇ - சோர்வால் வாய் குழறுதல்
குருளை - குட்டி
இனைந்து - துன்புறுதல்
உயங்குமே - வருந்துமே
கடிகமழ் - சிறந்த மணம் வீசும்
மராமலர் கண்ணி- மராமலர் மாலை

துவரை - பவளம்
அளவி - தடவி

மதியம் - நிலவு
கானல் மணலிடை - சுடுகின்ற கடற்கரை மணல்
சுரிகுழல் - நீண்ட சிறகு
மரை - தாமரை மலர்
விசும்பு - வானம்
கருமுகில் - கருமேகம்

## இலக்கணக் குறிப்பு

இடிகுரல் - உவமைத் தொகை
இன்னுயிர் - பண்புத் தொகை
பிடிபசி - வேற்றுமைத் தொகை
பைங்கிளி - பண்புத் தொகை

பெருங்கடல் - பண்புத் தொகை
முதுவெயில் - பண்புத் தொகை
வருமலை - வினைத் தொகை

மன்னிய - பெயரெச்சம்
வெரீஇ - சொல்லிசை அளபெடை
கடிகமழ் - உரிச்சொல் தொடர்
மரைமுகம் - உவமைத் தொகை

கருமுகில் - பண்புத் தொகை
அதிர்குரல் - வினைத் தொகை
இன்னிளங்குருளை - பண்புத் தொகை

பூவையும் குயில்களும் - எண்ணும்மை
முதிரையும் சாமையும் வரகும் - எண்ணும்மை
எருத்துக்கோடு - ஆறாம் வேற்றமைத் தொகை

கரைபொரு - இரண்டாம் வேற்றுமைத் தொகை
மலர்க்கண்ணி - மூன்றாம் வேற்றுமை உருபும் பயனும் உடன் தொக்க தொகை

## பகுபத உறுப்பிலக்கணம்

**பருகிய - பருகு + இன் + ய் + அ**
பருகு - பகுதி
இன் - இறந்தகால இடைநிலை (ன்-கெட்டது விகாரம்)
ய் - உடம்படுமெய் சந்தி
அ - பெயரெச்ச விகுதி

**பூக்கும் - பூ + க் + க் + உம்**
பூ - பகுதி
க் - சந்தி
க் - எதிர்கால இடைநிலை
உம் - வினைமுற்று விகுதி

**பறித்து - பறி + த் + த் + உ**
பறித்து - பகுதி
த் - சந்தி
த் - இறந்தகால இடைநிலை
உ - வினையெச்ச விகுதி

**குவிப்பார் - குவி + ப் + ப் + ஆர்**
குவி - பகுதி
ப் - சந்தி
ப் - எதிர்கால இடைநிலை
ஆர் - பலர்பால் வினைமுற்று விகுதி

Please Send Your Study Materials to our Email Id: padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.CBSEtips.in



**மருண்டு - மருள்(ண்) + ட் + உ**

மருள் - பகுதி
'ள்' 'ண்' - ஆனது விகாரம்
ட் - இறந்தகால இடைநிலை
உ - வினையெச்ச விகுதி

**புக்கு - புகு + உ**

புகு - பகுதி (க் ஒற்று இரட்டித்து இறந்த காலம் காட்டியது)
உ - வினையெச்ச விகுதி

**அஞ்சி - அஞ்சு + இ**

அஞ்சு - பகுதி
இ - வினையெச்ச விகுதி

## பாடநூல் மதிப்பீட்டு வினா

### 1 பலவுள் தெரிக

1. **'பொதுவர்கள் பொலிஉறப் போர் அடித்திடும்' நிலப்பகுதி**

அ) குறிஞ்சி ஆ) நெய்தல்
இ) முல்லை ஈ) பாலை **விடை: இ) முல்லை**

### 2 குறுவினா

1. **பாலை நிலத்தில் பருந்துகள் பறந்ததன் காரணம் என்ன?**

எருதின் கொம்பு போன்ற பாலைக் காயை நிலத்தில் போட்டு கோலினால் அடித்து வெடிக்குமாறு விளையாடினர். அவ்வோசையைக் கேட்ட பாலை நிலப் பறவைகள் அச்சத்துடன் பறந்தன.

2. **இடிகுரல், பெருங்கடல் - இலக்கணக்குறிப்புத் தருக.**

இடிகுரல் - உவமைத் தொகை
பெருங்கடல் - பண்புத்தொகை

### 3 சிறுவினா

1. **இராவண காவியத்தில் இடம்பெற்ற இரண்டு உவமைகளை எடுத்துக்காட்டுக.**

◈ எருதின் கொம்பு போன்ற பாலைக் காயை நிலத்தில் போட்டு கோலினால் அடித்து வெடிக்குமாறு விளையாடினர். அவ்வோசையைக் கேட்ட பாலை நிலப் பறவைகள் அச்சத்துடன் பறந்தன.

◈ தும்பியானது கரையை நெருங்கி வரும் மலை போன்ற அலையைத் தடவி விட்டு, கடற்கரை மணலில் உலவி விட்டு, காற்றில் தன் சிறகை உலத்தி விட்டு, தாமரை போன்ற பெண்கள் முகத்தை நோக்கிச் செல்லும். அது வானில் முழுநிலவைத் தொடர்ந்து செல்லும் கருமேகக் காட்சி போல உள்ளது.

2. **குறிஞ்சி மணப்பதற்கான நிகழ்வுகளைக் குறிப்பிடுக.**

தீயில் இட்ட சந்தன மரக்குச்சிகள், அகில் இவற்றின் நறுமணமும், உலையில் இடப்பட்ட நெல்லரிசிச் சோற்றின் மணமும், காந்தள் மலரின் மணமும் எங்கும் தோய்ந்து கிடப்பதால் குறிஞ்சி நிலம் எங்கும் மணக்கின்றது.

Please Send Your Study Materials to our Email Id: padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.CBSEtips.in



## 4 நெடுவினா

1. **இராவண காவியத்தில் உங்களை ஈர்த்த இயற்கை எழில் காட்சிகளை விவரி.**

**குறிஞ்சி மணம்:**

தீயில் இட்ட சந்தன மரக்குச்சிகள், அகில் இவற்றின் நறுமணமும், உலையில் இடப்பட்ட நெல்லரிசிச் சோற்றின் மணமும், காந்தள் மலரின் மணமும் எங்கும் தோய்ந்து கிடப்பதால் குறிஞ்சி நிலம் எங்கும் மணக்கின்றது.

**பறவைகளின் அச்சம்:**

எருதின் கொம்பு போன்ற பாலைக்காயை நிலத்தில் போட்டு கோலினால் அடித்து வெடிக்குமாறு விளையாடினர். அவ்வோசையைக் கேட்ட பாலைநிலப் பறவைகள் அச்சத்துடன் பறந்தன.

**தும்பியின் காட்சி:**

தும்பியானது கரையை நெருங்கி வரும் மலை போன்ற அலையைத் தடவி விட்டு, கடற்கரை மணலில் உலவி விட்டு, காற்றில் தன் சிறகை உலத்தி விட்டு, தாமரை போன்ற பெண்கள் முகத்தை நோக்கிச் செல்லும். அது வானில் முழு நிலவைத் தொடர்ந்து செல்லும் கருமேகக் காட்சி போல உள்ளது.

## கூடுதல் வினாக்கள்

## 1 பலவுள் தெரிக

1. **இராவண காவியத்தின் பாட்டுடைத்தலைவன்**

அ) இராமன் ஆ) இராவணன்
இ) அனுமன் ஈ) இலக்குவன் **விடை: ஆ) இராவணன்**

2. **பொருத்துக**

| | | | |
|---|---|---|---|
| 1. | மைவனம் | - | அ) நாகணவாய்ப்பறவை |
| 2. | சிறை | - | ஆ) மலைநெல் |
| 3. | பூவை | - | இ) இறகு |
| 4. | பொலம் | - | ஈ) அழகு |

அ) 1-ஈ 2-ஆ 3-அ 4-இ ஆ) 1-ஆ 2-அ 3-ஈ 4-இ
இ) 1-அ 2-ஈ 3-ஆ 4-இ ஈ) 1-ஆ 2-இ 3-அ 4-ஈ

**விடை: ஈ) 1-ஆ 2-இ 3-அ 4-ஈ**

3. **பொருத்துக.**

| | | | |
|---|---|---|---|
| 1. | கல் | - | அ) வயல் |
| 2. | முருகு | - | ஆ) மலை |
| 3. | செறு | - | இ) தேன் |
| 4. | மல்லல் | - | ஈ) வளம் |

அ) 1-ஈ 2-ஆ 3-அ 4-இ ஆ) 1-ஆ 2-அ 3-ஈ 4-இ
இ) 1-அ 2-ஈ 3-ஆ 4-இ ஈ) 1-ஆ 2-இ 3-அ 4-ஈ

**விடை: ஈ) 1-ஆ 2-இ 3-அ 4-ஈ**

Please Send Your Study Materials to our Email Id: padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.CBSEtips.in



4. பொருத்துக.

1. துவரை - அ) வானம்
2. மரை - ஆ) தாமரை மலர்
3. விசும்பு - இ) நிலவு
4. மதியம் - ஈ) பவளம்

அ) 1-ஈ 2-ஆ 3-அ 4-இ ஆ) 1-ஆ 2-அ 3-ஈ 4-இ
இ) 1-அ 2-ஈ 3-ஆ 4-இ ஈ) 1-ஆ 2-இ 3-அ 4-ஈ

**விடை: அ) 1-ஈ 2-ஆ 3-அ 4- இ**

5. நிலத்திற்குரிய கருப்பொருளை பொருத்துக.

1. குறிஞ்சி - அ) மான்
2. முல்லை - ஆ) மயில்
3. பாலை - இ) தாமரை
4. மருதம் - ஈ) பருந்து

அ) 1-ஈ 2-ஆ 3-அ 4-இ ஆ) 1-ஆ 2-அ 3-ஈ 4-இ
இ) 1-அ 2-ஈ 3-ஆ 4-இ ஈ) 1-ஆ 2-இ 3-அ 4-ஈ

**விடை: ஆ) 1-ஆ 2-அ 3-ஈ 4-இ**

6. முல்லை நிலக்கருப்பொருளுடன் சாராத ஒன்று

அ) முதிரை ஆ) சாமை
இ) கேழ்வரகு ஈ) மலை நெல் **விடை: ஈ) மலை நெல்**

7. மான் _________ நிலத்திற்குரிய கருப்பொருள்.

அ) குறிஞ்சி ஆ) முல்லை
இ) மருதம் ஈ) பாலை **விடை: ஆ) முல்லை**

8. தந்தைப் பெரியாரின் வேண்டுகோளுக்கிணங்க புலவர் குழந்தை உரை எழுதிய நூல் எது?

அ) திருக்குறள் ஆ) இராவண காவியம்
இ) யாப்பதிகாரம் ஈ) தொடையதிகாரம் **விடை: அ) திருக்குறள்**

9. சிறுவர்கள் விளையாடிய குளத்தில் பூத்திருந்தவை

அ) தாமரை ஆ) காஞ்சி
இ) வஞ்சி ஈ) குறிஞ்சி **விடை: அ) தாமரை**

10. நாயின் இளமைப்பெயர்

அ) குருளை ஆ) பிள்ளை
இ) குட்டி ஈ) கன்று **விடை: இ) குட்டி**

11. இராவண காவியம் குறிஞ்சி நிலப் பாடலில் இடம் பெறும் பறவைகள்

அ) கிளி, மயில் ஆ) குயில், புறா
இ) கோழி, வாத்து ஈ) நாரை, கொக்கு **விடை: அ) கிளி, மயில்**

12. முல்லை நில மக்கள்

அ) குறவர் ஆ) ஆயர்
இ) உழவர் ஈ) பரதவர் **விடை: ஆ) ஆயர்**

Please Send Your Study Materials to our Email Id: padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.CBSEtips.in



13. நெய்தல் நிலத்தவர்
அ) குறவர் ஆ) ஆயர்
இ) உழவர் ஈ) பரதவர் **விடை: ஈ) பரதவர்**

14. இராவண காவியத்தோடு தொடர்பில்லாத ஒன்று
அ) இராவணன் ஆ) புலவர் குழந்தை
இ) 5 காண்டம் ஈ) சடையப்ப வள்ளல் **விடை: ஈ) சடையப்ப வள்ளல்**

15. பாடப்பகுதியிலுள்ள இராவண காவியக் காண்டம் யாது?
அ) தமிழகக் காண்டம் ஆ) இலங்கைக் காண்டம்
இ) விந்தக் காண்டம் ஈ) பழிபுரிக் காண்டம் **விடை: அ) தமிழகக் காண்டம்**

16. ''முல்லைஅம் புறவில் தோன்று
முருகுகான் யாறும் பாயும்'' - இதில் 'தேன்' என்னும் பொருள் தரும் சொல் யாது?
அ) முல்லை ஆ) அம்புற
இ) முருகு ஈ) பாயும் **விடை: இ) முருகு**

17. தேன், மணம், அழகு என்னும் பொருள் தரும் சொல்
அ) முல்லை ஆ) அம்புற
இ) முருகு ஈ) பாயும் **விடை: இ) முருகு**

18. கரிக்குருத்து என்னும் சொல்லின் பொருள்
அ) யானைத்தந்தம் ஆ) தென்னங்குருத்து
இ) பனைக்குருத்து ஈ) கரிக்கோல் **விடை: அ) யானைத்தந்தம்**

19. ''முசிபட ஒழுகும் தூய
முறையினை அறிவார் போல'' - இத்தொடரில் இடம்பெறும் நயம்
அ) எதுகை ஆ) மோனை
இ) இயைபு ஈ) முரண் **விடை: ஆ) மோனை**

20. ''முல்லைஅம் புறவில் தோன்று
முருகுகான் யாறும் பாயும்'' - இத்தொடரில் இடம்பெறும் நயம்
அ) எதுகை ஆ) மோனை
இ) இயைபு ஈ) முரண் **விடை: ஆ) மோனை**

21. போரடிக்கும் குரல் கேட்டு அஞ்சி ஓடுவது
அ) கலைமான் ஆ) செந்நாய்
இ) உழைமான் ஈ) மயில் **விடை: இ) உழைமான்**

22. குருளைக்குத் தான் துன்புற்று தன்னுடைய நிழலைத் தந்து நின்றது
அ) கலைமான் ஆ) செந்நாய்
இ) உழைமான் ஈ) மயில் **விடை: ஆ) செந்நாய்**

## கோடிட்ட இடத்தை நிரப்புக.

1. இராமாயணத்தில் எதிர்நிலை மாந்தராகப் படைக்கப்பட்ட இராவணன் முதன்மை நாயகனாகக் கொண்டு அமைக்கப்பட்டது ___________. விடை: இராவண காவியம்

Please Send Your Study Materials to our Email Id: padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.CBSEtips.in



2. 20 ஆம் நூற்றாண்டில் தோன்றிய பெருங்காப்பியம் __________.

விடை: இராவண காவியம்

3. இராவண காவிய காப்பியத்தலைவன் __________. விடை: இராவணன்

4. இராவண காவியம், அரசியரங்கம், நெருஞ்சிப்பழம், யாப்பதிகாரம், தொடையதிகாரம், இன்னூல் உள்ளிட்ட 30 க்கும் மேலான நூல்கள் எழுதியவர் __________.

விடை: புலவர் குழந்தை

5. தந்தைப் பெரியாரின் வேண்டுகோளுக்கு இணங்க 25 நாள்களில் திருக்குறளுக்கு உரை எழுதியவர் __________. விடை: புலவர் குழந்தை

6. ஐவகை நிலங்கள் பற்றி இடம்பெறும் இராவண காவியக்காண்டம் __________.

விடை: தமிழகக்காண்டம்

7. அலையினைத் தடவி, மணலிடை உலவி, காற்றிலே தன் சிறகினை உலர்த்துவது ________.

விடை: தும்பி

8. நெய்தல் நிலத்தவர் கடற்கரையில் கொண்டு வந்து குவிப்பவை __________, __________.

விடை: பவளங்கள், முத்துக்கள்

9. மருத நிலத்தில் நெற்பயிரினைக் காக்கும் வகையில் வளர்ந்து நின்றவை __________.

விடை: கரும்பு

10. முல்லை நிலத்தில் முக்கனியும் தேனும் சேகரித்தவர் __________.

விடை: ஆயர்

## 2 குறுவினா

**1. இராவண காவியம் - குறிப்பு வரைக.**

◈ 20 ஆம் நூற்றாண்டில் தோன்றிய பெருங்காப்பியம் இராவண காவியம்.

◈ இராவண காவியம் தமிழகக் காண்டம், இலங்கைக் காண்டம், விந்தக் காண்டம், பழிபுரிக் காண்டம், போர்க்காண்டம் முதலிய 5 காண்டங்களையும், 3100 பாடல்களையும் கொண்டது.

◈ இயற்றியவர்: புலவர் குழந்தை.

◈ இராமாயணத்தில் எதிர்நிலை மாந்தராகப் படைக்கப்பட்ட இராவணன் முதன்மை நாயகனாகக் கொண்டு அமைக்கப்பட்டது இராவண காவியம்.

**2. இராவண காவிய காப்பியத்தலைவன் யார்?**

இராவணன்.

**3. முக்குழல் - பொருள் கூறுக.**

கொன்றை, ஆம்பல், மூங்கில் ஆகியவற்றால் ஆன குழல்கள்.

**4. மான்கள் எதனைக் கேட்டு அஞ்சி ஓடும்?**

முல்லை நில மக்கள் கதிரடிக்கும் ஓசை கேட்டு மான்கள் அஞ்சி ஓடும்.

**5. ஐவகை நிலங்கள் யாவை?**

குறிஞ்சி, முல்லை, மருதம், நெய்தல், பாலை.

Please Send Your Study Materials to our Email Id: padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.CBSEtips.in



6. **இராவண காவியத்தில் நும் செய்யுட்பகுதியில் இடம்பெறும் குறிஞ்சி நிலக் கருப்பொருட்களை எழுதுக.**

மலை நெல், குறிஞ்சிப்பறை, கிளி, குரங்கு, காந்தள், சந்தன மரம்.

7. **இராவண காவியத்தில் நும் செய்யுட்பகுதியில் இடம்பெறும் முல்லை நிலக் கருப்பொருட்களை எழுதுக.**

நாகணவாய்ப்பறவை, குயில், ஆயர், தேன், மான், முதிரை, சாமை, கேழ்வரகு, குதிரை வாலி நெல்.

8. **இராவண காவியத்தில் நும் செய்யுட்பகுதியில் இடம்பெறும் பாலை நிலக் கருப்பொருட்களை எழுதுக.**

செந்நாய், மராமலர், பருந்து.

9. **இராவண காவியத்தில் நும் செய்யுட்பகுதியில் இடம்பெறும் மருதம் நிலக் கருப்பொருட்களை எழுதுக.**

கரும்பு, காஞ்சி மலர், வஞ்சி மலர், தாமரை, காஞ்சி மரம்.

10. **''கசிபட ஒளிமுத்தோடு கரையினில் குவிப்பார்'' இதில் கரையினில் குவித்தவர் யார்?**

நெய்தல் நிலத்தவர் (பரதவர்).

11. **முல்லை நிலத்தில் எவைப் பாவிசைத்துப் பாடின?**

நாகணவாய்ப் பறவைகள், குயில்கள், வண்டுகள்.

12. **''பாஇசை பாடமுப் பழமும் தேனும்தந்**
**தேஇசை பெறும்கடறு இடையர் முக்குழல்'' இவ்வடிகளில் உள்ள 'முப்பழம்', 'முக்குழல்' ஆகியவற்றை விரித்தெழுதுக**

◈ முப்பழம் - மா, பலா, வாழை.

◈ முக்குழல் - கொன்றை, ஆம்பல், மூங்கில்.

13. **பாலை நிலத்தின் வெயிலின் கொடுமையைக் கூறுக**

◈ வெயிலின் வெப்பம் தாங்காது செந்நாய்க்குட்டிகளின் வாய் உலர்ந்து குழறியது.

◈ தாய் நாய் வருந்தி தான் வெயிலில் நின்று குட்டியை இளைப்பாறச் செய்தது.

14. **இராவண காவியம் குறித்துப் பேரறிஞர் அண்ணா கூறுவன யாவை?**

இராவண காவியம் காலத்தின் விளைவு, ஆராய்ச்சியின் அறிகுறி, புரட்சிப்பொறி, உண்மையை உணர வைக்கும் உன்னத நூல் என்று பேரறிஞர் அண்ணா கூறுகிறார்.

15. **இராவண காவியம் குறிஞ்சி நிலப் பாடலில் இடம் பெறும் அஃறிணை உயிர்கள் யாவை?**

மயில், கிளி, குரங்கினம்.

16. **நெய்தல் நிலத்தவர் கடற்கரையில் கொண்டு வந்து குவிப்பவை எவை?**

பவளங்கள், முத்துக்கள்.

17. **நெய்தல் நிலத் தும்பியின் செயல் யாது?**

◈ நெய்தல் நிலத் தும்பி அலையினைத் தடவி, மணலிடை உலவி, காற்றிலே தன் சிறகினை உலர்த்தும்.

◈ பெண்களின் முகத்தினை நோக்கித் தொடர்ந்து செல்லும்.

Please Send Your Study Materials to our Email Id: padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.CBSEtips.in



## 3 சிறுவினா

1. **புலவர் குழந்தை குறிப்பு வரைக.**

◈ பிறப்பு : 1.7.1906

◈ பணி : ஆசிரியராகப் பணியைத் தொடங்கி பவானி நகரில் உயர்நிலைப் பள்ளியில் தலைமையாசிரியராகவும் பணியாற்றினார்.

◈ படைப்புகள் : இராவண காவியம், அரசியரங்கம், நெருஞ்சிப்பழம், யாப்பதிகாரம், தொடையதிகாரம், இன்னூல் உள்ளிட்ட 30 க்கும் மேலான நூல்கள்.

◈ சிறப்பு : தந்தைப் பெரியாரின் வேண்டுகோளுக்கு இணங்க 25 நாள்களில் திருக்குறளுக்கு உரை எழுதினார்.

2. **இராவண காவியம் குறிப்பிடும் குறிஞ்சி நில வருணணையை எழுதுக.**

◈ அருவிகள் பறையாய் ஒலிக்கும்; பைங்கிளி தமிழிசை பாடும்; பொன் மயில் சிறகு விரித்து ஆடும். இக்காட்சியினை பூக்கள் மலர்ந்த மரக்கிளையின் மீது நின்று குரங்கினங்கள் மிரட்சியுடன் பார்க்கும்.

◈ தீயில் இட்ட சந்தன மரக்குச்சிகள், அகில் இவற்றின் நறுமணமும், உலையில் இடப்பட்ட நெல்லரிசிச் சோற்றின் மணமும், காந்தள் மலரின் மணமும் எங்கும் தோய்ந்து கிடப்பதால் குறிஞ்சி நிலம் எங்கும் மணக்கின்றது.

3. **இராவண காவியம் குறிப்பிடும் பாலை நில வருணணையை எழுதுக.**

◈ வெயிலின் வெப்பம் தாங்காது செந்நாய்க்குட்டிகளின் வாய் உலர்ந்து குழறியது.

◈ தாய் நாய் வருந்தி தான் வெயிலில் நின்று குட்டியை இளைப்பாறச் செய்தது.

◈ எருதின் கொம்பு போன்ற பாலைக் காயை நிலத்தில் போட்டு கோலினால் அடித்து வெடிக்குமாறு விளையாடினர். அவ்வோசையைக் கேட்ட பாலை நிலப் பறவைகள் அச்சத்துடன் பறந்தன.

4. **மருத நில சிறுவர்களின் செயல் யாது?**

◈ சிறுவர்கள் தாமரைப் பூத்திருந்த குளத்தில் நீராடினர்.

◈ அக்குளத்தில் நீந்தும் யானையின் தந்தங்களை அளந்து அதன் வடிவஅழகு கண்டு மகிழ்ந்தனர்.

◈ சிறுகழல் அணிந்த சிறுவர் வைக்கோற் போர் குலுங்கிடும்படி ஏறி, தென்னை இளநீர்க் காய்களைப் பறித்தனர்.

◈ பின்னர்க் காஞ்சி மர நிழலில் அமர்ந்து இளநீரை அருந்தினர்.

## கற்பவை கற்றபின்... பக்கம்: 160

1. **ஐவகை நிலங்களில் உங்கள் மாவட்டம் அமைந்த நிலவகைப் பற்றியும் அதன் கவின்மிகு காட்சியையும் கட்டுரையாக்குக.**

எங்கள் ஊர் : ஈரோடு

அமைந்த நிலவகை : மருதம்

**முன்னுரை:**

எங்கள் ஊர் ஈரோடு. எங்கள் ஊரைச் சுற்றி வயல்கள் மிகுந்து இருப்பதால் எங்கள் ஊர் அமைந்த நிலவகை மருதம் ஆகும். மருதம் என்பது வயலும் வயல் சார்ந்த பகுதியாகும்.

Please Send Your Study Materials to our Email Id: padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.CBSEtips.in



**கவின்மிகு காட்சிகள்:**

◈ காவிரி நதி பாயும் புண்ணிய பூமி ஈரோடு.
◈ ஊருக்குள் நுழையும் முன்பே வயல்களில் தலைசாய்ந்த முற்றிய நெற்கதிர்கள் தலைகுனிந்து வரவேற்கும் வரவேற்பாளர்கள் போல நிற்கின்றன.
◈ விழாவில் சிரித்த முகத்துடன் அன்போடு வரவேற்க நிற்கும் மகளிர் போன்று சாலை எங்கும் மரங்கள்.
◈ மண்மணம் மணக்கும் மஞ்சள் மங்கலமாக நிற்கும் வயல்களில்.

**சிறப்புகள்:**

◈ கைத்தறி, விசைத்தறி ஜவுளிப் பொருட்கள் மற்றும் ஆயத்த ஆடைகள் தயாரிப்பிற்குப் புகழ்பெற்றது. எனவே கைத்தறி நகரம் என்று அழைக்கப்படுகிறது.
◈ ஜவுளி நகரம், மஞ்சள் நகரம் என்னும் சிறப்பினைப் பெற்றது.
◈ பெரியார் நினைவிடம், வெள்ளோடு பறவைகள் சரணாலயம், திண்டல் முருகன் கோயில், பிரப் நினைவு தேவாலயம், பெரிய பள்ளிவாசல் ஆகியவை உள்ளன.
◈ தந்தைப் பெரியார், கணிதமேதை சீனிவாச ராமானுஜம், தீரன் சின்னமலை ஆகியோர் ஈரோட்டில் பிறந்தவர்கள்.

**முடிவுரை:**

அனைத்து மதத்தினரும் ஒற்றுமையாக வாழும் ஈரநெஞ்சம் கொண்டது ஈரோடு. இயற்கை எழில் கொஞ்சம் பசுமை நிறைந்த புண்ணிய பூமி எங்கள் ஊர்.

2. **இப்பாடப்பகுதியில் உங்களை ஈர்த்த கவிதைக் காட்சிகளைக் கவிதை வடிக்க.**

**குறிஞ்சி**

அருவிகள் இசைக்கருவிகளை இசைக்க
பைங்கிளிகள் பைந்தமிழில் பாடல் பாட
அது கேட்டு மயிலினங்கள் சிறகை விரித்தாட
மரக்கிளை மேல் அமர்ந்திருந்த குரங்குகள்
பெரும் ஆச்சர்யத்துடன் நோக்கும்
துதீயில் இட்ட சந்தனம் அகில் நறுமணம் ஒருபுறம்
உலையிலுள்ள மலைநெல்லரிசிச் சோற்றின் மணம் மறுபுறம்
இவற்றோடு காந்தள் மணமும் ஒருசேர
குறிஞ்சிப் பொருட்கள் எல்லாம் மணந்தன.

3. **வைக்கோர் போர், நெற்கதிர், போரடிக்கும் களம் போன்ற உழவுத் தொழிலோடு தொடர்புடையவற்றின் விளக்கங்களைத் தொகுத்து வகுப்பில் கலந்துரையாடுக.**

**மாணவர்களே! இராவண காவியத்தில் ஐவகை நில வளங்களைப் பற்றிக் கற்கும் போது, வைக்கோற் போர், நெற்கதிர் போரடிக்கும் களம் போன்ற வார்த்தைகளைக் கற்றீர்கள் அல்லவா! அதன் விளக்கங்கள் தெரிந்து கொள்ள ஒரு கலந்துரையாடல்**

Please Send Your Study Materials to our Email Id: padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.CBSEtips.in



**கலந்துரையாடுபவர்கள் :** ஆசிரியா், புகழேந்தி, சுதா.

ஐயா : நெற்குதிர் பற்றிச் சொல்லுங்கள் ஐயா!

ஆசி : கூறுகிறேன் புகழேந்தி.

நெல் முதலிய தானியங்களைச் சேகரிக்கும் கூடு. பெரிய அளவில் இருக்கும் குதிரில் தானியத்தைச் சேமிப்பர். சிறிய அளவில் உள்ளவை விதை தானியங்களைச் சேகரித்து வைக்கவும் உதவும்.

புகழேந்தி : ஐயா! குதிர் பற்றி என் தாத்தா ஏதோ பழமொழி சொல்வாரே ............

ஆசிரியர் : ஆமாடா .........“எங்கப்பன் குதிருக்குள் இல்லை”. “ஐயா!” கதிர் போல அம்மா குதிர் போல ” போன்ற பழமொழிகள் உள்ளன.

சுதா : ஐயா போர் அடித்தல் என்றால் என்ன ஐயா!

ஆசிரியர் : அறுவடை செய்த நெல்லையும், வைக்கோலையும் பிரிக்கும் செயல். அகன்ற களத்திற்கு கொண்டு வந்து அடிப்பர். முதலில் அடிப்பதை தலையடி என்பர். பின் வைக்கோலைப் பரப்பி, மாட்டைச் சுற்றி வரச் செய்தும் நெல்லையும், வைக்கோலையும் தனித்தனியே பிரித்தெடுத்தலே போரடித்தல் ஆகும்.

சுதா : ஐயா வைக்கோற்போர் பற்றிச் சொல்லுங்களேன்.

ஆசிரியர் : நெல்லைப் பிரித்து எடுத்த பின் அதன் தாளை உலர்த்தி சேகரிப்பது வைக்கோல். அது கால்நடைகளுக்குக் குறிப்பாக மாடுகளுக்கு உணவாகும். வைக்கோலை ஈரம்படாமல் உலரவைத்து. அதனை அழகாக அடுக்கி குவித்து, காற்றில் பறக்காமல் இருக்க, வைக்கோலாலே பின்னப்பட்ட வைக்கோல் பிறியைக் கொண்டு சுற்றி வைத்துப் பாதுகாப்பதே வைக்கோற் போர் ஆகும்.

புகழேந்தி

சுதா : நன்றி ஐயா, எங்கள் தலைமுறைக்குத் தெரியாத செய்திகள் இவை. விளக்கமாக புரிய வைத்து விட்டீர்கள் ஐயா!

●●✧✧✧●●

Please Send Your Study Materials to our Email Id: padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.CBSEtips.in



# இயல் 6

## கவிதைப் பேழை

# நாச்சியார் திருமொழி

– ஆண்டாள்

| | | |
|---|---|---|
| ஆசிரியர் | - | ஆண்டாள் |
| ஊர் | - | ஸ்ரீவில்லிப்புத்தூர் |
| காலம் | - | கி.பி. 9 |
| பிறப்பு | - | 1.7.1906 |
| பாடியவை | - | திருப்பாவை, நாச்சியார் திருமொழி. |
| சிறப்பு | - | 'சூடிக் கொடுத்த சுடர்க்கொடி' என்றதாலும், இறைவனை ஆண்டதாலும் ஆண்டாள் எனப்பட்டார். இறைவனே ஆண்டதால் நாச்சியார் எனப்பட்டார். பெரியாழ்வாரின் வளர்ப்பு மகள், மகள் அம்சமாகப் பிறந்தவள். |

## சொற்பொருள்

| | | |
|---|---|---|
| தீபம் | - | விளக்கு |
| சதிர் | - | நடனம் |
| தாமம் | - | மாலை |

## இலக்கணக்குறிப்பு

| | | |
|---|---|---|
| கொட்ட | - | வினையெச்சம் |
| முத்துடைத்தாமம் | - | இரண்டாம் வேற்றுமைத்தொகை |

## பகுபத உறுப்பிலக்கணம்

**தொட்டு - தொடு(தொட்டு) + உ**

தொடு - பகுதி, தொட்டு என ஒற்று இரட்டித்து இறந்த காலம் காட்டியது விகாரம்

உ - வினையெச்ச விகுதி

**கண்டேன் - காண்(கண்) + ட் +ஏன்**

காண் - பகுதி (கண்) எனக்குறுகியது விகாரம்

ட் - இறந்தகால இடைநிலை

ஏன் - தன்மை ஒருமை வினைமுற்று விகுதி

Please Send Your Study Materials to our Email Id: padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.CBSEtips.in



## பாடநூல் மதிப்பீட்டு வினா

### 1 பலவுள் தெரிக

1. ‘அதிரப் புகுதக் கனாக் கண்டேன்’ - யார் கனவில் யார் அதிரப் புகுந்தார்?

அ) கண்ணனின் கனவில் ஆண்டாள் புகுந்தாள்

ஆ) தோழியின் கனவில் ஆண்டாள் புகுந்தாள்

இ) ஆண்டாளின் கனவில் தோழி புகுந்தாள்

ஈ) ஆண்டாளின் கனவில் கண்ணன் புகுந்தான்

**விடை: ஈ) ஆண்டாளின் கனவில் கண்ணன் புகுந்தான்**

### 2 குறுவினா

1. கண்ணன் புகுந்த பந்தல் எவ்வாறு இருந்தது?

இசைக்கருவிகள் மற்றும் சங்குகள் முழங்க கண்ணன் புகுந்த பந்தலில் முத்துகளையுடைய மாலைகள் தொங்கவிடப்பட்டு இருந்தது.

### 3 சிறுவினா

1. ஆண்டாளின் கனவுக் காட்சிகளை எழுதுக

◈ இளம்பெண்கள் கைகளில் கதிரவன் போன்ற ஒளி உடைய விளக்கையும், கலசத்தையும் ஏந்தி வந்து அழைக்க, வடமதுரை மன்னன் கண்ணன் பாதுகை அணிந்து நடந்து வருகிறார்.

◈ இசைக்கருவிகள் மற்றும் சங்குகள் முழங்க, அத்தை மகனும், ‘மது’ என்ற அரக்கனை அழித்தவனுமாகிய கண்ணன் புகுந்த பந்தலில் முத்துகளையுடைய மாலைகள் தொங்கவிடப்பட்டு இருந்தது. அதன்கீழ் என்னைத் திருமணம் செய்து கொள்கின்றான்.

## கூடுதல் வினாக்கள்

### 1 பலவுள் தெரிக

1. __________ இலக்கியம் உணர்ச்சி நிறைந்த பாடல்களை உள்ளடக்கியது.

அ) சங்க ஆ) அற

இ) பக்தி ஈ) மறுமலர்ச்சி **விடை: இ) பக்தி**

2. ஆண்டாள் காதல் கொண்டது __________.

அ) திருமால் ஆ) ஈசன்

இ) பிரம்மன் ஈ) முருகன் **விடை: அ) திருமால்**

3. வடமதுரையை ஆளும் மன்னன் __________.

அ) கண்ணன் ஆ) ஈசன்

இ) பிரம்மன் ஈ) முருகன் **விடை: அ) கண்ணன்**

Please Send Your Study Materials to our Email Id: padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.CBSEtips.in



4. மது என்னும் அரக்கனை அழித்தவர்

அ) கண்ணன் ஆ) ஈசன்

இ) பிரம்மன் ஈ) முருகன் **விடை: அ) கண்ணன்**

5. பொருந்தாதவற்றைக் குறிப்பிடுக.

அ) பன்னிரு ஆழ்வார்களுள் ஒருவர் ஆண்டாள்.

ஆ) திருப்பாவை, நாச்சியார் திருமொழி ஆகியவற்றை இயற்றியுள்ளார்.

இ) பாமாலையோடு தான் அணிந்த பூமாலையும் சூட்டியதால் சூடிக்கொடுத்த சுடர்க்கொடி என அழைக்கப்பட்டார்.

ஈ) பன்னிருதிருமுறைகள் தொகுப்பில் ஆண்டாளின் பாடல்கள் உள்ளன.

**விடை: ஈ) பன்னிருதிருமுறைகள் தொகுப்பில் ஆண்டாளின் பாடல்கள் உள்ளன.**

6. பன்னிரு ஆழ்வார்களில் ஒரே பெண் ஆழ்வார்

அ) காரைக்காலம்மையார் ஆ) ஆண்டாள்

இ) குலசேகர ஆழ்வார் ஈ) திருமங்கையாழ்வார் **விடை: ஆ) ஆண்டாள்**

7. ஆழ்வார்கள் பாடிய பாடல் தொகுப்பு

அ) நாலாயிர திவ்யப் பிரபந்தம் ஆ) பன்னிருதிருமுறைகள்

இ) நாச்சியார் திருமொழி ஈ) தேவாரம்

**விடை: அ) நாலாயிர திவ்யப் பிரபந்தம்**

8. பொருத்துக.

1. தீபம் - அ) நடனம்
2. சதிர் - ஆ) விளக்கு
3. தாமம் - இ) கண்ணன்
4. மதுசூதனன் - ஈ) மாலை

அ) 1-ஈ, 2-ஆ, 3-அ, 4-இ ஆ) 1-ஆ, 2-அ, 3-ஈ, 4-இ

இ) 1-அ, 2-ஈ, 3-ஆ, 4-இ ஈ) 1-ஆ, 2-இ, 3-அ, 4-ஈ

**விடை: ஆ) 1-ஆ, 2-அ, 3-ஈ, 4-இ**

9. மதுரையார் மன்னன்

அ) கண்ணன் ஆ) ஈசன்

இ) பிரம்மன் ஈ) முருகன் **விடை: அ) கண்ணன்**

10. ''கைத்தலம் பற்றக் கனாக்கண்டேன் தோழீ'' இவ்வடியில் கைத்தலம் பற்றியவர் யார்? கனாக் கண்டவர் யார்?

அ) கைத்தலம் பற்றியவர் - கண்ணன்; கனாக் கண்டவர் - ஆண்டாள்

ஆ) கைத்தலம் பற்றியவர் - ஆண்டாள்; கனாக் கண்டவர் - கண்ணன்

இ) கைத்தலம் பற்றியவர் - தோழி; கனாக் கண்டவர் - கண்ணன்

ஈ) கைத்தலம் பற்றியவர் - கண்ணன்; கனாக் கண்டவர் - தோழி

**விடை: அ) கைத்தலம் பற்றியவர் - கண்ணன்; கனாக் கண்டவர் - ஆண்டாள்**

Please Send Your Study Materials to our Email Id: padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.CBSEtips.in



11. பந்தலில் தொங்கவிடப்பட்டிருந்தது
அ) வைரம் ஆ) மாணிக்கம்
இ) முத்து ஈ) பவளம் **விடை: இ) முத்து**

12. ஆண்டாள் தன் கனவை யாரிடம் சொன்னாள்?
அ) கண்ணன் ஆ) தோழி
இ) பெரியாழ்வார் ஈ) அம்மா **விடை: ஆ) தோழி**

13. கதிரொளி தீபம் கலசம் உடனேந்தி - இவ்வடிகளில் அமைந்துள்ள நயம்
அ) எதுகை ஆ) மோனை
இ) இயைபு ஈ) முரண் **விடை: அ) எதுகை**

**கோடிட்ட இடத்தை நிரப்புக.**

1. திருமாலை வழிபட்டுச் சிறப்பு நிலை எய்தியவர்கள் __________. **விடை: ஆழ்வார்கள்**
2. ஆழ்வார்கள் __________ ஆவர். **விடை: பன்னிருவர்**
3. சூடிக்கொடுத்த சுடர்க்கொடி __________. **விடை: ஆண்டாள்**
4. பெரியாழ்வாரின் வளர்ப்பு மகள் __________. **விடை: ஆண்டாள்**
5. ஆழ்வார்கள் பாடிய பாடல் தொகுப்பு __________. **விடை: நாலாயிர திவ்யப் பிரபந்தம்**
6. ஆண்டாள் பாடியவை __________, __________ **விடை: திருப்பாவை, நாச்சியார் திருமொழி**
7. நாச்சியார் திருமொழியில் உள்ள மொத்தப் பாடல்களின் எண்ணிக்கை __________. **விடை: 140**
8. பெண்ணின் திருமண வயது __________. **விடை: 18**
9. ஆணின் திருமண வயது __________. **விடை: 21**
10. அத்தை மகன் __________. **விடை: கண்ணன்**

## 2 குறுவினா

1. **ஆண்டாள் குறிப்பு வரைக.**
   - பன்னிரு ஆழ்வார்களுள் ஒருவர் ஆண்டாள்.
   - திருப்பாவை, நாச்சியார் திருமொழி ஆகியவற்றை இயற்றியுள்ளார்.
   - பாமாலையோடு தான் அணிந்த பூமாலையும் சூட்டியதால் சூடிக்கொடுத்த சுடர்க்கொடி என அழைக்கப்பட்டார்.
   - பெரியாழ்வாரின் வளர்ப்பு மகள் என்பர்.

2. **நாச்சியார் திருமொழி - குறிப்பு வரைக.**
   - நாச்சியார் திருமொழி ஆண்டாள் பாடியது.
   - 140 பாடல்களைக் கொண்டது.
   - நாலாயிர திவ்யப் பிரபந்தத்தில் இடம்பெற்றுள்ளது.

Please Send Your Study Materials to our Email Id: padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.CBSEtips.in



3. **பக்தி இலக்கியம் பற்றிக் குறிப்பிடுக.**

◈ பக்தி இலக்கியம் உணர்ச்சி மிகுந்த பாடல்களை உள்ளடக்கியது.

◈ இறையோடு ஒன்றுதலும் அதன்பால் அனைவரையும் சரணடையச் செய்வதும் பக்தி இலக்கியத்தின் பணி.

## கற்பவை கற்றபின்...

பக்கம்: 162

1. **திருப்பாவையில் இடம்பெற்றுள்ள தொடை நயமிக்க பாடல்களுள் எவையேனும் இரண்டினை இணையத்திலோ நூலகத்திலோ இருந்து திரட்டி வகுப்பறையில் பாடுக.**

பாடல் -17

''அம்பரமே, தண்ணீரே, சோறே அறஞ்செய்யும்
எம்பெருமான்! நந்தகோ பாலா! எழுந்திராய்;
கொம்பனார்க் கெல்லாம் கொழுந்தே! குலவிளக்கே!
எம்பெருமாட்டி யசோதாய்! அறிவுறாய்;
அம்பரம் ஊடறுத் தோங்கி உலகளந்த
உம்பர்கோ மானே! உறங்காது எழுந்திராய்;
செம்பொற் கழலடிச் செல்வா! பலதேவா!
உம்பியும் நீயும் உறங்கேலோ ரெம்பாவாய்.

பாடல் - 20

முப்பத்து மூவர் அமரர்க்கு முன்சென்று
கப்பம் தவிர்க்கும் கலியே! துயிலெழாய்
செப்பம் உடையாய்! திறனுடையாய்! செற்றார்க்கு
வெப்பம் கொடுக்கும் விமலா துயிலெலாய்

2. **கண்ணனைப் பல்வேறு உறவுநிலைகளில் வைத்து பாரதியார் பாடியவற்றுள் உங்களைக் கவர்ந்த பாடல்களைக் குறித்துக் கலந்துரையாடுக.**

**கண்ணன் - என் தந்தை**

''நாவு துணிகுவ தில்லை - உண்மை
நாமத்தை வெளிப்பட உரைப்பதற்கே,
யாவருந் தெரிந்திடவே - எங்கள்
ஈசனென்றும் கண்ணனென்றும்
சொல்வதுண்டு
மூவகைப் போர் புனைந்தே - அவன்
முகமறியாதவர் சண்டைகள் செய்வார்;
தேவர் குலத்தவன் என்றே - அவன்
செய்திதெரி யாதவர் சிலருரைப்பார்.'

**கண்ணன் என் சீடன்**

''சீடனா வந்தெனைச் சேர்ந்தனன், தெய்வமே
பேதையேன் அவ்வலைப் பின்னலில் வீழ்ந்து
பட்டனதொல்லை பலபெரும் பாரதம்;

Please Send Your Study Materials to our Email Id: padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.CBSEtips.in



உளத்தினை வென்றிடேன்; உலகினை
வெல்லவும்,
தானகஞ்சுடாதேன் பிறர்தமைத் தானும்
சிறமையி னகற்றிச் சிவத்திலே நிறுத்தவும்,
தன்னுள்ளே தெளிவும் சலிப்பிலா மகிழ்ச்சியும்
உற்றிடேன்; இந்தச் சகத்திலே யுள்ள
மாந்தர்க் குற்ற துயரெலாம் மாற்றி
இன்பந் திருத்தவும் எண்ணிய பிழைக்கெனைத்......'''

3. **சங்க காலத்திலிருந்து தற்காலம் வரையுள்ள பெண் புலவர்களின் சில கவிதைகளைக் கொண்டு ஒரு கவிதைத் தொகுப்பு உருவாக்குக.**

**அள்ளூர் நன்முல்லையார் பாடல் : புறநானூறு பாடல் - 306**

''களிறுபொரக் கலங்கு, கழல்முள் வேலி,
அரிதுஉண் கூவல், அங்குடிச் சீறூர்
ஒலிமென் கூந்தல் ஒண்ணுதல் அரிவை
நடுகல் கைதொழுது பரவும், ஒடியாது;
விருந்தெதிர் பெறுகதில் யானோர் என்ஐயும்
மோ------வேந்தனொடு
நாடுதரு விழுப்பகை எய்துக எனவே''

**ஔவையார் : குறுந்தொகை பாடல - 23**

''அகவன் மகளே! அகவன் மகளே!
மனவுக் கோப்பு அன்ன நல்நெடும் கூந்தல்
அகவன் மகளே! பாடுக பாட்டே!
இன்னும் பாடுக பாட்டே, அவர்
நல்நெடும் குன்றம் பாடிய பாட்டே.''

**சல்மாவின் கவிதை**

தன் வழி தவறி
அறைக்குள் சிக்கிய
பட்டாம் பூச்சி துவக்கிற்று
தன் தேடலை.........
என்றேனும்
கதவு திறந்து வழி
கிடைக்குமெனில் அது
பறந்துதான் போகும்
வர்ணங்கள் இல்லையென்றாலும்.........

**உமா மகேஸ்வரி**

வெளிவாசல் வழியே
சலித்த மதியம்
சாக்கடை நீரருந்தும் குருவி
உதிர்கிற மென்மையும்
உடைபடாக் கடினமுமாய்
விசித்திரமாய் உடைந்த
மௌனம்.........

Please Send Your Study Materials to our Email Id: padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.CBSEtips.in



# இயல் 6

விரிவானம்

## செய்தி

–தி. ஜானகிராமன்

| | | |
|---|---|---|
| ஆசிரியர் | - | தி. ஜானகிராமன் |
| ஊர் | - | திருவாரூர் மாவட்டம் - மன்னார்குடியில். |
| காலம் | - | 28.2.1921 - 18.11.1982 |
| பணி | - | பள்ளி ஆசிரியர், வானொலியில் கல்வி ஒலிபரப்பு அமைப்பாளர். |
| படைப்புகள் | - | மோகமுள், மரப்பசு, அம்மா வந்தாள், யாதும் ஊரே, பாயாசம். |
| சிறப்பு | - | 'சக்தி வைத்தியம்' சிறுகதைத் தொகுப்பு சாகித்ய அகெதமி விருது பெற்றது. |

### பாடநூல் மதிப்பீட்டு வினா

### 1 நெடுவினா

1. **இசைக்கு நாடு, மொழி, இனம் தேவையில்லை என்பதைச் 'செய்தி'க் கதையின் மூலம் விளக்குக.**

**முன்னுரை:**

செய்தி என்னும் சிறுகதையின் ஆசிரியர் தி.ஜானகிராமன். இக்கதை 'சிவப்பு ரிக்ஷா' என்ற சிறுகதைத் தொகுப்பில் இடம் பெற்றுள்ளது. இசைக்கு நாடு, மொழி, இனம் தேவையில்லை என்பதை இக்கதையில் காண்போம்.

**வித்துவான்:**

இசைக்கு மயங்காத உயிர்கள் இல்லை. அத்தகைய இசைக்குக் காரணம் இசைக் கருவிகள். தமிழக இசையில் தன்முத்திரை பதித்தது நாதஸ்வரம். இதில் பல இராகங்களைக் கொண்டு வித்துவான் வாசித்தார். அதே நிகழ்ச்சியில் பிலிப் போல்ஸ்கா என்ற வித்வானும் வந்திருந்தார்.

**இசை மயக்கம்:**

நாதஸ்வரக் கலைஞர் வாசிக்கத் தொடங்கினார். நாதஸ்வர இசை இனிக்க ஆரம்பித்தது. போல்ஸ்கா சிரித்தபடியே தன்னையே இழந்து இரசிக்கின்றார். இசை வெள்ளத்தில் மிதக்கின்றார். வெளிநாட்டவர் தமிழக இசைக்கு மெய்மறக்கின்றனர். வித்துவானின் சாமாராகம் அனைவரையும் மயங்கச் செய்தது. ஆடவும் செய்தது.

**செய்தி:**

வித்வானிடம் சாந்தமுலேகாவை 5, 6 முறை வாசிக்கக் கேட்டு மகிழ்ந்தார். இதில் ஒரு செய்தி இருப்பதாகவும், ஏதோ ஒரு உலகத்தில் இருந்து வந்த செய்தி கேட்கிறது. நான் அதில் மூழ்கிவிட்டேன் என்றார் போல்ஸ்கா. எனக்கு அனுப்பிய செய்தி, உலகத்திற்கே அனுப்பிய செய்தி, அது தமிழ் இசையின் செய்தி. வேறு எந்த சங்கீதமும் இதனைக் கொடுக்கவும் இல்லை. அதனை நான் வாங்கிக் கொண்டேன்.

Please Send Your Study Materials to our Email Id: padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.CBSEtips.in



முடிவுரை:

போல்ஸ்காவின் செயல்பாடுகள் இசைக்கு நாடு, மொழி, மதம் என எதுவும் இல்லை என்பதை உணர்த்துகிறது.

## கூடுதல் வினாக்கள்

### 1 குறுவினா

1. **தஞ்சாவூர் தமிழுக்கு அளித்த கொடையாளர்கள் யாவர்?**
   - ◈ உ.வே. சாமிநாதர்
   - ◈ தஞ்சை பிரகாஷ்
   - ◈ மௌனி
   - ◈ தஞ்சை இராமையா தாஸ்
   - ◈ தி. ஜானகிராமன்
   - ◈ தஞ்சாவூர் கவிராயர்

## கற்பவை கற்றபின்... பக்கம்: 167

1, **உலகில் அமைதியை நிலவச் செய்வதில் இசைக்கு நிகர் வேறெதுவும் இல்லை - இத்தொடர் குறித்துச் சொற்போர் நிகழ்த்துக.**

**மாணவன் 1 :** இசைக்கு மயங்காத உயிர்களே இல்லை. இசையில்லாத வாழ்க்கை சுவையில்லாமல் போய்விடும். சுவாசிக்க மறந்தாலும் வாசிக்க மறக்காதவர்கள் பிறப்பு முதல் இறப்பு வரை தாலாட்டாகவும், ஒப்பாரியாகவும் இசை நிலைபெற்றுள்ளது. இசைக்கருவிகள் நாட்டுக்கு நாடு மாறுபடுமே தவிர 'இசை' ஒலிப்பு மாறுபடாது. மன அமைதி பெற உலகம் முழுதும் பயன்படுத்தும் ஒரே மருந்து இசையே!

**மாணவன் 2 :** ஐ.நா. சபையில் நம் 'இசைக்குயில்' எம்.எஸ். சுப்புலட்சுமி அவர்கள் இசைக் கச்சேரி நடத்தினார். அது எதற்காக, உலகமே அமைதி பெறத்தான். போரில் இசை மீட்டி போரையே நிறுத்தி அமைதி பெறச் செய்ததும் இசையேதான்.

2. **பாடப்பகுதியில் இடம்பெற்றுள்ள உங்களுக்குப் பிடித்த செய்யுள் பகுதிகளை வகுப்பில் இசையுடன் பாடி மகிழ்க.**

**சீவகசிந்தாமணி**

சொல்அரும் சூல்பசும் பாம்பின் தோற்றம்போல்
மெல்லவே கருஇருந்து ஈன்று மேலலார்
செல்வமே போல்தலை நிறுவித் தேர்ந்தநூல்
கல்விசேர் மாந்தரின் இறைஞ்சிக் காய்த்தவே

**முத்தொள்ளாயிரம்**

அள்ளல் பழனத்து அரக்காம்பல் வாயவிழ
வெள்ளம்தீப் பட்ட(து) எனவெரீஇப் புள்ளினம்தம்
கைச்சிறகால் பார்ப்பொடுக்கும் கவ்வை உடைத்தரோ
நச்சிலைவேல் கோக்கோதை நாடு

Please Send Your Study Materials to our Email Id: padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.CBSEtips.in



# இயல் 6 இலக்கணம்

# புணர்ச்சி

## பாடநூல் மதிப்பீட்டு வினா

### 1 பலவுள் தெரிக

1. மரவேர் என்பது ________ புணர்ச்சி.

அ) இயல்பு ஆ) திரிதல்
இ) தோன்றல் ஈ) கெடுதல் **விடை: ஈ) கெடுதல்**

### 2 சிறுவினா

1. கைபிடி, கைப்பிடி - சொற்களின் பொருள் வேறுபாடுகளையும் அவற்றின் புணர்ச்சி வகைகளையும் எழுதுக.

◈ கைபிடி - பொருள் : கையினைப் பிடி; புணர்ச்சி வகை : இயல்புப்புணர்ச்சி
◈ கைப்பிடி - பொருள் : கைப்பிடி அளவு; புணர்ச்சி வகை : விகாரப்புணர்ச்சி

## கூடுதல் வினாக்கள்

### 1 பலவுள் தெரிக

1. பொருத்துக.

1. கலை + அழகு - அ) மெய்யீறு
2. மண் + குடம் - ஆ) உயிடகறு
3. வாழை + இலை - இ) மெய்முதல்
4. வாழை + மரம் - ஈ) உயிர் முதல்

அ) 1-ஈ 2-ஆ 3-அ 4- இ ஆ) 1-ஆ 2-அ 3-ஈ 4-இ
இ) 1-அ 2-ஈ 3-ஆ 4-இ ஈ) 1-ஆ 2-இ 3-அ 4-ஈ

**விடை: ஆ) 1-ஆ 2-அ 3-ஈ 4-இ**

2. பொருத்துக.

1. உயிர் முன் உயிர் - அ) பனிக்காற்று
2. உயிர் முன் மெய் - ஆ) மணியடி
3. மெய்ம்முன் உயிர் - இ) மரக்கிளை
4. மெய்ம்முன் மெய் - ஈ) ஆலிலை

அ) 1-ஈ 2-ஆ 3-அ 4- இ ஆ) 1-ஆ 2-அ 3-ஈ 4-இ
இ) 1-அ 2-ஈ 3-ஆ 4-இ ஈ) 1-ஆ 2-இ 3-அ 4-ஈ

**விடை: ஆ) 1-ஆ 2-அ 3-ஈ 4-இ**

Please Send Your Study Materials to our Email Id: padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.CBSEtips.in



3. நிலைமொழி இறுதி எழுத்து, வருமொழி முதல் எழுத்து அடிப்படையில் புணர்ச்சியை எத்தனை வகைப்படுத்தலாம்?
அ) இரண்டு ஆ) மூன்று
இ) நான்கு ஈ) ஐந்து **விடை: இ) நான்கு**

4. இயல்புப் புணர்ச்சி அல்லாத ஒன்று
அ) வாழைமரம் ஆ) செடிகொடி
இ) மண்மலை ஈ) பற்பசை **விடை: ஈ) பற்பசை**

5. விகாரப்புணர்ச்சி அல்லாத ஒன்று
அ) பூக்கூடை ஆ) கற்சிலை
இ) புறநானூறு ஈ) பொன்வளை **விடை: ஈ) பொன்வளை**

6. பொருந்தாத இணையைக் கண்டறிக.
அ) வாழைமரம் - இயல்புப்புணர்ச்சி
ஆ) பொன்வளை - இயல்புப்புணர்ச்சி
இ) மண்மலை - இயல்புப்புணர்ச்சி
ஈ) புறநானூறு - இயல்புப்புணர்ச்சி **விடை: ஈ) புறநானூறு - இயல்புப்புணர்ச்சி**

7. ''இ ஈ ஐவழி யவ்வும் ஏனை உயிர்வழி வவ்வும்'' என்னும் நூற்பா அமைந்த நூல் எது?
அ) நன்னூல் ஆ) தொல்காப்பியம்
இ) அகத்தியம் ஈ) தண்டியலங்காரம் **விடை: அ) நன்னூல்**

8. உடம்படுமெய் பயின்று வந்த சொல்
அ) எனதுயிர் ஆ) நாடியாது
இ) நிலவொளி ஈ) தேவாரம் **விடை: ஈ) தேவாரம்**

9. உடம்படுமெய் பயின்று வராத சொல்
அ) பலவுயிர் ஆ) பாவினம்
இ) சேயடி ஈ) எனதுயிர் **விடை: ஈ) எனதுயிர்**

10. ''மண்மலை'' என்பது __________ புணர்ச்சிக்குச் சான்று.
அ) இயல்பு ஆ) விகாரம்
இ) மகர ஈற்று ஈ) குற்றியலுகரம் **விடை: அ) இயல்பு**

11. ''வாழைமரம்'' என்பது __________ புணர்ச்சிக்குச் சான்று.
அ) இயல்பு ஆ) விகாரம்
இ) மகர ஈற்று ஈ) குற்றியலுகரம் **விடை: அ) இயல்பு**

12. ''செடிகொடி'' என்பது __________ புணர்ச்சிக்குச் சான்று.
அ) இயல்பு ஆ) விகாரம்
இ) மகர ஈற்று ஈ) குற்றியலுகரம் **விடை: அ) இயல்பு**

13. ''பொன் வளை'' என்பது __________ புணர்ச்சிக்குச் சான்று.
அ) இயல்பு ஆ) விகாரம்
இ) மகர ஈற்று ஈ) குற்றியலுகரம் **விடை: அ) இயல்பு**

Please Send Your Study Materials to our Email Id: padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.CBSEtips.in



14. ''நுழைவுத்தேர்வு'' என்பது __________ புணர்ச்சிக்குச் சான்று.
அ) இயல்பு ஆ) விகாரம்
இ) மகர ஈற்று ஈ) குற்றியலுகரம் **விடை: ஆ) விகாரம்**

15. ''கல்லூரிச்சாலை'' என்பது __________ புணர்ச்சிக்குச் சான்று.
அ) இயல்பு ஆ) விகாரம்
இ) மகர ஈற்று ஈ) குற்றியலுகரம் **விடை: ஆ) விகாரம்**

16. ''பற்பசை'' என்பது __________ புணர்ச்சிக்குச் சான்று.
அ) இயல்பு ஆ) விகாரம்
இ) மகர ஈற்று ஈ) குற்றியலுகரம் **விடை: ஆ) விகாரம்**

17. புறநானூறு, பூக்கூடை, கற்சிலை, கபிலபரணர் ஆகியவை __________ புணர்ச்சிக்குச் சான்று.
அ) இயல்பு ஆ) விகாரம்
இ) மகர ஈற்று ஈ) குற்றியலுகரம் **விடை: ஆ) விகாரம்**

18. தோன்றல் விகாரப்புணர்ச்சி வரிசையைத் தேர்ந்தெடுக்க.
அ) பூக்கூடை, நுழைவுத்தேர்வு, கல்லூரிச் சாலை
ஆ) பற்பசை, கற்சிலை
இ) புறநானூறு, கபிலபரணர்
ஈ) மணியடி, திருவருள் **விடை: அ) பூக்கூடை, நுழைவுத்தேர்வு, கல்லூரிச் சாலை**

19. திரிதல் விகாரப்புணர்ச்சி வரிசையைத் தேர்ந்தெடுக்க.
அ) பூக்கூடை, நுழைவுத்தேர்வு, கல்லூரிச் சாலை
ஆ) பற்பசை, கற்சிலை
இ) புறநானூறு, கபிலபரணர்
ஈ) மணியடி, திருவருள் **விடை: ஆ) பற்பசை, கற்சிலை**

20. கெடுதல் விகாரப்புணர்ச்சி வரிசையைத் தேர்ந்தெடுக்க.
அ) பூக்கூடை, நுழைவுத்தேர்வு, கல்லூரிச் சாலை
ஆ) பற்பசை, கற்சிலை
இ) புறநானூறு, கபிலபரணர்
ஈ) மணியடி, திருவருள் **விடை: இ) புறநானூறு, கபிலபரணர்**

21. பொருத்துக.
1. வன்தொடர்க் குற்றியலுகரம் - அ) முதுகு, வரலாறு
2. மென்தொடர்க் குற்றியலுகரம் - ஆ) மார்பு, அமிழ்து
3. இடைத்தொடர்க் குற்றியலுகரம் - இ) நெஞ்சு, இரும்பு
4. உயிர்த்தொடர் குற்றியலுகரம் - ஈ) நாக்கு, வகுப்பு

அ) 1-ஈ 2-இ 3-ஆ 4-அ ஆ) 1-ஆ 2-ஈ 3-அ 4-இ
இ) 1-இ 2-ஈ 3-அ 4-ஆ ஈ) 1-ஈ 2-இ 3-அ 4-ஆ
**விடை: அ) 1-ஈ 2-இ 3-ஆ 4-அ**

Please Send Your Study Materials to our Email Id: padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.CBSEtips.in



## 2 குறுவினா

1. **புணர்ச்சி என்றால் என்ன?**

நிலை மொழி இறுதியும் வருமொழி முதலும் சேர்வது புணர்ச்சி ஆகும்.

2. **புணர்ச்சி எத்தனை வகைப்படும்? அவை யாவை?**

புணர்ச்சி இரண்டு வகைப்படும்.

1. இயல்புப்புணர்ச்சி 2. விகாரப்புணர்ச்சி

3. **இயல்புப் புணர்ச்சியை விளக்குக.**

நிலை மொழி இறுதியும் வருமொழி முதலும் எவ்வித வேறுபாடும் இன்றி சேர்வது இயல்புப் புணர்ச்சி ஆகும்.

**சான்று:** மா + மரம் - மாமரம்

4. **விகாரப்புணர்ச்சி விளக்குக.**

நிலை மொழி இறுதியும் வருமொழி முதலும் சேரும் போது மாறுபட்டுப் புணர்வது விகாரப் புணர்ச்சி ஆகும்.

- தோன்றல் - **சான்று:** நுழைவு + தேர்வு - நுழைவுத்தேர்வு
- திரிதல் - **சான்று:** பல் + பசை - பற்பசை
- கெடுதல் - **சான்று:** புறம் + நானூறு - புறநானூறு

5. **உடம்படுமெய் என்றால் என்ன? சான்று தருக.**

நிலைமொழியின் இறுதி உயிராகவும் வருமொழி முதல் உயிராகவும் நிற்க, அவற்றை இணைக்க ஒரு மெய் தோன்றும் . இதனை உடம்படுமெய் என்பர்.

**சான்று :** மணி + அழகு - மணி + ய் + அழகு - மணியழகு

6. **குற்றியலுகரம் என்றால் என்ன?**

தனிக்குறில் அல்லாது, சொல்லுக்கு இறுதியில் வல்லின மெய்கள் மீது ஏறிய உகரம் தன் ஒரு மாத்திரை அளவிலிருந்து அரை மாத்திரை அளவாகக் குறைந்து ஒலிக்கும். இவ்வாறு குறைந்து ஒலிக்கும் உகரம் குற்றியலுகரம் ஆகும்.

**சான்று:** நாக்கு

7. **குற்றியலுகரம் எத்தனை வகைப்படும்? அவை யாவை?**

குற்றியலுகரம் ஆறு வகைப்படும்.

- வன்தொடர்க் குற்றியலுகரம் - சான்று: நாக்கு, வகுப்பு.
- மென்தொடர்க் குற்றியலுகரம் - சான்று: நெஞ்சு, இரும்பு.
- இடைத்தொடர்க் குற்றியலுகரம் - சான்று: மார்பு, அமிழ்து.
- உயிர்த்தொடர்க் குற்றியலுகரம் - சான்று: முதுகு, வரலாறு.
- ஆய்தத் தொடாக் குற்றியலுகரம் - சான்று: எஃகு, அஃது.
- நெடில் தொடர்க் குற்றியலுகரம் - சான்று: காது, பேசு.

Please Send Your Study Materials to our Email Id: padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.CBSEtips.in



8. வலிமிகுதல் என்றால் என்ன?

புணர்ச்சியில் இருசொற்கள் இணையும் போது வருமொழியில் க, ச, த, ப வந்தால் சில இடங்களில் மீண்டும் அதே எழுத்துத் தோன்றும். இதை வலி மிகுதல் என்பர்.

## கற்பவை கற்றபின்...

பக்கம்: 170

**1. எழுத்து வகை அறிந்து பொருத்துக.**

1. இயல் - அ) உயிர் முதல் உயிரீறு
2. புதிது - ஆ) உயிர் முதல் மெய்யீறு
3. ஆணி - இ) மெய்ம்முதல் மெய்யீறு
4. வரம் - ஈ) மெய்ம்முதல் உயிரீறு

**விடை: 1. ஆ 2. ஈ 3. அ 4. இ**

**2. புணர்ச்சிகளை "முதல், ஈற்றுச்" சொல் வகையால் பொருத்துக.**

பக்கம்: 171

1. செல்வி + ஆடினாள் - அ) மெய்யீறு + மெய்ம்முதல்
2. பாலை + திணை - ஆ) மெய்யீறு + உயிர் முதல்
3. கோல் + ஆட்டம் - இ) உயீரிறு + உயிர் முதல்
4. மண் + சரிந்தது - ஈ) உயிரீறு + மெய்ம்முதல்

**விடை: 1. இ 2. ஈ 3. ஆ 4. அ**

**3. சேர்த்து எழுதுக.**

அ) தமிழ் + பேசு – தமிழ் பேசு
ஆ) தமிழ் + பேச்சு – தமிழ்ப்பேச்சு
இ) கை + கள் – கைகள்
ஈ) பூ + கள் – பூக்கள்

**4. பொருத்தமான உடம்படு மெய்யுடன் இணைக்க.**

அ) பூ + இனம் – பூவினம் (வகர உடம்படு மெய்)
ஆ) இசை + இனிக்கிறது – இசையினிக்கிறது (யகர உடம்படுமெய்)
இ) திரு + அருட்பா – திருவருட்பா (வகர உடம்படு மெய்)
ஈ) சே + அடி – சேவடி (வகர உடம்படுமெய்)

### சிந்தனை கிளர் வினாக்கள்

**அ) குற்றியலுகரம், முற்றியலுகரம் இவற்றின் வேறுபாட்டை எழுதுக.**

குற்றியலுகரத்தில் வரும் "உ" கரமானது தனக்குரிய ஒரு மாத்திரையில் இருந்து அரை மாத்திரையாக குறுகி ஒலிக்கும்.

முற்றியலுகரத்தில் வரும் "உ" கரமானது தன் ஒரு மாத்திரை அளவில் குறையாது ஒலிக்கும்.

**ஆ) புணர்ச்சி இலக்கணம் கற்பது உரைநடை எழுதுவதற்கு உதவும் - இக்கூற்றை ஆய்க.**

ஒரு சொல்லைப் பிரித்தால் வரும் நிலைமொழி + வருமொழி - எவ்வாறு புணரும் என்பதை அறியும் பொழுதுதான் உரைநடை எழுதும்போது ஏற்படும் ஒலிநிலை மாற்றங்களை உணர்ந்து எழுத இயலும். வல்லினம் மிகும் மற்றும் மிகாவிடங்கள், சொற்சேர்க்கை ஆகியன உரைநடைக்கு இன்றியமையாதாகும். அவற்றைத் தெளிவாகத் தருவது புணர்ச்சி இலக்கணம். எனவே புணர்ச்சி இலக்கணம் கற்பது உரைநடை எழுத உதவும்.

Please Send Your Study Materials to our Email Id: padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.CBSEtips.in



**இ) கீழ்க்காணும் பத்தியில் உள்ள சொற்களைச் சேர்த்து எழுதுக.**

தமிழின் 'தொன்மை + ஆன' இலக்கண 'நூல் + ஆகிய' 'தொல்காப்பியம் + இல்' 'சிற்பம் + கலை' பற்றிய குறிப்புக் காணப்படுகிறது. போரில் விழுப்புண் பட்டு இறந்த வீரருக்கு நடுகல் நடப்படும். 'அ + கல்லில் அவ்வீரரின் உருவம் பொறிக்கப்பெறும். 'தமிழக + சிற்பம் + கலை' யின் தோற்றத்திற்கான சான்றாக 'இதனை + கொள்ளலாம்'. சிலப்பதிகாரத்தில் 'கண்ணகிக்கு + சிலை' வடித்த செய்தி இடம் பெற்றுள்ளது. மாளிகைகளில் பல 'சுதை + சிற்பங்கள்' இருந்ததை மணிமேகலை மூலம் 'அறிய + முடிகிறது'.

| | | | |
|---|---|---|---|
| 1. | தொன்மை +ஆன | = | தொன்மையான |
| 2. | நூல் + ஆகிய | = | நூலாகிய |
| 3. | தொல்காப்பியம் + இல் | = | தொல்காப்பியத்தில் |
| 4. | சிற்பம் + கலை | = | சிற்பக்கலை |
| 5. | அ + கல்லில் | = | அக்கல்லில் |
| 6. | தமிழக + சிற்பம் + கலை | = | தமிழகச் சிற்பக்கலை |
| 7. | இதனை + கொள்ளலாம் | = | இதனைக் கொள்ளலாம் |
| 8. | கண்ணகிக்கு + சிலை | = | கண்ணகிக்குச் சிலை |
| 9. | சுதை + சிற்பங்கள் | = | சுதைச் சிற்பங்கள் |
| 10. | அறிய + முடிகிறது | = | அறிய முடிகிறது |

**ஈ) படக்காட்சியிலிருந்து இரு சொல் தொடர்களை அமைத்து, அவற்றின் புணர்ச்சி வகையினைக் கண்டறிக.**



எ.கா:

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | மரக்கிளை | = மரம் + கிளை | மரக்கிளை | - | திரிதல் விகாரப்புணர்ச்சி |
| | மூன்று பெண்கள் | = மூன்று + பெண்கள் | மூன்றுபெண்கள் | - | இயல்புப் புணர்ச்சி |
| அ) | நிறைகுடம் | = நிறை + குடம் | நிறைகுடம் | - | இயல்புப் புணர்ச்சி |
| ஆ) | உழவுத் தொழில் | = உழவு + தொழில் | உழவுத் தொழில் | - | தோன்றல்விகாரப்புணர்ச்சி |

Please Send Your Study Materials to our Email Id: padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.CBSEtips.in



இயல் 6 வாழ்வியல்

# திருக்குறள்

– திருவள்ளுவர்

## பாடநூல் வினா

1. **இறக்கும் வரை உள்ள நோய் எது?**

சொன்னாலும் செய்யாமலும், தானாகவும் செய்யாதவன் உயிர், சாகும் வரை உள்ள நோய் ஆகும்.

2. **உலகத்திற்கு அச்சாணியாய் இருப்பவர் யார்? ஏன்?**

◈ உலகத்திற்கு அச்சாணியாய் இருப்பவர் உழவர்.

◈ அவரே மற்ற தொழில் செய்பவரையும் தாங்கி நிற்கிறார்.

3. **‘அன்புநாண் ஒப்புரவு கண்ணோட்டம் வாய்மையோடு**
**ஐந்துசால்பு ஊன்றிய தூண்’**
**– இக்குறட்பாவில் பயின்று வரும் அணியை விளக்குக.**

பயின்று வரும் அணி : ஏகதேச உருவக அணி

**இலக்கணம்:**

செய்யுள் பொருட்களில் ஒன்றினை உருவகம் செய்து, மற்றொன்றை உருவகம் செய்யாமல் விடுவது ஏகதேச உருவக அணி எனப்படும்.

**விளக்கம்:**

சான்றாண்மையைத் தாங்கும் தூண்களை உருவகம் செய்த வள்ளுவர், சான்றாண்மையை உருவகம் செய்யாமல் விட்டதால், இஃது ஏகதேச உருவக அணி.

4. **‘காணாதான் காட்டுவான் தான்காணான் காணாதான்**
**கண்டனாம் தாம்கண்ட வாறு’ – தொடைநயத்தை விளக்குக.**

**எதுகைத்தொடை:**

செய்யுளில் சீர்களிலோ அல்லது அடிகளிலோ இரண்டாம் எழுத்து ஒன்றி வருவது எதுகை ஆகும்.

காணாதான் - காணாதான்
தான்காணாதான் - கண்டனாம்

**மோனைத்தொடை:**

செய்யுளில் சீர்களிலோ அல்லது அடிகளிலோ முதல் எழுத்து ஒன்றி வருவது மோனை ஆகும்.

காணாதான் - காணாதான்
தான்காணாதான் - தாம்கண்ட

Please Send Your Study Materials to our Email Id: padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.CBSEtips.in



## கூடுதல் வினாக்கள்

1. **இன்பத்தில் சிறந்த இன்பம் பெறலாம் எப்போது?**

மனக்கசப்பு என்னும் மோசமான துன்பம் மறைந்தால் இன்பத்தில் சிறந்த இன்பம் பெறலாம்.

2. **சான்றாண்மையைத் தாங்கும் தூண்கள் யாவை?**

அன்பு, பழிக்கு வெட்கப்படுதல், அனைவரிடமும் இணக்கம், இரக்கம், உண்மை - ஆகியன சான்றாண்மையைத் தாங்கும் தூண்கள் ஆகும்.

3. **அடுக்கிய கோடிபெறினும் தவறு செய்வதில்லை - யார்?**

கோடிப்பொருள் கொடுத்தாலும் ஒழுக்கமான குடியில் பிறந்தவர் தவறு செய்வதில்லை.

4. **துன்பத்துள் துன்பம் கெடும் எப்போது?**

துன்பத்துள் மனக்கசப்பு என்னும் மோசமான துன்பம் மறைந்தால் இன்பத்தில் சிறந்த இன்பம் பெறலாம்.

5. **மாற்றாரை மாற்றும் படை எது?**

செயல் செய்பவரின் ஆற்றல், பணிவுடன் நடத்தல் அதுவே மாற்றாரை மாற்றும் படையாகும்.

6. **''ஊழி பெயரினும் தாம்பெயரார் சான்றாண்மைக்கு
ஆழி எனப்படு வார்''
- இக்குறட்பாவில் பயின்று வரும் அணியை விளக்குக.**

பயின்று வரும் அணி : ஏகதேச உருவக அணி

**இலக்கணம்:**

செய்யுள் பொருட்களில் ஒன்றினை உருவகம் செய்து , மற்றொன்றை உருவகம் செய்யாமல் விடுவது ஏகதேச உருவக அணி எனப்படும்.

**விளக்கம்:**

சான்றாண்மை மிக்கவர் கடலுக்குக் கரை என்று உருவகம் செய்த வள்ளுவர், ஊழிக் காலத்தை உருவகம் செய்யாமல் விட்டதால், இஃது ஏகதேச உருவக அணி ஆயிற்று.

7. **''உழுவார் உலகத்தார்க்கு ஆணிஅஃது தாற்றாது
எழுவாரை எல்லாம் பொறுத்து''
- இக்குறட்பாவில் பயின்று வரும் அணியை விளக்குக.**

பயின்று வரும் அணி : ஏகதேச உருவக அணி

**இலக்கணம்:**

செய்யுள் பொருட்களில் ஒன்றினை உருவகம் செய்து, மற்றொன்றை உருவகம் செய்யாமல் விடுவது ஏகதேச உருவக அணி எனப்படும்.

**விளக்கம்:**

உழுபவரை - அச்சாணி என்று உருவகம் செய்த வள்ளுவர், மற்ற தொழில் செய்பவரை உருவகம் செய்யாமல் விட்டதால், இஃது ஏகதேச உருவக அணி ஆயிற்று.

Please Send Your Study Materials to our Email Id: padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.CBSEtips.in



## கற்பவை கற்றபின்...

பக்கம்: 179

**1. படத்திற்கு ஏற்ற குறளைத் தேர்வு செய்க.**



அ) இன்பத்துள் இன்பம் பயக்கும் இகலென்னும்
துன்பத்துள் துன்பங் கெடின்.

ஆ) ஏவவும் செய்கலான் தான்தேறான் அவ்வுயிர்
போஒம் அளவும் ஓர் நோய்.

இ) சுழன்றும் ஏர்ப் பின்னது உலகம் அதனால்
உழந்தும் உழவே தலை.

**விடை: இ) சுழன்றும் ஏர்ப் பின்னது உலகம் அதனால்
உழந்தும் உழவே தலை.**

**2. பொருளுக்கேற்ற அடியைக் கண்டுபிடித்து பொருத்துக.**

**விடை:**

| | |
|---|---|
| பகைவரையும் நட்பாக்கும் கருவி | மாற்றாரை மாற்றும் படை |
| தெரிந்த அளவில் அறிவுடையவனாய்த் தோன்றுவான் | கண்டானாம் தான் கண்டவாறு |
| அறம் வெட்கப்பட்டு அவனை விட்டு விலகிப் போகும் | அறம் நாணத்தக்கது உடைத்து |

**3. ஐந்து சால்புகளில் இரண்டு**

அ) வானமும் நாணமும்
ஆ) நாணமும் இணக்கமும்
இ) இணக்கமும் சுணக்கமும்
ஈ) இணக்கமும் பிணக்கமும்

**விடை : ஆ) நாணமும் இணக்கமும்**

**4. கோடிட்ட இடங்களுக்கான விடையைக் கட்டத்துள் கண்டறிந்து வட்டமிடுக.**

| | | | |
|---|---|---|---|
| ஒ | ப் | பு | று |
| க | ப | ர | வ |
| ட | டை | வு | த |
| ல் | உ | ழ | வ |
| ம் | ற | அ | ர் |

அ) அனைவரிடமும் இணக்கம் என்பதன் பொருள் - **ஒப்புரவு**

ஆ) உலகத்துக்கு அச்சாணி போன்றவர்- **உழவர்**

இ) தான் நாணான் ஆயின் __________ நாணத்தக்கது - **அறம்**

ஈ) ஆழி என்பதன் பொருள் __________ **கடல்**

உ) மாற்றாரை மாற்றும் __________ - **படை**

ஊ) ஒழுக்கமான குடியில் பிறந்தவர் __________ செய்வதில்லை - **தவறு**

Please Send Your Study Materials to our Email Id: padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.CBSEtips.in



**5. அடுக்கிய கோடி பெறினும் குடிப்பிறந்தார்**
**குன்றுவ செய்தல் இலர்**

**இக்குறளின் கருத்தை அடிப்படையாகக் கொண்டு ஒரு பக்கக் கதை எழுதுக.**

நான் வசிக்கும் ஊருக்கு அருகில் ஒரு சிறிய கிராமம் (சிற்றூர்) உள்ளது. 100 குடும்பங்களே உடைய அச்சிற்றூரில் உழவே பிரதானமான தொழில். அங்குள்ள மக்களுக்கு கல்வியறிவு கிடையாது. அவ்வூருக்கு நன்கு படித்த பணி புரிந்து ஓய்வு பெற்ற ஒருவர் குடி வந்தார். அவர் பெயர் சாமிநாதன்.

அண்டை ஊரில் இருந்து ஒரு செல்வந்தன் இச்சிற்றூர் மக்களின் விளைபொருட்களை அநியாயமாக அடித்துப் பிடித்து அரைகுறை விலையில் வாங்கிக் கொண்டிருந்தான்.

சாமிநாதன் அந்த ஊருக்கு வந்தவுடன் இதனைத் தெரிந்து கொண்டார். மக்களுக்கு விழிப்புணர்வு ஏற்படுத்தினார். மக்கள் நியாயவிலையாய் இருந்தால் வாங்கிக்கொள் இல்லையென்றால் சென்று விடு என்று மக்கள் குரல் கொடுக்கத் தொடங்கினர். செல்வந்தன் காரணம் அறிந்து கொண்டு சாமிநாதனைச் சந்தித்து வழக்கமாக நான் செய்வதைத் தடையின்றி செய்ய உதவினால், உமக்குச் சரிபாதி பணத்தையும், உனக்குத் தேவையான தானியவகைகள் அனைத்தையும் விலையில்லாமல் உமக்கும் தருகிறேன் என்றார்.

ஆனால் சாமிநாதனோ ......... நீ கோடி கோடியாய்க் கொடுத்தாலும், நீதி தவறி நடக்க மாட்டேன், இந்த அப்பாவி மக்களின் வயிற்றில் உன்னை அடிக்கவிட மாட்டேன் என்று ஓடிப்போ ........ என்று விரட்டி விட்டார்......... தன் நிலையில் இருந்து மாறவில்லை அவர்.

ஆம்

"அடுக்கிய கோடி பெறினும் குடிப்பிறந்தார்
குன்றுவ செய்தல் இலர்" அன்றோ.

## மொழியை ஆழ்வோம்

பக்கம்: 173

### மொழிபெயர்க்க.

| | | |
|---|---|---|
| 1. | Strengthen the body. | உடலினை உறுதி செய். |
| 2. | Love your Food. | உணவை நேசி. |
| 3. | Thinking is great. | நல்லதே நினை. |
| 4. | Walk like a bull. | ஏறு போல் நட. |
| 5. | Union is Strength. | ஒற்றுமையே பலம். |
| 6. | Practice what you have learnt. | படித்ததைப் பழகிக் கொள். |

### மரபுத்தொடர்களைக் கொண்டு தொடர் அமைக்க.

எ.கா: முயன்றால் எந்தச் செயலிலும் வெற்றி என்பது எட்டாக்கனி இல்லை.

1. **உடும்புப்பிடி** : நட்பில் அன்பு உடும்புப்பிடி போன்றது.
2. **கிணற்றுத்தவளை** : வெறும் பாடப்புத்தக அறிவு மட்டும் இருப்பது கிணற்றுத்தவளை போலத் தான்.
3. **ஆகாயத்தாமரை** : படிக்காமலே தேர்ச்சி பெறுவேன் என்பது ஆகாயத்தாமரை பூப்பது போலத்தான்.

Please Send Your Study Materials to our Email Id: padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.CBSEtips.in



4. **எடுப்பார் கைப்பிள்ளை** : கைகேயி மந்தரையின் பேச்சைக் கேட்டு எடுப்பார் கைப்பிள்ளையானாள்.

5. **மேளதாளத்துடன்** : கிராம மக்கள் அமைச்சரை மேளதாளத்துடன் வரவேற்றனர்.

**பத்தியில் இடம் பெற்றுள்ள இயல்புப் புணர்ச்சிகளையும், விகாரப் புணர்ச்சிகளையும் எடுத்து எழுதுக.**

காஞ்சி கயிலாசநாதர் கோவில் சுற்றுச்சுவர் முழுவதும் சிற்பங்களின் கலைக்கூடமாகத் திகழ்கிறது. அதே போன்று காஞ்சி வைகுந்த பெருமாள் கோவிலிலும் பல்லவர் காலச் சிற்பங்கள் மிகுதியாக உள்ளன. இங்குத் தெய்வச்சிற்பங்கள் மட்டுமல்லாது பிற சிற்பங்களும் கோவில் உட்புறச் சுவரில் செதுக்கப்பட்டுள்ளன. பல்லவர் காலக் குடைவரைக் கோவில்களின் நுழைவு வாயிலின் இருபுறங்களிலும் காவலர்கள் நிற்பது போன்று சிற்பங்கள் படைக்கப்பட்டுள்ளன.

**இயல்புப் புணர்ச்சிச் சொற்கள்**

நுழைவு வாயிலின் → நுழைவு + வாயிலின்
நிற்பது போன்று → நிற்பது + போன்று

**விகாரப் புணர்ச்சிச் சொற்கள்**

**தோன்றல் விகாரப் புணர்ச்சி**

சுற்று + சுவர் → சுற்றுச்சுவர்
கலை + கூடம் → கலைக்கூடம்
தெய்வம் + சிற்பங்கள் → தெய்வச்சிற்பங்கள்
குடைவரை + கோயில் → குடைவரைக்கோயில்

**கெடுதல் விகாரப் புணர்ச்சி**

வைகுந்தம் + பெருமாள் → வைகுந்த பெருமாள்

**திரிதல் விகாரப் புணர்ச்சி**

பல்லவர் காலம் + குடைவரைக் கோயில் → பல்லவர் காலக் குடைவரைக் கோயில்

**மரபுப்பிழை நீக்கி எழுதுக.**

1. இல்லத்தின் அருகே புதிதாகக் கூரை போட்டனர்.

   இல்லத்தின் **அண்மையில்** புதிதாகக் கூரை வேய்ந்தனர்.

2. கயல் பானை செய்யக் கற்றுக் கொண்டாள்.

   கயல் பானை **வனையக்** கற்றுக் கொண்டாள்.

3. நேற்று தென்றல் காற்று அடித்தது.

   நேற்று தென்றல் காற்று **வீசியது**.

4. தென்னை மட்டையிலிருந்து நார் எடுத்தனர்.

   தென்னை மட்டையிலிருந்து நார் **உரித்தனர்**.

5. அணில் பழம் சாப்பிட்டது.

   அணில் பழம் **கொறித்தது**.

Please Send Your Study Materials to our Email Id: padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.CBSEtips.in



6. கொடியில் உள்ள மலரை எடுத்து வா.

கொடியில் உள்ள மலரைப் **பறித்து** வா.

கவிதை படைக்க.

| மூடநம்பிக்கை | புவியைப்போற்று | அன்பின் வழி |
|---|---|---|
| எத்தனை பெரியார்<br>வந்தாலும்<br>உன்நம்பிக்கை<br>மூடநம்பிக்கை தானா? | பூஞ்சோலையாக பூமியை<br>மாற்றாவிட்டாலும்<br>பரவாயில்லை<br>அசுத்தமாக்காதே! | அனாதை இல்லங்கள்<br>என்பதே இல்லாத<br>நிலைமாற<br>ஒரே வழி அன்பு வழி |

## மொழியோடு விளையாடு

பக்கம்: 174

விடையைத் தமிழ் எண்களில் எழுதுக.




கண்டுபிடிக்க.

1. எண்ணும் எழுத்தும் கண் - இத்தொடரை ஒருவர் 1, 2, 3, 4, 1, 5, 6, 7, 4, 8, 2 என்று குறிப்பிடுகிறார். இதே முறையைப் பின்பற்றி கீழ்க்காணும் சொற்களை எப்படிக் குறிப்பிடுவார்.

**விடைகள்:**

அ) எழுது → 1, 5, 7 ஆ) கண்ணும் → 8, 2, 3, 4

இ) கழுத்து → 8, 5, 6, 7 ஈ) கத்து → 8, 6, 7

2. என் வகுப்பில் படிக்கும் அனைவரும் புதிய புத்தகம் வைத்திருந்தனர். இராமனும் புதிய புத்தகம் வைத்திருந்தான். எனவே, இராமன் என் வகுப்பு மாணவன் - இக் கூற்று.

அ) உண்மை ஆ) பொய் இ) உறுதியாகக் கூறமுடியாது

**விடை: இ) உறுதியாகக் கூறமுடியாது**

**காரணம் :** அனைவரும் என்று, கூறிய பின் இராமன் வேறு வகுப்பு மாணவனாகக் கூட இருக்கலாம்.

Please Send Your Study Materials to our Email Id: padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.CBSEtips.in



அகராதியில் காண்க.

| சொல் | பொருள் |
|---|---|
| ஏங்கல் | அஞ்சல், அழுதல், இரங்கல், வாடல், வாய்விடல், கவலைப்படல். |
| கிடுகு | வட்டவடிவப்பாறை, கேடகம், சட்டப்பலகை, தேரின் மரச்சுற்று, முடைந்த ஓலைக்கீற்று. |
| தாமம் | மாலை, இடம், உடல், ஒளி, பிறப்பு, பெருமை, யானை. |
| பான்மை | குணம், தகுதி, தன்மை, பங்கு, ஊழ், நல்வினைப் பயன். |
| பொறி | அறிவு, இலக்குமி, எழுத்து, செல்வம், தீப்பொறி, தேர், வண்டு, முத்திரை, வரி, பதுமை. |

உவமைகளை உருவகத் தொடரர்களாக மாற்றுக.

1. மலர்விழி வீணை வாசித்தாள்: கேட்டவர் வெள்ளம் போன்ற இன்பத்தில் நீந்தினர்.
   **விடை : விழிமலர் வீணை வாசித்தாள். கேட்டவர் இன்ப வெள்ளத்தில் நீந்தினர்.**
2. குழலியின் இசையைச் சுவைத்தவர், கடல் போன்ற கவலையிலிருந்து நீங்கினர்.
   **விடை : குழலியின் இசையைச் சுவைத்தவர் கவலைக்கடலில் இருந்து நீங்கினர்.**
3. தேன் போன்ற மொழியைப் பவளவாய் திறந்து படித்தாள்.
   **விடை : மொழித்தேனை வாய்ப்பவளத்தால் திறந்து படித்தாள்.**
4. முத்துநகை தன் வில் போன்ற புருவத்தில் மை தீட்டினாள்.
   **விடை : நகைமுத்து தன் புருவவில்லில் மை தீட்டினாள்.**

காட்சியைக் கண்டு கவினுறு எழுதுக.



''தன்னம்பிக்கை என்னும்
உளி கொண்டு
தளராத முயற்சியில்
என்னைச் செதுக்குகிறேன்
வலி பொறுத்து
சாதனையாளராக.''

## கலைச்சொல் அறிவோம்

| | | |
|---|---|---|
| Cave Temple | - | குடைவரைக் கோவில் |
| Treasury | - | கருவூலம் |
| Honorary Doctorate | - | மதிப்புறு முனைவர் |
| Melody | - | மெல்லிசை |
| Document short film | - | ஆவணக் குறும்படம் |
| Combination | - | புணர்ச்சி |

Please Send Your Study Materials to our Email Id: padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.CBSEtips.in



# இயல் 7 உரைநடை உலகம்

# இந்திய தேசிய இராணுவத்தில் தமிழர் பங்கு

## பாடநூல் மதிப்பீட்டு வினா

### 1 பலவுள் தெரிக

1. இந்திய தேசிய இராணுவம் __________ இன் தலைமையில் __________ உருவாக்கினார்.

அ) சுபாஷ் சந்திரபோஸ், இந்தியர். ஆ) சுபாஷ் சந்திரபோஸ், ஜப்பானியர்.

இ) மோகன்சிங், ஜப்பானியர். ஈ) மோகன்சிங், இந்தியர்.

**விடை: இ) மோகன்சிங், ஜப்பானியர்.**

2. கூற்று: இந்திய தேசிய இராணுவப்படைத் தலைவராக இருந்த தில்லான், 'இந்திய தேசிய இராணுவத்தின் இதயமும் ஆத்மாவும் தமிழர்தான்' என்றார்.

காரணம்: இந்திய தேசிய இராணுவத்திற்கு வலுசேர்த்த பெருமைக்குரியவர்கள் தமிழர்கள்.

அ) கூற்று சரி காரணம் சரி ஆ) கூற்று சரி காரணம் தவறு

இ) கூற்று தவறு காரணம் சரி ஈ) கூற்று தவறு காரணம் தவறு

**விடை: அ) கூற்று சரி காரணம் சரி**

### 2 குறுவினா

1. இந்திய தேசிய இராணுவத்தில் குறிப்பிடத் தகுந்த தமிழர்கள் யாவர்?

◈ பசும்பொன் முத்துராமலிங்கனார்
◈ ஜானகி
◈ இராஜாமணி
◈ கேப்டன் லட்சுமி
◈ சிதம்பரம் லோகநாதன்

2. தாய்நாட்டுக்காக உழைக்க விரும்பினால் எப்பணியைத் தேர்ந்தெடுப்பீர்கள்? ஏன்?

தாய்நாட்டுக்காக உழைக்க விரும்பினால் இராணுவப் பணியைத் தேர்ந்தெடுப்பேன். காரணம்: என் தாய்நாட்டையும், தாய்நாட்டு மக்களையும் காப்பாற்றுவதற்காக.

3. 'டெல்லி நோக்கிச் செல்லுங்கள்' என்ற முழக்கம் யாரால் எப்போது செய்யப்பட்டது?

சிங்கப்பூரில் இந்திய தேசிய இராணுவத்தின் பொறுப்பு ஏற்க வந்தபோது 1943ஆம் ஆண்டு ஜூலை மாதம் 9ஆம் தேதி மாபெரும் கூட்டத்தில்'டெல்லி நோக்கிச் செல்லுங்கள்' என்ற முழக்கம் நேதாஜி சுபாஸ் சந்திரபோஸ் அவர்களால் செய்யப்பட்டது.

Please Send Your Study Materials to our Email Id: padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.CBSEtips.in



## 3 சிறுவினா

1. **குறிப்பு வரைக: ''டோக்கியோ கேடட்ஸ்''**

இந்திய தேசிய இராணுவத்தில் இருந்து 45 வீரர்கள் நேதாஜியால் தேர்வு செய்யப்பட்டு, வான்படைத் தாக்குதலுக்கான சிறப்புப் பயிற்சி பெறுவதற்காக, ஜப்பானில் உள்ள இம்பீரியல் மிலிட்டரி அகடமிக்கு அனுப்பி வைக்கப்பட்டனர். அந்த 45 பேர் கொண்ட பயிற்சிப் பிரிவின் பெயர் தான் டோக்கியோ கேடட்ஸ்.

2. **பனியிலும், மலையிலும் எல்லைக் காக்கும் இந்திய வீரர்களின் பணியைப் பாராட்டி உங்கள் பள்ளி கையெழுத்து இதழுக்கு ஒரு துணுக்குச் செய்தி எழுதுக.**

| இந்திய இராணுவ வீரர்களின் தியாகம் |
|---|
| ◈ *நாட்டையும் தன் நாட்டு மக்களையும் காக்க தன் குடும்பம் மறந்து பணிசெய்வோர் இராணுவ வீரர்கள்.* |
| ◈ *கடும் வெய்யில், கடுங்குளிர், புயல் மழை, சூறாவளி, சுனாமி, பூகம்பம் என எது வந்தாலும் தாய்நாட்டு மக்களைக் காக்கும் தகைசால் மாமனிதர்கள் இராணுவ வீரர்கள்.* |
| ◈ *குண்டு மழை பொழியும் போர்க்களத்தில் நெஞ்சம் நிமிர்த்திப் போராடும் பண்பாளர்கள் அவர். தன்நாட்டுக்காகத் தன்னுயிரைக் கொடுக்கும் தியாக வள்ளல்கள்.* |
| ◈ *மெழுகுவர்த்தி போல தன்னைத் தன்நாட்டிற்காக உருக்கிக் கொள்பவர்கள். அவர்கள் பணிக்கு எங்கள் நெஞ்சார்ந்த வணக்கங்கள்.* |

## 4 நெடுவினா

1. **இந்திய தேசிய இராணுவத்தின் தூண்களாகத் திகழ்ந்தவர்கள் தமிழர்கள் என்பதை கட்டுரை வழி நிறுவுக.**

**முன்னுரை:**

இந்திய விடுதலைப்போரில் இந்திய தேசிய இராணுவத்தின் ஞதூண்களாகத் திகழ்ந்தவர்கள் தமிழர்கள். அவர்களைப் பற்றி இங்குக் காண்போம்.

**பசும்பொன் முத்துராமலிங்கனார்:**

1943 இல் அன்றைய ஆங்கிலேய அரசை இந்திய தேசிய இராணுவப்படை எதிர்த்த போது, பசும்பொன் முத்துராமலிங்கனார் விடுதலை உணர்வு கொண்ட வலிமை மிக்க தமிழர்ப் பட்டாளங்களை ஒன்றிணைத்து, இந்திய இராணுவத்திற்கு வலுசேர்த்தார். அதனால், இந்திய தேசிய இராணுவத்தின் இதயமும் ஆத்மாவும் தமிழர்கள் என்றார் தில்லான்.

**இரண்டாம் உலகப்போர்:**

தமிழர் துணையுடன் போராடிய நேதாஜியை, ஆங்கிலப் பிரதமர் சர்ச்சில் கோபம் அடைந்து, 'மலேயாவில் உள்ள தமிழர்களின் இரத்தம் நேதாஜியின் மூளையில் கட்டியாக உள்ளது' என்றார். அதற்கு நேதாஜி 'தமிழினம் தான் ஆங்கிலேயரை அழிக்கும்' என்றார்.

**மகளிர்ப் படை:**

ஜான்சி ராணி பெயரில் பெண்கள் படை உருவாக்கப்பட்டது. இதன் தலைவர் டாக்டர் லட்சுமி. இதில் தமிழகப் பெண்கள் பலர் பங்கேற்றனர். தலைசிறந்தவர்களாக ஜானகி, இராஜாமணி ஆகியோர்

Please Send Your Study Materials to our Email Id: padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.CBSEtips.in



விளங்கினர். நேதாஜி அமைத்த தற்காலிக அரசில் கேப்டன் லட்சுமி, சிதம்பர லோகநாதன் முதலான தமிழர்கள் அமைச்சர்களாக விளங்கினர்.

**வான்படை:**

இந்திய தேசிய இராணுவத்தில் இருந்து 45 வீரர்கள் நேதாஜியால் தேர்வு செய்யப்பட்டு, வான்படைத் தாக்குதலுக்கான சிறப்புப் பயிற்சி பெறுவதற்காக, ஜப்பானில் உள்ள இம்பீரியல் மிலிட்டரி அகடமிக்கு அனுப்பி வைக்கப்பட்டனர். அந்த 45 பேர் கொண்ட பயிற்சிப் பிரிவின் பெயர் தான் டோக்கியோ கேடட்ஸ். இதில் பெரும்பாலானோர் தமிழர்கள். அதில் சிறந்து விளங்கியவர் கேப்டன் தாசன். இவர் சுதந்திர இந்தியாவில் செசல்ஸ் நாட்டுத் தூதுவராகப் பணியாற்றியவர்.

**முடிவுரை:**

நாட்டிற்காக உயிர் கொடுத்த முகம்தெரியாத தமிழர்களின் உணர்வைப் போற்றி வழிபடுவோம். அவர்தம் உன்னத செயல்களை உலகறிய செய்வோம்.

## கூடுதல் வினாக்கள்

### 1 பலவுள் தெரிக

1. **இந்திய தேசிய இராணுவம் என்ற படை உருவாக்கிய போது தலைமை ஏற்றவர்**
   அ) நேதாஜி ஆ) மோகன் சிங்
   இ) பசும்பொன் முத்துராமலிங்கனார் ஈ) கேப்டன் லட்சுமி **விடை: ஆ) மோகன் சிங்**

2. **மோகன் சிங்கிற்குப் பிறகு இந்திய தேசிய இராணுவத்திற்குப் பொறுப்பேற்றவர்**
   அ) நேதாஜி ஆ) மோகன் சிங்
   இ) பசும்பொன் முத்துராமலிங்கனார் ஈ) கேப்டன் லட்சுமி **விடை: அ) நேதாஜி**

3. **''டெல்லி நோக்கிச் செல்லுங்கள்'' என்ற முழக்கம் எழுப்பியர்**
   அ) நேதாஜி ஆ) மோகன் சிங்
   இ) பசும்பொன் முத்துராமலிங்கனார் ஈ) கேப்டன் லட்சுமி **விடை: அ) நேதாஜி**

4. **நேதாஜி இந்திய இராணுவத் தலைமையேற்ற ஆண்டு**
   அ) 1943 ஆ) 1942
   இ) 1926 ஈ) 1934 **விடை: அ) 1943**

5. **தமிழகத்திலிருந்து இந்திய தேசிய இராணுவத்திற்குப் பெரும் படையைத் திரட்டி அனுப்பியவர் என்ற பெருமைக்குரியவர்**
   அ) நேதாஜி ஆ) மோகன் சிங்
   இ) பசும்பொன் முத்துராமலிங்கனார் ஈ) கேப்டன் லட்சுமி
   **விடை: இ) பசும்பொன் முத்துராமலிங்கனார்**

6. **இந்திய தேசிய இராணுவப்படைத் தலைவராக இருந்த தில்லான், 'இந்திய தேசிய இராணுவத்தின் இதயமும் ஆத்மாவும் தமிழர்தான்' என்றவர்**
   அ) நேதாஜி ஆ) தில்லான்
   இ) பசும்பொன் முத்துராமலிங்கனார் ஈ) கேப்டன் லட்சுமி **விடை: ஆ) தில்லான்**

Please Send Your Study Materials to our Email Id: padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.CBSEtips.in



7. இந்திய தேசிய இராணுவப்படைத் தலைவரல்லாதவர்
அ) நேதாஜி ஆ) தில்லான்
இ) பசும்பொன் முத்துராமலிங்கனார் ஈ) மோகன் சிங்
**விடை: இ) பசும்பொன் முத்துராமலிங்கனார்**

8. நான் மறுபடியும் பிறந்தால் ஒரு தென்னிந்தியத் தமிழனாகப் பிறக்கவேண்டும் என்றவர்
அ) நேதாஜி ஆ) தில்லான்
இ) பசும்பொன் முத்துராமலிங்கனார் ஈ) மோகன் சிங் **விடை: அ) நேதாஜி**

9. நான் மறுபடியும் பிறந்தால் ஒரு தென்னிந்தியத் தமிழனாகப் பிறக்கவேண்டும் என்று நேதாஜி கூறியதாகக் கூறியவர்
அ) ஜானகி ஆ) தில்லான்
இ) பசும்பொன் முத்துராமலிங்கனார் ஈ) மோகன் சிங்
**விடை: இ) பசும்பொன் முத்துராமலிங்கனார்**

10. இந்திய தேசிய இராணுவத்தில் __________ பெயரில் பெண்கள் படை உருவாக்கப்பட்டது.
அ) டாக்டர் லட்சுமி ஆ) ஜான்சி ராணி
இ) இராஜாமணி ஈ) கேப்டன் **விடை: இ) ஜான்சி ராணி**

11. சுதந்திர இந்தியாவில் செசல்ஸ் நாட்டுத் தூதுவராகப் பணியாற்றியவர்
அ) கேப்டன் தாசன் ஆ) தில்லான்
இ) பசும்பொன் முத்துராமலிங்கனார் ஈ) மோகன் சிங் **விடை: அ) கேப்டன் தாசன்**

12. தமிழ் மக்களை வைத்துப் போராடிய நேதாஜியைக் கண்டு கோபம் கொண்ட ஆங்கிலப் பிரதமர்
அ) சர்ச்சில் ஆ) தில்லான்
இ) கேப்டன் தாசன் ஈ) சிதம்பர லோகநாதன் **விடை: அ) சர்ச்சில்**

13. பொருத்துக.
1. இந்திய தேசிய இராணுவ தலைவர்கள் - அ) டாக்டர் லட்சுமி, ஜானகி, இராஜாமணி
2. பெண்கள் படைத் தலைவர்கள் - ஆ) மோகன் சிங், நேதாஜி, தில்லான்
3. அமைச்சர்கள் - இ) இராமு, அப்துல் காதர்
4. இராணுவ வீரர்கள் - ஈ) கேப்டன் லட்சுமி, சிதம்பர லோகநாதன்
அ) 1-ஆ 2-அ 3-ஈ 4-இ ஆ) 1-இ 2-அ 3-ஈ 4-ஆ
இ) 1-ஆ 2-ஈ 3-ஆ 4-இ ஈ) 1-ஈ 2-அ 3-ஆ 4-இ
**விடை: அ) 1-ஆ 2-அ 3-ஈ 4-இ**

கோடிட்ட இடங்களை நிரப்புக.

1. இந்திய தேசிய இராணுவம் __________க்காக உருவாக்கப்பட்ட அமைப்பு.
விடை: இந்திய விடுதலை

2. இந்திய தேசிய இராணுவ அமைப்பின் தூண்களாகத் திகழ்ந்தவர்கள் நம் __________.
விடை: தமிழர்கள்

3. 'இந்திய தேசிய இராணுவம் - தமிழர்பங்கு' என்னும் நூலை எழுதியவர் __________.
விடை: மா.சு. அண்ணாமலை

Please Send Your Study Materials to our Email Id: padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.CBSEtips.in



4. நேதாஜி இந்திய தேசிய இராணுவத்தின் பொறுப்பேற்க வந்த இடம் ________.
விடை: சிங்கப்பூர்

5. டெல்லி சலோ என்ற முழக்கம் செய்தவர் ________. விடை: நேதாஜி

6. 'இந்திய தேசிய இராணுவத்தின் ________, ________ தமிழர்தான்.
விடை: இதயமும் ஆத்மாவும்

7. நேதாஜி அமைத்த தற்காலிக அரசில் ________, ________ முதலான தமிழர்கள் அமைச்சர்களாக இருந்தார்கள். விடை: கேப்டன் லட்சுமி, சிதம்பரலோகநாதன்

8. ஜான்சிராணி பெயரில் உருவாக்கப்பட்ட பெண்கள் படையில் சிறந்து விளங்கியவர்கள் ________, ________. விடை: ஜானகி, இராஜாமணி

9. ஜான்சிராணி பெயரில் உருவாக்கப்பட்ட பெண்கள் படையின் தலைவர் ________.
விடை: டாக்டர் லட்சுமி

10. இந்திய தேசிய இராணுவம் ஆங்கிலேயரை வென்று மூவர்ணக்கொடி ஏற்றிய இடம் ________.
விடை: மணிப்பூர் பகுதியில் மொய்ரா

## 2 குறுவினா

1. **ஐ.என்.ஏ என்பது யாது? (அல்லது) இந்திய தேசிய இராணுவம் - குறிப்பு தருக.**

இரண்டாம் உலகப்போர் நடைபெற்றுக் கொண்டிருந்த காலத்தில் ஆங்கிலேயப் படைகள் ஜப்பானியரிடம் சரணடைந்தன. இப்படையில் இந்திய வீரர்களும் இருந்தனர்.அவ்வீரர்களைக் கொண்டு ஜப்பானியர்கள், மோகன்சிங் என்பவர் தலைமையில் உருவாக்கியதே ஐ.என்.ஏ எனப்படும் இந்திய தேசிய இராணுவம் ஆகும்.

2. **பசும்பொன் முத்துராமலிங்கனார் இந்திய தேசிய இராணுவத்திற்குச் செய்த பணி யாது?**

1943 இல் அன்றைய ஆங்கிலேய அரசை இந்திய தேசிய இராணுவப்படை எதிர்த்த போது, பசும்பொன் முத்துராமலிங்கனார் விடுதலை உணர்வு கொண்ட வலிமை மிக்க தமிழர் பட்டாளங்களை ஒன்றிணைத்து, இந்திய இராணுவத்திற்கு வலுசேர்த்தார்.

3. **தமிழர்கள் குறித்து தில்லான் கூறியது யாது?**

இந்திய தேசிய இராணுவத்தின் தலைவராக இருந்த தில்லான் ''இந்திய தேசிய இராணுவத்தின் இதயமும் ஆத்மாவும் தமிழர்கள்'' என்றார்.

4. **ஆங்கிலப் பிரதமர் சர்ச்சில் கோபம் அடைந்து கூறிய செய்தி யாது? அதற்கு நேதாஜி கூறிய மறுமொழி யாது?**

தமிழர் துணையுடன் போராடிய நேதாஜியை, ஆங்கிலப் பிரதமர் சர்ச்சில் கோபம் அடைந்து, 'மலேயாவில் உள்ள தமிழர்களின் இரத்தம் நேதாஜியின் மூளையில் கட்டியாக உள்ளது' என்றார். அதற்கு நேதாஜி 'தமிழினம் தான் ஆங்கிலேயரை அழிக்கும்' என்றார்.

5. **நேதாஜி அமைத்த தற்காலிக அரசில் அமைச்சர்களாக இருந்த தமிழர்கள் யாவர்?**

நேதாஜி அமைத்த தற்காலிக அரசில் கேப்டன் லட்சுமி, சிதம்பர லோகநாதன் முதலான தமிழர்கள் அமைச்சர்களாக விளங்கினர்.

Please Send Your Study Materials to our Email Id: padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.CBSEtips.in



6. **நேதாஜி கூறியதாகப் பசும்பொன் முத்துராமலிங்கனார் குறிப்பிடும் செய்தி யாது?**

நேதாஜி தமிழக வீரர்களைப் பாராட்டி நான் மறுபடியும் பிறந்தால் ஒரு தென்னிந்தியத் தமிழனாகப் பிறக்கவேண்டும் என்று நேதாஜி கூறியதாகப் பசும்பொன் முத்துராமலிங்கனார் கூறுகிறார்.

## 3 சிறுவினா

1. **இந்திய தேசிய இராணுவத்தில் உருவாக்கிய மகளிர் படை குறித்து எழுதுக.**

- ஜான்சி ராணி பெயரில் பெண்கள் படை உருவாக்கப்பட்டது.
- இதன் தலைவர் டாக்டர் லட்சுமி.
- இதில் தமிழகப் பெண்கள் பலர் பங்கேற்றனர்.
- தலைசிறந்தவர்களாக ஜானகி, இராஜாமணி ஆகியோர் விளங்கினர்.

2. **மரணம் பெரிதன்று என்ற இந்திய தேசிய இராணுவ இளைஞர்களின் கூற்றினைக் கூறுக.**

- 18 வயதான இந்திய தேசிய இராணுவ இளைஞர் இராமு தூக்கிலிடுவதற்கு முதல் நாள் இரவு, ''நான் என் உயிரைக் கொடுப்பதற்குக் கொஞ்சமும் கவலைப்படவில்லை, ஏனெனில் நான் கடவுளுக்கு எதிராக ஒன்றும் செய்யவில்லை'' என்று கூறினார்.
- மரணதண்டனை பெற்ற அப்துல் காதர், ''வாழ்வின் பொருள் தெரிந்தால்தான் மனிதன் மேல்நிலை அடைவான். நாட்டிற்காக உயிர்நீத்த முழுநிலவினைப் போன்ற தியாகிகள் முன்பு நாங்கள் மெழுகுவர்த்திதான்'' என்று கூறினார்.

## கற்பவை கற்றபின்...

பக்கம்: 185

1. **நீங்கள் நாட்டிற்கு உங்கள் பங்கினை அளிக்க விரும்புகிறீர்களா? இந்திய தேசிய இராணுவத்தில் சேரவதற்கான தகுதி அவற்றுக்கான பணிகள் குறித்த கருத்துகளைத் திரட்டி வகுப்பில் கலந்துரையாடுக.**

ஆசிரியர் : கண்ணா! எதிர்காலத்தில் என்னவாகப் போகிறாய்?

கண்ணன் : ஐயா, நான் இராணுவ வீரர் ஆகப்போகின்றேன்.

ஆசிரியர் : அதற்குரிய தகுதிகள் பற்றி உனக்குத் தெரியுமா?

கண்ணன் : தெரியாது ஐயா.

ஆசிரியர் : சரி, கூறுகின்றேன். இராணுவத்தில் சேர பல பிரிவுகள் உள்ளன. சிலவற்றைக் கூறுகின்றேன்.

பொதுவாக வீராக 10 வகுப்பு முடித்து, வயது 17 முதல் 21க்குள் இருக்க வேண்டும். 163 செ.மீ உயரம் இருக்க வேண்டும். 48 கிலோ எடை இருக்க வேண்டும். இது மண்டலத்திற்கு ஏற்ப சிறிது மாறுபடும். எழுத்தர், தொழில்நுட்ப வல்லுனர், மருத்துவம் என பல பிரிவுகளில் இராணுவத்தில் வேலைக்குச் சேரலாம்.

கண்ணன் : நன்றி ஐயா.

Please Send Your Study Materials to our Email Id: padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.CBSEtips.in



2. எனக்குப் பிடித்த விடுதலைப் போராட்ட வீரர் என்ற தலைப்பில் அவர்தம் வாழ்க்கை நிகழ்வுகளைக் காலக்கோட்டில் உருவாக்குக.

எனக்குப் பிடித்த விடுதலைப் போராட்ட வீரர் சரோஜினி நாயுடு




1879 ஹைதராபாத்தில் பெங்காலி இந்து குடும்பத்தில் பிறந்தார்

1905 இந்திய தேசிய இயக்கத்தில் சேர்ந்தார்.

1925 காங்கிரஸ் தலைவராகத் தேர்ந்தெடுக்கப்பட்டார்.

1925 சிறையில் அடைக்கப்பட்டார்.

1931 விடுதலை

1942 "வெள்ளையனே வெளியேறு இந்தியா" மீண்டும் கைது

1947 உத்திரபிரதேச ஆளுநர்

1949 மாரடைப்பால் இறப்பு

Please Send Your Study Materials to our Email Id: padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.CBSEtips.in



# இயல் 7

## கவிதைப் பேழை

# சீவக சிந்தாமணி

– திருத்தக்கதேவர்

| | | |
|---|---|---|
| ஆசிரியர் | - | திருத்தக்கதேவர் |
| காலம் | - | கி.பி. 9 ஆம் நூற்றாண்டு |
| படைப்புகள் | - | நரிவிருத்தம், சீவசிந்தாமணி. |

## சொற்பொருள்

| | | | | | |
|---|---|---|---|---|---|
| தெங்கு | - | தேங்காய் | கழனி | - | வயல் |
| இசை | - | புகழ் | செறி | - | சிறந்த |
| வருக்கை | - | பலாப்பழம் | இரிய | - | ஓட |
| நெற்றி | - | உச்சி | அடிசில் | - | சோறு |
| மால்வரை | - | பெரிய மலை | மடிவு | - | சோம்பல் |
| மடுத்து | - | பாய்ந்து | கொடியன்னார் | - | மகளிர் |
| கொழுநிதி | - | திரண்ட நிதி | நறவம் | - | பெருந்தவம் |
| மருப்பு | - | கொம்பு | வட்டம் | - | எல்லை |
| வெறி | - | மணம் | வெற்றம் | - | வெற்றி |

## இலக்கணக் குறிப்பு

| | | | | | |
|---|---|---|---|---|---|
| தேமாங்கனி | - | உவமைத்தொகை | விளைக | - | வியங்கோள் வினைமுற்று |
| செந்நெல் | - | பண்புத்தொகை | தேர்ந்த | - | பெயரெச்சம் |
| தண் கடல் | - | பண்புத்தொகை | இறைஞ்சி | - | வினையெச்சம் |
| நற்றவம் | - | பண்புத்தொகை | கொடியனார் | - | இடைக்குறை |

## பகுபத உறுப்பிலக்கணம்

**இறைஞ்சி - இறைஞ்சு + இ**

| | | |
|---|---|---|
| இறைஞ்சு | - | பகுதி |
| இ | - | வினையெச்ச விகுதி |

**ஓம்புவார் - ஓம்பு +வ் +ஆர்**

| | | |
|---|---|---|
| ஓம்பு | - | பகுதி |
| வ் | - | எதிர்கால இடைநிலை |
| ஆர் | - | பலர்பால் வினைமுற்று விகுதி |

Please Send Your Study Materials to our Email Id: padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.CBSEtips.in



## பாடநூல் மதிப்பீட்டு வினா

### 1 பலவுள் தெரிக

1. **வெறிகமழ் கழனியுள் உழுநர் வெள்ளமே - இவ்வடி உணர்த்தும் பொருள் யாது?**

அ) மணம் கமழும் வயலில் உழவர் வெள்ளமாய் உழுதிருந்தனர்.

ஆ) வறண்ட வயலில் உழவர் வெள்ளமாய் நிறைந்திருந்தனர்.

இ) செறிவான வயலில் உழவர் வெள்ளமாய் கூடியிருந்தனர்.

ஈ) பசுமையான வயலில் உழவர் வெள்ளமாய் நிறைந்திருந்தனர்.

**விடை: அ) மணம் கமழும் வயலில் உழவர் வெள்ளமாய் உழுதிருந்தனர்.**

2. **பாதிரி ஒத்த பூ, செய்கோலம் - இலக்கணக் குறிப்புத் தருக.**

அ) உருவகத் தொடர், வினைத்தொகை ஆ) உவமைத்தொடர், வினைத்தொகை

இ) வினைத்தொகை, பண்புத்தொகை ஈ) வினைத்தொகை, உருவகத்தொடர்

**விடை: ஆ) உவமைத்தொடர், வினைத்தொகை**

### 2 குறுவினா

1. **கருக்கொண்ட பச்சைப் பாம்பு எதற்கு உவமையாக்கப்பட்டுள்ளது?**

கருக்கொண்ட பச்சைப் பாம்பு நெற்பயிர்களின் தோற்றத்திற்கு உவமையாக்கப்பட்டுள்ளது.

### 3 சிறுவினா

1. **ஏமாங்கத நாட்டில் எவையெல்லாம் ஆயிரக்கணக்கில் இருப்பதாகத் திருத்தக்க தேவர் பாடியுள்ளார்?**

◈ ஆயிரம் வகையான உணவுகள்.

◈ உணவளிக்கும் அறச்சாலைகள் ஆயிரம்.

◈ மகளிர் ஒப்பனை செய்ய மணிமணிமாடம் ஆயிரம்.

◈ கம்மியர் ஆயிரம் பேர்.

◈ திருமணங்கள் ஆயிரம்.

இப்படி ஆயிரம் நிகழ்வுகள் ஏமாங்கத நாட்டில் குறைவின்றி நடக்கின்றன.

Please Send Your Study Materials to our Email Id: padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.CBSEtips.in



## 4 நெடுவினா

1. ஏமாங்க நாட்டு வருணணைகளை நும் ஊர் குறித்த வளங்களோடு ஒப்பிடுக.

| | ஏமாங்க வருணணை | எங்கள் ஊர் வளம் |
|---|---|---|
| 1. | தென்னை மரத்திலிருந்து விழுகின்ற தேங்காய் தேனடையைக் கிழித்து பலாப்பழத்தைப் பிளந்து, மாங்கனியைச் சிதற வைத்து, வாழைப்பழத்தை உதிரச் செய்தது. | தேங்காய்கள் வயல் ஓடைகளில் விழுந்து பூக்களைத் தழுவிச் செல்கிறது. |
| 2. | வள்ளல்களைப் போன்றது வெள்ளம். அது மலையில் இருந்து செல்வத்தை அடித்து வந்து ஊர்மக்களுக்கு வழங்கும் வகையில் பாய்கின்றது. | பூக்களையும், பழங்களையும் வெள்ளம் அடித்து வந்து ஊரினில் சேர்க்கும். |
| 3. | எருமைகளும் எருதுகளும் பேரொலி எழுப்புகின்றன , அது கேட்டு வாரல் மீன்கள் ஓடுகின்றன. | ஏர் மாடுகளின் சத்தம் வயலில் எங்கும் கேட்கும். |

**கூடுதல் வினாக்கள்**

## 1 பலவுள் தெரிக

1. பொருத்துக.

1. தெங்கு - அ) தேங்காய்
2. இசை - ஆ) உச்சி
3. வருக்கை - இ) பலாப்பழம்
4. நெற்றி - ஈ) புகழ்

அ) 1-அ 2- ஈ 3-இ 4-ஆ ஆ) 1- ஈ 2-ஆ 3-இ 4- அ
இ) 1- ஈ 2-இ 3-அ 4-ஆ ஈ) 1- அ 2-இ 3-ஆ 4-ஈ

**விடை: அ) 1-அ 2-ஈ 3-இ 4-ஆ**

2. பொருத்துக.

1. மால்வரை - அ) பாய்ந்து
2. மடுத்து - ஆ) திரண்ட நிதி
3. கொழுநிதி - இ) பெரிய மலை
4. மருப்பு - ஈ) கொம்பு

அ) 1-அ 2-ஈ 3-இ 4-ஆ ஆ) 1-ஈ 2-ஆ 3-இ 4-அ
இ) 1-இ 2-அ 3-ஆ 4-ஈ ஈ) 1-அ 2-இ 3-ஆ 4-ஈ

**விடை: இ) 1-இ 2-அ 3-ஆ 4-ஈ**

Please Send Your Study Materials to our Email Id: padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.CBSEtips.in



3. பொருத்துக.

1. வெறி - அ) வயல்
2. கழனி - ஆ) மணம்
3. செறி - இ) ஓட
4. இரிய - ஈ) சிறந்த

அ) 1-அ 2-ஈ 3-இ 4-ஆ ஆ) 1-ஆ 2-அ 3-ஈ 4-இ
இ) 1-இ 2-அ 3-ஆ 4-ஈ ஈ) 1-அ 2-இ 3-ஆ 4-ஈ

**விடை: ஆ) 1-ஆ 2-அ 3-ஈ 4-இ**

4. பொருத்துக.

1. அடிசில் - அ) சோம்பல்
2. மடிவு - ஆ) சோறு
3. கொடியன்னார் - இ) பெருந்தவம்
4. நறவம் - ஈ) மகளிர்

அ) 1-அ 2-ஈ 3-இ 4-ஆ ஆ) 1-ஆ 2-அ 3-ஈ 4-இ
இ) 1-இ 2-அ 3-ஆ 4-ஈ ஈ) 1-அ 2-இ 3-ஆ 4-ஈ

**விடை: ஆ) 1-ஆ 2-அ 3-ஈ 4-இ**

5. சீவக சிந்தாமணி ________ பாவால் ஆனது.

அ) ஆசிரியப்பா ஆ) வெண்பா
இ) விருத்தப்பா ஈ) வஞ்சிப்பா **விடை: இ) விருத்தப்பா**

6. தொடை கீறி வருக்கை போழ்ந்து - இத்தொடரில் 'பலாப்பழம்' என்னும் பொருள் தரும் சொல் எது?

அ) தொடை ஆ) கீறி
இ) வருக்கை ஈ) போழ்ந்து **விடை: இ) வருக்கை**

7. ''வெறி கமழ் கழனியுள் உழுநர் வெள்ளமே'' - இவ்வடியில் 'வயல்' என்னும் பொருள் தரும் சொல் எது?

அ) வெறி ஆ) கமழ்
இ) கழனி ஈ) உழுநர் **விடை: இ) கழனி**

8. ''காய்மாண்ட தெங்கின் பழம் வீழக் கமுகின் நெற்றிப்
பூமாண்ட தீந்தேன் தொடை கீறி வருக்கை போழ்ந்து''
-இவ்வடிகளில் உள்ள இயைபுச் சொற்கள் எவை?

அ) காய்மாண்ட - பூமாண்ட ஆ) தெங்கின் - தீந்தேன்
இ) பழம் - தொடை ஈ) நெற்றி - போழ்ந்து

**விடை: அ) காய்மாண்ட - பூமாண்ட**

9. ஐம்பெருங்காப்பியங்களுள் முதல் நூல் எது?

அ) சிலப்பதிகாரம் ஆ) மணிமேகலை
இ) சீவக சிந்தாமணி ஈ) வளையாபதி **விடை: அ) சிலப்பதிகாரம்**

Please Send Your Study Materials to our Email Id: padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.CBSEtips.in



10. விருத்தப்பாவால் எழுதப்பட்ட முதல் காப்பியம் எது?
அ) சிலப்பதிகாரம் ஆ) மணிமேகலை
இ) சீவக சிந்தாமணி ஈ) வளையாபதி **விடை: இ) சீவக சிந்தாமணி**

11. நரி விருத்தம் பாடியவர்
அ) இளங்கோவடிகள் ஆ) சாத்தனார்
இ) திருத்தக்கதேவர் ஈ) நாதகுத்தனார் **விடை: இ) திருத்தக்கதேவர்**

12. பாக்கு மரத்தின் உச்சியில் இருந்தது
அ) தென்னை ஆ) வாழை
இ) தேனடை ஈ) மாம்பழம் **விடை: இ) தேனடை**

13. பொருத்துக.
1. விழுந்தது - அ) தேனடை
2. கிழித்தது - ஆ) தேங்காய்
3. பிளந்தது - இ) மாங்கனி
4. சிதறவைத்தது - ஈ) பலாப்பழம்

அ) 1-அ 2-ஈ 3-இ 4-ஆ ஆ) 1-ஆ 2-அ 3-ஈ 4-இ
இ) 1-இ 2-அ 3-ஆ 4-ஈ ஈ) 1-அ 2-இ 3-ஆ 4-ஈ
**விடை: ஆ) 1-ஆ 2-அ 3-ஈ 4-இ**

14. மற்றநாடு வட்டமாக வைகும் - இவ்வடியில் 'வட்டம்' என்பதன் பொருள்
அ) பெருந்தவம் ஆ) எல்லை
இ) மகளிர் ஈ) சோம்பல் **விடை: ஆ) எல்லை**

15. செல்வர்களுக்குக் கூறப்பட்ட உவமை
அ) வெள்ளம் ஆ) உழவர்
இ) பச்சைப்பாம்பு ஈ) நல்லவர் பணிவு **விடை: அ) வெள்ளம்**

16. நெற்பயிர் தோற்றத்திற்குக் கூறப்பட்ட உவமை
அ) வெள்ளம் ஆ) உழவர்
இ) பச்சைப்பாம்பு ஈ) நல்லவர் பணிவு **விடை: இ) பச்சைப்பாம்பு**

17. வெள்ளம் போல நிறைந்திருந்தது
அ) வெள்ளம் ஆ) உழவர்
இ) பச்சைப்பாம்பு ஈ) நல்லவர் பணிவு **விடை: ஆ)உழவர்**

18. நாட்டு வளம் இடம்பெறும் இலம்பகம்
அ) நாமகள் இலம்பகம் ஆ) கேமசரியார் இலம்பகம்
இ) பதுமையார் இலம்பகம் ஈ) முக்தி இலம்பகம்
**விடை: அ) நாமகள் இலம்பகம்**

19. சீவக சிந்தாமணியில் உள்ள மொத்த இலம்பகம்
அ) 12 ஆ) 13
இ) 16 ஈ) 20 **விடை: 13**

Please Send Your Study Materials to our Email Id: padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.CBSEtips.in



20. மணநூல் என அழைக்கப்படும் நூல்

அ) சிலப்பதிகாரம் ஆ) மணிமேகலை

இ) சீவக சிந்தாமணி ஈ) வளையாபதி **விடை: இ) சீவக சிந்தாமணி**

21. பொருந்தாதவற்றைக் கண்டறிக.

அ) சீவகசிந்தாமணி ஆசிரியர் திருத்தக்கதேவர்.

ஆ) நரிவிருத்தம் பாடியவர் திருத்தக்கதேவர்.

இ) திருத்தக்கதேவர் பௌத்த சமயம் சார்ந்தவர்.

ஈ) திருத்தக்கதேவர் காலம் கி.பி.9

**விடை: இ) திருத்தக்கதேவர் பௌத்த சமயம் சார்ந்தவர்.**

## 2 குறுவினா

1. ஐம்பெருங்காப்பியங்கள் யாவை?

◈ சிலப்பதிகாரம்
◈ வளையாபதி
◈ மணிமேகலை
◈ சீவக சிந்தாமணி
◈ குண்டலகேசி

2. நல்லவர்களின் பணிவைப் போல் உள்ளது எது?

பயிர்கள் முற்றியவுடன் சாய்ந்து இருப்பது நல்லவர்களின் பணிவைப் போல் உள்ளது.

3. சீவக சிந்தாமணி - குறிப்பு வரைக.

◈ ஐம்பெருங்காப்பியங்களுள் ஒன்று. விருத்தப்பாவால் இயற்றப்பட்ட முதல் காப்பியம்.
◈ மணநூல் என்று அழைக்கப்படுகிறது.
◈ 13 இலம்பகங்களைக் கொண்டது.
◈ இயற்றியவர் : திருத்தக்க தேவர்

4. திருத்தக்கதேவர் - குறிப்பு வரைக.

◈ சீவக சிந்தாமணியின் ஆசிரியர் திருத்தக்கதேவர்.
◈ சமணர்.
◈ காலம் : கி.பி. 9.
◈ சீவகசிந்தாமணி பாடுவதற்கு முன்பே நரிவிருத்தம் பாடியவர்.

5. ஏமாங்கத நாட்டில் வெள்ளம் எதனைப் போன்றிருந்தது?

இரந்து கேட்பவர்க்கு இல்லை என்ற சொல்லாது வாரி வழங்கும் செல்வர்களைப் போன்றது வெள்ளம்.

6. ஏமாங்கத நாட்டில் வெள்ளம் எவ்வாறு பாய்கிறது?

உயர்ந்த மலையில் இருந்து செல்வக் குவியலைச் சேர்த்துக் கொண்டு வந்து, ஊக்கமில்லாத மக்களுக்கு ஊர்தோறும் வழங்கும் வகையில் ஏமாங்கத நாட்டினுள் விரைந்து பாய்கின்றது.

7. ஏமாங்கத நாட்டில் வெள்ளம் போல நிறைந்திருந்தது எது? (அல்லது) ''வெறி கமழ் கழனியுள் உழுநர் வெள்ளமே'' - தொடர் பொருள் விளக்கம் எழுதுக.

ஏமாங்கத நாட்டில் மணம் வீசும் வயலில் உழவர்கள் வெள்ளம் போல நிறைந்திருந்தனர்.

Please Send Your Study Materials to our Email Id: padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.CBSEtips.in



8. **ஏமாங்கத நாட்டில் பேரொலி எழுப்பியவை எவை? களைந்து ஓடியவை எவை?**
   - ஏமாங்கத நாட்டில் பேரொலி எழுப்பியவை எருதுகள்.
   - களைந்து ஓடியவை வாரல் மீன்கள்

9. **ஏமாங்கத நாடு எவ்வெவற்றிற்கு இனிய இடமாகும்?**
   உண்மையான தவம் புரிவோர்க்கும், இல்லறம் நடத்துவோர்க்கும் இனிய இடமாகும்.

10. **ஏமாங்கத நாடு யாருக்கு உகந்த இடம்?**
    நிலையான பொருளைத் தேடுவோர்க்கும், நிலையில்லாத பொருட்செல்வத்தைத் தேடுவோர்க்கும் உகந்த இடமாகும்.

11. **ஏமாங்கத நாட்டில் செழித்திருந்த மரங்கள் யாவை?**
    - தென்னை
    - மாங்கனி
    - பாக்கு
    - வாழை
    - பலா

## 3 சிறுவினா

1. **சீவக சிந்தாமணியில் உள்ள இலம்பகங்கள் எத்தனை? அவை யாவை?**
   சீவக சிந்தாமணியில் உள்ள இலம்பகங்கள் பதின்மூன்று.
   - நாமகள் இலம்பகம்
   - கோவிந்தையார் இலம்பகம்
   - காந்தருவதத்தையார் இலம்பகம்
   - குணமாலையார் இலம்பகம்
   - பதுமையார் இலம்பகம்
   - கேமசரியார் இலம்பகம்
   - கனகமாலையார் இலம்பகம்
   - விமலையார் இலம்பகம்
   - சுரமஞ்சியார் இலம்பகம்
   - மண்மகள் இலம்பகம்
   - பூமகள் இலம்பகம்
   - இலக்கணையார் இலம்பகம்
   - முத்தி இலம்பகம்

Please Send Your Study Materials to our Email Id: padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.CBSEtips.in



# இயல் 7 கவிதைப் பேழை

# முத்தொள்ளாயிரம்

## சொற்பொருள்

| | | | | | |
|---|---|---|---|---|---|
| அள்ளல் | - | சேறு | நந்து | - | சங்கு |
| பழனம் | - | வயல் | கமுகு | - | பாக்கு |
| வெரீஇ | - | அஞ்சி | முத்தம் | - | முத்து |
| பார்ப்பு | - | குஞ்சு | | | |

## இலக்கணக் குறிப்பு

| | | |
|---|---|---|
| அஞ்சி | - | பெயரெச்சம் |
| வெண்குடை | - | பண்புத்தொகை |
| இளங்கமுகு | - | பண்புத்தொகை |
| கொல்யானை | - | வினைத்தொகை |
| குவி மொட்டு | - | வினைத்தொகை |
| வெரீஇ | - | சொல்லிசையளபெடை |

## பகுபத உறுப்பிலக்கணம்

**கொண்ட - கொள்(ண்) + ட் + அ**

கொள் - பகுதி (ண் ஆனது விகாரம்)
ட் - இறந்தகால இடைநிலை
அ - பெயரெச்ச விகுதி

## பாடநூல் மதிப்பீட்டு வினா

## 1 பலவுள் தெரிக

1. **சொல்லும் பொருளும் பொருந்தி வந்துள்ளது எது?**

அ) வருக்கை - இருக்கை ஆ) புள் - தாவரம்
இ) அள்ளல் - சேறு ஈ) மடிவு - தொடக்கம்

**விடை: இ) அள்ளல் - சேறு**

2. **நச்சிலைவேல் கோக்கோதை நாடு, நல்யானைக் கோக்கிள்ளி நாடு - இத்தொடர்களில் குறிப்பிடப்படுகின்ற நாடுகள் முறையே**

அ) பாண்டிய நாடு, சேரநாடு ஆ) சோழநாடு, பாண்டிய நாடு
இ) சேரநாடு, சோழநாடு ஈ) சோழநாடு, பாண்டிய நாடு

**விடை: இ) சேரநாடு, சோழநாடு**

Please Send Your Study Materials to our Email Id: padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.CBSEtips.in



## 2 குறுவினா

1. **அள்ளல் பழனத்து அரக்காம்பல் வாயவிழ - இவ்வடியில் சேற்றையும் வயலையும் குறிக்கும் சொற்கள் யாவை?**
    - ◈ சேறு - அள்ளல்
    - ◈ வயல் - பழனம்

2. **கொற்கை நகரில் முத்துக்களைப் போல் உள்ள பொருள்களாகக் காட்டப்படுவன எவை?**
    - ◈ சங்குவின் முட்டைகள்
    - ◈ புன்னை மொட்டுக்கள்
    - ◈ பாக்குப் பாளையில் இருந்து சிந்தும் மணிகள்

## 3 சிறுவினா

1. **சேர , சோழ, பாண்டிய நாட்டு வளங்களை முத்தொள்ளாயிரம் வழி விளக்குக.**

**சேரர்:**

வயல்களில் செவ்வாம்பல் மெல்ல விரிந்தன. அதனைக் கண்ட நீர்ப்பறவைகள் தண்ணீர் தீப்பிடித்து விட்டது என்று நினைத்து தம் குட்டிகளைச் சிறகில் மறைத்து வைத்தன. பகைவர் அஞ்சும் சேர நாட்டில் இந்த அச்சமும் இருக்கின்றது.

**சோழர்:**

உழவர்கள் நெற்போர் மீது ஏறி 'நாவலோ' என்று கூவி மற்ற உழவர்களை அழைப்பர்.இது போரில் யானை மீது நின்று 'நாவலோ' என்று கூவி மற்ற வீரர்களை அழைப்பது போல் இருந்தது. இத்தகு வளம் சோழ நாட்டில் காணப்பட்டது.

**பாண்டியர்:**

கொற்கை நகரில் முத்துக்களைப் போல் சங்குவின் முட்டைகள், புன்னை மொட்டுக்கள், பாக்குப் பாளையில் இருந்து சிந்தும் மணிகள் ஆகியவை இருந்தன. இத்தகைய வளம் பாண்டியர் நாட்டில் காணப்பட்டது

2. **தற்குறிப்பேற்றவணியை எடுத்துக்காட்டுடன் விளக்குக.**

**இலக்கணம்:**

இயல்பாக நிகழும் நிகழ்ச்சியின் மீது கவிஞர் தன் மனக்கருத்தை ஏற்றிக் கூறுவது தற்குறிப்பேற்றவணி.

**சான்று:**

''அள்ளல் பழனத்து அரக்காம்பல் வாயவிழ
வெள்ளம்தீப் பட்டதென வெரீஇப்பு ள்ளினம்''

**விளக்கம்:**

| | |
|---|---|
| இயல்பான நிகழ்வு | : வயலில் ஆம்பல் மலர்தல். |
| கவிஞர் மனக்கருத்து | : நீர்ப்பறவைகள் வெள்ளத்தில் தீப்பற்றியதாக எண்ணி வருந்தி தன் குஞ்சுகளைக் காத்தல். |

ஆகையால் இச்செய்யுள் தற்குறிப்பேற்றவணி ஆயிற்று.

Please Send Your Study Materials to our Email Id: padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.CBSEtips.in



## கூடுதல் வினாக்கள்

### 1 பலவுள் தெரிக

1. பொருத்துக.

1. அள்ளல் - அ) வயல்
2. பழனம் - ஆ) சேறு
3. வெரீஇ - இ) குஞ்சு
4. பார்ப்பு - ஈ) அஞ்சி

அ) 1-அ 2-ஈ 3-இ 4-ஆ ஆ) 1-ஆ 2-அ 3-ஈ 4-இ
இ) 1-இ 2-அ 3-ஆ 4-ஈ ஈ) 1-அ 2-இ 3-ஆ 4-ஈ

**விடை: ஆ) 1-ஆ 2-அ 3-ஈ 4-இ**

2. பொருத்துக.

1. நந்து - அ) பாக்கு
2. கமுகு - ஆ) சங்கு
3. முத்தம் - இ) சோழநாடு
4. கிள்ளிநாடு - ஈ) முத்து

அ) 1-அ 2-ஈ 3-இ 4-ஆ ஆ) 1-ஆ 2-அ 3-ஈ 4-இ
இ. 1-இ 2-அ 3-ஆ 4-ஈ ஈ) 1-அ 2-இ 3-ஆ 4-ஈ

**விடை: ஆ) 1-ஆ 2-அ 3-ஈ 4-இ**

3. முத்தொள்ளாயிரம் எழுதப்பட்ட பா

அ) வெண்பா ஆ) ஆசிரியப்பா
இ) கலிப்பா ஈ) வஞ்சிப்பா **விடை: அ) வெண்பா**

4. முத்தொள்ளாயிரத்தில் பாடப்பெற்ற மன்னர்

அ) சேரர் ஆ) சோழர்
இ) பாண்டியர் ஈ) மூவரும் **விடை: ஈ) மூவரும்**

5. அச்சமில்லாத நாடு

அ) சேர நாடு ஆ) சோழ நாடு
இ) பாண்டிய நாடு ஈ) பல்லவ நாடு **விடை: அ) சேர நாடு**

6. ஏர்க்களச் சிறப்பும் போர்க்களச் சிறப்பும் உடைய நாடு

அ) சேர நாடு ஆ) சோழ நாடு
இ) பாண்டிய நாடு ஈ) பல்லவ நாடு **விடை: ஆ) சோழ நாடு**

7. முத்துடை நாடு

அ) சேர நாடு ஆ) சோழ நாடு
இ) பாண்டிய நாடு ஈ) பல்லவ நாடு **விடை: இ) பாண்டிய நாடு**

Please Send Your Study Materials to our Email Id: padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.CBSEtips.in



8. பகைவர் அஞ்சும் வேலைக் கொண்ட நாடு
அ) சேர நாடு ஆ) சோழ நாடு
இ) பாண்டிய நாடு ஈ) பல்லவ நாடு **விடை: அ) சேர நாடு**

9. யானைப்படைகளை உடைய நாடு
அ) சேர நாடு ஆ) சோழ நாடு
இ) பாண்டிய நாடு ஈ) பல்லவ நாடு **விடை: ஆ) சோழ நாடு**

10. முத்துகளான வெண் கொற்றக் குடை உள்ள நாடு
அ) சேர நாடு ஆ) சோழ நாடு
இ) பாண்டிய நாடு ஈ) பல்லவ நாடு **விடை: ஆ) பாண்டிய நாடு**

11. பொருந்தாவற்றை தேர்ந்தெடுக்க.
முத்தொள்ளாயிரம்
அ) வெண்பாவால் எழுதப்பட்ட நூல்.
ஆ) மூவேந்தர்களைப் பற்றிய 900 பாடல்களைக் கொண்ட நூல்.
இ) நூல் முழுமையும் கிடைத்துள்ளது.
ஈ) எழுதியவர் தொகுத்தவர் பெயர் அறிய இயலவில்லை.
**விடை: இ) நூல் முழுமையும் கிடைத்துள்ளது.**

12. நாவலோ என்று அழைத்தவர்
அ) உழவர் ஆ) வீரர்கள்
இ) சோழன் ஈ) சேரன் **விடை: அ) உழவர்**

13. பொருந்தாத இணையைக் கண்டறிக.
அ) கோக்கோதை நாடு - சேர நாடு
ஆ) கோக்கிள்ளி நாடு - சோழ நாடு
இ) முத்த வெண்குடையான் நாடு - பாண்டிய நாடு
ஈ) நச்சிலைவேல் நாடு - சோழ நாடு
**விடை: ஈ) நச்சிலைவேல் நாடு - சோழ நாடு**

14. ''பந்தர் இளங்கமுகின்'' என்பதில் 'பந்தர்' என்பது குறிக்கும் பொருள்
அ) பந்தல் ஆ) அரேபியர் வணிகம் செய்த இடம்
இ) பாக்கு ஈ) முத்து **விடை: அ) பந்தல்**

15. ''தென்னன் நகைமுத்த'' என்பதில் 'தென்னன்' என்பது குறிப்பது
அ) சேரன் ஆ) சோழன்
இ) பாண்டியன் ஈ) பல்லவன் **விடை: இ) பாண்டியன்**

## கோடிட்ட இடத்தை நிரப்புக.

1. ஒரு நாட்டின் __________ பாடுவதைப் புலவர்கள் கவிமரபாகக் கொண்டிருந்தனர்.
விடை: வளத்தைப்
2. பிற்காலக் காப்பியங்களில் __________ தவறாது இடம்பெற்றது. விடை: நாட்டுவளம்
3. முத்தொள்ளாயிரத்தின் ஆசிரியர் __________. விடை: அறிய இயலவில்லை

Please Send Your Study Materials to our Email Id: padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.CBSEtips.in



4. முத்தொள்ளாயிரத்தில் கிடைத்துள்ள பாடல்களின் எண்ணிக்கை ________.
விடை: 108 செய்யுட்கள்

5. வெண்பாவால் எழுதப்பட்ட நூல் ________. விடை: முத்தொள்ளாயிரம்

6. வயல்களில் விரிந்திருந்தவை ________. விடை: அரக்காம்பல்

## 2 குறுவினா

1. **முத்தொள்ளாயிரம் - குறிப்பு வரைக.**
   - வெண்பாவால் எழுதப்பட்ட நூல்.
   - மூவேந்தர்களைப் பற்றிய 900 பாடல்களைக் கொண்ட நூல் முத்தொள்ளாயிரம்.
   - நூல் முழுமையும் கிடைக்கவில்லை.
   - எழுதியவர், தொகுத்தவர் பெயர் அறிய இயலவில்லை.

2. **நீர்ப்பறவைகள் அஞ்சக் காரணம்?**
   வயல்களில் செவ்வாம்பல் மலர்கள் மலர்ந்திருந்ததைக் கண்டு, நீரில் தீப்பிடித்தது என்று எண்ணி நீர்ப்பறவைகள் அஞ்சியது.

3. **நாவலோ என்பதன் பொருள் யாது?**
   நாள் வாழ்க என்பது போன்ற வாழ்த்து.

4. **முத்தொள்ளாயிரம் குறிப்பிடும் சோழ நாட்டு வளம் யாது?**
   உழவர்கள் நெற்போர் மீது ஏறி ‘நாவலோ’ என்று கூவி மற்ற உழவர்களை அழைப்பர். இது போரில் யானைமீது நின்று ‘நாவலோ’ என்று கூவி மற்ற வீரர்களை அழைப்பது போல் இருந்தது. இத்தகு வளம் சோழ நாட்டில் காணப்பட்டது.

5. **முத்தொள்ளாயிரம் குறிப்பிடும் பாண்டிய நாட்டு வளம் யாது?**
   பாண்டியர் நாட்டில், கொற்கை நகரில் முத்துக்களைப் போல் சங்குவின் முட்டைகள், புன்னை மொட்டுக்கள், பாக்குப் பாளையில் இருந்து சிந்தும் மணிகள் ஆகியவை இருந்தன.

## கற்பவை கற்றபின்... பக்கம்: 190

1. **நீங்கள் வசிக்கும் பகுதி, வேந்தருள் யார் ஆண்ட நாடு, என்பதை அறிந்து அவர்களைப் பற்றிய செய்தித் தொகுப்பேடு ஒன்றை உருவாக்குக.**

நாங்கள் வசிக்கும் பகுதி நெல்லை மாவட்டத்தில் உள்ள தென்காசி என்னும் ஊர் ஆகும்.

தென்காசியை தலைநகராக்கி அங்கேயே முடிசூட்டிக் கொண்ட மன்னன் “சடையவர்மன் பராக்கிரம பாண்டியன்” ஆவார். சடையவர்மன் பராக்கிரம பாண்டியன் முதல் அவனின் அடுத்த தலைமுறையில் வந்த அனைத்துப் பாண்டியரும் தென்காசியையே தலைநகராகக் கொண்டு தென்காசி பெரிய கோயிலில் உள்ள சிவந்த பாதவூருடைய ஆதீன மடத்தில் முடிசூட்டிக் கொண்டனர்.

தென்காசி பெரியகோயில் பிரம்மதேசம், சேரன்மாதேவி, அம்பாசமுத்திரம், களக்காடு ஆகிய ஊர்களில் இவர்களைப் பற்றிய கல்வெட்டுகள் மற்றும் செப்பேடுகள் காணப்படுகின்றன.

Please Send Your Study Materials to our Email Id: padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.CBSEtips.in



2. நெல் விதைப்பது முதல் அரிசி புடைப்பது வரை, வயல்களக்காட்சியை அறிந்து தகுந்த படங்களுடன் காட்சிப்படுத்துக.

படங்கள்



உழுதல்



விதைத்தல், நடுதல்



உரமிடுதல்



களையெடுத்தல்



தலை சாய்த்து நிற்கும் நெற்பயிர்கள



வயல்வெளி



அறுவடை செய்தல்



போர் அடித்தல்



மூட்டைகளில் நெல் அளந்து கட்டுதல்



அரிசியாக்குதல்



அரிசி புடைத்தல்

Please Send Your Study Materials to our Email Id: padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.CBSEtips.in



இயல் 7

கவிதைப் பேழை

# மதுரைக்காஞ்சி

– மாங்குடி மருதனார்

| | | |
|---|---|---|
| ஆசிரியர் | - | மாங்குடி மருதனார்<br>மதுரைக்காஞ்சியைப் பாடியவர் |
| பிறப்பு | - | திருநெல்வேலி மாவட்டத்தில் உள்ள மாங்குடியில் பிறந்தவர் |
| படைப்புகள் | - | எட்டுத்தொகையில் 13 பாடல்களைப் பாடியவர். |

## சொற்பொருள்

| | | | | | |
|---|---|---|---|---|---|
| புரிசை | - | மதில் | அணங்கு | - | தெய்வம் |
| சில்காற்று | - | தென்றல் | புழை | - | சாளரம் |
| மாகால் | - | பெருங்காற்று | முந்நீர் | - | கடல் |
| பணை | - | முரசு | கயம் | - | நீர்நிலை |
| ஓவு | - | ஓவியம் | நியமம் | - | அங்காடி |

## இலக்கணக் குறிப்பு

| | | |
|---|---|---|
| ஓங்கிய | - | பெயரெச்சம் |
| நிலைஇய | - | சொல்லிசை அளபெடை |
| குழாஅத்து | - | செய்யுளிசை அளபெடை |
| வாயில் | - | இலக்கணப்போலி |
| மா கால் | - | உரிச்சொல் தொடர் |
| முழங்கிசை | - | வினைத்தொகை |
| இமிழிசை | - | வினைத்தொகை |
| நெடுநிலை | - | பண்புத்தொகை |
| முந்நீர் | - | பண்புத்தொகை |
| மகிழ்ந்தோர் | - | வினையாலணையும் பெயர் |

## பகுபத உறுப்பிலக்கணம்

**ஆழ்ந்த - ஆழ் + த்(ந்) + த் + அ**

| | | |
|---|---|---|
| ஆழ் | - | பகுதி |
| த் | - | சந்தி (ந்) ஆனது விகாரம் |
| த் | - | இறந்தகால இடைநிலை |
| அ | - | பெயரெச்ச விகுதி |

**ஓங்கிய - ஓங்கு + இ(ன்) + ய் + அ**

| | | |
|---|---|---|
| ஓங்கு | - | பகுதி |
| இ(ன்) | - | இறந்தகால இடைநிலை |
| ய் | - | உடம்படுமெய் |
| அ | - | பெயரெச்ச விகுதி |

Please Send Your Study Materials to our Email Id: padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.CBSEtips.in



**மகிழ்ந்தோர் - மகிழ் + த்(ந்) + த் + ஓர்**

| | | |
|---|---|---|
| மகிழ் | - | பகுதி |
| த் | - | சந்தி (ந்)ஆனது விகாரம் |
| த் | - | இறந்தகால இடைநிலை |
| ஓர் | - | பலர்பால் வினைமுற்று விகுதி |

## பாடநூல் மதிப்பீட்டு வினா

### 1 குறுவினா

1. **'மதுரைக்காஞ்சி' - பெயர்க்காரணத்தைக் குறிப்பிடுக.**

மதுரையின் சிறப்புகளைப் பாடுவதாலும், நிலையாமையைப் பற்றிக் கூறுவதாலும் மதுரைக்காஞ்சி எனப்பட்டது.

### 2 சிறுவினா

1. **''மாகால் எடுத்த முந்நீர் போல'' - இடஞ்சுட்டிப் பொருள் விளக்குக.**

**இடம்சுட்டல்:**

இவ்வடி மாங்குடி மருதனார் இயற்றிய மதுரைக்காஞ்சி நூலில் இடம்பெற்றுள்ளன.

**பொருள் விளக்கம்:**

விழா பற்றிய முரசறைவோரின் முழக்கம் பெருங்காற்று புகுந்த கடல் ஒலி போல் ஒலிக்கின்றது. பெருங்காற்று புகுந்தவுடன் கடல் பேரொலி எழுப்பும். அதனைப் போல மிகுதியான ஓசையுடன் முரசறைவோர் விழா பற்றி முழக்கம் செய்தனர்.

## கூடுதல் வினாக்கள்

### 1 பலவுள் தெரிக

1. **பொருத்துக.**

| | | | |
|---|---|---|---|
| 1. புரிசை | - | அ) | தெய்வம் |
| 2. அணங்கு | - | ஆ) | மதில் |
| 3. சில்காற்று | - | இ) | சாளரம் |
| 4. புழை | - | ஈ) | தென்றல் |

அ) 1-ஈ 2-இ 3-அ 4-ஆ ஆ) 1-ஆ 2-அ 3-ஈ 4-இ

இ) 1-அ 2-இ 3-ஈ 4-ஆ ஈ) 1-இ 2-அ 3-ஆ 4-இ

**விடை: ஆ) 1-ஆ 2-அ 3-ஈ 4-இ**

Please Send Your Study Materials to our Email Id: padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.CBSEtips.in



2. **பொருத்துக.**

1. மாகால் - அ) கடல்
2. முந்நீர் - ஆ) பெருங்காற்று
3. பணை - இ) நீர்நிலை
4. கயம் - ஈ) முரசு

அ) 1-ஈ 2-இ 3-அ 4-ஆ ஆ) 1-ஆ 2-அ 3-ஈ 4-இ
இ) 1-அ 2-இ 3-ஈ 4-ஆ ஈ) 1-இ 2-அ 3-ஆ 4-இ

**விடை: ஆ) 1-ஆ 2-அ 3-ஈ 4-இ**

3. **வனவிலங்குச் சரணாலயம் பழங்காலத் தமிழகத்தில் இருந்ததைக் குறிப்பிடும் நூல் எது?**

அ) புறநானூறு ஆ) நான்மாடக் கூடல்
இ) மதுரைக்காஞ்சி ஈ) பட்டினப்பாலை **விடை: இ) மதுரைக் காஞ்சி**

4. **தலையானங்கானகத்துச் செருவென்ற பாண்டிய நெடுஞ்செழியனைப் பாட்டுடைத் தலைவனாகக் கொண்ட நூல் எது?**

அ) புறநானூறு ஆ) நான்மாடக் கூடல்
இ) மதுரைக்காஞ்சி ஈ) பட்டினப்பாலை **விடை: இ) மதுரைக் காஞ்சி**

5. **தவறானவற்றைச் சுட்டுக.**

அ) மதுரைக்காஞ்சியைப் பாடியவர் மாங்குடி மருதனார்.
ஆ) திருநெல்வேலி மாவட்டத்தில் உள்ள மாங்குடியில் பிறந்தவர் மாங்குடி மருதனார்.
இ) எட்டுத்தொகையில் 13 பாடல்களைப் பாடியவர் மாங்குடி மருதனார்.
ஈ) நான்மாடக்கூடல் என்னும் நூலையும் மாங்குடி மருதனார் பாடியுள்ளார்.

**விடை: ஈ) நான்மாடக்கூடல் என்னும் நூலையும் மாங்குடி மருதனார் பாடியுள்ளார்.**

6. **பொருந்தாதவற்றைக் கண்டறிக.**

அ) பணை - முரசு
ஆ) கயம் - நீர்நிலை
இ) ஓவு - தெய்வம்
ஈ) நியமம் - அங்காடி **விடை: இ) ஓவு - தெய்வம்**

7. **மதுரைக்காஞ்சியின் மொத்த அடிகள் ________.**

அ) 782 ஆ) 762
இ) 882 ஈ) 872 **விடை: அ) 782**

8. **பொருத்துக.**

1. மதில் - அ) தெய்வத்தன்மை
2. வாயில் - ஆ) வானளவு
3. மாளிகை - இ) வைகை ஆறு
4. மக்கள் - ஈ) மேகங்கள் உலவும் மலை

அ) 1-ஈ 2-இ 3-அ 4-ஆ ஆ) 1-ஆ 2-அ 3-ஈ 4-இ
இ) 1-அ 2-இ 3-ஈ 4-ஆ ஈ) 1-இ 2-அ 3-ஆ 4-இ

**விடை: ஆ) 1-ஆ 2-அ 3-ஈ 4-இ**

Please Send Your Study Materials to our Email Id: padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.CBSEtips.in



9. மதுரைக்காஞ்சி நூல் ________.
அ) பதினெண்கீழ்க்கணக்கு ஆ) பதினெண்மேற்கணக்கு
இ) சிற்றிலக்கியம் ஈ) பேரிலக்கியம்
**விடை: ஆ) பதினெண்மேற்கணக்கு**

10. பதினெண்மேற்கணக்கு நூலில் முதன்மையானது ________.
அ) புறநானூறு ஆ) நான்மாடக் கூடல்
இ) மதுரைக்காஞ்சி ஈ) பட்டினப்பாலை **விடை: இ) மதுரைக்காஞ்சி**

11. மதுரையில் காணப்பட்ட பகற்கடைகள்
அ) அல்லங்காடி ஆ) நாளங்காடி
இ) புரிசை ஈ) கயம் **விடை: ஆ) நாளங்காடி**

12. மதுரையில் காணப்பட்ட இரவுக்கடைகள்
அ) அல்லங்காடி ஆ) நாளங்காடி
இ) புரிசை ஈ) கயம் **விடை: அ) அல்லங்காடி**

13. ''வைகை அன்ன வழக்குடை வாயில்'' - இவ்வடியில் இடம்பெறும் உவமை யாது?
அ) வைகை ஆ) அன்ன
இ) வாயில் ஈ) வழக்குடை **விடை: அ) வைகை**

14. ''மழைஆடும் மலையின் நிவந்த மாடமொடு'' இவ்வடியில் இடம்பெறும் உவமை யாது?
அ) மழை ஆ) மலை
இ) நிவந்த ஈ) மாடம் **விடை: ஆ) மலை**

15. ''மகிழ்ந்தோர் ஆடும் கலிகொள்'' இவ்வடியில் 'கலி' என்பது சுட்டுவது
அ) மகிழ்ச்சி ஆ) துன்பம்
இ) சினம் ஈ) பெருமிதம் **விடை: அ) மகிழ்ச்சி**

### கோடிட்ட இடத்தை நிரப்புக.

1. கயம் என்பதன் பொருள் ________. விடை: முரசு
2. ஓவு என்பதன் பொருள் ________. விடை: ஓவியம்
3. நியமம் என்பதன் பொருள் ________. விடை: அங்காடி
4. நாளங்காடியும், அல்லங்காடியும் ________ போலக் காட்சியளிக்கின்றன. விடை: ஓவியம்
5. எட்டுத்தொகையில் ________ பாடல்களைப் பாடியுள்ளார் மாங்குடிமருதனார். விடை: 13
6. ________ நூல்களுள் ஒன்று மதுரைக்காஞ்சி. விடை: பத்துப்பாட்டு
7. மதுரைக் காஞ்சியை இயற்றியவர் ________. விடை: மாங்குடி மருதனார்

Please Send Your Study Materials to our Email Id: padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.CBSEtips.in



## 2 குறுவினா

1. " பொறிமயிர் வானம்..... கூட்டுறை வயமாப் புலியொடு குழும" - இவ்வடிகள் மூலம் நாம் அறியும் செய்தி யாது?

மதுரையில் வனவிலங்கு சரணாலயம் இருந்துள்ளதை இவ்வடிகள் மூலம் அறியலாம்.

2. ஓவியம் போன்ற இருபெரும் கடைத்தெருக்கள் எவை?

- நாளங்காடி
- அல்லங்காடி

3. பெருங்காற்று புகுந்த கடலொலி போல ஒலித்தவை எவை?

விழா பற்றிய முரசறைவோரின் முழக்கம் பெருங்காற்று புகுந்த கடலொலி போல ஒலித்தன.

4. மாங்குடி மருதனார் குறிப்பு வரைக.

- மதுரைக்காஞ்சியைப் பாடியவர்.
- திருநெல்வேலி மாவட்டத்தில் உள்ள மாங்குடியில் பிறந்தவர்.
- எட்டுத்தொகையில் 13 பாடல்களைப் பாடியவர்.

5. பதினெண்மேற்கணக்கு நூல்கள் எவை?

- பத்துப்பாட்டு
- எட்டுத்தொகை

6. முந்நீர் என்பதை விரித்தெழுதுக.

முந்நீர் - ஆற்றுநீர், ஊற்றுநீர், மழைநீர்.

7. பெருங்காற்று புகுந்த கடலொலி போல என்ற உவமை எதற்கு ஒப்பாகக் கூறப்பட்டது?

பெருங்காற்று புகுந்த கடலொலி போல என்ற உவமை, 'விழா பற்றிய முரசறைவோரின் முழக்கம்' ஒப்பாகக் கூறப்பட்டது.

8. "மாகால் எடுத்த முந்நீர் போல" என்பதில் 'மாகால்', 'முந்நீர்' ஆகிய சொற்களின் பொருள் யாது?

- மாகால் - பெருங்காற்று
- முந்நீர் - கடல்

## 3 சிறுவினா

1. மதுரைக்காஞ்சியில் கவித்துவமாய் விரிந்துள்ளன எவை?

- மதுரை மக்களின் வாழ்விடம்
- கோட்டை
- கோட்டைகொத்தளம்
- அந்நகரில் நிகழும் திருவிழாக்கள்
- பல்வகைப் பள்ளிகள்
- நாற்பெருங்குழு
- அந்தி வணிகம்

2. மதுரைக்காஞ்சி - குறிப்பு வரைக.

- பத்துப்பாட்டு நூல்களுள் ஒன்று மதுரைக்காஞ்சி.
- மதுரையின் சிறப்புகளைப் பாடுவதாலும், நிலையாமையைப் பற்றிக் கூறுவதாலும் மதுரைக்காஞ்சி எனப்பட்டது.

Please Send Your Study Materials to our Email Id: padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.CBSEtips.in



- 782 அடிகளை உடையது.
- 354 அடிகள் மதுரையைச் சிறப்பித்துக் கூறுகின்றது.
- இதனை 'பெருகுவள மதுரைக்காஞ்சி' என்பர்.
- இயற்றியவர் : மாங்குடி மருதனார்.
- பாட்டுடைத்தலைவன் : தலையாலங்கானத்துச் செருவென்ற பாண்டிய நெடுஞ்செழியன்

**3. 'ஓவுக் கண்டன்ன இருபெரு நிலத்து' - தொடர் பொருள் கூறுக.**

பெரிய தெருக்களில் இருக்கும் நாளங்காடியும் அல்லங்காடியும் ஓவியங்கள் போலக் காட்சியளிக்கின்றன.

## 4 சிறுவினா

**1. மதுரைக்காஞ்சிப் பாடலின் வருணனையைத் தொகுத்து எழுதுக.**

- மதுரையில் ஆழமான அகழி உள்ளது. பல கல் கொண்ட வானளவு மதில், தெய்வம் பொருந்திய வாயில்,நெய்பூசி கருமையான கதவு, மேகம் உலவும் மலை போன்ற மாளிகை ஆகியவற்றைக் கொண்டது.
- இடைவிடாது ஓடும் வைகை நதி போன்ற மக்கள் எப்போதும் வாயில்கள் வழியே செல்கின்றனர்.
- மண்டபம், கூடம், அடுக்களை ஆகியன உள்ள பலபிரிவுகளைக் கொண்டு வானம் வரை இசை க்கும் பல சாளரங்களையுடைய இல்லங்கள் உள்ளன.
- ஆறு போன்ற தெருவில் பலமொழி பேசும் மக்களின் பேச்சு ஒலிக்கின்றன.
- விழா பற்றிய முரசறைவோரின் முழக்கம் பெருங்காற்று புகுந்த கடல் ஒலி போல் ஒலிக்கின்றது.
- இசைக் கருவிகளை இசைப்பதால் உண்டாகும் இசை, நீர்நிலைகளை கையால் குடைந்து விளையாடும் தன்மை போல எழுகிறது.
- பெரிய தெருக்களில் இருக்கும் நாளங்காடியும் அல்லங்காடியும் ஓவியங்கள் போலக் காட்சியளிக்கின்றன.

## கற்பவை கற்றபின்... 

பக்கம்: 193

**1. உங்கள் ஊரின் பெயர்க்காரணத்தை எழுதி வகுப்பறையில் கலந்துரையாடுக.**

எங்கள் ஊர் ஈரோடு. இரண்டு ஓடைகள் ஓடுவதால் ஈரோடை எனப் பெயர் பெற்றது. அதுவே காலப்போக்கில் மருவி ஈரோடு என்று ஆனது.

பைரவ புராண விளக்கவுரையில், சிவனின் மாமனாரான தட்சன், தாம் நடத்திய யாகத்திற்கு தமது மருமகனான இறைவன் சிவனைக் கூப்பிடவே இல்லை, அவரது மனைவி தட்சாயினி தமது கணவர் விருப்பத்திற்கு எதிராக யாகத்திற்கு வந்தாள், யாகத்தில் தமது கணவரைத் தந்தை இழிவுபடுத்தியதால் மனமுடைந்து திரும்பினாள். மேலும் அவள் சிவனிடம் திரும்பியபின் சிவன் கோபமுற்று தட்சாயினியை எரித்தார் எனக்கூறுகிறது. அதை கேட்ட பிரம்மா தன் ஐந்தாவது தலையைத் துண்டித்தார். அந்த மண்டை ஓடு சி வனை ஒட்டிக்கொண்டு பிரம்மதோஷம் பிடித்தது. பிரம்மதோஷத்தின் காரணமாக சிவன் இந்தியா முழுவதும் சுற்றினார். அப்போது ஈரோடு வந்து போது இங்குள்ள கபால தீர்த்தத்தில் நீராடியதால் மண்டை ஓடு சிதைந்தது. இந்த மண்டை துணுக்குகள், ஈரோட்டினை சுற்றியுள்ள வெள்ளோடு (வெள்ளை மண்டை), பேரோடு (பெரிய மண்டை) மற்றும் சித்தோடு (சிறிய மண்டை) ஆகிய இடங்களில் விழுந்ததாக கூறுகிறது. ஈர் (இறுதி) ஓடு என்பதால் 'ஈரோடு' என்பர்.

Please Send Your Study Materials to our Email Id: padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.CBSEtips.in



2. **தமிழ்த்தாயின் ஆணிவேர் துளிர்த்த இடம் மதுரை. இரண்டாயிரம் ஆண்டுகளுக்கும் மேற்பட்ட வரலாற்றைக் கொண்ட உலகின் தொன்மை நகரங்களில் ஒன்று மதுரை. அந்நகரத்தில் இயலும் இசையும் நாடகமும் பொங்கிப் பெருகின - இத்தொடர்களுக்கு வலிமை சேர்க்கும் வகையில் கருத்துகளைத் திரட்டி ஐந்து மணித்துளிகள் பேசுக.**

சங்கத் தமிழே! சரித்திரத் தமிழே வணக்கம். மதுரையின் மாண்பைப் பேசுகின்றேன். பாண்டியன் வளர்த்த சங்கம் உருவான இடம் மதுரை. தமிழாய்ந்த தமிழ்மகனார்கள் குழுமி தமிழ் வளர்த்த இடம் மதுரை. சிறந்த நூல்கள் அரங்கேற்றம் செய்த நம் மூத்தகுடிப்புலவர்கள் தவழ்ந்த இடம் மதுரைநகர் ஆகும். அதனால்தான் என்னவோ? முத்தமிழ் வளர்த்த 'மதுரை' இனிமை என்ற பொருளில் இனிக்கின்றது. இயல், இசை, நாடகத்தையும் வளர்த்து, அறநெறி நூல்கள் வழி ஒழுக்கத்தையும், பத்தி இலக்கியங்கள் வழி மறுமை வாழ்க்கையும் பல பயனுள்ளவற்றை மண்ணுலகிற்கு வழங்கிய பெருமை எல்லாம் மதுரையையேச் சாரும் என்று சொல்லி நிறைவு செய்கின்றேன், நன்றி! வணக்கம்!

●●✧✧✧●●

# இயல் 7 விரிவானம்

# சந்தை

## பாடநூல் மதிப்பீட்டு வினா

### 1 பலவுள் தெரிக

1. **உங்கள் ஊரில் உற்பத்தியாகும் பொருள்களையும் சந்தையில் காணும் பொருள்களையும் ஒப்பிட்டு எழுதுக.**

◈ மஞ்சள், சர்க்கரை ஆகியவை எங்கள் ஊரில் உற்பத்தியாகும் பொருள்கள்.

◈ விரலி மஞ்சள், வெல்லம், கருப்பட்டி, நாட்டுச் சர்க்கரை ஆகியவை சந்தையில் காணும் பொருள்கள்.

### 2 சிறுவினா

1. **சந்தைக்கும் பல்பொருள் அங்காடிக்குமான வேறுபாடுகளைப் பட்டியலிடுக.**

| | சந்தை | பல்பொருள் அங்காடி |
|---|---|---|
| 1. | கிராமத்தில் காணப்படும். | நகரங்களில் காணப்படும். |
| 2. | விளம்பரம் தேவையில்லை; நேர்மை அடிப்படை. | விளம்பரம், காட்சிப்படுத்தல் தேவை. |
| 3. | காய்கறி, கீரை, தானியம், கோழி, ஆடு, மாடு, குதிரை, பாத்திரம் போன்றவற்றை விற்பர். | குண்டூசியிலிருந்து கணினி வரை கிடைக்கும். |

Please Send Your Study Materials to our Email Id: padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.CBSEtips.in



| | | |
|---|---|---|
| 4. | சிறு வணிகச் செயல்பாடு. | பெருவணிகச் செயல்பாடு. |
| 5. | கழைக்கூத்து, பொம்மலாட்டம் உண்டு. | திரைப்பட அரங்கு, கேளிக்கை அரங்குகள், உணவகம் உண்டு. |

## 4 நெடுவினா

1. **எங்கள் ஊர்ச்சந்தை என்னும் தலைப்பில் நாளிதழ்ச் செய்தி ஒன்றை எழுதுக.**

**எங்கள் ஊர்ச்சந்தை திங்கள் சந்தை**

எங்கள் ஊரில் திங்கட்கிழமை நடக்கும் சந்தை மிகவும் புகழ்பெற்றது. இங்குச் சின்னஞ் சிறு ஊசி முதல் சிங்கார ஆடைகள் வரை அனைத்துப் பொருட்களும் உள்ளன.

அனைத்து வகையான கீரைகள், தானியங்கள் தனித்தனியே பெரிய கடைகளைப் போன்று விற்கப்படுகின்றன. பூச்சிக்கொல்லிகள் பயன்படுத்தாத இயற்கை காய்கறிகள், பழங்கள் மட்டுமே இங்கு விற்கப்படுகின்றன.

வண்ண வண்ணப் பூக்களும், வாசனை மலர்களும் ஏராளம். அதனை வாங்கும் மகளிர்க் கூட்டம் தாராளம். பஞ்சுமிட்டாயும், பம்பாய் மிட்டாயும், கரும்புச் சாறும், பலாப்பழமும் சந்தையில் போவோர் வருவோரை நாவில் எச்சில் ஊரச்செய்யும்.

மாலை 4 மணி முதல் இரவு 9 மணிவரை சந்தையின் சத்தம் வானளாவி நிற்கும்.

கைநிறைய பணம் இல்லை என்றாலும், குறைந்த செலவில் மஞ்சள்பை நிறைய பொருடக்ளை வாங்கிச் செல்லலாம்.

## கற்பவை கற்றபின்...

**பக்கம்: 199**

1. **சந்தை நிகழ்வுகளை நாடகமாக நடித்துக் காட்டுக.**

| வகுப்பறை நாடகம் |
|---|
| **நிகழிடம் : வாரச் சந்தை** |
| **மாந்தர் : வணிகர் 1, வணிகர் 2, நிஷா, சித்ரா, குளோரி.** |

**வணிகர் 1** : அம்மா! வாங்க! தக்காளி இரண்டு கிலோ பத்து, இரண்டு கிலோ பத்து.

**வணிகர் 2** : அம்மா! வாங்க! கத்தரிக்காய் கால் கிலோ பத்து, கால் கிலோ பத்து.

**நிஷா** : ஐயா, என்ன தக்காளி மின்னுகிறதே, என்ன நெகிழித் தக்காளியா?

**வணிகர் 1** : ஏம்மா, நல்ல தக்காளி கொடுத்தா இப்படிக் கேட்குறீங்க.

**சித்ரா** : எல்லாத்துலயும், நெகிழி கலக்கறாங்க, அதுதான் அப்படி கேட்கிறோம். இந்தா, இரண்டு கிலோ கொடு.

**வணிகர் 2** : அம்மா, கத்தரிக்கா, இயற்கையா விளைஞ்சுதம்மா?

**சித்ரா** : ஏப்பா, கூடைய எடு. என்ன எல்லாம் சொத்தையா இருக்கு.

**நிஷா** : ம்ம்.... அதனாப்பா.

**வணிகர் 2** : ஏம்மா! பூச்சி அரிச்சா சொத்ததாம்மா?

Please Send Your Study Materials to our Email Id: padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.CBSEtips.in



**குளோரி** : அய்ய... இதை வாங்கி என்ன பண்ண?

**வணிகர் 2** : காய்கறில பூச்சி புழுவெல்லாம் கடிக்கலென்னா, அதெல்லாம் மருந்து அடிச்ச காய், அத வாங்கிச் சாப்பிட்டா நஞ்சும்மா. மருந்தடிக்காத காயிலதான் பூச்சி அரிக்கும்.

**மூவரும்** : அடடே! அப்படியா! இத்தன நாளா இது தெரியலயே? சரி கொடுப்பா.

**2. சந்தை / அங்காடியில் இருக்கும் பொருள்களுக்கான விலைப்பட்டியல் எழுதிய விளம்பரப் பதாகை ஒன்றை உருவாக்குக.**

**சிற்பி காய்கனி அங்காடி**
*திருச்சி - 1.*

| காய் | | | கனி | |
|---|---|---|---|---|
| பொருள் (கி) | விலை (₹) | | பொருள் (கி) | விலை (₹) |
| தக்காளி | 20 | | ஆப்பிள் | 110 |
| கத்தரிக்காய் | 50 | | மாதுளை | 60 |
| உருளைக்கிழங்கு | 70 | | கொய்யா | 40 |
| பாகற்காய் | 43 | | திராட்சை | 30 |
| வெங்காயம் (பெரியது) | 20 | | ஆரஞ்சு | 115 |

**3. சிறு வணிகர் ஒருவரிடம் நேர்காணல் செய்க.**

**எ.கா: சந்தைப் பொருள்கள் மீதமானால் என்ன செய்வீர்கள்?**

**சிறு வணிகர்** : வாருங்கள் குழந்தைகளே! என்ன வேண்டும்?

**மாணவர்** : வணக்கம். ஐயா! உங்களிடம் நேர்காணல் செய்ய வந்துள்ளோம்.

**சிறு வணிகர்** : அப்படியா? சரி என்ன சொல்ல வேண்டும்.

**மாணவர்** : வாரம் எத்தனை சந்தை செல்வீர்?

**சிறு வணிகர்** : மூன்று சந்தைகள் குழந்தைகளே!

**மாணவர்** : எடை சரியாகப் போடுவீர்களா!

**சிறு வணிகர்** : குழந்தைகளே! நான் நேர்மையான தமிழன், அப்படியெல்லாம் ஏமாற்றமாட்டேன்.

**மாணவர்** : பொருட்கள் மீதமானால் என்ன செய்வீர்கள்?

**சிறு வணிகர்** : பக்கத்தில் உள்ள முதியோர் இல்லத்திற்குக் கொடுத்துவிடுவேன்.

**மாணவர்** : என்னே! உங்கள் மனித நேயம்.
நன்றி ஐயா! நாங்கள் வருகிறோம்.

**4. ''கடன் அன்பை முறிக்கும்'' இது போன்ற சொற்றொடர்களைக் கடைகள், பல்பொருள் அங்காடிகள், சந்தைகளில் பார்த்து எழுதுக.**

- தரமே எங்கள் தாரக மந்திரம்
- ஏமாறாதே! ஏமாற்றாதே!
- நோயற்ற வாழ்வே குறைவற்ற செல்வம்
- முன்னாள் தொழிலாளி
  இன்னாள் முதலாளி

Please Send Your Study Materials to our Email Id: padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.CBSEtips.in



# இயல் 7 இலக்கணம்

# ஆகுபெயர்

## பாடநூல் மதிப்பீட்டு வினா

### 1 சிறுவினா

1. பண்பாகுபெயர், தொழிலாகு பெயர் - விளக்குக.

◈ பண்புப்பெயர் அதனோடு தொடர்புடைய வேறு பெயருக்கு ஆகிவருது பண்பாகு பெயர் எனப்படும்.

**சான்று:** மஞ்சள் பூசினாள்.

மஞ்சள் என்னும் பண்பு, அவ்வண்ணம் உள்ள கிழங்கிற்கு ஆகி வந்தது.

◈ தொழிலின் பெயர் அதனோடு தொடர்புடைய வேறு பெயருக்கு ஆகிவருவது தொழிலாகு பெயர் எனப்படும்.

**சான்று:** வற்றல் தின்றான்.

வற்றல் தொழிற்பெயர், வற்றிய உணவுப்பொருளுக்கு ஆகி வருவது.

## கூடுதல் வினாக்கள்

### 1 பலவுள் தெரிக

1. பொருத்துக.

| | | | |
|---|---|---|---|
| 1. | முதலாகுபெயர் | - அ) | வகுப்பறை சிரித்தது |
| 2. | இடவாகுபெயர் | - ஆ) | முல்லை தொடுத்தாள் |
| 3. | காலவாகுபெயர் | - இ) | மருக்கொழுந்து நட்டான் |
| 4. | சினையாகுபெயர் | - ஈ) | கார் அறுத்தான் |

அ) 1-ஈ 2-இ 3-அ 4-ஆ　　ஆ) 1-ஆ 2-அ 3-ஈ 4-இ

இ) 1-அ 2-இ 3-ஈ 4-ஆ　　ஈ) 1-இ 2-அ 3-ஆ 4-இ

விடை: ஆ) 1-ஆ 2-அ 3-ஈ 4-இ

2. பொருத்துக.

| | | | |
|---|---|---|---|
| 1. | மஞ்சள் பூசினாள் | - அ) | தொழிலாகுபெயர் |
| 2. | வற்றல் தின்றான் | - ஆ) | பண்பாகுபெயர் |
| 3. | வானொலி கேட்டு மகிழ்ந்தான் | - இ) | காரியவாகுபெயர் |
| 4. | பைங்கூழ் வளர்ந்தது | - ஈ) | கருவியாகுபெயர் |

அ) 1-ஈ 2-இ 3-அ 4-ஆ　　ஆ) 1-ஆ 2-அ 3-ஈ 4-இ

இ) 1-அ 2-இ 3-ஈ 4-ஆ　　ஈ) 1-இ 2-அ 3-ஆ 4-இ

விடை: ஆ) 1-ஆ 2-அ 3-ஈ 4-இ

Please Send Your Study Materials to our Email Id: padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.CBSEtips.in



3. ஒன்றின் இயற்பெயர், அதனோடு தொடர்புடைய மற்றொன்றித் தொன்று தொட்டு ஆகிவருவது

அ) ஆகுபெயர் ஆ) புணர்ச்சி

இ) சொல் ஈ) அணி விடை: அ) ஆகுபெயர்

4. தொல்காப்பியர் கூறும் ஆகுபெயர் வகை

அ) 6 ஆ) 7

இ) 16 ஈ) 15 விடை: ஆ) 7

5. நன்னூலார் கூறும் ஆகுபெயர் வகை

அ) 6 ஆ) 7

இ) 16 ஈ) 15 விடை: ஆ)15

6. முல்லையைத் தொடுத்தாள் என்பது __________ ஆகுபெயர்.

அ) பொருள் ஆ) இடம்

இ) காலம் ஈ) சினை விடை: அ) பொருள்

7. வகுப்பறை சிரித்தது என்பது __________ ஆகுபெயர்.

அ) பொருள் ஆ) இடம்

இ) காலம் ஈ) சினை விடை: ஆ) இடம்

8. கார் அறுத்தான் என்பது __________ ஆகுபெயர்.

அ. பொருள் ஆ) இடம்

இ) காலம் ஈ) சினை விடை: இ) காலம்

9. மருக்கொழுந்து நட்டான் என்பது __________ ஆகுபெயர்.

அ) பொருள் ஆ) இடம்

இ) காலம் ஈ) சினை விடை: ஈ) சினை

10. மஞ்சள் பூசினான் என்பது __________ ஆகுபெயர்.

அ) பண்பு ஆ) தொழில்

இ) கருவி ஈ) காரியம் விடை: அ) பண்பு

11. வற்றல் தின்றான் என்பது __________ ஆகுபெயர்.

அ) பண்பு ஆ) தொழில்

இ) கருவி ஈ) காரியம் விடை: ஆ) தொழில்

12. வானொலி கேட்டு மகிழ்ந்தான் என்பது __________ ஆகுபெயர்.

அ) பண்பு ஆ) தொழில்

இ) கருவி ஈ) காரியம் விடை: இ) கருவி

13. பைங்கூழ் வளர்ந்தது - என்பது __________ ஆகுபெயர்.

அ) பண்பு ஆ) தொழில்

இ) கருவி ஈ) காரியம் விடை: ஈ) காரியம்

Please Send Your Study Materials to our Email Id: padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.CBSEtips.in



**கோடிட்ட இடத்தை நிரப்புக.**

1. ''அறிஞர் அண்ணாவைப் படித்திருக்கிறேன்'' என்பது ________ ஆகுபெயருக்குச் சான்று.
 **விடை: கருத்தா**
2. ''ஒன்று பெற்றால் ஒளிமயம்'' என்பது ________ ஆகுபெயருக்குச் சான்று.
 **விடை: எண்ணலளவை**
3. ''அரை லிட்டர் வாங்கு'' என்பது ________ ஆகுபெயருக்குச் சான்று. **விடை: முகத்தலளவை**
4. ''இரண்டு கிலோ கொடு'' என்பது ________ ஆகுபெயருக்குச் சான்று. **விடை: எடுத்தலளவை**
5. ஐந்து மீட்டர் வெட்டிக்கொடு - என்பது ________ ஆகுபெயருக்குச் சான்று.
 **விடை: நீட்டலளவை**

## 2 குறுவினா

**1. ஆகுபெயர் என்றால் என்ன? சான்று தருக.**

ஒன்றின் இயற்பெயர், அதனோடு தொடர்புடைய மற்றொன்றிற்குத் தொன்று தொட்டு ஆகிவருவது ஆகுபெயர் ஆகும்.

**சான்று** : ஊர் சிரித்தது.

**விளக்கம்** : இங்கு 'ஊர்' என்பது 'ஊரில்' உள்ள மக்களுக்கு ஆகி வந்தது.

**2. ஆகுபெயர் எத்தனை வகைப்படும்?**

ஆகுபெயர்களைத் தொல்காப்பியர் ஏழாகவும், நன்னூலார் பதினைந்தாகவும் வகைப்படுத்தியுள்ளனர்.

**3. பொருளாகுபெயரை (முதலாகு பெயர்) விளக்குக.**

ஒரு முழுப்பொருளின் பெயர், அதனைச் சுட்டாது அதன் முதற்பொருளுக்கு ஆகிவருவது பொருளாகுபெயர் (முதலாகு பெயர்) எனப்படும்.

**சான்று** : முல்லையைத் தொடுத்தாள்.

**விளக்கம்** : முதற்பொருளான முல்லைக் கொடி, அதன் உறுப்பாகிய பூவுக்கு ஆகிவந்தது.

**4. இடவாகு பெயரை விளக்குக.**

இடப்பெயர் அதனோடு தொடர்புடைய வேறு பெயருக்கு ஆகிவருது இடவாகு பெயர் எனப்படும்.

**சான்று** : வகுப்பறை சிரித்தது.

**விளக்கம்** : வகுப்பறையாகிய இடப்பெயர் அங்குள்ள மாணவர்களுக்கு ஆகி வந்தது.

**5. காலவாகு பெயரை விளக்குக.**

காலப்பெயர் அதனோடு தொடர்புடைய வேறு பெயருக்கு ஆகிவருது காலவாகு பெயர் எனப்படும்.

**சான்று** : கார் அறுத்தான்.

**விளக்கம்** : கார் என்னும் காலப்பெயர், அக்காலத்தில் விளையும் பயிருக்கு ஆகி வந்தது.

**6. ''மருக்கொழுந்து நட்டான்'' - இது எவ்வகை ஆகுபெயரைச் சுட்டி விளக்குக.**

இது சினையாகு பெயர்.

சினைப் பெயர் அதனோடு தொடர்புடைய வேறு பெயருக்கு ஆகிவருது சினையாகு பெயர் எனப்படும்.

**விளக்கம்** : மருக்கொழுந்து என்னும் சினைப்பெயர், அதன் செடிக்கு ஆகி வந்தது.

Please Send Your Study Materials to our Email Id: padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.CBSEtips.in



7. **பண்பாகுபெயரை விளக்குக.**

பண்புப்பெயர் அதனோடு தொடர்புடைய வேறு பெயருக்கு ஆகிவருது பண்பாகு பெயர் எனப்படும்.

**சான்று** : மஞ்சள் பூசினாள்.

**விளக்கம்** : மஞ்சள் என்னும் பண்பு, அவ்வண்ணம் உள்ள கிழங்கிற்கு ஆகி வந்தது.

8. **தொழிலாகு பெயரை விளக்குக.**

தொழிலின் பெயர் அதனோடு தொடர்புடைய வேறு பெயருக்கு ஆகிவருது தொழிலாகு பெயர் எனப்படும்.

**சான்று** : வற்றல் தின்றான்.

**விளக்கம்** : வற்றல் தொழிற்பெயர், வற்றிய உணவுப்பொருளுக்கு ஆகி வருவது.

9. **கருவியாகு பெயரை விளக்குக.**

கருவியின் பெயர் காரியத்திற்கு ஆகி வருவது கருவியாகு பெயர் எனப்படும்.

**சான்று** : வானொலி கேட்டு மகிழ்ந்தனர்.

**விளக்கம்** : வானொலி என்னும் கருவி அதன் காரியமாகிய நிகழ்ச்சிக்கு ஆகி வந்தது.

10. **காரியவாகுபெயரை விளக்குக.**

காரியத்தின் பெயர் காரணத்திற்கு ஆகி வருவது காரியவாகுபெயர் எனப்படும்.

**சான்று** : பைங்கூழ் வளர்ந்தது.

**விளக்கம்** : கூழ் என்னும் காரியம் அதன் கருவியாகிய பயிருக்கு ஆகி வந்தது.

11. **கருத்தாவாகு பெயரை விளக்குக.**

கருத்தாவின் பெயர் அவரால் இயற்றப்பட்ட காரியத்திற்கு ஆகி வருவது கருத்தாவாகு பெயர் எனப்படும்.

**சான்று** : அறிஞர் அண்ணாவைப் படித்திருக்கிறேன்.

**விளக்கம்** : அறிஞர் அண்ணா என்னும் கருத்தாவின் பெயர், அவர் இயற்றிய நூல்களுக்கு ஆகி வருகிறது.

12. **எண்ணலளவை ஆகுபெயரை விளக்குக.**

எண்ணின் பெயர் அதனோடு தொடர்புடைய பொருளுக்கு ஆகி வருவது எண்ணலளவை ஆகுபெயர் எனப்படும்.

**சான்று** : ஒன்று பெற்றால் ஒளிமயம்.

**விளக்கம்** : ஒன்று என்ற எண்ணுப்பெயர், அவ்வெண்ணுக்குத் தொடர்புடைய குழந்தைக்கு ஆகி வருகிறது.

13. **எடுத்தலளவை ஆகுபெயர் என்றால் என்ன? சான்றுடன் விளக்குக.**

எடுத்தலளவைப் பெயர் (நிறுத்தலளவைப் பெயர்) அதனோடு தொடர்புடைய பொருளுக்கு ஆகிவருவது எடுத்தலளவை ஆகுபெயர் எனப்படும்.

**சான்று** : இரண்டு கிலோ கொடு.

**விளக்கம்** : எடுத்தல் என்னும் அளவை பெயர், அவ்வளவையுள்ள பொருளுக்கு ஆகி வந்தது.

14. **முகத்தலளவை ஆகுபெயரை விளக்குக.**

முகத்தல் அளவைப்பெயர் அதனோடு தொடர்புள்ள பொருளுக்கு ஆகி வருவது முகத்தலளவையாகு பெயர்.

Please Send Your Study Materials to our Email Id: padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.CBSEtips.in



**சான்று** : அரை லிட்டர் வாங்கு.

**விளக்கம்** : முகந்து அளக்கும் முகத்தல் அளவைப் பெயர், அவ்வளவையுள்ள பொருளுக்கு ஆகி வந்தது.

15. நீட்டலளவை ஆகுபெயரை விளக்குக.

நீட்டல் அளவைப்பெயர் அதனோடு தொடர்புடைய பொருளுக்கு ஆகிவருவது நீட்டலளவை ஆகுபெயர் எனப்படும்.

**சான்று** : ஐந்து மீட்டர் வெட்டினான்.

**விளக்கம்** : நீட்டி அளக்கும் நீட்டலளவைப் பெயர், அவ்வளவையுள்ள பொருளுக்கு ஆகி வந்தது.

## கற்பவை கற்றபின்...

**பக்கம்: 201**

1. ஆகுபெயரைக் கண்டறிக.

அ) தமிழரசி வள்ளுவரை ஓவியமாக வரைந்தாள். **தொழிலாகு பெயர்**
தமிழரசி வள்ளுவரைப் படித்தாள். **கருத்தாவாகு பெயர்**

ஆ) மாமாவின் வருகைக்கு வீடே மகிழ்கிறது. **இடவாகு பெயர்**
நாடும் வீடும் நமதிரு கண்கள். **சினையாகு பெயர்**

இ) கலைச்செல்வி பச்சை நிற ஆடையை உடுத்தினாள். **தொழிலாகு பெயர்**
கலைச்செல்வி பச்சை உடுத்தினாள். **பொருளாகு பெயர் (முதலாகு பெயர்)**

ஈ) நாலும் இரண்டும் சொல்லுக்கு உறுதி. **எண்ணலளவையாகு பெயர்**
நாலடி நானூறும் இரண்டடித் திருக்குறளும் வாழ்வுக்கு உறுதி தரும். **காரியவாகுபெயர**

உ) ஞாயிற்றை உலகம் சுற்றி வருகிறது. **தொழிலாகுபெயர்**
நீங்கள் கூறுவதை உலகம் ஏற்குமா - **இடவாகுபெயர்**

2. ஆகுபெயர் அமையுமாறு தொடர்களை மாற்றி எழுதுக.

**அ) மதுரை மக்கள் இரவிலும் வணிகம் செய்கின்றனர்.**
மதுரையில் இரவு வணிகம் உண்டு.

**ஆ) இந்திய வீரர்கள் எளிதில் வென்றனர்.**
இந்தியா எளிதாக வென்றது.

**இ) நகைச்சுவை நிகழ்வைப் பார்த்து அரங்கத்தில் உள்ளவர்கள் சிரித்தனர்.**
நகைச்சுவை நிகழ்வைப் பார்த்து அரங்கமே சிரித்தது.

**ஈ) நீரின்றி இவ்வுலக மக்களால் இயங்க முடியாது.**
நீரின்றி உலகு இயங்காது.

## சிந்தனை வினா

1. தற்காலப் பேச்சு வழக்கிலும், எழுத்து வழக்கிலும் ஆகுபெயரை எப்படியெல்லாம் பயன்படுத்துகிறோம் என்பதற்கு எடுத்துக்காட்டுகள் தருக.

தற்காலப்பேச்சு வழக்கில் ஆகுபெயர்:

- ◈ பால் வந்ததா? - என்பது பால் விற்பனை செய்யும் பால்காரருக்கு ஆகி வந்தது.
- ◈ பேருந்து நிறுத்தத்தில் 12 போயிருச்சா? எனக் கேட்பது 12 எண்ணுள்ள பேருந்திற்கு ஆகி வந்தது.

Please Send Your Study Materials to our Email Id: padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.CBSEtips.in



**தற்கால எழுத்து வழக்கில் ஆகுபெயர்:**

- ◈ ''ஈரோடு தமிழ்ச் சங்கம் சார்பில் இரு நாள் தெய்வ நூல் பயிலரங்கம்'' என்ற செய்தித்தாள் செய்தியில் தெய்வ நூல் என்பது திருக்குறள் நூலுக்கு ஆகி வந்தது.

2. **பட்டப் பெயர்கள் ஆகுபெயராகுமா? எடுத்துக்காட்டுகளுடன் விளக்குக.**

பட்டப்பெயர்கள் ஆகுபெயராகும்.

**சான்று:**

- ◈ மகாகவி பாடினார். (பாரதியின் பட்டப்பெயராக ஆகி வந்தது)
- ◈ ரோஜாவின் ராஜா. (நேருவின் பட்டப்பெயராக ஆகி வந்தது)
- ◈ பகுத்தறிவு பகலவன் அறிவுக்கண் திறந்தார் (பெரியாரின் பட்டப்பெயராக ஆகி வந்தது)

## மொழியை ஆழ்வோம்

**மொழி பெயர்க்க.**

**Conversation between two friends meeting by chance at a mall.**

| | | |
|---|---|---|
| Aruna | : | Hi Vanmathi! It's great to see you after a long time. |
| Vanmathi | : | It's great seeing you. How long has it been? It must be more than 6 months. I'm doing good. How about you? |
| Aruna | : | Fine. I have come with my parents. They are inside the grocery shop. What about you? |
| Vanmathi | : | I came with my father. He has gone to buy tickets for a 3D movie. |
| Aruna | : | Which movie? |
| Vanmathi | : | Welcome to the jungle. |
| Aruna | : | Great! I am going to ask my parents to take me to that movie. |

**இரண்டு தோழிகள் வணிகவளாகத்தில் சந்திக்க வாய்ப்பு கிடைத்தபோது நடந்த உரையாடல்.**

| | | |
|---|---|---|
| அருணா | : | வான்மதி, என்ன ஒரு ஆச்சர்யம் நீண்ட நாட்களுக்குப்பின் உன்னைப் பார்க்கிறேன், மகிழ்ச்சி. |
| வான்மதி | : | எனக்கும் மகிழ்ச்சியும், ஆச்சர்யமும் தான்! உன்னைப் பார்த்து எவ்வளவு காலம் ஆகிவிட்டது. ஆறு மாதங்களுக்கும் மேலாகிவிட்டது. நான் நன்றாக இருக்கிறேன் நீ எப்படி இருக்கிறாய். |
| அருணா | : | நான் என் பெற்றோருடன் வந்தேன். அவர்கள் வீட்டிற்குத் தேவையான பொருட்கள் உள்ள பிரிவில் உள்ளார்கள். நீ..? |
| வான்மதி | : | நான் என் தந்தையுடன் வந்தேன் இவ்வளாகத்தில் நடைபெறும் முப்பரிமாண (3D) திரைப்படத்திற்கு அனுமதி சீட்டு வாங்க சென்றிருக்கிறார். |
| அருணா | : | என்ன படம்? |
| வான்மதி | : | காட்டுக்குள் வரவேற்பு |
| அருணா | : | ஓ... நானும் என் பெற்றோரிடம் அந்தப் படத்திற்கு அழைத்துச் செல்லுங்கள் என்று கேட்க போகின்றேன். |

**பொருத்தமான இடங்களில் அடைமொழியிட்டு, சொற்றொடரை விரிவாக்குக.**

1. புத்தகம் படிக்கலாம். (நல்ல, ஆழ்ந்து, நாளும், தேர்ந்து, மகிழ்ந்து, உணர்ந்து)
2. விளையாடுவது நன்று. (ஓடியாடி, மாலையில், சேர்ந்து, திடலில், அனைவருடன்)

Please Send Your Study Materials to our Email Id: padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.CBSEtips.in



**எ.கா: நல்ல புத்தகம் படிக்கலாம், நாளும் நல்ல புத்தகம் படிக்கலாம்.**

1. **நாளும் நல்ல புத்தகம் ஆழ்ந்து, உணர்ந்து, மகிழ்ந்து படிக்கலாம்.**
2. **திடலில் அனைவருடன் மாலையில் சேர்ந்து ஓடியாடி விளையாடுவது நன்று.**

**பிழை நீக்குக.**

பெறுந்தலைவர் காமராசர் பள்ளிப் படிப்பை நிரைவு செய்யவிள்ளை எண்றாலும் தமிழிலும் ஆங்கிலத்திலும் புத்தகங்கள் படிக்கும் அலவுக்கு புலமைகள் பெற்றிருந்தது பலருக்குத் தெரியாது. ஆங்கிலச் செய்தி இதழ்கலை நாள்தோறும் படித்தது. எப்போது அரையை விட்டு வெளியே போனாலும் மின்விசிரியை நிருத்த மறப்பதில்லை. வெளியூருக்குச் செல்லும்போது தம்முடைய துணிமனிகளைத் தாமே எடுத்துவைத்துக்கொள்வார்.

**விடை:**

பெ**ரு**ந்தலைவர் காமராசர் பள்ளிப் படிப்பை நி**றை**வு செய்யவி**ல்லை** எ**ன்று**ாலும் தமிழிலும் ஆங்கிலத்திலும் புத்தகங்கள் படிக்கும் அ**ள**வுக்கு புலமை பெற்றிருந்தது பலருக்குத் தெரியாது. ஆங்கிலச் செய்தி இதழ்க**ளை** நாள்தோறும் படித்தது. எப்போது அ**றை**யை விட்டு வெளியே போனாலும் மின்விசி**றி**யை நி**று**த்த மறப்பதில்லை. வெளியூருக்குச் செல்லும்போது தம்முடைய துணிம**ணி**களைத் தாமே எடுத்துவைத்துக்கொள்வார்.

**கீழ்க்காணும் பத்தியில் உள்ள ஆகுபெயர்களை அட்டவணைப்படுத்துக.**

விமலா கூடத்தில் உள்ள தட்டிலிருந்த டிசம்பரைத் தலையில் சூடிக்கொண்டாள். மல்லிகையைப் படத்திற்குச் சூட்டினாள். அடுப்பிலிருந்து பாலை இறக்கினாள். பின்பு தோட்டத்திற்குச் சென்றாள். விமலாவைப் பார்த்தவுடன் தோட்டம் அமைதியானது! "தலைக்கு இருநூறு கொடுங்கம்மா" என்று தோட்டத்தில் வேலை செய்தவருள் ஒருவர் சொன்னார். வெள்ளை மனங்கொண்ட வேலையாட்களின் கூலியைக் குறைக்க விரும்பாமல் அதனை அவளும் ஏற்றுக்கொண்டாள். அவர்கள் சென்றதும், காலையில் சாப்பிடப் பொங்கல் வைத்தாள். வீட்டில் சமையல் செய்ய, எந்தெந்தப் பொருள்கள் குறைவாக உள்ளன என்பதைப்பற்றிச் சிந்தித்தாள். "சாப்பாட்டிற்கு ஐந்து கிலோ வாங்க வேண்டும். தாளிப்பதற்கு மூன்று லிட்டர் வாங்க வேண்டும். துணி உலர்த்துவதற்கு நான்கு மீட்டர் வாங்க வேண்டும்" எனத் திட்டமிட்டாள். அலைபேசி அழைத்தது. அரை நிமிடம் அலைபேசியில் வந்த வயலின் கேட்டு மகிழ்ந்தாள். பிறகு எடுத்துப் பேசினாள். கடைக்குப் போய்விட்டு வந்த பிறகு. பாதியில் விட்டிருந்த சிவசங்கரியைப் படித்து முடிக்கவேண்டும் என்று நினைத்தாள்.

| | |
|---|---|
| டிசம்பரைத் தலையில் சூடிக் கொண்டாள். | டிசம்பர் என்னும் காலப்பெயர் பூவுக்கு ஆகி வந்ததால் **(காலவாகு பெயர்)** |
| பாலை இறக்கினாள். | பால் கொதித்த பாத்திரத்தை இறக்கினாள். கருவி பாலுக்கு ஆகி வந்தது. **(கருவியாகு பெயர்)** |
| தலைக்கு இருநூறு. | ஒவ்வொருவருக்கும்என்பதைத்தலைஎன்னும்சினைப் பெயரால் உணர்த்துகிறது **(சினையாகு பெயர்)** |
| சாப்பாட்டிற்கு ஐந்து கிலோ வாங்க வேண்டும். | 5 கிலோ அரிசியைக் குறிக்க.... எடுத்து அளந்து தருவது (நிறுத்து) **(எடுத்தலளவை ஆகுபெயர்)** |

Please Send Your Study Materials to our Email Id: padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.CBSEtips.in



| | |
|---|---|
| தாளிப்பதற்கு மூன்று லிட்டர் வாங்கவேண்டும். | முகந்து அளக்கும் எண்ணெய் **(முகத்தலளவையாகு பெயர்)** |
| துணி உலர்த்த நான்கு மீட்டர். | நீட்டி அளக்கும் துணி உலர்த்தும் கொடியைக் குறிக்கும் **(நீட்டலளவையாகு பெயர்)** |
| சிவசங்கரியை படித்து முடிக்க வேண்டும். | சிவசங்கரி நூலைக் குறிக்கும்.....**(கருத்தாவாகு பெயர்)** |

**பயண அனுபவங்களை விவரிக்க.**

**''எனது பயணம்'' என்னும் தலைப்பில் உங்களது அனுபவங்களை வருணித்து எழுதுக.**

**தொடக்கம்:**

எனது பயண அனுபவம் பற்றிய சுவையான செய்திகளைத் தருகின்றேன்.

**ஆயத்தம்:**

சென்னை செல்வதற்காக எங்கள் பயணம் திட்டமிடப்பட்டது. பயணத்திற்குத் தேவையான பொருட்கள், நொறுக்குத் தீனி மற்றும் உணவுகள் ஆகியவற்றை எடுத்து ஆயத்தம் ஆனோம்.

**தொடர் வண்டிப்பயணம்:**

ஈரோட்டில் தொடர் வண்டி நிலையத்திலிருந்து கோவை அதிவிரைவு வண்டியில் கிளம்பினோம். வண்டி நகர்ந்ததும் சில்லென்ற காற்று வீசத்தொடங்கியது. சன்னலின் ஓரத்தில் இருக்கை இருந்ததால் மனம் கற்பனைக் கடலில் மூழ்க ஆரம்பித்தது. சேலம், திருபத்தூர், வாணியம்பாடி, அரக்கோணம் ஆகிய ஊர்களை எல்லாம் வண்டி கடந்து வந்தது. மரங்களும், மலைகளும் வேகமாக ஓடின.

**சென்னை:**

சென்னையில் இறங்கி வள்ளுவர் கோட்டம் சென்றோம். வள்ளுவர் வடித்த திருக்குறள் காட்சிகள் கண்ணைக் கவரும் வண்ணம் இருந்தது. பிறகு மெரினா கடற்கரை சென்றோம்.கடலின் காட்சி கவின்மிகு காட்சியாக இருந்தது. பிறகு கன்னிமாரா நூலகம் சென்றோம். நூல்களின் குவியல்களைக் கண்டு வியந்தோம். மாமல்லபுரம் சென்றோம். சிற்பங்களின் கலையழகில் மூழ்கினோம். தலைவர்களின் சமாதிகளைக் கண்டுகளித்தோம்.

**திரும்புதல்:**

மீண்டும் தொடர் வண்டி மூலம் அடுத்த நாள் இரவு ஈரோடு வந்தோம்.

**நயம் பாராட்டுக.**

வயலிடைப் புகுந்தாய் மணிக்கதிர் விளைத்தாய்
வளைந்துசெல் கால்களால் ஆறே!
அயலுள ஓடைத் தாமரை கொட்டி
ஆம்பலின் இதழ்களை விரித்தாய்
கயலிடைச் செங்கண் கருவரால் வாளை
கரைவளர் தென்னையில் பாயப்
பெயரிடைப் பட்ட வானெனத் தோன்றும்
பெருங்குளம் நிறைந்து விட்டாயே! - வாணிதாசன்

Please Send Your Study Materials to our Email Id: padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.CBSEtips.in



**திரண்ட கருத்து:**

வளைந்து செல்லும் கால்வாய்கள் மூலம் ஆறே வயல்வெளியில் புகுந்தாய் மணிபோன்ற கதிர்களை விளையச் செய்தாய். அருகில் உள்ள ஓடைகள் குளங்களை நிறைத்தாய். தாமரை கொட்டி, ஆம்பல் மலர்களின் இதழ்களை விரியச்செய்தாய். சிவந்த கண்களையுடைய கருமையுடைய வரால், வாளை மீன்கள் கரையில் ஓங்கி வளர்ந்த தென்னையில் பாய்ந்து விளையாடுகின்ற நீர் நிறைந்த பெருங்குளங்கள் நிலமெங்கும் நிறையச் செய்து, நிலத்தில் ஒரு வானம் இருப்பதுபோல தோன்றச் செய்கிறாய்.

**எதுகை:**

செய்யுளில், அடியிலோ, சீரிலோ, இரண்டாவது எழுத்து ஒன்றி வரத் தொடுப்பது எதுகை ஆகும்.

**சான்று:**

வயலிடை
அயலுள
கயலிடை
பெயரிடை
} யகரம் ஒன்றி வந்துள்ளது

**மோனை:**

செய்யுளில் அடியிலோ சீரிலோ முதல் எழுத்து ஒன்றி வரத் தொடுப்பது மோனை ஆகும்.

**சான்று:**

வயலிடை – விளைத்தாய்
கயலிடை – கருவரால்

**அணிநயம்:**

செய்யுளின் அழகுச் சேர்ப்பது அணியே ஆகும். அணி இல்லாத பாடல் அழகிழந்து போகும். பெயரிடைப்பட்ட வானெனத் தோன்றும் என்னும் அடியில் உவமை அணி அமைந்து இச்செய்யுளின் அழகுக்கு அழகு சேர்த்துள்ளது.

**சுவை நயம்:**

இப்பாடலைப் படிக்கப் படிக்க, மனத்தில் மகிழ்வு உண்டாவதால் "உவகைச் சுவை" அமைந்துள்ளது.

## மொழியோடு விளையாடு

**புதிர் அவிழ்க்க.**

நான்கெழுத்துக்காரன்;
முதல் இரண்டும்
அம்மாவில்
"மா"வைத் தொலைத்து நிற்கும்;
அடுத்த எழுத்தைச் சேர்த்தால்
வில்லின் துணைவன்;
கடை இரண்டும்
கணக்கில் 'இது' என்பர்.!
முழுதாய்ப் பார்த்தால்
மேகத்திடை தெரிவான்!
அவன் யார்?

**விடை: அம்புலி**

Please Send Your Study Materials to our Email Id: padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.CBSEtips.in



**பண்புத்தொகைகளை இட்டு நிறைவு செய்க.**

(இன்னோசை, பேரொளி, சிற்றோடை, பேரின்பம், பைங்கிளி, செந்தாமரை)

மானாமதுரை ஓர் அழகான **பேரூர்**; நீண்ட வயல்களும் **சிற்றோடை**களும் நிறைந்த அவ்வூரின் நடுவே வானுயர்ந்த கோபுரத்துடன் கூடிய கோவில் குளத்தில் எங்கும் **செந்தாமரை** பூக்கள் மலர்ந்துள்ளன; கதிரவனின் **பேரொளி** வீசிட, சோலைப் **பைங்கிளி**களின் **இன்னோசை** கேட்போரைப் **பேரின்பம்** அடையச் செய்கிறது.

**வட்டத்திற்குள் உள்ள எழுத்துகளைக் கொண்டு சொற்களை உருவாக்குக.**




| | | |
|---|---|---|
| கால் | காலை | கான் |
| புத்தகம் | புல் | புத்தி |
| அகல் | அவல் | கல் |
| அதிகம் | கறி | தறி |
| புதன் | வலை | அறிவன் |
| கலை | கத்தி | கவலை |
| காவல் | அலை | தில்லை |

**காட்சியைக் கண்டு கவினுற எழுதுக.**



கலைகள் சிறந்த நாடு
அது எம் தமிழ்நாடு
சண்டைகள் இல்லா
சமாதானப் புறாவானது
அது எம் தமிழ்நாடு
மதத்தின் குறியீடு
இல்லாத கோபுரச் சின்னம் கொண்டது
அது எம் தமிழ்நாடு
உலகம் போற்றும்
உன்னத தைத்திங்கள் தந்தது
அது எம் தமிழ்நாடு

**அகராதியில் காண்க.**

**ஈகை** - கொடை, கற்பகமரம், காடை, பொன், முகில், வண்மை.
**குறும்பு** - அரணிருக்கை, சிறுமை, பொல்லாங்கு, குறும்புத்தனம்.
**கோன்** - அரசன், இடையன், தலைவன், எப்பொருட்கும் இறைவன்.
**புகல்** - உடல், உபாயம், குதிர், சொல், தஞ்சம், சரண்.
**மொய்ம்பு** - தோள்வலி, பலம்.

## கலைச்சொல் அறிவோம்

Indian National Army - இந்திய தேசிய இராணுவம்
Commodity Exchange - பண்டமாற்றுமுறை
Vegetable Soup - காய்கறி வடிசாறு
Classical Literature - செவ்வியல் இலக்கியம்
Sugarcane Juice - கரும்புச்சாறு

Please Send Your Study Materials to our Email Id: padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.CBSEtips.in



# இயல் 8 உரைநடை உலகம்

# பெரியாரின் சிந்தனைகள்

## பாடநூல் மதிப்பீட்டு வினா

### 1 பலவுள் தெரிக

1. **சரியான விடையைத் தேர்ந்தெடுக்க.**

கூற்று : பெரியார் உயிர் எழுத்துக்களில் 'ஐ' என்பதனை 'அய்' எனவும், 'ஔ' என்பதனை 'அவ்' எனவும் சீரமைத்தார்.

காரணம் : சில எழுத்துகளைக் குறைப்பதன் வாயிலாகத் தமிழ் எழுத்துகளின் எண்ணிக்கையைக் குறைக்கலாம் என்று எண்ணினார்.

அ) கூற்று சரி, காரணம் தவறு ஆ) கூற்று காரணம் சரி

இ) கூற்று, காரணம் தவறு ஈ) கூற்று தவறு, காரணம் சரி

**விடை: ஆ) கூற்று காரணம் சரி**

### 2 குறுவினா

1. **பகுத்தறிவு என்றால் என்ன?**

எச்செயலையும் அறிவியல் கண்ணோட்டத்துடன் அணுகி ஏன்? எப்படி? எதற்கு? என்ற வினாக்கள் எழுப்பி, அறிவின் வழியே சிந்தித்து முடிவெடுப்பதே பகுத்தறிவு ஆகும்.

### 3 சிறுவினா

1. **சிக்கனம் குறித்து பெரியாரின் கருத்துகளை இன்றைய நடைமுறையோடு தொடர்பு படுத்தி எழுதுக.**

◈ விழாக்கள் மற்றும் சடங்குகளால் மூடப்பழக்கம் வளர்வதோடு, வீண்செலவும் ஏற்படுவதால் தேவையற்ற விழாக்கள் மற்றும் சடங்குகளைத் தவிர்க்க வேண்டும் என்றார்.

◈ திருமணத்தை எளிமையாக சீர்திருத்த முறையில் நடத்த வேண்டும் என்றார்.

◈ விழாக்கள், திருமணங்கள் மற்றும் சடங்குகள் நடத்த கடன் வாங்கி செலவு செய்து, கடன்காரர்களிடம் மாட்டிக் கொண்டிருப்பதை நாம் பார்க்க முடிகிறது.

◈ பெரியார் சொன்னதைக் கடைபிடித்திருந்தால் இந்நிலை வராது.

### 4 நெடுவினா

1. **மொழியிலும் இலக்கியத்திலும் பெரியார் மேற்கொண்ட சீரமைப்புகளை விளக்குக.**

◈ இன்றைய அறிவியல் வளர்ச்சிக்கேற்ற நூல்கள் தமிழில் படைக்க வேண்டும்.

◈ மொழியோ நூலோ இலக்கியமோ எதுவானாலும் மனிதனுக்கு மானம், பகுத்தறிவு, வளர்ச்சி, நற்பண்பு ஆகிய தன்மைகளை உண்டாக்க வேண்டும்.

Please Send Your Study Materials to our Email Id: padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.CBSEtips.in



- மதம், கடவுள் தொடர்பற்ற இலக்கியம், யாவருக்கும் பொதுவான அறிவைத் தரும் இலக்கியம், அறிவியல் பற்றிய இலக்கியம் ஆகியவற்றின் மூலமே மொழியும் இலக்கியமும் மேன்மை அடையும்.
- திருக்குறளைப் பெரியார் மதிப்பு மிக்க நூலாகக் கருதினார்.
- இந்நூலில் அறிவியல் கருத்துகளும், தத்துவக் கருத்துகளும் அனைவருக்கும் பொதுவான முறையில் அமைந்திருப்பதே காரணம் என்றார் பெரியார்.
- தமிழில் 'ஐ' என்பதை 'அய்' எனவும், 'ஔ' என்பதை 'அவ்' எனவும் சீரமைத்தார். இவற்றுக்கான மாற்று வரிவடிவத்தையும் கொண்டு வந்தார்.

## கூடுதல் வினாக்கள்

### 1 பலவுள் தெரிக

1. **பகுத்தறிவு, தன்மதிப்பு ஆகிய கண்களை மக்களுக்கு அளிக்க அரும்பணியாற்றியவர் யார்?**
அ) தந்தை பெரியார் ஆ) காந்தியடிகள்
இ) பாரதியார் ஈ) நேரு **விடை: அ) தந்தை பெரியார்**

2. **பெண்ணினப் போர்முரசு என்று புகழப்பட்டவர்**
அ) தந்தை பெரியார் ஆ) காந்தியடிகள்
இ) பாரதியார் ஈ) நேரு **விடை: அ)தந்தை பெரியார்**

3. **மூடப்பழக்கத்தில் இருந்து தமிழ் மக்களைப் பகுத்தறிவுப் பாதைக்கு அழைத்துச் சென்றவர்.**
அ) தந்தை பெரியார் ஆ) காந்தியடிகள்
இ) பாரதியார் ஈ) நேரு **விடை: அ) தந்தை பெரியார்**

4. **புத்துலகத் தொலைநோக்காளர் என்று புகழப்பட்டவர்**
அ) தந்தை பெரியார் ஆ) காந்தியடிகள்
இ) பாரதியார் ஈ) நேரு **விடை: அ) தந்தை பெரியார்**

5. **சரியான விடையைத் தேர்ந்தெடுக்க.**
கூற்று : மதங்கள் என்பன மனித சமூகத்தின் வாழ்க்கை நலத்திற்கு ஏற்படுத்தப்பட்டன. ஆனால், இன்று மதத்தின் நிலை என்ன? சிந்தித்துப் பாருங்கள்.
காரணம் : மனிதர்களுக்காக மதங்களா? மதங்களுக்காக மனிதர்களா? மதம் என்பது மனிதர்களை ஒற்றுமைப்படுத்துவதற்காகவா? பிரித்து வைப்பதற்காகவா? எனப் பெரியார் பகுத்தறிவு வினாக்களை வைக்கிறார்.
அ) கூற்று சரி, காரணம் தவறு ஆ) கூற்று காரணம் சரி
இ) கூற்று, காரணம் தவறு ஈ) கூற்று தவறு, காரணம் சரி
**விடை: ஆ) கூற்று காரணம் சரி**

6. **சரியான விடையைத் தேர்ந்தெடுக்க.**
கூற்று : கல்வி மக்களிடம் பகுத்தறிவு, சுயமரியாதை, நல்லொழுக்கம் ஆகியவற்றை ஏற்படுத்த வேண்டும்.
காரணம் : மேன்மை வாழ்வு வாழ்வதற்கேற்ப தொழில், அலுவல் பார்க்க கல்வி பயன்பட வேண்டும்.

Please Send Your Study Materials to our Email Id: padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.CBSEtips.in



அ) கூற்று சரி, காரணம் தவறு ஆ) கூற்று காரணம் சரி
இ) கூற்று, காரணம் தவறு ஈ) கூற்று தவறு, காரணம் சரி

**விடை: ஆ) கூற்று காரணம் சரி**

7. **பொருந்தாதவற்றைத் தேர்ந்தெடுக்க.**

பெரியார் விதைத்த விதைகள்
அ) கல்வியிலும் வேலைவாய்ப்பிலும் இடஒதுக்கீடு
ஆ) பெண்களுக்கு இடஒதுக்கீடு
இ) பெண்களுக்கான சொத்துரிமை
ஈ) குழந்தைத்திருமணம் **விடை: ஈ) குழந்தைத்திருமணம்**

8. **13.11.1938 சென்னையில் நடந்த பெண்கள் மாநாட்டில் ஈ.வெ.ராவுக்குக் கொடுக்கப்பட்ட பட்டம்**

அ) வெண்தாடி வேந்தர் ஆ) பகுத்தறிவு பகலவன்
இ) வைக்கம் வீரர் ஈ) பெரியார் **விடை: ஈ) பெரியார்**

9. **சொடற்றொடர் உருவாக்குக.**

அ) கல்வி மக்களிடம் ஆ) ஏற்படுத்தவேண்டும்
இ) பகுத்தறிவு, சுயமரியாதை, ஈ) நல்லொழுக்கம் ஆகியவற்றை
அ) அ-இ-ஈ-ஆ ஆ) இ-ஈ-அ-ஆ
இ) இ-அ-ஆ-ஈ ஈ) ஈ-அ-ஆ-இ **விடை: அ) அ-இ-ஈ-ஆ**

10. **பெரியாருக்குத் 'தெற்கு ஆசியாவின் சாக்ரடீஸ்' என்ற பட்டம் கொடுத்த அமைப்பு**

அ) பெண்கள் மாநாடு ஆ) யுனெஸ்கோ
இ) சாகித்ய அகெதமி ஈ) உலகத்தமிழ்ப்பேரவை

**விடை: ஆ) யுனெஸ்கோ**

11. **பெரியார் எதிர்த்தவை அல்லாத ஒன்று**

அ) இந்தித்திணிப்பு ஆ) குலக்கல்வித்திட்டம்
இ) தேவதாசி முறை ஈ) விதவைத் திருமணம்

**விடை: ஈ) விதவைத் திருமணம்**

12. **பெரியார் எழுத்துச் சீர்திருத்தம் செய்த உயிரெழுத்துகள்**

அ) அ, ஆ ஆ) ஐ, ஔ
இ) எ, ஒ ஈ) உ, ஒ **விடை: ஆ) ஐ, ஔ**

13. **பெரியாரின் எழுத்துச் சீர்திருத்தத்தை தமிழக அரசு நடைமுறைப்படுத்திய ஆண்டு**

அ) 1878 ஆ) 1978
இ) 1898 ஈ) 1987 **விடை: ஆ) 1978**

14. **பெண்களுக்கு வேலைவாய்ப்பில் கொடுக்கப்படவேண்டிய இட ஒதுக்கீடாகப் பெரியார் கூறுவது**

அ) 50 சதவீதம் ஆ) 30 சதவீதம்
இ) 60 சதவீதம் ஈ) 40 சதவீதம் **விடை: அ) 50 சதவீதம்**

Please Send Your Study Materials to our Email Id: padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.CBSEtips.in



15. பெரியார் நடத்திய ஆங்கில இதழ்

அ) குடியரசு ஆ) விடுதலை

இ) ரிவோல்ட் ஈ) உண்மை **விடை: இ) ரிவோல்ட்**

16. 1925 இல் பெரியார் தோற்றுவித்த இயக்கம்

அ) சுயமரியாதை இயக்கம் ஆ) திராவிடக் கழகம்

இ) நீதிக்கட்சி ஈ) யுனெஸ்கோ **விடை: அ) சுயமரியாதை இயக்கம்**

17. வேறுபட்ட ஒன்று

அ) குடியரசு ஆ) விடுதலை

இ) ரிவோல்ட் ஈ) உண்மை **விடை: இ) ரிவோல்ட் (ஆங்கில இதழ்)**

### கோடிட்ட இடத்தை நிரப்புக.

1. பெரியாரின் சிந்தனைகள் _________ உடையவை. **விடை: தொலைநோக்கு**
2. பெரியாரின் சிந்தனைகள் _________ அடிப்படையில் அமைந்தவை. **விடை: அறிவியல்**
3. பெரியார் தோற்றுவித்த இயக்கம் _________. **விடை: சுயமரியாதை இயக்கம்**
4. பெரியார் நடத்திய தமிழ் இதழ்கள் _________, _________, _________. **விடை: குடியரசு, விடுதலை, உண்மை**
5. மனித நேயத்தின் அழைப்பு மணி _________. **விடை: தந்தை பெரியார்**
6. நாட்டுவிடுதலையை விட _________ விடுதலைதான் முதன்மையானது என்று பெரியார் கூறினார். **விடை: பெண்**
7. ஆண்களும் _________ பணிகளைப் பகிர்ந்து கொள்ள வேண்டும். **விடை: குடும்பப்**
8. _________ என்பது உலகின் போட்டி, போராட்டத்திற்கு ஒரு போர்க்கருவியாகும். **விடை: மொழி**
9. பெரியார் மதிப்பு மிக்க நூலாகக் குறிப்பிடும் நூல் _________. **விடை: திருக்குறள்**
10. _________ ஊன்றிப்படிப்பவர்கள் சுயமரியாதை உணர்ச்சி பெறுவார்கள். **விடை: திருக்குறள்**

## 2 குறுவினா

1. தந்தை பெரியார் எவ்வாறெல்லாம் சிறப்பிக்கப்படுகிறார்?

◈ வெண்தாடி வேந்தர்
◈ சுயமரியாதைச் சுடர்
◈ பகுத்தறிவுப் பகலவன்
◈ தெற்காசியாவின் சாக்ரடீசு
◈ வைக்கம் வீரர்
◈ பெண்ணினப் போர்முரசு
◈ ஈரோட்டுச் சிங்கம்
◈ புத்துலகத் தொலைநோக்காளர்

2. எது மனிதனுக்குத் தேவையில்லை என்று வலியுறுத்துகிறார் பெரியார்?

◈ சாதியினால் மனித வாழ்விற்கு எவ்விதச் சிறு பயனும் விளையப்போவதில்லை. அதனால் வீண் சண்டைகளும், குழப்பங்களும் தான் மேலோங்குகிறது.

◈ அத்தகு சாதி, மனிதனுக்குத் தேவையில்லை என்று வலியுறுத்தினார் பெரியார்.

Please Send Your Study Materials to our Email Id: padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.CBSEtips.in



**3. பெரியாரின் சிந்தனை புரட்சியை ஏற்படுத்திய துறைகள் யாவை?**

- ◈ சமூகம்
- ◈ பண்பாடு
- ◈ மொழி
- ◈ பொருளாதாரம்
- ◈ கல்வி

**4. சாதி என்ற கட்டமைப்பை உடைத்தெறிய வேண்டும் என்று பெரியார் கூறக் காரணம் யாது?**

- ◈ சாதி உணர்வு ஆதிக்க உணர்வை வளர்க்கிறது.
- ◈ மற்றவர்களின் உரிமையைப் பறிக்கின்றது.
- ◈ மனிதர்களை இழிவுபடுத்துகின்றது.
- ◈ ஆகிய காரணங்களால் சாதி என்ற கட்டமைப்பை உடைத்தெறிய வேண்டும் என்று பெரியார் கூறினார்.

**5. பெரியார் எவற்றையெல்லாம் எதிர்த்தார்?**

- ◈ இந்தித்திணிப்பு
- ◈ கள்ளுண்ணல்
- ◈ குலக்கல்வித்திட்டம்
- ◈ குழந்தைத் திருமணம்
- ◈ தேவதாசி முறை
- ◈ மணக்கொடை

**6. பெரியார் எதனைக் கடுமையாக எதிர்த்தார்?**

மனப்பாடம் மற்றும் மதிப்பெண்ணுக்கு முக்கியத்துவம் அளிக்கும் தேர்வு முறையை பெரியார் கடுமையாக எதிர்த்தார்.

**7. பெரியார் மதிப்பு மிக்க நூலாகக் கருதியது எதனை? ஏன்?**

- ◈ திருக்குறளைப் பெரியார் மதிப்பு மிக்க நூலாகக் கருதினார்.
- ◈ இந்நூலில் அறிவியல் கருத்துகளும், தத்துவக் கருத்துகளும் அனைவருக்கும் பொதுவான முறையில் அமைந்திருப்பதே காரணம்.

**8. பெரியார் சீரமைத்த எழுத்துகள் யாவை?**

'ஐ' என்பதை 'அய்' எனவும், 'ஔ' என்பதை 'அவ்' எனவும் சீரமைத்தார். இவற்றுக்கான மாற்று வரிவடிவத்தையும் கொண்டு வந்தார்.

**9. பெரியார் தோற்றுவித்த இயக்கம் யாது? அதன் தோற்றம் எப்போது?**

சுயமரியாதை இயக்கம். 1925.

**10. பெரியார் நடத்திய இதழ்கள் யாவை?**

குடியரசு, உண்மை, விடுதலை, ரிவோல்ட் (ஆங்கில இதழ்).

**11. ஈ.வெ.ராவுக்குப் பெரியார் பட்டம் எப்போது கொடுக்கப்பட்டது?**

13.11.1938 சென்னையில் நடந்த பெண்கள் மாநாட்டில் ஈ.வெ.ராவுக்குப் 'பெரியார்' பட்டம் கொடுக்கப்பட்டது.

**12. தெற்கு ஆசியாவின் சாக்ரடீஸ் யார்?**

யுனெஸ்கோ நிறுவனம் தந்தை பெரியாரைத் 'தெற்கு ஆசியாவின் சாக்ரடீஸ்' எனப் பாராட்டிப் பட்டம் வழங்கியது.

Please Send Your Study Materials to our Email Id: padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.CBSEtips.in



## 3 சிறுவினா

1. **மதம் குறித்து பெரியார் எழுப்பிய பகுத்தறிவு வினாக்கள் யாவை?**

◈ மதங்கள் என்பன மனித சமூகத்தின் வாழ்க்கை நலத்திற்கு ஏற்படுத்தப்பட்டன. ஆனால், இன்று மதத்தின் நிலை என்ன? சிந்தித்துப் பாருங்கள்.

◈ மனிதர்களுக்காக மதங்களா? மதங்களுக்காக மனிதர்களா? மதம் என்பது மனிதர்களை ஒற்றுமைப்படுத்துவதற்காகவா? பிரித்து வைப்பதற்காகவா? எனப் பெரியார் பகுத்தறிவு வினாக்களை வைக்கிறார்.

2. **கல்வி குறித்த பெரியாரிடன் சிந்தனைகள் யாவை?**

◈ கல்வி மக்களிடம் பகுத்தறிவு, சுயமரியாதை, நல்லொழுக்கம் ஆகியவற்றை ஏற்படுத்த வேண்டும்.

◈ மேன்மை வாழ்வு வாழ்வதற்கேற்ப தொழில், அலுவல் பார்க்க கல்விப் பயன்பட வேண்டும்.

◈ அறிவியலுக்குப் புறம்பான செய்தியையும், மூடப்பழக்கங்களையும் பள்ளிகளில் கற்றுத்தரக் கூடாது. சுயசிந்தனை, தன்னம்பிக்கை வளர்க்கும் கல்வியே கற்றுத் தரவேண்டும்.

◈ அனைவருக்கும் கல்வி கற்றுத்தர வேண்டும். குறிப்பாகப் பெண்களுக்குக் கல்வியறிவு புகட்ட முன்னுரிமை அளிக்க வேண்டும்.

3. **பெரியார் விதைத்த விதைகள் யாவை?**

◈ கல்வியிலும் வேலைவாய்ப்பிலும் இடஒதுக்கீடு.

◈ பெண்களுக்கு இடஒதுக்கீடு.

◈ பெண்களுக்கான சொத்துரிமை.

◈ குடும்ப நலத்திட்டம்.

◈ கலப்புத் திருமணம்.

◈ சீர்திருத்தத் திருமணச்சட்டம்.

## 4 நெடுவினா

1. **பெண்கள் நலத்திற்காகப் பெரியார் கூறியுள்ள செய்திகளைத் தொகுத்து எழுதுக.**

◈ கல்வி, வேலைவாய்ப்பில் ஆண்களுக்கு நிகரான உரிமை பெண்களுக்கும் அளிக்கப்பட வேண்டும்.

◈ வேலைவாய்ப்பில் ஐம்பது சதவீதம் இடஒதுக்கீடு பெண்களுக்குத் தரப்பட வேண்டும்.

◈ பொருளாதாரத்தில் பெண்கள் பிறரைச் சார்ந்து வாழவேண்டிய நிலையில் இருக்கக் கூடாது.

◈ நன்கு கற்று, சுய உழைப்பில் பொருளீட்ட வேண்டும்.

◈ தெளிந்த அறிவுடனும், தன்னம்பிக்கையுடனும் திகழவேண்டும்.

◈ பெண்களுக்கு இளம்வயதில் திருமணம் செய்து வைக்கக் கூடாது.

◈ கைம்பெண்களுக்கு மறுமணம் செய்ய வழிவகை செய்ய வேண்டும்.

◈ குடும்பத்தில் ஆண்களுக்கு இணையாக சமஉரிமை அளிக்க வேண்டும்.

◈ பெண்களின் கருத்துக்கு மதிப்பளிக்க வேண்டும்.

◈ குடும்பச் சொத்தில் ஆண்களுக்கு இணையாகப் பெண்களுக்கும் சமஉரிமை அளிக்க வேண்டும்.

◈ குடும்பநலத்திற்காக ஆண்களும் குடும்பப் பணிகளைப் பகிர்ந்துகொள்ள வேண்டும்.

-ஆகிய கருத்துகள் பெண்கள் நலத்திற்காகப் பெரியார் கூறியுள்ள செய்திகளாகும்.

Please Send Your Study Materials to our Email Id: padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.CBSEtips.in



## கற்பவை கற்றபின்... பக்கம்: 214

1. **'இன்று பெரியார் இருந்திருந்தால்' என்னும் தலைப்பில் மேடைப்பேச்சுக்கான உரை ஒன்றை எழுதுக.**

முத்தமிழே! வணக்கம்! முழுநிலவுச் சான்றோரே! வணக்கம் !

வெண்தாடி வேந்தர், பகுத்தறிவுப் பகலவன், வைக்கம் வீரர், ஈரோட்டுச் சிங்கம் சுயமரியாதைச் சுடர், தெற்காசியாவின் சாக்ரடீசு, பெண்ணினப் போர்முரசு, புத்துலகத்தொலை நோக்காளர் என்ற பெருமைக்கெல்லாம் உரிய பெருந்தலைவர் தந்தை பெரியார்.

அவர் இன்று இருந்திருந்தால் எப்படி இருக்கும் என்பதைப்பற்றி சில மணித்துளிகள் பேசுகின்றேன். தெருவுக்குத் தெரு சாதிக் கட்சி, ஊருக்கு ஊர் மதக்கட்சி இவையெல்லாம் இன்று தலைவிரித்து ஆடிக்கொண்டிருக்கின்ற அவலநிலை. சாதி, மதம் வேண்டாம் என்ற பெரியார் இன்று இருந்திருந்தால் சாதி, மதக்கட்சிகளை நறுக்கியிருப்பார்.

இன்று ஏதோ ஒரு மூலையில் நடக்கும் சாதி ஏற்றத்தாழ்வுகளைப் பெரியார் இன்று இருந்திருந்தால் பொங்கி எழுந்து உரிமைகளை நிலைநாட்டியிருப்பார். ஆடம்பரத் திருமணங்களும், மணக்கொடையும் இன்று தலைவிரித்து ஆடுகின்றது. பெரியார் இன்று இருந்திருந்தால் அதனைப் பொசுக்கியிருப்பார்.

நிறைவாகச் சிலவற்றைச் சொல்லி என்னுரையை நிறைவு செய்கின்றேன். ''நேற்று என்பது மலர்ந்த மலர்கள், நாளை என்பது நம்பிக்கை மொட்டுகள், இன்று என்பது நறுமணமலர்கள்.'' இன்றைய நறுமணமலர்களாகிய நாம் பெரியார் இன்று இருந்திருந்தால் என்ன செய்வாரோ, அதனை நாம் சமுதாயம் முன்னேற நாம் செய்ய வேண்டும். நன்றி ! வணக்கம்.

2. **பெரியாரை நேர்காணல் செய்வதாகக் கருதி வினாப்பட்டியலை உருவாக்குக.**

**நேர்காணல் வினாக்கள்:**

◈ வணக்கம் ஐயா! இன்றைய இளைஞர்கள் பகுத்தறிவின் பக்கம் வர என்ன செய்யலாம்?

◈ இன்றைய இலக்கியங்கள் குறித்து தங்களின் கருத்து யாது?

◈ இன்றைய தலைமுறைக்குத் தாங்கள் கூறும் அறிவுரை யாது?

◈ வேலையில்லாத் திண்டாட்டம் போக்கத் தக்க வழி கூறுங்கள்?

◈ வருங்காலத் தொழில் நுட்பம் எப்படி இருக்கும்?

3. **இன்றைய சமுதாயம் பெரியார் பாதையில் நடக்கிறதா? நடக்கவில்லையா?**

**கலந்துரையாடல்:**

**இன்றைய சமுதாயம் பெரியார் பாதையில் நடக்கிறதா?**

வணக்கம் தோழர்களே!

எங்கும் சாதி, மத ஏற்றத்தாழ்வுகள் இல்லாத நிலை. கலப்புத் திருமணங்கள், சுயமரியாதைத் திருமணங்கள், நவீன முறைக் கல்வி, கல்வி வேலைவாய்ப்பில் இடஒதுக்கீடு, பெண்கள் முன்னேற்றம் ஆகியவற்றைப் பார்க்கும் போது இன்றைய சமுதாயம் பெரியார் பாதையில் நடக்கிறது என்று உறுதியாகச் சொல்லலாம்.

**இன்றைய சமுதாயம் பெரியார் பாதையில் நடக்கவில்லை?**

அவைக்கு முதற்கண் வணக்கம்.

சாதிக்கட்சிகள், மதக்கட்சிகள் எல்லாம் பெருகிவிட்டன. பகுத்தறிவுக்கு ஒவ்வாத சடங்குகள் நடக்கின்றன. இன்றும் குடும்பங்களில் பெண்ணுரிமை மறுக்கப்படுகின்றன. அதையெல்லாம் விடுங்கள். சாதிச்சான்றிதழ் என்ற ஒன்றை எடுத்துக்கொள்ளுங்கள். இன்றைய சமுதாயம் பெரியார் பாதையில் நடக்கவில்லை என்பதற்கு அதுவே சான்றாகும்.

●●✧✧✧●●

Please Send Your Study Materials to our Email Id: padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.CBSEtips.in



# இயல் 8

## கவிதைப் பேழை

# ஒளியின் அழைப்பு

– ந. பிச்சமூர்த்தி



| | | |
|---|---|---|
| ஆசிரியர் | - | ந.பிச்சமூர்த்தி |
| | | புதுக் கவிதையின் தந்தை என்று போற்றப்படுபவர். வழக்குரைஞராக இருந்து இந்து சமய அறநிலையத் துறை அலுவலராகவும் பணியாற்றியவர். |
| படைப்புகள் | - | கிளிக்கூண்டு, உயிர்மகள், கிளிக்குஞ்சு, பூக்காரி, வழித்துணை. |

## சொற்பொருள்

| | | |
|---|---|---|
| விண் | - | வானம் |
| ரவி | - | கதிரவன் |
| கமுகு | - | பாக்கு |

## இலக்கணக் குறிப்பு

| | | |
|---|---|---|
| பிறவிஇருள் | - | உருவகம் |
| ஒளியமுது | - | உருவகம் |
| வாழக்கைப்போர் | - | உருவகம் |

## பகுபத உறுப்பிலக்கணம்

**வேண்டி – வேண்டு + இ**

| | | |
|---|---|---|
| வேண்டு | - | பகுதி |
| இ | - | வினையெச்ச விகுதி |

**போகிறது – போ + கிறு + அ + து**

| | | |
|---|---|---|
| போ | - | பகுதி |
| கிறு | - | நிகழ்கால இடைநிலை |
| அ | - | சாரியை |
| து | - | ஒன்றன்பால் வினைமுற்று விகுதி |

**மலர்ச்சி – மலர் + ச் + சி**

| | | |
|---|---|---|
| மலர் | - | பகுதி |
| ச் | - | பெயர் இடைநிலை |
| சி | - | தொழிற்பெயர் விகுதி |

Please Send Your Study Materials to our Email Id: padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.CBSEtips.in



## பாடநூல் மதிப்பீட்டு வினா

### 1 பலவுள் தெரிக

1. ‘முண்டிமோதும் துணிவே இன்பம்’ - இவ்வடியில் இன்பமாக உருவகிக்கப்படுவது

அ) மகிழ்ச்சி ஆ) வியப்பு

இ) துணிவு ஈ) மருட்சி **விடை: இ) துணிவு**

### 2 குறுவினா

1. கமுகு மரம் எதனைத் தேடியது?

கமுகு மரம் விண்ணிலிருந்து வரும் கதிரவன் உயிர்ப்பைத் (அமுதை) தேடியது.

### 3 சிறுவினா

1. அதுவே வாழ்க்கைப் போர் - எது?

◈ கமுகு மரம், தான் தோன்றிய இடத்தில் இருந்த பெருமரத்தின் நிழல் என்னும் இருளைத் துளைத்து நின்றது.
◈ கமுகு மரம் விண்ணிலிருந்து வரும் கதிரவன் உயிர்ப்பைத்(அமுதை) தேடியது.
◈ கமுகு மரம் பெருமரத்தின் நிழலை வெறுத்தது, உச்சிக் கிளையை மேலே உயர்த்தி நின்றது.
◈ அமுதத்தை நம்பி, ஒளியை வேண்டிக் கமுகு மரம் பெருமரத்துடன் போட்டிபோடக் காரணம் ஆகும். இதுவே வாழ்க்கைப் போர்.

### 4 நெடுவினா

1. வாழ்க்கைப் போரில் வெற்றிபெறுவதற்கான வழிகளைக் கமுகு மரம் வாயிலாக ஆசிரியர் எவ்வாறு உணர்த்துகிறார்?

◈ கமுகு மரம், தான் தோன்றிய இடத்தில் இருந்த பெருமரத்தின் நிழல் என்னும் இருளைத் துளைத்து நின்றது.
◈ கமுகு மரம் விண்ணிலிருந்து வரும் கதிரவன் உயிர்ப்பைத்(அமுதை) தேடியது.
◈ கமுகு மரம் பெருமரத்தின் நிழலை வெறுத்தது, உச்சிக் கிளையை மேலே உயர்த்தி நின்றது.
◈ அமுதத்தை நம்பி, ஒளியை வேண்டிக் கமுகு மரம் பெருமரத்துடன் போட்டிபோடக் காரணம் ஆகும்.
◈ இதுவே வாழ்க்கைப் போர்.
◈ கமுகு மரம் பெருமரத்துடன் முட்டி மோதி துணிச்சல், முயற்சி, நம்பிக்கைக் கொண்டு தன்முனைப்போடு கூடிய போட்டியில் போராடி வென்றது.
◈ பெருமரத்தை விஞ்சி வளர்ச்சி வெற்றி நடை போடுகிறது.
◈ அதுபோலவே வாழ்க்கைப் போரில் செயல்பட்டால் வெற்றிபெறலாம் என்கின்ற வழியைக் கமுக மரம் வாயிலாக ஆசிரியர் உணர்த்துகிறார்.

Please Send Your Study Materials to our Email Id: padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.CBSEtips.in



## கூடுதல் வினாக்கள்

### 1 பலவுள் தெரிக

1. பொருத்துக.

| | | |
|---|---|---|
| 1. துளைத்தது | - | அ) கதிரவன் உயிர்ப்பு |
| 2. தேடியது | - | ஆ) பெருமரத்தின் நிழல் |
| 3. வெறுத்தது | - | இ) வாழ்க்கைப்போர் |
| 4. பெருமரத்துடன் போட்டி | - | ஈ) பெருமரத்தின் நிழல் |

அ) 1-ஆ 2-அ 3-ஈ 4-இ ஆ) 1-இ 2-அ 3-ஈ 4-ஆ
இ) 1-ஆ 2-ஈ 3-ஆ 4-இ ஈ) 1-ஈ 2-அ 3-ஆ 4-இ

**விடை: அ) 1-ஆ 2-அ 3-ஈ 4-இ**

2. பொருத்துக.

| | | |
|---|---|---|
| 1. விண் | - | அ) கதிரவன் |
| 2. ரவி | - | ஆ) வானம் |
| 3. கமுகு | - | இ) முட்டி |
| 4. முண்டி | - | ஈ) பாக்கு |

அ) 1-ஆ 2-அ 3-ஈ 4-இ ஆ) 1-இ 2-அ 3-ஈ 4-ஆ
இ) 1-ஆ 2-ஈ 3-ஆ 4-இ ஈ) 1-ஈ 2-அ 3-ஆ 4-இ

**விடை: அ) 1-ஆ 2-அ 3-ஈ 4-இ**

3. புதுக்கவிதையின் தந்தை என்று போற்றப்படுபவர்
அ) பாரதியார் ஆ) பாரதிதாசன்
இ) வல்லிக்கண்ணன் ஈ) ந.பிச்சமூர்த்தி **விடை: ஈ) ந.பிச்சமூர்த்தி**

4. ரேவதி என்னும் புனைப்பெயரில் படைப்புகளை வெளியிட்டவர்
அ) பாரதியார் ஆ) பாரதிதாசன்
இ) வல்லிக்கண்ணன் ஈ) ந.பிச்சமூர்த்தி **விடை: ஈ) ந.பிச்சமூர்த்தி**

5. ஹனுமான், நவஇந்தியா ஆகிய இதழ்களில் துணையாசிரியாக இருந்தவர்
அ) பாரதியார் ஆ) பாரதிதாசன்
இ) வல்லிக்கண்ணன் ஈ) ந.பிச்சமூர்த்தி **விடை: ஈ) ந.பிச்சமூர்த்தி**

6. பெருமரத்துடன் சிறு கமுகு போட்டியிடுகின்றது - இதில் 'கமுகு' என்பது
அ) பாக்கு மரம் ஆ) ஆலமரம்
இ) புளியமரம் ஈ) பலாமரம் **விடை: அ) பாக்கு மரம்**

7. பெருமரத்துடன் சிறு கமுகு போட்டியிடுகின்றது - இதில் அமைந்துள்ள நயம்
அ) எதுகை ஆ) மோனை
இ) இயைபு ஈ) முரண் **விடை: ஈ) முரண்**

8. கமுகு மரம் போட்டியிடக் காரணம்
அ) கதிரவன் ஒளி ஆ) பெருமரத்தின் நிழல்
தமிழக அரசு பள்ளிக்குத் தேவையான நூல்களை வழங்கி, பள்ளியிலேயே நூலகத்தை அமைத்துள்ளது. பள்ளி நூலகம் மூலம் வகுப்பறையிலேயே நூல்களைப் படிக்க, ''புத்தகப்பூங்கொத்து'' திட்டம் அமைத்துள்ளது.

• i Ä ø µ:

பூவினை மொய்க்கும் வண்டு போல நாம் அனைவரும் நூலகம் சென்று படிப்போம். நல்லறிவைப் பெறுவோம். நூலக உறுப்பினர் ஆவோம்.

## 5. ö£ s PÀ Â (A À » x) ö£ s PÒ • ß ÷ Ú Ø Ó®

• ß Ý ø µ:

''மங்கையராய் பிறப்பதற்கே மாதவம் செய்திட வேண்டுமம்மா'' என்றார் கவிமணி. அத்தகைய சிறப்பு மிக்க இனம் பெண்ணினம்.

ö£ s o ß ]Ó¨¦:

மொழி, நாடு, மண், ஆறு, இறைவன் ஆகிய அனைத்தும் பெண்கள். பாரதியும், பாரதிதாசனும், பெரியாரும் போற்றிய பெருமைக்குரியவள் பெண்.

ö£ s n i ø©:

முன்னோர்கள் ஆணும் பெண்ணும் இயற்கைப் படைப்பில் சமம் என்று நினைத்து சரியாக வாழ்ந்து வந்தார்கள். இடையில் வந்த மூடப் பழக்க வழக்கங்களால் பெண்ணைத் தாழ்த்தினார்கள். சமத்துவத்தை அடியோடு வீழ்த்தினார்கள். அச்சம், மடம், நாணம், பயிர்ப்பு ஆகிய நான்கும் பெண்ணுக்குரியது என்று கூறி பெண்ணை அடிமைப்படுத்தினர். சமைப்பதும், குழந்தை பெறுவதும் பெண்ணுக்குரியதாய் கூறி அடிமைப்படுத்தினர்.

ö£ s PÀ Â:

ஆணுக்குப் பெண் இளைப்பில்லை என்றார் பாரதி. பெண்கட்கு கல்வி வேண்டும் என்றார் பாரதிதாசன். திரு.வி.க., காந்தியடிகள், பெரியார் ஆகியோர் பெண்கல்விக்குக் குரல் கொடுத்தனர்.

ö£ s • ß ÷ Ú Ø Ó®:

மருத்துவர் முத்துலெட்சுமி, நீலாம்பிகை அம்மையார், மூவலூர் இராமமிர்தம், இந்திரா காந்தி, அன்னை தெரஸா, கிரண்பேடி, கல்பனா சாவ்லா, சுனிதா வில்லியம்ஸ், பாத்திமா பீவி ஆகிய பெண்கள் கல்வியால் சிறந்து பெருமை பெற்ற பெண்கள்.

• i Ä ø µ:

இன்று பெண்கல்வி வளர்ந்து வருகின்றது. பெண்களுக்கென்று தனிப்பள்ளிகள், தனிக்கல்லூரிகள் தோன்றிவிட்டன. பெண்கள் கல்லாத நிலை இல்லை என்பது உருவாக வேண்டும்.

Please Send Your Study Materials to our Email Id: padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.CBSEtips.in



# 6. £Ç¢u ª Ç› ß \%‰P Áõ Ì U ø P

• ß Ý ø µ:

உலகின் தொன்மையான குடி தமிழ்க்குடி ஆகும். தமிழர் இன்று தொட்டு இன்று வரை தனிநாகரிகர்களாக இருந்து வந்துள்ளனர்.

## ÁÈ£õ k® ÂÇõUP Ð ®:

திணைநிலத் தெய்வ வழிபாடு, இயற்கை வழிபாடு, நடுகல் வழிபாடு ஆகியவற்றை மேற்கொண்டனர். தைத்திங்கள் நோன்பு, தை நீராடல், கார்த்திகைத் திருநாள், திருவாதிரை விழா, பங்குனி உத்திர விழா, இந்திர விழா, வேலன் வெறியாட்டு விழா, இளவேனில் விழா ஆகிய விழாக்களைக் கொண்டாடினர்.

## £ÇUPÁÇUP [ PÒ:

தீ மூட்ட கல்லை உரசினர். காலத்தை ஞாயிறு, நிலவு, விண்மீன், கோள்கள், மலர்கள் பூக்கும் வேளை கொண்டு கணக்கிட்டனர். முதுமக்கள் தாழியில் இறந்தோரை இட்டுப் புதைத்தனர். விருந்தினரை வீட்டுக்கு வெளியே வந்து அனுப்பினர்.

## öuõÈ ÀPÒ:

தச்சுத் தொழில், தேர், வண்டி, கதவு, கட்டில் முதலிய பொருள்கள் செய்யும் தொழில், இரும்பு, பொன் கருவிகள் செய்யும் தொழில், உப்பு வணிகம், மீன் பிடித்தல் தொழில், உழவுத்தொழில் ஆகிய தொழில்களை மேற்கொண்டனர்.

## PÀ Â:

திருக்குறளில் கல்வி, கேள்வி, அறிவுடைமை போன்ற அதிகாரங்கள் அக்காலக் கல்விச் சிறப்பினை விளக்குவன. மரத்தடி, ஊர் மன்றம், ஆசிரியர் வீடு, வீட்டுத் திண்ணை பழந்தமிழகத்தில் கல்வி கற்கும் இடங்களாக விளங்கின. எழுத்தாணி கொண்டு எழுதும் பழக்கம் இருந்தது. எண்ணும் எழுத்தும் கண்ணெனப் போற்றப்பட்டன. மருத்துவம், வானியல் போன்றவை கற்பிக்கப்பட்டன. எக்குடி பிறப்பினும் யாவரே ஆயினும் அக்குடியில் கற்றோரை மதித்தனர்.

## u ª Ç› ß v ¸© n • øÓ:

பெண்ணுக்கு மணமகன் பரிசளிப்பது வழக்கத்தில் இருந்தது. மணநிகழ்வின் போது மணமக்களை நெல்லும் மலரும் கலந்த நீரால் நீராட்டி, தூய ஆடை அணிகலன்களை அணிவித்தனர். மணமுழவு ஒலிக்க மணமகளைத் தலைவனிடம் தந்து மூத்தோர் வாழ்த்துரை வழங்கினர்.

## u ß ÷Ú › À »õ¨ £ s ¦PÒ:

- அறனெனப்பட்டதே இல்லறம்
- உண்பது நாழி உடுப்பவை இரண்டே என்ற எளிய வாழ்க்கை.
- செல்விருந்து ஓம்பி வருவிருந்து எதிர்பார்க்கும் உயர் பண்பு
- கொள்வதும் மிகை கொளாது கொடுப்பதும் குறைவு படாது வாழும் கொள்கை
- களிறெறிந்து பெயர்த்தல் காளைக்குக் கடனே என்ற வீரம்
- அன்புடையார் என்பும் உரியர் பிறர்க்கு என்னும் தூய அன்பு
- யாதும் ஊரே யாவரும் கேளிர் என்ற உலகப்பொதுமை

ஆகியன தமிழரின் தன்னேரில்லாத பண்புகள் ஆகும்.

Please Send Your Study Materials to our Email Id: padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.CBSEtips.in



• i Ä ø µ:

அறிவியல் வளர்ச்சி பெறாத காலத்திலேயே நாகரீக வாழ்க்கையில் உலகத்திற்கே முன்னோடியாகத் திகழ்ந்தவர்கள் நம் தமிழர்கள். அவர்கள் வாழ்வும் பண்பாடும் என்றும் நிலைத்து போற்றுதலுக்குரியது.

## 7. ö£› ¯õ› ß \ • uõ ¯ ¨ £ o

• ß Ý ø µ:

ஏன்? எப்படி? எதற்கு? என்ற வினாக்கள் எழுப்பி, அறிவின் வழியே சிந்தித்து முடிவெடுப்பதே பகுத்தறிவு ஆகும். அதன் தந்தை பெரியார். வெண்தாடி வேந்தர், பகுத்தறிவு பகலவன், வைக்கம் வீரர், ஈரோட்டுச் சிங்கம் என்றெல்லாம் அழைக்கப்பட்டார்.

C Í ø ©:

ஈரோடு நகரில் 1879ல் பெரியார் பிறந்தார். தொடக்கக் கல்வியுடன் தம் படிப்பை நிறுத்திக் கொண்டு, தம் தந்தையின் வணிகத் தொழிலில் தம்மை ஈடுபடுத்திக் கொண்டார்.

ø ÁUP® Ãµº:

கேரளத்தில் வைக்கம் என்னும் ஊரில் தலைவிரித்தாடிய தீண்டாமைக் கொடுமையை ஒழிக்கப் போராட்டம் நடத்தி வெற்றி கண்டார். அதனால் 'வைக்கம் வீரர்' என்று அழைக்கப்பட்டார்.

_ ¯©› ¯õ ø u C ¯UP®:

பெரியார் காங்கிரஸிலிருந்து விலகி 1925 ல் சுயமரியாதை இயக்கம் தொடங்கினார்.இந்த இயக்கத்தின் வாயிலாக சாதி ஏற்றத் தாழ்வு போக்குதல், தீண்டாமை ஒழித்தல், மூடநம்பிக்கை ஒழித்தல், பெண்ணுரிமை நிலைநாட்டுதல் ஆகும்.

ö£› ¯õº ^µø©zu GÊzxPÒ:

'ஐ' என்பதை 'அய்' எனவும், 'ஔ' என்பதை 'அவ்' எனவும் சீரமைத்தார். இவற்றுக்கான மாற்று வரிவடிவத்தையும் கொண்டு வந்தார்.

ö£s q › ø© ÷£õØÔ¯Áº:

பெண்ணுரிமை, பெண் கல்வி, சொத்துரிமை, அரசுப் பணி, மறுமணம் ஆகியவற்றிற்காகப் பெரியார் போராடினார். பெண்கள் மாநாடுகள் பல நடத்தி பெண்களை விழிப்படையச் செய்தார். 13.11.1938 சென்னையில் நடந்த பெண்கள் மாநாட்டில் ஈ.வெ.ராவுக்குப் பெரியார் பட்டம் கொடுக்கப்பட்டது.

• i Ä ø µ:

தொண்டு செய்து பழுத்த பழமான பெரியாரைப் போற்றுவோம்!

அவரின் வழி நடப்போம்!!

Please Send Your Study Materials to our Email Id: padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.CBSEtips.in



# புதிய தமிழ்ச்சொற்கள்

| வ. எண் | ஆங்கிலச் சொற்கள் | புதிய தமிழ்ச்சொற்கள் |
|---|---|---|
| 1. | Sim | தொகுப்பி, செறிவட்டை |
| 2. | Whatsup | புலனம் |
| 3. | Youtube | வலையொளி |
| 4. | Wechat | அளாவி |
| 5. | Messenger | பற்றியம் |
| 6. | Twitter | கீச்சகம் |
| 7. | Skype | காயலை |
| 8. | Smart Phone | திறன்பேசி |
| 9. | Bluetooth | ஊடலை |
| 10. | Wifi | அருகலை |
| 11. | Hotspot | பகிரலை |
| 12. | Broad Band | ஆலலை |
| 13. | Online | இயங்கலை |
| 14. | Offline | முடக்கலை |
| 15. | Thumbdrive | விரலி |
| 16. | Gps | தடங்காட்டி |
| 17. | Cctv | மறைகாணி |
| 18. | 3D | முத்திரட்சி |
| 19. | Charger | மின்னூக்கி |
| 20. | Selfie | சுயஉரு, சுயப்பு, தம் படம் |

●●✧✧✧●●

Please Send Your Study Materials to our Email Id: padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.CBSEtips.in



# நூலும் நூலாசிரியரும்

| வ.எண் | நூல் | நூலாசிரியர் |
|---|---|---|
| 1. | தனித்தமிழ்க் கட்டுரை | நீலாம்பிகை அம்மையார் |
| 2. | வடசொல் - தமிழ் அகரவரிசை | நீலாம்பிகை அம்மையார் |
| 3. | முப்பெண்மணிகள் வரலாறு | நீலாம்பிகை அம்மையார் |
| 4. | பட்டினத்தார் பாராட்டி மூவர் | நீலாம்பிகை அம்மையார் |
| 5. | சூரியன் | நீலாம்பிகை அம்மையார் |
| 6. | பரமாணுப் புராணம் | ஈ.த. இராஜேஸ்வரி அம்மையார் |
| 7. | குடும்ப விளக்கு | பாரதிதாசன் (கனக. சுப்புரத்தினம்) |
| 8. | பாண்டியன் பரிசு | பாரதிதாசன் (கனக. சுப்புரத்தினம்) |
| 9. | இருண்டவீடு | பாரதிதாசன் (கனக. சுப்புரத்தினம்) |
| 10. | குடும்ப விளக்கு | பாரதிதாசன் (கனக. சுப்புரத்தினம்) |
| 11. | தமிழியக்கம் | பாரதிதாசன் (கனக. சுப்புரத்தினம்) |
| 12. | பிசிராந்தையார் | பாரதிதாசன் (கனக. சுப்புரத்தினம்) |
| 13. | சிறுபஞ்சமூலம் | காரியாசான் |
| 14. | கருப்புமலர்கள் | நா. காமராசன் |
| 15. | தண்ணீர் தண்ணீர் | கோமல் சுவாமிநாதன் |
| 16. | ஒரு கிராமத்து நதி | சிற்பி (பாலசுப்ரமணியம்) |
| 17. | சாக்ரடீஸின் சிவப்பு நூலகம் | எஸ். இராமகிருஷ்ணன் |
| 18. | நன்னூல் | பவணந்தி முனிவர் |
| 19. | தொல்காப்பியம் | தொல்காப்பியர் |
| 20. | மதுரைக்காஞ்சி | மாங்குடி மருதனார் |
| 21. | திருக்குறள் | திருவள்ளுவர் |
| 22. | சிலப்பதிகாரம் | இளங்கோவடிகள் |
| 23. | மணிமேகலை | சீத்தலைச் சாத்தனார் |
| 24. | தொல்காப்பியம் | தொல்காப்பியனார் |
| 25. | சிற்பச்செந்நூல் | தமிழ்நாடு தொழில் நுட்பக்கல்வி இயக்ககம் |

Please Send Your Study Materials to our Email Id: padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.CBSEtips.in



| வ.எண் | நூல் | நூலாசிரியர் |
|---|---|---|
| 26. | இராவண காவியம் | புலவர் குழந்தை |
| 27. | யாப்பதிகாரம் | புலவர் குழந்தை |
| 28. | தொடையதிகாரம் | புலவர் குழந்தை |
| 29. | திருப்பாவை | ஆண்டாள் |
| 30. | நாச்சியார் திருமொழி | ஆண்டாள் |
| 31. | செய்தி | தி. ஜானகிராமன் |
| 32. | கருங்கடலும் கலைக்கடலும் | தி. ஜானகிராமன் |
| 33. | காவேரி | தி. ஜானகிராமன் |
| 34. | அடுத்தவீடு ஐம்பது மைல் | தி. ஜானகிராமன் |
| 35. | சீவக சிந்தாமணி | திருத்தக்க தேவர் |
| 36. | நரிவிருத்தம் | திருத்தக்க தேவர் |
| 37. | முத்தொள்ளாயிரம் | பெயர் அறியவில்லை |
| 38. | இந்திய தேசிய இராணுவம் – தமிழர் பங்கு | பேராசிரியர் மா.சு. அண்ணாமலை |
| 39. | ஒளியின் அழைப்பு | ந. பிச்சமூர்த்தி |
| 40. | ஸயன்ஸீக்குப் பலி | ந. பிச்சமூர்த்தி |
| 41. | தாவோ தே ஜிங் | லா வோட்சு |
| 42. | யசோதர காவியம் | அறிய இயலவில்லை |
| 43. | மகனுக்கு எழுதிய கடிதம் | நா. முத்துக்குமார் |
| 44. | கால் முளைத்த கதைகள் | எஸ். இராமகிருஷ்ணன் |
| 45. | குறுந்தொகை (நசை... எனத் தொடங்கும் பாடல் | பாலை பாடிய பெருங்கடுங்கோ |
| 46. | ஒரு சிறு இசை, அந்நியமற்ற நதி, புலரி, முன்பின், ஆதி, மணல், அகமும் புறமும், சில இறகுகள் சில பறவைகள், கலைக்க முடியாத கற்பனைகள், தோட்டத்துக்கு வெளியிலும் சில பூக்கள், உயரப்பந்தல், வெளியிலே தெரிவது | கல்யாண்ஜி (கல்யாண சுந்தரம்) |
| 47. | வாடாமல்லி, பாலைப்புறா, மண்சுமை, தலைப்பாகை, காகித உறவு, குற்றம் பார்க்கில், வேரில் பழுத்த பலா, தாய்மைக்கு வறட்சி இல்லை – சிறுகதை | சு. சமுத்திரம் |
| 48. | பாஞ்சாலி சபதம் | பாரதியார் |
| 49. | திராவிட மொழிகளின் ஒப்பிலக்கணம் | கால்டுவெல் |
| 50. | தமிழோவியம், வணக்கம் வள்ளுவ, தமிழன்பன் கவிதைகள் | ஈரோடு தமிழன்பன் |

Please Send Your Study Materials to our Email Id: padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.CBSEtips.in



| வ.எண் | நூல் | நூலாசிரியர் |
|---|---|---|
| 51. | தமிழ் விடு தூது | அறிய இயலவில்லை |
| 52. | நிலைபெற்ற சிலை, வீராயி, கவிஞனின் காதல், மே தினமே வருக, கண்ணப்பன் கிளிகள், குருவிப்பட்டி, தமிழர் சமுதாயம், மாதவி காவியம், தமிழ் ஒளியின் கவிதைகள் | கவிஞர் தமிழ்ஒளி |
| 53. | பெரியபுராணம் (திருத்தொண்டர் புராணம்) | சேக்கிழார் (அருண்மொழித் தேவர்) |
| 54. | திருத்தொண்டர் திருவந்தாதி | நம்பியாண்டார் நம்பி |
| 55. | தண்ணீர், சாசனம், ஒவ்வொரு கல்லாய், கொம்பன் | கந்தர்வன் |
| 56. | புறப்பொருள் வெண்பாமாலை | ஐயனாரிதனார் |
| 57. | கையருகே நிலா | மயில்சாமி அண்ணாதுரை |
| 58. | கள்ளிக்காட்டு இதிகாசம் | கவிஞர் வைரமுத்து |

# சிறப்புத் தொடர்களும் கூற்றுகளும்

| வ.எண் | சிறப்புத்தொடர்/கூற்றுகள் | இடம்பெறும் நூல் | இயற்றியவர் |
|---|---|---|---|
| 1. | ‘கல்வி இல்லாத பெண்கள் களர்நிலம்’ | குடும்ப விளக்கு | பாரதிதாசன் (கனக சுப்புரத்தினம்) |
| 2. | ‘கல்வியை உடைய பெண்கள் திருந்திய கழனி’ | குடும்ப விளக்கு | பாரதிதாசன் (கனக சுப்புரத்தினம்) |
| 3. | ‘கல்வி இல்லா மின்னாளை வாழ்வில் என்றும் மின்னாள் என்றே உரைப்பேன்’ | குடும்ப விளக்கு | பாரதிதாசன் (கனக சுப்புரத்தினம்) |
| 4. | ‘பெண்கல்வி வேண்டும் யாண்டும’ | குடும்ப விளக்கு | பாரதிதாசன் (கனக சுப்புரத்தினம்) |
| 5. | ‘பட்டங்கள் ஆள்வதும் சட்டங்கள் செய்வதும் பாரினில் பெண்கள் நடத்த வந்தோம்’ | பாரதியார் கவிதைகள் | பாரதியார் |
| 6. | ‘மங்கையராய் பிறப்பதற்கே நல்ல மாதவம் செய்திடல் வேண்டுமம்மா’ | கவிமணி கவிதைகள் | கவிமணி தேசிக விநாயகம் |
| 7. | ‘பெண் எனில் பேதை என்ற எண்ணம் இந்த நாட்டில் இருக்கும் வரைக்கும் உருப்படல் என்பது சரிப்படாது’ | பாரதிதாசன் கவிதைகள் | பாரதிதாசன் பாவேந்தர் பாரதிதாசன் |

Please Send Your Study Materials to our Email Id: padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.CBSEtips.in



| வ.எண் | சிறப்புத்தொடர்/கூற்றுகள் | இடம்பெறும் நூல் | இயற்றியவர் |
|---|---|---|---|
| 8. | 'வாழ்க்கையில் அடிப்படைத் தேவைகளுக்கு இடம் புத்தக சாலைக்குத் தரப்பட வேண்டும்' | - | அறிஞர் அண்ணா |
| 9. | 'உலகில் சாகாவரம் பெற்ற பொருள்கள்' | - | கதே |
| 10. | 'மாகால் எடுத்த முந்நீர் போல' | மதுரைக் காஞ்சி | மாங்குடி மருதனார் |
| 11. | 'சுழன்றும் ஏர்ப்பின்னது உலகம்' | திருக்குறள் | திருவள்ளுவர் |
| 12. | 'உழந்தும் உழவே தலை' | திருக்குறள் | திருவள்ளுவர் |
| 13. | 'உழுவார் உலகத்தார்க்கு ஆணி' | திருக்குறள் | திருவள்ளுவர் |
| 14. | 'டெல்லி நோக்கிச் செல்லுங்கள்' டெல்லி சலோ | - | நேதாஜி |
| 15. | 'மனதை மலரவைக்கும் இளங்கதிரவனின்ன வைகறைப்பொழுது வேண்டுமா? அப்படியானால் இரவில் நீண்ட நேரம் வாழக் கற்றுக்கொள்ளுங்கள் | - | நேதாஜி |
| 16. | 'சாதியினால் மனித வாழ்விற்கு எவ்விதச் சிறுபயனும் விளையப் போவதில்லை' | - | பெரியார் |
| 17. | 'சாதி மற்றவர்களின் உரிமையைப் பறிக்கின்றது' | - | பெரியார் |
| 18. | 'மொழி என்பது உலகின் போட்டி, போராட்டத்திற்கு ஒரு போர்க்கருவியாகும்' | - | பெரியார் |
| 19. | 'இந்திய தேசிய இராணுவத்தின் இதயமும் ஆத்மாவும் தமிழர்கள்தான்' | - | தில்லான் |
| 20. | 'மலேசியாவில் உள்ள தமிழர்களின் இரத்தம் நேதாஜியின் மூளையில் கட்டியாக உள்ளது' | - | சர்ச்சில் |
| 21. | 'இந்தத் தமிழினம்தான் ஆங்கிலேயர்களை அழிக்கும்' | - | நேதாஜி |
| 22. | 'நான் மறுபடியும் பிறந்தால் ஒருதென்னிந்தியனாகப் பிறக்க வேண்டும்' | - | நேதாஜி |
| 23. | 'நாட்டு விடுதலையை விட, பெண் விடுதலை முதன்மையானது' | - | பெரியார் |
| 24. | 'யாதும் ஊரே யாவரும் கேளிர்' | - | கணியண் பூங்குன்றனார் |

Please Send Your Study Materials to our Email Id: padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.CBSEtips.in



| வ.எண் | சிறப்புத்தொடர்/கூற்றுகள் | இடம்பெறும் நூல் | இயற்றியவர் |
|---|---|---|---|
| 25. | 'எந்தக் காலமும் நிலையாய் இருப்பது தமிழே' | தமிழோவியம் | ஈரோடு தமிழன்பன் |
| 26. | 'இனிமையும் நீர்மையும் தமிழெனல் ஆகும்' | மங்கலநிகண்டு | - |
| 27. | 'யாமறிந்த மொழிகளிலே தமிழ்மொழி போல் இனிதாவது எங்கும் காணோம்' | பாரதியார் கவிதைகள் | பாரதியார் |
| 28. | 'நீரின்றி அமையாது உலகம்' | திருக்குறள் | திருவள்ளுவர் |
| 29. | 'உண்டிகொடுத்தோர் உயிர் கொடுத்தோரே' | புறநானூறு | குடபுலவியனார் |
| 30. | 'உண்பது நாழி உடுப்பவை இரண்டே' | புறநானூறு | |
| 31. | 'சான்றோனாக்குதல் தந்தைக்குக் கடனே' | புறநானூறு | பொன்முடியார் |
| 32. | 'உற்றுழி உதவியும் உறுபொருள் கொடுத்தும் பிற்றை நிலைமுனியாது கற்றல் நன்றே' | புறநானூறு | |
| 33. | 'மகத நன்நாட்டு வாள்வாய் வேந்தன், பகைப்புறத்துக் கொடுத்த பட்டிமண்டபம்' | சிலப்பதிகாரம் | இளங்கோவடிகள் |
| 34. | 'பட்டிமண்டபத்துப் பாங்கு அறிந்து ஏற்றுமின்' | மணிமேகலை | சீத்தலைச் சாத்தனார் |
| 35. | 'பட்டிமண்டபம் ஏற்றினை, ஏற்றினை. எட்டினோடு இரண்டும் அறியேனையே' | திருவாசகம் | மாணிக்கவாசகர் |
| 36. | 'பன்ன அரும் கலைதெரி பட்டிமண்டபம்' | கம்பராமாயணம் | கம்பர் |
| 37. | 'வலவன் ஏவா வானூர்தி' | புறநானூறு | |
| 38. | 'எந்திர வூர்தி இயற்றுமின்' | சீவகசிந்தாமணி | சீத்தலைச் சாத்தனார் |
| 39. | 'ஏவுகணையிலும் தமிழை எழுதி எல்லாக்கோளிலும் ஏற்றுங்கள்' | வைரமுத்து கவிதைகள் | வைரமுத்து |
| 40. | 'அறிவியல் என்னும் வாகனம் மீதில் ஆளும் தமிழை நிறுத்துங்கள்' | வைரமுத்து கவிதைகள் | வைரமுத்து |
| 41. | 'மாமழை போற்றுதும் மாமழை போற்றுதும்' | சிலப்பதிகாரம் | இளங்கோவடிகள் |
| 42. | 'பூட்கையில்லோன் யாக்கை' | புறநானூறு | ஆலந்தூர் கிழார் |
| 43. | 'படுதிரை வையகம் பாத்தியப் பண்பே' | தொல்காப்பியம் | தொல்காப்பியர் |
| 44. | 'உள்ளற்க உள்ளம்சிறுகுவ' | திருக்குறள் | திருவள்ளுவர் |
| 45. | 'உள்ளுவது எல்லாம் உயர்வுள்ளல்' | திருக்குறள் | திருவள்ளுவர் |

Please Send Your Study Materials to our Email Id: padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.CBSEtips.in



# சிறப்புப் பெயர்கள்

| | | |
|---|---|---|
| 1. | இந்திய ஏவுகணை நாயகன் | டாக்டர். அப்துல் கலாம் |
| 2. | இளைய கலாம் | மயில்சாமி அண்ணாதுரை |
| 3. | பாவேந்தர் | பாரதிதாசன் |
| 4. | இந்திய விண்வெளித் திட்டத்தின் தந்தை | விக்ரம் சாராபாய் |
| 5. | சூடிக்கொடுத்த சுடர்க்கொடி | ஆண்டாள் |
| 6. | தண்டமிழ் ஆசான், சாத்தன், நன்னூற் புலவன் | சீத்தலைச் சாத்தனார் |
| 7. | இந்திய நீர்ப்பாசனத் தந்தை | சர் ஆர்தர் காட்டன் |
| 8. | மணநூல் | சீவகசிந்தாமணி |
| 9. | வாயில் இலக்கியம், சந்து இலக்கியம் | தமிழ்விடுதூது |
| 10. | பாரதியாரின் வழித்தோன்றல் | தமிழ்ஒளி |
| 11. | பண்பாட்டுக் கருவூலம் | புறநானூறு |
| 12. | புரட்சிக் காப்பியம், மணிமேகலைத் துறவு | மணிமேகலை |
| 13. | இரட்டைக் காப்பியம், தமிழ் மக்களின் வாழ்வியலைச் சொல்லும் கருவூலங்கள் | சிலப்பதிகாரம், மணிமேகலை. |
| 14. | முப்பால், பொதுமறை, பொய்யாமொழி, வாயுறை வாழ்த்து, தெய்வநூல், தமிழ்மறை, முதுமொழி, பொருளுறை. | திருக்குறள் |
| 15. | நாயனார், தேவர், முதற்பாவலர், தெய்வப்புலவர், நான்முகனார், மாதானுபங்கி, செந்நாப்போதார், பெருநாவலர் | திருவள்ளுவர் |
| 16. | தமிழில் எழுதப்பட்ட உலகப்பனுவல், உலகப்பொதுமறை | திருக்குறள் |
| 17. | வெண்தாடி வேந்தர், பகுத்தறிவு பகலவன், வைக்கம் வீரர், ஈரோட்டுச் சிங்கம், தெற்காசியாவின் சாக்ரடீசு, பெண்ணினப் போர்முரசு, புத்துலகத் தொலைநோக்காளர், சுயமரியாதைச் சுடர் | பெரியார் |
| 18. | புதுக்கவிதையின் தந்தை | ந. பிச்சமூர்த்தி |
| 19. | உலகப்புலவர் | திருவள்ளுவர் |
| 20. | வண்ணதாசன் | கல்யாண்ஜி |
| 21. | பெருகு வளமதுரைக்காஞ்சி | மதுரைக்காஞ்சி |
| 22. | கற்கவிஞர்கள் | சிற்பிகள் |

Please Send Your Study Materials to our Email Id: padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.CBSEtips.in



# தொகுத்தறி மதிப்பீடு

## ©õv› ÂÚõzuõÒ & 1

வகுப்பு : 9

uª Ì • uÀ uõÒ

(இயல் 1, 2, 3)

காலம் : 2 மணி மதிப்பெண் : 60

### A) E›¯ Âøhø¯z ÷uº¢öukzx GÊxP. 6 x 1 = 6

1. ஐரோப்பிய மொழியோடு தொடர்புடையது வடமொழி என்று முதன்முதலில் குறிப்பிட்ட அறிஞர் ________.
   அ) வில்லியம் ஜோன்ஸ் ஆ) கால்டுவெல்
   இ) பாப் ஈ) ரஸ்க
2. ‘வணக்கம் வள்ளுவ‘ என்ற நூலுக்குச் சாகித்ய அகாடமி விருது கிடைத்த ஆண்டு ________.
   அ) 2003 ஆ) 2004
   இ) 2007 ஈ) 2015
3. அண்மையில் சேர்க்கப்பட்ட திராவிடமொழிகள் ________.
   அ) எருகலா, தங்கா, குறும்பா, சோழிகா ஆ) கோத்தா, தோடா, கொரகா, இருளா
   இ) கூயி, கூவி, கோண்டாபர்ஜி ஈ) குரூக், மால்தோ, பிராகுயி
3. தாமசம் என்பதன் பொருள் ________.
   அ) அமைதி ஆ) போர்
   இ) மேன்மை ஈ) சோம்பல்
4. பொருத்துக.
   1. உணவின் சுவை - அ) ஒன்பது
   2. தமிழின் சுவை - ஆ) பத்து
   3. தேவர்கள் குணம் - இ) ஆறு
   4. தமிழின் குணம் - ஈ) மூன்று
   அ) 1-இ 2-அ 3-ஈ 4-ஆ ஆ) 1-அ 2-ஆ 3-ஈ 4-இ
   இ) 1-இ 2-ஆ 3-ஈ 4-அ ஈ) 1-ஈ 2-அ 3-இ 4-அ
5. பொருந்தாத இணையைத் தேர்ந்தெடுக்க.
   அ) தென் திராவிடம் - கன்னடம் ஆ) நடுத்திராவிடம் - கூயி
   இ) வடதிராவிடம் - குரூக் ஈ) தென்திராவிடம் - மால்தோ
6. சென்றியு, லிமரைக்கூ எனப் புதுப்புது வடிவங்களில் கவிதைகளைத் தந்தவர் ________.
   அ) ஈரோடு தமிழன்பன் ஆ) பாரதியார்
   இ) பாரதிதாசன் ஈ) கண்ணதாசன்

### B) GøÁ÷¯Ý®‰ßÓÝUS ‰ßÖ Á›PÎÀ Âøh¯ÎUP. 3 x 2 = 6

7. தமிழோவியம் கவிதையில் உங்களைக் கவர்ந்த அடிகள் குறித்து எழுதுக.
8. கண்ணி என்பதன் விளக்கம் யாது?
9. திருநாட்டில் எவ்வெவற்றைக் குவித்து வைத்திருந்தனர்?
10. ‘‘உண்டி கொடுத்தோரே உயிர் கொடுத்தோர்‘‘ - பொருள் விளக்கம் தருக.
11. எண்பேராயத்தில் உள்ளோர் யாவர்?

Please Send Your Study Materials to our Email Id: padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.CBSEtips.in



C) GøÁ÷¯Ý®‰ßÓÝUS ‰ßÖ Á›PÎÀ Âøh¯ÎUP. 3 x 2 = 6

12. கூவல் என்பதன் பொருள் யாது?
13. நீங்கள் பேசும் மொழி எந்த இந்திய மொழிக் குடும்பத்தைச் சேர்ந்தது?
14.. ஏறுதழுவதல் நிகழ்விற்கு இலக்கியங்கள் காட்டும்; வேறுபெயர்களைக் குறிப்பிடுக.
15. நிலத்தடி நீர் மட்டம் குறைந்து வரும் நாடுகள் யாவை?
16. ஹோக்கன் குறிப்பிடும் தமிழியன் மொழிகள் யாவை?

D) GøÁ÷¯Ý®‰ßÓÝUS BÖ Á›PÎÀ Âøh¯ÎUP. 3 x 4 = 12

17. நிலைத்தபுகழ் பெறுவதற்குக் குடபுலவியனார் கூறும் வழிகள் யாவை?
18. பழமணல் மாற்றுமின் புதுமணல் பரப்புமின் - இடஞ்சுட்டிப் பொருள் விளக்குக.
19. பொதுவியல் திணை விளக்குக.
20. தமிழ்பெற்ற சிறப்புகளாகத் தமிழ்விடு தூது குறிப்பிடுவன யாவை?
21. பட்டமரத்தின் வருத்தங்கள் யாவை?

E) GøÁ÷¯Ý®‰ßÓÝUS BÖ Á›PÎÀ Âøh¯ÎUP. 3 x 4 = 12

22. திராவிட மொழிகளின் பிரிவுகள் யாவை? அவற்றுள் உங்களுக்குத் தெரிந்த மொழிகளின் சிறப்பியல்புகளை விளக்குக.
23. சோழர் காலக் குமிழித் தூம்பு எதற்காகப் பயன்படுத்தப் பட்டது?
24. தமிழ் குறித்து கால்டுவெல் கூறும் கருத்து யாது?
25. ஜான் பென்னி குவிக் - குறிப்பு தருக.
26. ஜல்லிக்கட்டு - பெயர்க்காரணம் தருக.

F) Â›ÁõÚ Âøh¯ÎUP. 2 x 6 = 12

27. அ) தூது அனுப்பத் தமிழே சிறந்தது - தமிழ்விடு தூது காட்டும் காரணங்களை விளக்கி எழுதுக.

(AÀ»x)

ஆ) பெரியபுராணம் காட்டும் திருநாட்டுச் சிறப்பினைத் தொகுத்து எழுதுக.

28. அ) நீரின்று அமையாது உலகு - என்னும் வள்ளுவரின் அடி உணர்த்தும் பொருள் ஆழத்தை எடுத்துக்காட்டுடன் விவரி.

(AÀ»x)

ஆ) ஏறுதழுவுதல் தமிழரின் அறச்செயல் என்று போற்றப்படுவதற்குக் காரணங்களை விவரிக்க.

G) Ai¤ÓÇõ©À GÊxP. 1 x 6 = 6

29. 'தித்திக்கும் தெள்ளமுதாய்' எனத்தொடங்கும் தமிழ்விடு தூது பாடல்.

●●✧✧✧●●

Please Send Your Study Materials to our Email Id: padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.CBSEtips.in



# ©õv› ÂÚõzuõÒ & 1

வகுப்பு : 9

## uª Ì Cµ s hõ® uõÒ

(இயல் 1, 2, 3)

காலம் : 2 மணி மதிப்பெண் : 60

A) E›¯ Âøhø¯z ÷uº¢öukzx GÊxP. 10 x 1 = 10

1. சொற்றொடர் வகைச் சுட்டுக. ''நண்பா கேள்''
   அ) எழுவாய்த்தொடர் ஆ) வினைமுற்றுத் தொடர்
   இ) வேற்றுமைத்தொடர் ஈ) விளித்தொடர்

2. பொருத்துக.
   1.எதிர்மறைத்தொடர் - அ) குமரன் மழையில் நனைந்தான்
   2.உடன்பாட்டுத் தொடர் - ஆ) குமரன் மழையில் நனையவில்லை
   3.உணர்ச்சித்தொடர் - இ) என் அண்ணன் நாளை வருவான்
   4.செய்தித் தொடர் - ஈ) எவ்வளவு உயரமான மரம்
   அ) 1-ஆ 2-அ 3-ஈ 4-இ ஆ) 1-ஆ 2-இ 3-ஈ 4-அ
   இ) 1-அ 2-ஆ 3-ஈ 4-இ ஈ) 1-ஈ 2-அ 3-ஆ 4-இ

3. பின்வரும் தொடரில் கட்டளைத்தொடர் அல்லாதைத் தேர்ந்தெடுக்க.
   அ) பூக்களைப் பறிக்காதீர் ஆ) அறம் செய்
   இ) பாடம் படி ஈ) எவ்வளவு உயரமான மரம்

4. தமிழில் ஏறத்தாழ ________ துணை வினைகள் உள்ளன.
   அ) 45 ஆ) 40 இ) 30 ஈ) 12

5. 'போ' என்னும் வினையடியை முதல் வினையாக்கிய சரியான சொற்றொடர்
   அ) மழை பெய்யப் போகிறது. ஆ) நான் பயந்து போனேன்.
   இ) மலிவான விலையில் வாங்கிப்போட்டேன். ஈ) அவன் எங்கே போகிறான்?

6. பொருந்தாதக் கூற்றினை தேர்ந்தெடுக்க.
   அ) அச்சட்டை அணிந்திருந்தான். ஆ) இந்தக் காலத்தில் செல்லாது.
   இ) எத்திசை அது? ஈ) எந்த பணம் இந்த பணம்.

7. சரியான சொற்றொடரைத் தேர்வு செய்க.
   அ) அ, இ என்னும் சுட்டெழுத்தின் பின் வல்லினம் மிகும்.
   ஆ) அந்த, இந்த என்னும் சுட்டுப்பெயர்களின் பின் வல்லிலனம் மிகாது.
   இ) எ என்னும் வல்லலெழுத்தின் பின் வல்லினம் மிகாது.
   ஈ) எந்த என்னும் வினாச்சொல்லின் பின் வல்லினம் மிகாது.

8. ________, ________ ஆகிய இரு வேற்றுமை உருபு வெளிப்படுத்தும் தொடர்களில் வல்லினம் மிகும்.
   அ) இரண்டாம், நான்காம் ஆ) மூன்றாம், ஐந்தாம்
   இ) ஆறாம், ஏழாம் ஈ) முதலாம், எட்டாம்

9. பொருந்தாத இணையைக் கண்டறிக.
   அ) இனி, ஆகிய சொல்லில் வல்லினம் மிகும் - சான்று: இனிக்காண்போம்
   ஆ) மிக ஆகிய சொல்லில் வல்லினம் மிகும் - சான்று: மிகப்பெரியவர்
   இ) அதற்கு ஆகிய சொல்லில் வல்லினம் மிகும் - சான்று: அதற்குக் கொடு

Please Send Your Study Materials to our Email Id: padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.CBSEtips.in



ஈ) ஈறுகெட்ட எதிர்மறைப் பெயரெச்சத்தின் பின் வல்லினம் மிகும் -
சான்று: ஆடச்சொன்னார்

10. ''மல்லிகைப்பூ'' - இச்சொல்லில் மிகுந்த வல்லின எழுத்து எது?
அ) ல் ஆ) ப் இ) ச் ஈ) ம்

B ) _¸UP©õÚ Â ø h¯ Î UP. 10 x 1 = 10

11. நிலவன் சிறந்த பள்ளியில் படித்தார். (காரணவினைத் தொடராக்குக)
12. சொற்களைத் தொடர்களாக அமைக்க. ''பதிவுசெய்'' (செயப்பாட்டு வினைத்தொடராக்குக)
13. 'தா' என்னும் வேர்ச்சொல்லைக் கொண்டு உடன்பாட்டுத் தொடராக்குக.
14. 'பார்' என்னும் வேர்ச்சொல்லைக் கொண்டு செயப்பாட்டு வினைத்தொடராக்குக.
15. அடைப்புக் குறிக்குள் உள்ளவற்றை வினைமுற்றாக மாறுக.
உலகில் மூவாயிரம் மொழிகள் (பேசு)
16. பிழை நீக்கி எழுதுக. ''
மழையே பயிர்க் கூட்டமும் உயிர்க் கூட்டமும் வாழப் பெருந்துணை புரிகின்றன''
17. பழமொழிகளைக் கொண்டு சொற்றொடர் அமைக்க.
''கிணற்றுத் தண்ணீரை வெள்ளம் கொண்டு போகாது.''
18. கரை, கறை - பொருள் எழுதி தொடர் அமைக்க
19. மரபுத்தொடர் கொண்டு தொடர் அமைக்க. ''கண்ணும் கருத்தும்''
20. தொடர் தரும் பொருளைக் கூறுக. 'சின்னக் கொடி', 'சின்னகொடி'

C) G ø Á÷¯ Ý ® ‰ ßÓ Ý US Â ø h¯ Î UP. 3 x 2 = 6

21. தன் வினை, பிற வினை - விளக்குக.
22. பகுபத உறுப்பிலக்கணம் தருக: வளர்ப்பாய்
23. தனி வினை, கூட்டு வினையை எடுத்துக்காட்டுகளுடன் விளக்குக.
24. எண்ணுப்பெயர்களில் வல்லினம் மிகுமிடங்களைக் குறிப்பிடுக.
25. 'புரிசை' என்னும் சொல்லுக்கு அகராதி கூறும் பொருளை எழுதுக.
26. உரிய தமிழ் எண்கள் எழுதுக. 2
அ) 32 ஆ) 45 இ) 68 ஈ) 894
27. கலைச்சொல்லாக்கம் தருக. 2
அ) epigraphy ஆ) cultural symbol
28. இலக்கணக்குறிப்பு தருக. 4
அ) மூதூர் ஆ) விரிமலர்
29. காட்சியைக் கண்டு அரைப்பக்க அளவில் எழுதுக. 4



Please Send Your Study Materials to our Email Id: padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.CBSEtips.in



30. பாடலுக்குத் திரண்ட கருத்தை எழுதி நயம் பாராட்டுக. 4

''கல்லும் மலையும் குதித்து வந்தேன் - பெருங்
காடும் செடியும் கடந்து வந்தென்
எல்லை விரிந்த சமவெளி - எங்கும்நான்
இறங்கித் தவழ்ந்து தவழ்ந்து வந்தேன்
ஏறாதமேடுகள் ஏறி வந்தேன் - பல
ஏரி குளங்கள் நிரப்பி வந்தேன்
ஊறாத ஊற்றிலும் உட்புகுந்தேன் - மணல்
ஓடைகள் பல பொங்கிட ஓடிவந்தேன.

D) J ßÓÝUS Â ø h¯ Î UP. 1 x 6 = 6

31. தண்ணீர் சிறுகதையைச் சுருக்கமாக எழுதுக.
32. அகழாய்வுகள் பற்றிய செய்திகளைக் குறிப்பிடுக.

E) J ßÓÝUS Â ø h¯ Î UP. 1 x 6 = 6

33. உங்கள் பள்ளி இலக்கிய மன்ற விழா சார்பில் நடைபெறவிருக்கும் உலகத்தாய்மொழி (பிப்ரவரி 21) விழாவிற்கான நிகழ்ச்சி நிரல் ஒன்றினை வடிவமைக்க
34. உன் ஊரில் நடைபெறும் திருவிழாவிற்கான அழைப்பிதழ் ஒன்றினை உருவாக்குக.

G) SÔ¨¦Pø ÍU öPõ s k, uø »¨¤mk J ßÓÝUS Â ø h¯ Î UP. 1 x 6 = 6

35. மொழிக்குடும்பம் - திராவிட மொழிகள் - வகைகள் - சிறப்புகள்
36. நீரின் அவசியம் - பற்றாக்குறை - மழைநீர் - சேமிப்பு- சேமிக்கும் முறை

Please Send Your Study Materials to our Email Id: padasalai.net@gmail.com

# ©õv› Â Úõzu uõÒ & 2

வகுப்பு : 9

## u ª Ì • uÀ uõÒ

(இயல் 4, 5, 6)

காலம் : 2 மணி மதிப்பெண் : 60

A) E›¯ Âøhø¯z ÷uº¢öuk zx GÊxP. 6 x 1 = 6

1. கீழ்க்காணும் மூன்று தொடர்களுள் -
   அ) இருந்த இடத்திலிருந்தே பயணச்சீட்டு எடுப்பதை எளிதாக்கிய மிகப்பெரிய இந்திய நிறுவனம் இந்தியத் தொடர் வண்டி உணவு வழங்கல் மற்றும் சுற்றுலாக் கழகம் ஆகும்.
   ஆ) வங்கி அட்டை இல்லை என்றால் அலைபேசி எண் , வங்கிக்கணக்கு எண் ஆகியவற்றைக் கொண்டு பணம் செலுத்த இயலாது.
   இ) திறன் அட்டை என்பவை குடும்ப அட்டைகளுக்கு மாற்றாக வழங்கப்பட்டனவாகும்.
   1) அ, ஆ ஆகியன சரி; இ தவறு 2) அ, இ ஆகியன சரி; ஆ தவறு
   3) அ தவறு; ஆ, இ ஆகியன சரி 4) மூன்றும் சரி

2. பொருத்துக.
   1.ஒளிப்படி இயந்திரம் - அ) ஜியோவான்னி காசில்லி
   2.தொலைநகல் கருவி - ஆ) செஸ்டர்ன் கார்ல்சன்
   3. தானியங்கிப் பண இயந்திரம் - இ) மைக்கேல் ஆல்ட்ரிச்
   4. இணைய வணிகம் - ஈ) ஜான் செப்பர்டு பாரன்
   அ) 1-ஆ 2-அ 3-ஈ 4-இ ஆ) 1-அ 2-ஆ 3-ஈ 4-இ
   இ) 1-ஆ 2-ஈ 3-ஆ 4-இ ஈ) 1-இ 2-ஆ 3-ஈ 4-அ

3. இந்தியாவில் முதன்முதலாகப் பெண்களுக்கான பள்ளி தொடங்கப்பட்ட மாநிலம் எது?
   அ) தமிழ்நாடு ஆ) குஜராத் இ) மராட்டியம் ஈ) கேரளா

4. பொருந்தாதவற்றைக் கண்டறிக.
   அ) மயில்சாமி அண்ணாதுரை ஆ) அப்துல் கலாம்
   இ) வைரமுத்து ஈ) சிவன்

5. தந்தைப் பெரியாரின் வேண்டுகோளுக்கிணங்க புலவர் குழந்தை உரை எழுதிய நூல் எது?
   அ) திருக்குறள் ஆ) இராவண காவியம் இ) யாப்பதிகாரம் ஈ) தொடையதிகாரம்

6. பன்னிரு ஆழ்வார்களில் ஒரே பெண் ஆழ்வார்
   அ) காரைக்காலம்மையார் ஆ) ஆண்டாள்
   இ) குலசேகர ஆழ்வார் ஈ) திருமங்கையாழ்வார்

B) GøÁ÷¯Ý®‰ßÓÝUS‰ßÖ Á›PÎ¢À Âøh¯Î¢UP. 3 x 2 = 6

7. கூட்டுப்புழுவை எடுத்துக்காட்டிக் கவிஞர் உணர்த்தும் கருத்துகளை எழுதுக.
8. ஓ, என் சமகாலத்தோழர்களே! என்னும் கவிதையில் கவிஞர் வைரமுத்து குறிப்பிடும் அஃறிணை உயிர்கள் யாவை?
9. நெய்தல் நிலத் தும்பியின் செயல் யாது?
10. கண்ணன் புகுந்த பந்தல் எவ்வாறு இருந்தது?
11. ''மின்னாளை வாழ்வில் என்றும்
    மின்னாள் என்றே உரைப்பேன்'' இவ்வடிகளில் உள்ள 'மின்னாளை', 'மின்னாள்' என்பதன் பொருள் யாது?

www.Padasalai.Net www.CBSEtips.in



B) GøÁ÷¯Ý®‰ßÓÝUS ‰ßÖ Á›PÎÀ Âøh¯ÎUP. 3 x 2 = 6

12. இணையவழியில் இயங்கும் மின்னணு இயந்திரங்கள் எவையேனும் ஐந்தினைக் குறிப்பிடுக.
13. அட்டைதேப்பி இயந்திரத்தின் வேறுபெயர்கள் யாவை?
14. கற்கவிஞர்கள் என்று சிறப்பிக்கப்படுபவர் யார்?
15. நடுகல் என்றால் என்ன?
16. மலாலா என்பவர் யார்?

D) GøÁ÷¯Ý®‰ßÓÝUS BÖ Á›PÎÀ Âøh¯ÎUP. 3 x 4 = 12

17. 'ஓ, என் சமகாலத் தோழர்களே' கவிதையில் கவிஞர் விடுக்கும் வேண்டுகோள் யாது?
18. அறிவையும் உயிரினங்களையும் தொல்காப்பியர் எவ்வாறு தொடர்புபடுத்துகிறார்?
19. இராவண காவியம் குறிப்பிடும் குறிஞ்சி நில வருணணையை எழுதுக.
20. ஆண்டாளின் கனவினை விளக்குக.
21. குடும்ப விளக்கு - நூற்குறிப்பு தருக.

E) GøÁ÷¯Ý®‰ßÓÝUS BÖ Á›PÎÀ Âøh¯ÎUP. 3 x 4 = 12

22. பள்ளி மாணவர்களுக்கான தமிழக அரசின் இணையவழிச் சேவைகளை எழுதுக.
23. பெண்களுக்கான முதல் பள்ளி உருவானதை விளக்குக.
24. முழு உருவச் சிற்பங்கள் - புடைப்புச் சிற்பங்கள் இரண்டிற்கும் உள்ள வேறுபாடு யாது?
25. கைலாஷ் சத்யார்த்தி என்பவர் யார்?
26. சோழர்காலச் சிற்பங்களின் கருவூலங்களாகத் திகழ்கின்றவை எவை?

F) Â›ÁõÚ Âøh¯ÎUP. 2 x 6 = 12

27. அ) இராவண காவியத்தில் உங்களை ஈர்த்த இயற்கை எழில் காட்சிகளை விவரி.

(AÀ»x)

ஆ) குடும்ப விளக்கு நூலில் தலைவி பேச்சில் வெளிப்படும் பெண்கல்விக்கான கருத்துகளை இன்றைய சூழலுடன் ஒப்பிடுக.

28. அ) அன்றாட வாழ்வில் நீங்கள் பயன்படுத்தும் இரண்டு இணையவழிச் சேவைகள் பற்றி விரிவாகத் தொகுத்து எழுதுக.

(AÀ»x)

ஆ) நீங்கள் அறிந்த சாதனைப் பெண்கள் குறித்த செய்திகளை விவரிக்க.

G) Ai¤ÓÇõ©À GÊxP. 1 x 6 = 6

29. 'ஒன்றறிவதுவே' எனத்தொடங்கும் தொல்காப்பியப் பாடல்.

Please Send Your Study Materials to our Email Id: padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.CBSEtips.in



## ©õv› Â Úõzuõ& 2

வகுப்பு : 9

### u ª Ì Cµ s hõ® uõÒ

(இயல் 4, 5, 6)

காலம் : 2 மணி மதிப்பெண் : 60

**A) E›¯ Âøhø¯z ÷uº¢öuk zx GÊxP.** 10 x 1 = 10

1. பூவாது காய்க்கும், மலர்க்கை - அடிக்கோடிட்ட சொற்களுக்குரிய இலக்கணம் யாது?
   அ) பெயரெச்சம், உவமைத்தொகை ஆ) எதிர்மறைப்பெயரெச்சம், உருவகம்
   இ) வினையெச்சம், உவமை ஈ) எதிர்மறை வினையெச்சம், உவமைத்தொகை
2. சரியான கூற்றினைத் தெரிவு செய்க.
   அ) 'ஆ' என்பது எதிர்மறை இடைநிலை.
   ஆ) வீட்டிற்கோர் புத்தகசாலை என்பது அண்ணாவின் மேடைப்பேச்சு.
   இ) வில்லுப்பாட்டு ஓர் இலக்கிய வடிவம்.
   1) ஆ, இ சரி, அ தவறு 2) ஆ, இ சரி, ஆ தவறு
   3) மூன்றும் சரி 4) மூன்றும் தவறு
3. மரவேர் என்பது ________ புணர்ச்சி.
   அ) இயல்பு ஆ) திரிதல் இ) தோன்றல் ஈ) கெடுதல்
4. பொருத்தமான உரிச்சொல் தேர்ந்தெடுத்து எழுதுக.
   ________பெரும் பொதுக்கூட்டம்.
   அ) மா ஆ) கடி இ) உறு ஈ) தவ
5. ஊரன் என்பதன் பகுதி ________.
   அ) ஊர் ஆ) ஊர இ) ஊன் ஈ) ஊ
6. கீழ்க்காண்பவற்றுள் உணர்ச்சித் தொடர் எது?
   அ) சிறுபஞ்சமூலத்தில் உள்ள பாடல்கள் பெரும்பாலும் மகடூஉ முன்னிலையில் அமைந்துள்ளன.
   ஆ) இந்திய நுடலகவியலின் தந்தையென அறியப்படுபவர் யார்?
   இ) என்னண்ணே! நீங்கள் சொல்வதை நம்பவே முடியவில்லை.
   ஈ) வாழ்க்கையில் அடிப்படைத் தேவைக்கு அடுத்த இடத்தைப் புத்தகசாலைக்குத் தருக.
7. கெடுதல் விகாரப்புணர்ச்சி வரிசையைத் தேர்ந்தெடுக்க.
   அ) பூக்கூடை, நுழைவுத்தேர்வு, கல்லூரிச் சாலை
   ஆ) பற்பசை, கற்சிலை
   இ) புறநானூறு, கபிலபரணர்
   ஈ) மணியடி, திருவருள்
8. பொன்வளை என்பது ________ புணர்ச்சி.
   அ) இயல்பு ஆ) விகாரம் இ) உடம்படுமெய் ஈ) குற்றியலுகரம்
9. பூக்கூடை என்பது ________ விகாரப்புணர்ச்சி.
   அ) தோன்றல் ஆ) திரிதல் இ) கெடுதல் ஈ) குற்றியலுகரம்
10. பொருத்துக.
    1. வேற்றுமைஉருபுகள் - அ) கள், மார்
    2. பன்மை விகுதிகள் - ஆ) ஐ, ஆல், கு, இன், அது, கண்
    3. கால இடைநிலைகள் - இ) தல், அம், மை
    4. தொழிற்பெயர் விகுதிகள் - ஈ) கிறு, கின்று

Please Send Your Study Materials to our Email Id: padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.CBSEtips.in



அ) 1-ஆ 2-அ 3-ஈ 4-இ ஆ) 1-ஈ 2-இ 3-அ 4-ஆ
இ) 1-இ 2-ஈ 3-அ 4-ஆ ஈ) 1-இ 2-அ 3-ஈ 4-ஆ

B) _¸UP©õÚ Â ø h¯ Î UP. 10 x 1 = 10

11. பிழை நீக்கி எழுதுக: ''நல்ல தமிழுக்கு எழுதுவோம்.''
12. இடைச்சொற்கள்கொண்டு தொடர் அமைக்க:
பழனிமலை பெரியது, இமயமலை மிகப்பெரியது.
13. பொருத்தமான உரிச்சொற்களை எழுதுக.
________ பெரும் பொதுக்கூட்டம். (கடி, மா)
14. இடைச்சொற்களைப் பயன்படுத்தி சொற்றொடர்களை மாற்றியமைக்க.
''பூக்காமலேயே சில மரங்கள் காய்ப்பதுண்டு.''
15. 'கார்---காலம்' என்பதில் வல்லினம் மிகுமா?
16. வினைமுற்றை வினையாலணையும் பெயராக்கித் தொடர்களை இணைக்க.
''நேற்று ஒருவன் வந்தான், இவன் என் தம்பி.''
17. சேர்த்தெழுதுக: அ) தமிழ் + பேசு ஆ) கை + கள்
18. பொருத்தமான உடம்படுமெய்யுடன் எழுதுக: அ) பூ + இனம் ஆ) சே + அடி
19. மரபுத்தொடர் கொண்டு தொடர் அமைக்க. ''எட்டாக்கனி''
20. மரபுப் பிழைகளை நீக்கி எழுதுக:
நேற்று தென்றல் காற்று அடித்தது.

C) GøÁ÷¯Ý®‰ßÓÝUS Â ø h¯ Î UP. 3 x 2 = 6

21. தான் என்னும் இடைச்சொலை எப்படியெல்லாம் பயன்படுத்தலாம்?
22. பகுபத உறுப்பிலக்கணம் தருக: சமைக்கின்றார்
23. வல்லினம் மிகாவிடங்கள் இரண்டினை எழுதி, சான்றினைக் குறிப்பிடுக.
24. குற்றியலுகரம், முற்றியலுகரம் இவற்றின் வேறுபாட்டை எழுது.
25. உவமைத்தொடர்களை உருவகத் தொடர்களாக்குக:
முத்து நகை தன் வில் போன்ற புருவத்தில் மை தீட்டினாள்.

26. உரிய தமிழ் எண்கள் எழுதுக. 2
அ) பதினெண்கீழ்கணக்கு நூல்கள் - ஆ) திருக்குறளின் அதிகாரங்கள் -
இ) சிற்றிலக்கியங்கள் - ஈ) சைவத்திருமுறைகள் -

27. இணையானத் தமிழ்ப்பழமொழிகளை எழுதுக. 2
அ) Love your food. ஆ) Thinking is great.

28. படத்துக்கேற்ற குறளினை எழுதுக. 4



Please Send Your Study Materials to our Email Id: padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.CBSEtips.in



29. காட்சியைக் கண்டு அரைப்பக்க அளவில் எழுதுக. 4



30. பாடலுக்குத் திரண்ட கருத்தை எழுதி நயம் பாராட்டுக. 4

பனிமலர் ஏறிய தேனும் -காய்ச்சுப்
பாகிடை ஏறிய சுவையும்,
நனிபசு பொழியும் பாலும் - தென்னை
நல்கிய குளிரிள நீரும்,
இனியன என்பேன் எனினும் - தமிழை
என்னுயிர் என்பேன் கண்டீர்! - பாரதிதாசன்

D) J ßÓÝUS Â øh¯ Î UP. 1 x 6 = 6

31. இசைக்கு நாடு, மொழி, இனம் தேவையில்லை என்பதைச் ‘செய்தி’க் கதையின் மூலம் விளக்குக.
32. நூலகம், நூல்கள் குறித்து அண்ணாவின் வானொலி உரையில் வெளிப்படுகின்ற கருத்துகள் யாவை?

E) J ßÓÝUS Â øh¯ Î UP. 1 x 6 = 6

33. உங்கள் பள்ளி நூலகத்திற்குத் தமிழ் - தமிழ் - ஆங்கிலம் என்னும் கையடக்க அகராதிகள் பத்தினைப் பதிவஞ்சலில் அனுப்புமாறு நெய்தல் பதிப்பகத்திற்கு ஒரு கடிதம் எழுதுக.
34. விளம்பரத்தைச் செய்தித்தாள் செய்தியாக மாற்றி அமைக்க.

*புத்தகம் படிப்போம்!* *புதியன அறிவோம்!*

¦zuPz v ¸ Â Çõ

| | | |
|---|---|---|
| நாள் | : | செப்டம்பர் 19 - 28 வரை |
| இடம் | : | சரசுவதி மகால் நூலகம், தஞ்சாவூர். |
| நேரம் | : | காலை 8 முதல் மாலை 6 வரை |

◈ முதல் நாள் காலை 9 மணிக்குத் தமிழகக் கல்வி அமைச்சர் தொடங்கி வைக்கிறார்.

◈ நாள்தோறும் மாலை 6 மணிக்குப் புதிய புத்தகங்கள் வெளியீடும் சிறப்புப் பேச்சாளர்களின் உரையும் இடம்பெறும்.

*அனைவரும் வாரீர்! அறிவுத்திறம் பெறுவீர்!!*

G) SÔ¨¦Pø ÍU öPõ s k, uø »¨¤mk J ßÓÝUS Â øh¯ Î UP. 1 x 6 = 6

35. நூலகம் - தோற்றம் - பயன்படுத்தும் முறை - பயன்கள்.
36. பெண் கல்வி - பெண்ணடிமை - பெண்கள் முன்னேற்றம் - சாதனைப்பெண்கள்

Please Send Your Study Materials to our Email Id: padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.CBSEtips.in



## ©õv› Â Úõzuõ Ò & 3

வகுப்பு : 9

## u ª Ì • uÀ uõÒ

(இயல் 7, 8, 9)

காலம் : 2 மணி மதிப்பெண் : 60

### A) E›¯ Âøhø¯z ÷uºÂöuk zx GÊxP. 6 x 1 = 6

1. கூற்று : இந்திய தேசிய இராணுவப்படைத் தலைவராக இருந்த தில்லான், 'இந்திய தேசிய இராணுவத்தின் இதயமும் ஆத்மாவும் தமிழர்தான்' என்றார்.
   காரணம் : இந்திய தேசிய இராணுவத்திற்கு வலுசேர்த்த பெருமைக்குரியவர்கள் தமிழர்கள்.
   அ) கூற்று சரி காரணம் சரி ஆ) .கூற்று சரி காரணம் தவறு
   இ) கூற்று தவறு காரணம் சரி ஈ) கூற்று தவறு காரணம் தவறு

2. நான் மறுபடியும் பிறந்தால் ஒரு தென்னிந்தியத் தமிழனாகப் பிறக்கவேண்டும் என்றவர்
   அ) நேதாஜி ஆ) தில்லான்
   இ) பசும்பொன் முத்துராமலிங்கனார் ஈ) மோகன் சிங்

3. பொருத்துக.
   1. நசை - அ) வழங்குதல்
   2. நல்கல் - ஆ) விருப்பம்
   3. பிடி - இ) ஆண்யானை
   4. வேழம் - ஈ) பெண்யானை
   அ) 1-ஆ 2-அ 3-ஈ 4-இ ஆ) 1-இ 2-அ 3-ஈ 4-ஆ
   இ) 1-ஆ 2-ஈ 3-அ 4-இ ஈ) 1-ஈ 2-அ 3-ஆ 4-இ

4. பொருத்துக.
   1. விழுந்தது - அ) தேனடை
   2. கிழித்தது - ஆ) தேங்காய்
   3. பிளந்தது - இ) மாங்கனி
   4. சிதறவைத்தது - ஈ) பலாப்பழம்
   அ) 1-அ 2- ஈ 3-இ 4-ஆ ஆ) 1- ஆ 2-அ 3-ஈ 4- இ
   இ) 1- இ 2-அ 3-ஆ 4-ஈ ஈ) 1- அ 2-இ 3-ஆ 4-ஈ

5. சொல்லும் பொருளும் பொருந்தி வந்துள்ளது எது?
   அ) வருக்கை - இருக்கை ஆ) புள் - தாவரம்
   இ) அள்ளல் - சேறு ஈ) மடிவு - தொடக்கம்

6. சொற்றொடர் உருவாக்குக.
   அ) கல்வி மக்களிடம் ஆ) ஏற்படுத்தவேண்டும்
   இ) பகுத்தறிவு, சுயமரியாதை ஈ) நல்லொழுக்கம் ஆகியவற்றை.
   1) அ-இ-ஈ-ஆ 2) இ-ஈ-அ-ஆ 3) இ-அ-ஆ-ஈ 4) ஈ-அ-ஆ-இ

### B. GøÁ÷¯Ý® ‰ßÖ ÝUS ‰ßÖ Á›P Î À Âøh¯Î UP. 3 x 2 = 6

7. ''வெறி கமழ் கழனியுள் உழுநர் வெள்ளமே'' - தொடர் பொருள் விளக்கம் எழுதுக.
8. ''பொறிமயிர் வானம் கூட்டுறை வயமாப் புலியொடு குழும'' - இவ்வடிகள் மூலம் நாம் அறியும் செய்தி யாது?
9. கமுகு மரம் எதனைத் தேடியது?

Please Send Your Study Materials to our Email Id: padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.CBSEtips.in



10. வெற்றிடமே பயன்படுகின்றது என்பதை வலியுறுத்த தாவோ தே ஜிங் கூறும் பொருட்கள் யாவை?
11. ''பிடிபசி களைஇய பெருங்கை வேழம்'' என்பதில் 'ஆண்யானை', 'பெண்யானை' என்னும் பொருள் தரும் சொல் எது?

B ) GøÁ÷¯Ý®‰ßÓÝUS ‰ßÖ Á›PÎÀ Âøh¯ÎUP. 3 x 2 = 6

12. பசும்பொன் முத்துராமலிங்கனார் இந்திய தேசிய இராணுவத்திற்குச் செய்த பணி யாது?
13. பகுத்தறிவு என்றால் என்ன?
14. பெரியாரின் சிந்தனை புரட்சியை ஏற்படுத்திய துறைகள் யாவை?
15. தமிழ்ச்சான்றோர்க்கும் உரோமையரின் சான்றோர்க்கும் உள்ள வேறுபாடு யாது?
16. மொழிபெயர்தேசம் - விளக்குக.

D) GøÁ÷¯Ý®‰ßÓÝUS BÖ Á›PÎÀ Âøh¯ÎUP. 3 x 4 = 12

17. சேர, சோழ, பாண்டிய நாட்டு வளங்களை முத்தொள்ளாயிரம் வழி விளக்குக.
18. தலைவன் விரைந்து வருவான் எனத் தோழி தலைவியை ஆற்றியது என்னும் துறையில் அமைந்த பெருங்கடுங்கோவின் பாடற்கருத்தை எழுதுக.
19. ''மாகால் எடுத்த முந்நீர் போல''- இடஞ்சுட்டிப் பொருள் விளக்குக.
20. நாம் கடைபிடிக்க வேண்டிய வாழ்க்கை நெறிகளாக யசோதர காவியம் குறிப்பிடுவன யாவை ?
21. கல்யாண்ஜியின் அக்கறை கவிதையின் கருத்துகள் யாவை?

E) GøÁ÷¯Ý®‰ßÓÝUS BÖ Á›PÎÀ Âøh¯ÎUP. 3 x 4 = 12

22. குறிப்பு வரைக: ''டோக்கியோ கேடட்ஸ்''
23. சிக்கனம் குறித்து பெரியாரின் கருத்துகளை இன்றைய நடைமுறையோடு தொடர்புபடுத்தி எழுதுக.
24. மதம் குறித்து பெரியார் எழுப்பிய பகுத்தறிவு வினாக்கள் யாவை?
25. கோர்டன் ஆல்பர்ட் கூறும் மூன்று இலக்கணங்களைக் குறிப்பிடுக.
26. உலகத் தமிழ் மாநாடுகள் பற்றி எழுது.

F ) Â›ÁõÚ Âøh¯ÎUP. 2 x 6 = 12

27. அ) இந்திய தேசிய இராணுவத்தின் தூண்களாகத் திகழ்ந்தவர்கள்; தமிழர்கள் என்பதை கட்டுரை வழி நிறுவுக.

(AÀ»x)

ஆ) மொழியிலும் இலக்கியத்திலும் பெரியார் மேற்கொண்ட சீரமைப்புகளை விளக்குக.

28. அ) ஏமாங்க நாட்டு வருணணைகளை நும் ஊர் குறித்த வளங்களோடு ஒப்பிடுக.

(AÀ»x)

ஆ) வாழ்க்கைப் போரில் வெற்றிபெறுவதற்கான வழிகளைக் கமுகு மரம் வாயிலாக ஆசிரியர் எவ்வாறு உணர்த்துகிறார்?

G) Ai¤ÓÇõ©À GÊxP. 6

29. அ) 'ஆக்குவது' எனத்தொடங்கும் யசோதரகாவியப் பாடல்.
ஆ) 'சைக்கிளில் வந்த' எனத்தொடங்கும் கல்யாண்ஜியின் கவிதைப் பாடல்.

Please Send Your Study Materials to our Email Id: padasalai.net@gmail.com

©õv › Â Úõzuõ Ò & 3

வகுப்பு : 9

u ª Ì Cµ s hõ® uõÒ

(இயல் 7, 8, 9)

காலம் : 2 மணி மதிப்பெண் : 60

A) E›¯ Â ø h ø¯ z ÷uº¢öu k z x GÊ xP. 10 x 1 = 10

1. பொருத்துக.
   1. முதலாகுபெயர் - அ) வகுப்பறை சிரித்தது
   2. இடவாகுபெயர் - ஆ) முல்லை தொடுத்தாள்
   3. காலவாகுபெயர் - இ) மருக்கொழுந்து நட்டான்
   4. சினையாகுபெயர் - ஈ) கார் அறுத்தான்

   அ) 1-ஈ 2-இ 3-அ 4-ஆ ஆ) 1-ஆ 2-அ 3-ஈ 4-இ
   இ) 1-அ 2-இ 3-ஈ 4-ஆ ஈ) 1-இ 2-அ 3-ஆ 4-இ

2. தொல்காப்பியர் கூறும் ஆகுபெயர் வகை
   அ) 6 ஆ) 7 இ) 16 ஈ) 15

3. பைங்கூழ் வளர்ந்தது - என்பது ________ ஆகுபெயர்.
   அ) பண்பு ஆ) தொழில் இ) கருவி ஈ) காரியம்

4. பொருத்துக.
   1. நேர் - அ) மலர்
   2. நிரை - ஆ) நாள்
   3. நேர்பு - இ) பிறப்பு
   4. நிரைபு - ஈ) காசு

   அ) 1-ஆ 2-அ 3-ஈ 4-இ ஆ) 1-இ 2-அ 3-ஈ 4-ஆ
   இ) 1-அ 2-ஈ 3-ஆ 4-இ ஈ) 1-ஈ 2-அ 3-ஆ 4-இ

5. உவமையின் தன்மையைப்பொருளின் மீது ஏற்றிக் கூறல் ________.
   அ) உருவக அணி ஆ) வஞ்சப்புகழ்ச்சி அணி
   இ) சொல் பின்வரு நிலையணி ஈ) உவமையணி

6. செய்யுளில் முன்னர் வந்த சொல் பின்னரும் அதே பொருளில் வருதல் ________.
   அ) சொற்பொருட்பின்வரு நிலையணி ஆ) வஞ்சப்புகழ்ச்சி அணி
   இ) சொல் பின்வரு நிலையணி ஈ) உவமையணி

7. ஒன்றின் இயற்பெயர், அதனோடு தொடர்புடைய மற்றொன்றித் தொன்று தொட்டு ஆகிவருவது
   அ) ஆகுபெயர் ஆ) புணர்ச்சி இ) சொல் ஈ) அணி

8. பொருந்தாத இணையைக் கண்டறிக.
   1. மாமுன் நேர் - நேரொன்றாசிரியத்தளை
   2. விளம் முன் நிரை - நிரையொன்றாசிரியத்தளை
   3. காய் முன் நேர் - இயற்சீர் வெண்டளை
   4. காய் முன் நிரை - கலித்தளை

9. ''தேவர் அனையர் கயவர் அவருந்தாம்
   மேவன செய்தொழுக லான்.'' இக்குறட்பாவில் பயின்று வரும் அணி

www.Padasalai.Net www.CBSEtips.in



அ) வஞ்சப்புகழ்ச்சி அணி ஆ) வஞ்சப்புகழ்ச்சி அணி
இ) சொல் பின்வரு நிலையணி ஈ) உவமையணி

10. வெண்சீர்கள் என்றழைக்கப்படுவது
அ) காய்ச்சீர் ஆ) கனிச்சீர் இ) மாச்சீர் ஈ) விளச்சீர்

B) _¸UP©õÚ Â ø h¯ Î UP. 10 x 1 = 10

11. பொருத்தமான இடங்களில் அடைமொழியிட்டு சொற்றொடர் உருவாக்குக.
புத்தகம் படிக்கலாம் (நல்ல, ஆழ்ந்து, நாளும், தேர்ந்து, மகிழ்ந்து, உணர்ந்து)
12. மறுநாள் வீட்டுக்கு வருவதாக முரளி கூறினார். (நேர் கூற்றாக மாற்றுக)
13. ‘‘தென்னாட்டுப் பெர்னாட்ஷா என்று அண்ணாவைப் புகழ்கிறோம்’’ என்று ஆசிரியர் கூறினார். (அயற் கூற்றாக்குக.)
14. மார்னிங் நோசைக்கு இரண்டு தோசைகள் ஹோட்லில் சாப்பிட்டான். (பிறமொழிச் சொற்களைத் தமிழாக்குக.)
15. அலறும் மயிலும் கூவும் ஆந்தையும் அகவும் சேவலும் போன்றே இயற்கையின் அழகான ஒலிகளை நாம் நேசிக்க வேண்டும். ( ஒலி மரபுப் பிழைகளைத் திருத்துக.)
16. கோழிக் குட்டிகளைப் பிடிக்கப் பூனைக் குஞ்சுகள் ஓடின. (பெயர் மரபுப் பிழைகளைத் திருத்துக)
17. சொற்றொடர் உருவாக்குக: அத்திப் பூத்தாற் போல
18. சொற்களை முறைப்படுத்துக: யனிநேம்தம
19. அகராதிப் பொருள் எழுதுக: குரிசில்‘
20. வினைப்பகுதியை எச்சமாகவும் முற்றாகவும் மாற்றுக.
அங்கு________ (நில்) பேருந்தில் ________ (ஏறு) வீடு ________ (திரும்பு).

C) GøÁ÷¯Ý®‰ßÓÝUS Â ø h¯ Î UP. 3 x 2 = 6

21. உருவக அணிக்குச் சான்று தருக.
23. பட்டப் பெயர்கள் ஆகுபெயராகுமா? எடுத்துக்காட்டுகளுடன் விளக்குக.
24. தளை எத்தனை வகைப்படும்?
25. மூவகைச்சீரில் அமைந்த நான்கு பெயர்களை எழுதுக.
26. உரிய தமிழ் எண்கள் எழுதுக. 2
அ) தமிழில் உள்ள மொத்த எழுத்துகள் _______. ஆ) உயிரெழுத்துகள் மொத்தம் _______.
இ) மெய்யெழுத்துகள் மொத்தம் _______. ஈ) முதலெழுத்துகள் மொத்தம் _______.
27. தொகைச்சொற்களைக் கொண்டு சுருக்குக. 2
‘‘சேர, சோழ, பாண்டிய அரசர்களிடம் யானைப்படை, குதிரைப்படை, தேர்ப்படை, தரைப்படை ஆகியவை இருந்தன. இவர்கள் மா, பலா, வாழை ஆகிய கனிகளுடன் விருந்தோம்பல் செய்தனர்.’’
28. மொழிபெயர்க்க. 4
A deer, a turtle, a crow and a rat were friends. One day the deer was caught in a hunter's trap. Friends made a plan to save him. According to the plan, the deer lay motionless as if it were dead. The crow sat on the deer and started poking. The turtle crossed the hunter's path to distract him. The hunter left the deer, assuming it dead, and went after the turtle. Meanwhile, the rat chew open the net to free the deer. The crow picked up the turtle and quickly took it away from the hunter. From this Panchatantra story, we learn that the teamwork can achieve great results.

Please Send Your Study Materials to our Email Id: padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.CBSEtips.in



29. காட்சியைக் கண்டு அரைப்பக்க அளவில் எழுதுக. 4



30. பாடலுக்குத் திரண்ட கருத்தை எழுதி நயம் பாராட்டுக. 4

''வயலிடைப் புகுந்தாய் மணிக்கதிர் விளைத்தாய்
வளைந்து செல் கால்களால் ஆறே
அயலுள ஓடைத் தாமரைக் கணடட்டி
ஆம்பலின் இதழ்களை விரித்ததாய்
கயலிடைச் செங்கண் கருவரால் வாளை
கரைவளர் தென்னையில் பாயப்
பெயரிடைப் பட்ட வானெனத் தோன்றும்
பெருங்குளம் நிறைந்து விட்டாயே

- வாணிதாசன்

D) J ßÓÝUS Â ø h¯ Î UP. 1 x 6 = 6

31. மொழியின் விரல் பிடித்து நடக்கப் பழகிக்கொண்டிருக்கும் தன் மகனுக்கு நா.முத்துக்குமார் எழுதியுள்ள கடிதச் செய்திகளைத் தொகத்து எழுதுக.

32. 'தாய்மைக்கு வறட்சி இல்லை' என்னும் சிறுகதையில் வரும் ஏழைத்தாயின் பாத்திரப்படைப்பை விளக்குக.

E) J ßÓÝUS Â ø h¯ Î UP. 1 x 6 = 6

33. 'எனது பயணம்' என்னும் தலைப்பில் உங்களது அனுபவங்களை வருணித்து எழுதுக.

34. நூல் மதிப்புரை ஒன்று எழுதுக.

G) SÔ¨¦Pø ÍU öPõ s k, uø »¨¤mk J ßÓÝUS Â ø h¯ Î UP. 1 x 6 = 6

35. நூலகம் - தோற்றம் - பயன்படுத்தும் முறை - பயன்கள்.

36. பெண் கல்வி - பெண்ணடிமை - பெண்கள் முன்னேற்றம் - சாதனைப்பெண்கள்

Please Send Your Study Materials to our Email Id: padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.CBSEtips.in



குறிப்பு

Please Send Your Study Materials to our Email Id: padasalai.net@gmail.com